தமிழ்க் கவிதையில் பாரதியின் தாக்கம்

முனைவர் க.த.திருநாவுக்கரசு

M.A., (Tamil), M.A., (History), M.Litt., Dip.Ing., Phd.,

வெளியீடு

மணியகம்

3/30 , இரண்டாவது பிரதான சாலை

கோட்டூர்த்தோட்டம், கோட்டூர்புரம்

சென்னை 600085.

9444453737

தமிழ்க் கவிதையில் பாரதியின் தாக்கம்

முனைவர்
க. த. திருநாவுக்கரசு

வெளியீடு
மணியகம்
3/30, இரண்டாவது பிரதான சாலை,
கோட்டூர்த் தோட்டம், கோட்டூர்புரம்,
சென்னை–600 085
9444453737

நூல் விவர அட்டவணை

தலைப்பு	:	தமிழ்க் கவிதையில் பாரதியின் தாக்கம்
பொருள்	:	ஆய்வு நூல்
ஆசிரியர்	:	முனைவர் க.த.திருநாவுக்கரசு
மொழி	:	தமிழ்
பதிப்பு	:	இரண்டாம் பதிப்பு –அக்டோபர் 2024 முதல் பதிப்பு – திசம்பர் 1984 தமிழ்க்கடல் பதிப்பகம், சென்னை
நூலின் அளவு	:	1/8 டெமி
பக்கங்கள்	:	xxii + 378 = 400
எழுத்துரு	:	Tau–Marutham, Pt.11
அச்சிட்டோர்	:	அரசு ஆர்ட்ஸ், 78, சீனிவாசபெருமாள் சன்னதி முதல் தெரு, இராயப்பேட்டை, சென்னை –600 014 044 – 28351101, 28588056 E–mail : arasuarts@gmail.com www.arasuarts.com
வெளியீடு	:	மணியகம் பதிப்பகம் 3/30, இரண்டாவது பிரதான சாலை, கோட்டூர்த்தோட்டம், கோட்டூர்புரம், சென்னை – 600 085 9444453737, tambalavanan@gmail.com
உரிமை	:	பதிப்பக்கத்திற்கே
விலை	:	இலவச வெளியீடு
எண்ணிக்கை	:	25 புத்தகங்கள்
ISBN	:	978–93–48345–34–9

பாரதியார் காட்டிய வழியிலே
ஏறுநடை பயிலும் இன்றைய
கவிஞர்களுக்கும்
எதிர்காலத்தில் 'பாரதியின் வழித்தோன்றல்களாக'
வீறுடன் விளங்கப் போகும்
வருங்காலக் கவிஞர்களுக்கும்
என் அன்பு மலராக
இந்நூலினைப்
படைக்கின்றேன்

– ஆசிரியர்

முதல் பதிப்பின் அணிந்துரை

எந்த மொழியிலும் தலைசிறந்த இலக்கியப் படைப்பாளியாக உள்ளவன், தன்னுடைய மொழியின் இலக்கியத்தின் தரத்தை இரு வகையில் மேம்பட்டு விளங்குமாறு செய்கிறான். முதலில், தன்னுடைய மொழியில் வளர்ந்து வந்துள்ள இலக்கிய மரபினைச் சிறிது அளவேனும் அவன் மாற்றி அமைக்கிறான். அடுத்து, காலத்தின் தேவையை உணர்ந்து, புதுமைப் படைப்புகளைச் செய்து, புது வழியையும் அவன் காட்டுகிறான். இவ்விரு இயல்புகளும் அவனிடம் இயல்பாகவே அமைந்து விடுகின்றன. மேதைத் தன்மை என்பது இதுதான். நம்முடைய சுப்பிரமணிய பாரதியார் இவ்விரண்டையும் கணிசமான அளவிற்குச் செய்துள்ளார்.

பாரதியின் பன்முக அறிவாற்றலைப்பற்றி ஏராளமான நூல்கள் வெளிவந்துள்ளன. ஆனால், தமிழ்க் கவிதையில் அவருடைய தாக்கம் எத்தகையது என்பதை, முழுமையாக எடுத்துச் சொல்லும் முதல் நூல், இது ஒன்றே என எனக்குத் தோன்றுகிறது.

இந்நூலின் ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட களம் மிகவும் அகலமானது; ஆயினும், இந்த நூலாசிரியர் தம்முடைய ஆராய்ச்சியை மிக ஆழமாகவே செய்து இருக்கிறார். இதனாலேயே, இந்த நூலினை மீண்டும், மீண்டும் படிக்கவேண்டி இருக்கிறது.

நானூற்றுக்கு மேற்பட்ட பக்கங்களில் இந்த நூல் விரிந்து செல்லுகிறது; பத்துப் பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

'நோக்கும் போக்கும், தேசியம், சமுதாயப் பார்வை, சிந்துக்குத் தந்தை, புதிய முயற்சி, பாட்டிலே புரட்சி, புதுக்கவிதைக்கு வழிகாட்டி, குறுங்காப்பியமும் உருவகக் கதைப்பாடலும், குழந்தைப் பாடல்கள், சுய சரிதையும் மொழிபெயர்ப்பும்' என இந்த நூல் விரிந்து செல்லுகிறது.

பாரதியின் கவிதைக் கோட்பாட்டையும் சமுதாயச் சிந்தனையையும் விளக்கிவிட்டு, தமிழ்க் கவிதையில் அவர் ஏற்படுத்தியுள்ள அடிப்படையான மாற்றங்களை ஆசிரியர் சுட்டிக் காட்டியுள்ளார். பாரதி ஒரு 'ரொமாண்டிக்' (Romantic) கவிஞன் என்பதைத் தக்க சான்றுகள் காட்டி நிறுவியுள்ளார் (பக்.18).

சமுதாயத்தைக் கவிதையால் மாற்ற முடியும் என்று பாரதி உண்மையிலேயே நம்பினார். பாரதிக்குத் தமிழ் இலக்கியப் பயிற்சி உண்டு என்பதையும், மக்கள் இடையே உயிர்த் துடிப்போடு வழங்கிய நாட்டுப் புறப்பாடல் களையும் உள்ளத்தில் வாங்கிக்கொண்டு தம் புதுமைக் கவிதைகளைப் பாரதியார் படைத்தார் என்பதையும் ஆசிரியர் ஆய்வுநோக்கில் தெளிவுறுத்தியுள்ளார். கவிதை– வாழ்க்கை உலகியல்மெய்யுணர்வு ஆகிய மூன்றும் ஒன்றே எனும் உறுதியான நம்பிக்கை பாரதியாருக்கு இருந்தமை அடுத்து விளக்கப்பட்டு இருக்கிறது (பக் 24).

பாரதி சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டமையும், அதையொட்டி ஏராளமான தேசியப் பாடல்களை அவர் பாடியமையும் யாவரும் அறிந்தவை. பாரதியின் இந்த அடிச்சுவட்டைப் பின்பற்றிப் பல தேசியக் கவிகள், தமிழ் நாட்டில்தோன்றியுள்ளனர்.இந்தத்தேசியப்பாடல்கள் எவ்வளவு காலம் நிலைக்கும் என்பது கேள்விக்குறியே. ஏனெனில், வரலாற்றின் ஒரு கால கட்டத்திற்குத் தேவைப்பட்டவை அவை.

அந்தத் தேவையைப் பாரதியின் பாடல்கள் நிறைவு செய்து விட்டன. எனவே, எதிர் காலத்தில், அவை பயன்படா. இதனால், அவை பொலிவற்றுப் போகலாம். இதற்காக யாரும் வருத்தப்பட வேண்டியது இல்லை.

இந்த நூலாசிரியர், பாரதியிடம் பக்தி உடையவராகத் தோன்றுகிறார். எனினும், அவருடைய சமுதாயப் பார்வையைக் கண்மூடித்தனமாகப் போற்றவில்லை! ஆராய்ச்சி உணர்வு ஆசிரியரைக் காப்பாற்றி இருக்கிறது. "பாரதியின் சமுதாயப் பார்வை, வருணாசிரம தருமக் கட்டுப்பாட்டிற்குட்பட்ட ஒன்றாகவே காணப்படுகிறது. 'சாதிகள் இல்லை அடி பாப்பா!' எனவும், 'பறையருக்கும் இங்குத் தீயபுலையருக்கும் விடுதலை' எனவும் அவர் சங்க நாதம் செய்துள்ளது உண்மை. ஆனால் **அவருடைய கவிதைகள் அனைத்தையும், கட்டுரைகள் அனைத்தையும் தொகைவகைப்படுத்திக் காணும் பொழுது, இந்து தருமத்தின் அடிப்படையை – அதாவது இந்து சமூகத்தினரின் வருணாசிரம தரும அடித்தளத்தை மாற்றி அமைக்காமலேயே, சாதி வேறுபாட்டையும் தீண்டாமைக் கொடுமையையும் ஒழித்துவிட முடியும் என்று அவர் நம்புகிறார்** என்பது புலனாகும்" எனவும், "பாரதியார் வருணாசிரம தருமக் கோட்டையைப் பாதுகாத்துக் கொண்டே, சாதியற்ற சமுதாயத்தை உருவாக்க இயலும் எனும்கனவு கண்டார்" (பக். 61) எனவும், இந்த நூலாசிரியர் தெரிவித்துள்ள கருத்துகள், அவருடைய உண்மை நாடும் வேட்கையைப் புலப்படுத்துகின்றன.

பாரதியின் தோல்வி இங்கேதான் தொடங்குகிறது எனக் கூறலாம். ஏன் இத்தகைய பார்வை அவரிடம் ஏற்பட்டது? பல இடங்களில் 'வாழ்க்கையின் உன்னதங்களை 'ஆரிய சம்பத்' என்னும் தொடரால் அவர் சுட்டியுள்ளார். மேலும், இங்கே இன்னும் ஆழமாக டாக்டர் திருநாவுக்கரசு ஆய்வு நடத்தி இருக்கலாம் என நான் நினைக்கிறேன். ஆனால், பாரதிக்குப் பின்வந்தவர்கள், நேர்மாறான போக்குடையவர்களாகத் தோன்றுகின்றனர். கவிதையின் உள்ளடக்கத்தில் எத்தகைய மாற்றங்களைப் பாரதியார் செய்துள்ளார் என்பதை ஒப்புமை நோக்கில் இந்த நூலாசிரியர் காட்டுகிறார்.

வடிவ அமைப்பில், 'சிந்து'வின் பலவகை வடிவங்கள் பாரதிக்குப் பெரிதும் பிடித்து இருந்தன என்பதை, நுட்பமாக ஆசிரியர் விளக்கியுள்ளார். இது மட்டும் அல்லாமல் ஆங்கிலக் கவி வடிவமான 'சானெட்' எனும் பாவினத்தையும் தமிழில் பாரதியார் பரிசோதனை செய்து பார்த்துள்ளமை சுட்டப்பட்டுள்ளது.

இவை யாவற்றுக்கும் மேலாகப் பாரதியார் வசன கவிதையைத் தொடங்கி வைத்து இருப்பதாக ஆசிரியர் கூறுகிறார். இந்தக் கவிதை மரபே, நீண்ட காலப் போராட்டத்திற்குப் பிறகு, இன்று தமிழில் நிலைத்து விட்ட 'புதுக் கவிதைக்கு'த் தோற்றுவாய் எனவும் கருதப்படுகிறது.

'பாட்டிலே, புரட்சி', 'புதுக் கவிதைக்கு வழிகாட்டி' எனும் அதிகாரங்களில், இப்புதுக் கவிதை இயக்கம் பற்றி ஆசிரியர் ஆராய்ந்துள்ளார்.

தமிழில், புதுக்கவிதை இயக்கம் நிலைபெற்றதும் இலக்கிய அங்கீகாரம் பெற்றதும் 'எழுத்து' எனும் இதழின் ஆசிரியரான திரு. சி. சு. செல்லப்பாவால்தான்

ஒரு மொழியின் நீண்ட கால இலக்கிய மரபு, தொன்மை மிக்கது. எனப் போற்றப்படுவதினாலேயே, அதன் வளர்ச்சிக்குச் சில சமயங்களில் தடையாக அது அமைந்து விடுவது உண்டு. தமிழ்க்கவிதையின் மரபு ஈராயிரம் ஆண்டுக் காலப் பழமை உடையது. ஆனால் இந்த நீண்ட நெடுங்கால மரபு, தமிழின் வளர்ச்சிக்குத் தடையாக மாறியதைப் புதுக்கவிதை இயக்கத்தில் பார்க்கிறோம். இவ்வியக்கம் கேலிக்கும், புறக்கணிப்பிற்கும் ஆளானதை யாரும் எளிதில் மறந்துவிட இயலாது. எதிர்ப்பு, புலவர்களிடமும் பண்டிதர்களிடமும் இருந்து மட்டும் வரவில்லை; 'யதார்த்தவாதி* எனவும், 'முற் போக்குவாதி' எனவும் தங்களைப் பிரகடனப்படுத்திக் கொண்ட மார்க்சியவாதிகளிடம் இருந்து கண்டனக் கணைகள்

தொடர்ந்து வந்தன. ஆனால், காலம் கொடுத்த அடியால், வழக்கம் போல, 'பிளேட்டை' அவர்கள் மாற்றிக் கொண்டதும் வரலாற்றுச் செய்தியாகும்.

புதுக்கவிதையின் தொடக்கம் 'வசன கவிதை. அதைத் தமிழில் தொடங்கி வைத்தவர் பாரதி. ஆனால், புதுக் கவிதையின் கொள்கையைப் பாரதி முழுமையாக உணர்ந்து செயல்பட்டார் எனக் கூற இயலாது. 'தமிழ்ப் புதுக்கவிதையைத் தோற்றுவித்தவன் பாரதி' எனும் இந்த நூலாசிரியரின் கருத்து முழு உண்மையாகாது. இலக்கியப் படைப்புகளில் உண்மை யைத் தேடுவது சிக்கலான விவகாரம்; தாக்கத்தை மதிப்பிடுவது என்பதோ அதைவிடச் சிக்கலான செயல். கையில் பிடிபடாத, கட்புலனாகாத காற்றைப்போல அவை நழுவி மறைந்து விடக் கூடியவை.

தமிழ்ப் புதுக்கவிதையைப் பற்றி இந்த நூலாசிரியர் நிறையவே எழுதி இருக்கிறார். மற்றையப் புலவரேறுகள் போல் கண்மூடித்தனமாக எதையும் பேராசிரியர் திருநாவுக்கரசு கூறவில்லை. தமிழில் வளர்ந்து வந்துள்ள புதுக்கவிதையின் இயல்புகளாகப் பத்துப் பண்புகளை ஆசிரியர் வரையறுத்துக் காட்டியுள்ளமை (பக்.243) அவருடைய திறனாய்வுத் திறனை வெளிப்படுத்துகிறது.

இந்த இயல்புகளுள் பல, பாரதியின் கவிதைக் கோட்பாட்டிற்கு முரண்பட்டனவாக உள்ளன. இந்தப் போக்கிற்குக் காரணம் என்ன? நீங்களே சிந்தித்துப் பாருங்கள்!

தமிழ் விமர்சனத்திற்கும் புதுக்கவிதைக்கும் சி. சு. செல்லப்பா ஆற்றிய பணியை (அவரிடம் குறைகள் கண்ட போதிலும்–பக். 253) மனதார ஏற்றுக்கொண்ட தமிழ்ப் பேராசிரியர், இந்த நூலாசிரியரைத் தவிர வேறு யாரும் இருப்பதாகத் தெரியவில்லை.

இக்காலத்தில், தன்னுடைய செல்வாக்கினைக் கவிதைகள் இழந்து வருகின்றன என்பது உண்மை. ஏனெனில், இது 'உரைநடைக்' காலம் . மேலை நாடுகளில், 'கம்ப்யூட்டரின் ஆதிக்கம் பல துறைகளில் பெருகி வருகிறது.

இதனால், இனி அச்சுச் சொற்களாலான (Printed words) இலக்கியம் – சிறப்பாக 'நாவல்'– முக்கியத்துவம் இழந்து விடும் என எண்ணுகின்றனர். நம்முடைய வாழ்வும், மேலை நாட்டு நாகரிகத்திற்கு இரையாகிக் கொண்டு வருகிறது. இந்த நிலையில், குறுங்காப்பியம் போன்ற இலக்கிய வடிவத்தின் 'கதி' என்னவாகும்? தமிழில் இனிமேல், குறுங்காப்பியத்திற்கோ, உருவகக்கதைப் பாடல்களுக்கோ செல்வாக்கு இல்லாமல் போகலாம்.

பாரதியார், 'பாஞ்சாலி சபதம்' எனும் குறுங்காப்பியத்தையும், 'குயில் பாட்டு' எனும் உருவகக் கதைப் பாட்டையும், 'கண்ணன் பாட்டுகள் எனும் தன்னுணர்ச்சிப் பாடல்களையும் படைத்துள்ளார். வருங்காலத்தில், பாரதியின் படைப்புகளில் இந்த மூன்றுமே ஆர்வத்துடன் படிக்கப்படலாம் என அறிஞர்கள் கூறுகின்றனர். பாரதியின் தேசியப் பாடல்களையும் தோத்திரப் பாடல்களையும் காலம் விழுங்கி விடலாம். கண்ணன் பாட்டுகளில் கூட, கவிதைப் பண்பைவிட, ஓசை நயமும், உணர்ச்சிக் கனிவும் (Sentiments) மேலோங்கி நிற்கின்றன.

'பாஞ்சாலி சபதம்' உணர்ச்சிக் காவியமாகக் காட்சி தருகிறது. இதனால், புலன் இன்பத்தோடு நின்று விடுகிறது எனலாம். 'குயில் பாட்டில் இலக்கியத்தின் கொடுமுடியைப் பாரதி எட்டிவிட்டார். இதுதான் அவருடைய 'தலைசிறந்த' இலக்கியப் படைப்பு எனலாம். இந்தப் படைப்பு எந்தச் சமூகப் பயன் மதிப்புகளையும் சார்ந்து விடாதவாறு இயற்றப்பட்டுள்ளது.

சமூகப் பயன் மதிப்புகளை அடிப்படையாகக் கொண்டு படைக்கப்பட்ட இலக்கியங்கள் காலத்திற்குக் கட்டுண்டதாகும். அந்தப் பயன் மதிப்புகள் காலம் போகப் போகக்கழன்று போய்விடும். 'சிறந்த இலக்கியப் படைப்பு' என்பது ஒவ்வொரு மனிதனுக்கும் அவரவருடைய வயதிற்கும் அனுபவத்திற்கும் ஏற்றவாறும் ஒவ்வொரு தலைமுறையின் தேவைகளுக்கு

ஏற்றவாறும் புத்தம் புதிய பொருள்களைக் கொடுத்துக் கொண்டே இருக்கும். அதனுடைய பொருள், 'இதுதான்' என்று யாராலும் வரையறுத்துக் காண இயலாது.

இத்தகைய இயல்பினைக் கொண்டது 'குயில்பாட்டு.' அதில் பலவகை அர்த்த அடுக்குகளை'க் (Layers of meaning) காணலாம். பேராசிரியர் தெ. பொ. மீனாட்சி சுந்தரனார், மணிக்கொடி சீனிவாசன், டாக்டர் (திருமதி) விஜயபாரதி,டாக்டர் கா.மீனாட்சி சுந்தரம் முதலியோர், குயில் பாட்டிற்கு வெவ்வேறான விளக்கங்களைக் கொடுத்து இருக்கின்றனர்.

இந்த நூலாசிரியர், மற்றொரு 'புதிய நோக்கில்' இந்தக் குயில் பாட்டை விளக்கியுள்ளார் (பக்.274) பிராய்ட் (S. Freud) டின் உளநிலைப் பகுப்பாய்வு (Psycho–analysis) முறையில், இந்தப் பாட்டினைக் காணவும், காட்டவும் முயன்றுள்ளார். இது வரவேற்கத் தக்க புதிய முயற்சி.

குழந்தைப் பாடல்களை இயற்றுவதிலும் கவிதையில் 'தன்வரலாற்றைப்படைப்பதிலும் பாரதியார்முன்னோடி யாக இருக்கிறார். இத்துறைகளில் அவருடைய தாக்கம் குறிப்பிடத்தக்க அளவு அமையவில்லை. இவற்றில் சாதனைகளை அவரால் செய்து காட்ட இயலவில்லை. இளம் வயதிலேயே, அவர் அகாலமரணம் அடைந்தமை இதற்குக் காரணமாகலாம்.

மொழி பெயர்ப்பிலும், அவருடைய கவனம் சென்றிருக்கிறது. மொழி வளர்ச்சிக்கு, மொழிபெயர்ப்பு எவ்வளவு இன்றியமையாதது என்பதைத் தாம் உணர்ந்தவாறு முதன் முதல் உணர்த்தியவர் பாரதியே.

உண்மையிலேயே, இந்த நூலாசிரியர் அனைத்தையும் ஆராய்ந்துதான், தம்முடைய முடிவுகளை வெளியிட்டு இருக்கிறார். தாம் எடுத்துக் கொண்ட ஆய்வுக் களம் அகலமாக இருந்த போதிலும், ஆழமாக உழுது, 'புதிய சிந்தனை'களைப் பேராசிரியர் பயிரிட்டிருக்கிறார். இதனால், இந்த நூலைத் திரும்பத் திரும்பப் படித்து,மனத்தில் அசை போட்டுக் கொண்டே இருக்கலாம்.

பாரதியாரைப்பற்றி இதுவரை வெளிவந்துள்ள விரல் விட்டு எண்ணக்கூடிய சிறப்புமிகு 'திறனாய்வு– ஆராய்ச்சி' நூல்களோடு, 'தமிழ்க் கவிதையில் பாரதியின் தாக்கம்' எனும் இந்நூலையும் அறிஞர்கள் சேர்த்துக் கொள்ளுவர் என நம்புகின்றேன்.

சென்னை **க.அ. சச்சிதானந்தம்**

5–12–84

முதல் பதிப்பின் முன்னுரை

'பசித்தவன் பழங்கணக்குப் பார்ப்பான்' என்பது பழமொழி. எனக்குத் தீராதத் 'தமிழ்ப் பசி' நெடுநாட்களாக இருந்து வருகிறது. அடிக்கடி என்னை நானே 'இந்நூற்றாண்டில் தமிழ் மொழி வளர்ந்து இருக்கிறதா?' எனும் கேள்வியைக் கேட்டுக் கொள்வேன் ; இலக்கிய ஈடுபாடுடைய தோழர்களையும், நண்பர்களையும் சந்திக்கும் போதெல்லாம், இந்தக் கேள்வியைக் கேட்டுத் தொல்லைப்படுத்துவேன். விரும்பத்தகாத இந்த இயல்பு. எப்படியோ என்னிடம் குடிகொண்டு விட்டது!

இந்தக் கேள்விக்கு விடை காணத் திட்டமிட்டேன், ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு, இதற்கொரு வாய்ப்பும் கிடைத்தது. சாகித்திய அக்காதமியின் ஆதரவில் குஜராத் மாநிலத்திற்குத் 'தமிழ்த் தூதனாக, 1979 இல் அனுப்பப் பட்டேன். திருக்குறளைப் பற்றியும், தமிழ்ப் பண்பாட்டைப் பற்றியும் பதினைந்து சொற்பொழிவுகளைப் பல்வேறு நகரங்களில், 'இலக்கியப்பிரம்மாக்கள்' முன்னிலையில் செய்தேன். அகமதாபாத் நகரில், சாகித்திய அக்காதமியின் அந்நாள் தலைவராக இருந்த பேராசிரியரும் கவிஞருமான திரு.உமாசங்கர் ஜோஷி அவர்களின் தலைமையில் 'இன்றைய தமிழ் இலக்கியத்தின் போக்குகள்' எனும் பொருள் பற்றி, ஆங்கிலத்தில் சொற்பொழிவு ஆற்றினேன். அதைத் தொடர்ந்து கலந்துரையாடலில், இன்றைய தமிழ் இலக்கியத்தில் பாரதியின் தாக்கம் யாது?' எனும் வினாவினை

விழாத் தலைவரே எழுப்பினார். ஒருவாறு, என் மனத்தில் பட்டவற்றை எடுத்துரைத்துத் தப்பித்துக் கொண்டேன்.

மறுநாள் காலையில், நான் தங்கி இருந்த அறைக்கு, ஒரு பத்திரிகையாளர் வந்தார். பாரதியின் தாக்கத்தைப் பற்றிச் சொன்ன கருத்துகளை ஒரு சிறுகட்டுரையாக எழுதித் தருமாறு அவர் கேட்டார். பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு இடையே, இரண்டு நாளில் அதை ஆங்கிலத்தில் எழுதிக் கொடுத்தேன். குஜராத்தி நாளிதழ் ஒன்றின் வாரமலரில் அது வெளியிடப்பட்டது.

சில நாட்களுக்குப் பிறகு, வத்தோதரா (பரோடா) விற்குச் சென்றேன். கெய்க்குவார் பல்கலைக்கழகத்தின் 'அழகுக் கலைத் துறை'யின் (Fine Arts) தலைவராக இருந்த ஓர் அம்மையார் கர்நாடக இசையிலும், பரத நாட்டியத்திலும் வல்லவராக விளங்கினார்கள். என்னை விருந்தினனாக அந்த அம்மையார் ஏற்றுப் போற்றினார்கள். அவர்கள் இயற்றிய 'சோமநாதர் குறவஞ்சி' எனும் குஜராத்தி மொழி 'நாட்டிய நாடக' நூலைப் படித்து விளக்கித் தமிழ் மரபு(குறவஞ்சி) கெடாமல் இருக்கிறதா என்று ஆர்வத்தோடு அவர் வினவினார்கள்.

அம்மையாரின் முயற்சியால் பரோடாவில் உள்ள 'சாகித்திய மண்டலின்' சார்பில் ஒரு கலைவிழா ஏற்பாடு செய்யப்பட்டது. விழாவின் வரவேற்புரையில் 'முத்தமிழ் விழாவைப் போன்று 'திரை குஜராத்' விழா அன்று கொண்டாடப்படுவதாகச் சங்கத்தினர் சொன்னார்கள். என்னை, 'இயல்'துறைப் பேச்சினை நடத்துமாறு பணித்தார்கள்.

அப்பொழுது, 'தமிழ்க் கவிதையில் பாரதியின் தாக்கம் ' என்பதைப் பற்றி ஆங்கிலத்தில் பேசினேன். என்னுடைய பேச்சையும், மேற்கோளாகக் காட்டப்பட்ட பாரதியின் பாடல்களையும், மேடையில் உடனுக்குடன் அந்த அம்மையாரே குஜராத்தி மொழியில், மொழிபெயர்த்துச் சொன்னார்கள். அடுத்து, 'சோமநாதர் குறவஞ்சி' எனும் நாட்டிய நாடகத்தை அந்த அம்மையாரே. தம் நாட்டியக் குழுவினருடன் நடித்துக்

காட்டினார்கள். இத்தகைய சூழலில், இந்த நூலின் 'கரு' என் உள்ளத்தில் உருவாயிற்று.

நாடு முழுவதும் பாரதி நூற்றாண்டு விழாவினைக் கொண்டாடிய காலத்தில், தாம்பரம் கிறித்துவக் கல்லூரியில் நடைபெற்ற கருத்தரங்கில், இந்தத் தலைப்பிலேயே என்னுடைய ஆய்வுரையை வழங்கினேன்.

பின்னர், 1982, ஜூலையில், ஸ்ரீலங்காவிற்குச் சென்று இருந்தேன். யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் மாணவர் பேரவை நடத்திய பாரதி நூற்றாண்டு விழாவில், என்னைக் கலந்து கொள்ளுமாறு கூறினர்.

அப்பல்கலைக் கழகத்தின் மதிப்பிற்குரிய துணை வேந்தரும் என் இனிய நண்பருமான கலாநிதி ச.வித்தியானந்தன் அவர்கள் தலைமையில், இதே பொருள்பற்றி, விரிவான சொற்பொழிவினை ஆற்றினேன்.

அவ்விழாவிற்கு வந்திருந்த, தமிழில் 'திறனாய்வின் ஒளி விளக்காக' விளங்கிய பேராசிரியர் கலாநிதி க. கைலாசபதி, என்னுடைய உரையைப்பாராட்டி, "தமிழ் நாட்டிலும் இத்தகைய விமரிசகர்கள் இருக்கிறார்கள் என்பது மனத்திற்கு மகிழ்வூட்டுகிறது. இந்தப் பேச்சை 'டேப்' எடுக்காமல் போய் விட்டேன்; விரைவில் இதனை நூலாக வெளியிட வேண்டும்" என்று ஒளிவு மறைவு இல்லாமல், தம்முடைய கருத்தைத் தெரிவித்தார்கள்.

இந்த உந்துதலினால்தான் இந்த நூல் பிறந்தது!

நூலை வெளியிடும் இச்சமயத்தில், நண்பர் கலாநிதி கைலாசபதி நம்மிடையே இல்லை என்பதனால் வருத்தம் மேலிடுகிறது.

நூலைப்பற்றி நான் சொல்ல விரும்பும் கருத்துகள் மூன்று. இயன்றவரை நடுவு நிலையோடு என்னுடைய ஆய்வினைச் செய்து இருக்கிறேன். பாரதியாரை யாரோ சிலருடைய

பாட்டனாராக நினைக்காமல், 'என்னுடைய பாட்டனார்' எனும் உணர்வோடு அணுகியுள்ளேன். இரண்டாவதாகப் பாரதிக்குப் பின்னர்த் தோன்றியுள்ள கவிஞர்கள் எல்லாருடைய கவிதைகளையும் இந்நூலில் பயன்படுத்த இயலவில்லை! இந்தத் தவற்றைப் பொறுத்து அருளுமாறு, என் அருமை உடன் பிறப்புகளை வேண்டிக் கொள்ளுகின்றேன். நூல் வடிவில் வந்துள்ள கவிதைத் தொகுப்புகளுள், என்னுடைய நோக்கத்திற்குப் பயன்படக் கூடியவற்றையே தேர்ந்து எடுத்துக் கொண்டேன்.

மூன்றாவதாகக் கருத்துக்களைத் தெளிவுறுத்தவும் வலியுறுத்தவும், 'கூறியது கூறலாக'ச் சிலவற்றை அமைத்துள்ளேன்; தவிர்க்க இயலாத காரணத்தினாலேயே, இப்படிச் செய்ய நேர்ந்தது என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

இந்த நூலிற்குத் திறனாய்வு முறையில், புதுமை இலக்கியத் துறையில் எனக்கு நண்பராக, நெறிப்படுத்தும் ஞானியாக, வழிகாட்டும் தலைவராக உள்ள என் மதிப்பிற்குரிய தோழர் திரு. கி. அ. சச்சிதானந்தம் M.A., B.Com.. C.A.I–I.B., அவர்கள் ஓர் அணிந்துரையை மனமுவந்து அளித்துள்ளார்கள். அவர் ஒரு புத்திலக்கியப் படைப்பாளி; புதுமைக் கவிஞர்; கதையாசிரியர்;கட்டற்ற சிந்தனையாளர்; கட்டுப்பாடுகளைத் தகர்த்து எறியும் எழுத்தாளர்! இவை யாவற்றிற்கும் மேலாகத் தமிழுணர்வின் மொத்த வடிவமாக விளங்குபவர்! அவருக்கு என் உளங்கனிந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்!

தமிழ்க்கடல் பதிப்பகத்தினர், என்னுடைய தொல்லைகளுக்கு எல்லாம் ஈடு கொடுத்து, இந்த நூலினை நன்முறையில் வெளியிட்டுள்ளனர். அவர்களுக்கும் என் நன்றியை உரித்தாக்குகிறேன்.

கருத்து வேற்றுமைக்கு மதிப்புக் கொடுத்தால்தான் திறனாய்வும், ஆராய்ச்சியும் உண்மையாக வளர இயலும் என்பதைக் கருத்தில் கொண்டு, இந்த நூலினைப் படிக்குமாறு அன்பர்களை வேண்டுகின்றேன்.

சென்னை,
21, கார்த்திகை,
தி.ஆ.2015.
(6–12–1984) **க. த. திருநாவுக்கரசு**

உள்ளடக்கம்

பக்கங்கள்

1.நோக்கும் போக்கும் 1

காலச் சூழல் – கவிதைக் கொள்கை நோக்கும் போக்கும்: எளிமை –ஒலி – நயம்– புதிய பாடுபொருள்– நாட்டுப்பாடல் மரபு – உலகியல் மெய்யுணர்வு.

2.தேசியம் 17

உள்ளடக்கத்தில் ஊடாடும் தாக்கம் – தாய்நாட்டுப் பற்று – தாய் மொழிப் பற்று–தேசிய ஒருமைப்பாடு– அண்ணல் காந்தியின் அறப்போர் – தலைவரைப் போற்றுதல் – ருஷியப் புரட்சி.

3. சமுதாயப் பார்வை 40

சாதி வேறுபாடற்ற சமுதாயம் பெண்களைப் போற்றுதல் – காதலே கடவுள் – சமுதாய உணர்வு – புதுமைக் கவிஞரும் புரட்சியும்

4. சிந்துக்குத் தந்தை 91

மரபும் பாரதியும் – நாட்டுப்புறப் பாடலின் தாக்கம் – இசைப் பாடல் நெறி – சிந்து –இசைப் பாடல்கள் –பாரதியின் இசையறிவு – வாழ்வும் தாழ்வும்

5. புதிய முயற்சி 125

சங்க இலக்கியத்தில் பக்திப்பாடல்களில் – ஒடுங்கு தசை பாரதி வகுத்த வழி – பாரதியின் சிறப்பு – பாரதியின் அடிச்சுவட்டில் சிந்தனைப் பாடல்கள் –சானெட் –முன்னோடி

– கலைஞரின் தோல்வி –பாரதியின் வெற்றி – பாரதியின் வழியில்...!

6. பாட்டிலே புரட்சி 165

பாட்டிற்குச் சிறை – நோக்கமும் ஆக்கமும் –புதுமையின் தேவை –பவுண்ட்டின் கருத்து – கொள்கைக் குழப்பம் – லாரன்சின் விளக்கம்– பாரதியார் கண்ட வசன கவிதை – போற்றுதலும் தூற்றுதலும்– பாரதியின் வழியில் – பாட்டும் பாதையும் – தோய்வும் தொய்வும் –அசலும் நகலும் – பன்முக முயற்சியாளர்– 'எழுத்தின்' நாயகர் வசன கவிதை: அன்றும் – இன்றும் – வேறு வழி?

7. புதுக்கவிதைக்கு வழிகாட்டி 198

புதுக்கவிதை: பல்வேறு பெயர்கள் – புதுக்கவிதை: சொல்லாட்சி – கவிஞர் காட்டும் புதுக்கவிதை– புதுக்கவிதையின் இயல்புகள்–அடிப்படை அலகு – உந்துதல் சக்தி – வளர்ச்சி நிலை – மணிக்கொடிக் காலம் விடுதலைப் போராட்டத்தால் உண்டான தடை' 'எழுத்தின்' காலம் எதிர்ப்பும் மறுப்பும் – உரை வீச்சும் புதுக்கவிதையும் ஈழத்தில் புதுக்கவிதை

8. குறுங்காப்பியமும் உருவகக் கதைப் பாடலும் 238

ஆடலிசைப் பாவின் புதிய வடிவம் –வகைப்பாடு' பாரதியாரின் கதைப் பாடல்கள்: பாஞ்சாலி சபதம் – குறுங்காப்பியம்: கண்ணகி புரட்சிக் காப்பியம் – மணிமேகலை வெண்பா – மச்சகந்தி – மாரிவாயில் – சகுந்தலை வெண்பா – கோசலைக் குமரி விதியோ? வீணையோ? சிலம்பின் சிறுநகை இராவண காவியம்–அகலிகை பற்றிய கதைப் பாடல்கள்– பாண்டிமாதேவி – மாதவி காவியம் – உருவகக்கதை : குயில் பாட்டு – சஞ்சீவி பர்வதத்தின் சாரல் – பாவேந்தரின் உருவகப் பாடல்கள் கண்ணப்பன் கிளிகள்– தைப்பாவை

9. குழந்தைப் பாடல்கள் 287

பாரதி காட்டிய வழி –பாப்பாவும் குழந்தையும் –பாப்பாப் பாட்டின் சிறப்பியல்புகள் – பாரதியின் வழி யில் – புதிய விளிகள் – குழந்தைப் பாடல் மரபு – பாரதி கண்ட அவ்வை – புதிய ஆத்திசூடியின் போக்கு – பாவேந்தரின் படைப்பு – வாணிதாசரின் ஆத்திசூடி– சிந்தனைச் செம்மலின் ஆத்திசூடி – வரதராசன் ஆத்திசூடி – சூடிகள் படைத்த சுடர்மணிகள் – கவியோகியின் பொதுமை நெறி – பழமையில் புதுமை

10. சுய சரிதையும் மொழி பெயர்ப்பும் 322

தன் வரலாறு –மொழி பெயர்ப்பு நூல்கள் : நோக்கு – வகைப்பாடு – மொழி பெயர்ப்புப் பணி ஆசிய மொழிப் படைப்புகள்: சீன, ஜப்பானியப் பாடல்கள் – ஐரோப்பிய மொழிப் படைப்புகள்: பிரான்சின் தேசிய கீதம்– ஆங்கில மொழி பெயர்ப்புகள்: கற்பனையூர் – இந்திய அழைப்பு–சமஸ்கிருத நூல்கள் – வங்காள மொழியின் தமிழாக்கம்– ஆங்கிலத்தில் மொழி பெயர்ப்புகள்– பாரதியின் வழியில் – முடிப்புரை –பொருட்குறிப்பு அகராதி.

11. பொருட்குறிப்பு அகராதி 351

12. வாழ்க்கைக் குறிப்பு 357

13. நூலாசிரியரின் நூல்கள் 359

14. தமிழ்க் கட்டுரைகள் 363

1

நோக்கும் போக்கும்

தேசியக் கவி சுப்பிரமணிய பாரதியார் தமிழ்த் தாயின் தவ மகன்; பாரதத் தாயின் அடிமைத் தளையை அறுத்தெறிய அயராது அரும்பணியா ற்றிய தேசிய கவி ; விடுதலைப் போராட்டம் எனும் வேள்வியில்" தம் உடல், பொருள். ஆவி ஆகிய அனைத்தையும் தமிழ்க் கவிதை வடிவில் 'ஆகுதி'யாகப் பெய்த பெருங் கவிக்கோ! மனித நேயத்தை மதித்துப் போற்றி, மன்பதைக்கு மனிதம்' எனும் மலரின் மாட்சியை ஒல்லும் வகையெல்லாம் ஓயாது மகாகவி! எடுத்துரைத்த உலக மகாகவி.

வாளேந்து மன்னர்களும். மன்னரால் போற்றப்பட்ட புலவர்களும் மகிழ்வாய் அந்நாள். தாளேந்திக் காத்த நம் தமிழ் மொழியை, தாய்மொழியை இந்த நாளில் காப்பவர் யார்? போற்றுபவர் யார்? என அயலார் எள்ளி நகையாடத் தொடங்கிய சமயத்தில், தம் தோளேந்திக் காத்த தோன்றலே பாரதி!

*வாராய்! கவிதையாம் மணிப்பெயர்க் காதலி!"[1] எனக் கவிதையைக் காதலியாகப்பாரதியார் போற்றினார். "நமக்குத் தொழில் கவிதை!'[2] என்னும்

1 பாரதியார் கவிதைகள். வானவில் பிரசுரம், சென்னை, 1980, பக். 473.

2 மேற்படி, பக். 10.

குறிக்கோளோடு வாழ்ந்தவன் பாரதி! " செய்யுங் கவிதை பராசக்தியாலே செய்யப்படுங்காண்!"[3] எனும் உணர்வோடு வாழ்ந்தவன் பாரதி! புதியதோர் உலகைப் படைக்க ஓயாது முயன்றவன் பாரதி! மனிதனின் உரிமைகளை உலகெங்கும் நிலைநாட்ட, உரிமைக்குரல் கொடுத்தவன் பாரதி!

மனித குலத்தின் துன்பத்தைத் துடைக்கும் சட்ட திட்டங்களை இயற்றவந்த "சட்டமன்ற வல்லுநர்' களென மக்களால் உணர்ந்து போற்றப்படாத சட்ட நிபுணர்களே கவிஞர்கள்"[4] என்று அன்று ஷெல்லி அறிவித்தான். அதற்குச் சிறந்ததொரு சான்றாக 'ஷெல்லிதாசனா'கிய சுப்பிரமணிய பாரதி சிறப்புற்று விளங்குகின்றான்.

காலச்சூழல்

கி. பி. பதின்மூன்றாம் நூற்றாண்டின் இறுதியில் சோழப் பேரரசு வீழ்ச்சியுற்றது! அதற்குப் பிறகு ஈடு இணையற்ற மாபெரும் தமிழ் இலக்கியம் ஒன்றுகூடத் தோன்றவில்லை எனக் கூறின், அது மிகையாகாது. புற்றீசல்போலப் புலவர்கள் பலர் தோன்றினர். அவர்கள் பாடிய சிற்றிலக்கியங்களும் தலபுராணங்களும் கணக்கில் அடங்கா! ஆயினும், அவற்றுள் பெரும்பகுதி. கால வெள்ளத்தை எதிர்த்து நீந்திக் கரையேறாது வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டன.

அவற்றைப் பாடிய புலவர்கள் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் வாழ்ந்தவராவர்; பல திறப்பட்ட சமயத்தவராவர்; பலவகைத் தொழில் செய்து வாழ்க்கை நடத்தியவரும் ஆவர். அவர்களைப் போற்றிய புரவலர்களும், வள்ளல்களும் மனமகிழுமாறு, 'மாடுகளும் வழக்கத்தால் செக்கைச் சுற்றும்' எனும் முறையில் பாடுவதையே, இப்புலவர்கள் குறிக்கோளாகக் கொண்டு இருந்தனர்.

---

3 மேற்படி, பக். 10.

4 Shelley, In Defence of Poetry. P. 29.

இவர்களுடைய நோக்கும், கவிதையின் போக்கும் பண்டைக்கால மரபில் இருந்து வேறுபட்டு விளங்கின. பண்டைத் தமிழ்ச் சான்றோர்கள் சிறப்புமிகு கருத்துகளைத் தெளிவாக, உள்ளத்தில் பதியுமாறு பாடுவதையே கடமையாகக் கொண்டு இருந்தனர். இடைக்காலப் புலவர்கள் விழுமிய கருத்துக்களுக்கு முதன்மை இடம் தரவில்லை: வெறும் சொல் அலங்காரத்தில் மூழ்கித் திளைத்தனர்; பாட்டின் உயிர் நாடியாகிய உணர்ச்சித் துடிப்பிற்கு உரிய இடத்தைத் தருவதற்கு மறந்தனர். வேறு வகையாகச் சொல்லுவது எனில், இடைக்காலப் புலவர்கள் பாட்டின் ஆன்மாவாகிய கருத்தினைப் பற்றிக் கவலைப் படவில்லை; வெற்றுடலாகிய செய்யுளுக்குச் சொற்களால் ஆகிய ஆடை அணிகளை அணிவித்து மகிழ்ந்தனர். இந்நிலை பாரதியார் தோன்றும் வரை. தமிழகத்தில் நிலவி இருந்தமை இங்கு நினைவுகூர்தற்கு உரியதாகும்.

இதோ பாரதி கூறுவதைக் கேளுங்கள்!
கன்னனோடு கொடை போயிற்று! உயர்கம்ப
நாடனுடன் கவிதை போயிற்று![5]

அடுத்து அவனே பேசுகிறான்! 'இந்த அவலநிலை மாற வேண்டாமா? மாற்றப்பட வேண்டாமா?' ''ஆம்! இந்த அவலநிலையை மாற்றத்தான் நான் வந்துளேன்!" என்று பாரதி அறிவிப்பதைப் பாருங்கள்!

புவியனைத்தும் போற்றிடவான் புகழ்படைத்துத்
தமிழ்மொழியைப் புகழி லேற்றும்
கவியரசர் தமிழ்நாட்டுக்கு இல்லையெனும்
வசையென்னால் கழிந்த தன்றே![6]

ஆம்! இது உண்மை! வெறும் புகழ்ச்சி இல்லை! இதனால் அன்றோ பேராசிரியர் மு. வரதராசனார். "தமிழ் இலக்கிய வரலாற்றில் 'புதிய மறுமலர்ச்சி'க் காலம் பாரதியால்

---

5 பாரதியார் கவிதைகள், சுப்பிராம தீட்சதர் மறைவு, வி.1.

6 மேற்படி, எட்டையபுர அரசருக்கு ஓலைத்தூக்கு,3.

தொடங்கப் பெற்றது. இம்மாபெரும்கவிஞரே இவ்வியக்கத்தின் தலைவராகவும் திகழுகிறார்![7] என்று மொழிந்துள்ளார்.

பாரதியார் தமிழ்க் கடலை நீந்திக் கரையேறியவர்; வடமொழிக் கடலைக் கடைந்து, அமிழ்தத்தைத் தேடியவர்; ஐரோப்பிய மொழிக் கடல் அலைகள் கரையோரத்தில் கொண்டு வந்து சேர்த்த முத்துகளையும் சிப்பிகளையும் சேகரித்துச் சிந்து பாடியவர். சென்ற நூற்றாண்டில், ஐரோப்பிய நாடுகளில் புதியதொரு மெல்லிய பூங்காற்று' இலக்கிய உலகில் வீசியது! அதனை வீறுணர்ச்சி இயல் (Romanticism) என்பர். நம் தேசிய கவி, அப்பூங்காற்றின் நறுமணத்தில் சிந்தனையைப் பறி கொடுத்தவர். இந்த இலக்கியப் போக்கின் இயல்புகள் பல. அவற்றுள் கவிஞனைத் தூண்டி கவிதை ஆவேச வெறிகொளச் செய்யும் உந்துதல் சக்தி முதன்மையானது; படிப்பவர் உள்ளத்தில் துடிப்புமிகு எழுச்சியைத் தோற்று விக்கும்; வியப்பை உண்டாக்கும், பேரார்வத்தை ஊட்டும்.

மற்றும் 'கற்பனைச் சிறகு விரித்து இடைக்காலப் பின்னணிகளுக்குப் பறந்து செல்லுவதையும், பழமையின் மீது தீராக்காதல் கொள்ளும் போக்கினையும், தனி மனிதத்தின் சிறப்பை வியந்துபாடும் நிலையினையும், அறிவுப்பூர்வமான அணுகும் நிலைகளை எதிர்ப்பதையும், அடிமன உணர்வுகளுக்குச் சிறப்பிடம் அளிப்பதையும், மரபுகளை எதிர்த்துப் போராடுவதையும் உணர்வாற்றலை நோக்கியும். இயற்கை வனப்பை நோக்கியும். மனித ஆன்மா பயணம் மேற்கொள்ளுவதையும்"[8] வீறுணர்ச்சி இயக்கத்தின் பல்வேறு இயல்புகளாகக் கூறுவர்.

கவிதைக் கொள்கை

சுப்பிரமணிய பாரதியாரின் "கவிதை' பற்றிய எண்ணங்களைத் தொகை வகைப்படுத்திப் பார்ப்போமானால், அதில் 'வீறுணர்ச்சிப்' பண்புகள் மேலோங்கி நிற்பதை எளிதில்

---

7 Dr. M. Varadarajan, Indian Literature' Sahitya Academi, 1951, P. 43.

8 டாக்டர் ஜி. ஜான் சாமுவேல், 'ஷெல்லியும் பாரதியும்' சென்னை. 1980, பக். 21.

உணரலாம். தம்முடைய கவிதைக் கோட்பாட்டை விளக்கும் திறனாய்வு நூல்களைப் பாரதியார் எழுதவில்லை. எனினும், மக்கள் கவிஞனாகிய பாரதிக்கு, மக்கள் ஆட்சியைப் போற்றும் பாரதிக்கு, புத்துலகச் சிற்பியான பாரதிக்கு 'இக்காலத்திற்குத் தேவையான கவிதை எவ்வாறு இருக்க வேண்டும்?" என்பதைப் பற்றித் தெளிவான கருத்துகள் சில இருந்தன. அவை, அவருடைய பாட்டுகளிலும், கட்டுரைகளிலும் இழையோடியுள்ளன.

கவிதையின் இயல்பு யாது?

உயிரிலாச் செய்திகட்கு உயிர்மிகக் கொடுத்து
ஒளியிலாச் செய்திகட்கு ஒளியருள் புரிந்து
வானசாத்திரம் மகமது வீழ்ச்சி
சின்னப்பையல் சேவகத் திறமை
எனவரு நிகழ்ச்சி யாவே யாயினும்
அனைத்தையும் ஆங்கே அழகுறச் செய்யும்[9]

ஆற்றல் வாய்ந்தது கவிதை என்பதை பாரதியார் நன்குணர்ந்து இருந்தார்.

"தமிழ்மொழிக்கு அழியாத உயிரும் ஒளியும் இயலுமாறு இனிப் பிறந்து காவியங்கள் செய்யப் போகிற 'வர கவிகளுக்கு" அவர் கூறியுள்ள அறிவுரையைக் காண்போம்.

எளிய பதங்கள், எளிய நடை, எளிதில் அறிந்து கொள்ளக்கூடிய சந்தம், பொது மக்கள் விரும்பும் மெட்டு இவற்றினையுடைய காவியமொன்று தற்காலத்திலே செய்து தருவோன் நமது தாய்மொழிக்குப்புதிய உயிர் தருவோனாகின்றான்,[10]

என்பது பாரதியாரின் உள்ள வேட்கையாகும். இதனையே.

---

9 பாரதியார் கவிதைகள், 'மனைத் தலைவிக்கு வாழ்த்து'.14–19.

10 மேற்படி, பாஞ்சாலி சபதம், முன்னுரை.

சுவை புதிது ; பொருள்புதிது; வளம்புதிது;
சொற்புதிது; சோதி மிக்க
நவகவிதை யெந்நாளும் அழியாத
மகாகவிதை[11]

என்று பாடல் வாயிலாகப் பாரதியார் வெளியிட்டுள்ளார். மற்றும், புத்துலகக் கவிஞனுடைய தொழில்களாக,

தெளிவுறவே அறிந்திடுதல்; தெளிவுதர
மொழிந்திடுதல்; சிந்திப் பார்க்கே
கவிவளர உள்ளத்தில் ஆநந்தக்
கனிவுபல காட்டல்; கண்ணீர்த்
துளிவரஉள் ளுருக்குதல்இங் கிவையெல்லாம்
நீ அருளும் தொழில்கள் அன்றோ?[12]

என்று அவர் அறிவிக்கின்றார்.மேலும், பாட்டினைக் "கற்பனை வர்ணனையும் காட்டிக் கதை வளர்க்க வேண்டும்"[13] என்றும் கவிஞர் தெளிவுறுத்துகின்றார்.

இலைமறை காய்போல, பாரதியாரின் கவிதைகளிலே பொதிந்துள்ள கவிதைப் பண்புகளை முறைப்படுத்திக் காணுகின்ற பொழுது, வடிவத்தாலும், உள்ளடக்கத்தாலும், உத்தியாலும் பாரதியார் புதியதொரு வழிமுறையை – நெறிமுறையை – பாட்டியற்றும் பாங்கினை வகுத்துத் தந்துள்ளமை புலனாகின்றது.

இப்பண்புகளுக்கும் புதுமைப் போக்குகளுக்கும் சிறப்புமிகு இலக்கியமாக அவருடைய கவிதைகளே விளங்குகின்றன. மேற்கண்ட கவிதை இயல்புகளைக் கருத்தில் கொண்டு, பாரதியாரின் பாடல்களை மேற்போக்காக ஒரு முறை நோக்கினாலும், எவ்வாறு பழைய (இடைக்கால) தமிழ் இலக்கிய மரபுகளில் இருந்து, அவை வேறுபட்டுள்ளன என்பதை எளிதில் உணரலாம்.

---

11 பாரதியார் கவிதைகள், மு.கு.ஓலைத்தூக்கு, 3.

12 மேற்படி,பாஞ்சாலி சபதம்,சூதாட்டச் சருக்கம் வாணியை வேண்டுதல்.

13 மேற்படி, குயிற். 6 : 27.

சுப்பிரமணிய பாரதியார், கவிதையைப் 'புலமையின் பொழுது போக்காகக்' கருதவில்லை; அது நாட்டுமக்களின் உள்ளத்து உணர்வுகளை, துடிப்புகளை, பொருமல்களைப் புலப்படுத்துவதாக அமைய வேண்டும் என்று எண்ணினார். மக்களுக்கு எளிதில் விளங்கும்படி வடிவாலும், உணர்த்தும் பொருளாலும் தெளிவான கவிதைகளைப் படைப்பதே. இக்காலத்தின் தேவை என்பதை அவர் உணர்ந்து இருந்தார். கவிதையின் 'பாடுபொருள்' மக்கள் வாழ்க்கையை மையமாகக் கொண்டு இருக்க வேண்டும் என்று அவர் கருதினார். இதைத்தான். அறிஞர் அண்ணா அவர்கள் 'நாடும் ஏடும் இணைந்தும் இயைந்தும் இயங்க வேண்டும்' என்று சொன்னார். இன்று நாம், இதனை 'இலக்கியத்தின் சமுதாயப் பார்வை' எனப் போற்றுகிறோம். இவற்றோடு பேச்சு மொழியுடன் பெரிதும் நெருக்கம் உடையதாகக் கவிதை மொழி–இலக்கிய மொழி அமைய வேண்டும் என்று அவர் அறிவுறுத்தினார். "பாடல் சான்ற புலனெறி வழக்கம்", 'உலகியல் மொழி வழக்கினை ஏற்றுப் போற்ற வேண்டும்' என்பது பாரதியாரின் துணிவாகும். இவ்வாறு இயற்றப்படும் இலக்கியமே, புதிய சமுதாயத்தை உருவாக்க உதவும் இலக்கியமாகும் என்பது அவருடைய அசைக்க முடியாத நம்பிக்கை.

நோக்கும் போக்கும்

பொதுமக்கள் நலம்நாடிப் புதுக் கருத்தைச் சொல்லி புது நெறியைத் தமிழ் இலக்கிய உலகில் பாரதியார் காட்டியுள்ளார். அவருடைய கவிதைகளின் நோக்கையும் போக்கையும், சிறப்பு இயல்புகளையும் ஐந்தாக வகைப்படுத்திக் காட்டலாம். அவை எளிமை, ஒலிநயம், புதிய பாடுபொருள். நாட்டுப்புறப் பாடல் மரபு, உலகியல் சார்ந்த மெய்யுணர்வு என்பனவாகும் .

1. எளிமை

அவருடைய பேச்சிலும், மூச்சிலும் எளிமை தவழ்ந்து விளையாடியது. பண்டிதரின் வறட்டுப் புலமையைப்

புலப்படுத்தும் 'கரடுமுரடான' வழியில் இருந்து பாரதியார், வேண்டும் என்றே விலகி, தமக்கென ஒரு தனி வழியை வகுத்துக் கொண்டார். இதனால், அவருடைய பாடல்களில் செயற்கைத் தன்மை' செத்தொழிந்தது. 'உள்ளத்து உணர்ச்சியின் பொங்கலான'கவிதை,அவ்வுணர்ச்சியைப்பழகு தமிழ்ச் சொற்களைக் கொண்டு படைக்கப் பட்டது. அவருடைய எந்தப் பாடலை எடுத்து ஆராய்ந்தாலும், நடைநயத்திலும் தொடர் அமைதியிலும் எளிமை களிநடனம் புரிவதைக் காணலாம்.

2. ஒலிநயம்

பாமர மக்களின் பேச்சு மொழியில் கொஞ்சி விளையாடும் இன்பத்தை – ஒலிநயத்தைக் கண்டுணர்ந்து, தம் கவிதைகளில் அதனைப் போற்றி பாரதியார் பயன்படுத்தியுள்ளார்.

> யாப்பு முறையில் அடங்காத இசைப் பாடல்கள் என்ற ஒருவகையும், நாட்டுப் பாடல்கள் என்ற ஒரு வகையும் மரபான தமிழ்க் கவிதையுடன் தோன்றி வளர்ந்திருப்பதையும் இங்கு குறிப்பிட வேண்டும். கவிதையில் புதுமை செய்ய விரும்பிய பாரதியார். இசைப் பாடல்களுக்கு முதன்மை தந்தார். பாரதியார் காட்டிய வழியிலேயே இப்பொழுதும் தமிழ்க் கவிதையின் ஒரு பகுதி செல்கிறது.[14]

என அவர் வழிவந்த மற்றொரு கவிஞர் கூறுவதால் இதனைத் தெளியலாம்.

பாரதியாரைக் கவிவாணர்' எனக் கூறுவதைக் காட்டிலும், 'இசைவாணர்' எனக் கருதுவதே பெரிதும் பொருத்தமாகும். அறுபதுக்கு மேற்பட்ட இராகங்களில் கவிதைகள் பலவற்றைப் பாரதியார் படைத்துள்ளமை இதனை வலியுறுத்தும்.

3. புதிய பாடுபொருள்

பாட்டில் இடம்பெறும் பொருள்களாகத் தெய்வம். அரசர்,செல்வர், குறுநிலத் தலைவர், வீரம், காதல், பக்தி

---

14 ந.பிச்சமூர்த்தி, குயிலின் சுருதி, பக்.viii

என்பனவற்றைப் பாரதியாருக்கு முற்பட்ட காலப் புலவர்கள் போற்றினர். நம் சுப்பிரமணிய பாரதியார், அரைத்த மாவையே அரைக்கும்' அவல நிலையை மாற்றினார். உலகில் உள்ள எந்தப் பொருளையும் பாடலாம்' எனும் புதுவழியை அவர் காட்டினார்.

அவருக்கு முன்பு இருந்தோர்
கள்ளையும் தீயையும் சேர்த்து – நல்ல
காற்றையும் வானவெளி யையும் சேர்த்துத்
தெள்ளு தமிழ்ப் புலவோர்கள் பல
தீஞ்சுவைக் காவியம் செய்து தந்தார்.[15]

ஆனால், பாரதியாரோ,
புல்லை நகையுறுத்திப் பூவை வியப்பாக்கி
மண்ணைத் தெளிவாக்கி, நீரில் மலர்ச்சி தந்து
விண்ணை வெளியாக்கி, விந்தை செயும்[16]

முறையில் சுவிதை புனைந்தார்.

பாரதியாரின் பாடல்களிலே தேசியமும் சர்வ தேசியமும் கொஞ்சி விளையாடின. நாட்டுப்பற்றும் மொழிப்பற்றும் ஏறுநடை போடத் தொடங்கின; விடுதலை வேட்கை வீரமுழக்கம் இட்டது; காந்தியடிகளின் அன்புநெறியும் உலகைத் திருத்த உயிர்த்தியாகம் செய்த சான்றோர்களின் திருத்தொண்டும் ஒளிவிட்டுப் பிரகாசித்தன.

பாரதியாரின் பாடல்களில் மனிதநல நாட்டம் வீறு பெற்று விளங்கலாயிற்று. அவர் மண்ணகக் காதலிலே கடவுள் தன்மையை – தெய்வீகப் பேராற்றலைக் கண்டார்; காட்டினார்; உலகில் மண்டியுள்ள எல்லா வகையான கொடுமைகளையும் எதிர்த்துப் போர் முரசு கொட்டினார்; ஆணும் பெண்ணும் சமவுரிமையுடன் வாழவேண்டிய ஆன்மாக்களே என்பதை

15 பாரதியார் கவிதைகள், பக்.360.
16 பாரதியார் கவிதைகள். குயில், பக். 292.

அறிவுறுத்தினார்; பெண் விடுதலைக் கும்மி பாடினார்; "நிமிர்ந்த நன்னடையும் நேர்கொண்ட பார்வையும் நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகளும்" கொண்ட புதுமைப் பெண்ணினைப் போற்றிப் பாடினார்; சமவுடைமைச் சமுதாயத்தை அமைப்பதற்கு உரிய வழிகளைக் கோடிட்டுக் காட்டினார்; 'இன்றைய குழந்தைகள் நாளைய தலைவர்கள்' என்பதை உணர்ந்து குழந்தைகளுக்கு அகத்து எழுச்சியூட்டும் அறிவுரைகளை நல்கினார்.

அவர் சமயத்திலே சமரசம் கண்டார்; 'ஒன்று பரம் பொருள், நாமதன் மக்கள்! உலகு இன்பக்கேணி!' என்று அறிவுறுத்தினார்; சக்தி வழிபாட்டு நெறியின் கொடு முடியை உலகிற்குக் காட்டினார்; கண்ணனையே காதலியாக – சக்தியாகச் சொல்லோவியம் ஆக்கினார்; தொழிலாளியின் துன்பத்தை, அடக்கியொடுக்கப்பட்ட அபலைகளின் உள்ளக் குமுறல்களைக் கண்ணீர்க் காவியமாகத் தீட்டினார்; புதியதோர் உலகைப் படைக்க. மறைந்துபோன "கிரேத யுகமாகிய பொற்காலத்தை' மீண்டும் உருவாக்கத் தம் பாடல்களிலே வழிவகுத்துக் கொடுத்தார்.

இத்தகைய புதிய எண்ணங்களை, கருத்துக்களைப் பாடுபொருளாக முதன்முதல் பயன்படுத்திய பெருமை பாரதிக்கே உரியதாகும்.

4. நாட்டுப்புறப் பாடல் மரபு

பாரதியார் காலத்தில் எழுத்துவடிவம் பெறாமல், மக்கள் இதழ்களில் எல்லாம் நடமாடிய பாடல் மரபுகள் பல சிறப்புற்று விளங்கின. அவை கல்லாதார் காவியங்களாக, கருத்தோவியங்களாகப் போற்றப்பட்டன.

இதனை,
ஏற்றநீர்ப் பாட்டின் இசையினிலும், நெல்லிடிக்கும்
கொற்றொடியார் குக்குவெனக் கொஞ்சு மொழியிலினிலும்

சுண்ணமிடிப்பார்தம் சுவைமிகுந்த பண்களிலும்
பண்ணை மடவார் பழகுபல பாட்டினிலும்
வட்டமிட்டுப் பெண்கள் வளைக்கரங்கள் தாமொலிக்கக்
கொட்டி யிசைத்திடுமோர் கூட்டமுதப் பாட்டினிலும்
.....நெஞ்சைப் பறிகொடுத்தேன்[17]

என்று தேசிய கவியே தெளிவுறுத்தியுள்ளார்.

அவர் கையாண்டுள்ள புதிய வடிவங்களும், உத்திகளும் பலவாகும். "புலவர் அந்தந்தக் காலத்து மக்களுக்குத் தெளிவாகத் தெரியக் கூடிய பதங்களையே வழங்க வேண்டும். அருமையான உள்ளக் காட்சிகளை எளிமை கொண்ட நடையிலே எழுதுவது நல்ல கவிதை... காலம் மாறமாற பாஷை மாறிக் கொண்டு போகிறது. பழைய பதங்கள் மாறிப் புதிய பதங்கள் உண்டாகின்றன. புலவர் அந்த அந்தக் காலத்து மக்களுக்குத் தெளிவாகத் தெரியக்கூடிய பதங்களையே வழங்க வேண்டும்"[18] என்று அறிவிக்கும் பாரதியார், நாட்டுப்புறப் பாடல்களின் மரபுகளைப் போற்றித் தழுவியதில் வியப்பு இல்லை.

பாரதியாரின் 'புதிய கோணங்கி' எனும் குடுகுடுப்பைக் காரன் பாடல் இதற்குச் சிறந்ததோர் எடுத்துக்காட்டாகும். 'உலகத்து நாயகியே எங்கள் முத்துமாரி!' எனவும், 'அச்சமில்லை அச்சமில்லை' எனவும் தொடங்கும் "பண்டாரப்பாட்டு'களும், 'கண்ணன் மனநிலையைத் தங்கமே தங்கம்' என முடியும் கண்ணன் என் காதலன்' எனும் பாடலும் நாட்டுப்புறப் பாடல்களின் பாணியை முழுமையாகப் பின்பற்றி இயற்றப்பட்டுள்ளன. சுதந்திரப் பள்ளு', பள்ளரின் களியாட்டப் பாடலைப் பின்பற்றி அமைக்கப்பட்டதாகும்.

இவை அல்லாமல், நந்தனார் சரித்திரக் கீர்த்தனையில் சிறப்புற்று விளங்கும் மெட்டுகளும், காவடிச்சிந்து,

---

17 பாரதியார் கவிதைகள், குயில், பக்.286.

18 மகாகவி பாரதியார் கட்டுரைகள், பக். 230.

நொண்டிச்சிந்து பாணிகளும், சித்தர் வழிவந்த ஆனந்தக் களிப்பும், கிளிக் கண்ணிகளும், திருவருட்பா மெட்டுகளும், வேதநாயகரின் கீர்த்தனை அமைப்புகளும் பாரதியாரின் பாடல்களில் இடம்பெற்றுள்ளன. மேற்கண்ட தமிழ்ச் சான்றோர்கள் தத்தம் காலத்தில் பெருவழக்காக மக்கள் இடையேவழங்கியநாட்டுப்புறப் பாடல்' முறைகளுக்குத் தங்கள் நூல்களிலே இலக்கிய வடிவம்' கொடுக்க முயன்றுள்ளனர். அவர்களுடைய வழியைப் பின்பற்றிய பாரதியார், பேரளவிற்கு இசைப்பாட்டு மரபுகளையும். நாட்டுப்புறப் பாடல்களின் கவர்ச்சிமிகு இயல்புகளையும் கலந்து, தம் புதிய கவிதைகளைப் படைத்துள்ளார். இவை அனைத்தையும் ஒன்றாக இணைத்து நோக்குகின்ற பொழுது பாரதியின் பாடல்களில் "சொல் புதிது, பொருள் புதிது, சுவை புதிது!" எனும் கருத்து எவ்வாறு ஊடாடுகிறது என்பது எளிதில் விளங்கும்.

5. உலகியல் மெய்யுணர்வு

மெய்யுணர்வு (Mysticism) பலவகைப்படும். பன்மை– தெய்வ மெய்யுணர்வு, நாயக – நாயகி பாவ மெய்யுணர்வு, பக்தி வழிப்பட்ட மெய்யுணர்வு என்பன அவற்றுள் சிறப்புமிக்கனவாகும். பாரதியாரின் மெய்யுணர்வு, புதுமையும் தனித்தன்மையும் வாய்ந்தது. 'வாழ்க்கை மாயை அன்று; வாழ்க்கை வாழ்வதற்கே' எனும் உலக வாழ்க்கையின் சிறப்பைப் புலப்படுத்தும் (Life affirmation) வாழ்வியல் தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டது பாரதியாரின் உலகியல் மெய்யுணர்வுக் கோட்பாடாகும். மண்ணுலகையும் மனிதனையும் பெரிதும் விரும்பிப் போற்றும் வகையில் வெளிப்படும் மெய்யுணர்வே. பாரதியாரின் கவிதைகளில் பொங்கி வழிகிறது.

பாரதியாரைப் பொறுத்த வரையில் தேசியமும் சமயமும் மெய்யுணர்வும் ஒன்றே; ஒன்றிலிருந்து மற்றொன்றைப் பிரிக்க இயலாது. இதனை.'ஆரிய சம்பத்து', 'லோக குரு' எனும் கட்டுரைகளில் அவர் நன்கு தெளிவுறுத்தியுள்ளார். கவிதை உலகியல் – மெய்யுணர்வு ஆகிய மூன்றும் ஒன்றே

என்பது பாரதியாரின் உறுதியான நம்பிக்கை. அவர் பார்த்த பார்வையின் புதுமைப் போக்கு! இதனை "விவேகானந்தர் ஆத்மாவின் பயிற்சியை மாத்திரம் காட்டினார். ரவீந்திரர், 'உலக வாழ்க்கையும், உண்மையான கவிதையும், ஆத்ம ஞானமும் ஒரே தர்மத்தில் நிற்பன' என்பதை வெளிநாடுகளுக்குச் சொல்லும் பொருட்டாக பாரத மாதாவினால் அனுப்பப்பட்டு இருக்கிறார்'[19] என்று அவர் அறிவிப்பதனால் தெளியலாம்.

பல்லாண்டுகளாக உலக வாழ்வில் நாகரிக முன்னேற்றம் கண்ட நாட்டில், சமூகம், மொழி பற்றிய உணர்வுகளை இந்திய மக்கள் புறக்கணித்ததால், இந்த உலகியலை மெய்யுணர்வோடு பாரதியார் இணைத்தார்.பொருள் முயற்சியையும்,தொழில் வளர்ச்சியையும், அறிவியல் முன்னேற்றத்தையும் தமது மெய்யுணர்வுக் கோட்பாட்டு வண்ணத்திலே குழைத்து, குறிப்பிட்ட எந்தச் சமயத்தையும் சாராத ஆன்மிக உணர்வாக, அவர் வெளிப்படுத்தியுள்ளார். இது பாரதியின் கவிதைகளில் காணப்படும் புதுமை. அவருடைய தோத்திரப் பாடல்களிலும் வேதாந்தப் பாடல்களிலும் நாடு, மொழி, சமுதாயம், தொழில், அறிவுக் கலைகள் போன்ற புதிய உலகியல் பொருள்களை இணைத்தே பாடியுள்ளார்; இதைப் போன்றே,தேசியப் பாடல்களிலும்,பிறபல்வகைப்பாடல்களிலும்தெய்வங்களையும், ஆன்மிகவுணர்வையும் குழைத்துத் தந்துள்ளார். இவ்வாறு மெய்யுணர்வின் பழமையை, உலகியலின் புதுமையோடு கலந்து, "வாழ்க்கை வாழ்வதற்கே! வளமாக, நலமாக, சிறப்பாக வாழ்வதற்கே!" எனும் புத்துலகச் சிந்தனையைப் பாரதியார், தம் பாடல்களில் வெளிப்படுத்தியுள்ளார்.

இவை யாவும் பாரதியாரின் கவிதைகளிலே காணப் படும் புதுமைப் போக்குகள். இதனால் 'பாரதியார் மரபினை வெறுத்தார்' என்றோ, 'மரபினை உடைத்துஎறிந்தார் என்றோ கருத வேண்டா. பண்டைத் தமிழ் மரபில் சிறந்தவற்றையும் தேவையானவற்றையும், தம் கவிதைகளுக்கு அடிப்படையாக அவர் அமைத்துக் கொண்டார். ஆனால், அதே சமயத்தில்

---

19 மகாகவி பாரதியார் கட்டுரைகள், தத்துவம்– 'லோக குரு' பக். 59.

மரபுக்குத் தம்மைக் 'கொத்தடிமையாக' அவர் ஆக்கிக் கொள்ளவில்லை. மரபும் தனிமனித அறிவுத் திறனும்' ('Tradition and the Individual Talent') எனும் ஆய்வுரையில் டி.எஸ். எலியட் (T.S. Eliot) "காலத்தின் நாடித் துடிப்பை உணர்ந்து அதற்கேற்பப் பல புத்தாக்கங்களைச் செய்பவனே இன்றைய உலகிற்குத் தேவைப்படும் படைப்பாளன்" என்று கூறியுள்ளார். இந்த வகையிலேயே, பாரதியார் பல புத்தாக்கங்களைச் செய்துள்ளார்.

தமிழால் பாரதி தகுதி பெற்றார்!
தமிழ், பாரதியால் தகுதி பெற்றது !

2

தேசியம்

பாரதியாரின் கவிதா மண்டலத்தைச் சேர்ந்த பாரதிதாசன், கவியோகி சுத்தானந்த பாரதியார் போன்ற கவிஞர்களின் பாடல்களில் பாரதியாரின் நேரடியான, நெருக்கமான தாக்கம் உண்டானதைக் காண முடிகிறது. பாரதியாரின் தேசிய உணர்வையும் விடுதலை வேட்கையையும் போற்றிப் பின்பற்றிய தேசிக விநாயகம் பிள்ளை, நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கம் பிள்ளை, பாலபாரதி ச.து.சு.யோகி. திரிலோக சீதாராம். அ.வெ.ர.கிருஷ்ணசாமி ரெட்டியார். எஸ். டி. சுந்தரம், கொத்தமங்கலம் சுப்பு, பெ.தூரன். சிதம்பரம் ரகுநாதன், பிச்ச மூர்த்தி,கா.மு.ஷெரிப். கலைவாணன், அரங்க. சீனிவாசன் போன்றோரின் பாடல்களில் பாரதியாருடைய புதுமைப் போக்குகள் சிலவற்றின் முனைப்பான தாக்கம் எளிதில் புலனாகிறது.

பாரதியாரின் தலைமைச் சீடரான பாவேந்தர் பாரதிதாசனாரின் வழிவந்த கவிஞர்கள் மிகப்பலராக உள்ளனர். "கனக சுப்புரத்தினம் பாரதி வகுத்த பாதையிலே பல அழகுக் கனவுகளை நிர்மாணித்துத் தந்திருக்கிறார். பாரிச வாயுவும் பக்கவாதமும் போட்டலைக்கும் இன்றைய கவிதை உலகிலே அவருடைய பாட்டுக்கள் ஒன்றுதான் நிமிர்ந்து நடக்கின்றன' என்பது புதுமைப் பித்தன், பாரதியின் வழி வந்தவர் புரட்சிக் கவிஞர் என்பதற்கு அளித்துள்ள சான்றிதழாகும்.

பாரதியாரின் தமிழ் மொழிப் பற்றும், சமுதாய சீர்திருத்த நோக்கும், புதிய உலகைப் படைக்க வேண்டும் எனும் துடிப்பும், கட்டற்ற கற்பனைப் போக்கும் பாரதிதாசனிடம் பேராற்றல் மிக்க உந்துதல் சக்திகளாக அமைந்துள்ளன. எனவே, பாவேந்தரின் வழித் தோன்றல்கள் இடையே, பாரதியாரின் மறைமுகத் தாக்கத்தைக் காணமுடிகிறது. இவர்களை, 'மறுமலர்ச்சிக் கவிஞர் குழாத்தைச் சேர்ந்தவர்' எனலாம்.

இவர்கள் அல்லாமல், பாரதியின் 'வசன கவிதை'ப் பாணியைப் பின்பற்றிப் புதுக்கவிதைகளை இயற்றும் பரிசோதனையில் கு. ப. ராஜகோபாலன், புதுமைப் பித்தன். ந. பிச்சமூர்த்தி, வல்லிக்கண்ணன் ஈடுபட்டனர். கடந்த இருபது ஆண்டுகளாக இப்புதிய துறையில் பேரார்வம் காட்டி வரும் இளம் கவிஞர்கள் மிகப் பலராவார் இவர்களைப் 'புதுக்கவிதை' நெறியினர் எனலாம். இக்கவிஞர்கள் இடம் பாரதியின் தாக்கம்,பேரளவிற்கு வடிவத்திலேயே மேலோங்கி நிற்கிறது. இவர்களுள் ஒரு சிலரிடமே. பாரதியின் கவிதை வளமும், உணர்த்துந் திறனும் வெளிப்படுகின்றன.

இவ்வாறு, இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற தமிழ்க் கவிஞனாகிய பாரதியாரின் தாக்கம், வாழையடி வாழையாக வளர்ந்து வரும் கவிஞர் இடையே நிலை பெற்று விளங்குவதை இனிக் காண்போம். பாரதியாருக்குப் பிற்பட்ட காலத்தில், கவிதைகளின் உள்ளடக்கத்திலும் வடிவத்திலும் அவருடைய தாக்கம் பரவலாகக் காணப்படுகிறது. மற்றும், உணர்த்தும் முறையாகிய இலக்கிய உத்திகளிலும், ஓரளவிற்குத் தேசிய கவிஞரின் தாக்கத்தை இனம் கண்டறிய இயலுகிறது.

உள்ளடக்கத்தில் ஊடாடும் தாக்கம்

பாட்டின் வடிவத்தையும், இனிமையையும் மட்டும் கருத்தில் கொண்டு இங்குப் பாரதியின் தாக்கம் கணிக்கப் படவில்லை. புறவடிவை விட உள்ளடக்கத்தில் (உள்ளீட்டில்)

இடம் பெற்றுள்ள தடையங்களும் தாக்கத்தின் இயல்பைக் காட்டும் எனும் நோக்கொடு அணுகப்படுகிறது.

கவிதையின் கருவாக விளங்குவது உள்ளடக்கமாகும். இதனைப் " பாடு பொருள்' எனவும் சுட்டுவர் . கவிதைக்குத் தனிச்சிறப்பினை அளிப்பது. அதனுடைய உள்ளடக்கமே யாகும். இதனைத் தேசியம், சமுதாய நோக்கு, தத்துவக் கோட்பாடு என மூவகைப்படுத்தலாம்.

தேசியம்

தேசியம் என்பது யாது? அரசியலில் ஒருவகைக் கோட்பாடாகவும், நெறியாகவும் விளங்குவது 'தேசியம்'. பத்தொன்பதாம் நூற்றாண்டின் மனித சிந்தனையில் அரும்பி, விரைவாக உலகெங்கும் மலர்ந்து மணம் பரப்பி வரும் அரசியல் கோட்பாடு "தேசியம்' என்பதாகும். 'வரையறுக்கப்பட்ட எல்லைகளைக் கொண்ட ஒரு நிலப்பரப்பில் பன்னெடுங் காலமாக வாழ்ந்து வரும் மக்கள் இடையே பொதுவான பண்பாட்டுப் பாரம்பரியம் வளர்ந்து சிறக்கும். அப்பண்பாட்டு மரபு வழியால் இணைந்து வாழும் மக்களை, ஒரு சமூகத்தினராகக் கட்டுண்டு விளங்குமாறு செய்யும் சக்தியே தேசியம் .

அந்த நிலவெல்லைக்குட்பட்ட அரசின் எதேச்சாதிகாரப் போக்கிற்கு எதிராகக் கிளர்ச்சி செய்து, தங்கள் உரிமைகளை நிலைநாட்டிப் பேணிக் காக்குமாறு அந்த மக்களைத் தூண்டும் உணர்வே தேசியம்; வெளியாரின் வன்முறைத் தாக்குதல்களையும், தலையீட்டையும் எதிர்த்துப் போராடித் தங்கள் உரிமை வாழ்வைக் காத்துக் கொள்ள எழுச்சியுறுமாறு தூண்டுவது தேசியம்."[20]

இந்தத் தேசிய உணர்வை நிலவியல் அமைப்பும்' அதன் வழிப்பட்ட பண்பாடும், மொழியும், சமயமும், அரசும் போற்றி வளர்ப்பனவாகும். பாரதியாரின் தேசியப் பார்வையில், தாய்

---

20 H. Kohn, The Idea of Nationalism, P. 4.

நாட்டுப் பற்றும், தாய் மொழிப் பற்றும், விடுதலை வேட்கையும், தேசியத் தலைவர்களிடம் கொண்ட ஈடுபாடும் முதன்மை இடம் பெற்றுள்ளன.

(அ) தாய்நாட்டுப் பற்று

அனைத்து இந்தியக் கண்ணோட்டத்தில் பாரத நாட்டுப் பற்றாகவும். பேசும் மொழியாலும் வாழும் இடத்தாலும் தமிழ்நாட்டுப் பற்றாகவும் பாரதியார், தம் தாய்நாட்டுப் பற்றைப் போற்றி வளர்த்துள்ளார். பெற்றதாயினும் பிறந்த பொன்னாடு நற்றவ வானினும் நனி சிறந்ததுவே' என்பது அவருடைய சித்தாந்தமாகும். இந்த அடிப்படையில் தாய்த் திருநாட்டைப் 'பாரத மாதாவாக' அவர் உருவகித்துப் பாடியுள்ள பாடல்கள் பலவாகும்.

வந்தே மாதரம் என்போம் –எங்கள்
மாநிலத் தாயை வணங்குதும் என்போம்

எனும் நாட்டுப் பாடலும்,

"எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி' எனத் தொடங்கும் நாட்டு வணக்கமும் சிறப்பு மிக்கன.

'பாருக்குள்ளே நல்ல நாடு', 'பாரத தேசம் என்று பெயர் சொல்லுவார்', 'மன்னும் இமயமலை எங்கள் மலையே' போன்ற பாரத நாட்டுச் சிறப்பு உரைக்கும் பாரதியின் பாடல்கள். பல்வேறு கவிஞர்களுடைய கருத்தைக் கவர்ந்துள்ளன.

'பாரத கீதம்' எனும் நூல் ஒன்றினைக் கவியோகி சுத்தானந்த பாரதியார் இயற்றியுள்ளார். அதில் அறுபது பாடல்கள் பாரத நாட்டின் பழம் பெருமையையும், சிறப்பையும், அன்றைய நிலையையும் படம்பிடித்துக் காட்டுவனவாக உள்ளன. அவற்றுள் 'பாரீர் பாரத நாடு' எனும் தலைப்பில் அமைந்த பாடலின் முதற் பகுதியைக் காண்போம்:

பாரீர் பாரத நாடு! –இது
யாருக்கும் பேரின்ப வீடு!
காராார் வான்மலர் சூடி – இதன்
கருணை மணிக்கொடி யாடும்'[21]

---

21 சுத்தானந்த பாரதியார், பாரத கீதம், புதுயுக நிலையம், புதுச்சேரி, 1951, எண் 9:1.

என்னும் அடிகள் பாரதியின் 'பாருக்குள்ளே நல்ல நாடு' எனும் கவிதையை நினைவுபடுத்துகிறது.

"இந்திய நாடிது என்னுடை நாடு"
என்று தினந்தினம் நீயதைப் பாடு!
சொந்தமில் லாதவர் வந்தவர் ஆள
தூங்கிக் கிடந்தது போனது மாள...[22]

என்பது நாமக்கல் கவிஞர் இராமலிங்கனாரின் தேசப் பாடலிற்கு ஓர் எடுத்துக்காட்டு. இதே பாணியில் பாரத தேசத்தைப் புகழ்ந்து பாடியுள்ள தேசிய கவிஞர் பலராவர். ஆனால், அவர்களுடைய பாடல்களில் உணர்ச்சித் துடிப்பும், சத்திய ஆவேசமும் பாரதியின் பாடல்களில் காணப்படுவதைப் போன்று பொங்கியெழவில்லை.

பாரதியின் 'தாயின் மணிக்கொடி', 'பாரத சமுதாயம் வாழ்கவே','வீரசுதந்திரம் வேண்டி நின்றார்'. 'சுதந்திரத் தேவி! நின்னைத் தொழுதிடல் மறக்கிலனே', 'ஆடுவோமே பள்ளுப் பாடுவோமே!' எனும் பாடல்களை அடியொற்றிப் பல பாடல்களைப் பிற்காலக் கவிஞர்கள் பாடியுள்ளனர். 'கொட்டு முரசே!' எனும் முரசு பாட்டையும் சிலர் கருத்தில் கொண்டு, சிற்சில பாடல்களை இயற்றியுள்ளனர்.

'புதுவேத முரசு' எனும் தலைப்பில்
ஒற்றுமை ஒற்றுமை யென்றே கொட்டு முரசே!
உண்மை வெல்லும்! வெல்லும்! என்று
கொட்டு முரசே![23]

எனும் சுத்தானந்த பாரதியாரின் பாடல், இங்கு நினைவு கூர்தற்கு உரியதாகும்.

கொடியைப் போற்றிக் கும்பிடு!
கொடுமை தீரும் நம்பு நீ ![24]

எனத் தொடங்கும் "கொடியைப் போற்றிக் கும்பிடு எனும்

---

22 வெ. இராமலிங்கம் பிள்ளை, தமிழன் இதயம், தமிழ்ப்பண்ணை, சென்னை,1946,பக்.84.

23 புதுமைப் பாடல், யோக சமாஜம், சென்னை,1977. ப.18.

24 சங்கொலி, அருணா பப்ளிகேஷன்ஸ், சென்னை1955, பக். 7.

பாடல் நாமக்கல் கவிஞர், பாரதியின் 'தாயின் மணிக்கொடி' எனத் தொடங்கும் பாடலால் பெரிதும் கவரப்பட்டுள்ளதைத் தெரிவிக்கிறது.

மற்றொரு பாடலில்,
இந்திய நாட்டின் இணையிலாக் கொடியே
இயங்குவாய் என்றும் வயங்கொளி பரப்பி[25]

என்று அவர் போற்றுவதும் இங்குக் கருதத் தக்கதாகும்.

தாயே வந்தனம் – இந்தியத்
தாயே வந்தனம்[26]

எனத் தொடங்கும் பாடலும்.

சுதந்தரம் இல்லாமல் இருப்பேனோ? – வெறும்
சோற்றுக் குயிர் சுமந்து இறப்பேனோ?[27]

எனும் பாடலும் நாமக்கல்லாரிடம் பாரதியின் பாடல்கள் பெற்றுள்ள செல்வாக்கை உணர்த்துகின்றன.

பாரில் உயர்ந்தமலை இமயமலை – அன்னை
பாரத தேவி பாராட்டுமலை[28]

எனும் கவிமணியின் பாடலிலும்,

பக்தியொடு தெய்வம் பணிந்திடுவோம், பாரதத்தாய்
சித்தம் களிப்படையச் செய்திடுவோம்![29]

எனும் பாடலிலும் பாரதியாரின் தாக்கம் தேசிக விநாயகம் பிள்ளை அவர்களிடம் எவ்வாறு அமைந்துள்ளது என்பதை எளிதில் அறிய முடிகிறது.

(ஆ) தாய் மொழிப்பற்று

அடுத்து, தமிழ்நாட்டைப் பற்றியும், தமிழைப் பற்றியும் பாரதியார் சிறப்பாகப் போற்றிப் பாடியுள்ளதை யாவரும் அறிவர்.' செந்தமிழ் நாடு எனும் போதினிலே', "யாமறிந்த மொழிகளிலே

---

25 சங்கொலி,பக் 6.
26 தமிழன் இதயம்,பக்.75.
27 மேற்படி, பக்.81.
28 மலரும் மாலையும், பக்.181
29 மலரும் மாலையும், பக்.189.

தமிழ் மொழிபோல்', 'வாழிய செந்தமிழ்' போன்ற பாரதியாரின் பாடல்கள் எண்ணற்ற கவிஞர்களுக்கு அகத்தெழுச்சியையும், கற்பனை ஊற்றத்தையும் அளித்திருக்கின்றன.

வெ. இராமலிங்கம் பிள்ளை அவர்களுடைய 'தமிழன் 'இதயம்', 'தமிழ்த்தேன்' எனும் இரு கவிதைத் தொகுப்புகளும் தமிழ்த் தேசியத்தின் ஊற்றுக் கண்களாக விளங்கு கின்றன.

தமிழன் என்றொரு இனமுண்டு
தனியே அவர்க்கொரு குணமுண்டு
அமிழ்தம் அவனுடை மொழியாகும்
அன்பே அவனுடை வழியாகும்[30]

எனும் பாடலும்,

தமிழனென்று சொல்லடா
தலைநிமிர்ந்து நில்லடா[31]

எனும் பாடலும் தமிழ் மக்களின் தன்னேரில்லாச் சிறப்பினை எடுத்துரைக்கின்றன.

அமிழ்தம் எங்கள் தமிழ்மொழி
அன்னை வாழ்க வாழ்கவே[32]

எனத் தொடங்கும் பாடலும்

தமிழ்மொழி வளர்த்த ஞானம்
தரணியில் பரவி எங்கும்
தமிழ்வழி அரசு நீதி
தழைத்திட முடியுமானால்"[33]

எனத் தொடங்கும் பாடலும் இராமலிங்கம் பிள்ளை அவர்களுடைய பாரதி வழிவந்தத் தமிழ்மொழிப் பற்றையும், பாசத்தையும் வெளிப்படுத்துகின்றன.

'பாலபாரதி' என்று போற்றப்பட்ட கவிஞர் ச. து. சு. யோகி அவர்களின் பாடல்கள் பல, தமிழ்த் தேசிய எழுச்சியை

---

30 தமிழன் இதயம், பக். 9.
31 தமிழன் இதயம்.பக்.117.
32 தமிழ்த்தேன், இன்பநிலையம், சென்னை.1965– பக் 16.
33 மேற்படி, பக்.19.

வெளிப்படுத்துகின்றன, அவருடைய "தமிழ்க் குமரி" பாடல் தொகுதி இதற்குச் சிறந்ததோர் எடுத்துக் காட்டாகும்.

பாரதியாரிடம் இருந்து பாவேந்தர் பாரதிதாசன், தமிழ்த் தேசிய உணர்வைப் பெற்றதோடு, அதைப் பல்வேறு முறைகளிலும் போற்றி வளர்த்துள்ளார்.'

தமிழிற்கு அமுதென்று பேர் அந்தத்
தமிழ் இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்[34]

எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்
மங்காத தமிழ்என்று சங்கே முழங்கு![35]

எனத் தொடங்கும் பாடல்களும், தமிழியக்கம்' எனும் தொகுப்பில் இடம் பெற்றுள்ள தமிழைப் பற்றிய பாடல்களும் தமிழின் அருமை பெருமைகளை உலகிற்கு உணர்த்துவனவாகும்,

தன்னேரிலாத தமிழ் அன்னையே – உனை
வாழ்த்தினேன்
இன்னல் தவிர்த்தாள் என்னையே[36]

எனும் இசைப் பாடலில் 'தமிழ்த் தாயை'த் தெய்வமாகப் போற்றிப் பாடுகிறார் பாவேந்தர். 'தமிழ்த் திருநாடு தன்னைப் பெற்ற – எங்கள். தாயென்று கும்பிடடி பாப்பா!'[37] எனும் பாரதியாரின் குரல் இதில் ஒலிப்பதைக் கேட்கலாம். ஆயினும், இவ்விரு கவிஞர்களும் பேராசிரியர் சுந்தரம் பிள்ளையின் 'நீராரும் கடலுடுத்த' எனத் தொடங்கும் 'தமிழ்த்தெய்வ' வணக்கப் பாடலில் இருந்து எழுச்சிமிகு எண்ணப் பெருக்கைப் பெற்றுள்ளனர்.

---

34 பாரதிதாசன் கவிதைகள், தொகுதி 1; பக் 88.
35 மேற்படி பக் 94.
36 தேனருவி, பாரதிதாசன் பதிப்பகம், புதுச்சேரி, 1956; 9.
37 பாரதியார் கவிதைகள், பாப்பாப்பாட்டு, 11.

தமிழனுக்கு வீழ்ச்சியில்லை; தமிழன் கீர்த்தி
தாழ்வதில்லை! தமிழ்நாடு, தமிழ் மக்கள்
தமிழ்என்னும் பேருணர்ச்சி இந்நாள் போலே
தமிழ்நாட்டில் எந்நாளும் இருந்த தில்லை!
தமிழுக்குத் தொண்டு செய்வோன் சாவதில்லை!
தமிழ்த் தொண்டன் பாரதிதான் செத்ததுண்டோ?[38]

எனும் பாடலில் 'தமிழுணர்வு' பெருக்கெடுத்து ஓடுவதைப் பார்க்கலாம்.

தமிழகத்தின் தொன்மையையும் சிறப்பையும் பாரதிதாசனார் பல்வேறு கோணங்களில் சொற்சித்திரங்களாகத் தீட்டியுள்ளார்.

ஆதிமனிதன் தமிழன்தான்
அவன் மொழிந்ததும் செந்தமிழ்த்தேன்
மூதறிஞர் ஒழுக்க நெறிகள்
முதலிற் கண்டதும் தமிழக ந்தான்![39]

எனத் தொடங்கும் பாடலில், தமிழ்த் தேசிய எழுச்சியின் கொடுமுடிக்குச் சென்று விடுகிறார் பாவேந்தர்.

இவருடைய எண்ணப் போக்கையும், கற்பனைத் திறனையும் ஏற்றுப் போற்றி, இவருடைய பாணியிலே பாட்டிசைக்கும் பாவலர்களாகிய 'மறுமலர்ச்சிக் கவிஞர்கள்' பலர், தமிழ்த் தேசியத்தின் அடிப்படை உணர்வுகளைக் கலை நயந்தோன்றுமாறு பாடியுள்ளனர்.

பேரழகு படைத்ததமிழ் மொழியே! உன்றன்
பெருமைகண் டுலகுதலை வணங்கு தம்மா!
முச்சங்கம் கண்டவளே! மூன்றும் வேண்டா
முனிவரெலாம் தனைவேண்ட வைத்த தாயே!
எச்சமயத் தலைவரையு மடிமை கொண்டாய்!
எழிற்கலையில் நடனமியல் இசையில் நின்றாய்!
அச்சங்கள் விளைத்துவந்த நோய்கள் போக்கும்
அருஞ்சித்த மருத்துவத்தைத் தன்னுள் பெற்றாய்!
இச்சமயம் தொடங்கி யுன்றன் சிறப்பை நானும்
இறக்கும்வரை பாடிடினும் இயலாதம்மா![40]

எனும் பாடல் ஒன்றே இதற்குப் போதுமான சான்றாகும்.

---

38 பாரதிதாசன் கவிதைகள், தொகுதி.2; பக். 103.

39 1. 2. பாரதிதாசன் கவிதைகள், தொகுதி: 4; பக்: 121

40 கலைக்கூத்தன் கவிதைகள், தமிழ்ப் படைப்பு மேம்பாடு மன்றம். பம்பாய், 1973; பக் 23.

(இ) தேசிய ஒருமைப்பாடு

இன்று நாடெங்கும் தேசிய ஒருமைப்பாடு' பற்றிய பேச்சாக இருந்து வருகிறது. 'பாரத தேசமென்று பெயர் சொல்லுவார்' எனத் தொடங்கும் பாரதியாரின் பாடலில் வரும்,

சிந்து நதியின் மிசை நிலவினிலே,
சேரநன் னாட்டிளம் பெண்களுடனே
சுந்தரத் தெலுங்கினில் பாட்டி சைத்துத்
தோணிகளோட்டி விளையாடி வருவோம்.[41]

எனும் செய்யுளைத் தேசிய ஒருமைப்பாட்டிற்கு மேற்கோளாகக் காட்டுவர்.

கவியரசர் கண்ணதாசன், 'கவிதாஞ்சலி' எனும் நூலில், காஷ்மீர்ப்பெண் முதல் வடமொழிப்பெண் ஈறாகப் பதினான்கு பெண்கள் (இந்திய அரசியல் சாசனத்தில் முதலில் இடம் பெற்றிருந்த பதினான்கு மொழிகளை). தத்தம் மாநிலத்துச் சிறப்பையும் இந்தியதேசத்தில் அது பெற்றிருக்கும் இடத்தையும் எடுத்துரைக்கும் முறையில்,"இந்தியதேசிய ஒருமைப்பாட்டைப் போற்றிப் பாடியுள்ளமை பாரதியாரின் தாக்கத்தால் உண்டான விளைவேயாகும். வங்காளப் பெண் பாடுவதைக் கேட்போம் :

பாரத நாடு பழம்பெரு நாடு
வாழிய நாடு ! வாழ்கபண் பாடு !

• • •

கங்கை நடந்து கடலிற் கலக்கும்
தங்கமண்ணிலே தழைத்த மலர்நான்
தேசபக்தியும் தெய்வ சிந்தையும்
பாசம் பண்பும் பழமை பாராட்டலும்
வாழும் நாட்டிலே வளரும் கன்னி நான் !

சித்த ரஞ்சனின் தியாக மண்டலம்
அரவிந்த முனிவரின் அன்புத் தாயகம்
வங்கதே சத்து மங்கை நான்![42]

---

41 பாரதியார் கவிதைகள், பக்.138.

42 கவிதாஞ்சலி, வானதி பதிப்பகம், 1975; 7. சென்னை

இப்பாடல்கள் யாவும் அரங்கிலே நடனத்தின் மூலம் நடித்துக் காட்டுவதற்கு ஏற்ற வண்ணம் அமைக்கப் பட்டுள்ளன. படித்துணருவதைவிடப் பார்த்துணருவது, கல்லார்க்கும் கற்றார்க்கும் இனிய செயல் அல்லவா? இந்த வகையில் பாரதியாரின் பாடல்களைவிட ஒருபடி, கண்ணதாசனின் பாடல்கள் முன்னேற்றம் அடைந்துள்ளன எனலாம்.

அண்ணல் காந்தியின் அறப்போர்

பாரதியார் மறைவதற்குச் சில ஆண்டுகளுக்கு முன்னரே. காந்தி அடிகள் இந்திய அரசியலில் அடி யெடுத்து வைத்தார். அவரை இரண்டு மூன்று முறையே நம் கவிஞர் நேரில் சந்தித்துள்ளார். எனினும், அவருடைய அருமை பெருமைகளையும், அவருடைய "சத்தியாகிரக' நெறியின் சிறப்பையும் தீவிரவாதியான பாரதியார் நன்கு புரிந்து கொண்டார். எனவே, 'பாரதமாதா நவரத்தின மாலை' எனும் பாடலில்.

கவீந்திர னாகிய ரவீந்திர நாதன்
சொற்றது கேளீர்! 'புவிமிசை இன்று
மனிதர்க் கெல்லாம் தலைப்படு மனிதன்
தர்மமே உருவான மோஹன தாஸ்
கர்ம சந்திர காந்தி' என்று ரைத்தான்[43]

என்று இந்திய மக்களுக்கு இரவீந்திரநாததாகூர், காந்தி யடிகளைப்பற்றித் தெரிவித்த கருத்தினைத் தமிழ் மக்களுக்கு எடுத்துரைத்துள்ளார் மற்றும் மகாத்மா காந்தி பஞ்சகம் எனும் தலைப்பில்,

---

43 பாரதியார் கவிதைகள், பக்.149.

வாழ்கநீ ! எம்மான்! இந்த
வையத்து நாட்டி லெல்லாம்
தாழ்வுற்று வறுமை மிஞ்சி
விடுதலை தவறிக் கெட்டுப்
பாழ்பட்டு நின்ற தாமோர்
பாரத தேசந் தன்னை
வாழ்விக்க வந்த காந்தி
மஹாத்மா! நீ வாழ்க ! வாழ்க.

என்று வாழ்த்தும் பாடினார் பாரதியார். முப்பது ஆண்டுகளுக்குப் பிறகு நடைபெறப் போவதை, அப்போதே

முடிவிலாக் கீர்த்தி பெற்றாய்!
புவிக்குளே முதன்மை யுற்றாய்!

என்று அறிவித்த பெருமைக்குரியவர் பாரதியார்.

அடுத்து நம் தேசத்தந்தை மேற்கொண்ட சத்தியாக் கிரகப் போராட்டத்தை,

பெருங்கொலை வழியாம் போர்வழி இகழ்ந்தாய்
அதனினும் திறன்பெரி துடைத்தாம்
அருங்கலை வாணர் மெய்த் தொண்டர் தங்கள்
அறவழி யென்றுநீ அறிந்தாய்;
நெருங்கிய பயன்சேர் ஒத்துழை யாமை
நெறியினால் இந்தியா விற்கு
வருங்கதி கண்டு பகைத்தொழில் மறந்து
வையகம் தழைக்கநல் லறத்தே ![44]

என்று பாரதியார் போற்றியுள்ளமை, அவருடைய முன்னறி திறனுக்குச் சிறந்த எடுத்துக் காட்டாகும்.

இவ்வாறு காந்தி அடிகளையும், அவருடைய போராட்ட நெறிகளையும்.ஆக்கப் பணிகளையும் பாராட்டிப் பாடுவது பாரதிக்குப் பின்வந்த கவிஞர்களிடத்துச் சிறப்புமிக்க மரபாக வளர்ந்து வந்து இருக்கிறது.

---

44 பாரதியார் கவிதைகள்,பக்.199–200.

1930 அளவில் பாவேந்தர், 'காந்தியடிகளையும் கதரினையும்' சிறப்பித்து, கதர் இராட்டினப் பாட்டு எனும் பாடலினை இயற்றியுள்ளமை இங்குக் குறிப்பிடத்தக்கதாகும்.

கன்னலடா! எங்கள் காந்தியடிகள் சொல்
கழறுகின்றேன் அதைக் கேளே! – நீவிர்
கதரணிவீர் ! உங்கள் பகைவரின் வேரங்குத்
தூளே ! தூளே! தூளே![45]

அடுத்து அவர் 'இராட்டையின் சிறப்பை"

கூட்டமுதம் நானுனக்கு
ராட்டினப் பெண்ணே– அடி
கொஞ்சுகிளி நீஎனக்கு
ராட்டினப் பெண்ணே![46]

எனும் பாடல் வாயிலாக அறிவித்துள்ள பாங்கும், அவரைப் 'பாரதிக்கு தாசன்' என்பது முற்றிலும் உண்மை என்பதைப் பறைசாற்றுகிறது! 'தாய் எட்டு அடி பாய்ந்தால் குட்டி பதினாறடி பாயும்' என்பது நம் நாட்டுப் பழமொழி அன்றோ?

யோகி சுத்தானந்த பாரதியாரின், 'தேசிய கீதம்' 'நாட்டுப் பாட்டு','பாரத கீதம்' எனும் நூல்களில் காந்தியடிகளின் பெருமை, கதரின் மாட்சி சத்தியாகிரகத்தின் சிறப்பு முதலியவற்றைப் பற்றிய பாடல்கள் எண்ணிறந்தன இடம் பெற்றுள்ளன. அவற்றில் பாரதியாரின் செல்வாக்குக் கணிசமான அளவிற்குப் புலப்படுகிறது.

அண்ணல் காந்தியடிகளின் சீடராகச் சிறப்புற்று விளங்கியவர் நாமக்கல் கவிஞர் வெ.இராமலிங்கம் பிள்ளையாவார். காந்தியடிகளின் வாழ்வையும் தொண்டையும்,சாதனைகளையும் சோதனைகளையும் முந்நூறுக்கு மேற்பட்ட பாடல்களில், மூவாயிரத்திற்குக் குறையாத செய்யுள்களில் நாமக்கல் கவிஞர் பாடியுள்ளமை, அவருக்கேயுரிய தனிச் சிறப்பாகும். இதனால் தான், அவரைக் 'காந்தியக் கவிஞர்' என இன்றும் உலகம் போற்றுகிறது.

---

45 பாரதிதாசன் கவிதைகள், தொகுதி.4;
46 வைபக். 209–214.

காந்தி அடிகளின் சரிதத்தை, 'காந்தி சரித்திர நொண்டிச் சிந்து' என்று இராமலிங்கம் பிள்ளை அவர்கள் நாற்பது ஆண்டுகளுக்கு முன்பே எளிய, இனிய தமிழில் பாடியுள்ளதை நாடு நன்கு அறியும். 'மஹாத்மா', 'காந்தியே வாழ்க! வாழ்க!', 'அற்புதன் காந்தி', 'சத்திய மூர்த்தி காந்தி' எனும் பாடல்கள் காந்தியத்தின் சிறப்பினை மக்களுக்கு உணர்ச்சித் துடிப்புடன் எடுத்துரைக்கும் கவிதைகளாகும்.[47] மற்றும், 'சாந்தியே காந்தி', 'காந்தியடிகளின் பெருமை'. 'உத்தமன் காந்தி' 'காந்திவழி பழசா'. 'காந்தீய சேவை'. ' சத்தியச் சங்கு' காந்தியமும் தமிழனும்' போன்ற பாடல்களும் நாமக்கல்லாரின் காந்திய பக்தியை வெளிப்படுத்துவனவாகும்.[48]

இவற்றுள்.

சாந்தி சாந்தி சாந்தியென்று
சங்கு கொண்டு ஊதுவோம்
• • •
காந்தி சொன்ன மார்க்கமின்றிக்
கதி நமக்கு வேறிலை[49]

எனத் தொடங்கும் 'காந்தீய சேவை' எனும் பாடல் நாட்டு மக்களுடைய உள்ளங்களை எல்லாம் கொள்ளை கொண்டதாகும். மற்றும்

கவிபாடிப் பெருமை செய்யக்கம்ப னில்லை
கற்பனைக்கிங் கில்லையந்தக் காளி தாசன்
செவி நாடும் கீர்த்தனைக்கு தியாக ரில்லை
தேசீய பாரதியின் திறமும் இல்லை
புவிசூடும் அறிவினுக்கோர் புதுமை தந்து
புண்ணியமும் கண்ணியமும் புகழும் சேர்ந்த
உவமானம் வேறெவரும் உரைக்க வொண்ணா
உத்தமராம் காந்தியரை உவந்து பேச!"[50]

---

47 சங்கொலி, பக். 68– 79.
48 தமிழன் இதயம், பக். 12–17; 31–40; 48–50
49 தமிழன் இதயம், பக். 42– 29.
50 தமிழன் இதயம், பக். 29

எனத் தொடங்கும் பாடல் தமிழகத்தின் பட்டி தொட்டிகளில் எல்லாம் எதிரொலித்த பாடலாகும்.

காந்தியடிகளின் அறப்போரைப் பற்றிய நாமக் கல்லாரின்,

கத்தியின்றி ரத்தமின்றி
    யுத்தமொன்று வருகுது
சத்தியத்தின் நித்தியத்தை
    நம்பும்யாரும் சேருவீர்!

• • •

காந்தியென்ற சாந்தமூர்த்தி
    தேர்ந்து காட்டும் செந்நெறி
மாந்தருக்குள் தீமைகுன்ற
    வாய்ந்த தெய்வ மார்க்கமே![51]

எனும் பாடலை அறியாதவர். அன்றைய தமிழகத்தில் இருந்ததில்லை; இன்றும் பலர் அறிவர்.

இவற்றைப் போன்றே, 'ஆடுராட்டே, சுழன்றாடு ராட்டே"[52] எனத் தொடங்கும் இராமலிங்கம் பிள்ளையின் பாடல் காந்தியடிகளின் ஆக்கப்பணித் திட்டங்களை மக்கள் இடையே பரப்புவதற்குப் பேருதவியாக இருந்ததை யாரும் எளிதில் மறத்தல் இயலாது. இத்தகைய பாடல்களை இயற்றுவதற்குப் பாரதியாரின் பாடல்களே உந்துதல் சக்தியாக இருந்து வந்தமை 'தேசீய பாரதியின் திறமும் 'நமக்கு' இல்லை!' என்று நாமக்கல் கவிஞர் கூறுவதனால் புலனாகின்றது.

இருபதாம் நூற்றாண்டில் இந்தியத் திருநாட்டின் தனிப்பெரும் தலைவரான மகாத்மா காந்தியடிகளின் பேரில், பல காப்பியங்களும் புராணங்களும் இயற்றப்பட்டுள்ளன. இவற்றுள் அசலாம்பிகை அம்மையாரின் 'காந்தி புராணம் ' பழைய புராண மரபில், பாரதியாரின் நெறியில் இயற்றப்பட்டதாகும்.

---

51 தமிழன் இதயம், முன்.1.
52 மேற்படி, பக்.141

"சத்தியமே வடிவாகிச் சத்துவமே குணமாகிச் சாற்ற ஒண்ணா நித்தியமே குறியாகி நிலவுலகத்திக்கலியில் உதித்த நேயன்" என்று அம்மையார், அடிகளை அறிமுகப்படுத்துகிறார்.

இங்கிலாந்திற்கு மகாத்மா சென்ற பொழுது,

முழந்தாள் உடையும் தன் கரத்தான்
முயன்று வனைந்த போர்வையினால்
தொழுந்தா ளளவு மறைத் தவராய்த்
தூய முறுவல் அருள் மொழிய
விழுந்தே வறுமைப் படுகுழியில்
மெலிஇந் தியரின் நிழலெனவும்
அழுந்தாக் கருணைப் பொலிவெனவும்
அறிந்த எதிர்த்த ஆங்கிலரே[53]

என்னும் நிலையில் அவர் காட்சி தந்ததைச் சொல்லோவியமாக அசலாம்பிகை அம்மையார் தீட்டிக் காட்டியுள்ளமை இங்குக் கருதத்தக்கது.

கொத்தமங்கலம் சுப்புவின் 'காந்திமகான் கதை' எனும் இசைப்பாடல் நூல். நாட்டுப்புறப் பாடல் அமைப்புடையது: 'வில்லுப் பாட்டு' எனும் இசை நிகழ்ச்சிக்கு ஏற்றவாறு அமைத்துக் கொள்ளப்பட்டது. 1946ஆம் ஆண்டு செப்டம்பர் ஆறாம் நாள், மகாத்மா காந்தி, 'நவகாளி யாத்திரையை' மேற்கொண்டார். இதனை

காந்தி மகாத்துமா இந்நாட்டில்
கலகம் நடந்த இடத்திலெல்லாம்
சாந்தம் விளைக விளைக வென்றே
தங்கள் திருவடி வைத்தாராம்! (2555)

இந்த உலகமே காந்திமகான்
ஏவலுக்கு நின்று காத்திருக்க
தன்திரு மேனி தடுமாற
தள்ளாடி நடையாய் நடப்பாரோ! (2584)

---

53 காந்தி புராணம், 7: 39.

என்று கவிஞர் சுப்பு, நம் மனக்கண் முன் கொண்டு வந்து நிறுத்துகிறார்,

தமிழ்த் தென்றல் திரு.வி.கலியாண சுந்தரனார், 'மனித வாழ்க்கையும் காந்தியடிகளும்' எனும் வாழ்க்கை விளக்க நூலை எழுதியதோடு அமையவில்லை. 'பொருளும் அருளும் அல்லது மார்க்சியமும் காந்தியமும்' எனும் செய்யுள் நூலினைப் படைத்துள்ளமையும் இங்கு நினைவு கூர்தற்கு உரியதாகும்.

தமிழ்க் கடல் ராய. சொக்கலிங்கம் அவர்கள் "காந்திக் கவிதை" எனும் தொகுப்பினை 1969இல் வெளியிட்டுள்ளார். நம் தேசத் தந்தையின் பிள்ளைத் தமிழ், அந்தாதி, பல்லாண்டு, ஊசல் போன்ற சிற்றிலக்கியங்களும், அவரைப் பற்றிய வேறு பிற பாடல்களும் இந்நூலில் இடம் பெற்றுள்ளன. பழைய மரபு வழிப்பட்ட கவிதைகளும் இக்காலத் தன்னுணர்ச்சிப் பாடல்களும் கலந்த கவிதை நூலாகக் 'காந்திக் கவிதை' காட்சி தருகிறது.

கலைவாணனின் 'உதயம்' எனும் குறுங்காப்பியம். மகாத்மாவின் மாட்சியை, மாநிலத்திற்கு நயமிகு கவிதை களால் ஓடும் திரைப்படமாக்கிக் காட்டுகிறது. மதுரையில் காந்தியடிகள் பூண்ட துறவுக் கோலத்தை,

சட்டையைக் கழற்றிப் பாகையைத் துறந்தான்;
சரிகையின் கரைபல நெளியும்
பட்(டு) உடை களைந்தான்; பழையஓர் கந்தை
பற்றுடன் சுற்றினான் இடையில்;
ஒட்டிடக் கிட்டி முட்டிமுன் வந்த
உலகியல் சுகம்எலாம் விட்டுக்
கட்டினை எல்லாம் வெட்டிடும் விருப்பில்
கருணைமாக் கனல்என நின்றான்[54]

எனச் சித்திரித்துள்ளார்.

---

54 உதயம், அன்னை நிலையம், சென்னை,1969; பக். 112

1980 ஆம் ஆண்டு,'மனித தெய்வம் காந்திகாதை" எனும் பெருங்காப்பியத்தை அரங்க. சீனிவாசன் இயற்றியுள்ளார். 5,500 பாடல்களைக் கொண்டது இக் காப்பியம். ஐந்து காண்டங்களில் அண்ணலின் வாழ்வை யும் தொண்டையும் ஆசிரியர் அழகுறப் பாடியுள்ளார்.

துண்ணெனப் பாய்ந்த வஞ்சன்
தொழக்கரம் குவிப்பான் போல
அண்ணல்தம் மருங்கின் எய்தி
அங்கையில் கரந்துவைத்த
திண்ணெடுங் கைத்துப் பாக்கி
எடுத்தனன்; திறந்த மார்பில்
கண்ணிமை திறக்கும் முன்னே –
கனற்குண்டு பாய்ச்சி விட்டான்[55]

எனும் பாடலினைச் சான்றாகக் காட்டலாம். காந்தியடிகள் கொலைபாதகனால் சுட்டு வீழ்த்தப்பட்ட காட்சியின் ஒரு பகுதியைக் கவிஞர் அவலம் பீறிட்டெழும் ஓவியமாகத் தீட்டியுள்ளார். பாரதியாரைப் பொருள் அளவில் அரங்க. சீனிவாசன் பின்பற்றியுள்ளார். ஆனால். அவருடைய காப்பிய அமைப்பின் வடிவமும் வனப்பும் பெரிதும் கம்பனையே பின்பற்றுகின்றன.

'மகாத்மா காந்தி காவியம்' அல்லது 'மாகாவியம்' எனும் காந்தி கவிதையை டி.கே. ராமானுஜ கவிராஜர் எனும் கவிஞர் நான்கு தொகுதிகளாக, 69 படலங்களில் 10,000க்கு மேற்பட்ட பாடல்களைக் கொண்டதாக இயற்றியுள்ளார்.

'அவதார புருஷராக' அண்ணலை, இவ்வாசிரியர் போற்றுகிறார். அடிகள் இந்தியாவிற்கு வந்து, இந்திய அரசியலில் புகுந்ததை,

---

55 அரங்க சீனிவாசன், மனித தெய்வம் காந்தி காதை, திருச்சி 1980:5896.

உயிரினும் பெரியது; ஓம்பற் பாலது;
மயிரிழை சிதறினும் மாயும் மானென்பர்;
பயில்தரும் பாரத நாட்டின் பரங்கியர்
கயமைகள் நீங்கிடக் கருதும் அண்ணலே[56]

எனத் தெரிவிக்கிறார். இந்நூலில் காப்பியச் சுவைநலம் கனிந்த பாடல்கள் ஆயிரக்கணக்கில் உள்ளன. காந்தியைப் பற்றிய இத்தகைய மகா காவியம் வேறொன்றும் இது வரையில் தமிழில் தோன்றவில்லை. ஆசிரியரின் உயர்ந்த நோக்கமும் முயற்சியும் போற்றத் தக்கனவாகும்.

இத்தகைய கவிதைகளும் காப்பியங்களும் தோன்றுவதற்குத் தூண்டு விசையாக – உந்துதல் சக்தியாக –ஊற்றுக் கண்ணாக, அன்று பாரதியார் பாடிய பாடல்களே அமைந்துள்ளன.

தலைவரைப் போற்றுதல்

பாரதியார் நம் நாட்டுச் சான்றோர்களையும். அருளாளர்களையும் தேசியத் தலைவர்களையும் போற்றிப் பாடியுள்ளார்; மற்றும் அவர்களுடைய அருமை பெருமைகளையும் பாராட்டியுள்ளார். அச்சான்றோர்களுள் பலர் அவருக்குக் காலத்தால் முற்பட்டவராவர்; சிலர் சம காலத்தில் சிறப்புற்று விளங்கியவராவர். குரு கோவிந்தர் முதல் வ. உ சிதம்பரனார் வரையிலுள்ள தேசியத் தலைவர்களையும், தாயுமானவர் முதல் டாக்டர் உ.வே. சா. வரையிலும் வாழ்ந்த தமிழ்ச் சான்றோர்களையும் தம் கவிதையிலே அழியாமல் வாழுமாறு அவர் செய்துள்ளார்.

வேளாளன் சிறை புகுந்தான் தமிழகத்தார்
மன்னென மீண்டான்[57]

எனத் தொடங்கும் பாடல் விடுதலைப் போரில் ஈடுபட்ட வ.உ.சிக்குக் கூறிய வாழ்த்துரையாகும். இதைப் போன்று தமிழ்த்தாத்தாவான உ.வே. சாமிநாதையரை,

---

56 மகாத்மா காந்தி காவியம். தொ. 1: தன்னாடு: 94
57 பாரதியார் கவிதைகள், பக். 213.

பொதியமலைப் பிறந்தமொழி வாழ்வறியும்
காலமெலாம் புலவோர் வாயில்
துதியறிவாய்! அவர்நெஞ்சின் வாழ்த்தறிவாய்!
இறப்பின்றித் துலங்குவாயே!"[58]

என்று வாழ்த்தியும் உள்ளார். இந்தப் பழக்கமானது, பாரதிக்குப் பின் பல்கிப் பெருகியுள்ளது. கவிஞர் ஒவ்வொருவரும் இந்தப் பழக்கத்தினை நல்லதொரு வழக்கமாகக் கொண்டு போற்றி வருவது கண்கூடு. நேருவையும், காந்தியையும். வ. உ.சி.யையும், பாரதியாரையும், திரு.வி.க.வையும் அறிஞர் அண்ணாவையும் பாடாத கவிஞர் இன்று இல்லை எனலாம். இதை அடியொற்றி இக்காலத்தில் கென்னடியையும், மார்டின் லூதர் கிங்கையும், மாசேதுங்கையும், நெரூலாவையும் பாடும் கவிஞர்கள் நம் இடையே வாழ்ந்து வருகின்றனர். இதனை 'அனைத்து உலக தேசிய' உணர்வு எனலாம். இத்தகைய எண்ணத்திற்கும் வித்திட்டவர் பாரதியாரே என்பதை நாம் மறத்தலாகாது. இத்தாலி நாட்டு விடுதலை வீரர் 'மாஜினி'யின் சூளுரையைப் பாரதி பாராட்டியுள்ளதை யார் மறக்கமுடியும்?

ருஷியப் புரட்சி

பாரதிக்கு முற்பட்ட காலத்திய புலவர்கள். நம் நாட்டு நிகழ்ச்சிகளைப் பாடுவதற்குத் தகுதியற்ற பொருள் என்று கருதினர். ஆனால் உரிமை வேட்கைமிக்க பாரதியார், ருஷியாவில் உண்டான மாபெரும் அக்டோபர் புரட்சியைப் புதியதொரு கவிதாவேசத்தோடு பாடியுள்ளார்.

இமயமலை வீழ்ந்தது போல் வீழ்ந்துவிட்டான் ஜாரரசன்!...
குடிமக்கள் சொன்னபடி குடிவாழ்வு
மேன்மையுறக் குடிமைநீதி
கடியொன்றில் எழுந்ததுபார்! குடியரசென்று
உலகறியக் கூறிவிட்டார்.[59]

---

58 ஷெ பக்.274
59 பாரதியார் கவிதைகள், பக். 221

என்னும் பாடல் அனைத்துலக தேசியத்தின் ஒளிப்பிழம்பாகும், இந்த மரபினைப் போற்றும் கவிஞர்கள் சிலராகவே இன்று உள்ளனர்.

திருச்சிற்றம்பலக் கவிராயர் எனப்படும் ரகுநாதன், வாழி நீ கொரிய நாடே!' என்று அமெரிக்கரின் ஆதிக்கத்தை உடைத்தெறிந்த கொரியாவை, "எங்கள் ஆசிய ஜோதி நீயே!"[60] என்று பாராட்டிப் பாடி உள்ளமை, பாரதியின் வழித்தோன்றல் அவர் என்பதைச் சொல்லாமல் சொல்லுகிறது!

தமிழ் நாட்டில் சுப்பிரமணிய பாரதியாரால் மூட்டி விடப்பட்ட 'தேசியக் கனல்', நீறுபூத்த நெருப்பாக இன்று வரை இருந்து வருகிறது. பாரதிக்குப் பின் ஆயிரத்திற்கு மேற்பட்ட கவிஞர்கள் தமிழகத்தில் தோன்றியுள்ளனர். ஆயினும், இந்திய தேசியத்தைப்போற்றுவோர் சிலராகவே இருந்து வருகின்றனர். அனைத்துலக தேசியத்தைப் பாடுவோர் மிகச் சிலராகவே உள்ளனர். அவர்களை இனங் கண்டறிய முயலுவோமானால், பெரிதும் மார்க்சியக் கோட்பாட்டினராக உள்ளவரே அனைத்துலக தேசியத்தைப்'பாடுபவராக உள்ளமை புலனாகும்.

---

60 ரகுநாதன் கவிதைகள். ஸ்டார், சென்னை, 1964: பக். 121–122.

3

சமுதாயப் பார்வை

பாரதியாரின் சமுதாயப் பார்வை வருணாசிரம தரும கட்டுப்பாட்டிற்குட்பட்ட ஒன்றாகவே காணப்படுகிறது. 'சாதிகள் இல்லையடி பாப்பா!' எனவும் 'பறையருக்கு மிங்கு தீயர், புலையருக்கும் விடுதலை' எனவும் அவர் சங்க நாதம் செய்துள்ளது உண்மை. ஆனால். அவருடைய கவிதைகள் அனைத்தையும், கட்டுரைகள் அனைத்தையும் தொகைவகைப்படுத்திக் காணும்பொழுது, இந்து தருமத்தின் அடிப்படையை – அதாவது இந்து சமூகத்தினரின் வருணாசிரம தரும அடித்தளத்தை மாற்றியமைக்காமலேயே. சாதி வேறுபாட்டையும், தீண்டாமைக் கொடுமையையும் ஒழித்துவிட முடியும் என்று அவர் நம்புகின்றார் என்பது புலனாகும். இன்றுவரை, அவருடைய எண்ணப் போக்கிலேயே இந்தியத் தலைவர்களும், சமயவாதிகளும் வாழ்ந்து கொண்டு வருகின்றனர். இதன் விளைவாகவே சாதிச் சண்டைகளும், இனக் கலவரங்களும், தீண்டப்படாத சமூகத்தினரின் மதமாற்றமும் நாட்டின் பல்வேறு பகுதிகளில் காட்டுத் தீப்போல் பரவி வருகிறது.

இந்த வகையில், பாவேந்தர் பாரதிதாசன் பாரதியின் எண்ணப் போக்கில் இருந்து வேறுபட்டு விளங்குகிறார். இதற்குக் காரணம், அவரே விரும்பி ஏற்றுக் கொண்ட தந்தை பெரியாரின் பகுத்தறிவுக் கோட்பாடேயாகும்.

இருட்டறையில் உள்ள தடா உலகம்! சாதி
இருக்கின்ற தென்பானும் இருக்கின் றானே!
மருட்டுகின்ற மதத்தலைவர் வாழ்கின்றாரே!
வாயடியும் கையடியும் மறைவதெந்நாள்?
சுருட்டுகின்றார் தம்கையில் கிடைத்த வற்றைச்
சொத்தெல்லாம் தமக்கென்று சொல்வார் தம்மை
வெருட்டுவது பகுத்தறிவே! இல்லை யாயின்
விடுதலையும் கெடுதலையும் ஒன்றே யாகும்![61]

எனும் பாடல் உணர்த்தும் உண்மை. ஆழ்ந்து சிந்திக்கத் தக்கதாகும்.

சாதி வேறுபாடற்ற சமுதாயம்

தேச விடுதலையையே முழு மூச்சாகக் கொண்டவர் பாரதியார். ஆயினும், அத்தேச விடுதலைக்கு இடையூறாக இருந்த சமுதாயச் சீர்கேடுகளை வெறுத்து,. ஒதுக்க அவர் தயங்கவில்லை! இந்திய மக்கள் எல்லாரும் ஒன்றாகச் சேர்ந்து, ஓயாது முயன்றால்தான், வெள்ளையர் ஆட்சிக்குச் சமாதி கட்ட இயலும் என்பதை அவர் நன்குணர்ந்து இருந்தார். 'வந்தே மாதரம் என்போம்' எனத் தொடங்கும் பாடலில்,

ஜாதி மதங்களைப் பாரோம் – உயர்
ஜன்மமித் தேசத்தி லெய்தின ராயின்
வேதிய ராயினும் ஒன்றே – அன்றி
வேறு குலத்தின ராயினும் ஒன்றே[62]

என்று அவர் வீரமுழக்கம் செய்தார்.மேலும்,

---

61 பாண்டியன் பரிசு, பக். 99.
62 பாரதியார் கவிதைகள், பக், 133

ஈனப் பறையர்களேனும் – அவர்
எம்முடன் வாழ்ந்திங்கு இருப்பவர் அன்றோ![63]

என்று கேட்பதன் மூலம், சாதி வேறுபாடற்ற சமுதாயத்தை உருவாக்க வேண்டும் என்னும் சிந்தனையை வெளிப்படுத்தியுள்ளார்.

சாதிக் கொடுமைகள் வேண்டாம் – அன்பு
தன்னில் செழித்திடும் இவ்வையம்[64]

என்று அறவுரை கூறுவதில் பாரதியார் ஈடுபட்டுள்ளார்.

பாரதிக்குப் பிறகு வந்த நம் தமிழ்க்கவிஞர் எல்லாம். பகுத்தறிவு இயக்கத்தின் தாக்கத்தால், தேசிய கவியைவிட இத்துறையில் பெருந் தீவிரவாதிகளாக உள்ளதைக் காணலாம்.

சாதிமத பேதங்கள் மூடவழக் கங்கள்
தாங்கி நடைபெற்று வரும் சண்டை யுலகிதனை
ஊதையினில் துரும்புபோல் அலைக்கழிப்போம்:
பின்னர்
ஒழித்திடுவோம்! புதியதோர் உலகு செய்வோம்![65]

என்பது புரட்சிக் கவிஞரின் அறைகூவல்.

பாரதிதாசன் பரம்பரையில் வாழையடி வாழையாக வந்துள்ள கவிஞர்கள் எண்ணற்றவராவர். அவர்கள் யாவரும் சாதி வேறுபாடற்ற சமுதாய அமைப்பை அமைக்க, இன்றுள்ள சாதிக் கொடுமைகளை அழிக்கப் பாரதிதாசன் காட்டிய வழியில், தீவிரமான புரட்சிக் கவிதைகளைப் படைத்து வருகின்றனர்.

பாரதிதாசனும், அவர் வழிவந்தோரும் வருணாசிரம தருமத்தின் ஆணிவேரைக் கழட்டி எறிந்தால்தான். சாதி வெறியும் கொடுமையுமற்ற சமத்துவ சமுதாயத்தை உருவாக்க இயலும் எனும் கோட்பாட்டினராய், வற்றாது வளங்கொழிக்கும் கவிதைகள் இயற்றி வருகின்றனர். இதனால்தான்

63 ஷெ பக். 133
64 ஷெ பக். 362
65 பாரதிதாசன் கவிதைகள், முதல் தொகுதி, பக். 146

"நமக்கெனன கிழியட்டும் பழம் பஞ்சாங்கம்!" என்று பாவேந்தர் பறை சாற்றியுள்ளார்.

இந்த வகையில், இவர்கள் எல்லாம் பாரதியாருடைய நோக்கில் இருந்து, வேறுபட்டு விளங்குகின்றனர்.

சாதிகள் இல்லையடி பாப்பா!– குலத்
தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்![66]

என்று பாரதியார் சிறுவர் சிறுமியர்களுக்கு உபதேசம் செய்துள்ளது உண்மை.

எல்லாரும் ஓர்குலம்! எல்லாரும் ஓரினம்!
எல்லாரும் இந்திய மக்கள்[67]

என்று அறிவித்துள்ளதும் உண்மை.

பார்ப்பானை ஐயரென்ற காலமும்போச்சே!
வெள்ளைப்
பரங்கியரைத் துரையென்ற காலமும் போச்சே[68]

என்று தெரிவித்துள்ளமை யாவரும் அறிந்த ஒன்றாகும்.

ஆனால். பாரதியார் வருணாசிரம கோட்டையைப் பாதுகாத்துக் கொண்டே,சாதியற்ற சமுதாயத்தை உருவாக்க இயலும் எனும் கனவு கண்டார். காந்தியடிகளும் இந்த எண்ணப்போக்கு உடையவராகவே வாழ்ந்தார். குறிப்பிட்ட ஒரு சமூகத்தினரின் ஏற்றத்திற்காகப் பண்டைக்காலத்தில் வகுக்கப்பட்டதே வருணாசிரம நெறி அதனுடைய உயிர்நாடியாக இருந்து வருவதே சாதிப் பாகுபாடும் தீண்டாமையுமாகும். இந்தக் கோட்பாட்டை குலைக்காமல் 'சாதிகள் இல்லை' எனச் சொல்லுவது உதட்டளவில் பேசப்படும் சித்தாந்தமாகும். நடைமுறையில் ஓரிரு அரிசனங்களுக்குப் பூணூல்போட்டு, தம்முடைய வீட்டில் உடன் அமரவைத்து பாரதியார் உணவருந்தி இருக்கலாம். தனி ஒரு மனிதனின் விருப்பு வெறுப்பை வெளிப்படுத்துவதாகவே இவை அமையும்.

---

66 பாரதியார் கவிதைகள்.பக்.268
67 ஷெ பக்.161
68 பாரதியார் கவிதைகள், பக். 181

பரந்த அளவில், நாடளாவிய முறையில், சாதிக் கொடுமையை அழிக்க – ஒழிக்கவேண்டுமானால், வருணாசிரம தருமத்தின் ஆதிக்கத்தை அழித்தொழித்தால்தான் இயலும். இந்த உண்மையை அரைநூற்றாண்டுக்கு முன்னரே தந்தை பெரியாரும், டாக்டர் அம்பேத்காரும் நன்குணர்ந்து இருந்தனர். எனவேதான். அவர்களுடைய சமுதாய சீர்திருத்தக் கோட்பாடுகள். சநாதந தருமத்தைப் போற்றிப் பின்பற்றி வரும் 'தன்னல ஆர்வலர்களுக்கு வெறுப்பை உண்டாக்கியது.

ஈரோட்டுப் (பெரியாரின்) பாதையில் செல்லுவதற்கு முனைந்த புரட்சிக் கவிஞரின் பாடல்கள், பாரதியாரின் சாதி பற்றிய நோக்கிலிருந்து வேறுபட்டு விளங்குகின்றன.

நால்வருணங்கள் விதித்தார் நாட்டார்கள்
அன்னவற்றில்
மேல்வருணம் கோல்கொண்டு மேதினியை
ஆள்வருணம்[69]

எனவும்,

நால் வகுப்பு என்பது நூல் வகுப்பா? தமிழ்நாட்டில்
நற்றமிழ் மக்கள் ஒரே வகுப்பே தமிழ்ஏட்டில்[70]

எனவும்

மிக்குயர்ந்த சாதி கீழ்ச் சாதி என்னும்
வேற்றுமைகள் தமிழ்க்கில்லை; தமிழர்க்கில்லை[71]

எனவும் பலவாறாகப் பாவேந்தர் அறிவுறுத்தியுள்ளமை இங்கு நினைவுகூறத் தக்கதாகும்.

இவருடைய வழித்தோன்றல்களும், புரட்சிக் கவிஞரைப் போன்றே சாதிப் பாகுபாடு. தீண்டாமை போன்ற சமுதாயக் கொடுமைகளை மிக வன்மையாகக் கண்டித்துப் பல பாடல்கள் பாடியுள்ளனர்.

---

69 பாரதிதாசன் கவிதைகள், தொகுதி 3: பக்கம் 57
70 மேற்படி பக்கம் 24.
71 மேற்படி பக்கம் 57.

கவிஞர் தமிழ் ஒளி,

அந்தணர்கள் எல்லாரும் தாய் வயிற்றில்
ஒவ்வொரு உயிராய் உயிர்த்துப் பிறந்திருக்க.
முன்னர் பிரமன் முகத்தில் பிறந்தார் யார்?
என்ன கதைகள்? இழிவுரைகள்?[72]

என்று வினவுவதைக் காண்க.

இவ்வகையில் பாரதியாரின் கவிதா மண்டலத்தில் பயிற்சியும் தேர்ச்சியும் பெற்ற பாவேந்தரும், அவருடைய மரபில் வந்தோரும், தேசிய கவி சுப்பிரமணிய பாரதியாரின் நோக்கில் இருந்து வேறுபட்ட உணர்வுடையவர்களாக – சிந்தனைப் போக்கு உடையவர்களாக – வளர்ந்துள்ளதை யாரும் மறக்கவோ, மறைக்கவோ, மறுக்கவோ இயலாது.

பெண்களைப் போற்றுதல்

பெண்கள் வாழ்கவென்று கூத்திடுவோமடா!' என்று பாரதியார் முழங்கியுள்ளார். 'ஆண்களோடு பெண்களும் சரிநிகர் சமானமாக வாழ்வோம் இந்த நாட்டிலே' என்று அவர் அறிவித்துள்ளதை யாவரும் அறிவர்.

பாரதியார் காண விரும்பிய "புதுமைப் பெண்"
நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வையும்
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகளும்
திமிர்ந்த ஞானச் செருக்கும் இருப்பதால்
செம்மை மாதர் திறம்புவது இல்லையாம்[73]

எனவும்,

பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும்
பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்.
எட்டும் அறிவினில் ஆணுக்கிங் கேபெண்
இளைப்பில்லை காணென்று கும்மியடி[74]

எனவும் பாடுவதைக் கேட்கிறோம்.

---

72 கோசலைக்குமரி, பக். 28.
73 பாரதியார் கவிதைகள், பக். 501.
74 பாரதியார் கவிதைகள் பக். 499.

பாரதியாரின் சீடராகிய பாவேந்தர், தொடக்க காலம் முதல் பெண்ணுரிமை, பெண்விடுதலை எனும்முற்போக்குச் சிந்தனையோடு பல பாடல்களைப் படைத்துள்ளார்.

பெண்ணுக்குப் பேச்சுரிமை வேண்டாமென்கிறீரோ?
மண்ணுக்குக் கேடாய் மதித்தீரோ பெண்ணினத்தை
பெண்ணடிமை தீருமட்டும் பேசுந் திருநாட்டு
மண்ணடிமை தீர்தல் முயற் கொம்பே!
ஊமையென்று பெண்ணை உரைக்குமட்டும் உள்ளடங்கும்
ஆமை நிலைமைதான் ஆடவர்க்கு உண்டு[75]

என்பன போன்ற பாடல்கள், பெண்களும் ஆண்களோடு சரிநிகர் சமானமானவர்கள் என்பதையே அறிவுறுத்துகின்றன.

விதவைகளாகிவிட்ட மகளிரை, சமுதாயம் மறுமணம் செய்துகொள்ள வொட்டாமல் கொடுமைப்படுத்துவதையும் புரட்சிக் கவிஞர் சாடுகிறார்:

பெண்ணுக் கொருநீதி கண்டீர்!
பேதமெனும் மதுவை உண்டீர்!
கண்ணிலொன்றைப் பழுது செய்தால் கான்றுமிழாதோ?
கான்றுமிழாதோ? புவிதான் பழியாதோ?[76]

என்று மக்களைச் சிந்திக்கத் தூண்டுகிறார் பாவேந்தர்.

இவருடைய வழியிலே வந்த கவிஞருள் சிலர், இம் மரபினைப் போற்றி வளர்த்துள்ளனர்.

காதலென்பார், உரிமையென் பார், கற்பாம்என்பார்
காலமெலாம் பெண்பெருமை பேசித்தீர்ப்பார்!
காதலெனும் பூக்காட்டில் ஆண்கள் மட்டும்
காட்டாட்சி புரிவதற்கே வழிகள் செய்வார்[77]

பாரதியாரின் 'பெண் விடுதலை'ப் போர் முரசை, பொதுவுடைமைக் கவிஞர் ஜீவா போன்றவர்கள் தொடர்ந்து அறைந்துள்ளதைக் கேட்கின்றோம்.

---

75 பாரதிதாசன் கவிதைகள், தொகுதி 1; பக்.3
76 பாரதிதாசன் கவிதைகள், தொகுதி 1; பக். 120.
77 வேழவேந்தன் கவிதைகள். பக். 105.

உடனடிமை யொழிய வேண்டும் – பெண்கள்
உரிமையடைய வேண்டும்
வேறென்ன வேண்டும்?
• • •
பேணும் சம சந்தர்ப்பத்தால்
பெருகும் சுதந்திரத்தால்
ஆணும் பெண்ணும் இன்புற வேண்டும்–
வேறென்ன வேண்டும்?[78]

இத்தகைய நோக்கில் தோழர் ஜீவானந்தம் அவர்கள் சில பாடல்கள் இயற்றி இருப்பது, இங்குக் கருதத்தக்கதாகும். இதில் உணர்ச்சியின் வேகமும், உண்மையின் ஆதிக்கமும் வெளிப்படுவதைக் காணலாம்.

காதலே கடவுள்!

பண்டைத் தமிழருடைய காதல் இலக்கிய நெறியாகிய அகப்பொருள் மரபு. உலகம் 'அவன், அவள், அது'வாகப் பரிணமித்து இருப்பதையும், 'அவனையும் அவளையும்' ஒன்றாக இணைத்துப் பேரண்டத்தின் இயக்கத்தை உந்துவதாகக் காதல் அமைவதையும் பலநிலைகளில் படம்பிடித்துக் காட்டுகின்றது.

இந்த 'அன்பு நெறி', பிற்காலத்தில் 'அன்பே சிவம்" (கடவுள்) எனும் கடவுள் நெறிக் கொள்கையின் அடிப்படைத் தத்துவமாக வளர்ந்து, சிறந்துள்ளதை 'அவன் அவள் அது எனும் அம்மூவினைமையின்' எனும் 'சிவஞான போதத்'தின் சித்தாந்தக் கோட்பாட்டால் தெளியலாம்.

பதினெட்டாம் நூற்றாண்டையொட்டி, மேற்கு நாடுகளில் தோன்றி, விரைவான வளர்ச்சி பெற்று, வாழ்க்கையின் பல்வேறு பகுதிகளையும் தழுவியது வீறுணர்ச்சி இயக்கமாகும் (Romantic Movement). இந்த இயக்கம். இலக்கியத்தின் வாயிலாக

78 ஜீவாவின் பாடல்கள், பக். 120–121.

வெளிப்படுகின்றபொழுது, பல்வேறு புதுமைப் போக்குகளை இலக்கியத்தில் எழச் செய்தது. அவற்றுள் ஒன்று 'காதலிலே கடவுளைக் காண்பது' எனும் கவிதை நெறியாகும். இரு உள்ளங்களின் இதயதாகத்தை, ஒருவர் மற்றொருவரை அடையத் துடிக்கும் இதய வேட்கையை, இவற்றால் உண்டாகும் ஏக்கத்தையும், ஏமாற்றத்தையும் உணர்ச்சிப் பொங்கலாகத் தெய்விகத் தன்மை எனும் வண்ணத்தில் குழைத்து,வானளாவப் போற்றிப்புகழ்ந்துபாடுவதுவீறுணர்ச்சிக் கவிஞர்களின் இயல்பாகும்.

இந்த இயல்பு–போக்கு– சுப்பிரமணிய பாரதியாரின் கவிதைகளில் மட்டும் அல்லாமல் கட்டுரைகளிலும், சந்திரிகையின் கதை' எனும் நிறைவுறாத புதினத்திலும் முனைப்பாக உள்ளதை நாம் காணலாம்.

அழகுத் தெய்வம்' எனும் பாரதியாரின் பாடல் இதற்குச் சிறந்ததோர் எடுத்துக்காட்டாகும்.

மங்கியதோர் நிலவினிலே கனவிலிது கண்டேன்
வயதுபதி னாறுஇருக்கும் இளவயது மங்கை
பொங்கிவரும் பெருநிலவு போன்றவொளி முகமும்
புன்னகையின் புதுநிலவும் போற்றவருந் தோற்றம்
துங்கமணி மின்போலும் வடிவத்தாள் வந்து
தூங்காதே எழுந்தென்னைப் பாரென்று சொன்னாள்!
அங்கதனில் கண்விழித்தேன்! அடடாவோ !
அடடா !
அழகென்னும் தெய்வந்தான் அதுவென்றே
அறிந்தேன் ![79]

எனும் பாடல், காதலியை அழகுத் தெய்வமாகச் சித்திரித்துக் காட்டுகிறது.

'காதலின்' அருமை பெருமைகளைப் பாரதியாருக்கு முன்னர்த் தோன்றிய தமிழ்க் கவிஞர்கள் யாருமே. பாரதியைப் போன்று போற்றவில்லை; புகழவில்லை: பாடவும் இல்லை!

---

79 பாரதியார் கவிதைகள், பக்.101

காட்டிலுள்ள பறவைகள்போல் வாழ்வோ மப்பா!
காதலிங்கே யுண்டாயிற் கவலை இல்லை!
பாட்டினிலே காதலைநான் பாட வேண்டிப்
பரமசிவன் பாதமலர் பணிகின் றேனே ![80]

என்று காதலின் சிறப்பை, அவர் பாடத் தொடங்குகிறார்.

காதலினால் மானுடர்க்குக் கலவி யுண்டாம்!
கலவியிலே மானுடர்க்குக் கவலை தீரும்!
காதலினால் மானுடர்க்குக் கவிதை யுண்டாம்!
கானம் உண்டாம்; சிற்பமுதற் கலைகள் உண்டாம்!
ஆதலினால், காதல் செய்வீர்! உலகத் தீரே!
அஃதன்றோ இவ்வுலகத் தலைமை இன்பம்!
காதலினால் சாகாமல் இருத்தல் கூடும்;
கவலைபோம்; அதனாலே மரணம் பொய்யாம்!?[81]

எனும் 'காதலின் போற்றித் திருவகவலை'ப் பலமுறை படித்துப் பார்ப்பீராக! இப்பாடல் நம் உள்ளத்தில் எழுப் பும் எண்ணம் என்ன? ஒரு காதல்–கிறுக்கனின்' உளறுதலாகத் தோன்றுகிறது அல்லவா? இதுதான் 'வீறுணர்ச்சிக் கவிஞர்'களின் மனப்போக்காகும்.

'மரணமிலாப் பெருவாழ்வை. காதலால் மனிதர்கள் பெற இயலும்' எனும் நம்பிக்கை பாரதியாருக்கு நிறைய உண்டு.

காதலினால் சாகாமல் இருத்தல் கூடும்!
கவலைபோம்; அதனால் மரணம் பொய்யாம்![82]

என்பதனால் இதனைத் தெளியலாம்.

'இந்துசமய மும்மூர்த்திகளும் காதல்வயப்பட்டோரே என்பதைப் பாரதியார் அறிவிக்கும் திறம். நம் கருத்தைக் கவருவதாகும்.'கடவுள் நிலை' எய்துவதற்குக் காதலியே உற்ற துணையாவாள் என அவர் அறிவிப்பதைப் பார்ப்போம்;

---

80 பாரதியார் கவிதைகள்; பக் 252
81 ஷ பக். 253
82 பாரதியார் கவிதைகள்; பக். 253

..... வானோர்க்கேனும்
மாதரின்பம் போற்பிறிதோர் இன்பம் உண்டோ?
காதல் செயு மனைவியே சக்தி கண்டீர்!
கடவுள் நிலை அவளாலே எய்த வேண்டும்![83]

காதல் பித்து, பையப் பைய பாரதிக்கு முற்றிவிடுகிறது. மகாகவி காளிதாசனைப் பற்றிய வியப்பூட்டும் செய்தி ஒன்றை,

கொங்கைகளே சிவலிங்கம் என்று கூறிக்
கோக்கவிஞன் காளிதா ஸனும் பூஜித்தான்[84]

எனத் தெரிவிக்கின்றார்.

அடுத்து, 'உலகில் தோன்றியுள்ள இலக்கியங்கள் எல்லாம் காதலைப் புகழ்ந்து பாடுவதைத் தவிர வேறென்ன செய்துள்ளன?' என அவர் வினவுகிறார்!

இங்குபுவி மிசைக்காவி யங்க ளெல்லாம்
இலக்கியமெல்லாம்கா தல் புகழ்ச்சிஅன்றோ?[85]

'அரசர்களும், படைத் தலைவர்களும் காதல் செய்வதில் ஈடுபட்டால், உலகில் போரே மூளாது' எனும் கருத்தையும் பாரதி தெரிவிக்கின்றார்.

காதலிலே இன்பம் எய்திக் களித்து நின்றால்,
கனமான மன்னவர்.போர் எண்ணு வாரோ?
மாதருடன் மனமொன்றி மயங்கி விட்டால்
மந்திரிமார் போர்த் தொழிலை மனங்கொள்வாரோ?
பாதிநடுக் கலவியிலே காதல் பேசிப்
பகலெல்லாம் இரவெல்லாம் குருவிபோலே
காதலிலே மாதருடன் களித்து வாழ்ந்தால்,
படைத்தலைவர் போர்த்தொழிலைக் கருதுவாரோ![86]

எனக் "காதல் புராணம்' பாடுவதைக் காணலாம்,

---

83 ஷ
84 ஷ
85 ஷ
86 பாரதியார் கவிதைகள்; பக். 254

இதற்கு இடையே, அன்றாட வாழ்க்கையில் 'காதலுக்குத்தரப்படும் மதிப்பை'யும், 'காதலர்படும் பாட்டை'யும் எண்ணியெண்ணி ஏக்கப் பெருமூச்சு விடுகிறார் பாரதி.

நாடகத்தில் காவியத்தில் காதல் என்றால்
நாட்டினர்தாம் வியப்பெய்தி 'நன்றாம்' என்பர்;
ஊடகத்தே வீட்டினுள்ளே கிணற்றோ ரத்தே
ஊரினிலே காதல்என்றால் உறுமுகின்றார்;
பாடைகட்டி அதைக்கொல்ல வழிசெய் கின்றார்;
பாரினிலே காதலெனும் பயிரை மாய்க்க
மூடரெலாம் பொறாமையினால் விதிகள் செய்து
முறைதவறி இடரெய்திக் கெடுகின்றாரே![87]

என்று அவர் அங்கலாய்க்கின்றார்.

இந்தக் 'காதல்வெறி' கண்ணன் பாட்டிலும் பீறிட்டு எழுகிறது. 'கண்ணன் என் காதலன்' எனும் தலைப்பில் ஐந்து பாடல்களும், 'கண்ணம்மா என் காதலி' எனும் தலைப்பில் ஆறுபாடல்களும் நம் கவிஞரால் இயற்றப்பட்டுள்ளன. இவற்றுள் 'காதலர் உறவை' தெய்வீகத் தன்மை நிறைந்த மெய்யுணர்வு சார்புடையதாகச் சித்தரித்து உள்ளதைக் காணலாம். 'குயில் பாட்டு' பாரதியின் சிறப்புமிகு 'காதல் காப்பியம்' என்பதை யாவரும் அறிவர்.

பாரதிக்குப் பின்வந்த தமிழ்க் கவிஞர்களின் பாடல்களில், காதல் உணர்வு போற்றப்படுகிறது; 'காதல் காதல் காதல்! காதல் போயின் காதல் போயின், சாதல்! சாதல்! சாதல்!'[88] எனும் உளவியல்பும் விரித்துரைக்கப் படுகிறது.

பாரதியாருக்குப்பின் தோன்றிய பெரும்பாலான தமிழ்க் கவிஞர்கள், காதல்பற்றிய பாரதியின் இந்த உணர்வினைப் பொன்னேபோல் போற்றிப் பாடியுள்ளனர். பாவேந்தர் பாரதிதாசன்.

---

87 ஷெ. பக்.259.

88 பாரதியார் கவிதைகள்; பக், 284.

காதல் அடைதல் உயிரியற்கை! – அது
கட்டில் அகப்படும் தன்மையதோ?– அடி
சாதல் அடைவதும் காதலிலே – ஒரு
தடங்கல் அடைவதும் ஒன்றுக்கண்டாய் – இனி
நீ தடுமாற்றம் அகற்றிவிடு![89]

என்று காதலின் சிறப்பை எடுத்துரைத்துள்ளார்.

ஒன்றிய இளம் உள்ளங்கள் இரண்டில் அரும்பும் காதலுக்குக் கட்டுப்பாடு விதிப்பதை மாபெரும் 'சமுதாயச் கொடுமையாக' அவர் கருதுகிறார்.

மண்படைப்பே காதலெனில் காதலுக்கு
மறுப்பெதற்கு? கட்டுப்பாடு எதற்குக் கண்டாய்?
புண்படைத்த என்நாடே! கைம்மைக் கூர்வேல்
பொழிகின்றாய் மங்கையர் மேல் அழிகின்றாயே![90]

இப்பாடலில் 'விதவையான பெண்கள் காதலிப்பதற்குத் தடை விதிப்பது தவறு' என அவர் அறிவிக்கின்றார்.

பொதுவாகக் காதல்வயப் பட்டவர்க்குப் புத்துணர்ச்சி யும் பேராற்றலும் உண்டாகும். அதனால், மாபெரும் செயல்களை எல்லாம் அவர்களால் சாதிக்க இயலும் என்பதை,

கிட்டறிய காதல்கிழத்தி இடும்வேலை
விட்டெறிந்த கல்லைப்போல் மேலேறிப் பாயாதோ?
கண்ணின் கடைப்பார்வை காதலியர் காட்டிவிட்டால்
மண்ணில் குமரர்க்கு மாமலையும் ஓர்கடுகாம்[91]

எனப் பாவேந்தர் பாடுகின்றார். இப்பாடற்பகுதி,

காற்றி லேறியவ் விண்ணையும் சாடுவோம்!
காதற் பெண்கள் கடைக்கண் பணியிலே![92]

---

89 பாரதிதாசன் கவிதைகள், தொ.1:பக்.69.
90 பாரதிதாசன் கவிதைகள்: பக். 82.

91 பாரதிதாசன் கவிதைகள்,தொகுதி 1; பக். 4

92 பாரதியார் கவிதைகள், பக். 5.04

எனும் பாரதியாரின் கருத்தினைப் பெரிதும் ஒத்திருப்பதைக் காணலாம்.

கவிஞர் முடியரசன் பாவேந்தரின் மரபிலே வந்தவர், அவர்,

"காதல்மிகு வாழ்வினையே முன்னோர் கண்டார்!
கண்டதிலை சாதிமுறை. உயர்வு தாழ்வு!
ஓதவிலை, சங்கத்து நூல்கள் சான்றாம்!
உணர்ந்திடுவீர்!" என்றுரைப்பர்: தலைய சைப்பர்!
காதல்மணம் கலப்புமணம் செயலிற் காட்டக்
கருதிடினோ கரடிபுலியாக மாறித்
தீது இழைப்பர் ஊரார்கள்; பேச்சில் மட்டும்
தீரரவர்; செயலென்றால் அஞ்சிச் சாவார்![93]

என்று சமுதாயத்தில் 'காதல்' வெறுக்கப்படுவதைச் சித்திரித்துள்ளார்.

வாணிதாசன் எனும் கவிஞர், காதலைப் போற்றும் திறத்தை இனிக் காண்போம்:

காதல்! காதல்! காதல்! காதல்!– எங்கும்
காதல் பெருவாழ்வே! வாழ்க!
மோதும் கடல்சூழ் உலகினில் எங்கும்
முதிர்ந்த பெருவாழ்வே!–காதல்
முதிர்ந்த பெருவாழ்வே![94]

எனும் பாடல், பாரதியாரின் 'காதல்' நெறியை ஓரளவிற்கு எதிரொலிக்கிறது.

பாலபாரதி ச.து.சு.யோகி அவர்கள் பாரதியின் 'வாரிசுகளுள்' ஒருவராவர். அவருடைய பாடல்களில் 'காதல் வெறி' பல வகையில் வெளிப்படுத்தப்பட்டுள்ளதைக் காணலாம்.

கார்மழை மேனியள் காளியம்மாள் தந்த
காதலில் மேனி கரைந்திடுவோம்!

• • •

காதல் கலவியில் கண்இரண்டும் மூடிக்
காசினி யாவும் மறந்திருந்தார்!

---

93 முடியரசன் கவிதைகள், பக். 75

94 வாணிதாசன் கவிதைகள், தொகுதி 2: பக். 38.

மோதிய வெள்ளத்தில் மூர்க்கம் அறிந்திலர்!
மோகனக் காதலில் ஆழ்ந்து விட்டார்!
காதல் கண்டோம்! இனிச்சாதல் இலைஎனக்
காட்டிய பல்லவி கேட்டதுவே![95]

எனும் பாடலில், காதல் வயப்பட்டோரின் மனநிலையை யோகியார் சித்தரித்துக் காட்டுவதன் மூலம், 'காதலின் சிறப்பை எடுத்துரைக்கிறார்.

கவிஞர் 'சோமு'. 'காதல் நதி' எனும் தலைப்பிலே இயற்றியுள்ள பாடல்கள் நம் கருத்தைக் கவருவனவாகும். காதலின் அருமை பெருமைகளைப் பலவாறாக அவர் போற்றிப் பாடியுள்ளார்.

காதல் நதியின் கரையினிலே நாங்கள்
கண்ட இன்பம் ஒருகோடி!
காதல் நதியி ன் புனலிலே – நாங்கள்
களித்த இன்பம் பலகோடி![96]

எனும் அடிகள் நம் நெஞ்சத்தை நெருடுகின்றன.

பாரதிக்குப் பிறகு தோன்றிய தமிழ்க் கவிஞர்களுள் 'காதலைப் பாடாதவரே இல்லை எனலாம். ஆனால், பாரதி போற்றிய 'காதலின் தெய்வத் தன்மை'யை வியந்து போற்றும் முறை நாளடைவில் குறையலாயிற்று! ஆனால்,

---

95 தமிழ்க் குமரி பாடல்கள், பக். 114
96 இளவேனில், 'காதல் நதி'

பாரினிலே காதலெனும் பயிரை மாய்க்க
மூடரெலாம் பொறாமையினால் விதிகள் செய்து
முறைதவறி இடரெய்திக் கெடுகின்றாரே.[97]

என்று வருத்தமுற்ற பாரதியாரின் இந்த எண்ணப் போக்கை எதிரொலிக்கும் வகையில். ஏராளமான பாடல்களை நம் கவிஞர்கள் படைத்துள்ளனர். இன்றைய சமுதாயத்தில் காதல் படும்பாட்டை', அவர்கள், 'காதலும் கண்ணீரும்' எனும் உணர்வு நிலையில், உணர்ச்சிக் கனிவுடன் சித்தரித்து வருகின்றனர்.

சமுதாய உணர்வு

மனிதனைக் கூடி வாழும் விலங்கு என்பர். 'தான்' எனும் தன்னல உணர்வு குன்றி, எல்லாம் நாட்டிற்காக, நாட்டு மக்களுக்காக,சமுதாயத்திற்காகஎனும்விரிந்தமனநிலையோடு மனிதன் வாழ வேண்டும் எனும் கருத்தினையுடையவராகப் பாரதியார் விளங்கினார். இந்த நிலையில், அவருடைய சொல்லும் செயலும், புதியதொரு சமுதாயத்தை உருவாக்க வழிகாட்டுவனவாக அமைந்துள்ளன. அவர், உலகில் வாழும் மனிதர்களின் நலத்தினை நாடுவதில் கொண்ட ஆர்வமே, அக்கறையே– சமுதாய உணர்வாக வெளிப்பட்டு இருக்கிறது.

சமுதாய உணர்வின் அடிப்படை 'மக்களாகப் பிறந்த அனைவரும் சமம்' எனும் கோட்பாட்டினை மையமாகக் கொண்டு சுற்றிச் சுழலுகிறது.

எல்லாரும் ஓர்குலம்; எல்லாரும் ஓரினம்
எல்லாரும் இந்திய மக்கள் !
எல்லாரும் ஓர்நிறை; எல்லாரும் ஓர்விலை
எல்லாரும் இந்நாட்டு மன்னர்![98]

எனும் பாடல். பாரதியாரின் சமத்துவ நோக்கைப் பறை சாற்றுகிறது.

---

97 பாரதியார் கவிதைகள், பக். 253.
98 பாரதியார் கவிதைகள். பக். 161.

சுதந்தரப் பள்ளு' எனும் பாடலில், அவர்

எங்கும் சுதந்திரம் என்பதே பேச்சு – நாம்
எல்லாரும் சமம்என்பது உறுதியாச்சு[99]

என்பதை அறிவிக்கின்றார். மற்றும் 'சாதி மதங்களைப் பாரோம்' எனவும் அவர் தெரிவித்துள்ளார்.[100] இவை யாவும் 'சமத்துவ' உணர்வின் வெளிப்பாடேயாகும்.

உலகில் மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவனுக்கும் வாழ உரிமையுண்டு; வளமாக, நலமாக வாழ வழிசெய்து தர வேண்டியது சமுதாயத்தின் கடமை' எனும் கருத்தினைக் கொண்டவர் பாரதி; வாழப் பிறந்த மனிதனை, வாட்டி வதைக்கும் வறுமையைக் கண்டு சீறி எழுகிறார்: வறுமையை ஒழிக்க என்ன வழி என்பதைத் தீவிரமாகச் சிந்திக்கின்றார்! அதற்குரிய வழி, 'பொதுவுடைமை' சமுதாயத்தை உலகில் உருவாக்கப் பாடுபடுவதே எனும் முடிவிற்கு தேசிய கவிஞர் வந்துள்ளார். இது அவருடைய மனித நலநாட்டத்தையும், முன்னறி திறனையும் புலப்படுத்துகிறது.

... ...வைய
மீதினில் வறுமையோர் கொடுமை அன்றோ?[101]

எனத் துடிக்கும் பாரதியார், அதை உலகில் இருந்து ஒழிக்கப் பாடுபடுவேன் எனும் 'வஞ்சினம்' கூறுவதைச் காணலாம்.

இல்லை என்ற கொடுமை – உலகில்
இல்லையாக வைப்பேன்[102]

என்பது பாரதியார் செய்துள்ள 'சபதம்' ஆகும்.

மனிதர் உணவை மனிதர் பறிக்கும்
வழக்கம் இனி யுண்டோ?
மனிதர் நோக மனிதர் பார்க்கும்
வாழ்க்கை இனியுண்டோ? [103]

---

99 பாரதியார் கவிதைகள், பக். 181.
100 மேற்படி, பக். 33.
101 மேற்படி, பக். 24.
102 மேற்படி, பக்.26.
103 பாரதியார் கவிதைகள், பக். 160.

எனச் சமுதாயக் கொடுமைகளையும், சுரண்டலையும் எதிர்த்து பாரதியார் 'போர்முரசு' கொட்டுகிறார்; இந்நிலையில், 'புரட்சி'க் கனல் தெறிக்கும் புதியதொரு விதியை நிலைநாட்டத் துடிக்கிறார்.

இனியொ ருவிதி செய்வோம் – அதை
எந்த நாளும் காப்போம்!
தனியொ ருவனுக்கு 'உணவிலை' யெனில்
ஜகத்தினை அழித்திடுவோம்[104]

இவ்வாறு புதிய சமுதாயத்தை உருவாக்க என்ன செய்ய வேண்டும் அறிவித்துள்ளார். என்பதையும் பாரதியார் அன்றே

முப்பது கோடி ஜனங்களின் ஸங்க
முழுமைக் கும்பொது உடைமை
ஒப்பி லாத ஸமுதாயம்
உலகத்துக் கொரு புதுமை – வாழ்க
பாரத ஸமுதாயம் வாழ்கவே[105]

இப்பாடலால், "பொதுவுடைமைச் சமுதாயமே, மனித குலத்தின் 'நோய் தீர்க்கும் மருந்தாக' அமையும் என்பதைப் பாரதியார் உறுதியாக நம்பியதைக் காணுகின்றோம். இந்த எண்ணத்திற்கு ஊற்றாக பாரதிக்கு அமைந்தது ருஷியாவில் நடைபெற்ற 'அக்டோபர்' புரட்சியாகும் அதனை வியந்து, போற்றி அவர் பாடியுள்ளதே இதற்குச் சிறப்புமிகு சான்றாகும்.

மாகாளி பராசக்தி உருசிய நாட்
டினில் கடைக்கண் வைத்தா ளங்கே!
ஆகாவென்று எழுந்ததுபார் யுகப்புரட்சி!
கொடுங்காலன் அலறி வீழ்ந்தான்![106]

என இந்நூற்றாண்டில் தோன்றிய (1919) ருஷியப் புரட்சியை "யுகப் புரட்சி" எனப் பாரதியார் போற்றுகின்றார். அப்புரட்சியின்

---

104 மேற்படி,
105 மேற்படி,
106 மேற்படி, பக், 220–21

விளைவு, மனித இனத்தின் தலைவிதி'யை எவ்வாறு மாற்றி அமைக்கப் போகிறது என்பதை முன்னறிதிறனுடன் அவர் கண்டுள்ளார்.

குடிமக்கள் சொன்னபடி குடிவாழ்வு
மேன்மையுறக் குடிமை நீதி
கடியொன்றில் எழுந்தது பார்! 'குடியரசு'என்று
உலகறியக் கூறிவிட்டார்!
அடிமைக்குத் தளையில்லை: யாருமிப்போது
அடிமையில்லை அறிக!' என்றார்
இடிபட்ட சுவர்போல கலிவிழுந்தான்
கிருதயுகம் எழுக மாதோ![107]

இத்தகைய புரட்சிப் பாடல்கள், இந்திய மண்ணில் 'யுகப் புரட்சிக்கு'ப் பாரதியார் ஊன்றிய விதைகள். இன்று அவை சிறு செடிகளாகவே வளர்ந்துள்ளன. அவை வளர்ந்து மரங்களாகிப் பூத்துக் காய்த்து, கனிகொடுக்கும் நாளினை விரைவில் எதிர்பார்ப்போமாக!

தமிழ்க் கவிதைகளில், அவருடைய 'யுகப் புரட்சி' பற்றிய எண்ணம் 'நீறுபூத்த நெருப்பாக'க் கனன்று கொண்டு இருப்பதை இன்றும் காணலாம்.

பாவேந்தர் பாரதிதாசன், ஓரளவிற்கு இந்த உணர்வினைப் போற்றி, மக்கள் இடையே பரப்ப முயன்றுள்ளார். *சமூக வயலில் சமத்துவப்' பயிரிட வேண்டும் என்பதை ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னரே அவர் தெரிவித்துள்ளார்.

நலந்தரும் சமத்துவம் நாடுதல் மகத்துவம்
நண்ணுவாய் சுதந்தரத்வம்
கலகமேன்? சண்டைக ளேன்?
கருத்தெலாம் பேதம் கொள்வதேன்?[108]

---

107 மேற்படி,
108 முல்லைக் காடு, பக். 31

எனும் பாடல், பிரெஞ்சுப் புரட்சி உலகிற்கு வழங்கிய முப்பெரும் கொள்கைகளுள் "சமத்துவம், சுதந்திரம்" எனும் இரண்டையும் தெளிவுறுத்துகிறது.

அனைத்துலக உணர்வோடு மனிதன் செயல்பட வேண்டும் என்பதை,

விசாலப் பார்வையால் விழுங்கு மக்களை
அணைந்துகொள் உன்னைச் சங்க மாக்கு!
'மானிட சமுத்திரம் நானென்று கூவு!
பிரிவிலை ; எங்கும் பேதம் இல்லை!
உலகம் உண்ணஉண்! உடுத்த உடுப்பாய்![109]

எனும் பாடலில் பாவேந்தர் அறிவித்துள்ளார்.

உலகம் "எல்லார்க்கும் எல்லாம் என்று இருப்பதான இடம் நோக்கிச்" சென்று கொண்டு இருக்கிறது என்பதை நன் குணர்ந்தவர் பாரதிதாசன்.

இல்லாரும் அங்கில்லை! பிறன் நலத்தை
எனதென்று தனியொருவன் சொல்லான் அங்கே
நல்லாரே எல்லாரும் அவ்வையத்தில்[110]

என்று அவ்வுலகின் இயல்பினை அவர் எடுத்துரைக்கின்றார்.

சமுதாய விடுதலைக்காகப் போராடுவதையே நோக்கமாகக் கொண்டு இருந்த புரட்சிக் கவிஞர், 'ஆண்டான்–அடிமை', 'முதலாளி–தொழிலாளி'. 'உடையவர்– இல்லாதவர்' போன்ற பல முரண்பட்ட பிரிவுகள் (வர்க்கம்) சமுதாயத்தைச் சீரழிப்பதைக் கண்டு மனம் கொதித்தார்.

வலியோர் சிலர் எளியோர்தமை
வதையே புரிகுவதா?
மகராசர்கள் உலகாளுதல்
நிலையாமெனும் நினைவா?[111]

என்று அவர் வீரமுழக்கமிட்டார்.

---

109 பாரதிதாசன் கவிதை, தொ.1; பக்.150
110 மேற்படி, தொகுதி. 3; பக். 186
111 மேற்படி, தொகுதி. 1; பக். 172

இந்தக் கொடுமையை ஒழிப்பதற்குப் 'புரட்சி' தேவை! அப்புரட்சியைத் தூண்டும் வகையில்,

கொலைவாளினை எடடா!
கொடியோர் செயலறவே!
குகைவாழ் ஒரு புலியே உயர்
குணமேவிய தமிழா![112]

என அவர் அறிவிக்கின்றார்.

அப்புரட்சியின் பயனாக.

சமமே பொருள் ஜனநாயகம்
எனவேமுர சறைவாய்!
இலையே! உணவிலையே! கதி
இலையே!' எனும் எளிமை
இனிமேலிலை! எனவேமுரசு
அறைவாய்! முரசறைவாய்![113]

எனும் நிலையை, நாம் அடைவோம் என்பதை உலகிற்கு உணர்த்துமாறு அவர் வேண்டுகிறார்.

'இத்தகைய புதிய சமுதாயத்தை உருவாக்க என்ன வழி?" என்பதையும் பாவேந்தர் வெளிப்படையாகவே அறிவுறுத்தியுள்ளார்.

ஓடப்ப ராய்இருக்கும் ஏழையப்பர்
உதையப்ப ராகிவிட்டால், ஓர்நொடிக்குள்
ஓடப்பர், உயரப்பர் எல்லாம் மாறி
ஒப்பப்பர் ஆய்விடுவார்! உணரப்பா நீ![114]

எனும் உலகப்பன் பாட்டு'. தன்மான இயக்கத்து வழி வந்த பாவலர், பொருளாதாரப் புரட்சி'யாகிய இந்த யுகப்புரட்சிக்கு வழிகாட்டுவதை வெளிப்படுத்துகிறது.

---

112 மேற்படி, பக்.173
113 மேற்படி, பக்.173
114 மேற்படி, பக்.148

'இந்தப் புரட்சியைத் தோற்றுவிப்பதற்கு என்ன வழி? என்பதையும் அவரே காட்டுகிறார்.

புதியதோர் உலகம் செய்வோம்! – கெட்ட
போரிடும் உலகத்தை வேரொடு சாய்ப்போம்!
பொதுஉடைமைக் கொள்கை திசையெட்டும்
சேர்ப்போம்
புனிதமோடு அதைஎங்கள் உயிரென்று காப்போம்![115]

என்பதே பாவேந்தர் காட்டும் வழியாகும்.

பாரதியாரைப் போன்றே, பாரதிதாசனாரும் பொதுவுடைமைக்' கொள்கையினால்தான்,மனித இனத்தின் துன்பம் துடைக்கப்படும் எனும் நம்பிக்கை கொண்டிருந்தார். இதை வெளிப்படுத்தும் பாடல்கள் பல புனைந்துள்ளதை இவை தெரிவிக்கின்றன. மேலும் 'ருஷியப் புரட்சி' ஒவ்வொரு நாட்டிலும் நடைபெற வேண்டும் எனும் எண்ணம் உடையவராகவும் அவர் இருந்திருக்கிறார்.

ஜாரின் கொடுமை தாங்கா உருசியம்
ஏருற லெனினை ஈன்றே தீரும்![116]

என அறிவிப்பதோடு. தமிழ்நாட்டையும் ருசிய நாடாக மாற்ற வேண்டும் எனும் எண்ணம் உடையவராகவும் அவர் விளங்குகிறார்.

ஓர்தமிழ் நாட்டில் உருசிய நாட்டையும்
உண்டாக்கித் தீர்த்திடலாம்[117]

என்னும் தீவிரமான புரட்சி மனப்போக்கு உடையவராக இருந்ததைக் காணுகின்றோம்.

ருசியப் புரட்சியின் சாதனைகளை முழுமையாகக் காணாதவர் பாரதியார். பாவேந்தர் அதன் விளைவுகளைக் கண்டவர்: அதன் நன்மை தீமைகளை நன்கு அறியும்

---

115 மேற்படி,பக்.158.

116 மேற்படி,தொகுதி 2;பக்.72.

117 மேற்படி, 148.

வாய்ப்பையும் பெற்றவர். எனவே, பாரதியை விட, தீவிரமான புரட்சி மனப்போக்கு உடையவராக அவருடைய சீடர். "புதிய சமுதாயத்தை" உருவாக்க அறிவுப்பணி ஆற்றியுள்ளார். ஆனால், தொடர்ந்து இத்துறையில் அவர் முனைந்து நிற்காதது ஏமாற்றத்தை அளிக்கிறது.

காந்தியக் கவிஞராகிய நாமக்கல் இராமலிங்கம் பிள்ளையின் கவிதைகளில், இத்தகைய தாக்கத்தைக் காண்பது அரிதாகவே இருக்கிறது. எனினும், 'புதிய சமுதாயத்'தை உருவாக்கப் பாடுபட வேண்டும் எனும் துடிப்பு அவரிடம் இருந்ததை, நாம் அவருடைய பாடல்களில் இருந்து அறிய முடிகிறது. 'புதிய சமுதாயம்' எனும் தலைப்பில், அவர் பாடியுள்ள கவிதை ஒன்று இங்குக் குறிப்பிடத் தக்கதாகும்:

பாட்டாளி மக்களது பசிதீர வேண்டும்
பணமென்ற மோகத்தின் விசைதீர வேண்டும்;
கூட்டாளி வர்க்கங்கள் குணம்மாற வேண்டும்;
குற்றேவல் தொழிலென்ற மனம்மாற வேண்டும்;
வீட்டோடு தான்மட்டும் சுகமாக உண்டும்
வேறுள்ளோர் துன்பங்கள் கண்ணாரக் கண்டும்
நாட்டோடு சேராத தனிபோக உரிமை
நடவாதிங்கு இனியென்று நாமறிதல்
பெருமை[118]

இப்பாடலில் 'வர்க்கம்' எனும் சொல் இடம் பெற்றிருப்பதாலேயே, நாமக்கல்லார். 'மார்க்சிய'க் கோட்பாட்டை ஏற்றுக் கொண்டு போற்றுபவர் எனச் சொல்ல இயலாது. தேசிய எழுச்சியின் உந்துதலால் கவிதை புனைந்தவர் இராமலிங்கம்பிள்ளை; காந்தியத்தையே 'புதிய உலகிற்கு" வழிகாட்டும் கோட்பாடாகக் கொண்டு எழுதியவர். அவர் காண விரும்பும் (மேற்கண்ட பாடலால் தெரியவரும்) புதிய சமுதாயம், அண்ணல் காந்தியடிகள் காண விரும்பிய 'சர்வோதய சமுதாய மாக'வே தோன்றுகிறது.இதனால், 'நாமக்கல் கவிஞருக்குச்

118 நாமக்கல் கவிஞர் பாடல்கள், பக். 163

சமுதாய உணர்வு இருந்ததில்லை' எனச் சிலர் கூறுவது தவறு! அவ்வுணர்வு, அளவால் சுருங்கிய ஒன்றாக, 'முதலாளித்துவ சமுதாயக் கட்டுக்கோப்புக்குள்' அடங்கும் ஒன்றாக இருந்தது எனக்கொள்ளுவதே பொருத்தமாகும்.

காந்தியத்தின் வழிவந்து, தொழிற்சங்கத் தொடர்பால், மார்க்சிய உணர்வு பெற்றவர் திரு. வி. கலியாணசுந்தரனார், அவர் "பொருளும் அருளும் அல்லது மார்க்ஸியமும் காந்தியமும்" எனும் பாடல் நூல் ஒன்றைப் படைத்துள்ளார். "மார்க்ஸியத்தின் உயிர் நாடி பொருள்: காந்தியத்தின் உயிர்நாடி அருள். இரண்டும் சேர்ந்த ஒன்று. வருங்காலப் புது உலகத்தை நல்வழியில் அமைக்க வல்லது என்பது எனது கருத்து'' என்று நூலின் முன்னுரையில் ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார். நூலினுள்,

மார்க்கிஸ் முனிவன் மார்க்கம் கண்டனன்
அந்த மார்க்கம் யாக்கை போன்றது;
ஆவி நல்க மேவினன் காந்தி!
மார்க்கிஸ் காந்தி மார்க்க மூலம்
யாதென்று உலகம் ஒதுகின்றது?[119]

என்று இருவகைக் கோட்பாடுகளும் இணைந்த 'புதிய நெறி' ஒன்று உலகில் உருவாக வேண்டும் என்று திரு.வி.க. அறிவிக்கிறார்.

தாம் காண விரும்பும் யுகப்புரட்சியில் வன்முறை இடம் பெறலாகாது என்று அவர் கருதுகிறார். அது அறப்புரட்சியாக அமைய வேண்டும் என்பதை,

மறவழிப் புரட்சியை மறந்து விடுக!
அறத்துப் புரட்சியைக் கருத்துள் கொள்க![120]

எனும் பாடலில் அவர் தெரிவிக்கிறார்.

---

119 பொருளும் அருளும், பக். 43
120 மு கு.நூ, பக் 58.

தேசிய கவி சுப்பிரமணிய பாரதியார், காந்தியடிகள் நடத்திய அறப்புரட்சிக் காலத்தில் உயிர் வாழ்ந்து இருந்தால், அவரும், சாந்தமூர்த்தி காந்தி அடிகள்
அறத்துப் புரட்சி திறத்தினில் ஆற்றியதைப்[121]

பெரிதும் போற்றி இருப்பார் எனத் தோன்றுகிறது. ருஷியப் புரட்சிக்குப் பிறகு. நடைபெற்ற படுகொலைகளையும், கொட்டப்பட்ட இரத்தத்தையும் அவர் வன்மையாகக் கண்டித்து பத்திரிகையில் எழுதியுள்ளதை இங்கு நினைவுகூர்தல் நல்லது.

''ஆனால் இந்த முறைமை (பொது உடைமை) 'போர்' கொலை, பலாத்காரங்களின் மூலமாக உலகில் பரவி வருவது' எனக்குச் சம்மதம் இல்லை! எந்தக் காரணத்தைக் குறித்தும் மனிதருக்குள்ளே சண்டைகளும் கொலைகளும் நடக்கக் கூடாது என்பது என் கருத்து. அப்படியிருக்க சமத்துவம், சகோதரத்துவம் என்ற தெய்வீக தர்மங்களைக் கொண்டோர் அவற்றைக் குத்து வெட்டு பீரங்கி துப்பாக்கிகளினால் பரவச் செய்யும்படி முயற்சி செய்தல் மிகவும் பொருந்தாத செய்கை என்று நான் நினைக்கின்றேன்... 'இதற்கு நாம் என்ன செய்வோம்? கொலையாளிகளை அழிக்கக் கொலையைத்தானே கைக்கொள்ளும்படி நேருகிறது. 'அநியாயம் செய்வோரை. அநியாயத்தால்தான் அடக்கும்படி நேரிடுகிறது' என்று ஸ்ரீமான் லெனின் சொல்லுகிறார். இது முற்றிலும் தவறான கொள்கை. கொலை, கொலையை வளர்க்குமே ஒழிய, அதை நீக்கவல்லதாகாது''[122]

என்று பாரதியார் குறிப்பிட்டுள்ளமை, புரட்சிக்குப் பின் நடைபெற்ற நிகழ்ச்சிகளைக் கண்டு' அவருடைய மனப்போக்கு மாறிவிட்டது என்பதைத் தெரிவிக்கிறது.

எனினும், அவருக்கும் பின்வந்த கவிஞர்களுள் பலர், அவருடைய கவிதை வழிப்பட்ட கொள்கையைப்'

---

121 ஷ

122 பாரதியார் கட்டுரைகள்– சமூகம்– "செல்வம் –2"

பின்பற்றிப் பாடல்கள் பல பாடியுள்ளனர். தோழர் ஜீவானந்தம் அவர்கள் இயற்றியுள்ள பாடல்கள் பலவற்றில், பாரதியாரின் பொதுவுடைமை உணர்வும், யுகப்புரட்சி பற்றிய எண்ணமும் பீறிட்டு எழுகின்றன.

காலுக்குச் செருப்பும் இல்லை
கால்வயிற்றுக் கூழும் இல்லை!
பாழுக்கு உழைத்தோம்அடா–என் தோழனே
பசையற்றுப் போனோம் அடா
பாலின்றிப் பிள்ளை அழும்
பட்டினியால் தாய் அழுவாள்
வேலையின்றி நாம்அழுவோம் –என் தோழனே
வீடுமுச் சூடும் அழும்[123]

எனும் பாடல் பொதுவாகத் தமிழ்நாட்டுத் தொழிலாளியின் நிலையைப் படம் பிடித்துக் காட்டுகிறது.

பொதுவுடைமை பெறவேண்டும் உடன்
புரட்சி செய்திட வேண்டும்
வேறென்ன வேண்டும்?[124]

எனப் புரட்சி வேண்டும்' எனப் பாடிய ஜீவா. 'புரட்சி செய்வோம் வாரீர்!' என மக்களை அழைக்கின்றார்.

புரட்சி செய்வோம்! துன்பம் போகும்
புந்தி உணர்ந்திட வந்தாற் போதனை
புரிந்துடன் எழுவோமே![125]

இப்புரட்சியினால் பூக்கக் கூடிய உலகம், "சமதரும் உலகமாக" அமையும் என்பதை அவர் அறிவிக்கின்றார்:

வரும்நமது சமதரும வையம் தன்னில்
வாழ்வுண்டு; இன்பமுண்டு; வளர்ச்சியுண்டு;
பெரும்தொழில் செய்! எப்பொருளும் பொதுவில் மாறும்
பிறர் கொழுக்கத் தொழிலாளர் வாடமாட்டார்!
எழுதோழா!எழுதோழா!எழுவாய் இன்றே![126]

---

123 ஜீவாவின் பாடல்கள். பக். 21

124 மேற்படி, பக், 26

125 மேற்படி, பக்.90

126 மேற்படி, பக் 18

இதே உணர்வுடைய பாடல்கள் பலவற்றைத் தோழர் ஜீவானந்தம் படைத்துள்ளார். அப்பாடல்கள் பிற்காலச் சூழ்நிலைகளுக்கு ஏற்பக் கவிதைத் திறனின்றி இயற்றப்பட்டு இருந்தாலும், அவற்றின் உயிரோட்டத்தில் பாரதியைக் காண முடிகிறது.

கவிஞர் தமிழ் ஒளி, பாரதியாரின் சமுதாயப் பார்வையை நன்கு இனம் கண்டுகொண்டவராவர் "பாரதி – தேசிய சர்வதேசிய பாரம்பர்யத்தைத் தமிழில் நிலைநிறுத்தினான். அன்றும், இன்றும், என்றும் அதை வளர்ப்பதே என் இலக்கிய நோக்கம்"[127] என்று தம் இலக்கியப் பணியின் நோக்கத்தை அவர் தெளிவுறுத்தி யுள்ளார். மற்றும்,

பாரதியின் புதியயுகம் உலக மெங்கும்
பாட்டாளித் தோழர்களின் முயற்சியாலே
காரகன்ற வானத்து மதியைப் போலே
கண்குளிர எழுகின்ற இந்த நாளில்
வேரற்ற மரம்போன்ற ஊசலாட்ட
சீரற்ற சமுதாயம் எதற்கு? வாழ்வின்
சிறுமைகளை நொறுக்குவதில் தயங்க
வேண்டாம்[128]
வெறும் வாழ்வை வெறுத்துவிடு– வாளையேந்து

என்று புதிய சமுதாயத்தைப் பாரதியார் காட்டிய வழியில் அமைக்கப் பாட்டாளித் தோழர்களை அவர் அழைப்பதனாலும் அறியலாம்.

பொருளாதார சமத்துவத்தை நிலைநாட்டுவதற்கு மாபெரும் புரட்சி நடைபெற்றாக வேண்டும் எனும் துடிப்புமிக்க கவிஞராக தமிழ் ஒளி தோன்றுகிறார்.

---

127 வெ.கனகசுந்தரம், கவிஞர் தமிழ் ஒளியின் கவிதைகள், பக் 25
128 நீ எந்தக் கட்சியில்,பக்.16

உழுபவனே நிலத்திற்குச் சொந்தக் காரன்
உழைப்பவனே தேசத்தின் உரிமையாளன்
புழுவைப்போல் கிடந்ததுவும் பிச்சை வாங்கும்
புன்மைநிலை அடைந்ததுவும் இனிமேல்இல்லை!
அழுது துயர் அடைந்ததுவும் இனிமேல் இல்லை!
அடங்காத வேகமொடும் ஆர்வத் தோடும்
எழுந்துவா! உழைப்பவரின் போராட்டத்தில்
இரண்டின்றி கலந்துவிட இதுதான் நேரம்![129]

என்று போராட்டத்தின் மூலம்தான், தொழிலாளிகளின் துயர் நீங்கும் என்பதை அவர் அறிவிக்கின்றார். 'புரட்சியை'த் தொடங்கு எனும் வீராவேசத்தோடு கவிஞர் பாடியுள்ள பாடல்கள் பல. நம் உள்ளத்தைத் தொடுவன. அவற்றுள்

மாளிகையில் வாழ்வோரைக் கீழே தள்ளு!
மண்குடிசை தனில்வாழும் மனிதா உன்னை
ஏளனமாய் இதுவரையில் நடத்திவந்த
எதிரிகளை – பணக்கார நரிக் கூட்டத்தை
தேளனைய முதலாளி திருடர் தம்மை
சிரம்கொய்து கர்ஜித்து முரசுகொட்டி
ஆளவந்தோம் உலகத்தை ஏழைமக்கள்
அடிபணியோம்! எனச்சொல்லி கொடி
உயர்த்து[130]

எனும் பாடல், மார்க்சியச் சிந்தனையின் உந்துதலால் வெளிப்பட்டதாகும்.

தமிழ் ஒளியின் உள்ளத்தைப் பாரதியார் கவர்ந்ததைப் போன்றே ருசியப் புரட்சி பெரிதும் கவர்ந்ததில் வியப்பு இல்லை! பாரதி மார்க்சியவாதி அன்று! ஆனால், கவிஞர் தமிழ்ஒளி சுயமரியாதை இயக்கப் பின்னணியில் வளர்ந்து, பொதுவுடைமைவாதியாக மாறியவர்! எனவே. அவருடைய

---

129 மேற்படி, பக்.
130 கவிஞர் தமிழ் ஒளியின் கவிதைகள், பக். 45

எழுத்துக்களில் கம்யூனிசக் கருத்துகள் மற்றக் கவிஞர்களைக் காட்டிலும் முனைப்பாகத் தோன்றுவது இயல்பேயாகும்.

உருசியர்கள்" வாழ்நாட்டில் யாவருந்தான்
ஒன்றென்று கூறுகிறார்; எல்லோருக்கும்
பெருகுதொழில் 'கட்டாயக் கல்வி' உண்டு
'பெருஞ்செல்வர், வறியர்'எனும் பேச்சேஇல்லை!
திருடர்தான் அங்குண்டா? பிச்சைக் காரர்
தேடினுமே அங்குண்டா? இல்லை – இல்லை!
உரைக்கின்றா ரேவிதியும் உயர்வு தாழ்வும்
ஒன்றவிலை ஏனிவைகள் அந்தநாட்டில்?[131]

எனும் பாடலில், 'ருசிய நாட்டில் மலர்ந்துள்ள சோசலிச சமுதாய அமைப்பு, நம் நாட்டில் உருவாக வழி கிடையாதா?' எனும் எண்ணம் எதிரொலிக்கிறது.

பிஜித் தீவின் கரும்புத் தோட்டத்தில் கூலி வேலை செய்ய. நம் நாட்டில் இருந்து சென்ற பெண்கள் பட்ட அல்லலைப் பாரதியார் மனம் நொந்து பாடியுள்ளார்.

"பாரதி பாடிய 'கரும்புத் தோட்டத்திலே' என்ற பாடல் இவர் (தமிழ் ஒளி) நெஞ்சத்தில் எழுதிய ஓவியமாயிற்று. அதை அடியொற்றி 'வீராயி' எனும் குறுங்காப்பியமே படைத்து விட்டார்.

அதோ, செவிமடுத்துக் கேளுங்கள்! கடல் கடந்து சென்ற அந்தக் குடும்பங்களின் கதறல் தேயிலைத் தோட்டங்களிலும், மலைக்காடுகளிலும், ரப்பர் தோட்டங்களிலும் எதிரொலித்துக் கொண்டு இருக்கின்றன! சென்ற தலைமுறையில் வாழ்ந்த பாரதி குருதிக் கண்ணீர் வடித்து இதனைப் பாடியிருக்கிறான். உலகின் எந்தப் பகுதியிலும் முதலாளி வர்க்கம் ஏழைகளைக் கொடுமைப்படுத்திக் கொண்டுதான் வருகிறது. "பிஜித் தீவை' எடுத்துக்காட்டாகப் பாரதி நமக்குக் காட்டினான். அவன் பாதை நமக்குத் திறந்துவிடப்பட்டிருக்கிறது.'

---

131 தமிழ் ஒளியின் கவிதைகள், பக்.41

கவிஞரின் (தமிழ் ஒளி) இந்தக் கூற்றின் மூலம், பாரதியின் எண்ணத்தின் தாக்கம் இவருடைய ஒரு படைப்புக்கே அடியெடுத்துக் கொடுத்துவிட்டதை அறியலாம்"[132]

என்னும் ஆராய்ச்சியாளரின் மதிப்பீடு, கவிஞர் தமிழ் ஒளியின் படைப்புகளுடைய நோக்கையும் போக்கையும் புரிந்துகொள்ள உதவுகிறது.

'வீராயி' என்னும் கதைப் பாட்டின் மூலம், பொதுவுடைமைக் கொள்கைகளை இக்கவிஞர் பரப்ப முயன்றுள்ளார். மருதவாணன் எனும் கதைமாந்தனைக் கொண்டு, 'உழைக்கின்றவர் கழகம்' ஒன்றைக் கவிஞர் உருவாக்கிக் காட்டுகின்றார். "பாழ்செய்யும் தனி யுடைமை வீழ்க!" என்பதே, அக்கழக உறுப்பினர்களின் கொள்கை முழக்கமாகும். இக்கழகம் ஒரு 'தொழிற் சங்கம்' போன்ற அமைப்பு உடையதாகச் சித்திரிக்கப் பட்டுள்ளது. நடைமுறை உலகில் காணப்படும் சமுதாயச் சீர்கேடுகளைப் பற்றி, அவருடைய கதைமாந்தர்கள் ஆழச் சிந்திக்கின்றனர்.

என்ன இது ஞாலமடா! ஏழைகளும்
இங்கேதான் வாழ்வதற்குச்
சின்ன தொரு புகல்உண்டோ? சிறிதேனும்
நெஞ்சினிலே இரக்கம் உண்டோ?
தன்னலமே பெருகிற்றுத் தரணியிலே!
மக்களெலாம் வறுமை என்னும்
இன்னலிலே வதைகின்றார்! பணக்காரர்
மிதிக்கின்றார்! கொடுமை என்னே?[133]

என்பன போன்ற பாடல்கள் மக்களுடைய மனக்கொதிப்பையும், புரட்சித் துடிப்பையும் புலப்படுத்துவனவாக உள்ளன.

"இங்ஙனம் எண்ணத்தின் எழுச்சியிலும், சிந்தையின் போக்கிலும், சீர்திருத்த மனப்பான்மையிலும், பொதுவுடைமைக்

---

132 வெ.கனகசுந்தரம், மு.கு.நூல், பக். 27
133 வீராயி, பக். 40

கொள்கையிலும், ஒப்புமைக் (பாரதிக்கும் தமிழ் ஒளிக்கும்) காணலாம். கவிதைத் தொடர்களாலும், கருத்துச் சிதறல்களாலும் பாரதியின் தாக்கம் கவிஞருடைய கவிதைப் போக்கில் அமைந்து இருப்பதை வெளிப்படையாக உணர முடிகின்றது"[134]

பாரதியாரோடு நெருக்கமாகப் பழகியவர்களுள் கவியோகி சுத்தானந்த பாரதியார் ஒருவராவர். அவருடைய எண்ணப் போக்கிலும், இலக்கியப் படைப்புகளிலும் பாரதியாரின் சுவடுகள் ஆழப்பதிந்துள்ளன. அவருடைய "புதுமைப் பாடல்" எனும் நூலில், பாரதியாருடைய சமுதாய உணர்வு, பொதுவுடைமைப் புரட்சி ஈடுபாடு போன்ற இயல்புகள் நிறைந்த இசைப்பாடல்கள் பல உள்ளன. அவற்றுள், 'புரட்சி செய் மனிதா!" எனும் பாடலைப் பாரதியின் தாக்கத்திற்குச் சிறந்த காட்டாகக் காட்டலாம்.

புரட்சிசெய் மனிதா!– உரிமைப்
புரட்சிசெய் மனிதா!
வரட்சியின்றி வளமை பெருகி
மாந்தர் சாந்த ராகவாழப் (புரட்சி)

தனியுடைமைத் தருக்கிலாது
சரிநிகர் சமானராகி
இனிதுழைத்துப் பகுத்துண்டன்பும்
இன்பும் ஓங்கத் துன்பு நீங்கப்[135] (புரட்சி)

எனும் பாட்டு, 'யுகப் புரட்சி'யினைத் தூண்டுகிறது.

பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரத்தைப் பெரும் பாலோர், 'திரைப்பட இசைப்பாடல்' இயற்றிய கவிஞராகவே கருதுகின்றனர். இக்கருத்து, அவருடைய பாடல்களை முறையாகப் படித்து, சுவைத்து, அதன் அருமை பெருமைகளை அறியாதார் கூற்றேயாகும் . 'மக்கள் கவிஞர்' எனும் பாராட்டைப்

---

134 வெ. கனகசுந்தரம், மு. கு. நூ. பக். 27
135 புதுமைப் பாடல், மா.27

பெற்ற கவிஞர் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் எளிமையும், இனிமையும் நிறைந்த, கற்பனை வளமிக்க, விழுமிய உள்ளீடு வாய்ந்த கவிதைகளை இயற்றியவர் மட்டும் அன்று; சமுதாய உணர்வோடு மக்கள் நல்வாழ்விற்குரிய சமுதாயப் புரட்சியை உருவாக்க வேண்டும் எனும் துடிப்போடு கவிதைப் பணியும் ஆற்றியுள்ளார். சாமானிய மக்களும், சிக்கலான சிந்தனைச் செறிவுமிக்க கருத்துக்களைப் புரிந்து கொள்ளத்தக்க வகையில், விழிப்புணர்ச்சி பெறத்தக்க முறையில் எளிய சந்தங்களைக் கொண்டு நாட்டுப்புறப் பாடல் பாணியில் அவர் நூற்றுக்கணக்கான கவிதைகளை இயற்றியுள்ளார்.

மனிதனாக வாழ்ந்திடவேணும் மனதில் வையடா!
–தம்பி மனதில் வையடா!
வளர்ந்துவரும் உலகத்துக்கே நீவலது கையடா!
–நீ வலது கையடா!
தனியுடைமைக் கொடுமைகள்தீர தொண்டு செய்யடா!
– நீ தொண்டு செய்யடா!
தானா எல்லாம் மாறும் என்பது பழைய பொய்யடா!
–எல்லாம் பழைய பொய்யடா!
சின்னப் பயலே சின்னப் பயலே சேதி கேளடா![136]

இப்பாடல் "சமுதாயத்தில் மாற்றம் தானாக உண்டாகாது! நாம்தான் அம்மாற்றத்தை உண்டாக்க முயல வேண்டும்! அம்மாற்றத்தாலேயே 'தனியுடைமை கொடுமைகள்' ஒழியும்" எனும் தெளிவான சிந்தனைப் போக்கை வெளிப்படுத்துகிறது.

ருஷிய நாட்டில் உருவாகி இருக்கும் பொதுவுடைமை சமுதாயத்தின் சிறப்பை, பட்டுக்கோட்டையார் மக்கள் உள்ளத்தில் பதியத்தக்க வகையில் எடுத்துரைத்துள்ளார்.

புதிய ஒளிவீசுதுபார்! இமயம் தாண்டி
புன்சிரிப்புக் காட்டுதுபார் இன்பம் அங்கே!
கதை புனைந்துகூறவில்லை! கண்ணில் தோன்றும்
காட்சி யிவை ரஷ்யாவின் மக்களாட்சி!

---

136 பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் பாடல்கள், பக். 36

கொதிக்கின்ற ஏழைமனம் குமுறிற்(று) ஆனால்
கொக்கரிக்கும் ஜார்மன்னன் சிரித்து நின்றான்;
இதைக்கண் டார் லெனின் ஸ்டாலின்
இன்னும் கண்டார்
எதைக்கொண்டு தீர்ப்பதென விரதம் பூண்டார்!
விதிக்கின்ற சட்டம் ஜனஉரிமை தன்னை
வெடுக்கென்று பறிப்பதையும் எளியோர் வாழ்வை
சிதைக்கின்ற தன்மையையும் செக்கிலிட்ட
தேங்காய்போல் தொழிலாளர் துயரும் கண்டார்
உதிர்த்த கண்ணீர் துடைத்தெழுந்தார்!
துணிந்தார் அன்றே!
உதித்ததுபார் புரட்சியெனும் உரிமைச்
செம்போர்![137]

இத்தகைய கவிதைகள் மூலம், மார்க்சிய சிந்தனைகளை மக்களிடையே, எளிதில் மக்கள் உள்ளத்தை ஈர்க்கும் திரைப்படத் துறையின் மூலம் மக்கள் கவிஞர் பரப்பியுள்ளார். இந்த முறையினால், பொதுவுடைமைக் கருத்துகள் பல, மக்கள் அறியாமலே, அவர்கள் மனத்தில் ஆழப்பதிந்தன.

பாரதியாருடைய கவிதை நெறியின் தாக்கம் தமிழகக் கவிஞர்களுடைய உள்ளத்தை மட்டும் கவரவில்லை. கடல் கடந்த நாடுகளில் வாழும் தமிழருடைய உள்ளங்களையும் ஈர்த்துள்ளதைக் காணுகின்றோம். அவற்றுள் ஸ்ரீலங்கா வில் வாழும் தமிழ்க் கவிஞர்கள் இடையே பாரதியின் கவிதைகள் பெரிய பாதிப்பை உண்டாக்கியுள்ளன.

ஈழத்தின் மகாகவி, முருகையன் போன்றவர்களின் படைப்புகளில், பாரதியின் செல்வாக்குக் கணிசமான அளவிற்குக் காணப்படுகிறது. முருகையன் கவிதைகள், ஈழத்தின் கவிதைப் போக்கில் ஒரு புதிய திருப்பத்தை உண்டாக்கியதாகக் கூறுவர். "பாரதியார் செய்த அதி முக்கியமான புதுமைகளில் ஒன்று. கவிதை மூலம் தனது

137 பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் பாடல்கள்,

சமூக மக்களுடன் உறவாடியதே. நமது ஈழத் தமிழகத்தில் அந்த மரபை வளர்த்து வரும் கவிஞரின் முன் வரிசையில் முருகையனுக்கு ஆசனம் உண்டு"[138] எனும் கலாநிதி (டாக்டர்) க. கைலாசபதி அவர்களுடைய கணிப்பு சிறந்ததோர் அறிமுகமாக அமைகிறது. அவர் 'பாரதிவகுத்தபாதை','பாரதியார் பாதையிலே', 'நம் பாரதி' எனும் கவிதைகளைப் படைத்துள்ளார். "உலகிதை மாற்றி ஓர் உன்னதமாகிய கற்பனையின் பொலிவினை ஏட்டிற் பொறித்துச் சிரிக்கின்ற பொற்கவிஞன் பாரதி" என முருகையன்,பாரதியாரைப் போற்றுகிறார். பாரதி தோன்றியதனால், தமிழ்க் கவிதை புத்துயிர் பெற்றது என்பதை.

சென்றுசென்று ஒன்றாகித் தேய்ந்தபழைய
தெருவழியே
குன்றிக் குலைந்து தளர்நடை இட்ட தமிழ்க்கவிதை
இன்று தலைநிமிர்ந் திற்றென்பது உண்மை![139]

எனும் அடிகளில் தெளிவுறுத்துகிறார். இத்தகைய ஈடுபாடு கொண்ட கவிஞர், அன்றாட வாழ்க்கையில் மக்கள் படும் அல்லல்களையும், துன்பங்களையும் யாழ்ப்பாணத் தமிழில் சித்தரித்துள்ளார்.

எல்லாரும் வாழவேண்டும்; எங்கும் மிகுந்த
இன்பம் விளையவேண்டும்; அன்றி, ஒருவன்
இல்லானும் இல்லை! என்னும் நிலைதன்னையே
இயற்றி முடித்துவிடல் ஏற்ற தல்லவோ?
உல்லாச வாழ்வுசிலர்க் கென்னும் இன்றைய
ஒவ்வா நியதி சரிந்தொழிந்திடவும்
சொல்லாலே சொல்ல இயலாத வகையில்[140]

எனப் 'புதிய உலகை' உருவாக்க எழுச்சி கொள்ளுமாறு கவிஞர் வேண்டுகிறார்.

ஈழத்தின் சிறப்புமிக்க மற்றொரு கவிஞர் 'மஹாகவி'

---

138 நெடும்பகல் (முருகையன் கவிதைகள்) முன்னுரை.பக். iv
139 முருகையன், நெடும்பகல், பக். 43.
140 ஷ, பக். 5

எனும் புனை பெயர் உடையவர் ஆவார்."மஹாகவி ஒரு புதிய சந்ததியை விருத்தியாக்கும் ஓர் காலகட்டமாகிறார். நாம் இன்னமும் பாரதி யுகத்தில் இருக்கிறோம் என்று சொல்லுவது தவறு! பாரதி பரம்பரையின் இறுதித் தளிர்கள் பழுத்துக் கொண்டு இருக்கின்றன. பாரதி ஒரு யுகசந்தி என்பது மெய்யே. ஆனால். அந்த யுக சந்தி பிரிந்து விட்டது. அதன் ஒரு கிளையே பிச்சமூர்த்தி என்றால், அதன் மறு கிளை மஹாகவியே. பாரதி வளர்த்த சில கவிதைப் பண்புகளின் தோல்வியே பிச்சமூர்த்தி என்றால், அத் தோல்வி நிகழாமல் அதனை இன்னுமொரு கட்டத்திற்கு உயர்த்திய வெற்றியே மஹாகவி எனலாம்"[141] எனும் ஸ்ரீலங்காவின் திறனாய்வாளர் தெரிவித்துள்ள கருத்துரை. மஹாகவியை இனம் கண்டுகொள்ள உதவுமென நம்புகின்றேன்.

மனிதர் இடையே காணப்படும் 'தீண்டாமைக் கொடுமையைச் சித்திரிக்கும் அவருடைய கவிதை "தேரும் திங்களும்" என்பதாகும்.

தேரினை இழுக்க ஓர் இளைஞன் வந்தான்; தேரினை இழுக்க வடத்தினைத் தொட்டான். உடனே 'சாதி வெறியர்' அவனை அடித்துக் கொன்றனர். கொன்றவர்கள் விண்வெளிக்குச் சென்று வந்த மனிதனின் சகோதரர்களே; தங்கள் சகோதரனாகிய தீண்டப்படாதவனைக் கொன்று விட்டனர். கவிஞர் வியக்கின்ற இது என்ன விந்தை?" எனக் வகையில் படைத்துள்ள கவிதை, பாரதியாரின் பரம்பரையைச் சேர்ந்தவர் இக்கவிஞர் என்பதைத் தெரிவிக்கிறது.

வந்தான், அவன்ஓர் இளைஞன்
மனிதன்தான்.
சிந்தனையாம் ஆற்றற் சிறகுதைத்து வானத்தே
முந்தநாள் ஏறி முழுநிலவைத் தொட்டுவிட்டு
மீண்டவனின் தம்பி !
மிகுந்த உழைப்பாளி!"

என அவனை அறிமுகம் செய்து வைக்கிறார் கவிஞர்.

---

141 சண்முகம் சிவலிங்கம், "கோடை" பக்.72

இவ்வாறு மனிதர் இடையே நிகழும் பகுத்தறிவுக்குப் பொருந்தாத சமுதாயச் சீர்கேட்டை மஹாகவி எள்ளி நகையாடுகிறார்: "கவலையிடை உய்யவிழையும் உளமும் உடையவராக'ப் பாடல்கள் பலவற்றை இவர் இயற்றியுள்ளார். 'சிறு புல்' எனும் தலைப்பில் அமைந்த இவருடைய பாடல் ஒன்றை, ஆங்கில மொழியின் உலகப் புகழ் வாய்ந்த கவிஞர் டி. எஸ். எலியட்டின் (T. S. Eliot). "தரிசு நிலத்தோடு" ("The Waste Land") ஒப்பிட்டுப் போற்றுவர் ஈழத்துத் திறனாய்வாளர்.

தமிழ் ஈழத்தின் புரட்சிக் கவிஞன் காசி ஆனந்தன் என்பவராவர். பாரதியின் வழியிலே வந்தவன் என்பதை,

உன்னை வணங்கி நின்ற
பாரதியின் பின்னொருவன் – நின்தாள்
தன்னை வணங்கு கின்றேன்[142]

எனத் தமிழ்த் தாயிடம் தம்மை அறிமுகப்படுத்திக் கொள்ளுவதால்அறிகிறோம்.இக்கவிஞரிடம்'புரட்சி'உணர்வும் 'விடுதலை' வேட்கையும் பாரதியாரிடம் காணப்படுவதைப் போல் ஒரு வகை 'வெறியாக' 'சத்திய ஆவேசமாக' வெளிப்படுவதைக் காணுகிறோம்.

'எத்தகைய இடர் வந்துற்ற போதிலும், தாய்த்திரு நாட்டின் (தமிழீழ நாட்டின்) துயரைப் போக்கத் தயங்கோம்' எனும் கருத்தை வெளிப்படுத்தும் ஆனந்தனின் பாடல் இங்குக் குறிப்பிடத்தக்கதாகும்.

பட்டினி கிடந்து பசியால் மெலிந்து
பாழ்பட நேர்ந்தாலும் – என்றன்
கட்டுடல் வளைந்து கைகால் தளர்ந்து
கவலைமிகுந்தாலும் – வாழ்வு
கெட்டு நடுத்தெரு வோடு கிடந்து
கீழ்நிலை யுற்றா லும் – மன்னர்
தொட்டுவளர்த்த தமிழ்மகளின் துயர்
துடைக்க மறப்பேனோ?[143] எனும் பாடல்.

---

142 காசி ஆனந்தன் கவிதைகள், பக். 101
143 காசி ஆனந்தன் கவிதைகள், பக். 24

இதந்தரு மனையின் நீங்கி
இடர்மிகு சிறைப் பட்டாலும்
பதந்தரு இரண்டு மாறிப்
பழிமிகுந்து இழிவுற் றாலும்
விதந்தரு கோடி இன்னல்
விளைத்தெனை அழித்திட் டாலும்
சுதந்திர தேவி! நின்னைத்
தொழுதிடல் மறுக்கி லேனே "

எனும் பாரதியாரின் 'சுதந்திர தேவியின் துதிப் பாடலை அடியொற்றி இயற்றப்பட்டு இருப்பதை அறியலாம். பாரதியாரின் "இந்திய தேசிய உணர்வு', ஆனந்தனிடம் தமிழ்த் தேசிய உணர்வாக' வடிவெடுத்துள்ளமை சிந்திக்கத் தக்கதாகும்.

கவிஞர் ஆனந்தனின் விடுதலை வேட்கை,

கடமுட என ஒரு கவிபாடி
கொடியவர் பொடிபட வெடியாதோ?
திடுதிடு மென ஒரு படையணி
அடிமைகள் படுதுயர் துடையாதோ?
மடமட எனஒரு நொடியினில்
இடுகர விலங்குகள் ஒடியாதோ?
கொடியொடு படையொடு முடியொடு
தமிழின விடுதலை கிடையாதோ?[144]

எனும் கவிதையில் வீறிடுகிறது. இப்பாடல், பாரதியின்

"பறைய ருக்கு மிங்கு தீயர்
புலைய ருக்கும் விடுதலை

எனும் "விடுதலைப் பாடலையும்". "புதிய ருஷியாவை"யும் கருத்தமைதியாலும், ஒலிநயச் சிறப்பாலும் ஒத்துள்ளன.

இவற்றைப் போன்று பாரதியாரின் 'முரசு' பாட்டின் சாயலை ஆனந்தனின் 'முரசொலி'[145] எனும் கவிதையில் காணலாம். மற்றும் ஆனந்தனின் 'புரட்சி' வெறி,

---

144 காசி ஆனந்தன் கவிதைகள், பக். 30
145 மேற்படி, பக்.49

நெருப்புப் பழம் ஒன்று
நெஞ்சில் கனிகிறது .....;[146]

எனும் பாடலில் வெளிப்படுகிறது. பாரதியிடம் காண இயலா 'வன்செயல்' துடிப்பு, ஆனந்தனை ஆட்கொண்டுள்ளது. இது பாரதியாருக்குப் பின் வந்த மறுமலர்ச்சிக் கவிஞர்களிடமும், பொதுவுடைமைப் புரட்சி நாடும் பாவலரிடமும் காணப்படும் பண்பாகும்.

கோவை அய்யாமுத்து எனும் பழம்பெரும் தேசபக்தர் பாரதியின் புரட்சி சிந்தனையுடைய கவிஞராவார். " 'ஈதல் அறம்' என்று நம் முன்னோர் உபதேசம் செய்தனர். அதனால், உலகில் வறுமை ஒழிந்ததா? 'இல்லார் என்போர் இருந்தால் அன்றோ ஈத்தலும் இரத்தலும் இருக்கும். ஈசன் இவ்வுலகை எல்லோர்க்கும் ஒன்றாய் ஈந்துள்ளான். எனவே, இவ்வுலகில் ஈவதற்கு என ஒருவகை மக்கள் ஏன்? 'ஈதல் அறம்' எனும் அறவுரையாருக்கு வேண்டும். அதனால், இதுவரை என்ன பயன் உண்டாயிற்று? இன்னும் அந்த 'உதவாக்கறை கொள்கையை'ப் பேசுவதால் பயன் உண்டாகுமா?" எனும் போக்கில் புத்துலகச் சிந்தனையை வாரிவழங்கும் அய்யாமுத்து,

உடைமை பொதுவெனல் கடமை யாம்என
உலகம் அறிந்திட ஓதுவாய் தினம்

[147]என அறிவிக்கின்றார்.

மேலும் "தேசப்பற்று, மொழிப்பற்று, சமயப்பற்று எனும் பல முழக்கங்களைச் செய்வதனால் என்ன பயன்? அதனால் மனித இனத்தினை வாட்டி வதைக்கும் கொடிய நோயாகிய வறுமை நீங்கிவிடுமா?" எனவும் அவர் கேள்விக்கணைகளைத் தொடுக்கிறார்.

---

146 மேற்படி, பக். 104
147 கோவை அய்யாமுத்துப் பாடல்கள், பக்.12

தேசமே பெரிதெனச் செப்புவ தாலும்
திராவிடம் தமிழ்எனும் கூச்சலி னாலும்
பாகிஸ் தான்எனப் பகர்வதி னாலும்
பாரினில் வறுமை பகர்வொணா அடிமையும்
மான்றிடா என்பதை மனத்திலே கொள்வீர்![148]

இத்தகைய தீவிர சிந்தனையும், பொதுவுடைமை உணர்வும் தேசியப் போராட்டத்தில் கலந்து கொண்ட விடுதலை வீரர்களுக்குப் பாரதியின் தாக்கத்தால் உண்டானவையாகும்.

கவிதையைத் தம்முடைய கைவாளாகக் கொண்டு, சமுதாயப் புரட்சியைக் கட்டியங்கூறி கே.சி.எஸ். அருணாசலம் வரவேற்கிறார்.

வர்க்கப் போராட்ட ஆயுதம் ஏந்துங்கள்!
வானைப் பிளக்கிறப் போர்க்கோலம்
பூணுங்கள்![149]

என்பது கவிஞர் அருணாசலத்தின் புரட்சி அழைப்பாகும். இவருடைய கவிதைகளில் எள்ளலும் நகைச்சுவையும் இணைந்து ஏறு நடை போடும்.

இத்தகைய எண்ணப் போக்கொடு மரபுவழியில் கவிஞர் பலர் இன்றும் புரட்சிக் கனல் தெரிக்கப் பாட்டியற்றி வருகின்றனர்.

புதுமைக் கவிஞரும் புரட்சியும்

புதுக்கவிதை படைக்கும் கவிஞர்கள் இக்காலத்தில் பெருகியுள்ளனர். தற்சமயம் 'புதுக்கவிதை மரபு' ஒன்று நன்கு உருவாகியுள்ளதைக் காணுகின்றோம். இக்கவிதைகளைப் படைக்கும் புதுமைக் கவிஞர்களும் பாரதியின் தாக்கத்திற்கு ஆட்பட்டவர்களாகவே தோன்றுகின்றனர். "வசன கவிதை' எனும் புதுவகைச் செய்யுளை, அன்று பாரதியார்

148 மேற்படி, பக்.38
149 கவிதை என் கைவாள், பக். 48

'பரிசோதனை'யாகப் படைத்துப் பார்த்தார். காலப்போக்கில், அம்முயற்சி பெருகியது. இதைப் பற்றிய விளக்கத்தைப் பின்னர்க் காண்போம். இங்குப் புதுக்கவிதை இயற்றும் கவிஞர்கள் எவ்வாறு பாரதியின் சமுதாய உணர்வினைப் போற்றி வருகின்றனர் என்பதை அறிய முயலுவோம்.

மரபுக் கவிதையின் வழிவந்த சிற்பி, மீரா, தமிழன்பன், மேத்தா, புவியரசு, சக்திக்கனல், ஞானி, இன்குலாப், அக்னிபுத்திரன் போன்ற இளங்கவிஞர்கள் "புதுக்கவிதையை மக்கள் கவிதையாக்க" முனைந்தனர். பல்வேறு சூழ்நிலைகளில், புதுவுலகைப் படைக்கத் துடிக்கும் அவர்களுடைய கவிதைகள், 'புதிய சமுதாயத்தைப் படைக்க வாரீர்! உலகீர்!' என மக்கள் அனைவருக்கும் அழைப்பு விடுக்கும் அரிய கவிதைகளாக அமைந்துள்ளன. சமகாலத்திய சமுதாயத்தின் சீர்கேடுகளை 'நையாண்டி' செய்யும் முறையில், பல கவிதைகள் இயற்றப்பட்டுள்ளன. ஆனால், அதே சமயத்தில் அக்குறைபாடுகள் எவ்வாறு பயனற்றவையாக – பிணங்களாக உள்ளன?" என்பதை எடுத்துரைக்கவும். அவைதயங்கவில்லை!

"கட்டுப்பாடு இல்லாத தனிமனித சுதந்திரமே மனித வாழ்க்கையின் குறிக்கோள்" என்பது இக்கவிஞர்கள் போற்றும் இலட்சியமாகும். பெரும்பாலான கவிஞர்கள் வரலாற்று உணர்வோடு, புறவுலக இயக்கத்தின் இன்றைய போக்கினை அறிந்து, அதனோடு இணைந்து முன்னேறத் துடிக்கின்றனர்; தங்கள் கவிதைப் பணியின் மூலம், சமுதாயத்தை உலகை முன்னேற்றவும் முயலுகின்றனர். இந்த முயற்சியில் முளைத்த, 'சமுதாயப் புரட்சிக்கு' வழிகாட்டும் சில கவிதைகள் இங்குக் குறிப்பிடத்தக்கன.

மனிதனைப் பாடுவேன்! மனிதனைப் பாடுவேன்! எனத் தொடங்கும் கவிஞர் மீரா,

> உங்களைக் கேட்கின்றேன்! உண்மையில் மனிதன்
> வாழுகின்றானா? இல்லை... வாழ்வதாய்ப்
> பொய்ம்மை நாடகம் போடுகின்றானா?[150]

---

150 மூன்றும் ஆறும், பக். 65

என்று வினவுகிறார். இதன் மூலம். மனிதனின் அவல வாழ்வினைப் பற்றிச் சிந்திக்கத் தூண்டுகிறார்.

இப்படி
ஒருவன் உழைக்கமற் றொருவன் பிழைக்க
இருப்பதா வாழ்வு? இதுவா வாழ்வு?[151]

எனக் கேள்விகளுக்கு மேல் கேள்விகளாகக் கவிஞர் அடுக்கிக் கொண்டே போகிறார்! இறுதியில்

என்றைக்கு,
ஏழ்மை வறுமை இடுகாடு ஏகுமோ?
சத்தியம் பூக்குமோ? சமத்துவம் சிரிக்குமோ?
இலட்சிய வெறிகொண்டு இளைஞர் பட்டாளம்
புதிய உலகுக்குப் பூசை போடுமோ?
பழைய பொய்ம்மைகள் பயந்தோ டிடுமோ?
தன்னலம் மறந்து தாயகம் காத்த
மறவர் படைக்கு மரியாதை கிடைக்குமோ?
தியாக உணர்வுத் தீக்குளித் திட்ட
வீரருக் கெங்கும் விழாக்கள் நடக்குமோ?
அன்றே,
மனிதன் பிறக்கும் நாள்! மனிதன் வாழும் நாள்!
அன்றே,
மனிதனைப் பாடுவேன்! மனிதனைப் பாடுவேன்!
மனிதனைப் பாடுவேன் மனமகிழ் வோடே![152]

என அறிவிப்பதும், புத்துலகைக் காணத் துடிக்கும் கவிஞரின் மனப்போக்கை வெளிப்படுத்துகிறது.

'சிற்பி' எனும் கவிஞர், 'காலச் சிறகு' எனும் கவிதையில் 'பாரதியை'ப் படம்பிடித்துக் காட்டுகிறார்.

---

151 மூன்றும் ஆறும், பக். 68

152 மேற்படி, பக்.70

உன் கவிதைகள்
அக்கினிக் குஞ்சுகளுக்காக
அடைகாத்த முட்டைகள்
அதனால்
உன் சொற்களுக்கு
ஜோதிச் சிறகுகள்
வார்த்தைகளில்
வர்ண வியப்புகள்
பொருளில் ஒரு
பொன்மய மெருகு
சுவையில்
காலமறியாத தித்திப்பு[153]

எனப் பாரதியாரின் பாநலத்தைப் பட்டியல் இட்டுக் காட்டுகிறார். யுகப் புரட்சியின் சில நிலைகளாகப் பாரதிக்குப் பின் உலகில் தோன்றியுள்ள மாற்றங்களைக் கவிஞர் உணர்ச்சி செறிவுடன் சுட்டிக் காட்டுகிறார்.

உலகம் புரட்சிகளால்
புளகமணிந்த போது
சயனச் சமாதியில்
ஆச்சரிய முழக்கமிட்டாய்![154]

என்று ஆப்பிரிக்க நாட்டின் நிலையை நினைவுபடுத்துகிறார். மேலும்,

ஐரோப்பாவின்
    ரோஜாக் கனவுகளும்
போஸ்டனின்
    தேநீர் விருந்தும்
    சைபீரியத்துப்
பைன் மரங்களிடையே
    ரீங்காரமிட்ட
உலக சங்கீதமும்

153 புன்னகை பூக்கும் பூனைகள், பக். 116–7
154 சர்ப்ப யாகம், பக் 106

ஆசியக் கிழக்கில்
கண்ணீர்க் களங்க மழிந்து...
உன்னைத் தொடாமல்
போர்வைக்குள்....
அடிமைப் போர்வைக்குள்
புதைந்து போனாய்![155]

எனும் முறையில் ஆப்பிரிக்காவில் உண்டாகியுள்ள 'விழிப் பினை'ச் சித்தரித்துள்ளார். இங்கே, பாரதியாரின் 'சர்வ தேசிய' உணர்வும், 'புரட்சியை'ப் போற்றி வரவேற்கும் மனப்போக்கும் வெளிப்படுவதைக் காணலாம்.

கவிஞர் மு மேத்தா அனைத்துலக சகோதரத்துவ உணர்வோடு மனித நேயத்தின்' மாட்சியைக் 'கண்ணீர்ப் பூக்களாகச்' சித்திரிக்கும் பான்மை

எங்கெல்லாம்
மானுடம்
காயம் படுகிறதோ
அங்கெல்லாம்
பூக்கும்
சகோதர சோகங்களின்
சர்வதேசியப் பூக்கள்
இவைதான்[156]

எனும் பாடற் பகுதியால் புலனாகின்றது. இப்பாடலில் பாரதியாரின் 'சத்திய ஆவேசம்' 'கண்ணீர்ப் பூக்களாக'க் கனலைக் கக்குகிறது.

'வெளிச்சம் வெளியே இல்லை' எனும் கவிதையில்
எதிர்காலத்தை
எழுதுவதற்கு
உன்
மனதில் பட்ட
காயங்களில் மைதொட்டுக் கொள்![157]

---

155 சர்ப்ப யாகம், பக் 106–107

156 கண்ணீர்ப் பூக்கள், பக் 3

157 வெளிச்சம் வெளியே இல்லை..., பக். 54

எனப் புதுவுலகைக் காண அகத்தெழுச்சி பெறுமாறு மேத்தா மக்களைத் தூண்டுகிறார். அடுத்துத் தன்னம்பிக்கையோடு அதில் ஈடுபடுமாறு அவர் அறிவிக்கிறார்.

போர்வைகளில்
ஏன் இப்படிப்
புதைந்து கிடக்கிறாய்?
விழித்து நீ
எழுந்தால்
விலங்குகளே நொறுங்கும்![158]

எனத் தூங்கிக் கிடக்கின்ற சமுதாயத்தை, பாரதி போல் தட்டி எழுப்புவது – வெளிச்சம் வெளியே இல்லை என்பதை நன்றாகவே தெளிவுபடுத்துகிறது!

'ஈரோட்டுத் தமிழன்பன்' எனும் புனை பெயரில் கவிதை உலகிற்கு அறிமுகமான மரபுவழிக் கவிஞர்,இன்று 'புதுக் கவிதை' உலகில் புதுவழி காட்டும் புலவராகப் பொன்றாப் புகழ் பெற்றுவிட்டார்!

இதோ....
புரட்சி அருவிகள்
பூபாளம் பாடிப்
புறப்படு கின்றன!
சமூகம் என்னும்
சமவெளி மீது...
சமதரும ரதியின்
அலையுதடுகள்
வறுமை ஒழிகவென முழங்குகின்றன[159]

எனும் பாடல், 'புரட்சிக்கு' நல்வரவு அளிக்க முயலுவதைக் காணலாம். வருங்கால உலகம்.

---

158 ஷெ பக் 54.
159 தீவுகள் கரையேறுகின்றன, பக்.15

உழைப்பவர்க்கே வாழ்வென்று
உங்கள் தலைமுறை
எழுதுகின்ற சாசனத்தை
எடுத்துவந்து காட்டுங்கள்![160]

என்று பாரதியின் பாணியிலேயே 'சாசனம்' வரைகிறார்.

'மனிதன் உரிமையோடு எங்கும் வாழவேண்டும்' என்பதை,

சுதந்திர மனிதன்
பதிக்கும் சுவடுகளே!
மண்ணின் மார்பில்
மாணிக்கப் பதக்கங்கள்![161]

என நயமிகு சொற்களால் கவிஞர் படைத்துக் காட்டுவது கவிஞரின் படைப்பாற்றலை வெளிப்படுத்துகிறது.

"நாட்டுக்கு நல்லது காண, 'உண்மை தெரிந்து சொல்வேன்" என்ற உயர்ந்த கொள்கையை இலட்சிய நோக்காகக் கொண்டு இருந்தார் மகாகவி பாரதியார். அவர் காட்டிய வழியில், கவிஞர் தமிழன்பன் ஏறுநடை போட்டு முன்னேறிச் செல்லுகிறார். அவருடைய கவிதைகளில் எடுத்துரைக்கப்படும் கருத்துகளில் புதுமை வேகமும், புரட்சி மணமும், காலத்தின் தேவையும் எதிரொலிக்கின்றன. 'புதிய சுருதியில் ஒரு பூபாளம்' எனும் பாடலில்,

பாடுபடுபவன் பாதங்களில்
லாடம் அடிப்பது
இனி நடக்காது – அவன்
தூக்கிய திருவடிகளில்
ருத்திர தாண்டவம்
சூல் கொண்டுவிட்டது

---

160 மேற்படி, பக். 43
161 மேற்படி,பக்.52

இனி
தாயின் கருவறைச் சுவரிலேயே
தனியுடைமை ஒழிக
என்று
எழுதிவிட்டுக் குழந்தை
வெளியே வரும்
மதங்களின்
மகுடங்களை உருக்கி,
மனங்களைத் திறக்கும்
சாவிகள் செய்வோம்!
மனிதமே – இனி
மதம்![162]

எனப் 'புதிய உலகம்' எவ்வாறு இருக்கும் என்பதைத் தமிழன்பன் கோடிகாட்டுகிறார்.

பாரதியாரின் படைப்புகளால், 'புதிய தமிழ்' பிறந்தது. என்பதை.

பாரதி
ஆண் கர்ப்பம் தரிக்கும்
அதிசயம் உன்னிடம் நடந்தது
ஆம்!
மசக்கை இல்லாமல்
மாவடு தின்னாமல் – தமிழ்
மாதாவையே
பெற்றெடுத்த
கரிசல்தாய் – ரொம்பக்
கரிசனத் தாய் நீ![163]

எனப் பாரதியாரைத் தாயாகக் காட்டுந்திறன் போற்றத் தக்கதாகும்.

சமுதாயப் புரட்சியில் பேரார்வம் கொண்ட கவிஞர்களுள் இன்குலாப் முன்னணி வீரராவார். அவருடைய "எழுக மனிதனே!" எனும் கவிதை, புரட்சிக்கனல் தெறிப்பதாகும்.

---

162 அந்த நந்தனை எரிச்ச நெருப்பின் மிச்சம். 4. 56–57.
163 அந்த நந்தனை எரிச்ச நெருப்பின் மிச்சம். பக். 116

உன்
சிறகசைந்தாலே, கிரகங்கள் சிதறுமே!
இந்தத்
தூசுமேடு உனக்கொரு பாரமா?
எழுக.... எழுக...! [164]

மனிதனுடைய பேராற்றலில் அசைக்க இயலாத நம்பிக்கை கொண்ட கவிஞர், இப்பாடலின் மூலம். மனிதனைப் புரட்சி செய்யுமாறு உசுப்பி விடுகிறார்.

'புரட்சியால் வன்முறைகளும், படுகொலைகளும் மனித குலத்தைப் பாழ்படுத்துகின்றனவே' எனும் எண்ணப் போக்குடன் 'புரட்சியை' எதிர்ப்பவர்களுக்கு, மாவோவின் சித்தாந்தத்தைத்தம்சொற்களால்இன்குலாப்எடுத்துரைக்கிறார்.

அகிம்சை என்பது – ஆண்டைவர்க்கம்
உழைப்பாளரை ஏமாற்றும் போலிமந்திரம்
'புரட்சி' என்பது நடிக்கத் தெரியாத
உழைக்கும் வர்க்கத்தின் ரத்தப் பிரகடனம்!
உழைக்கும் வர்க்கத்தின் பலாத்காரப் புரட்சிக்கு
மனிதாபிமானமே ஆதார சுருதி ![165]

இங்கே, பாரதியின் பாதையில் பாதி வழிவந்த கவிஞர் கிளைவழியில் செல்லத் துணிவதைக் காணுகின்றோம்.

'மீறல்' எனும் கவிதையில், ''மனிதனின் உள்ளத்து உணர்ச்சிகளைக் காலம் எல்லாம் அடக்கியொடுக்க இயலாது; ஒரு கட்டத்தில் அடக்குமுறையை அழிக்கும் 'பூகம்பம்" தோன்றியே தீரும். அதை யாராலும் தடுக்கவோ, அடக்கவோ இயலாது! அதையே 'புரட்சி' என்பர்" எனும் கருத்தை உள்ளடக்கமாக்கி,

சித்தாகாசப் பெருவெளியில்
பறக்கவிருக்கும் கவிதைக்குப்
புறப்படும் வரைக்குமே
விலங்கிட முடியும்![166]

---

164 வெள்ளை இருட்டு, பக்.5
165 வெள்ளை இருட்டு, பக். 70
166 மீறல், பக். 10

எனும் பாடல் வாயிலாகப் புவியரசு அறிவுறுத்துவதும் இங்கே கருதத்தக்கதாகும்.

பிரசார நோக்கில் முனைப்பான கவிதைகள் இயற்றுவதில் வல்லவராக கவிஞர் தணிகைச் செல்வன் விளங்குகிறார். அவரிடம் பாரதியாரின் பாதிப்பு சமுதாயப் புரட்சி அளவிலேனும் வெளிப்படுவதைப்

'பூபாளம்' எனும் அவருடைய கவிதைத் தொகுப்பில் காணுகிறோம். "பாரதிக்குப் பின் விடுபட்டுப் போயிருந்த ஒரு கவிதை நெறி ('சனரஞ்சகம்') மீண்டும் இக்கவிஞரின் படைப்புகளில் உயிர் பெறத் தொடங்கியுள்ளமை தணிகைச் செல்வனுடைய கவிதைகளை மேற்போக்காக நோக்கும் பொழுதே எளிதில் புலனாகும்."[167]

'வாலிப வெள்ளம் வருகிறது' எனும் கவிதையில்,

இளைஞர்கள் நாங்கள் இருபது கோடி!
இந்திய நாட்டின் இருதய நாடி!
தலைமை ஏற்றிடுவோய் எல்லாத் துறையும்!
தடையைத் தகர்த்துச் சாதனை புரிவோம்!
(வாலிப)
நிலமும் தொழிலும் ஒருசிலர் கையில்!
நிதியும் அரசும் அவர்களின் கையில்!
என்றிடும் நிலைமை முடிகிற வரையில்!
எங்கள் திருவிடம் வர்க்கப் படையில்!
(வாலிப)[168]

எனும் அடிகள், வர்க்கப் போராட்டத்தின் வழிப்பட்ட சமுதாயப் புரட்சியைத் தோற்றுவிப்பது இளைஞர்களுடைய கடமை என்பதை அறிவிக்கிறது. சமுதாயப் புரட்சியாலேயே, இன்றைய இந்தியாவின் இன்னல்களை ஒழிக்க இயலும் என்பதில் தணிகைச் செல்வன் அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டுள்ளார். அவருடைய இந்தக் கொள்கைப் பற்றுப் பலவகையாக வெளிப்படுத்தப்படுகிறது.

---

167 பூபாளம், பக். 15
168 மேற்படி, பக். 34

.....ஆளும்
செருக்கடக்க வேண்டுமெனில் வர்க்கச் சீற்றம்
செருக்களத்தைச் சிவப்பாக்கிப் பாய வேண்டும்!

இத்தகைய அப்பட்டமான கட்சி வயப்பட்ட கொள்கை வெளிப்பாட்டைப் பிற கவிஞர்களிடம் காண இயலவில்லை.

இதுவரையில் சுப்பிரமணிய பாரதியாரின் சமுதாயப் பார்வையை, உணர்வை, கவித்திறனை, செயலூக்கத்தைத் தம் காலச் சூழலுக்கேற்பப் போற்றிப் பின்பற்றும் 'புரட்சி' நாடும் கவிஞர்கள் சிலருடைய படைப்புகளின் வீறார்ந்த உணர்ச்சிப் பெருக்கை, உள்ளத் துடிப்பை, இலட்சிய வேட்கையை ஓரளவிற்குக் கண்டோம். இந்த அணியில் சேர்க்கப்பட வேண்டிய 'இளைய தலைமுறையினர்' பலர் உள்ளனர்.

பொதுவாகப் பாரதியின் சமுதாய உணர்வை அழகியல் நுட்பத்தோடு வெளிப்படுத்துவோர் இந்த அணியில் விரல்விட்டு எண்ணக் கூடியவர்களாகவே காணப்படுகின்றனர். புதுக்கவிதை படைப்போருள் மூன்றில் இரண்டு பங்கினர், மார்க்சியக் கோட்பாட்டை மையக் கருவாகக் கொண்டே தம் கவித்திறத்தை வெளிப்படுத்தி வருகின்றனர். இவர்களுடைய கவிதைகளுள் பாரதியின் பாதிப்பு மெலிந்த குரலிலேயே ஒலிக்கிறது. ஆனால், பிற்காலச் சூழலுக்கேற்ற இயல்புகள் முனைப்பாக உள்ளன. இவர்களுள் பெரும்பாலோர், பரந்து பட்ட 'பாடு பொருள்' பற்றிய அறிவுடைய அறிஞர்களாக விளங்குகின்றனர். ஆனால், பாரதிக்கு இருந்த அஞ்சா நெஞ்சம். விளைவைப் பற்றி எண்ணாத கவலையற்ற மனப்போக்கு, மனிதநல நாட்டம் போன்ற தீவிர இயல்புகள், இக்காலக் கவிஞர்கள் இடையே ஓரளவிற்குத்தான் காணமுடிகிறது.

இக்காரணங்களால், பெரும்பாலோருடைய 'புரட்சிகீதங்கள்', வெறும் 'மந்திர உச்சாடனங்களாக', 'முழக்கங்களாக'வே தோன்றுகின்றன. தேச விடுதலையை வேண்டிப் பாடிய தேசியக்கவி பாரதியைப் போலவோ, சமுதாய சீர்திருத்த

இயக்கத்தில் தம்மை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்ட புரட்சிக் கவிஞரைப் போலவோ, தமிழீழ விடுதலைக்காகவே தம்மை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்ட விடுதலைக் கவிஞர் காசி ஆனந்தனைப் போலவோ, பொதுவுடைமைப் புரட்சிக்குத் தலைமையேற்கும் தனிப்பெருங் கவிஞன் இன்னும் தமிழ் மண்ணில் தோன்றவில்லை! இதற்குரிய காரணம் யாதென்பதை ஆராய்வோமானால், முழுமையாகத் தம்மை இந்தப் பணிக்கு 'அர்ப்பணித்துக்' கொள்ளும் துணிவு, நம்மிடையே தோன்றவில்லை என்பது புலனாகாமல் போகாது.

4

சிந்துக்குத் தந்தை

பாரதியாருடைய பாடல்களின் உள்ளீடாக உள்ள 'பாடுபொருள்' பல வகையில் புதுமையானவை. அவர் கடவுளைப் பாடினார்; காதலைப் பாடினார்; இயற்கையைப் பாடினார்; நாட்டைப் பாடினார்: மொழியைப் பாடினார்; நாட்டு விடுதலையைப் பாடினார்; மக்களைப் பாடினார்; தேசத் தலைவர்களைப் பாடினார்; சான்றோர்களைப் போற்றினார்; அருளாளர்களைப் புகழ்ந்து பாடினார்; இதிகாசக் கதை மாந்தர்களைப் பாடினார்; சமுதாயச் சீர்கேடுகளைச் சாடினார்; பொருளாதாரக் கொடுமைகளைப் படம் பிடித்துக் காட்டினார்; அவற்றைப் போக்கவல்ல, 'பொதுவுடைமைப் புரட்சியை'யும் பாடினார். இவ்வாறு நீண்டதொரு பட்டியலிட்டுக் காட்டலாம். இவற்றால் அறியப்படுவது என்ன? முதன் முதல் தமிழ்க் கவிதையின் உள்ளீடாகப் பல பாடுபொருள்களைப் புதியதாக அமைத்துப் பாடியவர் பாரதியார் என்பது தெரியவருகிறது.

இவற்றுள் கடவுள், காதல், இயற்கை, இதிகாச மாந்தர் என்பனவற்றை நீக்கிவிட்டால், எஞ்சியுள்ள 'பாடு பொருள்கள்' புதுமையானவை. அவை யாவும் மனிதனைப் பற்றியும். மனித வாழ்க்கையைப் பற்றியனவுமாக உள்ளன. எனவே, பாரதியின் கவிதைகளில் பெரிதும் 'மனிதனே' கதாநாயகனாக – பாட்டுடைத் தலைவனாகப் போற்றப்படுகிறான் என்பது புலனாகிறது.

இந்த வகையில் கள்ளையும், காதலையும், அறத்தையும், வீரத்தையும், கொடைத் திறனையும் போற்றிப் பாடிய சங்க கால அகப்பொருள், புறப் பொருள் மரபுகளைக் கண்மூடித்தனமாகப் பாரதியார் பின்பற்றவில்லை என்பது வெளிப்படுகிறது. இதனால், பாரதியார் பொருள் இலக்கண மரபிற்கு' அடிமையாகி விடவில்லை என்பது தெளிவாகிறது.

இதைப் போன்றே, பக்தி இலக்கிய காலத்து மானிடம் பாட மாட்டோம் எனும் விரதம் பூண்டு, தெய்வங்களையே காதலாகிக் கசிந்துருகிக் கண்ணீர் மல்கிப் பாடிய அருளாளர்களைப் பாரதி ஓரளவிற்குத்தான் பின்பற்றியுள்ளார்.

அரசர்களையும், வீரர்களையும், தலைவர்களையும் உயர்வு நவிற்சியாகப் புகழ்ந்து பாடிய சிற்றிலக்கிய காலப் புலவர்களுடைய நெறியைப் பாரதியார் புறக்கணித்துள்ளார் என்பதை, அவருடைய கவிதைகளின் நோக்கையும் போக்கையும் புரிந்து கொள்ளக் கூடியவர் எளிதில் உணருவர்.

அடுத்துத் தோன்றிய, அறிவிற்குப் பொருந்தாத கற்பனைகள் நிறைந்த புராணங்களின் மரபினைப் பாரதியார், வெறுத்தொதுக்கியுள்ளமையும் இங்குக் குறிப்பிடத்தக்கதாகும்.

இவ்வாறுகூறுவதனால்,பாரதிகடவுளையோ,காதலையோ, பக்தியையோ, அரசர்களையோ, தலைவர்களையோ, புராணக் கதை மாந்தரையோ முற்றிலும் பாடாது ஒதுக்கிவிட்டார் என்பது பொருள் அன்று! இவற்றைப்பற்றி ஓரளவிற்குத்தான் பாரதியார் பாடியுள்ளாரே ஒழிய, "இவற்றையே" பாடியுள்ளார் எனக் கூற இயலாது!"இவற்றையும் பாடியுள்ளார்! இவற்றுக்கு மேலாகப் பல புதிய பொருள்களையும் அவர் சிறப்பித்துப் பாடியுள்ளார்" என்பதே நாம் நினைவில் கொள்ள வேண்டிய கருத்தாகும்.

காலத்திற்குக் காலம் சமுதாய வாழ்க்கை மாறி வருகிறது; வாழ்க்கை மாற்றத்திற்குக் காரணம் பெரிதும் எண்ணப் போக்கில் உண்டாகும் மாற்றமே! சிந்தனைப் போக்கும் சமுதாய வாழ்க்கையும் மாற்றமுறுவதற்கு ஏற்ப,

அக்கால கலைவடிவங்களும் மாற்றமுறுவது இயல்பு! மாற்றம் வளர்ச்சியைக் குறிக்கிறது; " வளர்ச்சி"யால் புதிய இயல்புகள். போக்குகள் தோன்றுகின்றன. இதன் விளைவாகப் பழைய சிந்தனைக்கும் சமுதாய வாழ்க்கைக்கும்,புதிய எண்ணப் போக்குகளுக்கும் வாழ்க்கை முறைகளுக்கும் இடையே வேற்றுமைகள் தோன்றுகின்றன. வேற்றுமைகளுள் பல, புதிய இயல்புகளாக, போக்குகளாக அமைகின்றன. இது இயற்கையின் நியதி.

மாற்றங்களை உருவாக்குவது காலப்போக்கு. அந்தக் காலப்போக்கின் உயிரோட்டத்திற்கும், தேவைக்கும் ஏற்ப சிந்தனையும், கலைப்படைப்புகளும் செயல்படத் தொடங்குகின்றன. இந்நிலையில் கலையின் வடிவமும். உள்ளீடும் மாறுகின்றன. அல்லது பழையனவற்றுள் சில புதிய வடிவம் பெறுகின்றன. இந்த வகையில்தான், பாரதியாரின் கவிதைகளின் ' பாடுபொருள்' மாற்றம் அடைந்துள்ளன; புதியனவாகப் பல புகுத்தப்பட்டுள்ளன. பயன்பாடு மிக்க பழைய பொருள்கள் சில, புதியமெருகும், புதுவடிவும் பெற்றுப் புத்தொளி வீசுகின்றன.

பாரதியார் தோன்றியதும் வாழ்ந்ததும் புதுமைக் காலத்தில் (Modern Age) ஆகும். புதுமைக் காலத்தின் போக்கிற்கும் தேவைகளுக்கும் ஏற்பப் பல புதிய பாடுபொருள்களைத் தம் கவிதைகளில் பொலிவுறச் செய்துள்ளார். புதுமையான பாடுபொருள்களுக்கு வலிவும் வனப்பும் தரத்தக்க வகையில், புதிய வடிவங்களில் தம்முடைய கவிதைகளை அவர் படைத்துள்ளார்.

தேசியக் கவி, "நல்ல கவிதை எது?" என்று அறிவிப்பதை முதலில் காண்போம்.

"புலவர் அந்தந்தக் காலத்து ஜனங்களுக்குத் தெளிவாகத் தெரியக் கூடிய பதங்களையே வழங்க வேண்டும்; அருமையான

உள்ளக் காட்சிகளை[1] எளிமை கொண்ட நடையிலே எழுதுவது நல்ல கவிதை"[2] எனத் தாமே வரையறுத்துக் கொண்ட இலக்கணத்திற்கு நல்லதோர் இலக்கியமாகத் தம் கவிதைகளைப் பாரதியார் படைத்துள்ளார்.

மரபும் பாரதியும்

பாரதியாரின் கவிதைகளில் இடம் பெற்ற புதிய 'பாடுபொருள்'களுக்கு ஏற்ற வகையில், வடிவமும் புதியனவாக அமைந்துள்ளன.

கவிதைக்கு உயிர் உணர்ச்சி: உடல் வடிவம்: கருத்து உள்ளம்; உடை ஒலிநயம்; ஒப்பனை கற்பனை எனக் கூறலாம். பாரதியாருடைய கவிதைகளில், உணர்ச்சி வெள்ளப் பெருக்கெடுத்து ஓடுகிறது. அவ்வுணர்ச்சியை முறைப்படுத்தி, நெறிப்படுத்திக் காட்டுவது கவிதையின் வடிவமாகும்.

கவிதையின் வடிவம் செய்யுளின் அல்லது பாவின் அமைப்பையும், வகையையும் சுட்டுவதாகும். செய்யுளை உருவாக்குவது யாப்பு. 'யாப்பு' எனும் சொல்லுக்குக் 'கட்டுவது' (யாத்தல்) எனும் பொருள் முதன்மையானதாகும். செய்யுள் அல்லது பா எவ்வாறு யாக்கப்படுகிறது? எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடைகளினால் கட்டப்படுவதே செய்யுள்.

தேவைக்கும்.பொருள் வசதிக்கும் உகந்த முறையில், உலகில் பல வகையான அமைப்புகளை உடைய வீடுகளை மக்கள் கட்டிக் கொள்ளுகின்றனர். இதைப் போன்றே. தங்களுடைய பாடுபொருள்களின் தேவைகளுக்கு ஏற்ற வகையிலும், தங்கள் கருத்தை உணர்த்துவதற்கு வசதியான முறையிலும் தன்னுடைய கவிதைகளைப்

---

1 பாரதியார் சுட்டும் 'உள்ளக் காட்சிகளை' இக் காலத்தில் 'படிமம்' (Imagery) எனப் போற்றுகிறோம்.

2 மகாகவி பாரதியார் கட்டுரைகள் : தத்துவம், பக். 44

பலவகைச் செய்யுள்களாக, பாக்களாகக் கவிஞன் படைத்துக் கொள்ளுகிறான்.

இத்தகைய தேவைகளை ஒட்டியே, தமிழில் ஆசிரியப்பா, வஞ்சிப்பா, கலிப்பா, பரிபாடல், வெண்பா போன்றவை தொடக்க காலத்தில் தோன்றின. பின்னர், இவற்றுள் மறைந்தன போக, எஞ்சியவற்றின் கிளைகளாகத் தாழிசை, துறை, விருத்தம் போன்றவை வழக்கிற்கு வந்தன. இவற்றுள் விருத்தம் அண்மைக் காலம் வரையில் பெருவாழ்வு பெற்று விளங்கியது.

சந்தக் கவிகள் கலிவெண்பாவில் இருந்து கண்ணிகளாக வளர்ந்து சிறந்தன. இடையிட்ட அடிதோறும் இறுதியில் முதல் தொடைக்கு ஏற்ற தனிச்சொல் பெற்று. கருத்து முற்றுப் பெறும் வரை வளர்ந்து செல்லும் ஒருவகை யாப்பு வடிவமே கண்ணி. சிற்றிலக்கியங்களான உலா, தூது போன்றவற்றுள் இத்தகைய புதிய வடிவுடன் கூடிய கலிவெண்பா வகைகள் வாழ்வுபெறத் தொடங்கின.

பிள்ளைத் தமிழ், சதகம், பள்ளு முதலிய சிற்றிலக்கிய வகைகளில், விருத்தங்கள் அடிதோறும் பல சீர்கள் உடையனவாக வளர்ந்தன. குறவஞ்சி போன்ற சிற்றிலக் கியங்களில் இசைப் பாடல்கள் இராகம், தாளம் ஆகிய குறிப்புகளைக் கொண்ட 'கீர்த்தனங்கள்' எனும் வடிவில் இடம் பெற்றன.

சென்ற நூற்றாண்டின் பிற்பகுதியிலும் இந் நூற்றாண்டின் தொடக்கத்திலும் யாப்பு வகைகளில் பலவகைப் புதிய வடிவங்கள் தோன்றியுள்ளன. சீர்காழி அருணாசலக் கவிராயர், கோபால கிருஷ்ண பாரதியார், இராமலிங்க அடிகள், மாயூரம் வேதநாயகம்பிள்ளை முதலியோர் 'மறுமலர்ச்சிக்கவிதைகளின்' தோற்றத்திற்கு முன்னோடிகளாக வழிகண்டனர். எளிமைமிகு மொழி நடை, உணர்ச்சி, இனிய ஒலிநயம் ஆகியவற்றோடு கூடிய கீர்த்தனைப் பாடல்கள் எனப்படும் இசைப் பாடல்கள் இவ்வறிஞர்களால் போற்றி வளர்க்கப்பட்டன. இவர்களுடைய

இராம நாடகக் கீர்த்தனை, நந்தனார் சரித்திரக் கீர்த்தனை, சர்வ சமயக் கீர்த்தனை ஆகியன இப்புது இலக்கிய வடிவங்களில் அமைக்கப்பட்டன. இவற்றில் இடையிடையே எழில்மிகு வசனத் தொடர்களும் இடம் பெறலாயின.

'சிந்து' எனும் புதிய பாடல்வகை, நாட்டுப்புறப் பாடல் அமைப்பில் இருந்து தோன்றி வளர்ந்ததாகும். சிலப்பதிகாரத்தின் உரையாசிரியரான அடியார்க்கு நல்லார் காலத்திலேயே (கி.பி.பதினான்காம் நூற்றாண்டு) 'இசைப்பாக்களில் ஒருவகையாக' சிந்து போற்றப்பட்டுள்ளது.[3] காலப் போக்கில் தோன்றியுள்ள பல்வேறு 'சிந்து' நூல்களைக் கூர்ந்து நோக்குவோமானால், சந்தத்திற்கும், இயைபுத் தொடைக்கும் முக்கியத்துவம் கொடுக்கும் வகையில், கண்ணி அமைப்பில் இயற்றப்படும் இசைப் பாடலே 'சிந்து' என்பது புலனாகும். இத்தகைய புதிய யாப்பில் அமைந்த நூல்கள் பல, கதைப் பாடல்களாக இயற்றப்பட்டன.

இதே காலகட்டத்தில், இயற்கும்மி, ஓயிற்கும்மி, ஓரடிக் கும்மி போன்ற கும்மிப் பாடல்களும், சமநிலைச் சிந்து, வியழிலைச் சிந்து, காவடிச்சிந்து, நொண்டிச் சிந்து. வழிநடைச் சிந்து முதலிய சந்தப் பாடல்களும்,இவற்றிலிருந்து கிளைத்த ஆனந்தக் களிப்பு, தெம்மாங்கு (தென் பாங்கு) முதலிய நாட்டுப் பாடல் வடிவங்களும் புதியப் பாவடிவங்களாக எழுந்தன. 'வரலாற்றுச் சிந்து' எனும் பாவகையில் கதைப் பாடல்கள் பல இயற்றப்பட்டன, வழிநடைச் சிந்து, காவடிச் சிந்து எனும் 'தொழிற்பாடல்கள்' சிறப்புமிகு இசைப் பாடல்களாக ஏற்றம் பெற்றன. பாரதியாருக்கு முன்பு 'சிந்து' என்பது தனிநூலாக இருந்தது; பாரதியாரால் அது ஒரு பாடல் அமைப்பாக மாற்றப்பட்டது.

இந்த யாப்பு நெறிகளைப் பற்றிய தெளிவான அறிவு. பாரதியாருக்கு இருந்ததை, அவருடைய கவிதைகள் புலப்

---

3 சிலப். 6: 35 உரை.

படுத்துகின்றன. தொடக்க காலத்தில் பாரதியாரிடத்துப் பழமையின் சாயல்' படிந்து இருந்ததைக் காணுகின்றோம். நால்வகைப் பாக்களையும், பாவினங்களையும் பாரதியார் பின்பற்றிப் பாடியுள்ளதை அவருடைய தோத்திரப் பாடல்கள் தெரிவிக்கின்றன. மேலும் பாட்டியலில் இடம் பெற்றுள்ள இலக்கிய வகைகளான திருப்பள்ளியெழுச்சி, திருத்தசாங்கம் போன்ற சிற்றிலக்கிய மரபுகளும் நம் கவிஞருடைய உள்ளத்தைக் கவர்ந்து இருந்தன இதனை 'பாரதமாதா திருப்பள்ளியெழுச்சி', 'பாரதமாதாவின் திருத்தசாங்கம்' எனும் கவிதைகள் அறிவிக்கின்றன.

'கவிதை வடிவம்' என்பதைப் பொறுத்தவரை, பாரதி முற்காலத்தாருக்குக் கடமைப்பட்டுள்ளார். புதிய வடிவங்களின் 'பிரம்மாவாக'ச் சில இடங்களில் பாரதி தோன்றினாலும், பழமையின் குளிரைவிட்டு ஓடிவிட பாரதியால் முடியவில்லை. கோபால கிருஷ்ண பாரதியாருடைய பாட்டின் வடிவங்களைப் பாரதியார், பல இடங்களில் கையாண்டுள்ளார். அண்ணாமலை ரெட்டியாரின் 'காவடிச் சிந்து' அவருக்கு ஒரு முன்மாதிரியாக அமைந்து விட்டதைக் காணுகின்றோம். மேலும், சித்தர்களின், தாயுமானவரின் ஆனந்தக் களிப்புச் சந்தமும், கண்ணிப் பாடல் வகைகளும், தேசியக் கவிஞருடைய பாடல்களில் பெருவாழ்வு பெற்றுள்ளன. எனவே 'புதுநெறி' காட்டிய புலவனாகிய பாரதியின் கவிதைகளில், முந்தையோர் போற்றிய பழைய இலக்கிய மரபு வழிப்பட்ட பாவடிவங்களின் தாக்கம் இருப்பதை யாரும் எளிதில் புறக்கணிக்க இயலாது.[4]

வெண்பா, ஆசிரியப்பா. கொச்சகக் கலிப்பா, கலிவெண்பா, கலித்துறை, எண்சீர் விருத்தம், கழிநெடிலடி, ஆசிரிய விருத்தம், இரட்டைக் குறள், வெண் செந்துறை போன்ற பல்வேறு மரபுவழிப்பட்ட யாப்பு வடிவங்களின் பாரதியார் தம் கவிதைகளைப் படைத்துள்ளார். "பாரதி பாடல்களில் யாப்பும்

---

4 கா. மீனாட்சிசுந்தரனார், பாரதி பாநிலை, பக். 209–215

இசையும்" பற்றி ஆராய்ந்த அறிஞர் திரு .வெ.இரா. மாதவன், "பாரதியின் பாடல்களில் 454 பாடல்கள் பழைய யாப்பில் அமைந்துள்ளன" என்று பட்டியல் போட்டுக் காட்டியுள்ளார்.[5] இவையாவும் பாரதியாரால் பழைய பாக்களும், பாவினங்களும் அடியோடு வெறுத்து ஒதுக்கப்பட்டன" என்பாரின் கூற்று உண்மையன்று என்பதை மெய்ப்பிக்கப் போதிய சான்றுகளாக உள்ளன.

மரபை மீறிய பாரதி

'பாவேந்தர் பாரதிதாசன், தம் குருநாதரைப் "புதுநெறி காட்டிய புலவன்"[6] என்று போற்றுகிறாரே? அப்போற்றுதல் எவ்வாறு பொருந்தும்? " எனும் ஐயம் சிலருக்கு எழலாம். தமிழ் இலக்கிய உலகில் சுப்பிரமணிய பாரதியார் உருவத்திலும் உள்ளடக்கத்திலும், தமக்கென்று ஒரு புது வழியை வகுத்துக் கொண்டுள்ளார். இதுவரை, கவிதையின் உள்ளடக்கமான பாடு பொருளில் அவர் புகுத்தியுள்ள புதுமைகள் இக்காலத் தமிழ்க் கவிஞர்கள் இடையே பெற்றுள்ள தாக்கத்தைக் கண்டோம். இனி, பாவடிவிலும், இலக்கிய வடிவிலும் அவர் புகுத்தியுள்ள புதுமைகளைக் காண முயலுவோம்.

பாரதியாரின் கவிதைகளுக்குரிய தனிப்பெருஞ்சிறப்பு எளிய நடை, இனிய சந்தம், சாமானிய மக்களுக்கும் கவர்ச்சியூட்டக் கூடிய பாடுபொருள் என்பதை முன்னரே கண்டோம். "பாரதி பழைய யாப்பிலக்கண மரபில் இருந்து பெரிதும் மாறுபட்டுச் சென்றவர் எனச் சொல்லவும் முடியாது. எனினும், அவரே கூறுவதுபோல் 'எளிய சந்தம், எளிய நடை, ஜனங்கள் விரும்பும் மெட்டு என்பதையே தமது கவிதையின் வடிவமாகக் கொண்டு யாப்பிலக்கணத்துக்குப் புறம்பான அந்த இலக்கணத்தில் வரையறை கூறப்படாத

---

5 உ .த.ஆ.நி. வெள்ளிக் கிழமைக் கருத்தரங்கக் (29-10-82) கட்டுரை, பக்.3

6 பாரதிதாசன் கவிதைகள், தொகுதி : 2; பக்.71

பிற்காலத்துச் சந்தங்களையும் மெட்டுக்களையும் பயன்படுத்தியே பெரும்பாலான பாடல்களை இயற்றியுள்ளார். குடுகுடுப்பைக்காரன் பாட்டு, குருவிக்காரிப் பாட்டு, பாரதியே சொல்லி இருப்பதுபோல் தெருவில் ஊசிகளும் பாசிமணிகளும் விற்பதோடு பிச்சையெடுக்கவும் செய்கின்ற பெண்களின் பாட்டு முதலிய (பாஞ்சாலி சபதத்தின் குறிப்பு) பாமர வழக்குப் பாடல் மெட்டுக்களையும் பாரதி பயன்படுத்தியுள்ளார். "வார்த்தைகளையும் செய்கைகளையும் விளக்குவதற்கு இப்படிப்பட்ட நடைகள் மிகவும் பொருத்தமாக உள்ளன' என்பதையும் பாரதியாரே உணர்ந்து குறிப்பிட்டுள்ளார்"[7] எனும் கருத்து, நாட்டுப்புறப்பாடல்களில் பாரதிக்கு இருந்த 'கவர்ச்சியை' வெளிப்படுத்துகிறது.

நாட்டுப்புறப் பாடலின் தாக்கம்

குயில் பாட்டில். நாட்டுப்புறப் பாடல்களின் 'மயக்கும்' இயல்பை,

ஏற்ற நீர்ப் பாட்டின் இசையிலும், நெல்லிடிக்கும்
கோல்தொடியார் 'குக்கு' வெனக் கொஞ்சு
மொழியினிலும்
சுண்ணம் இடிப் பார்தம் சுவைமிகுந்த பண்களிலும்
பண்ணை மடவார் பழகுபல பாட்டினிலும்
வட்டமிட்டுப் பெண்கள் வளைக்கரங்கள்
தாமொலிக்கக்
கொட்டி இசைத்திடுமோர் கூட்டமுதப் பாட்டினிலும்
வேயின் குழலோடு வீணைமுத லாமனிதர்
வாயினும் கையாலும் வாசிக்கும் பல்கருவி
நாட்டிலும் காட்டினிலும் நாளெல்லாம்
நன்றொலிக்கும்
பாட்டினிலும், நெஞ்சைப் பறிகொடுத்தேன்
பாவியேன்[8]

---

7 ரகுநாதன், கங்கையும் காவிரியும், பக். 31

8 பாரதியார் கவிதைகள், பக். 286.

என்று பாரதியார் எடுத்தியம்பியுள்ளார். மற்றும் அவருடைய கட்டுரைகள் சிலவற்றிலும் நாட்டுப்புறப் பாடல்களில் அவருக்கு இருந்த ஈடுபாட்டை நாம் காண முடிகிறது.

பாரதியாரின் கவிதைகளில் காணப்படும் நாட்டுப்புறப் பாடல்களின் தாக்கத்தை வடிவம், நடை, பொருள் எனும் மூவகையாகத் திறனாய்வாளர்கள் பாகுபடுத்துவர்.[9] 'அம்மாக்கண்ணு பாட்டு', 'வண்டிக்காரன் பாட்டு', 'புதிய கோணங்கி', 'பண்டாரப் பாட்டு', 'கும்மிப் பாட்டு என்பன சிறப்பு மிக்க நாட்டுப் பாடல் பாணியில் அமைந்துள்ளன. இவற்றுள் ஒன்றை மட்டும் சான்றாகக் காண்போம்.

நம் ஊர்களில் வீடு வீடாக வரும் குடுகுடுப்பைக்காரன் பாடும் பாட்டே, 'புதிய கோணங்கி' எனும் தலைப்பில் அமைக்கப்பட்டுள்ளது. பாரதியார் பாடியுள்ள இப்பாடல் உணர்ச்சித் துடிப்பும், ஓசை நயமும், புதிய கருத்தாழமும் கொண்டு விளங்குகிறது. இந்தியாவின் எதிர்காலத்தைத் தாம் வாழ்ந்த கடையத்திற்கு'ரிய எதிர்காலமாகப் பாவித்து அவர் பாடியுள்ளார். அந்த ஊரினை 'வேதபுரம் என (வேதியர்கள் வாழும் ஊர்)ச் சிறப்பித்துள்ளார்.

குடுகுடு குடுகுடு குடுகுடு குடுகுடு!
நல்லகாலம் வருகுது! நல்லகாலம் வருகுது!
சாதிகள் சேருது! சண்டைகள் தொலையுது!
சொல்லடி, சொல்லடி சக்தி! மாகாளீ!
வேதபுரத் தாருக்கு நல்லகுறி சொல்லு!
தரித்திரம் போகுது! செல்வம் வருகுது!
படிப்பு வளருது! பாவம் தொலையுது!
படிச்சவன் சூதும் பாவமும் பண்ணினான்!
போவான், போவான், ஐயோவென்று போவான்![10]

---

9 என். ஆர். சாந்தாராம், 'பாரதி பாடலில், நாட்டுப்புறப் பாடலின் தாக்கம்,' உ .த.ஆ நி. வெள்ளிக்கிழமைக் கருத்தரங் (22–1–82) கக் கட்டுரை, பக். 3

10 பாரதியார் கவிதைகள், பக் 505.

எனும் பாடற்பகுதியைப் பாடிப் பாருங்கள்! நாம் இளமை முதல் கேட்டுக் கேட்டுப் பழகிப் போன குடுகுடுப்பைக் காரன் பாட்டு வடிவில் அமைந்தது இது! ஆனால், நெடுங் காலமாக அவன் கூறிவரும் செய்திகளுக்கு மாறாகத் "தேசிய எழுச்சியின்' பாற்பட்ட புதிய கருத்துகளை இந்தப் பாடல் நயமாகத் தெரிவிக்கிறது. இத்தகைய புதிய கருத்துகளை வெளியிடும் குடுகுடுப்பைக்காரனை, 'புதிய கோணங்கி' எனப் பாரதியார் சுட்டுவதும் மிகவும் பொருத்தமாகும். இப்பாடல், நாட்டுப்புறப் பாடல் வடிவில் இயற்றப்பட்டுள்ள பாரதியாரின் கவிதைகளுக்குச் சிறந்ததோர் எடுத்துக்காட்டாகும்.

பாமரர் பாடல்களின் நடை நலம் பாரதியாரின் சொல்லாட்சியிலும், உணர்த்தும் முறையிலும் புதிய ஒளியும், அழகும் பெற்று விளங்குகிறது.

மக்கள் பேச்சு வழக்கில் இடம்பெறும் தொடர்களையும் சொற்களையும் பாரதியார், புதுமைப் பொலிவு விளங்குமாறு, அவற்றிற்குப் புதுவாழ்வை அளித்துள்ளார் நொள்ளைக் கதைகள்', 'தங்கமே தங்கம்' எனும் தொடர்கள் பாரதியின் கைப்பட்டு சாவா மூவாப் பெருவாழ்வைப் பெற்றுள்ளன.

நொள்ளைக் கதைகள் கதைக்கிறாய்
நூலின் பொருளைச் சிதைக்கிறாய்![11]

எனும் சொற்கள் திருதராட்டிரனுடைய வெறுப்பை வெளிப்படுத்துகின்றன. "வீண்கதை, பொய்க் கதை, வெறும் கட்டுக்கதை" எனும் பொருள்களை இத்தொடர் தெரிவிக்கிறது.

தன் காதலனான கண்ணனிடம் தூதாகத் தோழியை விடுக்கும் பாடலில், தலைவி, "தங்கமே தங்கம்!' எனத் தோழியை விளிக்கிறாள்.

கண்ணன் மனநிலையைத் தங்கமே தங்கம்!
அடி தங்கமே தங்கம்!
கண்டுவர வேணுமடி தங்கமே தங்கம்![12]

---

11 பாரதியார் கவிதைகள். பக். 381.

12 மேற்படி, பக். 343.

எனும் பாடலைக் காண்க. குறிப்பிட்ட ஒரு செயலைச் சாதித்துக் கொள்ள விரும்புகிறவர். அச்செயலை செய்யும் தகுதியும் திறமையும் உடையவரை, 'கண்ணு. பொன்னு. என் தங்கம்' எனப் புகழ்வதை அன்றாட வாழ்க்கையில் இன்றும் காணலாம். இதனைப் பண்டைக் காலத்தில் 'கொக்குத் தலையில் வெண்ணெய் வைப்பது " என்று சொன்னார்கள்; இக்காலத்தில் " 'ஐஸ்' வைப்பது" என நாம் சொல்லுகிறோம். இத்தகைய உத்தியை மட்டும் அல்லாமல், பாமர மக்களின் பேச்சில் இடம் பெறும் சொற்களையும் பல கவிதைகளில் நம் கவிஞர் பயன்படுத்தியுள்ளார். இதனால், மக்கள் வழக்கின் மகத்துவத்தை மாநிலம் அறியுமாறு பாரதியார் செய்துள்ளார்.

நாட்டுப்புறப் பாடல்களில் இடம்பெறும், கிராமிய வாழ்க்கையின் நிகழ்ச்சிகள். இயல்புகள் பலவற்றைத் தம்முடைய கவிதைகளின் 'பாடு பொருளாக'வும் பாரதியார் தேர்ந்தெடுத்துள்ளார்.

'வண்டிக்காரன் பாட்டில்'
வீட்டுக் குலதெய்வம் – தம்பி வீரம்மை காக்குமடா!
கறுத்த மாரியின் பேர்–சொன்னால் காலனும்
அஞ்சுமடா![13]

எனக் குலதெய்வ – சிறுதெய்வ வழிபாட்டு மரபையும் உணர்வையும், தம் கவிதைகளில் பாரதியார் புகுத்தியுள்ளார்.

'இவ்வாறு நாட்டுப்புறப் பாடல்களின் பாணியைப் பாரதியார் ஏன் பயன்படுத்திக் கொண்டார்?' எனும் எண்ணும் எழலாம். இனிய இசையும், சுவையுணர்வும் மிகுந்தவை நாட்டுப்புறப் பாடல்கள் என்பதை அவரே எழுதியுள்ளார்.[14] மற்றும், நாட்டு மக்கள் விடுதலைப் போரில் கலந்து கொள்ளுவதற்கும் நாட்டுப் பற்றையும் வீரவுணர்ச்சியையும் பெறுவதற்கும் அவர்களை ஈர்க்கும் சக்தியாக. 'யானையைக் கொண்டு

13 மேற்படி, பக். 494.

14 மகாகவி பாரதியார் கட்டுரைகள், பக். 2 : 82–85

யானையைப் பிடிப்பதைப்' போல, அவர்களுக்குப் பழக்கப்பட்ட முறையிலேயே, கருத்துகளை எடுத்துரைக்கும் உத்தியாகவும் இதனைப் பாரதியார் பயன்படுத்தி இருக்கலாம்.

நாட்டுப்புறப் பாடல்களின் நோக்கும் போக்கும், பாரதிக்குப் பிறகு ஓரளவிற்கு நம் தமிழ்க் கவிஞர்களின் படைப்புகளிலே இடம் பெற்று இருக்கின்றன.

பாவேந்தர் பாரதிதாசன் படைப்புகளில், பாரதி வழிவந்த நாட்டுப்புறப் பாடல்களின் தாக்கம் ஒளிரக் காணலாம்.

இந்த வூட்டில் முந்தி முந்தி ஒரு
பேரன் பொறக்கப் போறான் ஆமாம்
இஞ்சி மொளைக்கப் போவுது – நல்ல
எலுமிச் சம்பழம் பழுக்க இருக்குது!
நல்ல வூட்டில் எல்லாம் பொறக்கும்
குடுகுடு குடுகுடு குடுகுடு குடுகுடு[15]

எனக் குடுகுடுப்பைக்காரன், 'குடும்ப விளக்கிற்கு' நல்ல காலம் நல்ல பிள்ளை பிறக்கப் போவதை எடுத்துரைக்கிறான்.

இதைப் போன்றே பாரதிதாசன் பாடல்களில் குரங்காட்டியின் பேச்சும்,[16] கழைக் கூத்தாடியின் குரலும்[17] ஒலிக்கக் கேட்கிறோம்.

நாட்டுப்புற மகளிர் இடையே சிறப்புற்று விளங்கும் பாடல்களுள் 'கும்மிப் பாடல்கள்' முதன்மையானவை. இந்த அமைப்பில் பாரதியார் பாடியுள்ள பாடலினைச் காண்போம்:

'பெண்கள் விடுதலைக் கும்மி' என்பது அப்பாடலின் தலைப்பாகும். அப்பாடல்,

கும்மி யடிதமிழ் நாடு முழுதும்

---

15 குடும்ப விளக்கு, பக். 146.
16 பன்மணித்திரள், பக். 153.
17 குயில் பாடல்கள், பக். 116.

குலுங்கிடக் கைகொட்டிக் கும்மியடி!
தம்மைப் பிடித்த பிசாசுகள் போயின
நன்மைகண் டோமென்று கும்மியடி![18] (கும்மி)

எனத் தொடங்குகிறது. மக்கள் வழக்கு. இலக்கிய வழக்காக வாழ்வு பெறத் தொடங்கியதை இப்பாடல் நினைவுபடுத்துகிறது.

இந்த முறையைப் பின்பற்றி கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை,'சுகாதாரக்கும்மி' எனும் கவிதையை இயற்றியுள்ளார்.[19] காந்தியக் கவிஞர் நாமக்கல் இராமலிங்கம் பிள்ளை 'நாட்டுக் கும்மி' எனும் பாடலைப் பாடியுள்ளார்.

கும்மியடி பெண்கள் கும்மியடி யுங்கள்!
கொத்துச் சரப்பளி சத்தமிட
நம்மையெ லாம்பெற்ற இந்திய நாட்டில்
நன்மையைக் கோரி அடியுங்கடி![20]

எனும் பாடல், பேச்சு வழக்கும் உணர்ச்சிச் செறிவும் வாய்ந்த 'பாமரர் பாடலின்' பாணியிலே. 'நாட்டு வணக்க'ப் பாடலாக அமைந்துள்ளமை, பாரதியின் "தேசிய கீதங்களை' நினைவுபடுத்துகிறது.

பாரதியின் "தங்கமே தங்கம்' எனும் கண்ணன் பாட்டுப் பாணியில், 'ஞானத்தங்கமே ' என முடியும் பாடலைக் கண்ணதாசன் இயற்றியுள்ளார்.

இருக்கும் இடத்தை விட்டு
இல்லாத இடம் தேடி
எங்கெங்கோ அலைகின்றார்
ஞானத்தங்கமே!–அவர்
ஏதுமறி யாரடி ஞானத் தங்கமே![21]

எனும் பாடல் பாரதியின் மேற்கண்ட கவிதையின் சாயலைக் கொண்டதாகும்.

---

18 பாரதியார் கவிதைகள், பக். 499.
19 மலரும் மாலையும், பக்.152.
20 நாமக்கல் கவிஞர் பாடல்கள், பக். 303.
21 கண்ணதாசனின் திரை இசைப் பாடல்கள், பக். 318.

கவியரசர் கண்ணதாசன் ஆயிரக்கணக்கான கவிதை. களைப் படைத்துள்ளார். அவற்றுள் பல பாடல்களில் இந்த நாட்டுப்புறப் பாடல் மரபு பதிந்துள்ளதைக் காணுகின்றோம்; சிறப்பாக செட்டி நாட்டுத் 'தாலாட்டுப் பாடல்" மெட்டுகள், கவியரசருடைய பாடல்களில் தங்களுடைய இலச்சினையை முனைப்பாகப் பொறித். துள்ளன.

மழைகூட ஒருநாளில் தேனாகலாம்!
மணல்கூடச் சிலநாளில் பொன்னாகலாம்!
ஆனாலும் அவையாவும் நீயாகுமா?
'அம்மா'வென் றழைக்கின்ற சேயாகுமா?
ஆராரோ ஆராரோ ஆரிரரோ?
ஆராரோ ஆராரோ ஆரிரரோ?[22]

'அம்மா' எனும் சொல்லை விளியாகக் கொண்டும் திரும்பத் திரும்பப் பயின்று வருமாறும் அமைத்தும் நாட்டுப்புறப் பாடல்பாணியைக் கண்ணதாசன் போற்றும் கவிதை ஒன்றைக் காண்போம்.

சிரிப்பென்ன? சிரிப்பென்ன?
சின்னம்மா!–உன்றன்
சிங்காரம் குலுங்குவ தென்னம்மா?
நடிப்பென்ன? நடிப்பென்ன கண்ணம்மா?
–நெஞ்சில்
நடக்கிற நடப்பென்ன? சொல்லம்மா![23]

இவற்றைப் போன்ற நாட்டுப்புறப் பாடல் இயல்புகள் பல கவியரசருடைய கவிதைகளை வளப்படுத்தியுள்ளன.

இந்த மரபை, இலக்கிய உலகில் சிறப்புற்று விளங்கும் கவிஞர்கள் மிக அருகிய நிலையிலேயே பின்பற்றியுள்ளனர். இவற்றைப் பயன்படுத்தினால், தங்கள் கவிதைகளுக்கு

---

22 கண்ணதாசன் கவிதைகள், காவியக் கழகம் சென்னை, 1959; பக். 277.

23 மேற்படி, பக். 78.

'இலக்கியம் எனும் ஏற்றம்' கிடைக்காமல் போய்விடுமோ எனும் அச்சம் ஒரு காரணமாக இருத்தல் கூடும். ஆனால், திரைப்படங்களுக்காகவே, பாடல் இயற்றியுள்ள உடுமலைப் பேட்டை நாராயண கவி, தஞ்சை இராமைய தாஸ், பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம், மருதகாசி, வாலி போன்றோர் இந்தப் பாணியைத் தயங்காது பயன்படுத்தியுள்ளனர்.

வாழும் கவிஞர்களுள் பன்மொழிப் புலவர் மு. கு. ஜகந்நாத ராஜா, இம்மரபைப் போற்றும் கவிஞராவர். அவர் 'அண்ணே!' எனும் விளிச்சொல்லைப் பெரிதும் பயன்படுத்துகிறார்.

காலம் மாறுது அண்ணே! – உன்
கருத்தையும் மாற்றிக் கொள்அண்ணே!
ஞாலம் போகும் போக்கை யுணர்ந்து
நடக்க வேண்டும் அண்ணே![24]

எனும் பாடலில், 'அண்ணே!' எனும் பேச்சு வழக்கு விளிச் சொல்லைப் பயன்படுத்துவதன் மூலம், சொல்லுபவனுக்கும் கேட்பவனுக்கும் இடையே ஒருவகை நெருக்கத்தையும் பரிவையும் கவிஞர் வெளிப்படுத்துகிறார்.

இசைப் பாடல் நெறி

பாரதியாருக்கு இயல்பாகவே இசையில் பேரீடுபாடு இருந்தது. இதனை வெளிப்படையாகவே தம்முடைய கட்டுரைகளிலும் கவிதைகளிலும் தெரிவித்துள்ளார். அதிலும் சாஸ்திரிய சங்கீதத்தில் எந்த அளவிற்கு மோகம் அவருக்கு இருந்ததோ, அந்த அளவிற்கு நாட்டுப் பாடல் மெட்டுகளிலும் அவருக்குக் கவர்ச்சி இருந்ததை நாம் அறிய முடிகிறது.[25] அவரே பாஞ்சாலி சபதத்தின் முகவுரையில், "எளிய பதங்கள், எளிய நடை, எளிதில் அறிந்து கொள்ளக் கூடிய சந்தம், பொது ஜனங்கள் விரும்பும் மெட்டு, இவற்றினையுடைய காவியமொன்று தற்காலத்திலே செய்து தருவோன் நமது தாய்மொழிக்குப் புதிய உயிர் தருவோனாகின்றான். ஓரிரண்டு

---

24 கற்பனைப் பொய்கை, பக்.111

25 மகாகவி பாரதியார் கட்டுரைகள், பக். 2 : 65–73

வருஷத்து நூற் பழக்கமுள்ள தமிழ் மக்கள் எல்லோருக்கும் நன்கு பொருள் விளங்கும்படி எழுதும்படி, காவியத்துக்குள்ள நயங்கள் குறைவுபடாமலும் நடத்துதலும் வேண்டும்"[26] என்று தெரிவித்துள்ளதைத் தொடக்கத்தில் கண்டோம்.

மேற்போக்காக ஒருமுறை அவருடைய கவிதைகளைப் புரட்டிப் பார்த்தாலே, எவ்வாறு இக்குறிக்கோளைப் பாரதியார் நடைமுறைப்படுத்தியுள்ளார் என்பதை எளிதில் அறியலாம். பேரளவிற்குச் சிந்துவும், ஓரளவிற்குக் கண்ணிகளும், கும்மியும், ஆனந்தக் களிப்பும், பள்ளும் பாமரர் பாட்டு இசை மெட்டுகளைப் பாரதிக்குக் கொடுத்துதவியுள்ளன.

சிந்து

இவற்றுள், 'சிந்து' எனும் இசைப்பா, பாரதியாரின் கைகளில் பாய்ந்து செல்லும் பந்தாகத் துள்ளி விளையாடுகிறது. சிந்து என்பது ஒருவகை இசைப்பாட்டு என்பதை நாம் முன்னரே கண்டோம். பழைய இலக்கணத்தில் மூன்று சீர்களைக் கொண்ட அடி, 'சிந்தடி' எனப்படும். சிந்து எனும் இசைப்பாட்டுப் பெரிதும் மூன்று சீர்களைக் கொண்டு வரும் சிந்தடிகளால் அமைவதால், முந்தையோர் 'சிந்து' எனப் போற்றினர். சென்ற நூற்றாண்டின் இடைப் பகுதியில் இருந்து மூன்று சீர்களுக்கு மேல்வரும் "சிந்துகள்' இயற்றப்பட்டு வருகின்றன.

பாரதியாருடைய கவிதைகளில், 'ஆறுமுக வடி வேலனே' எனும் காவடிச் சிந்து அமைப்பில் "எங்கள் தாய் " எனும் தலைப்பில் அமைந்துள்ள

தொன்று நிகழ்ந்த தனைத்து முணர்ந்திடு
சூழ்கலை வாணர்களும் – இவள்
என்று பிறந்தவள் என்றுண ராத
இயல்பின ளாம்எங்கள் தாய்[27]

---

26 பாரதியார் கவிதைகள், பக். 357

27 பாரதியாரின் கவிதைகள், பக். 143.

எனத் தொடங்கும் பாடலைச் சிறந்த எடுத்துக்காட்டாகக் காட்டலாம்.

இந்தச் சிந்து பலவகைப்படும். அவை சமநிலைச் சிந்து, வியநிலைச் சிந்து, நொண்டிச் சிந்து என்பன. தனிச் சொல்லுக்கு முன்னும் பின்னும் உள்ள அடிகள் அளவொத்து இருந்தால், அதனைச் 'சமநிலைச் சிந்து' என்பர்.

ஓடி விளையாடு பாப்பா – நீ
ஓய்ந் திருக்க லாகாது பாப்பா!
கூடி விளையாடு பாப்பா – ஒரு
குழந்தையை வையாதே பாப்பா![28]

எனத் தொடங்கும் பாரதியின் "பாப்பாப் பாட்டு சமநிலைச் சிந்து' வடிவிற்குச் சிறந்ததோர் எடுத்துக்காட்டாகும்.

தனிச் சொல்லின் முன் அடியும் பின் அடியும் அளவு ஒவ்வாமல் வருமாயின், அதனை 'வியநிலைச் சிந்து" எனக் கூறுவர். தனிச்சொல் அமைப்பு நெருக்கத்தைப் புலப்படுத்தும் 'உரையாடல்' போன்று அமைகிறது.

ஆதிசிவன் பெற்று விட்டான் – என்னை
ஆரிய மைந்தன் அகத்தியன் என்றோர்
வேதியன் கண்டு மகிழ்ந்தே – நிறை
மேவும் இலக்கணஞ் செய்து கொடுத்தான்[29]

எனும் இந்தப் பாடல், 'வியநிலைச் சிந்துவின்" அமைப்பில் உள்ளதைக் காணலாம்.

'நொண்டிச் சிந்து' எனும் மற்றொரு வகை பாரதியாரைப் பெரிதும் கவர்ந்ததாகும். தனிச்சொல்லின் முன் அடியும், பின் அடியும் அளவொத்து நான்கு அடிகள் கொண்டு நடப்பது 'நொண்டிச் சிந்து' என்பதைப் பல வகையான நொண்டிச் சிந்து நூல்களில் இருந்து அறிகிறோம். தனிச்சொல்லை நீக்கினால் ஒன்றே முக்கால் அடியாக – நொண்டியாக இது காணப்படும்.

---

28 மேற்படி, பக். 266.
29 பாரதியாரின் கவிதைகள், பக்.166.

பாரதியாரின் கவிதைகளில். 'நொண்டிச் சிந்து' முதன்மை இடத்தைப் பெற்று இருக்கிறது. 'பாரத ஜனங்களின் தற்கால நிலைமை' எனும் தலைப்பில் அமைந்த

நெஞ்சு பொறுக்கு திலையே –இந்த
நிலைகெட்ட மனிதரை நினைந்து விட்டால்
அஞ்சி யஞ்சிச் சாவார் இவர்
அஞ்சாத பொருளில்லை அவனியிலே
வஞ்சனைப் பேய்கள் என்பார் – இந்த
மரத்தில்என்பார்; அந்தக் குளத்தில் என்பார்
துஞ்சுது முகட்டில் என்பார் – மிகத்
துயர்ப்படு வார்;எண்ணிப் பயப்படுவார்[30]

எனும் பாடலைப் பரவலாகப் பலரும் அறிவர்.

மற்றும் 'கலைமகளை வேண்டுதல்', 'கண்ணன் என் தாய்', 'கண்ணன் என் தந்தை', மற்றும் பாஞ்சாலி சபதத்தின் பல பகுதிகள் நொண்டிச் சிந்தில் இயற்றப்பட் டுள்ளன.[31] பாரதியாரின் கவிதைகளில் 716 சிந்துகள் உள்ளன. அவை குறளடிச் சிந்து முதல், நெடிலடிச் சிந்து வரை விரிந்துள்ளன. இவற்றால், பாரதியார் இந்த இசைப்பாவிடம் கொண்டு இருந்த மையல் புலனாகிறது.

சிந்துவின் சிதைந்த வகையான "கண்ணிகள்' ஓரளவிற்குத் தாழிசைகள் போன்ற அமைப்பு உடையன. இந்த இசைப்பாவில் பாரதியார் பல பாடல்களைப் படைத்துள்ளார். இவற்றுள் 'கிளிக்கண்ணி' என்பது சிறப்புமிகு வகையாகும்.

'சுதந்திரப் பயிர்' எனும் தலைப்பில் அமைந்துள்ள பாட்டு, கண்ணிகளால் அமைந்ததாகும்.

தண்ணீர் விட்டோவளர்த்தோம்? சர்வேசா!
இப்பயிரைக்
கண்ணீரால் காத்தோம்! கருகத் திருவுளமோ![32]

எனும் கவிதையைக் காண்க.

---

30 பாரதியாரின் கவிதைகள், பக்.155
31 வே.இரா மாதவன், மு.கு.க.பக்.8
32 பாரதியாரின் கவிதைகள், பக்.176

பெண்களை (மகடூஉ முன்னிலையாக)க் ' கிளியே! கிளியே!' என விளிக்கும் தனிச்சொல்லைப் பெற்று வருவது 'கிளிக்கண்ணி' எனப்படும். இந்த முறையில் பாரதியார்.

நெஞ்சில் உரமுமின்றி
நேர்மைத் திறமுமின்றி
வஞ்சனை சொல்வாரடீ – கிளியே!
வாய்ச் சொல்லில் வீரரடீ![33]

எனத் தொடங்கும் "நடிப்புச் சுதேசிகள்" எனும் கவிதையைப் பாடியுள்ளார்.

'கும்மி' எனும் இசைப்பாடல் பான்மையை முன்னரே கண்டோம். 'ஆனந்தக் களிப்பு' எனும் இசைப்பாட்டு பாமர மக்களின் மன மகிழ்ச்சியை வெளிப்படுத்தும் முறையில் அமைந்தது.

தேசிய கீதங்களுள், முதல் கவிதையாக இருக்கும் 'வந்தே மாதரம்' எனும் தலைப்புடைய பாடல், 'ஆனந்தக் களிப்பு' மெட்டில் அமைந்த கீர்த்தனைப் பாடலாகும்.

வந்தே மாதரம் என்போம்! – எங்கள்
மாநிலத் தாயை வணங்குது மென்போம்[34]

எனத் தொடங்கும் பாடலைப் பாடிப்பாடிப் பார்ப்போமானால், அதில் மகிழ்ச்சியைப் புலப்படுத்தும் இனிய ஓசை வெளிப்படுவதை உணரலாம்.

மகிழ்ச்சியின் மிகுதியால் துள்ளிக் குதித்து ஆடிப் பாடும் நிலையில் பாடப்படும் பாட்டு, 'பள்ளு' எனப்படும். பொதுவாக வயல்களிலே வேலை செய்யும் பாட்டாளிகள் தென்தமிழ் நாட்டில் 'பள்ளர்' எனப்படுவர். அவர்கள் மகிழ்ச்சியால் ஆடிப்பாடும் 'பள்ளுப் பாடல்களின் அமைப்பில், பாரதியாரால் இயற்றப்பட்ட கவிதையே "சுதந்திரப் பள்ளு" என்பதாகும்.

---

33 பாரதியாரின் கவிதைகள், பக்.196
34 மேற்படி, பக்.133

ஆடுவோமே– பள்ளுப் பாடுவோமே!
ஆனந்த சுதந்திரம் அடைந்துவிட் டோமென்று[35]
(ஆடுவோமே)

எனத் தொடங்கும் பாடல் யாவரும் அறிந்த ஒன்று. இதனைக் கூட, 'கீர்த்தனை' வடிவில் பாரதியார் இயற்றியுள்ளார்.

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் பாரதியாரைச் 'சிந்துக்குத் தந்தை'[36] என்று போற்றிப் பாடியுள்ளதன் பொருத்தத்தைப் பாரதியாரின் பாடல்களைக் கொண்டே பரிசோதனை செய்து பார்த்து விட்டோம். பாரதியாரைப் போல சிந்துவின் வகையைச் சமயச் சார்பற்ற கவிதைகளில் பயன்படுத்திப் பாடியவர், நம் கவிஞருக்கு முன்னர் யாரும் இலர். சிந்துவின் இன்னோசையில் உள்ளத்தைப் பறிகொடுத்த பாரதியார், அதனைப் பலவகை அமைப்பில் பயன்படுத்தி மகிழ்ந்துள்ளார்.

பாரதி போற்றிய சிந்துவின் சில வகைகளைப் பிற்கால கவிஞர் சிலர், தங்கள் கவிதைகளின் கருத்திற்கும் உணர்ச்சி மாற்றத்திற்கும் உகந்த வகையில் பயன்படுத்தியுள்ளனர். பாவேந்தரின் 'இன்பத் தமிழ்' எனும் பாடல், 'சிந்து' அமைப்பில் சில புதிய இயல்புகளோடு இயற்றப்பட்டுள்ளதைக் காணலாம்.

தமிழுக்கும் அமுதென்று பேர் – அந்தத்
தமிழ் இன்பத் தமிழ்எங்கள் உயிருக்குநேர்!
தமிழுக்கு நிலவென்று பேர்! – இன்பத்
தமிழ் எங்கள் சமூகத்தின் விளைவுக்கு நீர்![37]

கவிமணி, 'திருக்குறள் ' எனும் தலைப்பில் இயற்றியுள்ள
சங்கப் பலகையிலே அன்று
தனிய மர்ந்த நூலாம்;
பங்கய நான்முகனே – தமிழில்
பகர்ந்த மாமறையாம்![38]

---

35 பாரதியாரின் கவிதைகள். பக்.181
36 பாரதிதாசன் கவிதைகள்,தொகுதி.2; பக்.
37 மேற்படி,தொகுதி:1; பக்.89
38 மலரும் மாலையும், பக். 21

என்பன போன்ற பல பாடல்களை எடுத்துக் காட்டாகக் காட்டலாம்.

நாமக்கல்லாரும் சிந்துவில் சிந்தையைப் பறிகொடுத் துள்ளார்.

காந்திக்கு நிகர்வேறும் உண்டோ – மக்கள்
கண்கண்ட ஒருதெய்வம் அன்றோ?
சாந்திக்கும் புகழ்தந்த சாந்தன் – உலகில்
சன்மார்க்க வாழ்க்கைக்கு வேந்தன்[39]

எனும் பாடல் அமைப்பு, இனிய ஓசை நயத்தை வெளிப் படுத்துகிறது. இதைப் போன்ற இசைப்பாக்கள் பல, இராமலிங்கம் பிள்ளையால் இயற்றப்பட்டுள்ளன.

பாரதியாரின் தாக்கத்திற்குப் பெரிதும் ஆளானவர் கவியோகி சுத்தானந்த பாரதியார். அவருடைய ஆயிரக் கணக்கான கவிதைகளிலே, நூற்றுக்கணக்கான பாடல்கள் சிந்து, நொண்டிச் சிந்து, சமநிலைச் சிந்து எனும் இசைப்பாடல் அமைப்பிலே இயற்றப்பட்டுள்ளன.

புதுமையான கவிதை –உள்ளே
பொங்கிப் புன்னகைக்கும்
எதுகை மோனையுடனே – வரும்
இயற்கை யான கவிதை
உள்ளுணர்வை யுருக்கி – வார்த்த
ஒளிமயக் கவிதை"[40]

எனும் பாடலும்,

வீரச் சிதம்பரம் பிள்ளை அவன்
விடுதலை விடுதலை விடுதலை என்றே
தீரமுடன் பணி செய்தான் – சிறை
சென்றே செக்கும் இழுத்தான் –கவி
பாரதி பாட்டுரு வானான்[41]

---

39 நா மக்கல் கவிஞர் பாடல்கள், பக். 53
40 சுத்தானந்த பாரதியின் கவிதைகள் கவி. 9. 'புதுமைக்கவி'
41 பாரத கீதம், கவி. 54 வீரச் சிதம்பரன்!

எனும் பாடலும் கவியோகியின் சிந்து வடிவங்களில் சிறந்தனவாகும்.

இளங் கவிஞர்களுள் பேராசிரியர் எழில்முதல்வன் காவடிச் சிந்தில் உள்ள 'தெள்ளு தமிழுக்குச் சீலன்' எனும் சந்தத்தில் கவிதை இயற்றியுள்ளமை நம் கருத்தைக் கவருவதாகும்.

நான்மகிழ யாழெடுத்து மீட்டி –உன்
நல்லதமிழ்த் தேன்குரலைக் கூட்டி – என்
ஊன் உருக்கி உள்ளொளியை
ஊட்டிவிடும் பாடல்தனைப் பாடு!

கொஞ்சம் ஆடு[42]

எனும் பாடல் சிந்துவைப் பாடுவதில் வல்லவர்கள் இன்றும் உள்ளனர் என்பதைத் தெரிவிக்கிறது.

இன்றைய நாட்டுப்புறப் பாடல் மெட்டுகளில் திரைப் பட இசைக் கவிஞர்கள், பாட்டு இயற்றுவதில் போட்டிப் போட்டுக் கொண்டு முன் வருகின்றனர். அவர்களுடைய படைப்புகளில் 'கண்ணிகளே' பெருவாழ்வு பெற்றுள்ளன மற்றவை யாவும் அருகிய வழக்காகிப் போய்விட்டன. இது பாரதிக்குப் பிறகு அறுபது ஆண்டுகளில் உண்டாகியுள்ள மாற்றம் அல்லது வளர்ச்சி எனலாம்.

இசைப் பாடல்கள்

தேசியக் கவி சுப்பிரமணிய பாரதியாருக்கு இயற்கையாகவே இசையறிவு இருந்து இருக்கிறது. தாம் இயற்றும் கவிதைகள் எல்லாம், மக்களால் பாடப்பட வேண்டும் எனும் ஆவல் உடையவராக அவர் வாழ்ந்துள்ளார். அவருடைய சமகால நண்பர்களும் அறிஞர்களுமான வ. வே. சு. ஐயர், பாரதிதாசன் போன்றோரும் தாம் இயற்றிய கவிதைகளைப் பாரதியார். அபிநயத்தோடு பாடிக் காட்டியதைக் கேட்டு மகிழ்ந்துள்ளனர் என்பதையும் அறிகின்றோம்.

---

42 இனிக்கும் நினைவுகள், பக். 45

பாரதியின் இசையறிவு

சென்ற சில நூற்றாண்டுகளில், 'கீர்த்தனை' எனும் இசைப்பாட்டு பெருவழக்காக இருந்தது: இன்றும் ஓரளவிற்கு இருந்து வருகிறது. 'கீர்த்தனை' மரபு ஆந்திர நாட்டில் தோன்றி, தமிழகத்தில் தழைத்து வளர்ந்தது. 'சுந்தரத் தெலுங்கு' எனப் பாரதியார் தெலுங்கினைப் போற்றுகின்ற பொழுது, அதனுடைய இசை அழகாகிய இனிமையையே கருத்தில் கொண்டு இருக்க வேண்டும்.

களிப்பூட்டும் தெலுங்கின் இனிய இசையில் அவர் மயங்கி நின்றது உண்மை. ஆனால், தமிழ்நாட்டில் தமிழ் மக்களுக்குப் புரியக் கூடிய மொழியில் இயற்றப்பட்ட இசைப் பாடல்களே, இசையரங்குகளில் பாடப்பட வேண்டும் எனும் தெளிவுமிக்க சிந்தனையோடு அவர் வாழ்ந்தார்.

> ரசஞானம் இல்லாதபடி பல்லவிகளும் கீர்த்தனங்களும் பாடுவோர் சங்கீதத்தின் உயிரை நீக்கிவிட்டு வெற்றுடலை அதாவது பிணத்தைக் காட்டுகிறார்கள்... முக்காலே மும்மாகாணி வித்துவான்களுக்கு இந்தக் கீர்த்தனங்களின் அர்த்தம் தெரியாது. எழுத்துக்களையும் பதங்களையும் கொலை செய்தும் விழுங்கியும் பாடுகிறார்கள். அர்த்தமே தெரியாதவனுக்கு ரசம் தெரிய நியாயம் இல்லை!.
>
> பூர்வீக மஹான்களுடைய பாட்டுக்களை மறந்து போய்விட வேண்டும் என்பது என்னுடைய கட்சியன்று...
>
> புதிய புதிய கீர்த்தனங்களை வெளியே கொண்டுவர வேண்டும். இப்போது சங்கீத வித்துவான்களிலே தலைமைப்பட்டிருப்போர், தமிழிலே புதிய மெட்டுக்களில் கீர்த்தனங்கள் செய்ய முயல வேண்டும்.[43]

எனும் 'ஸங்கீத விஷய'க் கட்டுரைப் பகுதி, அவருடைய

---

43 மகாகவி பாரதியாரின் கட்டுரைகள், பக். 2:70–71

உள்ளத்தில் நெடுநாட்களாக உறுத்தி வந்த உணர்வுகளை வெளிப்படுத்துகிறது.

இந்தப் பின்னணியில், பாரதியாரின் கவிதைகளை அலசி ஆராய்வோமானால், மிகுதியாகக் கீர்த்தனைகளை அவர் ஏன் இயற்றி இருக்கிறார் என்பதையும், பெரும்பாலான கவிதைகளுக்கு இராகமும், தாளமும்,மெட்டும், சந்தக் குழிப்பும் கொடுத்துள்ளார் என்பதையும் எளிதில் புரிந்து கொள்ளலாம்.

இப்பாரதத் திருநாடு இசையிலே சிறந்து விளங்குவது எனும் உண்மையை,

கானத்திலே அமுதாக நிறைந்த
கவிதையிலே உயர்நாடு[44]

எனப் பாரதியார் அறிவித்துள்ளார். இத்தகைய நாட்டில் தோன்றியுள்ள சிறப்புமிகு கவிஞராகிய தாம், தாளக் கட்டோடு கூடிய இனிய இசைப் பாடல்களை இயற்றும் திறனடைதல் வேண்டும் எனும் அவாவினை,

நண்ணும் பாட்டினொடு தாளம் – சுவைமிக
நன்றா வுளத்தழுந்தல் வேண்டும்– பல
பண்ணிற் கோடிவகை இன்பம் – நான்
பாடத் திறனடைதல் வேண்டும்[45]

என்று அவர் வெளிப்படுத்தியுள்ளார்.

சுப்பிரமணிய பாரதியாரின் பாடல்களைத் தேசிய கீதங்கள், தெய்வப் பாடல்கள், பல்வகைப் பாடல் கள். முப்பெரும் பாடல்கள். புதியதாகக் கிடைத்துள்ள பாடல்கள் என ஐவகையாகப் பாகுபடுத்தலாம். இவற்றுள் 315 தலைப்புகளைக் கொண்ட கவிதைகள் உள்ளன இவற்றுள் 115 தலைப்புகளே ஆசிரியப்பா, வெண்பா, கலிப்பா. வஞ்சிப்பா, விருத்தப்பா போன்ற பழைய யாப்பு மரபுகளில் இயற்றப்பட்டுள்ளன.[46]

இவற்றுள் பதினெட்டுக் கவிதைகளின் தலைப்புகள்

---

44 பாரதியார் கவிதைகள், பக். 136
45 மேற்படி பக். 70
46 வே. இரா. மாதவன், மு.கு.க.,பக்.4

'பாட்டு' அல்லது 'பாடல்' உடையன. 'ராதைப் பாட்டு', எனும் சொல்லமைப்பு 'கோக்கலே சாமியார் பாடல்" எனும் தலைப்புகளைக் கொண்டு இதனைத் தெளியலாம்.[47]

இவற்றோடு அவர் அமைதி பெறவில்லை. ஐம்பத்தெட்டு தலைப்புகளில் உள்ள கவிதைகளுக்கு வெவ்வேறு இராக, தாளக் குறிப்புகளையும் பாடல்களின் தலைப்புகளிலே அவர் கொடுத்துள்ளார்.[48] இவற்றுள். ''நாத நாமக்கிரியை, ஹிந்துஸ்தான் பியாக், காம்போதி, ஹிந்துஸ்தான் தோடி, புன்னாக வராளி, பூபாளம், ஆபோகி, வசந்தா, மணிரங்கு, சுருட்டி, கானடா, தன்யாசி, முகாரி, செஞ்சுருட்டி. பிலகரி, கேதாரம், பியாக்கமாஸ், வராளி, தாண்டகம், ஸைந்தவி, நாட்டைக் குறிஞ்சி, கரஹரப்பிரியா, ஆனந்த பைரவி, யதுகுல காம்போதி, சக்கரவாகம், சரஸ்வதி மனோகரி, ஸ்ரீ ராகம், சங்கராபரணம் என்னும் 29 இராகங்கள் வெவ்வேறு பாடல்களுக்கும் அமைக்கப்பட்டுள்ளன. இவற்றுள் சில மீண்டும் வந்துள்ளன."

இவை அல்லாமல், சில கவிதைகளுக்குச் சந்த அமைப்பு முறைகளையும், மெட்டுப் பாணிகளையும் பாரதியார் குறிப்பிட்டுள்ளார். 'இந்த ஸ்வர வரிசைகளை மாதிரியாக வைத்துக் கொண்டு அவரவர் மனோபாவப்படி மாற்றிப் பாடுக" எனப் பாரதியார் அறிவித்துள்ளார். இவை யாவும் பாரதியாரின் இசை ஞானத்தை வெளிப்படுத்துகின்றன. மற்றும், தம்முடைய பாடல்களை இசையோடு பாடுவதே பொருத்தம் எனும் கருத்துடையவராக அவர் இருந்தார் என்பதையும் தெரிவிக்கின்றன.

தம்முடைய முன்னோர் பாடியுள்ள பாடல்களில், மக்கள் உள்ளத்தைக் கவர்ந்துள்ள மெட்டுகள், சந்தங்கள் பலவற்றை முன்மாதிரியாகக் கொண்டு, பாரதியார் சில கவிதைகளை அமைத்துள்ளார்.

கோபால கிருஷ்ண பாரதியாரின், 'தில்லை வெளியிலே

---

47 வே.இரா.மாதவன், மு.கு.க.பக்.4

48 மேற்படி.

கலந்து விட்டாரவர்: திரும்பியும் வருவாரோ?' எனும் வர்ணமெட்டில் 'வீரசுதந்திரம் வேண்டி நின்றார்' எனும் பாடலும், 'மாடு தின்னும் புலையா – உனக்கு மார்கழித் திருநாளா?' எனும் சந்தத்தில் 'தொண்டு செய்யும் அடிமை உனக்குச் சுதந்திர நினைவோடா?" எனும் பாடலும் அமைந்துள்ளதை இங்குக் காட்டலாம். இவற்றைப் போல இன்னும் பல பாட்டுகளும் கோபால கிருஷ்ண பாரதியாரின் பாடல் மெட்டுகளில் அமைந்துள்ளன.[49] அண்ணாமலை ரெட்டியாரின் "ஆறுமுக வடிவேலனே' எனத் தொடங்கும் காவடிச் சிந்தின் மெட்டு அமைப்பில் 'எங்கள் தாய்' எனும் பாடலும், "தொன்று நிகழ்ந்தது அனைத்தும்' எனத் தொடங்கும் கவிதையும் அமைந்துள்ளன.

இவை யாவும் பெரிதும் இசையோடு கூடிய கீர்த்தனை அமைப்பிலே பாரதியார் அமைத்துள்ளதைக் காணுகின்றோம். கருநாடக இசையின் செல்வாக்குமிக்க இசை அமைப்பு, பாரதியாரின் கவிதைகளைப் பெரிதும் ஆட்கொண்டுள்ளது.

1. **கீர்த்தனை**

இறைவனுடைய புகழை (கீர்த்தியை)ப் பாடுவதும், சமய தத்துவங்களைக் கூறுவதும் கீர்த்தனைப் பாடலின் பண்பாகும். கீர்த்தனையின் பொதுவடிவம் பல்லவி, அனுபல்லவி, சரணம் எனும் அமைப்பு உடையதாகும். சரணம் ஒரு பத்தியாகவோ, சில பல பத்திகளாகவோ அமையும். கருத்தை எடுத்துரைப்பது பல்லவி; அதனை விரித்துரைப்பது அனுபல்லவி. அந்தக் கருத்தைப் பல நிலைகளில் விளக்குவது சரணம், வண்ணமாகப் பாடக் கூடிய கீர்த்தனைகளில், சரணம் சுர வீச்சுகளுடன் மடக்கி, மடக்கிப் பாடுவதற்கேற்ப ஒரே அடியில் அமையும்.

இவற்றுள் பல்லவி. அனுபல்லவி, சரணங்கள் என்னும்

---

49 'ஓய் நந்தனே', நாம் என்ன செய்வோம்'. 'ஆண்டைக் கடிமை' என்னும் கோபாலகிருஷ்ண பாரதியாரின் பாடல் மெட்டுகள் பாரதியாரின் கவிதைகளில் இடம் பெற்றுள்ளன.

மூன்று உறுப்புகள் அடங்கிய பாடல்களையும், பல்லவி, சரணம் எனும் உறுப்புகள் மட்டும் கொண்ட பாடல்களையும், முதலிரண்டு கூறுகளும் இல்லாமல் சரணங்கள் மட்டுமே அமைந்த பாடல்களையும் பாரதியார் இயற்றியுள்ளமை இங்குக் கருதத்தக்கது.[50]

பாரதியாரின் மறைவிற்குப் பிறகு தோன்றிய 'தமிழிசை இயக்கம்', பாரதியின் இசைப் பாடல் மரபினைப் பின்பற்றிப் பல்வேறு வகையான இசைப் பாடல்களை இயற்றுமாறு பல கவிஞர்களைத் தூண்டியுள்ளதை யாவரும் அறிவர். பாரதிதாசன், நாமக்கல் கவிஞர், கவிமணி. சுத்தானந்த பாரதியார், சுரதா, கண்ணதாசன், சோமு, பெரியசாமித்தூரன், உளுந்தூர்ப் பேட்டை சண்முகம், புலமைப்பித்தன், வைரமுத்து, குருவிக் கரம்பை சண்முகம் போன்ற கவிஞர்கள் இத்தகைய இசைப் பாடல்களை இயற்றியுள்ளனர்.

வாழ்வும் தாழ்வும்

இவர்களுள் கவியரசர் கண்ணதாசன், புலமைப்பித்தன், உளுந்தூர்ப்பேட்டை சண்முகம் போன்றோர் கீர்த்தனையை ஓரளவிற்குப் பயன்படுத்தியுள்ளனர். மற்றவர்கள் கீர்த்தனையைக் கைவிட்டு மக்களுடைய மனத்தை எளிதில் கவரத்தக்க மெல்லிசை மெட்டுகளில் தங்கள் இசைப் பாடல்களைத் திரைப்படங்களுக்காகவே இயற்றி வருகின்றனர்.

பாரதியாரின் காலத்தை ஒட்டி, பாவேந்தர் பாரதிதாசன் இயற்றிய இசைப் பாடல்கள் மிகப் பலவாகும். இவற்றுள் 'இசையமுது' (தொகுதி ஒன்று இரண்டு) எனும் நூல்களும், 'தேனருவி' எனும் நூலும் முழுமையான இசைப்பாடல் நூல்களாகும்.

வெண்ணிலாவும் வானும் போலே

---

50 வே. இரா.மாதவன், மு.கு.க. பக்.7

வீரனும்கூர் வாளும் போல[51]

எனத் தொடங்கும் இசைப்பாடல், தமிழ் மக்களின் இதழ்களில் எல்லாம் உலாவும் பேறு பெற்றதாகும்.

மறப்பதுண்டோ நாதன் நெஞ்சம்
மங்கையே ஈதென்ன வஞ்சம்?[52]

எனத் தொடங்கும் இசைப் பாடலும்,

அத்தானே வேண்டும் அவன்
அன்பேதான் வேண்டும்[53]

எனத் தொடங்கும் இசைப்பாடலும் இசையரங்குகளில் பெரிதும் பாடப்பெற்ற பாடல்களாகும்.

சங்க இலக்கியத்திலும் திருக்குறளிலும் உள்ள சிறப்பு மிகு பாடல்களின் கருத்துகளைப் பாமர மக்களும் புரிந்து கொள்ளத்தக்கவாறு பாவேந்தர் கீர்த்தனைகளாகப் பாடியுள்ள இசைப்பாடல்கள், ' தேனருவி' எனும் இசைப் பாடல் தொகுதியில் இடம் பெற்றுள்ளன. இந்த வகையில் பாரதியாரின் வழிமுறையைப் போற்றுவதன் மூலம், பயன்மிகு புதிய முறைகளைப் பாரதிதாசன் கடைப்பிடித்துள்ளமை இங்கு நினைவுகூர்தற்கு உரியதாகும்.

"கவிமணியின் கீர்த்தனைகள்' எனும் இசைப்பாடல் தொகுப்பு நூல் ஒன்று வெளியிடப்பட்டு இருப்பதை நாடு நன்கு அறியும், நாமக்கல் இராமலிங்கம் பிள்ளை, காந்தியடிகளின் அருமை பெருமைகளையும், சத்தியாக் கிரகம், கதர் இயக்கம். சர்வோதயம் போன்றவற்றின் சிறப்புகளையும் மக்கள் இடையே பரப்புவதற்கு இசைப் பாடல்களைச் சிறந்ததோர் கருவியாகப் பயன்படுத்தியுள்ளார். அவருடைய

சும்மா கிடைக்குமோ சுதந்திர சுகமது – மனமே ![54]

எனும் கீர்த்தனையும்,

---

51 இசையமுது, பக். 46

52 தேனருவி, பக். 37

53 ஷ. பக்.41.

54 நாமக்கல் கவிஞர் பாடல்கள், பக். 338. 'நாமக்கல் கவிஞரின் கீர்த்தனங்கள்" எனும் நூலை இன்ப நிலையம் வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கவிபாடிப் பெருமை செய்யக் கம்ப னில்லை![55]

எனும் இசைப்பாடலும் இசைத் தமிழுலகில் பெருவாழ்வு பெற்ற பாடல்களாகும். இராமலிங்கம் பிள்ளை, தம்மை அறிமுகம் செய்து கொள்ளும் முறையில்,

நாரத கீதமென்ன
நயந்திகழ் பாடலாலே
பாரத நாட்டை என்றும்
பணிந்திடும் சுப்ரமண்ய
பாரதி பாட்டைக் கண்ட
பழையஇத் தமிழர் நாட்டில்
"யாரது?' என்று கேட்க
யானுமிக் கவிகள் சொன்னேன்![56]

எனப் பாடியுள்ளார். இதில் பாரதியின் இசைத் தமிழ்த் தலைமையையும், தாம் அந்த மரபில் வந்தவன் என்பதையும் நாமக்கல் கவிஞர் தெரிவிப்பதையும் காணலாம்.

பாரதியின் வழியிலே ஏராளமான இசைப்பாடல்கள் பாடி, விடுதலைப் போருக்கு ஆதரவைத் தேடித் தந்தவர் கவியோகி சுத்தானந்த பாரதியாவார். தாம் இயற்றிய இசைப் பாடல்களைப் பாரதியாரைப் போன்றே, எடுப்பான இனிய குரலில் இன்றும் பல மேடைகளில் பாடி மக்களை இசை வெள்ளத்தில மூழ்கடிக்கும் பேராற்றல் வாய்க்கப் பெற்றவர் நம் கவியோகி.

சுத்தானந்த பாரதியாரின் 'கீர்த்தனாஞ்சலி' எனும் இன்னிசைப் பாடல் தொகுதியில் உள்ள பாடல்கள் யாவுமே, தலை சிறந்த இசைப் பாடல்கள். அத்தொகுதி யில் உள்ள

அருள் புரிவாய் கருணைக் கடலே!
ஆருயிர் அனைத்தும் அமரவாழ்வு பெறவே![57]

எனும் பாடலும்,

---

55 ஷ, பக். 110.

56 நாமக்கல் கவிஞர் பாடல்கள், பக். 508

57 கீர்த்தனாஞ்சலி, பக். 28

தூக்கிய திருவடி துணையென நம்பினேன்
–துரிய நடராசனே![58]

எனும் பாடலும்,

இல்லையென்பான் யாரடா?– என் அப்பனைத்
தில்லையிலே பாரடா?[59]

எனும் பாடலும் தமிழகத்தின் இசைவாணர்களால் பெரிதும் போற்றிப் பாடப்பட்டுவரும் பாடல்களாகும்.

கவிஞர் சோமு (மீ.ப.சோமசுந்தரம்) இசைப் பாடல்களை இயற்றியுள்ளார். இசையரங்குகளிலும் வானொலியிலும் அவருடைய பாடல்கள் ஒலித்தவண்ணம் உள்ளன. அவருடைய இசைப்பாடல்கள் 'தத்துவ' நோக்குடையனவாகும்.'மனோன்மணி' எனும் பாடலின் ஒரு பகுதியை இங்குக் காண்போம்.

மானிடம் என்ற கிளையினிலே அதன்
மனத்தை நூற்று விழுதாக்கி
ஊனிடை ஒடும் உணர்வினையே – அவள்
ஊஞ்ச லாக்கி ஆடுகிறாள்![60]

தேசிய (விடுதலை) இயக்கத்தில் ஈடுபட்டவர் கவிஞர் பெரியசாமித்தூரன் ஆவார். பாரதியாரின் அடியினைப் பின்பற்றி நூற்றுக் கணக்கான கவிதைகளை இவர் இயற்றியுள்ளார். அவற்றுள் இசைப்பாடல்கள் கணிசமான அளவினதாக உள்ளன. இவருடைய இசைப் பாடல்களின் தொகுதி ஒன்றை அண்ணாமலைப் பல்கலைக் கழகத்துத் தமிழிசைக் கல்லூரி வெளியிட்டுள்ளமை இங்கு நினைவுகூர்தற்கு உரியதாகும்.

ஜெய் ஹிந்த் ஜேய் ஹிந்த்
ஜெய ஜெய ஜேய் ஹிந்த்[61]

எனத் தொடங்கும் கீர்த்தனையும்,

---

58 கீர்த்தனாஞ்சலி, பக். 12
59 " பக்.19
60 மனப்பறவை பக்.120
61 இளந்தமிழா, பக் 72–73.

ஏன் படைத்தாய் எனக்கே பொங்கும்
எழில் நிறைய கமலத்தில் இனிதுறை அயனே![62]

எனும் இசைப்பாடலும், பரவலாக மக்களால் அறியப் பட்டவையாகும்.

திரைப்பட 'இசைச் சித்தரான' கண்ணதாசனும் கீர்த்தனைகள் சிலவற்றை இயற்றி இருக்கிறார். அவற்றுள் சில, நாட்டு மக்களின் நாவில் பெரிதும் நடமாடும் பேறு பெற்றுள்ளன.

மறைந்திருந்து பார்க்கும் மர்மம் என்ன? அழகர்
மலை அழகா! இந்தச் சிலை அழகா?[63]

எனத் தொடங்கும் பாடல், அவருடைய கீர்த்தனைகளில் தலை சிறந்தது எனலாம். இதைப் போன்றே,

சிலர் சிரிப்பார் சிலர் அழுவார் – நான்
சிரித்துக் கொண்டே அழுகின்றேன்[64]

எனும் பாடலும் பாரதியின் வழிவந்த சிறப்புமிகு இசைப் பாடலாகும்.

இசைத் தமிழிற்குப் பாரதியார் ஆற்றியுள்ள அரும் பணியை ஒரு பறவைக் கண்ணோட்டத்தில் கண்டோம் சிந்துவிற்குத் தந்தையாக விளங்கும் சுப்பிரமணிய பாரதியார், தமிழிசை இயக்கத்திற்கு முன்னோடியாகவும் விளங்கினார் எனும் உண்மையைத் தமிழ் மக்கள் அறிந்து கொள்ள இவ்வாய்வுரை பயன்படுமென நம்புகின்றேன்.

---

62 கீர்த்தனை அமுதம், பக். 35
63 திரை இசைப் பாடல்கள், பக். 100
64 ஷ பக்.333

5

புதிய முயற்சி

சுப்பிரமணிய பாரதியாருக்கு இளமையில் இருந்தே, எதிலும் புதுமை காணும் வேட்கை இயல்பாக இருந்து வந்தது. இடைக்காலத் தமிழ்நாட்டில் உண்டான சிந்தனைத் தேக்கமும், அதனால் படைப்புலகில் விளைந்த மலட்டுத் தன்மையும் அவருடைய உள்ளத்தை வாட்டி வதைத்தன.இவற்றோடு, தமிழ் இலக்கியப் படைப்புகள் 'யாப்பு' எனும் சிறைக்குள் சிக்கி, பலர் 'அசை போட்டதையே' தாமும் 'அசைபோட்டுக்' கவிஞர்கள் குதப்பிக் கொண்டு இருந்ததைக் கண்டு அவர் சீற்றமுற்றார்.

"கவிதை
நிலாமுற்ற விளையாட்டின்
நேர்முக வர்ணனையாய்
நிலவிய போது...!

அவன்தான்
அதைப்
பாமர ஏழையின்
பசி விண்ணப்பம் எழுதப்
பயன் படுத்தினான்!

ஜமீன்தார்களின்
வெற்றிலை எச்சில்பற்றி
வெண்பாக்கள்!

ராஜாக்களின்
ராத்திரி ராச்சியத்திற்கான
தேசீய கீதங்கள்!

முதலாளிகளின்
முதுகுசொரியும்
எழுத்தாணிகள்!

பிரபுக்களின்
கட்டில் சத்தத்திற்கும்
பாலுக்கழும் பிள்ளையின்
தொட்டில் சத்தத்திற்கும்
சிலேடை பாடிய
சிருங்காரக் கவிகள்!

ஓ!

இத்தனை திரைகள் தொங்கும்
ராஜவாசல் தாண்டி
அவன்தான்
கவிதையைத் தெருவுக்குக்
கைபிடித்துக் கூட்டிவந்தான்"[1]
அவன் யார்? அவன் தான் பாரதி!

இந்த நிலையால் பாரதியாருக்கு 'மனக்கொதிப்பு' உண்டாயிற்று. இதனால் தமிழிற்கு நல்ல காலம் பிறந்தது.

புதுமை வேட்கை

"புதியன கண்ட போழ்து விடுவரோ
புதுமை பார்ப்பார்"[2]

---

1 இரா.வைரமுத்து,திருத்தி எழுதிய தீர்ப்புகள் பக், 42–43.
2 கம்ப, பால, பூக்கொய். 9.

என்று, அன்று கம்பன் வியந்து பாடினான். இந்த முறையில் ஆயிரமாயிரம் எண்ணங்கள் பாரதியாரின் மனத்தில் அலைமோதின. இதனால், புதியதோர் உணர்ச்சித்துடிப்பை உந்துதலைப் பாரதியார் பெற்றார்.

நைந்துபோன யாப்பு வடிவங்களை பாரதியார் வீசி யெறியத் தொடங்கினார். காலக் கன்னியின் முத்தங்களாய் கண்ணிப்போன கவிதையின் 'பழைய சரக்குகளை' ஆழக்குழி தோண்டிப் புதைக்கலானார்! 'எங்கும் புதுமை! எதிலும் புதுமை!' என அவர் எக்காளமிட்டார்!

'ஏன் இந்தப் புதிய முயற்சியை இலக்கிய உலகில் பாரதி செய்தார்? எனும் கேள்வி. நம்மிடையே எழலாம்.

பழமை 'போதையில்' மூழ்கி, இன்றைய உலகின் –சம கால உலகப் போக்கையும், நிகழ்ச்சிகளையும் உணராதவராக அவர் வாழவில்லை–பழமையின் குறைபாடுகளை–பயனற்ற பண்புகளைக் கண்டார்; அவற்றை அகற்றவும் துணிந்தார். தம் கண் எதிரே வாழும் மக்களின் அல்லல்களையும் வாழ்க்கைச் சிக்கல்களையும் நன்கு உணர்ந்தவராக அவர் விளங்கினார். அவர்களைச் சிந்திக்கும் திறன் உடையவர்களாக மாற்ற முயன்றார். எனவே, அவர்களுக்கு (சாமானிய மக்களுக்கு) நன்குதெரிந்த–அவர்கள் அனுபவத்தில்அறிந்த–செய்திகளை, நிகழ்ச்சிகளை, அவர்களுக்குத் தெரிந்த மொழியில் – அவர்கள் பேசும் மொழியில் எளிமையாக எடுத்துரைப்பதையே தம்முடைய கவிதைப் பணியின் நோக்கமாகக் காலத்தின் போக்கிற்கேற்பப் பாரதியார் கொண்டார். இதனை பாஞ்சாலி சபதத்தின் முன்னுரையில் அவர் தெரிவித்துள்ளதை நாம் முன்னரே கண்டோம். "தமிழ் ஜாதிக்குப் புதிய வாழ்வு தரவேண்டும் என்று கங்கணங்கட்டி நிற்கும் பராசக்தியே என்னை இத்தொழிலிலே தூண்டினாளாதலின், இதன் கண் நம்மவர்க்குப் பிரியந்தருவதாகும் என்றே நம்புகிறேன்!"[3] என்பது அவருடைய துணிவாகும்.

---

3 பா.கவி. பக் 358

மற்றும், இக்கருத்தினை விரிவுபடுத்தி, தம்முடைய கட்டுரைகள் பலவற்றிலும் அவர் இந்த நோக்கத்தினைத் தெளிவுறுத்தியுள்ளார். இத்தகைய 'புதிய சிந்தனை' நம் பாரதிக்குத் தோன்றியதற்குரிய உந்துதல் சக்திகள் பல அவற்றுள், ஐரோப்பியக் கல்விமுறையால் உண்டான "விழிப் புணர்ச்சி' ஒன்று எனலாம். ஆனால், இதனை அவர் உடன் படமாட்டார் என்பது யாவருக்கும் தெரிந்த செய்தி![4] எனினும், ஐரோப்பிய சிந்தனையின் தாக்கம் அவரிடம் இல்லாமல் போகவில்லை. 'விடுதலை வேட்கை', 'தேசிய எழுச்சி', 'அனைத்துலகக் கண்ணோட்டம்' போன்ற உணர்வுகள் அவரை ஆட்கொண்டு இருந்தன. இவை பிரெஞ்சுப் புரட்சியின் பயனாக ஐரோப்பிய சிந்தனையில் கிளர்ந்தெழுந்த எண்ணங்களே என்பதை மனித சிந்தனையின் வரலாற்றை அறிந்தோர் மறுக்க இயலாது.

இவ்வாறே, ஆங்கிலக்கவிஞன் 'ஷெல்லி'யின் தாசனாக (ஷெல்லிதாசன்) விளங்கிய பாரதியிடம். ஷெல்லியை உருவாக்கிய 'வீறுணர்ச்சிக் கவிதை (Romantic Poetry) இயக்க' இயல்புகள் பாதித்துள்ளதை நாம் மறக்க இயலாது.

உணர்ச்சி வெளிப்பாட்டையும், புலனுகர் அனுபவத்தையும் புலப்படுத்தும் அகன்ற பார்வையும், வாழ்க்கைப் புதிர்களைச் சித்திரிக்கும் போக்கும் அறிவாராய்ச்சிக்குப் பதிலாகப் படைப்பாற்றலைப் போற்றும் உணர்வும், நகைச்சுவை நாட்டமும், அநீதியைக் கண்டித்துப் புலம்புதலும் வீறுணர்ச்சிக் கவிதைகளின் இயல்புகளாகும்,[5] இந்த இயல்புகளின் உந்துதலை நாம் பாரதியிடம் காணமுடிகிறது. இந்த வீறுணர்ச்சிக் கவிஞர்கள் "எல்லாருக்கும் தெரிந்த சிறப்பற்ற செய்திகளை, சாமானிய மக்களும் புரிந்துகொள்ளத்

---

4 ஆங்கிலக் கல்விமுறையால் எத்தகைய பயனும் விளையவில்லை என்பதைத் தம்முடைய 'சுயசரிதை யில்' பாரதியார் தெரிவித்துள்ளதைக் காண்க.

5 Graham Hough, The Romantic Poets, pp.7–10

தக்கவகையில், அவர்களுடைய அன்றாடப் பேச்சு மொழியில்" எடுத்துரைப்பதை இலட்சியமாகக் கொண்டு இருந்தனர். இதன் தாக்கத்தை, ஆங்கில மொழியை அறிந்திருந்த பாரதியார் பேரளவிற்குப் பெற்று இருக்கிறார். ஆனால், தம்முடைய நாட்டின் பண்பாட்டிற்கும், காலத்தின் தேவைக்கும் ஏற்ப, அவற்றில் சிற்சில மாற்றங்களை அவர் செய்து கொண்டுள்ளார்.

"சுவை புதிது, பொருள் புதிது, வளம் புதிது
சொற் புதிது, சோதிமிக்க
நவகவிதை, யெந்நாளும் அழியாத
மகா கவிதை யென்று"[6]

தம் கவிதையை உலகம் போற்றுவதாக அவரே, தெரிவித் துள்ளமை இங்கு நினைவுகூரத் தக்கதாகும்.

தன்னுணர்ச்சிப் பாடல்

புதிய பாடுபொருள்களைத் தெளிவாக, எளிதில் எடுத்துரைப்பதற்கு ஏற்றப் புதுவடிவங்களைப் பாரதியார் நாடியுள்ளார்; பரிசோதனையும் செய்துள்ளார். மேற்கு நாட்டுக் கவிஞர்கள் போற்றிய 'லிரிக்' (Lyric) எனும் தன்னுணர்ச்சிப் பாடல்களைத் தம்முடைய உணர்ச்சி வேகத்தை வெளிப்படுத்துவதற்குகந்த கருவியாகப் பாரதியார் கொண்டார். இது அவர்மேற்கொண்ட புதிய முயற்சியின் முதல் கட்டமாகும்.

'தன்னுணர்ச்சிப்பாட்டு' என்பது ஒருவகைக் 'குறும் பாட்டின்' இயல்பையும், வடிவத்தையும் சுட்டுவதற்குப் பயன்படுத்தப்படும் சொல்லாகும்: தொடக்கத்தில் யாழில் (Lyre) இசைத்துப் பாடுவதற்கேற்ற இசைப்பாடலாகக் கிரேக்கர்கள் இதைக் கருதினர். ஆனால், இக்காலத்தில் பெரிதும் 'பாடுபொருளின் புதுமையை'க் குறிப்பிடுவதாகக்[7] கருதுகின்றனர். "சிறப்புமிகு' தன்னுணர்ச்சிப் பாடல்களில் மூன்று கூறுகள் அமைந்து இருக்கும். எந்தப் பொருளை,எந்தச் சூழ் நிலையை, எந்த எண்ணத்தை அடிப்படையாகக் கொண்டு

---

6 பா. கவி, பக். 276.

7 John Erskine, The Elizabethan Lyric, PP. 1–2

பாட்டு எழுகிறதோ, அதற்கு உணர்ச்சி ஊட்டுவது முதற் கூறாகும்; அறிவுத்திறன் வெளிப்படும் உந்துதலை வகையில் கவிதையின் உணர்ச்சியோட்டம் உச்சநிலைக்கு வளர்ந்து செல்லும் பகுதி இரண்டாவது கூறாகும். மூன்றாவதாக ஓர் எண்ணமாக, சிந்தனைத் தெளிவாக, மனப் பாங்காக உணர்ச்சி உருவெடுக்கும் நிலையைக் கூறலாம்.[8]

இந்த மூன்று இயல்புகளையும் கொண்டதாக எளிய சொற்களால்,புதிய பொருளைப்பாடுவது 'தன்னுணர்ச்சிப்பாட்டு' என்பர். காப்பியம் கடந்த காலத்தைக் காட்டும்: தன்னுணர்ச்சிப் பாடல் நிகழ்காலத்தை – சம காலத்தைச் சித்திரிக்கும்.[9]

கவிஞன், தானே பேசும் வகையில் (தன்மை இடத்தில்) அமைவது தன்னுணர்ச்சிப் பாட்டு; தனிமனிதனுடைய உணர்ச்சியை, அனுபவத்தைப் பெரிதும் குறுகிய வடிவில் வெளிப்படுத்துவதே தன்னுணர்ச்சிப்பாட்டு. அந்த உணர்ச்சி நிலை, கண நேரம் (களிப்பினால் அல்லது இன்ப எக்களிப்பால் தோன்றும் மெய்ப்பாட்டைப் போன்று) நிலைப்பதாகவோ, தேசப்பற்றைப் போன்று நெடுங்காலம் நிலைத்து நிற்கக் கூடியதாகவோ இருக்கலாம். ஆனால் உணர்ச்சிப் பெருக்கு, உணர்ச்சிக் கனிவு, உணர்ச்சித் துடிப்பு காட்டாற்று வெள்ளம் போல் திடுமெனத் தோன்றி கட்டற்ற நிலையில் பாய்ந்து ஓடுவதாக இருக்க வேண்டும் என்பர். கதைப் பாடல்களை – கிளைத்தல் கவிதைகளைப் போல, நம்மை ஒரு கருத்தில் இருந்து மற்றொரு கருத்திற்கு அழைத்துச் செல்லு வது தன்னுணர்ச்சிப் பாடலின் நோக்கம் அன்று.[10]

பல்வேறு வகையான விளக்கங்களில் இருந்து "தன்னுணர்ச்சிப்பாடல் குறுகியவடிவுடையது;[11] தனிமனிதர் 'ஒருவரின் (கவிஞராக இருக்க வேண்டும் எனும் கட்டாயம்

---

8 John Erskine, op. cit. P–17

9 Ernest Rhys, Lyric poetry, P 34.

10 M. R. Ridley studies in Three Literatures. p. 82.

11 திறனாய்வாளர் சிலர் பன்னிரண்டு அடியிலிருந்து முப்பது அடி அல்லது மிக அதிகமாகப் போனால் அறுபது அடி வரையறை உடையதாகக் கூறுவர்.

இல்லை) உணர்ச்சிகளையும் எண்ணங்களையும் தனிமனப் போக்கிற்கு முதன்மை இடம் தரும் தற்சார்பு நிலையில் சுருக்கமும் கருத்தோட்டமும் நிறைந்த நிலையில் வெளிப் படுத்துவது" என்பது புலனாகின்றது. இசையின் ஆதிக்கம் குறையக் குறைய, இதில் பொருட் சிறப்பும் நுண்ணயமும் பெருகலாயின.

தன்னுணர்ச்சிப் பாடல்கள் பல வகைப்படும். அவை காதல் பாடல் முதல் சிந்தனைப் பாடல் வரையில் மனித வாழ்க்கையின் பல்வேறு உணர்ச்சித் துடிப்புகளைச் சொற்களால் நின்று நிலைபெறுமாறு தீட்டிக் காட்டும் திறன் வாய்ந்தது. ஒரு மொழியில் உள்ள இலக்கியங்களுள், பெருந்தொகுதியாக இருப்பது தன்னுணர்ச்சிப் பாடல்களேயாகும்,[12]

சங்க இலக்கியத்தில்...

இத்தகைய பாடல்கள் பல, பழைய தமிழ் இலக்கியத்தில் உள்ளன. "தொல்காப்பியர், குறிப்பிடும் 'பண்ணத்தி' என்ற பாடல் இனங்களை 'லிரிக்'களோடு ஒட்டி நினைவுபடுத்திக் கொள்ளலாம்.[13] புறப்பொருள் பற்றிய புறநானூற்றுப் பாடல்கள் சிறப்புமிகு தன்னுணர்ச்சிப் பாடல்களாகும். புறநானூற்றுப் புலவர்கள் தங்கள் மன அலைவுகளையும் உலைவுகளையும், உணர்வுகளையும் தயக்கமில்லாமல் வெளிப்படுத்தியுள்ளனர்.

வெண்ணிக் குயத்தியார் எனும் புலவர் பெருமாட்டி, கரிகாலனின் வெற்றியைப் பாராட்டும் வகையில்,

"வென்றோய்! நின்னினும் நல்லன் அன்றே–
கலிகொள் யாணர் வெண்ணிப் பறந்தலை
மிகப்புகழ் உலகம் எய்தி
புறப்புண் நாணி வடக்கிருந் தோனே![14]

---

12 J. A. Cuddon (ed.) A Dictionary of Literary Terms p. 565.

13 மீ.ப.சோமசுந்தரம், இளவேனில், முகவுரை,

14 புறம். 66

என 'வடக்கு இருந்து' உயிர் துறந்த சேரமான் பெருஞ்சேர லாதனைப் புகழ்ந்துள்ள பாடல், தன்னுணர்ச்சிப் பாடற் பண்புகள் அமைந்ததாகும்.

"அற்றைத் திங்கள் அவ் வெண்ணிலவில்' எனத் தொடங்கும் பாரிமகளிரின் பாடல், பழந்தமிழ் இலக்கியத்தில் தலைசிறந்த தன்னுணர்ச்சிப் பாடலாகும்[15] இதைப் போன்றே,"முல்லையும் பூத்தியோ, ஒல்லையூர் நாட்டே"[16] என முடியும் புறநானூற்றுப் பாடலும் பாரதியாருக்கு முற்பட்ட தமிழ் இலக்கியத்துள், ஒளிரும்ஒப்பற்ற தன்னுணர்ச்சிப் பாடலாகும்.

"சங்கப் பாடல்கள் எல்லாம் 'இலக்கிய மரபு' எனும் கட்டுப்பாட்டிற்குட்பட்ட செயற்கைப் பாடல்கள் அவற்றைத் 'தன்னுணர்ச்சிப் பாடல்கள்' என்று குறிப்பிடுவது பொருந்தாது" எனச் சில திறனாய்வாளர்கள் கருதுகின்றனர். இக்கருத்து, புறப்பொருள் பாடல்களுக்குப் பொருந்தாது. பல்வேறு சூழ்நிலைகளில், தம் உள்ளத்து உணர்ச்சிகளையே சங்க காலச் சான்றோர்கள் வெளிப்படுத்தியுள்ளனர். இப் பாடல்கள் தொகுக்கப்பட்ட காலத்திலேயே திணை துறைகள் எனும் இலக்கிய மரபுகள் வகுக்கப்பட்டு இருத்தல் வேண்டும் என்பதைப் புறநானூற்றுப் பாடல்களைக் கூர்ந்து நோக்கினால், எளிதில் புலனாகும்.

அகப்பொருள் பாடல்கள், 'இலக்கிய மரபு' எனும் கட்டுப் பாட்டினை – விதிகளை அடிப்படையாகக்கொண்டு இயற்றப்பட்டனவாகத் தோன்றுகின்றன. எனவே, இவை 'கவிஞனின் சொந்த உணர்வுகளை, அனுபவங்களை வெளிப்படுத்துவன அல்ல' எனும் காரணத்தினால், இவற்றைத் 'தன்னுணர்ச்சிப் பாடல்கள் அல்ல' என்பர். ஆனால், சங்கப் பாடல்களில்பேரளவினதாக உள்ள 'அகப்பொருள் பாடல்களுள்' சில தன்னுணர்ச்சிப் பாடல்கள் சேர்க்கப்பட்டுள்ளதை

15 புறம்.112
16 வைடி. 242

ஆழ்ந்து அவற்றை நோக்கினால் அறிய இயலும். இதற்குக் குறுந்தொகையில் இருந்து ஒரு பாடலைக் காட்டலாம்.

வெள்ளிவீதியார் எனும் பெண்பாற்புலவரின் கணவர் காணாமல் போய்விட்டார். அவரைத் தேடி நாடெங்கும் அலைந்தார் அந்த அம்மையார். இதனை, உவமை வாயிலாக அவ்வையார்,

"நெறிபடு கவலை நிரம்பா நீளிடை
வெள்ளி வீதியைப் போல நன்றும்
செலவு அயந்திசினால் யானே!"[17]

என்று குறிப்பிட்டுள்ளார். இந்த வரலாற்றுப் பின்னணியைக் கருத்தில் கொண்டு,

"நிலம் தொட்டுப் புகாஅர்! வானம் ஏறார்!
விலங்குஇரு முந்நீர் காலின் செல்லார்!
நாட்டின் நாட்டின், ஊரின் ஊரின்
குடிமுறை குடிமுறை தேரின்,
கெடுநரும் உளரோ? – நம் காதலோரே![18]

எனும் வெள்ளிவீதியாரின் குறுந்தொகைப் பாடலை ஓதுவோமானால், இப்பாடல், அவ்வம்மையின் சொந்த அனுபவத்தைப் புலப்படுத்துவதாகவே தோன்றும்.

இத்தகைய பாடல்களை வெறும் 'அகப்பொருள் பாடல்கள்' என ஒதுக்கிவிடுவது பொருந்தாது.

பக்திப் பாடல்களில்...!

சங்கப் பாடல்களுக்கு அடுத்துத் தேவார, திவ்வியப் பிரபந்தங்களைச் சேர்ந்த பக்திப் பாடல்களை நாம் 'தன்னுணர்ச்சிப் பாடல்' வகையைச் சேர்ந்தவை எனலாம். 'கூற்றாயின வாறு விலக்ககலீர்' எனத் தொடங்கும்

17 அகம்.147
18 குறுந்.130

அப்பரின் தேவாரப்பாடலும்,[19] 'பித்தா பிறைசூடி, பெருமானே அருளாளா' எனும் சுந்தரரின் தேவாரப் பாடலும்,[20] 'கருப்பூரம் நாறுமோ? கமலப்பூ நாறுமோ?' எனத் தொடங் கும் நாச்சியார் திருமொழியும்[21] அருளாளர்களுடைய 'தன்னுணர்ச்சியை' வெளிப்படுத்துவனவாகும்.

ஆனால், தமிழிலுள்ள பக்திப் பாடல்கள் அனைத்தும் 'தன்னுணர்ச்சியை' முழுமையாக வெளிப் படுத்துவன எனக் கூற இயலாது.

"தன்னுணர்ச்சிப் பாட்டோ, 'தன்னை' மறைக்கும் போக்கிற்கு முற்றிலும் மாறுபட்டதாகும். 'என தாவியார்? யான் ஆர்? தந்தநீ கொண்டாக்கினையே"[22] என்று நம்மாழ்வார் பாடுகையில் ஆளுமையின் ஒடுக்கத்தை நாம் தெளிவாகக் கண்டு கொள்ளலாம். தனது அனுபவம்,எண்ணம், கருத்து, சிந்தனை என்பன மதிப்புக்குரியவை; குறிப்பிடத்தக்கன; வெளியிடக் கூடியவை எனக் கவிஞன் நம்பும்போதே தன்னுணர்ச்சிப் பாட்டுத் தோன்றுகிறது. சமயப் பாடல்கள் பலவற்றில் அந்நம்பிக்கை இல்லை[23] எனும் திறனாய்வாளரின் கருத்து உடன்படத் தக்கதாகும்.

ஒடுங்கு தசை

இதற்கடுத்த காப்பிய, சிற்றிலக்கிய எழுச்சிக் காலத்தில் தன்னுணர்ச்சிப் பாடல்கள் இருக்கும் இடம் தெரியாமல் பின்னணிக்குச் சென்றுவிட்டன. இடைக் காலப் புலவர் களில் சிலர், அவ்வப்போது பாடிய சிறுசிறு பாடல்களின் தொகுப்பாகக் கிடைத்துள்ள 'தனிப் பாடல் திரட்டு'களில் ஓரளவிற்குத் 'தன்னுணர்ச்சிப் பாடல் மரபு' தழைத்தோங்கி

---

19 தேவா. 4159

20 ஷ 7225

21 நா. திவ். பிரபந்.567

22 நா. திவ். பிரபந்.2810

23 க. கைலாசபதி, சமூகவியலும் இலக்கியமும், பக். 50.

யுள்ளதைக் காணுகின்றோம். அவ்வையார், சத்திமுற்றப் புலவர், காளமேகம், இரட்டையர் போன்ற புலவர்கள், தங்கள் அனுபவத்தை, உணர்ச்சியை – துன்பத்தைச் சொற்களில் வடித்துத் தந்துள்ளனர்.

"தேங்குபுகழ் ஆங்கூர்ச் சிவனே! அல் லாளிஅப்பா!
நாங்கள் பசித்துஇருக்கை நியாயமோ? – போங்
காணும்
கூறுசங்கு தோல்முரசு கொட்டோசை அல்லாமல்,
சோறுகண்ட மூளியார் சொல்!"[24]

எனும் இரட்டைப் புலவரின் பாடல், அவர்களுடைய பசித் துன்பத்தை வெளிப்படுத்தும் தன்னுணர்ச்சிப் பாடலாகும்.

"தமிழ் நாவலர் சரிதை" எனும் நூலில், இடைக் காலத் தமிழ்ப் புலவர்களின் வாழ்க்கை வரலாறு தொடர்பான சில நிகழ்ச்சிகளைப் புலப்படுத்தும் தன்னுணர்ச்சிப் பாடல்கள் பல இடம்பெற்றுள்ளன. இந்த மரபினைத் தொடர்ந்து மாயூரம் வேதநாயகம்பிள்ளை அவர்களின் தனிப்பாடல்களுள் சில, வாழ்க்கை வரலாற்று ஓவியங்களாக உள்ளன.

ஆனால், இவை யாவும் மேற்கு நாட்டு 'லிரிக்' எனப்படும் தன்னுணர்ச்சிப் பாடல் மரபை அடியொற்றி இயற்றப்பட்டன அல்ல. தமிழ்நாட்டில், தமிழ்ப் புலவர் போற்றி வளர்த்த 'புறநானூற்று' மரபின் வழி வந்தவை.

பாரதி வகுத்த வழி

இந்த மரபு பாரதியின் காலத்திற்குள் அருகிப் போய் விட்டது என்றோ, இந்த இலக்கிய வாய்க்கால் தூர்ந்து விட்டது என்றோ சொல்லுவதற்கு இல்லை. ஆனால், மேற்கு நாட்டு 'லிரிக்' பற்றிய கொள்கை பாரதியாருக்கு ஒரு புத்துணர்ச்சியை ஊட்டியுள்ளது; புதுமை வேட்கையைத் தூண்டியுள்ளது; புதிய உணர்ச்சிச் சித்திரங்களைத் தீட்ட உந்தியுள்ளது. சமகால "நிகழ்ச்சிகள்", "செய்திகள்""செயல்கள்","உணர்வுகள்"எனும் பல இயல்புகளில்

---

24 கலைச்செல்வி (பதி), தனிப்பாடல் திரட்டு, பக். 44.

யாதாகிலும் ஒன்றையோ, சிலவற்றையோ, அனைத்தையுமோ பாடுபொருளாகக் கொண்டு, மனிதரின் உள்ளத்தில் ஒரு கணப்பொழுதில் உண்டாகும் அகமன அலைவினை அழியாத சொல்லோவியங்களாகப் படைத்துத் தருவதில் பாரதியார் புதியதொரு வழியை இக்காலக் கவிஞர்களுக்கு அமைத்துத் தந்துள்ளார். பாரதியாரின் பாடல்களில் நூற்றுக்குத் தொண்ணூறு விழுக்காடு தன்னுணர்ச்சிப் பாடல்களாகவே உள்ளன. அவற்றில் உணர்ச்சிக் கனிவும், கருத்துருக்கமும், நெகிழ்ச்சியும் மேலோங்கி நிற்கின்றன.

இதனை, நாற்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பே,

> "கருத்துருக்கத்திற்குக் காரணமான "லிரிக்" என்று ஆங்கிலத்தில் வழங்கப்படும் தனிப்பாடலின் உருவம், நவீன இலக்கியத்தில் ஷெல்லியைப் போல யாராலும் கையாளப்படவில்லை என்பது ஆங்கில விமரிசகர்களின் அபிப்பிராயம், அவ்வுருவத்தை பாரதி அதிசய வேகத்துடன் கையாண்டிருக்கிறார். 'ஊழிக் கூத்து' அதனுடைய முடி மணிகளில் ஒன்று. ஷெல்லியின் மேற்குக் காற்று, தாகூரின் 'ஊர்வசி', பிரான்சிஸ் தாம்ஸனது 'ஹவுண்ட் ஆப் ஹெவன்' (Hound of Heaven) முதலியன அந்த 'லிரிக்' அமைப்பின் பூர்ணப்பொலிவிற்கு உதாரணங்கள்...பாரதியினுடைய கருத்துருக்கமும், உவமைத் திறமையும், அவ்வளவும் அவருடையதேயானாலும், அவைகளின் அமைப்பில், பாரதியின் கண்முன் இரண்டு லக்ஷிய புருஷர்கள் இருந்திருக்கிறதாக எனக்குத் தோன்றுகிறது. ஒருவர் ஷெல்லி; மற்றொருவர் காளி தாஸன்"[25]

என்று புத்திலக்கியப் படைப்பாளர்கள் தெரிவித்துள்ளமை நம் கருத்திற்கு வலிவும் பொலிவும் அளிப்பதாகும்.

இந்தப் பாடல் நெறியில் கூட, பாரதியிடம் அறிஞர்கள்

---

25 கு.ப.ராஜகோபாலன் & பெ. கோ.சுந்தரராஜன் (சிட்டி), கண்ணன் என் கவி, பக். 51

வீறுணர்ச்சிக் கவிதையின் தாக்கத்தை (ஷெல்லியின் செல் வாக்கின் மூலம்) கோடிக் காட்டியுள்ளனர். இதனை,

> புதிதாகத் தோற்றம் பெற்ற நடுத்தர வர்க்கத்திலிருந்து வந்த வீறுணர்ச்சிக் கவிஞர்கள், நிலப் பிரபுத்துவ அமைப்புப் பேணி வளர்த்த மேற்கூறிய புதுச் செந்நெறிப் (Neo–Classical) போக்குகளை எதிர்த்து வன்மையாகப் போராடத் தொடங்கினர்...புதுச்செந்நெறியாளர்கள் தற்சார்பற்ற படைப்புக்களைச் சிறப்பிக்க, வீறுணுர்ச்சிக் கவிஞர்கள், தனிமனிதர்களின் உள்ள உணர்வுகளைத் தங்குதடையின்றி வெளிப்படுத்தும் தன்னுணர்ச்சிப் பாடல்களை (Lyrics) அதிக அளவில் போற்றினர். தன்னுணர்ச்சிக் கவிதைகளைத் தமிழ் இலக்கியத்தில் மிகச் சிறந்த அளவிற்கு அறிமுகப்படுத்திய பெருமை வீறுணர்ச்சிக் கவிஞரான பாரதியைச் சாரும். அவன் அறிமுகப் படுத்திய இத்தகைய தன்னுணர்ச்சிப் பாடல் மரபில், அவனுக்குப் பின் வந்தவர்கள் சோதனை முயற்சிகளை மேற்கொண்டு சிறந்த வெற்றியும் பெற்றுள்ளனர்[26]

என்பது ஆராய்ச்சியாளரின் துணிவாகும்.

பாரதியின் சிறப்பு

இந்த நோக்கில், சுப்பிரமணிய பாரதியாரின் கவிதை களைக் காண்போமானால், அவருடைய தன்னுணர்ச்சிப் பாடல்களின் சிறப்பியல்புகள் எளிதில் புலனாகும். "தனி மனிதவாதம் எப்பொழுது எல்லாம் தோற்றம் பெறுகின்றதோ, அப்போதெல்லாம் தன்னுணர்ச்சிப் பாடல்களும் கூடவே மலர்வதைக் காணலாம்"[27] எனும் கருத்திற்கிணங்கப் பாரதியாரின் பாடல்களில், தனிமனிதனின் நலனும்,

---

26 ஜி.ஜான் சாமுவேல், ஷெல்லியும் பாரதியும் – ஒரு புதிய பார்வை, பக். 287

27 ஷெ. பக்க.156

முன்னேற்றமும் முனைப்பாக உள்ளதைக் காணலாம். இங்கே ஒரு கருத்தை நினைவு கூர்தல் வேண்டும்.

> தன்னுணர்ச்சிப் பாடலின் உள்ளார்ந்த பண்பு தனிமனித ஆளுமையாக இருப்பினும், உலகப் புகழ் வாய்ந்த பெரும்பாலான தன்னுணர்ச்சிப் பாடல்கள், 'இலக்கியம்' எனும் சிறப்பினைப் பெற்று விளங்குவதற்குக் காரணம், அவை தனிமனிதனுடைய அனுபவங்களுக்கும், தனியாள் ஒருவருக்குரிய உணர்வுகளுக்கு மட்டும் வடிவம் கொடுக்காமல், மனித குலத்திற்குப் பொதுவான உணர்வுகளுக்கும்அனுபவங்களுக்கும் உருவம் கொடுப்பதனாலேயேயாகும். இதனால்தான், அப்பாடல்களைப் படிக்கும்போது அவை வெளிப்படுத்தும் உணர்வுகளோடு ஒன்றிக் கலக்க இயலுகிறது.[28]

எனும் கருத்து, தன்னுணர்ச்சிப் பாட்டின் 'கவர்ச்சிக்கு'ரிய காரணத்தை அறிவுறுத்துகிறது. தன்னுணர்ச்சிப் பாடல்கள் தனிமனித அனுபவத்தை எத்துணை அளவிற்குப் பொதுமைப்படுத்துகிறதோ, அத்துணை அளவிற்கு அவற்றின் தரம் உயருகிறது.

பாரதியாருடைய தன்னுணர்ச்சிப் பாடல்கள் யாவுமே பொதுமைப் படுத்தப்பட்ட எண்ண வோட்டங்களைக் கொண்டனவாகவுள்ளன.

மங்கிய தோர் நிலவினிலே கனவிலிது கண்டேன்
வயது பதினாறிருக்கும் இளவயது மங்கை
பொங்கிவரும் பெருநிலவு போன்றவொளி முகமும்
புன்னகையின் புதுநிலவும் போற்றவருந் தோற்றம்
துங்கமணி மின்போலும் வடிவத்தாள் வந்து
தூங்காதே யெழுந்தென்னைப் பாரென்று
சொன்னாள்
அங்கதனிற் கண்விழித்தேன் அடடாவோ! அடடா!
அழகென்னுந் தெய்வந்தான் அதுவென்றே
யறிந்தேன்![29]

---

28 W. H. Hudson, Introduction to the Study of Literature
29 பா. கவி, பக்.101

என்ற பாரதியாரின் "அழகுத் தெய்வம்" எனும் பாடல், "வேதாந்தப் பாடலா" கக் கருதப்படுகிறது. ஆயினும், இது சிறந்ததொரு தன்னுணர்ச்சிப் பாடல் என்பதை யாவரும் அறிவர். இந்தப் பாடலில் பொதிந்துள்ள 'தன்னுணர்ச்சி' பாரதி பெற்ற தன்னுணர்ச்சி மட்டும் அன்று! மனிதர்களாகப் பிறந்த அனைவரும், வாழ்க்கையில் யாதாகிலும் ஒரு கட்டத்தில் பெற்ற அனுபவத்தின் சிறு சிதறலாகவே – ஒளிவீச்சாகவே தோன்றுகிறது. எனவே, இப்பாடலினைத் தனி மனித அனுபவத்தின் பொதுமை வெளிப்பாடாகக் கொள்ளலாம்.

இதைப் போன்றே, தேசிய கீதங்கள், சுயசரிதை, கண்ணன் பாட்டு போன்றவை சிறப்புமிகு தன்னுணர்ச்சிப் பாடல்கள் என்பதில் ஐயமில்லை!

பாரதியின் அடிச்சுவட்டில்!

பாரதியின் 'தன்னுணர்ச்சிப் பாடல் வெறி" – 'கூப்பாட்டுக் குரல் – அவருக்குப் பின்வந்த கவிஞர்களின் படைப்புகளிலே பெருக்கெடுத்து ஓடுகிறது; உரத்தக் குரலில் ஒலிக்கிறது!

கவிஞர் மீ.ப. சோமசுந்தரம், "இந்த மறுமலர்ச்சி யுகத்தில், பாரதி ஆங்கில 'லிரிக்' முறையில் சில அற்புதமான பாடல்களைச் செய்துள்ளார். அவருடைய இம்மறுமலர்ச்சிக் கவிதைகளிலே 'லிரிக் கிரை' என்ற நாதம் இதயத்துடிப்பாக ஒலிக்கிறது"[30] என்று குறிப்பிட்டுள்ளமை, தமிழ் இலக்கிய வளர்ச்சியில் ஒரு திருப்பு மையமாகப் பாரதியின் பாடல்கள் அமைந்துள்ளதைத் தெரிவிக்கிறது.

பாரதியின் வழியில் வந்த பாவேந்தர் பாரதிதாசன், தன்னுணர்ச்சிக் கவிதைகள் பலவற்றை இயற்றியுள்ளார்.

விரிந்த வானே, வெளியே – எங்கும்

---

30 மீ.ப. சோமசுந்தரம், இளவேனில், முகவுரை.

விளைந்த பொருளின் முதலே,
திரிந்த காற்றும், புனலும், –மண்ணும்
செந்தீ யாவும் தந்தோய்,
தெரிந்த கதிரும் நிலவும் – பலவாச்
செறிந்த உலகின் வித்தே,
புரிந்த உன்றன் செயல்கள் – எல்லாம்
புதுமை! புதுமை! புதுமை![31]

எனும் "இயற்கை" பற்றிய கவிதை நல்லதோர் எடுத்துக் காட்டாகும். பாரதிதாசன் இதைப் போன்ற எண்ணற்ற 'புதுமைப்' பொருள் பற்றித் தன்னுணர்ச்சிப் பாடல்கள் பல வற்றை இயற்றியுள்ளார். இவருடைய கவித்திறனை, "சொந்த அனுபவங்களைப் பாரதிதாசன் இசைச் சிறப்புடன் பாடியிருக்கும் சின்னஞ்சிறு கவிதைச் சித்திரங்கள், அழகிய ஜ்வாலையை அள்ளி வீசுகின்றன; உள்ளத்தில் மின்னிப் பறக்கும் உண்மைகளை, தமிழ்மொழியில் ஆவேசத்துடன் அமைத்து இருக்கிறார்"[32] என்று திறனாய்வாளர் குறிப் பிட்டுள்ளமை அவருடைய தன்னுணர்ச்சிக் கவிதைகளுக்கே சிறப்பாகப் பொருந்தும்.

பாரதியினைப் பல வழிகளில் போற்றிப் பின்பற்றியவர் கவியோகி சுத்தானந்த பாரதியார் ஆவார்.இவர் இயற்றிய தன்னுணர்ச்சிப் பாடல்கள் சில, தெளிந்த அனுபவ நீரோடையில் பூத்துக் குலுங்கும் புதுமை மலர்களாகும். அவற்றுள் "காலக் கன்னிகை" எனும் கவிதையின் பாடல் ஒன்றைக் காண்போம்.

---

31 பாரதிதாசன் கவிதைகள், தொகுதி 2: பக். 33
32 வி.ஆர்.எம்.செட்டியார், தமிழ்க் கவிதை, பக். 17

கன்னத்திற் கையினை வைத்தொரு கன்னிகை
கால வெள்ளத்தின் கரையினிலே
வன்னப்பொற் சித்திரப் பாவையைப் போலொரு
வார்த்தையும் இன்றித் தனித்து
இருந்தாள்[33]

எனத் தொடங்கும் பாடல், கற்பனை வளமிக்கது; காற்றினும் கடுகியோடும் சந்த இன்பம் வாய்ந்தது; என்றும் உள்ளத்தை ஈர்க்கும் படிமக் காட்சிகளை ஓடும் திரைப்படமாக்கிக் காட்டுவது; கவிஞரின் உள்ளத்தில் பிறக்கும் சொற்கள், தன் அனுபவங்கள் எனும் உணர்வில் மின்னிப் பறக்கும் பொன் துகள்கள்; இழுமெனும் ஒலிநயம், அருவியெனப் பாய்ந்து ஓடுவது!

இத்தகைய தன்னுணர்ச்சிப் பாடல்களைப் பாரதிதாசன் மரபில் வந்த கவிஞர் பலர், தங்கள் சிந்தனை ஆற்றலைக் கற்பனை வண்ணத்தில் குழைத்துத் தந்துள்ளனர். இந்தக் குழுவிற்குள் அடக்க இயலாத, பாரதியின் நேரான வழித் தோன்றல்களாக விளங்கும் கவிஞர் சிலர் உள்ளனர். அவர் களுடைய படைப்புகளில் சிறப்புமிகு தன்னுணர்ச்சிப் பாடல்கள் பல, மெல்லிய பூங்காற்றாகத் தமிழ்க் கவிதையுலகில் வீசிக் கொண்டுள்ளன.

சோமு (மீ.ப.சோமசுந்தரம்) எனும் கவிஞரின் அரிய படைப்புகளைக் கொண்டது "இளவேனில்" எனும் கவிதைத் தொகுப்பாகும். அக்கவிதைகளில் மெய்யுணர்வுச் சாயல் படிந்த கவிதைகளே மிகுதியாக உள்ளன.

மலரே ஏன் நீ உதிர்கின்றாய்
மங்கையே ஏன் நீ முதிர்கின்றாய்

பகலே ஏன் நீ மாய்கின்றாய்
பால்நிலா ஏன்நீ தேய்கின்றாய்

---

33 கவிக்கனவுகள்,எண் 20.

கடலே ஏன் நீ இரைகின்றாய்?
காற்றே ஏன் நீ அலைகின்றாய்?
நதியே யாரை நாடுகின்றாய்?
நாளே எங்கே ஓடுகின்றாய்?[34]

எனும் சிறிய பாடல், எளிய சொற்களால் தன்னுடைய வாழ்க்கை அனுபவத்தால் மனிதன் அறிந்துகொள்ள இயலாத "இயற்கைப் புதிர்கள்" சிலவற்றைச் சிந்தித்துத் தீர்வு காணுமாறு மானிடத்திற்கு அறைகூவுகிறது. பலரும் அறிந்த செய்தி! பலரும் பயன்படுத்தும் சொற்கள்! இவை இரண்டையும் பாவும் ஊடுமாகக் கொண்டு கண்ணையும் கருத்தையும் கவரும் பொலிவுமிகு மென்துகிலினைக் கவிஞர் நெய்துள்ளார்.

இக் கவிதைத் தொகுப்பில் உள்ள கவிதைகளை முப்பது ஆண்டுகளுக்கு முன்பே, அறிஞர் திறனாய்ந்து தெளிந்துள்ளனர்.

> இப்பாடல்களில் எளிய சொற்களே உள்ளன. ஆனால், எத்தனையோ பொருளாழம் வாய்ந்தன. இவற்றை இசையோடு, பொருளுணர்ச்சியோடு நாம் பாடும்போது, உடலையும் உயிரையும் உருக்கும் தன்மையதாய், இதன் ஆற்றல் சிறந்து நிகழ்கின்றது. சோகத்தின் உருவென்றே இப்பாடல் களின் அமைப்பைக் கூறுவது பொருந்தும்.[35]

எனும் பேராசிரியர் எஸ். வையாபுரிப் பிள்ளையின் கருத்துரை, 'சோமு'வின் தன்னுணர்ச்சிப் பாடல் திறத்தைத் தெளிவுறுத்துகிறது.

தேசிய உணர்வுமிக்கவர்: விடுதலைப் போரில் நாட்டம் காட்டியவர் கவிஞர் பெரியசாமித் தூரன். பாரதியாரின் அடிச்சுவட்டைப் பின்பற்றி, இவர் பலவகைப் படைப்புகளைச் செய்துள்ளார். அவற்றுள் தன்னுணர்ச்சிப் பாடல்கள் இங்குக்

---

34 இளவேனில், 'ஏனோ'

35 ஷ முன்னுரை.

குறிப்பிடத்தக்கன. "கண்ணால் கண்டதைக் கண்டவாறு சித்தரிக்கும் ஆற்றல் பெற்ற கவிஞர், கற்பனைச் சிறகால், உண்மையை மிக ஆழமாக அலசிப் பார்க்கும் ஆற்றலும் படைத்தவர்; யாப்பின் அமைதி, இதயத்தை ஈர்க்கும் இன்னிசை வெள்ளமாகப்பெருக்கெடுக்கிறது" எனப்பலவாறாகஅறிஞர்கள் இவருடைய கவித்திறனைப் பாராட்டுவர். 'பூக்காரியைப்' பற்றிய சொல்லோவியம் ஒன்றை இவர் படைத்துள்ளார்.

முல்லைப்பூ என்று சொல்லி
முல்லை நகை தான் மலர
மெல்லியலாள் அன்னம் போல்
வீதிவழி தானடைந்தாள்
சாயம் விட்ட பழஞ்சேலை
தையல் மிகக் காணுகின்ற
தேயும் முகிற் கந்தையிலே,
சேர்ந்தசைந்த மின் போன்றாள்.[36]

எனும் பாடலில், காட்சி அளிக்கும் பூக்காரியை, நாம் எங்கோ எப்பொழுதோ பார்த்த நினைவு வருகிறது அல்லவா? கவிஞர் தூரன் கண்ட பூக்காரி, அவருடைய உள்ளத்தில் எழுப்பிய உணர்ச்சிச் சலனங்களினால், இந்தக் கவிதை வடிவம் பெற்று இருக்கிறது. இதில் தனிமனிதர் ஒருவருடைய தன்னுணர்ச்சி, 'பொதுமைப்படுத்தப்' பட்டு, படிப்போர் உள்ளத்தில் உணர்ச்சி வீச்சினை எழச் செய்கிறது.

பாரதி வழியில் சிந்தனைப் பாடல்கள்

தன்னுணர்ச்சிப் பாடல்களில் பலவகை உண்டு என்பதை முன்னரே கண்டோம். புலனுகர் உணர்வுகளைத் தூண்டுவது ஒரு வகை. பாரதியின் தேசபக்திப் பாடல்கள், கண்ணன் பாட்டு முதல் மேலேகண்ட கவிஞர்களின் பாடல்களை எல்லாம் இந்தப் பிரிவினுள் அடக்கலாம்.

---

36 இளந்தமிழா, பக். 31.

புலன்கடந்த சிந்தனையை மட்டும் 'உசுப்பி'விடும் வகையில், கவிஞனுடைய தன் அனுபவ உணர்வுகளை, உள்ளக் கொந்தளிப்புகளை உலகிற்கு எடுத்துரைப்பன மற்றொரு வகை. இத்தகைய தன்னுணர்ச்சிப் பாடல்களைப் பாரதியின் வழியில் நின்று (ருஷியப் புரட்சி), இன்றும் பல கவிஞர்கள் பாடிவருகின்றனர்.

சிறந்த தேசபக்தரான கவிஞர் எஸ்.டி.சுந்தரம், விஞ்ஞானத்தால் விளைந்துள்ள தீமைகளையும், அதனால் மனித இனம் அழிந்துபடுமோ எனும் அச்சத்தையும் புலப்படுத்தும் தன்னுணர்ச்சிப் பாடல்கள் சிலவற்றை இயற்றியுள்ளார்.

அந்தோ மானிடனே!
அழிவின் மாணவனே!
அழிவை எண்ணிப்பின்
அழிவோர் உயிர்கூட
அவனியில் இல்லாமல்
அழித்தாய் முளைகளையும்
குழந்தைகள் என்செய்தார்?
குருத்துகள் என்செய்தார்?
அவரை அழித்தாய் நீ!
அந்தோ கொடுமையடா!
அழிவே விஞ்ஞானம்
என்றால் அது ஒழிக![37]

எனும் பாடலில் அறிவியலை அழிவு வேலைக்குப் பயன் படுத்துவதனால் உண்டாகும் தீமைகள் அவல உணர்வோடும் எதிர்காலத்தைப்பற்றிய அவநம்பிக்கையோடும் கவிஞரால் எடுத்துரைக்கப்படுகின்றன. 'அழிவிற்குத்தான் விஞ்ஞான அறிவு பயன்படுத்தப்படும் என்றால், அது ஒழிக!' எனக் கவிஞர் 'சாபம்' இடுகிறார்.

அணு ஆயுதங்களால், இரண்டாவது உலகப் போரில் உண்டான, வரலாறு கண்டிராதப் பேரழிவுகளைக் கண்டிக்கும்

---

37 வானமுதம்,பக்.14.

சமகால உணர்வுடன் எஸ்.டி.சுந்தரம் இக்கவிதையைப் படைத்துள்ளார். 'அமைதிப்பணிக்கு அணுசக்தி' எனும் கூப்பாடு உலக அரங்கில் ஒலித்துக் கொண்டிருந்த காலத்தில், அம்முழக்கம், நம் கவிஞரின் உள்ளத்தில் உண்டாக்கிய 'சலசலப்பை' இந்தக் கவிதை வெளிப்படுத்துகிறது.

இந்த அவநம்பிக்கையை கூக்குரலைக் கண்டிக்கின்ற வகையில், விஞ்ஞானத்தால் உண்டாகப் போகும் நன்மைகளைக் கருத்தில் கொண்டு,

காலம் நமக்குக் கதை சொல்லப் போகிறது!
ஓலம் இடாதீர்! உதயம் பிறக்கிறது!
சின்ன அணுவால் செகத்தை மயக்கிடலாம்!
என்ன புதுமை! எல்லாமும் இயற்றிடலாம்![38]

என்று தமிழ் ஒளி அணுவினால், புதியவாழ்வு மனித இனத்திற்குக் காத்துக் கிடப்பதாக அறிவிக்கிறார். மார்க்சியப் பார்வையில், வருங்கால உலகை நோக்கும் இக் கவிஞருக்கு அணுசக்தியால் 'ஆக்கமே விளையும்' எனும் தன்னுணர்வு மேலோங்கி நிற்பதை இப்பாடல் வெளிப்படுத்துகிறது. இவ்வாறு சிந்தனையைத் தூண்டும், சிந்தனைக்கு விருந்தாக அமையும் தன்னுணர்ச்சிப் பாடல்கள், இக்காலத்தில் பெருகி வருகின்றன.

புதுமைக் கால வாழ்க்கையின் பல பகுதிகளையும், நிலைகளையும், இயல்புகளையும் எடுத்துரைக்கும் திறனுடையதாகத் தன்னுணர்ச்சிப்பாட்டு, விரைவான வளர்ச்சியைப் பெற்றுவிட்டது. ஆர்வ மேலீட்டோடு தனிமனிதருடைய உணர்ச்சிகளை வெளிப்படுத்தும் கருவியாக மட்டும், இன்று தன்னுணர்ச்சிப்பாட்டு விளங்கவில்லை! அரசியல், சமுதாயப் பிரச்சினைகள் போன்ற பொதுவான, ஆனால் உடனடியாக மக்கள் வாழ்க்கையை –உணர்வுகளைப் பாதிக்கக்கூடிய செய்திகளைச் சொற்களில் வடித்துத்தரும் பேராற்றலைத் தன்னுணர்ச்சிப் பாடல்கள் பெற்றுள்ளன.

---

38 கவிஞர் தமிழ் ஒளியின் கவிதைகள், பக். 24.

பிறப்புவரி; பெற்றெடுத்த மகற்குவரி;
பிறந்தவர்கள் இறந்து போனால்
இறப்புவரி; பொருளிடையே இருப்பார்க்குச்
சொத்துவரி; ஈடுபட்டுச்
சிறப்புடைய தொழில்புரிவார் செலுத்தும்வரி;
சீனிவரி; உழவு செய்தார்
அறுப்பதற்கும் வரிப்போட்டார்; அதற்குமொரு
புதுக்கதையை ஆய்ந்து சொன்னார்
* * *
வாழ்க்கைவளம் அழிவதற்கோ? வரிகொடுத்தே
இளைப்பதற்கோ மக்கள் ஆட்சி?[39]

எனும் பாடல், கவியரசர் கண்ணதாசன் 'வரிக்கொடுமையை' கண்டிக்கும் வகையில் இயற்றிய பாடலாகும். பாடலில் பொருள்சிறப்பு ஆழமானதாக இல்லை. எனினும், வரிக் கொடுமையால், நாட்டு மக்கள் படும் அல்லலை நம் மனக்கண் முன் இப்பாடல் கொண்டு வந்து நிறுத்துகிறது. சமுதாயத் தின் பலநிலைகளில் உள்ள மக்களும், வரிச் சுமையைத் தாங்க மாட்டாமல் ஓலமிடுவதை இப்பாடலில் நாம் கேட்க முடிகிறது. இந்த வகையில், கண்ணதாசனின் இக்கவிதை சிறப்புமிகு தன்னுணர்ச்சிப் பாடலாகப் படிப்போரின் உள்ள வுணர்ச்சியையும், கருத்தையும் கவருகிறது.

கவிஞர் குலோத்துங்கன் தன்னுணர்ச்சிப் பாடல்கள் பல வற்றைப் படைத்துள்ளார். 'பாரதிதாசன் பரம்பரை'யைச் சேர்ந்தவர் எனும் பாராட்டை முப்பது ஆண்டுகளுக்கு முன்னரே பெற்றவர். எனினும், சுப்பிரமணிய பாரதியாரின் அடிச்சுவட்டைப் பின்பற்றி, அரிய பல கவிதைகளை அவர் படைத்துள்ளார்.

பாரதியின் தன்னுணர்ச்சிப் பாடல்களில் வரலாற்றுணர்வு, சுயவிமர்சனம், அறிவியல் நோக்கு,"மற்றவர் வழி தழுவி" வாழத் தயாராயுள்ள புறநோக்கு, முன்னேற்ற வேட்கை

---

39 கண்ணதாசன் கவிதைகள், முதற்பகுதி, 'அழுகல்வரி'

என்பன முனைப்பாகத் தெரிகின்ற இயல்புகள். இவையே பாரதி பரம்பரையில் வரும் குலோத்துங்கன் கவிதைகளிலும் மேலோங்கிக் காணப்படும் பண்புகள் என்பதே பொருந்தும்"[40] என்பது திறனாய்வாளரின் துணிவாகும்.

'மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள் சொல்வதிலோர் மகிமை இல்லை!' என்று அன்று பாரதியார் அறிவித்தார். இதனைப்

பின் தங்கி நின்றதுவும் பிழையே; கால
பேதமென அமைவுறலாம்; ஆனால், இன்றும்
முன்செல்ல வழிகாணும் முனைப்பில்லாது
மூவேந்தர் பழம்பெருமை முழங்கு வோரை
என்சொல்ல? அவர்திருந்த என்செய்ய?[41]

என மனம் நொந்து பாடுகிறார் குலோத்துங்கன்.

'தம்முடைய குறிக்கோள் யாது?' என்பதை,
எண்ணுவதும் படைப்பதும்எம் பணிகள்; யாங்கும்
எல்லோர்க்கும் சமவாய்ப்பு நிறைந்த தான
மண்ணுலகைச் சமைப்பதுஎம் குறிக்கோள்....
விண்ணுலகம் உண்டெனினும் விழைவோ மில்லை
மீளாத நரகென்றும் பயந்தோ மில்லை[42]

எனத் தெளிவுறுத்துகின்றார். இப்பாடல், அவர் பெற்ற அனுபவத்தின் வழிப்பட்ட, எதிர்காலம் பற்றிய சமவுடைமைச் சமுதாய எண்ணப் போக்கை எடுத்துரைக்கிறது.

'பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ்மொழியில் பெயர்த்தல் வேண்டும்' என்பது பாரதியின் கட்டளை. அப்பொழுதுதான், தமிழில் அறிவியல் சிந்தனை வளரும்; தமிழ் நாட்டில் பல்வகைத் தொழில்கள் பெருகும்; மெல்லத் தமிழினிச் சாகாது; மேற்கு மொழிகள் இந்தப் புவிமிசை ஓங்காது என்பது அவருடைய அறிவுரை. இந்தக் கருத்தினையே,

---

40 குலோத்துங்கன், வாயில் திறக்கட்டும், முன்னுரை, பக்.13.
41 குலோத்துங்கன், மு.கு.நூ பக். 29
42 ஷ பக்.39

ஊசிசெயும் சிறுதொழிலின் நுட்பம்கூற
ஒருகோடி நூல்வேண்டும் தமிழில்; இந்தக்
காசினியில் இன்றுவரை அறிவின் மன்னர்
கண்டுள்ள கலைகளெலாம் தமிழில் எண்ணிப்
பேசிமகிழ் நிலைவேண்டும்...[43]

என்று குலோத்துங்கன் பாடுகிறார்.

இன்று நாட்டிலே 'தலைவர்' எனும் பேருடன் நடமாடும் நயவஞ்சகர்களை – தன்னலப் பேய்களை – கொள்கையில் தெளிவும் செயலில் உறுதியும் இல்லாக் கோழைகளைக் குலோத்துங்கன்,

உள்ளத்தில் உண்மை யின்றி
ஊரெலாம் தலைவர் என்று
கள்ளத்தில் வாழ்வு செய்யும்
களங்கத்தின் சின்னம்[44]

என்று சாடுகிறார். நாட்டின் நிலையை இக்கவிதை நன்கு படம் பிடித்துக் காட்டுகிறது.

இத்தகைய தன்னுணர்ச்சிப் பாடல்களைப் பல்வேறு பொருள்பற்றிக் கவிஞர் குலோத்துங்கன் படைத்துள்ளார், இவருடைய கவிதைகளில், உணர்ச்சியோட்டத்தைவிட. கற்பனைவளத்தைவிட,சமுதாயஉணர்வுமிக்ககருத்தோட்டமே – அழுத்தமாகக் கருத்துகளை வெளிப்படுத்துவதே – முனைப்பாகத் தோன்றுகிறது.

புதிய சிந்தனைகளை, சமுதாயத்தின் அடி மட்டத்தில் உள்ள மக்களின் உள்ளக் குமுறல்களைப் பல புதிய வடிவங்களில் படைத்துத் தரும் கவித்திறன் கைவரப் பெற்றவர் கவிஞர் நா. காமராசன். "எனது முன்னோடிகளில் 'பாரதி' என்கிற கவிஞனும், 'புதுமைப்பித்தன்' என்ற கதாசிரியனும்

---

43 குலோத்துங்கன், வளர்க தமிழ், பக்.19.
44 ஷ பக்.62

என்னைக் கவர்கிறார்கள்"[45] என்று 'தாஜ்மகாலும் ரொட்டித் துண்டும்' எனும் 'காவிய அரும்புகளின்' முன்னுரையில் காமராசன் குறிப்பிட்டுள்ளார்.

காமராசனின் கவிதைகள் எல்லாமே தன்னுணர்ச்சிக் கவிதைகளாக உள்ளன. அவருடைய கவிதைகளின் தனிச்சிறப்பு, உள்ள உணர்ச்சிகளை ஒளிவு மறைவு இன்றிப் பச்சையாக வெளிப்படுத்துவதும், கவர்ச்சிமிகு படிமங்களை (Images) ப் படர விடுவதுமே யாகும்.

மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவரும், ஒரு நாளைக்குச் சுடுகாட்டிற்கோ, இடுகாட்டிற்கோ சென்றாக வேண்டும். அந்தப் புனிதமான இடத்தை 'மயானம்' என்பர். கவிஞர் நா. காமராசன் அந்த 'மயானபூமியை'த் தான் சென்று அடைவதற்கு முன்பே, கண்டு இருக்கிறார். அதன் அருமை பெருமைகளைச் சிந்தித்துள்ளார். தான் வாழுகின்ற காலத்திலேயே, மயானபூமிக்கு'த் தம் கவிதையால் 'மங்களா சாசனம்' செய்துள்ளார்.

தாய்ப்பால் எழுதிய சரித்திர ஏட்டில்
தீயிடும் இடமே! சாவுப் பள்ளமே!
பருவக் கனவின் பசியை மறந்தே
இருவிழி தூங்கும் இரண்டாம் தொட்டிலே![46]

எனத் தொடங்கும் பாடலில், பலர் செல்ல, செல்லாக் காட்டினை வாழ்த்துகிறார்; ஏளனமாக ஏசுகிறார்.

சமுதாயத்தின் வேண்டப்படாதவர்களாக – வெறுக்கப் படுபவர்களாக இழித்தும் பழித்தும் அண்மைக் காலம் வரையில் பேசப்பட்டவர்கள் விலைமகளிர். ஆனால், நடைமுறை உலகில், ஆர்வத்தோடு அவர்களை நாடிச் செல்லும் ஆண்களோ மிகப்பலர். அந்த ஆண்களின் 'தேவைகளை'த் தங்கள்

---

45 நா.காமராசன் கவிதைகள், பக். 281
46 ஷ. பக்.66

வயிற்றுப் பாட்டிற்காக நிறைவேற்றி வரும் அரும்பணியை ஆற்றி வருபவர் விலைமகளிர். இத்தகையோருடைய அவல வாழ்வினை – சோகக் கதையினை – உள்ளக் குமுறலை, சமுதாயத்தின் மீது அவர்கள் கொண்டுள்ள அருவருப்பைக் கலை வடிவில் கவிதையாகத் தந்துள்ளார் காமராசன். தங்களைத் தாங்களே அறிமுகப்படுத்திக் கொள்ளுகிறார்கள், சமுதாயக் 'கொடுமைத்தீயில், தாங்களாகவே வீழ்ந்து மடியும் அந்த 'விட்டில்பூச்சிகள்!

நாங்கள் ரஜனியின் மக்கள்
மன்மதனின் ஒற்றர்கள்
கற்புச் சிறையை உடைப்பதால்
கைது செய்யப் படுகிறோம்!
பாற்கடல் அமுதத்தை தேவர்கள்
சுவைத்து விட்டதால்தான்
எங்கள் இதழ் அமுதத்தை அரக்கர்களுக்கு
வழங்குகிறோம்
எங்களுடைய நீதிமன்றத்தில்தான்
ஒழுக்கம் தண்டிக்கப்படுகிறது.
நாங்கள் நிர்வாணத்தை விற்பனை செய்கிறோம்
ஆடைவாங்குவதற்காக!
எங்களால்
படுக்கை,தொட்டிலின் விசுவரூபமாக மாறுகிறது!
நாங்கள்
மன்மத அச்சகத்தின் மலிவுப் பதிப்புகள்![47]

இத்தகைய தன்னுணர்ச்சிப் பாடல்கள் பலவற்றை உணர்ச்சித் துடிப்பும், மெய்மையப் பாங்கும் உடையனவாகக் காமராசன் படைத்து வருகிறார்.

பாரதியார் படைத்த தன்னுணர்ச்சிப் பாடல்கள் பரிசோதனை முறையில் அமைந்தவை; வாழ்வின் சில துறைகளை, நிலைகளை, நிகழ்ச்சிகளைச் சித்தரித்தன. இன்று,

47 மு.கு.நூ.பக்.168

ஆயிரத்திற்கும் அதிகமான தமிழ்க் கவிஞர்கள் உள்ளனர். அவர்கள் இயற்றும் கவிதைகள் எல்லாமே தன்னுணர்ச்சிப் பாடல்களாக உள்ளன எனச் சொல்லலாம். ஏனெனில், இன்றைய கவிதையில், தனிமனித உணர்வே பெரிதும் வியந்து பேசப் படுகிறது; பொதுமைப்படுத்தப்படுகிறது.

நம்தேசிய கவிஞர் நினைத்துப் பாராத பல்வேறு புதிய பொருள்கள், இன்று 'பாடுபொருளாக' ஏற்றமும் எழிலும் பெற்றுள்ளன. அவர் புகுத்திய புதுமைப் பாடல் நெறி, இன்று அறுகெனப் படர்ந்து ஆல் எனத் தழைத்துத் தமிழிற்கு வளம் சேர்த்து வருகிறது.

பதினான்கு அடிப்பாட்டு

தம் கவிதைத் திறத்தால், புதியதோர் உலகைப் படைக்கத் துடித்தவர் பாரதியார்! புதிய செய்திகளை விறுவிறுப்பாக உணர்ச்சிச் செறிவோடு எடுத்துரைப்பதற்குப் புதிய கவிதை வடிவங்களையும், கருவையும் கையாள அவர் தொடங்கினார். அவற்றுள் ஒன்றான தன்னுணர்ச்சிப் பாடலின் நோக்கும் போக்கும் எத்தகையன என்பதை விரிவாகக் கண்டோம்.

பாரதியார் புதியதாகப் பயன்படுத்திய மற்றொரு வகைப் பாடலை, நாம் **பதினான்கு அடிப்பாட்டு** எனும் பெயரால் குறிப்பிடலாம். ஒரு கருத்தை, ஓர் உணர்ச்சியைச் சிறந்த ஒலிநயத்தோடு கூடிய கவிதையின் மூலம் பதினான்கு அடிவரையறைக்குள் முழுமையாக வெளிப்படுத்துவதற்குரிய கருவியாக இப்புதுவகைப் பாடல் அமைந்துள்ளது.

சானெட்

இதனை ஆங்கிலத்தில் 'சானெட்' (Sonnet) எனும் பெயரால் சுட்டுவர்; தமிழில், 'தனிப்பாசுரம்','தனிப்பா', 'குறும்பா', ஈரேழ்வரிப்பா', 'பதினான்கு அடிப்பா' எனப் பலவாறாக அறிஞர்கள் சுட்டுகின்றனர். இன்று 'பதினான்கு வரிப்பா' எனும் பெயரே பெருவழக்குப் பெற்றுள்ளதைக் காணுகின்றோம்.

'சானெட்' எனும் ஆங்கிலச் சொல், இத்தாலிய மொழி யின் "சொனெட்டே" எனும் சொல்லின் திரிபாகும். "சொனெட்டே" எனும் சொல்லிற்குச் 'சிறிய ஒலி' அல்லது சிறுபா' என்பது இத்தாலிய மொழியில் வழங்கும் பொருளாகும். பொதுவாகப் பதினான்கு அடிகளைக் கொண்டதாக இப்பாடல் இயற்றப்படுகிறது. பெரிதும் குறில் நெடிலான ஈரசைச்சீருடைய ஐஞ்சீரடி உடையதாக வெவ்வேறான சந்தத்தோடு இப்பாடல் அமைக்கப்படுகிறது. மற்றும் அடிதோறும் இறுதிச் சீரில் நுட்பமான ஒலிநயத்தைப் புலப்படுத்துவது இப்பாடலின் சிறப்பு இயல்பாகும்.

ஆங்கில மொழியில் ஒரேவொரு பொருளைப் பற்றிப் பதினான்கு அடிகளில், கவிதை அடிகளின் முடிவில் ஒருவகையான எதுகை நயம் தோன்ற,பாட்டின் முதல் இடை, கடை எனும் முப்பகுதிகளிலும் முறையே எடுத்துக் கொண்ட 'பாடுபொருளின்' அறிமுக விளக்கம், வளர்ச்சி, முடிவு எனும் மூவகைப் பண்புகளும் விளக்கம் பெறும் வகையில் இயற்றப் படும் கவிதையே 'சா னெட்' எனப்படும்.

மேற்கு நாட்டு மொழிகளில், சிறப்பாக ஆங்கில மொழியில் இந்தப் பாவகை பெருவாழ்வு பெற்றுள்ளதைக் காணுகின்றோம்.

ஓரளவிற்குத் தமிழ்யாப்பு வடிவமான ஈரசைச் சீர்களைக் கொண்ட ஆசிரியப்பாவைப் போன்ற அமைப்பினை உடையதாக இப்பாடல் தோன்றுகிறது. ஆசிரியப்பா நாற்சீரடிகளைக் கொண்டது. 'சானெட்' எனப்படும் இப்பாவோ ஐந்துசீர் அடிகளைக் கொண்டதாகும்.

முன்னோடி

சென்ற நூற்றாண்டின் இறுதியில், ஆங்கிலக் கல்வியின் தாக்கத்திற்கு ஆட்பட்ட தமிழ்நாட்டு அறிஞர்கள் இந்தப் பாவகையைத் தமிழில் புகுத்த முயன்றுள்ளனர்

இத் தனிப்பாசுரத் தொகை அன்ன (பிரகிருதி தத்துவ உணர்ச்சியிலே விருப்பமுற்றுத் தம்மை யூக்குதற்கு ஆங்கில நூற்றுணையும் கொண்டு செய்யப்படுவன) வொழுக்கத்தினையே மேற்கொண்டுள்ளது. ஆங்கில நூல் பயிற்சியுடைய தமிழ் மக்கள் தமிழ் மொழியைப் பெரிதும் கவனித்தலன்றிக் கை சோர விடுகின்றனரெனப் பலருங்கூறும் வசைமொழி எம் செவிப்படலும் மனம்பொறோம்; புதுமை வழியால் ஏதேனும் செய்யவேண்டுமென்று புகுந்தேம். அங்ஙனம் புக்குழி யாம் அவ்வக் காலங்களில் சிற்சில விடயங்களைப்பற்றிக் கொண்ட கருத்துக்களைச் செய்யுளுருவமாய்ச் செய்து வெளியிடலாமென்று உன்னினேம்... இப்பாசுரங்களிற் சில புதுக்கருத்துக்கள் காட்டியிருக்கின்றமைபற்றி அஞ்சு வேம்; எமது மெய்ப் பெயரினை வெளியிடாது பரிதிமாற் கலைஞன் என்னும் புனைவுபெயரின் வெளியிடுவேமாயினேம்.[48]

எனும் வி. கோ. சூரிய நாராயண சாஸ்திரியாரின் சிந்தனைப் போக்கு, புதியயாப்புவடிவமான 'பதினான்கு அடிப்பாட்டில்' புதிய பொருள்கள் பற்றித் தாம் கவிதைகள் இயற்றத் தொடங்கிய காரணத்தை வெளிப்படுத்துகிறது.

இத்தகைய கவிதைகளைப் படைக்கும் முயற்சியில் சூரியநாராயண சாஸ்திரியார் ஈடுபட்டார். ஒரேவொரு பொருளைப் பற்றி, அவ்வப்போது தமக்குத் தோன்றும் கருத்துகளை அமைத்துப் பதினான்கடி கொண்ட நேரிசை ஆசிரியப்பாக்களைப் படைத்து, அவற்றிற்குத் 'தனிப்பாசுரம்' எனும் பெயரினை அவர் சூட்டியுள்ளார்.

இந்த முயற்சியில் ஈடுபடுவதற்கு (1900) முன்னர், அவர் மரபுவழிக் கவிதைகள் பல இயற்றியுள்ளார். அவற்றுள் அவயவ அறிக்கை, கடற்கரை யுலா, கலங்கரை விளக்கம், பட்டினக்காட்சி, மதுரை மாநகர், போலியாராய்ச்சியன் எனும்

---

48 தனிப்பாசுரத் தொகை, முகவுரை, 6–7

பாடல்கள் புதுவகையான பொருள்பற்றியன. ஆனால் இவையாவும் வெண்பா, ஆசிரியம், கலித்துறை,விருத்தம் போன்ற பழைய யாப்பு வடிவங்களில் இயற்றப்பட்டனவாகும். இத்தகைய பாடல்கள் பதினொன்றைத் தொகுத்து பாவலர் விருந்து' எனும் பெயருடைய நூலாக அவர் வெளியிட்டுள்ளார்.

எனவே, புதிய புதிய பாடுபொருள்களைப் புதுமையான பாவடிவில் தரவேண்டும் எனும் உந்துதல் சக்தி அவர் உள்ளத்தில் எழுந்ததன் விளைவாக, இத்தகைய புதுமைப் படைப்புகளில் பரிதிமாற்கலைஞர் ஈடுபட்டுள்ளார். "மற்று, இதன் பாசுரங்களனைத்தும் தனித்தனி பதினாலடியளவின வாய்ப் பல்வேறு வகைய பொருள் பொதிந்தனவாம்"[49] என்று அவரே தெரிவித்துள்ளமை இங்குக் கருதத்தக்கது.

இந்த நூலில் உள்ள பாடல்களை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து, 'தனிப்பாசுரத் தொகையில்' சேர்த்து நூலாக வெளியிட டாக்டர் ஜி.யூ.போப் உதவியுள்ளார். அதற்கு "ஆங்கில எதிரொலிகள்"(EnglishEchoes)எனும்தலைப்பினைக்கொடுத்து, சிறந்ததொரு முன்னுரையையும் அவர் வரைந்துள்ளார். அதில்,

> இலக்கிய மரபுகளால் கட்டுண்டு சிறைப்பட்டுக் கிடக்கும் தமிழ் சரஸ்வதி, இந்நூலின் மூலம் புதுமையான போக்கையும், இன்றைய புத்துலகச் சிந்தனையின் நோக்கையும் பெற்றுத் தாம் கட்டிக் காத்து வரும் மதிப்பிட இயலாத பழைய இலக்கியச் செல்வத்தை மேலும் வலுப்படுத்த முனைந்துள்ளாள்[50]

என்று தெரிவித்துள்ளார்.

தமிழ் இலக்கிய வரலாற்றில், பரிதிமாற் கலைஞர் புது வகை இலக்கியத்தைப் படைக்கத் துணிந்துள்ளதை போப்பு குறிப்பாகத் தம் உரையில் வெளிப்படுத்துகிறார்.

---

49 மு.கு.நூல், பக் 7.

50 தனிப்பாசுரத் தொகை, பக். 10.11.

தம்முடைய காலத்தில் தமிழ்ச் செய்யுள் எவ்வாறு இருந்தது என்பதை, "தமிழ் இலக்கியம் நுண்மான் நுழை புலனும், பேரெழிலும் வாய்ந்ததாக இருப்பது உண்மை. ஆனால், பொதுவாக எளிமை, விளக்கம், பொதுமக்களின் விருப்பத்திற்கேற்பத் தன்னை மாற்றி அமைத்துக் கொள்ளும் ஆற்றல் போன்ற இயல்புகள் அற்றதாய்த் தமிழ் இலக்கியம் இருந்து வருகிறது"[51] என்று அவர் தெரிவித்துள்ளார்.

வருங்காலத் தமிழ்க் கவிஞர்களால், 'எளிய நடை நயம், சந்தி இலக்கணத்திற்கு அடிமையாகாமை, சொற்களைப் பிரித்து வழங்குதல். கட்டுப்பாடற்ற இழுமெனும் ஒலிநய அமைப்பு, காலத்திற்கேற்ற கருத்துக்களைத் தழுவுதல் போன்ற புதிய போக்குகளைப் பின்பற்ற இயலுமா? என்பதை இன்று நம்மால் சொல்ல இயலாது!"[52] என்று அவர் குறிப்பிட்டுள்ளார். இந்தக் கூற்றினால், தமிழிலக்கியம் வளர்ச்சி அடைய, மேற்கண்ட புதுமைப் போக்குகளைத் தமிழ்ப்புலவர்கள் ஏற்றுப் போற்ற வேண்டும் எனும் தம் ஆசையை போப்பு, புலப்படுத்தியுள்ளார்.

கலைஞரின் தோல்வி

தமிழ் மொழி, இலக்கியம், பண்பாடு போன்றவற்றில் பேரீடுபாடு கொண்ட இங்கிலாந்தின் நல்லறிஞர், கோடி காட்டிய 'இலக்கியப் புதுநெறியை'ப் பாரதியார், முழுமையாகத் தம்முடைய முன்னறிதிறனால் போற்றி வளர்த்துள்ளதைக் காணுகின்றோம். 'பதினான்கு அடிப்பாவை'த் தமிழில் புகுத்துவதில், அவருக்கு முன்னோடியாகப் பரிதி மாற் கலைஞர் விளங்கினார்.

ஆனால், தம்முடைய முயற்சியில் கலைஞர் வெற்றி பெற்றதாகத் தெரியவில்லை. இதற்குரிய காரணங்கள் பல. முதலாவதாகப் 'புலவருலகம்' இதனால் தம்மைப்பழிக்குமோ?

---

51 ஷெ. பக்.12

52 ஷெ. பக்.13

தூற்றுமோ?" எனும் அச்சம் கலைஞரிடம் காணப்பட்டது. இதன் விளைவாக 'ஒருவகைத் தயக்கம்' அவரை ஆட்கொண்டது. இரண்டாவது 'பழமைப் பற்று' முற்றிலும் அவரைவிட்டு நீங்கவில்லை.[53] மூன்றாவதாகத் தாம் படைக்கும் 'கவிதைகள் எல்லாம் அறிஞர்கள் படித்து மகிழ்வதற்காக' எனும் எண்ணப் போக்கும், அதன்வழிப்பட்ட 'பண்டிதப் பாணியும்' அவருக்கு இம்முயற்சியில் தோல்வியை உண்டாக்கியது. மற்றும், எடுத்துக் கொண்ட பாடுபொருளில் புதுமைக் கவர்ச்சியோ, உணர்ச்சி அலைமோதலோ போதியளவிற்கு அவருடைய கவிதைகளில் இடம் பெறவில்லை.

பாரதியின் வெற்றி

இந்தக் குறைபாடுகள் யாவும், 'மக்கள் கவிஞரான பாரதியினுடைய படைப்புகளில் தலைகாட்டாமையே, 'பதினான்கு அடிப்பாட்டு' வரைவதில் பாரதிக்கு வெற்றியைத் தேடித்தந்தது எனலாம்.

இத்தகைய பாடல்கள் சிலவற்றைப் பாரதியார் சிறந்த முறையில் இயற்றியுள்ளார். அவற்றுள் 'சந்திரிகை' எனும் தலைப்பில் அமைந்த கவிதையைக் காண்போம்.

யாணர்க் குறையுளாம் இந்து நாடதனில்
காணற்கினிய காட்சிகள் பலவினு
மாணப் பெரிய வனப்பமைந்து இன்கவி
வாணர்க்கு அமுதா வயங்கிடு பொருளிதென்று
ஊணப் புலவோன் உரைத்துளன் முன்னாள்
அஃதுதான்:

---

53 மேனாட்டார் 'ஸானெட்'டிற்கு முக்கிய அங்கவிலக்கணமாகக் கொண்ட அடியிறுதி எதுகை, தமிழிலும் அமையக் கூடியதாயினும், அடிமுதலெதுகைபோல அகவற்கு இன்னோசை பயவாமலொழிவதேயன்றிப் பொருட்டெளி வினையும் ஒருவாறு சிதைத்தலை நன்குணர்ந்து அதனை யறவே விடுத்து" எனும் அவருடைய மாணவர் ந. பலராம ஐயரின் நூன்முகக் குறிப்பைக் காண்க.

கருமையில் படர்ந்த வானமாங் கடலிடை
ஒருமையில் திகழும் ஒண்மதித் தீவினின்று
எல்லாத் திசையினும் எழில்பெற ஆற்றுஞ்
சொல்லா இனிமைகொள் சோதிஎன்று ஓதினன்;
ஓர் முறை
கடற்புற மணல்மிசைத் தனியே கண்ணயர்ந்து
இடைப்படு இரவில் இனிதுகண் விழித்துயான்
வானக நோக்கினேன்; மற்றதன் மாண்பினை
ஊனமா நாவினில் உரைத்தலும் படுமோ?
நினைவறும் தெய்விகக் கனவிடைக் குளித்தேன்
வாழிமதி![54]

எனும் இப்பாடல் பதினான்கு அடிகளைக் கொண்டது; ஆனால், பாட்டின் இடையிடையே, 'அஃதுதான்' 'ஓர் முறை' எனும் இரண்டு தனிச் சொற்கள் வந்துள்ளன. இது பாரதி செய்துள்ள 'புதுமையாக்கச் சேர்க்கை' எனலாம்.

இதைப் போன்று 'யான்'[55] எனும் கவிதையையும் பாரதியார் பதினான்கடிப் பாட்டாக இயற்றியுள்ளார். ஆனால், அதில் தனிச் சொல் இல்லை.

இவ்விரு பாடல்களும் ஒரே கருத்தை மையமாகக் கொண்டு சுற்றிச் சுழலுகின்றன; கருத்து வளர்ச்சியில் அல்லது கருத்தினை எடுத்துரைத்தலில் இரண்டு மூன்று நிலைகள் காணப்படுகின்றன. பாரதியார் 'சானெட்' வடிவில் தனிச் சொல் சேர்த்துப் பாடியுள்ளதால், அது கலிப்பாவில் தனிச்சொல் பெற்றுவரும் தரவு, தாழிசை போன்ற அமைப்பு உடையதைப் போன்று தோன்றுகிறது. ஆனால், கலிப்பாவின் அமைப்பில் இருந்து, 'பதினான்கு அடிப்பா' வேறுபட்டு விளங்குவதைக் காண்க.

---

54 பா.கவி. பக்.693–694.
55 பா. கவி பக். 693

பாரதியின் வழியில்..!

மகாகவி பாரதியைப் பின் பற்றி, ச.து.சு. யோகி, தூரன், அ. சீநிவாசராகவன், 'சோமு' போன்றோர் இந்தப் புதுவகைப் பாட்டு அமைப்பைத் தமிழில் கையாண்டுள்ளனர்.

பேராசிரியர் அ. சீநிவாசராகவன், 'எங்கள் பாரதி' எனும் தலைப்பில் இயற்றியுள்ள கவிதை 'சானெட்' எனப்படும் பாட்டைப் போன்றது.

செம்புக்கும் கொம்புக்கும் சிற்றடிமைப்பட்ட
நெஞ்சிலும்
சீறிடும் வீரம் கொளுத்திய செங்கனல் பாரதி!
உம்பர்க்கும் எட்டாத ஒண்சுவைத் தேனையோர்
சொல்லினால்
உள்ளத்தில் ஊட்டி வளர்த்திடும் தாய் எங்கள் பாரதி!
வெள்ளி நிலாவையும் விண்ணில் சிதறிய மீனையும்
வீசிடும் காற்றையும் நேர்பட வைத்தொரு விஞ்சையில்
கொள்ளை அமுதக் குழம்பு படைத்துப் பருகியே
கோலவெறியில் உலாவும் கவிஎங்கள் பாரதி!
காக்கைக் கருமையில் காவின் பசுமையில் எங்கணும்
காண்பதொன்றே எனக் காட்டும் சுடர்விழி பாரதி!
நோக்குந் திசையினில் நோக்கிட நோக்கிட நாமென
நோக்கிடும் தத்துவ நுண்ணறிவே எங்கள் பாரதி!
பெண்மைக் குலத்தை இழிவு படுத்திய பொய்களை,
பெற்ற பொன்னாட்டை உறிஞ்சித் தடித்த
ஓநாய்களை
ஒண்மையினால் இன்றொழித்த கவிதைப் பெருந்திறல்
உன்னதமே கலைத் தெய்விதமே எங்கள் பாரதி![56]

ஆங்கில யாப்பு முறையைத் தழுவி, ஈரசைச்சீரும், மூவசைச்சீரும் கலந்து, இனிய மெல்லோசையுடைய ஈற்று எதுகையோடு இக்கவிதை இயற்றப்பட்டுள்ளது. ஆனால், ஆங்கிலச் 'சானெட்' எனும் பாடல்களில் பதினான்கு அடிகளே

56 வெள்ளைப் பறவை, பக். 56–57,

வரும்; இப்பாடலிலோ, பதினாறு அடிகள் இடம் பெற்றுள்ளன. பதினான்கடிப் பாடல் இடையிடையே தனிச் சொற்களைச் சேர்த்து, பாரதியார் பரிசோதனை நடத்தியதைப் போன்று, பேராசிரியர் சீநிவாசராகவன் தம்முடைய கருத்தோட்டத்தைப் பதினான்கு அடிகளிலேயே நிறுத்திக் கொள்ளாமல், மேலும் இரண்டு அடிகளுக்குக் கொண்டு சென்று முடிக்கின்றார். இது, இந்த ஆங்கிலப் பேராசிரியர் செய்து பார்த்துள்ள ஒருவகைப் பரிசோதனை முறையாகும்.

பெரியசாமித் தூரன் அவர்கள் பதினான்கு அடிப்பாட்டில், பாரதியை அடியொற்றிப் பலவகை முயற்சிகளை மேற் கொண்டுள்ளார். அவருடைய 'மின்னல்பூ' எனும் கவிதைத் தொகுதியில் 'தருவாய்'எனும் தலைப்பில் அமைந்த பாட்டைச் 'சானெட்' முறையில் இயற்றியுள்ளார். அப்பாடலின் முதல் எட்டு அடிகள் கலிவிருத்தம் போன்றும் அடுத்த நான்கு அடிகள் வஞ்சித்துறை விருத்தம் போன்றும், எஞ்சிய இரண்டு அடிகள் திரும்பவும் கலிவிருத்தம் போன்றும் தோன்றுகின்றன.

அவருடைய 'இளந்தமிழா' எனும் கவிதைத் தொகுப்பில் 'கல்லுடைக்கும் கன்னி' எனும் பாட்டு முற்றிலும் 'சானெட்' வடிவ அமைப்பில் இயற்றப்பட்டுள்ள சிறப்புமிகு கவிதையாகும்.

சாலைக்குச் சல்லியெலாம் சதுராய் உடைத்திடுவேன்
வேலைக்குப் பின் வாங்கேன்; விருப்பமுடன் எந்நாளும்
காலைப் பொழுதிருந்து கங்குல்வரை ஓயாமல்
சேலைத் துணியொன்றைச் சிரஞ்சேர்த்து மைக்கூந்தல்
கட்டியொரு முடியிட்டுக் காய்கின்ற வெயிலிலே
அட்டியின்றிக் கல்லுடைப்பேன்; அடிபுழுதிக்
காற்றினிலும்
சொட்டுமழை கொட்டுமழைத் தொல்லையிலும்
சுத்தியல்சம்
மட்டிகொண்டு தகர்த்திடுவேன் வம்பளந்து
நின்றறியேன்;
உழைப்புக்குக் கெட்டியென்றே ஊர்புகழும்; பணிசெய்ய
அழைப்புக்குப் பஞ்சமில்லை; ஆனபெருங் கல்லெல்லாம்

என்பார்வை பட்டவுடன் எடுத்தால் மசிந்துவிடும் –
என்றாலும் உயிரனையார் 'இதயம்' எனும் கல்லுக்கே
இளைத்தேன்; இளகவைத்தல் என்னாசை வேறில்லை
களைத்தேன் பெருமூச்சாய்க் கண்ணருவியானேனே[57]

எனும் இப்பாடலைப் பலமுறை பாடிப் பார்ப்போமானால், எளிய சொற்களைக் கொண்டு எல்லாருக்கும் தெரிந்த ஒரு பொருளை, ஆற்றொழுக்கான நடையில் ஒரு சொற்சித்திரத்தை ஆசிரியர் படைத்துள்ளதைக் காணலாம். கற்பனை வளம் இல்லை; ஆனால், மெய்மையப் பாங்கு மேலோங்கி நிற்கிறது. எங்கோ, எப்பொழுதோ நாம் பார்த்த கல்லுடைக்கும் பெண்மணி, நம் மனக்கண் முன்னால் தோன்றுகிறாள். இது கவிஞனுடைய வெற்றிக்குரிய அறிகுறியாகும்.

இந்தப் 'பதினான்கு அடிப்பாட்டு', ஆசிரியப்பாவைப் போன்ற வடிவமைப்பு உடையதாகத் தோன்றுகிறது ஆனால் ஆசிரியப்பாவின் இலக்கணத்திற்குப் பொருந்தி வரவில்லை. ஆசிரியப்பாவின் ஒவ்வோர் அடியிலும் (ஈற்றயலடி நீங்கலாக) பெரும்பாலும் ஈரசைகளைக் கொண்ட நாலசைச் சீர்களே இடம் பெறும் . ஆனால், இந்தப் பாட்டில், ஓரடியில் ஈரசைச் சீர்களும் மூவசைச் சீர்களும் மயங்கி வருகின்றன. எதுகை, மோனை முதலியன முறைப்படி அமையவில்லை என்பதும் கருதத் தக்கது.

இவருக்கு அடுத்து, கவிஞர் 'சோமு''இந்த முயற்சியில் ஈடுபட்டுள்ளார். அவருடைய கவிதைத் தொகுப்புகளான 'இளவேனில்', 'மனப்பறவை' என்பனவற்றுள் இரண்டொரு பாடல்கள் இந்த வடிவில் அமைக்கப்பட்டுள்ளன.

ஈழத்து (இலங்கை)த் தமிழ்க் கவிஞர்களும் இந்த முயற்சியினை மேற்கொண்டுள்ளனர். முருகையன், ஆனந்தன், சொக்கன் என்போர், இம்முறையைப் பின்பற்ற முயன்றுள்ளனர். மஹா கவியின் 'குறும்பா' எனும் நூல் பேரளவிற்கு இத்தகைய பாடல்களைக் கொண்டதாகும்.

---

57 இளந்தமிழா, பக்.133

இந்த 'சானெட்' வகைக் கவிதை. தமிழுக்குப் புதியது. கருத்து விரிசலினால், இந்த 'சானெட்' தமிழில் தோன்றவில்லை. அதற்குப் பதிலாக மேல்நாட்டுப் பாணியையும் கையாண்டு பார்ப்போமே என்ற ஆசையால்தான், பாரதி (இம்முறையைக்)கையாண்டார். இதைவிட வசதியான தமிழ் வடிவங்கள் தமிழில் இல்லாமலில்லை. என்றாலும், இப்படியும் ஒன்று உள்ளது என்ற எண்ணத்தோடு பாரதியும் தூரனும் கையாண்டுள்ளனர்"[58] எனும் திறனாய்வாளரின் கருத்து இங்கு நினைவுகூரத் தக்கதாகும். ஆனால், தூரனின் ஒரேவொரு பாடலைச் சான்றாகக் கொண்டு, "தூரன் கவிதை 'சானெட்' என்ற பெயரோடு வந்தாலும், பாரதியின் 'சானெட்டு'ப் போன்று அமையவில்லை"[59] என்று துணிந்துள்ளமை பொருத்தமாகத் தோன்றவில்லை. பெரியசாமித் தூரன் அவர்களுடைய பிற 'சானெட்டு'களையும்ஆராய்ந்துபார்க்கின்றபொழுது,பாரதியின் 'சானெட்டை' விட வடிவாலும், உள்ளடக்கத்தாலும், கருத்து வெளியீட்டாலும் தூரனுடைய படைப்புகள் செம்மைநலம் வாய்ந்தனவாக உள்ளன. இந்தத் துறையில் பாரதியார் முன்னோடி. அவருடைய வழியைப் பின்பற்றிய தூரன், இப்பாவடிவினை அமைப்பதில் முன்னேற்றம் கண்டுள்ளார் எனலாம்.

பாரதியார் பாட்டிலே புதுமையை –புத்தாக்கங்களைச் செய்ய விரும்பினார் என்பதைப் பல்வேறு படைப்புகள் எடுத்துரைக்கின்றன. அவற்றுள், வடிவ அமைப்பில் செய்யப்பட்ட அல்லது புதியதாகப் புகுத்தப்பட்ட ஒரு வடிவமே 'பதினான்கு அடிப்' பாட்டாகும்.

"மனிதனின் எலும்புக் கூட்டமைப்பு ஒன்று; தசையும் இரத்தமும் கொண்டு தோன்றும் புறத்தழகாம் அமைப்பு வேறு ஒன்று. இப்படியே பாட்டின் அடிப்படையாகத் தோன்றும்

---

58 தமிழவன், இருபதில் கவிதை, பக்.11

59 ஷ.பக்.11

கட்டமைப்பு ஒன்றாம். மேற்புறத் தோற்றமாம் கோப்பமைப்பு – நெசவமைப்பு – பின்னல் அமைப்பு வேறாம். ஒன்று கரு அமைப்பு; மற்றொன்று அழகமைப்பாம் வனப்பு. வேறு சொற்களால் விளக்கக் கூடிய பாட்டின் கருவே அடிப்படையான கட்டமைப்பு – உர அமைப்பு கரு அமைப்பாம். பாட்டிலே அந்த, அந்த இடத்திற்கேற்ப ஆங்காங்கே எழும் தூண்டல்களாம் உணர்ச்சிகளும், கிளர்ச்சிகளும் மேற்புறக் காட்சி இன்பமாகத் தோன்றும் நெசவமைப்பு (Texture) எனும் வனப்பாம். இவ்வாறு பிரித்தறிவதால் சில உண்மைகள் தோன்றும். இந்நாளைய பாடல்களின் புரட்சி, இந்த வனப்பில் உண்டு. எனவே புரட்சி கருவில் அன்று; உருவில் தான்"[60] எனும் திறனாய்வாளரின் கூற்று, நம் பாரதியின் பதினான்கு அடிப்பாடல்களுக்கு மட்டும் அல்லாமல், அடுத்து வரும் இயல்களில் காணப்போகும் வசன கவிதைகளுக்கும், 'புதுக்கவிதை'களுக்கும் பொருந்துவதாகும்.

---

60 தெ.பொ.மீனாட்சி சுந்தரனார், பாட்டிலே புரட்சி, .10–11.

6

பாட்டிலே புரட்சி

வடிவ அமைப்பிலே பாரதி செய்யத் தொடங்கிய புரட்சி பதினான்கடிப்பாட்டோடு நின்று விடவில்லை. வேறுபல வடிவங்களிலும் தமிழில் கவிதைகளைப் படைக்கும் 'புதிய முயற்சிகளில் பாரதியார் ஈடுபட்டார். 'யாப்பு இலக்கண விதிபிறழாமல் இயற்றப்படுவதே சிறந்த கவிதை எனும் எண்ணப் போக்கில் புலவர்கள் எல்லாம் வாழ்ந்து கொண்டிருந்த காலம் அது. தம்முடைய "கவித்துவம்' எதை அடிப்படையாகக்கொண்டு இருக்கிறது என்பதைப் புரிந்துகொள்ளாமல், பாவாணர்கள் பாட்டியற்றிக் கொண்டிருந்த காலம் அது!

குறுநில மன்னரையும், சிற்றரசர்களையும், நிலப்பிரபுக்களையும் நம்பி அக்காலத்தில் புலவர்கள் வாழ்ந்து கொண்டிருந்தனர்.அக்கால கட்டத்தில் பாரதியார் தோன்றினார். ஆனால் தமிழிற்குக் கருத்தளவில் புதிய செல்வங்களைச் சேர்ப்பதில், திரட்டுவதில் மட்டும் அவர் கருத்தைச் செலுத்தவில்லை! அவற்றை எடுத்துரைப்பதற்குப் பயன்படுத்திய கருவியாகிய கவிதையின் வடிவிலும் பல புதிய மாற்றங்களை –புத்தாக்கங்களைச் செய்வதற்குப் பாரதியார் முயன்றார். 'புதிய கருத்துகளை, புதிய செய்திகளை உணர்ச்சித் துடிப்பு வாய்ந்த, உள்ளத்தைத் தொடக்கூடிய புதிய வடிவில்

கொடுத்தால்தான், மக்களுக்குப் பயன் தரத்தக்கதாகத் தம்முடைய கவிதைகள் அமையும் என்று பாரதியார் நம்பினார்.

பாட்டிற்குச் சிறை

அவருக்கு முன்னர் வாழ்ந்த பாவலர் எல்லாரும் – ஏன் அவருடைய சம காலத்தில் வாழ்ந்த சிறப்புமிகு புலவர் எல்லாரும், செய்யுள் இலக்கணம் எனும் சிறைச்சாலையில் கவிதைகளை அடைத்து வைத்து, அழகு பார்ப்பதிலேயே பேரார்வம் கொண்டு இருந்தனர். இதன் விளைவாக

பண் என்பார், **பாவம்** என்பார், பண்பு
மரபு என்றிடுவார்,
கண்ணைச் சொருகிக் கவிஎன்பார்– அண்ணாந்து
கொட்டாவி விட்டதெல்லாம் கூறுதமிழ் பாட்டாச்சே
முட்டாளே இன்னமுமாப் பாட்டு.[1]

எனும் எண்ணம் எழலாயிற்று. இந்தக் கேள்வியைக் கேட்கும் புதுமைப்பித்தன், பாரதிக்கு முற்பட்ட தமிழ்க் கவிதைகளின் அமைப்பையும், அழகையும் தமக்கேயுரிய ஏளனச் சிரிப்போடு,

செல்லரித்த நெஞ்சின்
சிறகொடிந்த கற்பனைகள்
இடுப்பொடிந்த சந்தத்தில்
இடறிவிழும் வார்த்தைகளில்
ஊரில் பவனி[2]

வந்ததாகச் சித்தரித்துக் காட்டும் அவல நிலை உண்டாயிற்று.

மரபுக்கு அடிமையாகி, வெறும் சொல் விளையாட்(ஜாலங்களில்)டில் ஈடுபட்டுத் தம்மை ஆதரிக்கும் வள்ளலையோ, தாம் வழிபடும் தெய்வத்தையோ நால்வகைப் பாக்களாலும், தாழிசை, துறை, விருத்தம் எனும் பாவினங்களாலும் புலவர்கள் போற்றிப் பாடிவந்தனர்.

---

1 புதுமைப்பித்தன் கவிதைகள், பக். 64.
2 புதுமைப்பித்தன் கவிதைகள், பக். 34.

அவர்களுடைய கவிதைகளை இலக்கியச் சுவைநல நோக்கில் மதிப்பீடு செய்த 'திருச்சிற்றம்பலக் கவிராயர்,

"அன்னவரோ
இலக்கணத்தைத் தூளாக்கி
இடித்து, சூரணித்து
கலக்கிக் குடித்திறக்கிக்
கவியென்று பேர்சுமந்து
பிலக்கணமாய்ப் பாடிவந்த
பித்தர் சிலபேர்கள்
சொல்லுக்கு உயிரைவிட்டு
சோதாவாய் வார்த்தைகளை
மல்லுக்கு எதிர் நின்று
மடிபிடித்து இழுத்துவந்து
அடுக்கி, கற்குவியல்
ஆக்கி, பல்லையெலாம்
உடைக்கக் கவிபாடி
உயர்கவிதை என்று சொலிப்
படைத்தார்[3]

என்று அங்கலாய்க்கும் நிலை நிலவியதை, யாரும் மறுக்க இயலாது.

ஈழத்துத் தமிழ்க் கவிஞர் முருகையன், பாரதியாரின் காலத்திற்கு முன்னர், தமிழ்க் கவிதையின் நோக்கும் போக்கும் எவ்வாறு இருந்தது என்பதை,

இலக்கணத்தை ஓங்கி இடித்துவந்த தூளை
உலக்கை நுனியில் ஒரு சிறிதும் இன்றி
வழித்துக் கரைத்த மருந்தை வயிற்றுள்
செலுத்தி அடக்கிவிட்டனர்[4]

என்று தெரிவித்துள்ளார்.

மேற்கண்ட கருத்துரைகளை வழங்கியுள்ளவர்கள் திறனாய்வாளர்கள் மட்டும் அல்லர்; நாடு போற்றும் நல்ல தமிழ்க்

---

3 ரகுநாதன் கவிதைகள், பக். 22–23

4 முருகையன் கவிதைகள், பக். 37–38,

கவிதைகளைப் படைத்துத் தந்துள்ள கவிஞர்களுமாவர். இவர்களுடைய 'உள்ளக் குமுறல்', ஏளன உரைகளாக வெளிப்பட்டுள்ளன. ஓரளவிற்கு அவை உயர்வு நவிற்சியாகத் தோன்றும். ஆனால், 'உண்மை நிலையை அவை உணர்த்துவனவாகவே உள்ளன.

'மாடுகளும் வழக்கத்தால் செக்கை சுற்றும்' என்பதைப் போல, உப்புசப்பற்ற கவிதைகளை, தம் 'கவித்துவம்' வெளிப்படுமாறு பண்டிதப்பெருமையோடு பாட்டு இயற்றிய பாவலர்களால், 'தமிழ் வளர்ந்ததா?' என்பதைப் பற்றி எண்ணிப் பார்ப்போமானால், தமிழைக் 'குட்டையில் ஊறிய மட்டை யாக்கும்' அரிய பணியையே, அவர்கள் செய்துள்ளார்கள் என்பது புலனாகும்.

வித்தகர் வேதநாயகர் இந்தப் போக்கினை மாற்ற முயன்றார். அவரால் கருத்து வகையில் –பாடுபொருளில் தான் – மாற்றம் செய்ய முடிந்தது. ஆனால், தமிழ்ப்பாவின் வடிவில், சிறுபரிசோதனையைக் கூட அவர் மேற்கொள்ளவில்லை.

நோக்கமும் ஆக்கமும்

'பாரதியாருக்காகத் தமிழ்மொழி காத்துக் கிடந்தது' எனக் கூறினால், அது தவறாகாது. 'சென்ற சில நூற்றாண்டுகளாகப் புலவர்களும் சாமியார்களும் சேர்ந்து வெகு சாதாரண விஷயங்களை அசாதாரண அலௌகிக அந்தகார நடையில் எழுதுவதுதான் உயர்ந்த கல்வித்திறமை என்று தீர்மானம் செய்து கொண்டிருந்தனர்"[5] என்பது சுப்பிரமணிய பாரதியாரின் கணிப்பாகும்.

மக்களுக்காக இலக்கியப் பணிபுரிய பாரதியார் முயன்றார். இதனால், மக்களால் எளிதில் புரிந்துகொள்ளக் கூடிய இலக்கியக் கலைத்திறன்களை மட்டும் அல்லாமல்,வடிவங் களையும் பயன்படுத்துவதைத் தம்முடைய கடமையாகக் கொண்டார். இதனை,

---

5 பாரதியாரின் கட்டுரைகள். சமூகம்' –'புனர்ஜென்மம்'

"இப்போது உலகம் முழுவதிலுமே ராஜாக்களையும் பிரபுக்களையும் நம்பி, வித்தை பழகும் காலம் போய்விட்டது. பொது ஜனங்களை நம்ப வேண்டும். இனிமேல், கலைகளுக் கெல்லாம் போஷனையும் ஆதரவும் பொது ஜனங்களிட மிருந்து கிடைக்கும். அவர்களுக்கு உண்மையான அபிருசி உண்டாக்கிக் கொடுப்பது வித்துவான்களுடைய கடமை; பிறகு, நல்ல போஷனை கிடைக்கும்"[6] என்றும் அவர் தெரி வித்துள்ளார். இங்கே தெரிவிக்கப்பட்டுள்ள கருத்து,சங்கீத வித்துவான்களுக்கு மட்டும் பொருந்துவதாகத் தோன்ற வில்லை; படைப்பிலக்கியப் பண்டிதர்களுக்கும் கூறப்பட்ட அறிவுரையாக இதனைக் கொள்ளலாம்.

நம் தேசியக் கவிஞருக்கு "யாருக்காக எழுதுகிறோம்? எதற்காக எழுதுகிறோம்?" என்பனவற்றைப் பற்றிய நோக்கத் தெளிவும், உறுதியும் இருந்து வந்ததை இங்கு நாம் கருத்தில் கொள்ள வேண்டும்.மக்களுக்காக எதையும்படைக்க வேண்டும் என்னும் நோக்குடையவராகப் பாரதியார் இருந்ததை மேலே கண்ட கருத்து வெளிப்படுத்துகிறது. 'பட்டம்', 'பரிசு'களுக்காக, கவிதைகளை அவர் இயற்றவில்லை என்பதைப் பல பாடல்கள் தெரிவிக்கின்றன.

மக்களுடைய அறிவுக் கண்களைத் திறக்கவேண்டும். நாட்டுப்பற்றும், மொழிப்பற்றும் வாய்ந்த தேசிய உணர்வைப் பெறுமாறு செய்ய வேண்டும். அதன் மூலம் இந்தியாவின் விடுதலையை விரைவுபடுத்த இயலும் என்பது அவருடைய நம்பிக்கையாகும்.

வெள்ளத்தின் பெருக்கைப்போல் கலைப்பெருக்கும்
கவிப்பெருக்கும் மேவுமாயின்,
பள்ளத்தில் வீழ்ந்துஇருக்கும் குருடர்எல்லாம் விழிப்புற்று
பதவி கொள்வார்[7]

எனவும்,

---

6 பாரதியாரின் கட்டுரைகள் – கலை, பக்.126.

7 பா. கவி. பக். 169

நமக்குத் தொழில் கவிதை; நாட்டிற்கு உழைத்தல்;
இமைப்பொழுதும் சோராது இருத்தல்[8]

எனவும்,

பாட்டுத் திறத்தாலே இவ்வையத்தைப்
பாலித்திட வேண்டும்[9]

எனவும் பாரதியார், தம்முடைய நோக்கத்தை வெளியிட்டுள்ளார்.

இந்திய தேசிய விடுதலைக்கு அடுத்த நிலையில், அவருக்கு வேறொரு நோக்கமும் கவிதைகளைப் படைப்பதில் இருந்து வந்தது. அது எது? அதுதான் தமிழ் மக்களின் விழிப்புணர்ச்சி! தமிழகத்தின் மறுமலர்ச்சி!

> "கீழ்நாட்டின் மறுமலர்ச்சி பகவத் ஆக்ஞை யாகும். இது வெகு சீக்கிரத்தில் ஏற்பட்டுத்தான் ஆகும். இதை எவரும் தடுக்க முடியாது. இந்தப் புனருத்தாரணத்திற்கு முதல்படியாகத் தமிழ்நாட்டை கைதூக்கி விடுவது அத்தியாவசியம். இதற்கு எனது காவியங்கள் சரித்திர பூர்வமாகக் கட்டாயம் தேவை"[10]

எனவே, தம்முடைய இலக்கியப் பணியின் நோக்கங்களுக்கு ஏற்ப, கவிதைகளின் வடிவமும் உணர்த்தும் முறையும் அமைய வேண்டும் என்னும் எண்ணப் போக்கு உடையவராகப் பாரதியார் விளங்கினார்.

அந்தப் போக்கு ஒரு நிலையில் பதினான்கடிப் பாட்டாக வெளிப்பட்டது; மற்றொரு நிலையில் 'வசன கவிதையாக' வடிவெடுத்தது; வேறொரு நிலையில் ஜப்பானிய "ஹைக்கூ" (Haiku) வடிவக் 'குறும்பாடல்'களாகப் பட்டொளி வீசியது; பிறிதொரு நிலையில் கேட்பவர் உள்ளத்தைச் 'சுண்டி, இழுக்கும் இசைப்பாடல்களாகப் பொங்கி வழிந்தது.

---

8 ஷெ. பக்.19

9 ஷெ. பக்.73

10 மதுரை ஆர் ஸ்ரீனிவாச வரத ஐயங்காருக்கு எழுதிய கடிதம், குமரிமலர், சென்னை, திசம்பர் 1981; பக். 62.

முந்தைய இயலில் 'பதினான்கடிப் பாட்டின்' பாங்கினைக் கண்டோம். இந்த இயலில் 'வசன கவிதை'யின் அமைப்பு, அழகு, தாக்கம் ஆகியவற்றைக் காண்போம்.

புதுமையின் தேவை

ஆங்கிலக் கல்வி முறையைப் பாரதி வெறுத்தார். ஆயினும், மேற்கு நாடுகளின் சிந்தனைத் தாக்கத்தின் பிடியிலிருந்து இவரால் தப்பித்துக் கொள்ள இயலவில்லை! ஆங்கில இலக்கியத்தில் உண்டான மாற்றங்களும், புதுமைகளும் பாரதியின் உள்ளத்தைப் பெரிதும் கவர்ந்துள்ளன.

புனைவு நவிற்சி எனப்படும் வீறுணர்ச்சியம் (Romanticism) பாரதியாரை எவ்வாறு ஆட்கொண்டது என்பதை முதல் இயலில் கண்டோம். 'ஷெல்லிதாசன்' எனும் அவருடைய புனைபெயரே, இதற்குப் போதிய சான்றாகும்.

இதன் விளைவாகத் தமிழ்க் கவிதையின் பாடுபொருளான உள்ளடக்கத்தில் பல புதிய செய்திகள், பொருள்கள் இடம் பெற்றமை 'தன்னுணர்ச்சிப் பாடல்கள்' எனும் பகுதியில் விளக்கப்பட்டன அடுத்துக் கவிதையின் வடிவ அமைப்பிலும் பல புதுமைகள் புகுத்தப்படும் நிலை உண்டாயிற்று. அவற்றுள் 'பதினான்கடிப்பாட்டு' முயற்சி தமிழில் இருந்து வரும் 'ஆசிரியப்பாவை' விட எவ்வகையிலும் இது சிறந்து விளங்கவில்லை. ஆசிரியப்பாவில் உள்ள சொற்செட்டும் செறிவும், நுண்ணிய ஒலிநயமும் இந்தப் புதுவடிவப் பாட்டில் இடம் பெறவில்லை.

புதிய, புதிய பாடுபொருள்கள் கவிதையின் உள்ளடக்கத் தில் இடம் பெறத் தொடங்கியதன் விளைவாகக் கவிதையின் வடிவிலும் புதுமை தேவைப்பட்டது. புதிய பாடுபொருள், அறிவியல் வளர்ச்சியால் மனிதனுடைய உள்ளத்திலும், அன்றாட வாழ்க்கையிலும் உண்டான மாற்றங்களின் உந்து தலால் அமைவன. எனவே, புதுமைக் கருத்துகளைப் புதிய

சந்தங்களோடு புத்தம் புதிய வடிவங்களில் அமைக்க உலகத்துப் படைப்பாளிகள் முயன்றனர்.

"மன நிலையின் எதிர் ஒலியே பாட்டின் சந்தம். பழைய மனநிலையின் எதிர் ஒலியே பழைய பாட்டின் சந்தம். அந்தப் பழைய செத்தொழிந்த சந்தங்களையே பாடிவந்தால் செத்தொழிந்த பழமை தோன்றுமே அன்றி நம்மை உயிர்ப் பிக்கும் புதுமை எப்படிப் பிறக்கக்கூடும்? ஆதலின், புதுமன நிலைக்கு ஏற்ற புதுச்சந்தங்களையே அமைத்தல் வேண்டும். தளை,தொடை. அடிவரையறை முதலிய கட்டுப்பாடுகள் இல்லாத பாடல்களே விடுநிலைப் பாடல்கள்' (Free verse)"[11] என்று பல்கலைச் செல்வர் தெ. பொ. மீனாட்சிசுந்தரனார், "வசன கவிதை'யின் தோற்றத்துக்குரிய காரணகாரியங்களைத் தெளிவுறுத்தியுள்ளமை இங்குக் கருதத்தக்கதாகும்.

தொடக்க காலத்தில் யாப்பு முறைகளுக்குக் கட்டுப் படாமல், கவிதை உணர்வுகளுக்கு உரிமைமிகு எழுத்து வடிவம் கொடுக்கும் இப்படைப்பு முயற்சி 'வசன கவிதை' என்றே அழைக்கப்பட்டது. பின்னர், 'யாப்பில்லாக் கவிதை', 'இலகு கவிதை', 'கட்டிலடங்காக் கவிதை' போன்ற பல பெயர்களால் சுட்டப்பட்டது.

இது வசனத்தின் வறண்ட, அறிவு நிலை சார்ந்த இயல்பை மீறியது. கவிதையின் இயல்புகளை முழுமையாகப் பெறாதது.இதனால்தான் 'வசன கவிதை' எனும் பெயரினைப் பெற்றுள்ளது!

பழைய மரபுவழிக் கவிதைகளில் காணப்படும் இலக்கணக் கட்டுப்பாடுகளைத் தகர்த்து எறிந்து, புதிய முறையில், உரிமை உணர்வோடு படைக்கப்படும் பாடல்களே, 'கட்டுப்பாடில்லாக் கவிதைகள்' எனப்பட்டன. புலவனுடைய– கவிஞனுடைய தனிப்பண்புகளை, உள்ளது உள்ளவாறே நமக்கு நன்றாக

---

11 பாட்டிலே புரட்சி, பக், 21

வெளியிடும் ஆற்றல் 'வசன கவிதை'க்கே உண்டு எனும் எண்ணம் சென்ற நூற்றாண்டின் பிற்பகுதியில் பிரான்சு, அமெரிக்கா ஆகிய நாடுகளில் தோன்றியது.

விட்மன் வகுத்த வழி

பாரதியாரைப் பெரிதும் கவர்ந்த புதிய கவிஞர் வால்ட் விட்மன் (Walt Whitman) எனும் அமெரிக்கரா (கி.பி. 1819–1892) வார். இவர், மனிதனையே மையமாக வைத்துப் பலவகைப் பாடல்களை இயற்றியுள்ளார். தேங்கிப் போய்விடாமல்,வற்றாது ஊற்றெடுத்து ஓடிவரும் மனித இனம், உயிர்த்துடிப்புள்ள ஒரு தொடர் கவிதை என்று மனித இனத்தின் மாட்சியை இவர் சித்தரித்துள்ளார்.

விட்மன், விடுதலையுற்ற அமெரிக்காவின், அகமனப் பண்பாட்டு விடுதலையைக் கட்டியங் கூறி வரவேற்றார். ஐரோப்பியப் பண்பாட்டின் பிடியிலிருந்தும், எண்ணப் போக்கில் இருந்தும் அமெரிக்கர் விடுதலை பெற வேண்டும் எனும் துடிப்போடு 'மானிடம் பாடும்' மாமனிதராக இவர் விளங்கினார்.

கி. பி. 1855–இல் விட்மனின் உலகப் புகழ் வாய்ந்த கவிதைத் தொகுப்பு வெளியிடப்பட்டது. 'புல்லின் இதழ்கள்' (Leaves of Grass) என்பது அதன் பெயர். அந்நூலில் இடம் பெற்றிருந்த பாடல்கள் எல்லாமே 'வசன கவிதைகளாக' இருந்தன. யாப்பு எனும் பாட்டின் அடிமை விலங்கை உடைத்தெறிந்து, உணர்ச்சிக்கும், வளமிக்க கருத்திற்கும் அன்றாட வாழ்க்கைப் பிரச்சினைக்கு முதன்மை இடம் தருவனவாக அக்கவிதைகள் புதுவழியைக் காட்டின. இது வரையில் 'வெளிப்படையாக சொல்லக்கூடாதன' என்று மரபுவழிக் கவிஞர்களால் கருதப்பட்டவை எல்லாம் 'பச்சையாக'த் 'தோல் உரித்து'க் காட்டும் முறையில் 'புல்லின் இதழ்களில்" இடம் பெற்றுள்ளமை அதன் தனிப்பெரும் சிறப்பாகும்.

பவுண்ட்டின் கருத்து

விட்மனின் வழியைப் பின்பற்றி அமெரிக்க, ஐரோப்பிய நாடுகளில் ஓர் இயக்கமே தோன்றியது. அதனை 'வசன கவிதை' இயக்கம் எனவும், 'புதுக் கவிதை' இயக்கம் எனவும் கூறுவர். இந்த இயக்கத்தின் தலைவராக இந்த நூற்றாண்டில் சிறப்புற்று விளங்கியவர் எஸ்ரா பவுண்ட் (Ezra Pound) என்பவராவார். இந்த இயக்கத்தின் முப்பெரும் கொள்கைகளை அவர் வகுத்தளித்தார். அவை: 1. பாடுபொருளை நேர்முகமாக அணுக வேண்டும். 2. கவிதையின் பொருள் புலப்பாட்டிற்கும் உணர்ச்சி வெளிப்பாட்டிற்கும் ஒரு சிறிதும் பயன்படாத எந்தச் சிறு சொல்லையும் பயன்படுத்தல் கூடாது 3. சொல் சேர்க்கையில், சொற்றொடர்களில் இசைதழுவி தொடர்கள் அமைய வேண்டும்[12] கவிஞனே, தனக்குச் சிறந்ததெனத் தோன்றும் ஒலிநயத்தை அமைத்துக் கொள்ள வேண்டும்.

"வசன கவிதையின் தந்தை' எனப் போற்றப்படும் எஸ்ரா பவுண்டே (Ezra Pound), திட்டவட்டமான வரையறை ஒன்றைச் செய்திருப்பதாகவும் தெரியவில்லை.

கொள்கைக் குழப்பம்

ஆங்கிலத்தில் 'வசன கவிதையை'ப் படைத்த படைப் பாளிகளே, அதைப்பற்றித் தெளிவான கருத்துடையவர்களாக இருக்கவில்லை. "கட்டுப்பாடற்ற கவிதை', விடுநிலைப் பாட்டு' (Freeverse) எனும் தொடரே மிகவும் நெகிழ்ச்சியானது. அதன் ஒலிநயத்தில் பழக்கப்படாதவருக்கு எந்தப் பாட்டும் 'கட்டுப்பாடற்ற கவிதையாகவே' தோன்றும்" என்று 1917இல் டி எஸ். எலியட் (T. S. Eliot) மொழிந்துள்ளார்.[13]

லாரன்சின் விளக்கம்

1936 அளவில் டி. எச். லாரன்சு எனும் படைப்பாளி, "வசன கவிதை'யை எவ்வாறு இனங்கண்டு கொள்ளுவது

---

12 T. P. Shipley, Dictionary of world Literary' Terms p. 355

13 T. S. Eliot, 'Ezra Pound: His Metric and Poetry in Modern Poetry, (Ed) John Hollnder, OUPUSA;1968: P. 40

என்பதைப்பற்றி, 'புதிய கவிதை'யின் அமெரிக்கப் பதிப்பிற்கு எழுதிய முன்னுரையில் குறிப்பிட்டுள்ளார்.

> ஆனால், 'வசன கவிதைக்கு' எந்தவித இயக்கத்தையும், தாள லயத்தையும் விதிக்க இயலாது. எத்தகைய புதிய விதிகளை நாம் வகுத்தாலும், கண்டு பிடித்தாலும் அவையனைத்தும் ஒரேவோர் இயல்பினையே (கட்டுப்பாடின்மையை) உயிர் நாடியாகக் கொண்டு இருப்பதாகத் தோன்றும். அவை வசன கவிதையைப் படைப்பதில் தவறி விடும். அவை, யாதாவதொரு கட்டுப்பாடும் அளவமைதியும் கொண்ட வடிவ அமைப்பைத்தான் உருவாக்கும்.
>
> வசன கவிதையைப்பற்றி நாம் சொல்லக் கூடியது யாதெனில், "வசன கவிதையில் கட்டுப்பாடான கவிதையின் தன்மையே இராது' என்பது தான். அது மனத்தில் நிலைத்து நிற்கும் இயல்புடையது அன்று; கடந்தகால நிகழ்ச்சிகளை நிறைவார்ந்த எழிலோடு பெறற்கருஞ் செல்வமாக, நம் கவித்திறனால் அதனைப் போற்றிக் காக்கவும் இயலாது. இதைப் போன்றே, நாம் கனவுகண்டு உற்று நோக்கும் எதிர்காலத்தைப் பற்றிய அறிவின் தெள்ளத்தெளிந்த வடிவமாகவும் அது அமைவது இல்லை![14]

என்று 'வசன கவிதை'யின் சிறப்பு இயல்புகளை அவர் வருணித்துச் சொல்லுகிறாரேயொழிய, வரையறுத்துக் கூறவில்லை.

மேலும், அதன் இயல்புகளைத் தெளிவுறுத்த முயலும் லாரன்சு,

> வசன கவிதையில், கணநேரப் புரட்சிகரமான வெளிப்படையான நாடித் துடிப்பைத்தான் நாம் காண இயலுகிறது. செய்யுள் இலக்கியத்தின் அழகிய உருவைச் சிதைத்து, சிதறுண்ட கூறுகளை

---

14 Phoenix: The Posthumous Papers of D.H. Lawrence, (ed), Mc Donald, Penguin New Zaand PP. 220–221

> ஓட்டவைத்துப் புதிய பொருளாகத் தோன்றுமாறு காட்டுவதே வசன கவிதை என்று கருதி, பல கவிஞர்கள் வசன கவிதையைப் படைக்கிறார்கள். தனக்குத்தானே ஒரு தனித்தன்மையைக் கொண்டது வசன கவிதை என்பதையோ, திடுமென உருவாகும் வடிவ அமைப்பை உடையது வசன கவிதை என்பதையோ, அவர்கள் அறிந்து கொள்ளவில்லை. வசன கவிதை 'ஆதியும் அந்தமும்' இல்லாத ஒன்று; அதற்கு 'முடிவு' எனும் முத்தாய்ப்பே கிடையாது...[15]

என்று விளக்கிக் கொண்டே செல்லுகிறார்.

இவ்விளக்கங்கள் யாவும், தொடக்க காலத்தில் 'வசன கவிதை'யைப் பற்றிய வரையறையை உருவாக்க இயலாத ஓர் அவல நிலை, அந்தப் புதிய வடிவை உலகிற்கு அறிமுகப் படுத்தியவர்கள் இடமே இருந்து வந்ததைத் தெரிவிக்கின்றன.

இத்தகைய தெளிவற்ற சூழலுக்கு இடையிலேயே, தமிழிற்குப் 'புதுநெறி காட்டிய புலவரான' பாரதியார், ஒருவாறு வசனகவிதையின் வடிவத்தைப் புரிந்து கொண்டு, அதற்குள், மரபுவழியாக நாம் போற்றும் உயர்ந்த 'பயன் மதிப்புகளின்' சில கூறுகளைக் கணநேரக் காட்சிகளாகப், படைத்து அளித்துள்ளார்.

பாரதியார் கண்ட வசன கவிதை

யாப்புக்குள் கவிதை யாழை மீட்டிவந்த பாரதியாருக்கு இத்தகைய கட்டுப்பாடற்ற கவிதை பெருங் கவர்ச்சியாக அமைந்தது. மக்கள் கவிஞராக விடுதலைக் குரலைச் சங்க நாதம் செய்த நம் கவிஞர், பாட்டின் அமைப்பிலும் 'விடுதலையை'க் காணத் துடித்தார். இறுக்கமான யாப்போசை முறையைத் தளர்த்தி, பேச்சோசைப் பாங்கான கவிதைகளைப் பாரதியார் படைக்கலானார்.

---

15 Phoenix, u. 221–222.

பாரதியாரின் படைப்புகளில், வசன கவிதை ஒரு சிறு பகுதியாகவே காணப்படுகிறது. 'காட்சி' எனும் தலைப்பில் 'இன்பம்' பற்றி ஏழு கவிதைகளும், புகழ்பற்றிப் பன்னிரண்டு கவிதைகளும், 'சக்தி' எனும் தலைப்பில் எட்டு உரைச் செய்யுள்களும், 'காற்று' எனும் தலைப்பில் பதினைந்து பாட்டுரையும், 'கடல்' எனும் தலைப்பில் இரண்டு கவிதை களும், ஐந்து காட்சிகளைக் கொண்ட 'ஜகத் சித்திரம்' எனும் சிறு நாடகமும், இரு காட்சிகளைக் கொண்ட 'விடுதலை' எனும் ஓரங்க நாடகமும், வசன கவிதை வடிவில் அமைக்கப்பட்டுள்ளன.[16]

இவற்றை மேற்போக்காகப் பார்க்கின்றபொழுது, இப்புதிய வடிவத்திலும் தம் கவிதைகளைப் படைக்க பாரதியார் முயன்று இருக்கிறார் அல்லது பரிசோதனைகள் சில செய்துள்ளார் என்பது புலனாகும்.

'காட்சி' எனும் தலைப்பில் 'இன்பம்' பற்றி அமைந்துள்ள கவிதையைக் காண்போம்.

இவ்வுலகம் இனியது. இதிலுள்ள வான்
இனிமையுடைத்து.
காற்றும் இனிது.
தீ இனிது, நீர் இனிது, நிலம் இனிது
ஞாயிறு நன்று. திங்களும் நன்று.
மழை இனிது. மின்னல் இனிது. இடி இனிது.
கடல் இனிது. மலை இனிது. காடு இனிது.
ஆறுகள் இனியன.

மனிதர் மிகவும் இனியர்.
ஆண் நன்று. பெண் இனிது.
குழந்தை இன்பம்.
இளமை இனிது. முதுமை நன்று.
உயிர் நன்று.சாதல் இனிது.[17]

---

16 பா. கவி. பக். 507–550

17 பா. கவி. பக். 507.

இக்கவிதை யாப்பு வடிவக் கட்டுப்பாட்டை உடைத் தெறிந்த நிலையில், அமைந்துள்ளது. எளிய சொற்களா லான கருத்துச் செறிவு இக்கவிதையில் களிநடனம் புரிகிறது; சிக்கலில்லாமல், தெளிவாகக் கருத்து வெளிப்பாடு அழகு வாய்ந்ததாக – கவர்ச்சியுடையதாகத் தோன்றுகிறது! இந்த முறையில் கவிதை இயற்றுவதும் எளிய செயல் அன்று.

பாரதியாரின் இத்தகைய வசன கவிதைகளில், பொருள் நிறைந்த சிறிய, சிறிய வாக்கியங்களை அடுக்கிக் கொண்டு போகும் முறையும், பலவகைகளில் மாற்றிச் சுருள் சுருளாகப் படிப்பதற்கேற்ற முறையும் முனைப்பாக உள்ளன. பாரதி காட்டும் 'காட்சி'களின் பல பகுதிகள் கவிதை ஒளி பொதிந்த, சிறுசிறு பாடல்களாகவே திகழ்கின்றன. அவை உணர்ச்சித் துடிப்புமிகு உயிரோவியங்கள்.

பாரதியாரின் பல்வேறு 'வசன கவிதை'களில், சொல்லும் பொருளும் பின்னிப் பிணைந்து, கருத்தாழமிக்க கவின்மிகு படிமங்களை (Image) நம் மனக்கண் முன்னர் கொண்டு வந்து நிறுத்துகின்றன.

தமிழ் மக்கள், எருமை களைப்போல்
எப்போதும் ஈரத்திலேயே உட்கார்ந்திருக்கிறார்கள்;
ஈரத்திலேயே நடக்கிறார்கள்;
ஈரத்திலேயே படுக்கிறார்கள்;
ஈரத்திலேயே சமையல்;
ஈரத்திலேயே உணவு.
உலர்ந்த தமிழன் மருந்துக்குக்கூட
அகப்படமாட்டான்[18]

இப்பாடலின் கருத்தோட்டம், எருமையை மையாகக் கொண்டு சுற்றிச் சுழலுகிறது, ஒரே சொல், திரும்பத் திரும்ப வருவதிலே ஓர் உணர்ச்சிக் கொந்தளிப்பு வெளிப்படுகிறது; நுண்ணிய ஒலி நயம் இன்பம் ஊட்டுகிறது; இவற்றோடு கற்பனை அழகு கருத்தைக் கவருகிறது; நிகழ்கால மெய்மையத்தை நினைந்து மெய் மறக்கச் செய்கிறது.

---

18 பா.கவி. பக். 535

இத்தகைய 'வசன கவிதைகள்' தமிழ் இலக்கிய உலகில் பாரதியாரால் அறிமுகம் செய்து வைக்கப்பட்டன. அவை, இக்காலப் 'புதுக் கவிதை' இயக்கத்திற்குக் கால்கோள்விழா நடத்தியுள்ளன.

இக்காலத் திறனாய்வாளர், "பாரதி எழுதியவை வசன கவிதைகள் அல்ல, வெறும் வசனம்தான்; கவிதை உணர்வு இக்கவிதைகளில் இருப்பதில்லை"[19] எனும் கருத்தைத் தெரிவித்துள்ளமை இங்கு மறு ஆய்வு செய்யத் தக்கதாகத் தோன்றுகிறது. 'வசன கவிதை'யைத் தமிழிற்கு அறிமுகப்' படுத்தி வைத்தவர் பாரதியார்; இத்துறையில் அவர் ஒரு முன்னோடி. அக்காலத்தில் இன்று செழித்து வளர்ந்து சிறந்துள்ள 'புதுக்கவிதை' அரும்பவில்லை. 'வசன கவிதையே விரும்பத் தகாததாகக் கருதப்பட்ட காலம் அது.

அந்நிலையில், முதன் முயற்சியாகச் செய்யப்பட்ட கவிதைகளில், இக்கால கற்பனையோட்டத்தையும், உணர்ச்சித் துடிப்பையும் எதிர்பார்ப்பது ஏமாற்றத்தைத் தரும். ஒவ்வொரு பொருளையும், கருத்தையும், அவ்வவற்றின் காலச் சூழலில் வைத்து மதிப்பிடுவதே நடுவுநிலையில் நின்று செய்யப்படும் ஆராய்ச்சியாக அமையும்.

பொதுவாக, பாரதியின் 'வசன கவிதைகளைப் பற்றித் திறனாய்வாளர் தெரிவித்துள்ள கருத்துகள் சில இங்கு நினைவுகூரத் தக்கனவாக உள்ளன. "வசனத்தை மீறிய, ஆயினும் கவிதையின் பூரணத்துவத்தை எய்தாத ஒரு முயற்சியாக அவர் படைத்துள்ள 'வசன கவிதைகளே' 'காட்சிகள்'[20] என்பது வல்லிக்கண்ணனுடைய கருத்தாகும்.

போற்றுதலும் தூற்றுதலும்

பாரதியின் கவிதைகளை நாற்பது ஆண்டுகளுக்கு முன்னரே, திறனாய்வு நோக்கில் ஆராய்ந்த கு. ப. ராஜ

19 தமிழவன், இருபதில் கவிதை, பக். 23

20 புதுக் கவிதைகள் தோற்றமும் வளர்ச்சியும், பக்.2

கோபாலன், " 'காட்சியின் பன்னிரண்டு பாகங்களும் வசன காவியங்கள் தான். அவைகளில் இருக்கும் ஜீவனையும், துடிதுடிப்பையும், கவிதைப் பெருக்கையும், காற்றுப் போன்ற ஆனந்த லகரியையும் பார்த்தால், செய்யுளைக் காட்டிலும் வசன காவிய உருவத்தில் இலக்கிய வளர்ச்சிக்கு இடமிருப்பது போலத் தோன்றுகிறது. அக்காட்சிகளில் இருக்கும் சொல்லின்பத்தையும், பொருட் சுவையையும் எடுத்துக்காட்ட இங்கு இடமில்லை"[21] என்று பாரதியாரின் 'வசன கவிதை' பரிசோதனையைப் பாராட்டி வரவேற்றுள்ளார்.

ஆனால், அதே காலகட்டத்தில் தமிழ் இலக்கியத்தைச் சுவைத்து மகிழ, அழகியல் கண்ணோட்டத்தில் அணுகிய ரசிகமணி டி. கே. சிதம்பரநாதனார், "பாரதியாரின் 'வசன கவிதைகள்' 'கவிதையா? அல்லது வசனமா?" "நரசிங்க அவதாரத்தால் (இருவடிவம் இணைந்ததால்) நன்மை உண்டானதைப்போல் இவற்றால் நன்மை உண்டாகுமா?" என்று எள்ளி நகையாடினார். இதற்கு மறுப்புகள் பல எழுந்தன.

பாரதிக்குப்பின் வளமாக வளர்ந்துள்ள 'புதுக்கவிதை'யைக், 'கவிதை' எனப் போற்ற, ஏற்கத் தயங்குபவர் சிதம்பர ரகுநாதன். அதனை 'அராஜகப் போக்கு' உடையன என்று இவர் கண்டித்து வருகிறார். இந்தக் கவிஞுத் திறனாய்வாளரே, டி.கே.சி.யின் வினாவிற்கு விடை கூறும் வகையில், "அவற்றைக் 'கவிதை'தான் என்று பாரதி எங்கேனும் சொல்லி இருக்கிறானா? எழுதியவருக்கே ஏற்படாத சந்தேகம், சில எழுத்தாளர்களுக்கு மட்டும் ஏன் ஏற்பட வேண்டும்? Verse Libre என்ற வெளிநாட்டுப் பதப் பிரயோகத்தை மட்டும் கற்றுக்கொண்ட சிலர்தான், 'வசன கவிதை' என்ற பதச்சேர்க்கையையும் இங்கு உண்டாக்கினார்கள். ஆனால் 'வசன கவிதை' என்ற பதச்சேர்க்கை அர்த்தமற்றது. 'வெஜிடேபிள் பிரியாணி' என்பது மாதிரி. அவை வசனம் தான்;

---

21 கு.ப.ராஜகோபாலன் & பெ. கோ. சுந்தரராஜன் ('சிட்டி'), கண்ணன் என் கவி, பக். 69–70

கவிதை அல்ல. 'தாங்கள் எழுதும் வசனத்தைக் 'கவிதை' எனச் சாதிக்க முயலும் சிலர், அவற்றையும் 'வசன கவிதை' என்று சொல்வதன் மூலம், தமது அசட்டுத்தனத்துக்குப் பாரதியையும் சாட்சியாக்க முயலுகிறார்கள். டி. கே. சி. சொல்லிய உவமை மாதிரி,கிரீடத்தைச் சூட்டுவதாக நினைத் துக்கொண்டு,தலையில் வைக்கோல் புரியைச் சுற்றுவதுபோல் பாரதியைக் கேலிப் பொருளாக்குவது அக்கிரமம். இந்தக் கேள்விபற்றி நான் விரிவாக விவாதம் நடத்தவும் தயாராய் இருக்கிறேன்"[22] என்று மனப்பதிவு முறையில், தம் கருத்தை அவர் தெரிவித்துள்ளார்.

இத்தகைய தாக்குதல்களுக்குரிய 'வசன கவிதையை'த் தமிழில் தொடங்கி வைத்தவர் பாரதியே என்பது வெளிப் படை.

காலத்தின் தேவைக்கும், மக்களின் மனப்போக்கிற்கும் ஏற்ப மாறுவது, வளருவது கலை; மாற்றம் வேண்டா என்றால் 'வளர்ச்சி' வேண்டா, என்பது பொருளாகும். இந்த உண்மையை மகாகவி பாரதியார் நன்கு அறிந்திருந்தார். இதனால், காலத்தின் 'நாடித் துடிப்பை' உணர்ந்து மக்களுக்காக இலக்கியம் படைக்க முன்வந்தார்பாரதியார்!எனவே,புதிய,புதியபாடுபொருள்களுக்கு ஏற்ப, புதுமையும் எளிமையும் வாய்ந்த கவிதை வடிவங்களைப் பயன்படுத்த அவர் முயன்றார். அவற்றுள் இந்நூற்றாண்டின் முதல் பகுதியில் ஐரோப்பா, அமெரிக்கா போன்ற மேற்கு நாடுகளில் பெரிதும் போற்றப்பட்ட வசன கவிதையைப் பின்பற்றி, நம் பாரதியாரும் சில பரிசோதனைகளைச் செய்துள்ளார். இந்த வகையில் ஒரு முன்னோடியாக அவர் விளங்குகிறார்.

பாரதியின் வழியில் ...!

பாரதி காட்டிய புதிய முறையைய் பின்பற்றி 'வசன கவிதை' படைக்க முயன்றவர் சிலர். அவர்களுள் வெற்றி பெற்றவர்

---

22 கு.ப.ராஜகோபாலன் & பெ. கோ. சுந்தரராஜன் ('சிட்டி'), கண்ணன் என் கவி, பக். 19.

ஒரு சிலரே யாவர். அவர்களை, இக்காலத்திய 'புதுக்கவிதை இயக்கத்தின் தமிழுலகம் போற்றிவருகிறது. 'முன்னோடிகள்" எனத் தமிழுலகம் போற்றிவருகிறது.

'மணிக்கொடி காலத்தில்', 'மணிக்கொடியின் மூலமாகப் பேரும் புகழும் பெற்றவர்கள்' எனப் பாராட்டப்படும் படைப்பு இலக்கிய ஆசிரியர்கள் சிலர், இந்த 'வசன கவிதை' களைப் படைத்துள்ளனர். அவர்களுள் ந.பிச்சமூர்த்தி முதலிடம் பெறுகிறார்.

இவருடைய'காட்டு வாத்து','வழித்துணை''குயிலின் சுருதி' எனும் கவிதைத் தொகுப்புகள் முறையே1962,1964,1970 ஆம் ஆண்டுகளில் வெளியிடப்பட்டுள்ளன. ஆனால், இவற்றுள் இடம் பெற்றுள்ள கவிதைகள் பல, 1934 முதற்கொண்டு எழுதப்பட்டனவாகும். இவற்றின் முன்னுரையில், தாம் இந்தப் பரிசோதனையில் இறங்கியதற்குரிய காரணங்களைக் கவிஞர் தெளிவுறுத்தியுள்ளார்.

"ஆரம்பத்தில் நான் ஆங்கிலக் கவிதையில் ஈடுபட்டிருந்த பொழுது, அமெரிக்கக் கவிஞர் வால்ட் விட்மனின் 'புல்லின் இலைகள்' என்ற தொகுப்பைப் படிக்க நேர்ந்தது. கவிதைகள் ஆங்கில யாப்புக்குப் புறம்பாக அமைந்து, புது உருவத்தோடு முழுத்தன்மையுடன் செயல்பட்டிருப்பதைக் கண்டு, ஆழ்ந்த கிளர்ச்சி அடைந்தேன். பின்னர், பாரதியாரின் கவிதைகளில் 'காட்சி' என்ற வசன கவிதையைப் படித்த பொழுதும் இதே விதமான கிளர்ச்சி அடைந்தேன்"[23] என்று தமக்குப் புதுக்கவிதை எழுதத் தூண்டுதலாக அமைந்தவர்களைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.

"பிக்ஷு" எனும் புனை பெயரில் ந.பிச்சமூர்த்தி, 1937 ஆம் ஆண்டு 'தினமணி' ஆண்டு மலரில் வெளியிட்ட 'கிளிக் கூண்டு' எனும் கவிதையின் முதற் பகுதியைக் காண்போம்.

---

23 குயிலின் சுருதி, பக். ix

"இருளின் மடல்கள் குவிந்தன
வானத்து ஜவந்திகள் மின்னின
காவிரி நாணல்கள் காற்றில் மயங்கின.
மேற்கே கடலலையின் ஓயாத மூச்சு,
காலன் செய் ஹோமத்தில் உடல் நெய்யாகும் காட்சி
கிழக்கே பெண்களின் மட்டற்ற பேச்சு
கட்டற்ற சிரிப்பு
காவிரி மணலின் குழந்தைகள் கொம்மாளம்"[24]

என்னும் கவிதை, 'வசன கவிதை' எனச் சொல்ல வேண்டியதில்லை. இதில், ஒரு வகை இனிய 'ஒலிநயம்' (Rhythm) அமைந்து இருக்கிறது. திரும்பத் திரும்பக் குறிப்பிட்ட சில ஒலிகள், மாறிமாறி ஒலிப்பதனால், இந்த இன்னொலி எழுகிறது. இது யாப்பு விதிகளுக்குட்பட்ட பாவில் அமையக் கூடிய ஒலிநயத்தை விட சிறப்பாக – முனைப்பாக –ஒலிப்பதை உணர முடிகிறது. இத்தகைய "வசன கவிதைகளை'ப் படைத்துப் பழகிய, ந. பிச்சமூர்த்தி. பையப் பையப் புதுக்கவிதை மரபைத் தோற்றுவித்துள்ளார்.

'சிறுகதை மன்னன்' எனத் தமிழுலகம் போற்றும் புதுமைப்பித்தனும், 'வசன கவிதை'களைப் படைக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார். அவருடைய கவிதைகளுள் சில, வசன கவிதைகளாக'வே உள்ளன. ஓர் எடுத்துக்காட்டாக ஓடாதீர்!' எனும் பாட்டின் நான்காம் செய்யுளைக் காண்போம்:

"இத்தனைக்கு மேலே
இனி ஒன்று ஐயா, நான்
செத்ததற்குப் பின்னால்
நிதிகள் திரட்டாதீர்!
நினைவை விளிம்புகட்டி,
கல்லில் வடித்து வையாதீர்!
'வானத்து அமரன்
வந்தான் காண்! வந்தது போல்

---

24 சி.சு. செல்லப்பா, புதுக்குரல்கள், பக் 70.

போனான் காண்' என்று
புலம்பாதீர்!
அத்தனையும் வேண்டாம்
அடியேனை விட்டுவிடும்"[25]

எனும் செய்யுளைத் திரும்பத் திரும்பப் பாடிப் பாருங்கள். இது வசன கவிதையா? அன்றா?' என்பது புலனாகும். வாழ்ந்த காலத்தில், பாரதியாரை இழித்தும் பழித்தும் பேசியவர்கள் – தூற்றியவர்கள் – பின்னர் 'மணி மண்டபம்' எழுப்ப முயன்றதை எள்ளி நகையாடுகிறார் புதுமைப்பித்தன். உள்ளக் கொதிப்பை, உணர்ச்சி அலைகளாக இக்கவிதையில் அவர் மோதவிட்டிருக்கிறார். இதற்கேற்ற ' வடிவத்தை' அவர் பயன்படுத்தி இருக்கிறார். இந்த வடிவத்தையே, 'வசன கவிதை' எனப் படைப்புலகம் சுட்டுகிறது.

ஆனால், தம்முடைய கவிதைகளை, "வசனகவிதை' எனச் சொல்லுவது தவறு என்பதை, புதுமைப்பித்தன் தெளிவுறுத்த முயன்றுள்ளார்.

பாட்டும் பாதையும்

'பாட்டும் அதன் பாதையும்' எனும் கட்டுரையில், புதுமைப்பித்தன்,

> யாப்பு முறையானது பேச்சு அமைதியின் வேகத்திற்கு அழுத்தம் கொடுக்கும் ஒரு ரூபமேயொழிய, பேச்சு முறைக்குப் புறம்பான ஒரு தன்மையைப் பின்பற்றி வார்த்தைகளைக் கோப்பது அல்ல. வசனம் சமயத்தில் பேச்சு முறைக்குச் சற்று முரணான வகையில் கர்த்தாவைக் குறிப்பிடுவதற்குப் பதிலாக, செயலை விளக்கும் நிலை அவசியமாகும் பொழுது பின்னிக் கிடந்து, வார்த்தைகளை அதன் பொருள் இன்னது என்று விலங்கிட்டு நிறுத்தும். அதாவது சட்ட ரீதியான தத்துவரீதியான நியாயங்களைப் பற்றி விவாதங்கள் நடத்தும் பொழுது வார்த்தைகளின் பொருள்

25 புதுமைப்பித்தன் கவிதைகள், பக். 38.

நுட்பம் இம்மியளவும் விலகாது இருப்பதற்காக, இன்ன வார்த்தைக்கு இன்னபொருள்தான் என்று வரையறுத்துக் கொண்டு, அவற்றின் மூலமாக செயல் மூலங்களை நிர்த்தாரணம் செய்து, மனித வம்சம் நிலையாக வாழ்வதற்கு, பூப்பரப்பின் ஒவ்வொரு பகுதியிலும் வாழையடி வாழையாகப் பின்பற்றப் பட்டு வரும் செயல் வகுப்பு வசனத்தினால்தான் இயலும்.

இந்த விதமான வாக்கிய அமைதிகளை மட்டுமே நாம் வசனமெனக் கொள்ளலாமேயொழிய, குறிப்பிட்ட நாம் அறிந்த யாப்பு அமைதிகளுக்குப் புறம்பான யாவும் வசனம் என நினைத்துவிடக் கூடாது. யாப்பு விலங்கல்ல;[26] வேகத்தின் ஸ்தாயிகளை வடித்துக் காட்டும் ரூபங்கள். குறிப்பிட்ட யாப்பமைதி, பழக்கத்தினால் வகையறியா உபயோகத்தினாலும் மலினப் பட்டு விடும்பொழுது, ரூபத்தின் மீது வெறுப்பு ஏற்படுவது இயல்பு. கவிதையுள்ளதெல்லாம் ரூபம்[27] உள்ளது என்றும் கொள்ள வேண்டும்...

என்று புதுமைப்பித்தன் அறிவுறுத்துகிறார். இதோடு அமையாமல், தம்முடைய சமகாலத்தில் புதிய வடிவில் கவிதை படைப்போரையும் "இன்று ரூபமற்ற கவிதையெனச் சிலர் எழுதி வருவது,இன்று எவற்றை எல்லாம் 'ரூபம்' எனப் பெரும்பாலோர் ஒப்புக் கொள்ளுகிறார்களோ, அவற்றிற்குப் புறம்பான ரூபத்தை அமைக்க முயலுகிறார்கள் என்று நினைக்கக் கூடாது. அவர்கள் எழுதுவது கவிதையா இல்லையா என்பது வேறு பிரச்சினை. இன்று 'வசன கவிதை' என்ற தலைப்பில் வெளிவரும் வார்த்தைச் சேர்க்கைகள் வசனமும் அல்ல;கவிதையும் அல்ல"[28] என்று அவர் சாடுகிறார்.

இந்த நீண்ட விளக்கத்தில் இருந்து 'வசன கவிதை எனும் பெயர் பொருந்தாது என்பது புதுமைப்பித்தனுடைய கருத்து என்பது புலனாகிறது.

---

26 யாப்பை விலங்காகக் கருதியவர் ந. பிச்சமூர்த்தி

27 புதுமைப்பித்தன் கட்டுரைகள், பக். 76–77.

28 ஷ. பக்.77

புதுமைப் பித்தனைப் போலவே, அவருடைய அணுக்க சீடரான சிதம்பர ரகுநாதனும் கண்டனக் கணைகளைத் தொடுத்து வருகிறார்.

"தமிழில் 'வசன கவிதை' என்ற இலக்கிய முயற்சியைத் தொடங்கி வைத்துத் தோற்றுப்போன புண்ணியம் மணிக்கொடி பரம்பரை எழுத்தாளர்களைச் சாரும்"[29] என்னும் முடிவிற்கு வரும் ரகுநாதனின் கவிதைப் படைப்புகளில் சிலவற்றை, அவருடைய 'உரைகல்லில்' உரைத்துப் பார்த்தால், 'உண்மை யாது?' என்பது எளிதில் புலனாகும்.

வசன கவிதையின் வடிவத்தைப் புதுமைப்பித்தன் ஏற்றுக்கொண்டுள்ளார். "ஒழுங்கான சப்த வரையறைக்குள் விழுந்த கனமான கருத்து, உள்ளே பொதிந்து இருந்தால்தான், கவிதையென்று கூற இயலும். உள்ளே இருக்கிற கருத்துக்குத்தான் அதிக முக்கியம் அளிக்க வேண்டும். அந்தக் கருத்தை எவ்வளவு இழைத்து இழைத்து நுண்கருத்தாக்கி, உணர்விழைகளாக்கி அதை கவிதை மய உணர்வாக்கித் தருவதில்தான் கவிதை உயிர் அடங்கி இருக்கிறது" எனும் கருத்துடையவராகப் புதுமைப்பித்தன் வாழ்ந்தார்.

வசன கவிதை என்று சொல்லப்படுவது ஓலி ஒழுங்கு செய்யப்படாத கவிதையாகும்; வடிவத்துக்கு முதன்மை இடம் தராது, கவிதை உணர்வோடு வெளிப்படும் கவிதை வடிவத்திற்கு முக்கியத்துவம் தரும் வகையில் புதுமைப் பித்தன் புதிய கவிதை வடிவங்களைப் படைத்தார். அவை வெண் கலிப்பா அல்லது கலிவெண்பா ஓசையுடையதாகத் தோன்றுகின்றன. ஆனால்,யாப்பிலக்கண விதிகளை மீறி, ஒருவகை புதுமைப்பாங்கு உடையதாக அவை அமைந் துள்ளன.இவ்வாறுதம்மை அறியாமலேயே'வசன கவிதை'யின் வடிவத்தைப் புதுமைப்பித்தன் ஏற்றுக் கொண்டுள்ளார்.

---

29 புதுமைப்பித்தன் கட்டுரைகள், பக். 21

இவருடைய வழியைப் பின்பற்றும் சிதம்பர ரகுநாதன் புதிய வடிவில், கட்டு மீறிய வெண்கலிப்பா யாப்பில் பல கவிதைகளைப் படைத்துள்ளார். ஆனால், தாம் 'வசன கவிதை' முறையைப் பின்பற்றவில்லை என்று அவரும் அழுத்தம் திருத்தமாகக் கூறி வருகிறார். இவ்விருவருக்கும் புதிய –'சனரஞ்சகமான'– வடிவத்திலே 'காதல்' உண்டாகி இருக்கிறது. ஆனால், 'வசன கவிதை' எனும் பெயரால் தங்கள் கவிதைகளைச் சுட்டக்கூடாது என்று வாதாடியுள்ளனர். இந்தப் பெயர் அவர்களுக்கு ஏனோ ஒவ்வாப் பெயராக (allergy) இருந்து வருகிறது? இந்த ஒவ்வாமைக்கு மணிக்கொடி இயக்கத்தாருள் சிலரோடு கொண்ட முரண்பாடு காரணமாக இருக்குமோ எனும் எண்ணம் தோன்றுகிறது.

தோய்வும் தொய்வும்

புதுமைப்பித்தனைப்போன்று சிறுகதை, புதினப் படைப்பாளரான கு. ப. ராஜகோபாலனும் 'வசன கவிதைகள்" படைப்பதில் கருத்தைச் செலுத்தியுள்ளார். ஆனால், தொடர்ந்து இம் முயற்சியில் இவர் ஈடுபடவில்லை.

இவருடைய 'என்னதான் பின்? எனும் கவிதை 'வசன கவிதை' வடிவில் அமைந்த புதுக் கவிதையாகும்.

"காதலென்றால் கேலி செய்கிறாயே – எதற்காக?
கவிதையைக் கள்ளச்சொல் என்கிறாயே–
வேண்டுமென்றுதானே?
நான் துதிக்கிறேன் என்றுதானே?
இருக்கட்டும்
நமது இன்பத்து ஏகாந்த இரவின் இறுதியில்
பிறை வெளுத்த பின்மாலையில்,
இருள் வெள்ளம் வடித்த வைகறையில்.
ஓவிய மூட்டும் உன் ஒளிக்கரங்களை விட்டு
நான் பிரிவினை கொள்ளும் போர் வேளையில்,
என் கண்களைக் கலக்குவதென்ன –காதலல்லாமல்?
அந்தக் கனவழியும் பொழுதில்,
உன் வாயின் வார்த்தை வனப்புத்தானென்ன–
கவிதையல்லாமல்?[30]

---

30 கு.ப.ராஜகோபாலன், சிறிது வெளிச்சம், பக். 129

எனும் கவிதை, வடிவால் 'வசன கவிதையாக' எளிமையும்' தெளிவும் வாய்ந்ததாக இருப்பதைக் காணலாம். ந. பிச்ச மூர்த்தியையும், கு. ப. ராவையும் 'இலக்கிய இரட்டையர் என்று வ. ரா. குறிப்பிட்டுள்ளார். பிச்சமூர்த்தியின் கவிதையில் இருந்து ராஜகோபாலனுடைய கவிதைகள் 'தொனியிலும் சொல்லும் பொருளிலும்' வேறுபட்டனவாகத் தோன்றுகின்றன.

கு.ப.ரா. 'கருவளையும் கையும்', 'தலைவியின் தேர்தல்', கவிதை பெண்ணுக்குப்' போன்ற சில நயமிகு கவிதைகளைப் படைத்துள்ளார். வாழ்க்கையின் இனிய இயல்புகளைச் சுவைத்து மகிழ்வதில், அவர் பேரார்வம் கொண்டிருந்தார். இதனால்,'வாழ்க்கை நிலை இல்லாதது;துன்பமயமானது' எனும் கோட்பாட்டை வெறுத்து ஒதுக்கினார். சில சொற்களைக் கொண்டு. 'வாழ்க்கை' என்பது என்ன என்பதை,

"வாழ்க்கை ஒரு வெற்றி! ஒரு துடிப்பு;
ஒரு காதற்பா; ஒரு இசை ;
மண்ணின் மாய மோனையில் பிறந்து
அரைத் தூக்கத்திலும் அதிசயத்திலும் அது உதிக்கிறது[31]

எனும் சொல்லோவியமாகத் தீட்டியுள்ளார்.

இவ்வாறு எந்தப் பொருளையும், வாழ்க்கையின் சிக்கலையும் புதிய நோக்கில் பார்ப்பதும், அணுகுவதும் கு. ப. ராவின் இயல்பாகும்.

இவர், 'வசன கவிதை'யின் இயல்புகளை வெளிப்படுத்தும் வகையில் எழுதிய கட்டுரை, புதுக்கவிதையை'ப் புரிந்து கொள்ளப் பேருதவியாக இருக்கிறது.

'மணிக்கொடி' மரபில் தோன்றிய மற்றொரு கவிஞர் வல்லிக்கண்ணன். இவருக்குப் பாரதியாரின் வசன கவிதைகள் மட்டும் அல்லாமல் ந. பிச்சமூர்த்தி, கு.ப.ரா. ஆகியோரின் புதுமைப் படைப்புகளும் உந்துதல் சக்தியாக அமைந்தன.

---

31 ஷெ. பக்.133

பாரதியாரின் அடிச்சுவட்டைப் பின்பற்றி வல்லிக் கண்ணன் 'வசன கவிதைகள்' பலவற்றைப் படைத்துள்ளார். "எங்கள் முயற்சிக்கு நீங்கள் என்ன பெயரிட்டாலும் சரி; நாங்கள் கவலைப்படப் போவதில்லை. ஒரு எழுத்தாளன் சொன்னதைப் போல 'எமது எழுத்துக்களை கவிதை கட்டுரை, வசனகவிதை என்று எப்பெயரிட்டு வேண்டுமானாலும் அழையுங்கள். நாம் கையாள விரும்புவது சொற்கள் தான்; சொற்களுக்கு உயிரூட்டுவதே எமது நோக்கம்"[32] என்பது அவருடைய கருத்து விளக்கமாகும்.

அழகு' எனும் தலைப்பில், வல்லிக் கண்ணன்,

"உமையின் கவிதை
உலகின் உயிர்ப்பு; உயிரின் சக்தி;
சக்தியின் சிரிப்பு; சிவத்தின் மலர்ச்சி;
மலரின் சிறப்பு: ஜீவனின் ஒளி; ஆத்மாவின் சுடர்
அழகு எங்கும் நிறைந்தது. கண்ணுக்குத்
தெரிவது தெரியாமல் ஒளிர்வது.
கலையின் கலை; காவிய நயம்
அழகே அனைத்தும்! அது வாழ்க!"[33]

எனத் தொடங்கும் நீண்ட, நெடுங்கவிதை ஒன்றை இயற்றியுள்ளார்.

சிறு சிறு சொற்கள்; எளிய சொற்கள்; எல்லார்க்கும் தெரிந்த சொற்கள்; எண்ணவோட்டத்தை எழிலோவியமாக்கும் கருத்துப் பிழம்புகள். இவற்றை உயிரோட்டம் எனும் பேராற்றல் இணைத்தும், பிணைத்தும், பிரித்தும் இயக்குகிறது. இதன் விளைவாக 'வசன கவிதை' மலர்ந்துள்ளது.

இத்தகைய கவிதைகளை அக்கால 'கிராம ஊழியனி'லும் 'நவசக்தியி'லும், பிற இதழ்களிலும், மலர்களிலும் வல்லிக் கண்ணன் வெளியிட்டுள்ளார்.

---

32 வல்லிக்கண்ணன், புதுக் கவிதையின் தோற்றமும் வளர்ச்சியும் பக். 42.43.

33 மே. 43

அசலும் நகலும்

'பாலபாரதி' என்று போற்றப்பட்ட ச.து. சு. யோகியும் "வசன கவிதை' இயற்றும் முயற்சியில் ஆர்வம் காட்டியுள்ளார். அவருடைய 'தமிழ்க்குமரி' கவிதைத் தொகுப்பிலும் 'மானிடம் பாடுவேன்' எனும் நூலிலும் சில 'வசன கவிதைகள்" இடம் பெற்றுள்ளன. 'ஜோதி உதயம்' எனும் பாடலின் இரண்டாம் செய்யுளை நோக்குவோம்.

"கங்குல் கழிந்தது, மீனினம்
காதற் கதிரவன் கோயிலில்,
திங்களின் நங்கையும் கூடவே,
சென்றதில் மூழ்கிச் சிறந்தது;
அங்கங்கு தோப்புகள்; சோலைகள்;
ஆயிரம் மாமரச் சாலைகள்,
எங்கணும் நீண்ட நிழலெலாம்
இன்பத்து ஜோதியில் ஆகுமாம்"[34]

எனும் கவிதையில், உணர்ச்சித் துடிப்போ. ஒலி நயமோ இருப்பதாகத் தெரியவில்லை. எளிமையான முறையில் கருத்து விளக்கம் காணப்படுகிறது. மற்றபடி, பாரதியின் கவித்திறனில் ஒரு கூறுகூட இக்கவிதையில் காணப்படவில்லை.

பன்முக முயற்சியாளர்

சுப்பிரமணிய பாரதியாருடைய கவிதை ஆவேசத்தின் தூண்டுதலால், பலவகையான கவிதைகளைத் தமிழில் பெ.தூரன் படைத்துள்ளார். அவருடைய 'அறிவாய் நீ', "யவனன் பாட்டு', 'மேலே பற' என்பன போன்ற கவிதைகள் வசன கவிதைக்குச் சிறப்புமிகு சான்றுகளாக உள்ளன.

"மலர்ந்தது முழுநிலா
எங்கே?
நீலக் கடலருகே நீண்டதொரு நிலாமுற்றம்
அங்கே!"[35]

---

34 தமிழ்க் குமரி– பாடல்கள், பக். 61.
35 இளந்தமிழா, பக். 70

எனத் தொடங்கும் 'அறிவாய் நீ' எனும் பாடல், கற்பனை வளமும், ஒலிநயமும், ஆற்றொழுக்கான தெளிந்த நடையும் கொண்டதாகும்.

'எழுத்தின் நாயகர்'

மணிக்கொடி மரபில் வந்த சி. சு. செல்லப்பாவும், 'வசன கவிதைகளையும் படைத்துள்ளார். அவற்றுள் 'மீட்சி எனும் கவிதை வடிவால் சிறியதாகவும் கருத்தோட்டம் உடைய தாகவும் இருக்கிறது.

"வழியை மறைத்த மாசி
வாயு விரட்ட விலகும்
நீரை மறைத்த பாசி
கை அறைக்கு கலையும்"[36]

இத்தகைய கவிதைகளைப் படைத்ததோடு, 1960 முதல் 'புதுக்கவிதை'யின் வளர்ச்சிக்கு வழிகாட்டியாக இவர் இருந்து வருகிறார்.

வசனகவிதை–அன்றும் இன்றும்

பாரதியாரைப் பின்பற்றி, ந. பிச்சமூர்த்தி, கு. ப. ரா., வல்லிக்கண்ணன் போன்றோர் புதிய முயற்சிகளில் ஈடுபட்டதைக் கண்டோம். இயல்பாகவே பழமைப்பற்று வாய்ந்த தமிழகம், இந்தப் புதிய முயற்சியை அன்று ஏற்கவில்லை; இன்றும் தயக்கத்தோடு ஏற்றுக் கொண்டுள்ளது.

க. நா. சுப்பிரமணியன் 1939 ல் நடத்திய 'சூறாவளி எனும் இதழில் 'எஸ்' (சுந்தா) எனும் பெயரில் வெளியிடப்பட்ட கண்டனக் கவிதை இங்குக் குறிப்பிடத்தக்கது.

"எதுகை மோனையும்
வேண்டவே வேண்டாம்!
சீரும் கீரும்
சுத்தச் சனியன்கள்

---

36 புதுக்குரல்கள், பக். 45.

வெண்பாவும் கிண்பாவும்
விருத்தமும் திருத்தமும்
வேண்டாத தொல்லைகள்;
மடமட வென்றும்
கடகட வென்றும்
மளமள வென்றும்
வசன கவிதை
எழுதித் தள்ளுவோம்
ததாஸ்து"[37]

எனத் தொடங்கும் வசன கவிதை, வசன கவிதையைப் பல்வேறு கோணங்களில் தாக்குவதாக அமைந்துள்ளது.[38]

இந்த 'வழக்கு எதிர் வழக்குகள்' 1968 அளவில் மீண்டும் புத்துயிர் பெற்றது. இதற்குச் சிறந்ததோர் எடுத்துக்காட்டாகக் கவிஞர் புலமைப் பித்தனுடைய 'எது கவிதை?' எனும் கருத்துரையைக் காட்டலாம்.

> "கவிதை என்றால். ஓசை ஒழுங்குபட்ட வடிவமும் வேண்டும்; உள்ளத்தைச் சிலிர்க்க வைக்கும் கற்பனைகளும் சிந்தனைகளும் இருக்கவும்வேண்டும்.
> இந்த இரண்டு கூறுகளில்,எதையும் விலக்கி விட்டுக் கவிதை என்ற ஒன்று, இருக்க முடியாது!
> வசன கவிதை என்ற ஒன்று இல்லவே இல்லை! இருக்கவும் முடியாது!
> உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள் இருக்கலாம்.
> ஆனால், வசன கவிதை இருக்க நியாயம் இல்லை !..."

[39]எனும் போக்கில் அமைந்த 'மரபின் மாண்பைப்' போற்றுவதில் நாட்டம் கொண்ட கவிஞருடைய கருத்துகள் பொறுமையாகச் சிந்தித்து, ஆராயத்தக்கன.

---

37 வல்லிக்கண்ணன், புதுக் கவிதையின் தோற்றமும் வளர்ச்சியும், பக்.12.

38 இதைப்பற்றிய வாதவிவாதங்களை மேற்கண்ட நூலில் 20–40; 81–90 பக்கங்களில் காண்க

39 புலவர் புலமைப்பித்தன், எது கவிதை? பக். 37

நடை முறையில் எளிய கவிதை (உரைநடைக்கும் செய்யுளுக்கும் இடைப்பட்ட) ஒன்று வழக்கிற்கு வந்து விட்டது. அது காலத்தின் தேவை. இதை நாம் மறுக்க இயலாது. எனவே, 'ஆண் பெண்' என பால்வேறுபாடு அறிய இயலாத 'அலியாக' இருப்பதாகக் கருதப்படுவதற்கு இடம்தரும் 'வசன கவிதை' எனும் பெயரை, மாற்றி,'புதுக் கவிதை' எனும் புதிய திருப்பெயரை 1960 அளவில் இதற்குச் சூட்டிவிட்டார்கள். எனவே, தமிழ் இலக்கிய வரலாற்றில், வரலாற்று மெய்மைமாகி ((Historical Fact) விட்ட ஒன்றைப் பற்றி, மறு ஆய்வு செய்து கொண்டு இருப்பதனால் விளையக் கூடிய பயன் யாது?

வேறு வழி?

இவ்வாறு, பாரதியின் வழியைப் பின்பற்றித் தமிழில் "வசன கவிதை' படைத்தவர்களை, இன்று 'புதுக்கவிதையின் முன்னோடிகள்' என நாம் போற்றுகிறோம். இந்தக் கவிஞர் களுடைய தொடக்க கால முயற்சிகள் போற்றுதலுக்கு ஆளானதைவிட, தூற்றுதலுக்கும் தாக்குதலுக்கும் இலக்காயினதைக் கண்டோம். மரபுவழிப்பட்ட யாப்பிலக்கணத் திற்கு அடிமைப்பட்டிருந்த பழமைப் பற்றுமிக்கப் புலவர்கள், இத்தகைய முயற்சிகளை அறவே கண்டித்தனர். 'தமிழ்ப் பாவுலகில், 'துறை, தாழிசை, விருத்தம்' எனும் பாவினங்கள் எவ்வாறு தோன்றின? எதற்காகத் தோன்றின?' என்பதைப் புரிந்துகொண்டவர்களாக அவர்களை,நாம் கருதுவதற்கில்லை. 'புதுமையை – புதிய முயற்சிகளை' எதிர்ப்பதையே நோக்கமாகக் கொண்டவர்களாக அவர்கள் இருந்தனர்.

"இந்தப் புதிய முயற்சி ஏன் தோன்றியது?' எனும் வினா வினை எழுப்புவோமானால், சில அடிப்படை உண்மைகள் புலனாகும். உலகெங்கும் முடியாட்சி மறைந்தது; மக்களாட்சி மலரத் தொடங்கியது; இக்கால கட்டத்தில் 'காலனி' ஆதிக்கத்தில் இருந்து 'விடுதலை' பெற இந்தியா சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டது. 'எங்கும் உரிமை! எதிலும் உரிமை வேண்டும்' எனும் உணர்வு அகத்து எழுச்சியாகப் பீறிட்டு எழுந்தது.

நிலப்பிரபுத்துவ சமுதாய அமைப்பு சீர்குலைந்தது. முதலாளித்துவ இயந்திரத் தொழில்மய வாழ்க்கை புதிய சூழ்நிலைகளை உருவாக்கியது. இத்தகைய காலகட்டத்தில் புத்தம் புதிய, மனிதனின் வளர்ந்துவரும் உணர்வுகளையும், வாழ்க்கையின் பரந்துபட்ட அனுபவங்களையும், நிகழ்ச்சி களையும் உள்ளத்தைத் தொடும் வகையில் எடுத்துரைப் பதற்குப் பழைய யாப்பு வடிவம் தடையாக இருப்பதை அல்லது தகுதியற்று இருப்பதைப் பாரதியாரின் வழிவந்த கவிஞர்கள் கண்டனர். மற்றும், புதிய கருத்துகளை, புதிய உணர்ச்சிகளை, புதிய முறையில் எடுத்துரைக்க வேண்டும் என்னும் புதுமை வேட்கை, புதிய வடிவை நாடுமாறு அவர்களைத் தூண்டியது.

மேலும், மாறிவரும் சமுதாய அமைப்புக்கும், எண்ணப் போக்கிற்கும் அணுகுமுறைகளுக்கும் ஏற்ப, கவிதைக் கலையிலும் ஒரு வகை மாற்றம் தேவை எனும் துடிப்புமிகு சிந்தனை, இத்தகைய புதிய முயற்சியில் ஈடுபடத் தூண்டியது. இதனால், கவிதையின் வடிவத்திலும், கருத்து வெளிப்பாட்டிலும் 'புரட்சி' செய்ய வேண்டும் எனும் உள்ளார்ந்த உணர்வின் உந்துதலால், 'வசன கவிதை' பிறந்து, புதுக் கவிதையாக வளர்ந்தது.

பாரதியாரின் "வசன கவிதை முயற்சிகளைப் பின் பற்றிய தொடக்க காலப் 'புதுமைக் கவிஞர்கள்", "போலச் செய்தல்' எனும் முறையைத்தான் பின்பற்றினர். 'வசன கவிதை என்னும் வடிவத்தில் நெஞ்சைப் பறிகொடுத்து நின்றனரே அன்றி, புதிய பொருளிலோ, அன்றித் திட்டவட்டமான இலக்கியக் கொள்கையிலோ ஈடுபாடு கொண்டிருந்தனர்' எனக் கூற இயலாது. இதனால், அவர்கள் முயற்சி– புதிய பரிசோதனைகள் எதிர்பார்த்த அளவிற்கு வெற்றி பெறவில்லை. ஆனால், ரகுநாதன் குறிப்பிட்டதைப் போன்று 'வசனகவிதை' என்னும் இலக்கிய முயற்சி தோற்றுப் போய்விடவில்லை. அம்முயற்சி இருபத்தைந்து ஆண்டுகள் நீறுபூத்த நெருப்பாக இருந்தது. 1958–க்குப் பிறகு, 'புதுக்கவிதை இயக்கமாக'ப் பேரொளியுடன் பிரகாசிக்கத் தொடங்கியுள்ளது. இருபதாம் நூற்றாண்டின்

கவிதைத் துறைக்கு சிறப்பாகத் தமிழ்ப் பாவுலகிற்கு வளமும் வனப்பும் அளிக்கும் முயற்சியில் வசன கவிதைகள் ஈடுபட்டுள்ளன. பல படைப்பாளர்களுக்குக் கிளர்ச்சியூட்டிப் புதிய முறையில் பாட்டியற்றத் தூண்டியவை – தூண்டி வருபவை–பாரதியாரின் வசன கவிதைகள் என்பதை மறுக்க இயலாது. தொடக்க காலத்தில் 'மணிக்கொடி' எழுத்தாளர் மரபினரே, இப்புரட்சியை வரவேற்றுப் போற்றியவர்கள் என்று சரித்திரம் பேசுகிறது!

7

புதுக்கவிதைக்கு வழிகாட்டி

தேங்கிக் கிடந்த தமிழரின் சிந்தனையில் ஒரு மாற்றத்தை உண்டாக்கியவர் பாரதி! இலக்கிய வளர்ச்சியில் ஒரு திருப்பத்தை உண்டாக்கியவர் பாரதி! முதல் முதலாகப் புதிய தமிழால் மக்கள் நெஞ்சங்களில் (புரட்சிக்) கனலைப் பாரதி மூட்டினார். அவரே ஒரு பாட்டில், "மூட்டும் அன்புக் கனலொடு வாணியை முன்னும் பொழுதில்" என்று பாடியுள்ளார். அந்த 'அன்புக் கனவிற்கு' நாம் கொடுக்கக்கூடிய பெயரே **புரட்சி!**

அவருடைய நெஞ்சிலே மூண்ட அப்புரட்சிக்கனல், மக்கள் உள்ளங்களில் அரசியல், சமுதாய வாழ்க்கை, இலக்கியம், ஆன்மிகம் எனும் துறைகளில் புதுமை காண வேண்டும் எனும் சிந்தனைத் தீயை மூட்டியது. அன்றுபாரதிவகுத்தவாய்க்கால்களில்தான்,இன்றைய தமிழ் வெள்ளம் ஓடிக்கொண்டு இருக்கிறது.

பாரதி படைத்த – பரிசோதனை முறையில் படைத்த 'வசன கவிதை', பலர் நினைப்பதைப் போல, வாழ்விழந்து விடவில்லை. அவருக்குப் பிறகு, காலத்தின் தேவைக்கும் போக்கிற்கும் ஏற்ப, அது வளர்ந்து இருக்கிறது; ஓர் இயக்கமாகப் பெருவாழ்வு பெற்று வருகிறது; இளைய தலைமுறையினரின் உள்ளங்களைச் 'சுண்டி' இழுத்து வருகிறது.

இந்த இலக்கிய இயக்கத்திற்கு என்ன பெயர்? பலரும் அறிந்த ஒன்றுதான்! 'புதுக் கவிதை இயக்கம்' என்பதே

இதனுடைய பெயர்! கடந்த இருபதாண்டுகளில், புதுக்கவிதை இயக்கம் பல மேடு பள்ளங்களைக் கடந்து வந்திருக்கிறது! தமிழ் இலக்கிய வரலாற்றுப் பெருவழியின் முச்சந்திப்பில், 'புதிய ஊருக்கு'ச் செல்ல வழிகாட்டும் கைகாட்டி மரமாகப் புதுக்கவிதை நின்று நிலவுகிறது!

புதுக்கவிதை – பல்வேறு பெயர்கள்

''புதுக் கவிதை' என்பது யாது?" எனும் கேள்வி நம் உள்ளத்தே எழுவது இயற்கை. இது ஒரு சிக்கலான கேள்வி; எளிதில் வரையறுத்து விளக்கம் கூற இயலாத ஒன்று; அப்படி விளக்கம் கூறினாலும், பலருக்கு அதனால் மனநிறைவு உண்டாவதும் இல்லை! எவ்வாறு இறைவனை "இப்படியன், இந்நிறத்தன், இவ்வண்ணத்தன், இவன் இறைவன்" என எளிதில் இனம் கண்டுகொள்ள இயலாதோ அவ்வாறே,'புதுக்கவிதையும்' புரியாத புதிராகவே இருந்து வருகிறது. ஆயினும், ''ஒரு நாமம், ஓர் உருவம், ஒன்று மிலார்க்கு ஆயிரம் திருநாமம்" வழங்குவதைப் போல, புதுக் கவிதையும் பல வடிவங்களில், பல பெயர்களில் போற்று தலுக்கும் தூற்றுதலுக்கும் இலக்காகி, தமிழ் இலக்கியக் கருவூலத்தை வளப்படுத்தி வருகிறது.

வசன கவிதை எனும் பெயரை ஏற்றுப் போற்ற, புதுமைப்பித்தன் போன்றோர் தயங்கியதை கண்டித்ததை நாம் முன்னரே கண்டோம்! "விஜிடெபிள் பிரியாணி, 'கோவேறு கழுதை' எனப் பலவாறாக இந்தப் புதுக்கவிதை எள்ளி நகையாடப்பட்டது.

'வடிவ அளவில்' புதிய முயற்சியே **விடுநிலைப்பாட்டு** (Free Verse) என்று கருதிய படைப்பாளிகளும் திறனாய்வாளர்களும் பலராவர். எனவே, கி. பி. 1960 அளவில். 'வசனகவிதை' எனும் பெயர், "தீண்டத்தகாதது' எனக் கருதப்பட்டது. இதனால், 'இக்காலக் கவிதை'. 'தற்காலக் கவிதை'. 'குறும்பா', 'நவீன கவிதை', 'இலகுகவிதை', 'புதிய பாட்டு', 'புதுக் கவிதை',

'உரைவீச்சு', 'சொற்கோலம்', 'சுதந்திரக் கவிதை', 'கம்பாசிடர் கவிதை' எனும் பெயர்களில், பாரதியின் வழிவந்த வசன கவிதையின் புத்தாக்க வடிவங்களைத் தமிழ்ப் படைப்பாளிகள் போற்றவும் தூற்றவும் செய்தனர்.

புதுக்கவிதை – சொல்லாட்சி

இவற்றுள் 'புதுக்கவிதை' எனும் பெயரே நிலைத்த வாழ்வினைப் பெற்றுவிட்டது. இந்தப் பெயரால், தம்முடைய கவிதைகளை முதன் முதலில் சுட்டியவர், பாரதியிடம் இருந்து உந்துதல் சக்தியைப் பல்வேறு துறைகளில் பெற்றவரான ந. பிச்சமூர்த்தியே யாவார்.[1]

இந்தப் பெயர்தான் புதிது. ஆனால், வடிவம் பழமையானது; முயற்சி பாரதியின் காலம் முதற்கொண்டு தொடர்ந்து செய்யப்படுவது.

இதனை, உண்மையில், புதுக்கவிதை 1959–ல், 'எழுத்துவில்' தான் பிறந்தது என்று சொல்ல முற்படமாட்டோம். (இதற்கு) இருபது ஆண்டுகளுக்கு முன்பே, ந.பி.யும், கு.ப.ராவும், வல்லிக்கண்ணனும் பிறப்பித்துவிட்ட குழந்தை அது! ஆனால், 1959 முதல் இன்று வரையான நாட்களில்தான், இந்தப் புதுக்கவிதை இனம் கண்டுபிடிக்கப்பட்டு, நாமகரணமும் இடப்பட்டது"[2] எனும் வல்லிக்கண்ணனின் 'வாய்மொழி', புதுக்கவிதையின் தோற்றத்தைத் தெளிவுபடுத்துகிறது.

மேற்கு நாடுகளில், இந்த நூற்றாண்டின் முற்பகுதியில் தோன்றிய 'மாடர்ன் பொயட்ரி' (Modern Poetry), 'நியூ பொயட்ரி' (New Poetry), எனும் பெயர்களைக் கொண்ட புதுமையான கவிதை இயக்கப் படைப்புகளைத் தமிழில் 'புதுக்கவிதை' எனும் பெயரால் சுட்டுகிறோம்.

1960முதல், மேற்கு நாடுகளில் வளர்ந்து வரும் மற்றொரு கவிதை இயக்கம் 'மாடர்னிஸ்ட் பொயட்ரி (Modernist Poetry)

---

1 காட்டுவாத்து, 'எதிர்நீச்சு' எனும் முன்னுரை.

2 புதுக்கவிதையின் தோற்றமும் வளர்ச்சியும், பக் 102.

என்பதாகும். அத்தகைய கவிதைகள் இன்னும் தமிழில் வழக்கிற்கு வரவில்லை. அதனைப் 'புதுமைக் கவிதை' எனும் பெயரால் நாம் சுட்டலாம்.

கவிஞர் காட்டும் புதுக்கவிதை

'புதுக் கவிதை' எப்படி இருக்கும் என்பதை, புதுக் கவிதையைப் படைப்பதில் ஈடுபட்ட பல கவிஞர்கள் எடுத்துரைப் பதை முதலில் காண்போம்.

புதுக்கவிதை
என்பது
சொற்கள் கொண்டாடும்
சுதந்திர தினவிழா!
'யாப்பு' எனும் குதிருக்குள்
இலக்கணம் போட்ட
உத்தரவுக்குப் பயந்து உறங்கும்
சோம்பேறிச் சொற்களுக்கா
நீங்கள்
கவிதை என்று கட்டியங் கூறுவீர்?[3]

என்பது புதுமை நாடும் கவிஞர் ஒருவரின் கருத்தாகும்.

இதைவிட, சற்றுத் தெளிவாகக் கவிஞர் மு.மேத்தா. புதுக்கவிதையின் இயல்புகளைச் சித்திரித்துள்ளார்.

இலக்கணச் செங்கோல்
யாப்புச் சிம்மாசனம்
எதுகைப் பல்லக்கு
மோனைத் தேர்கள்
தனிமொழிச் சேனை
பண்டித பவனி–
இவையெதுவும் இல்லாத–
கருத்துக்கள் தம்மைத்தாமே
ஆளக் கற்றுக்கொண்ட
புதிய மக்களாட்சி முறையே
புதுக் கவிதை![4]

---

3 வைரமுத்து,திருத்தி எழுதிய தீர்ப்புகள். பக். 9.

4 ஊர்வலம், பக். 6.

இந்தப் பாடல்களால், 'யாப்பு இலக்கணக் கட்டுப்பாடுகளைக் கடந்த நிலையில் இயற்றப்படுவது புதுக்கவிதை கருத்துகளுக்கு முதன்மை இடம் கொடுத்து, கவிஞன் தன்னுரிமையோடு அவற்றை வெளிப்படுத்தும் பொழுது தோன்றுவது புதுக்கவிதை!' எனும் விளக்கம் கிடைக்கிறது.

இதனை, இன்னும் விரிவாகவும் தெளிவாகவும் வேறொரு கவிஞர் எடுத்துரைக்கிறார்.

கவிதைக் கன்னியின்
காலக் கோலம்
காலக் கன்னியின்
கவிதைக் கோலம்

நாரிடைத் தளைபடா
நாண்மலர்க் குவியல்

தொடையடி பந்தம்
தொலைத்த துறவி

இலக்கிய நாகரிகப் பரிணாமம்
இதய வேக வெள்ள நுரைப்பூக்கள்
இலக்கியப் பாம்பின் தோலுரிப்பு,
இயல்பாய்க் கனிந்த புதுமலர்ச்சி!

தானாய்த் தவித்துத்
தரைபிளந்து மணக்கும்
கானகப் பூக்கள்

உதயநேர மேகத்திடை
உரிமைப் பறவையின்
வாகனப் பாதைகள்

உள்ளத் தோட்டத்தின்
உதிரிப் பூக்கள்

உண்மைத் தோட்டத்தின்
மூன்றாம் பிறைகள்

புதிதெல்லாம் கவியாய்க் காணும்
பொன்மனச் சித்தர்களின்
புதுக்கவி மந்திரங்கள்![5]

---

5 தீபம்,செப்,1975; பக்.17

புதுக்கவிதையின் இயல்புகள்

புதுக்கவிதையின் இயல்புகளைத் தாம் உணர்ந்த முறையிலும், அறிந்த முறையிலும் பிறருக்கு எடுத்துரைக்கத் திறனாய்வாளர்கள் முயன்ற வண்ணம் உள்ளனர். எனினும் அவை யாவும், முழுமையான 'விளக்கங்களாக' அமைய வில்லை.

முதலில் புதுக் கவிதைகள் இயற்றப்படுவதன் நோக்கத்தைக் காண்போம். காலம் மாறுகிறது; வாழ்க்கை முறைகள் மாறுகின்றன. இவற்றை ஒட்டி சிந்தனைப் போக்கும் மாறுகிறது. இதனால், காலத்துக் கேற்ற புதிய அமைப்புகள் தேவைப்படுகின்றன. புதிய அமைப்புகள் உருவாக்கப் படுகின்றன. புதியனவாக அமைப்புகள், நிறுவனங்கள் உருவாக்கப்படும் பொழுது, பழமைக் கட்டுப்பாட்டை மீற – அன்று!– உடைத்தெறிய வேண்டிய சூழ்நிலை உருவாகிறது,

எனவே, இலக்கிய உலகிலும், கட்டுப்பாடற்ற புதிய இலக்கிய வகைகளான புதினம், சிறுகதை, புதுக்கவிதை தோன்றின.இவ்வாறு கட்டுப்பாடற்ற கவிதையில்தான் உணர்ச்சிகளை அப்படியே கொட்ட இயலும். அப்பொழுது தான், உண்மைகளை மெய்மைப் பாங்கோடு 'பச்சையாக' வெளிப்படுத்த–சித்திரிக்க முடியும் எனப் புதுக்கவிதையாளர்களும்,திறனாய்வாளர்களும்நம்புகின்றனர்.

பொதுவாகப் புதுக்கவிதையின் இயல்புகளை, (1) வாழ்க்கையின் இருண்ட பகுதிகளையே பெரிதும் சித்திரிப்பது. (2) இறப்பினை மையமாகக் கொண்ட ஒருவகைப் புலம்பல் (3) நடப்பியல் வாழ்க்கை அனுபவங்களை, இயல்பான (பச்சையாக) முறையில் சித்தரிப்பதன் மூலம் சமுதாயப் பிரச்சினைகளைச் சிந்திக்கத் தூண்டுதல், (4) பாலுணர்வு, (5)ஏமாற்றத்தால் உண்டாகும் எரிச்சல்,(6)மனிதனின் தனிமையம் (Individualism), (7) நனவோடை (Stream of Consciousness), (8)புதுவகைப் படிமங்கள், உவமை உருவகங்கள், (9) கட்டற்ற வடிவம், (10) தெளிவின்மை – இருண்மை (Obscurity) என வகைப்படுத்திக் காட்டலாம்.

இவற்றுள் முதல் ஆறு இயல்புகளும் கவிதையின் உள்ளடக்கத்தை (பாடுபொருளை)ப் பற்றியனவாக உள்ளன அடுத்துள்ள நான்கும், புதுக்கவிதைப் படைக்கப்படும் முறையில் இடம் பெறும் கலைத் திறன்களை வெளிப்படுத்துகின்றன எனவே, இவை 'வடிவம்' பற்றிய பண்புகளாகும்.

மரபுவழிப்பட்ட கவிதைகளைத் திறனாய்வு செய்யும் நெறியில், அழகுணர்வுக்கு முதன்மையிடம் தந்தவர்கள், "கவிஞன் எதைப் பற்றிப் பாடுகிறான் என்பதைப்பற்றிக் கவலை இல்லை! அவன் எப்படிப் பாடுகிறான்! என்பதையே நாம் அறிய வேண்டும்" என்பர்.

ஆனால், புதுக்கவிதை நெறியாளர், கருத்திலும் புதுமையை நாடுகின்றனர்; வெளியீட்டு முறையிலும், புதுமையை அவர்கள் நாடுகின்றனர். எனவே, உள்ளடக்கம் பற்றிய அக்கறை – ஒருவகை ஆர்வம் அவர்களுக்கு இருந்து வருவது குறிப்பிடத் தக்கதாகும். இதனால், சமகால சமுதாயவுணர்வோடு, தம் கவிதைகளை அவர்கள் படைக்கின்றனர். ஆகவே, யாதாகிலும் ஒருவகையில் 'சமுதாய உணர்வு உடையவர்களாகவே' அவர்கள் காட்சியளிக்கின்றனர்.

அடிப்படை அலகு

மேற்கண்ட இயல்புகளைக் கொண்ட புதுக்கவிதையின் அடிப்படை அலகு யாது?" எனும் எண்ணம் எழலாம். 'புதுக் கவிதையின் உறுப்புகள் சொல், தொடர், வாக்கியம் என்றும், சீருக்கும் தளைக்கும் பதிலாக, சொல்லே (அடிப் படை) அலகாக இருக்கிறது என்றும், 'சிந்தனை நிறுத்தமே புதுக்கவிதையின் அடி அலகு'[6] என்றும் திறனாய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

தன்னுணர்ச்சிப் பாடலின் மாற்று வடிவமா?

கடந்த இருபது ஆண்டுகளில், புதுக்கவிதை பெரு வளர்ச்சியுற்றுள்ளது. யாப்பமைதி, ஓசைநயம், சொல் வளம்

---

6 பாலா, புதுக்கவிதை –ஒரு புதுப்பார்வை, பக்.32–33.

முதலியவற்றிலே புதுக்கவிதை மரபுவழிக் கவிதைகளில் இருந்து வேறுபடுவதை, முன்னர் நாம் கண்ட தன்னுணர்ச்சிப் பாடல்களின் இயல்புகள் தெரிவிக்கின்றன. "ஆயினும், கூர்ந்து நோக்கின், புதுக்கவிதைகளிற் பெரும்பாலானவை தன்னுணர்ச்சிப் பாடல்களே என்பது புலனாகும்...இன்னும் சொல்லப் போனால், தன்னுணர்ச்சிப் பண்பின் தருக்க ரீதியான வளர்ச்சியையே புதுக்கவிதைகள் காட்டுகின்றன எனலாம். எத்தகைய மரபிலிருந்தும் விடுபட்டு, தனித்துவமான முறையில், சுருக்கமான வடிவத்தில் பாடுவதே புதுக்கவிதை எழுத்தாளனின் பிரதான பண்பு எனக் கொண்டால், அது தன்னுணர்ச்சிப் பாடலின் வரைவிலக்கணமாகவும் அமைந்து விடுகிறது"[7] எனும் கருத்து 'பாடுபொருள்' கூடிய உணர்ச்சி வெளிப்பாட்டு வகையிலும் புதுக்கவிதையின் ஆணிவேர், தன்னுணர்ச்சிப் பாடல்களாக உள்ளன எனும் உண்மையை வெளிப்படுத்துகிறது.

தமிழில், 'தன்னுணர்ச்சிப் பாடல்கள்' பாரதியின் கைப்பட்டு, எவ்வாறு வளர்ந்து, சிறந்தன என்பதை நாம் முன்னரே கண்டோம்.

உந்துதல் சக்தி

தமிழில் புதுக்கவிதை தோன்றுவதற்குரிய உந்துதல் சக்தியைப் பற்றி, அறிஞர்கள் கொண்டுள்ள கருத்துகள் இங்குச் சிந்திக்கத் தக்கனவாகும்.

"ஃபிராய்டின் கருத்துக்களால், கவிஞர்களது அகநோக்கு இதுவரை கண்டிராத அளவு விரிவும் அழகும் பெற்றது. உணர்வு உலகத்தில் இன்னும் ஆழத் துழாவி துருவிப் பார்த்தவர்கள் மென்மையானதும், சிக்கலானதும், கூட்டுக், கலப்பானதும் திட்டமான எண்ணத்துக்கு உருவாகாமல் பிரக்ஞை நிலையிலேயே இருக்கும் அக உளைச்சல்களை எல்லாம் சொல்லப் பார்த்தார்கள். கணக்கற்ற அணுக்களைப் போல்,

---

7 க. கைலாசபதி, சமூகவியலும் இலக்கியமும்,

எல்லா பக்கங்களிலிருந்தும் ஒரே சமயத்தில் மனதுக்குள் பொழியும் மனப்பதிவுகளை மாறுபடும் இனம் தெரியாத, ஒரு கட்டுக்கடங்காத மனப்போக்கை வெளித்தெரிவிப்பது தங்கள் கடமை என்று கருதினார்கள். அதே சமயம், புற உலகமும் அவர்களை பாதித்தது. புதிய விஞ்ஞானத் தகவல்கள் பிரபஞ்ச விசாரணையிலே புதுப் பார்வைகளை ஏற்றின. வாழ்க்கை ஒரு ஐக்கியத் தன்மை வாய்ந்தது என்பதோடு தொடர்ந்தே ஓடும் ஒரு தாரை, சென்றது நிகழ்வதுடன் பிணைகிறது, நிகழ இருப்பதில் வெளிக்கோட்டை உருவாக்க, ஒரு கணம் மறுகணம் என் றெல்லாம் இருந்தாலும், ஒன்றை அடுத்து ஒன்றாக இடை யறாமல் தொடர்நிலையாக ஓடிக் கொண்டு இருக்கும் கணப்பொழுதுகளால் ஆனதுதான் வாழ்க்கை; ஒவ்வொரு நிகழ்கணப் பொழுதும் எல்லா காலத்தையும் தன்னுள் அடக்கிக் கொண்டிருக்கிறது. அத்தகைய கணப்பொழுதில் நின்று பார்க்கிற கவியின் பார்வையில் காலம், வெளி இரண்டும் பேதமற்றுப் போய்விடுகின்றன என்னும் "காலம்" வெளிபற்றிய கருத்துக்கள் பரவின.

ஆக – அக, புற உலக மாறுதல்களால் பாதிக்கப்பட்ட இந்த நூற்றாண்டு ஆரம்ப காலத்தவன் (அப்படியே), புதுக்கவியாக மலர்ந்தது. மேல் நாட்டில் கவிதையுலகம் கண்ட அனுபவம். அது பூத்த பூக்கள் நிறைய நம் மொழியில் இன்று வளமாகி இருக்கும் புதுக் கவிதைக்கு, இந்த பூர்வோத்திரத்தை மேலோட்டமாகத் தெரிந்து கொள்ள வேண்டும். 1910–க்கு மேல், இங்கிலாந்து, அமெரிக்காவில் புதுக்கவிதை முயற்சி ஆரம்பமான அதே காலத்தில்தான், சி. சுப்ரமண்ய பாரதி இங்கு அதைச் செய்தார் .1920–30க்களில் மேல் நாட்டு புதுக்கவிதைக்கு ஒரு உந்துதல் ஃபிராய்டியம், மார்க்ஸீயம் இரண்டிலிருந்தும் மனோதத்துவ, லோகாயத தத்துவ ரீதியாகவும் ஏற்பட்டது போல் தேசியம் பாரதிக்கு உந்துதல் அளித்தது."[8]

மேற்கண்ட கருத்திலிருந்து ஓர் உண்மை புலனாகிறது. தேசிய உணர்வே (விடுதலைப் போராட்ட எழுச்சியே)

---

8 சி. சு. செல்லப்பா (பதி), புதுக்குரல்கள், பக்.3–5

பாரதிக்குப் புதுக் கவிதையைப் படைக்கத் தூண்டியது என்பது புலனாகிறது.[9]

ஆனால், இரண்டாவது உலகப் போரினை ஒட்டியே, 'பிராய்டிசம்' தமிழ் எழுத்தாளர்களைத் தடுத்து ஆட்கொண்டது. கு.ப.ராஜகோபாலனே இதற்குச் சிறந்ததோர் எடுத்துக் காட்டாவார். இவருக்குப் பிறகு 'நீறுபூத்த நெருப்பாக' இருந்த இந்தப் பண்பு, 1960 ஐ ஒட்டி, 'எழுத்து, வளர்த்த 'புதுமைக் கவிஞர்கள்' இடையே, முனைப்பான செல்வாக்கைப் பெற்றது என்பது உண்மை. இந்தப் பண்பு, பரவலாக இன்றைய புதுக்கவிதைகளில் "பச்சையாக எடுத்துரைத்தல்' எனும் கலைத் திறனாகப் போற்றப்பட்டு வருகிறது.

வளர்ச்சிநிலை

இந்நிலையில், பாரதிக்குப் பின், புதுக்கவிதை எவ்வெவ் வொறு தமிழில் வளர்ந்துள்ளது, என்பதை அறிய வேண்டிய பொறுப்பு நம்மைச் சாருகிறது. நுட்பமாகவும் தெளிவாகவும் விளக்குவதற்கும் புரிந்துகொள்ளுவதற்கும் உரிய வகையில், புதுக்கவிதை வரலாற்றைக் கலாநிதி கைலாசபதி பகுத்துள்ளதைப் போன்று மூன்று காலகட்டங்களாகப் பிரித்துக் கொள்ளலாம். 'மிகச் சுருக்கமாகக் கூறுவதானால் புதுக்கவிதை வரலாற்றை மூன்று படிநிலைகளிற் காணலாம். நான் குறிப்பிடும் மூன்று படிநிலைகள், கால அடைவிற்கும் பண்பு அமைதிக்கும் பொருந்துவன"[10] என்பது அவர் செய்துள்ள பாகுபாடாகும்.

---

9 ஆனால்,நா.வானமாமலை பிராய்டிசமே உந்துதல் சக்தியாக நம் புதுக்கவிஞருக்கு அமைந்தது என்று செல்லப்பா எழுதியுள்ளதாகத் தம் நூலில் குறிப் பிட்டுள்ளார். (பார்க்க: புதுக்கவிதை,முற்போக்கும் பிற்போக்கும், பக் –25) இது திரித்துக் கூறப்பட் டுள்ள செய்தியாகும்

10 தமிழன்பன்,தோணிவருகிறது, டாக்டர் க. கைலாச பதியின் முன்னுரை, பக். xi.

மணிக்கொடி காலம்

முதலாவது கால கட்டத்தினை (1930–45), 'மணிக் கொடி' காலம் எனலாம். தேசிய எழுச்சியின் உந்துதலால் தொடங்கப்பட்ட 'மணிக்கொடி' எனும் பத்திரிகையில் துடிப்புமிக்க இளைஞர்கள், புதிய சிந்தனைக்குக் கட்டியங் கூறி வரவேற்பு அளிக்கும் வகையில், தமிழில் பல புதிய இலக்கியப் பரிசோதனைகளை' நடத்தினர்.[11]

இவர்களுள் "சிலர், பாரதியின் வசனப்பகுதிகள் சிலவற்றை ஆதாரங்காட்டியும், மேலைநாட்டு 'யாப்பிலாக் கவிதைகள்' சிலவற்றைப் பிரமாணமாய்க் கொண்டும், பரிசோதனைகளாக அவ்வப்போது எழுதியவை வசன கவிதைகள் என வழங்கப்பட்டன" ஆனால் அவர்கள் ஏதோ புதுமை மோகத்தால், புதிய முயற்சிகளைத் தமிழிலும் செய்து பார்ப்போம் என்னும் எண்ணத்தோடு அருகிய நிலையிலேயே புதுக்கவிதைகளைப் படைத்துள்ளனர்.

வேறுவகையாகக் கூறுவதானால், "ஓர் இலக்கிய இயக்கமாய்க் கருதுமளவுக்கு அவர்கள் வசன கவிதைகளை, அதிகமாகவும் முனைப்பான கொள்கைப் பிரகடனத்துடனும் எழுதவில்லை."

நாற்பது ஆண்டுகளுக்குப் பிற்பட்ட இன்றைய நிலையில், புதுக்கவிதையின் 'தோற்றம்' குறித்து எண்ணுகின்ற பொழுது இரண்டு எண்ணங்கள் எழுகின்றன. அதன் முன்னோடிகள் கு. ப. ராஜகோபாலன், புதுமைப்பித்தன், ந. பிச்சமூர்த்தி, வல்லிக்கண்ணன், சி. சு. செல்லப்பா முதலி யோராவர். புதுமையைப் போற்றி வரவேற்பது, அன்றைய தமிழ்ச் சமுதாயத்தில் அருவருக்கப்பட்ட–வெறுத்தொதுக்

---

11 'மணிக்கொடி காலம்' எனும் சாகித்ய அகாதமி பரிசு பெற்ற நூலை, பி. எஸ். ராமையா எழுதியுள்ளார். ஆனால், என்ன காரணத்தினாலோ, 'புதுக்கவிதைகள்' பற்றி மணிக்கொடியில் செய்யப் பட்ட பரிசோதனைகளை ஓரிடத்தில் கூட அவர் குறிப்பிடவில்லை.

கப்பட்ட– கண்டிக்கப்பட்ட செயலாகும். மரபினை மீறிய தாலும், புதுமைக் கருத்துகளை எடுத்தியம்பியதாலும் அவர்கள் "தமிழர் வாழ்வினின்றும், தமிழ் இலக்கிய உணர்வினின்றும் அத்துணை அந்நியப்பட்டு நின்றனர் என்பதற்கு இல்லை. 'வசன கவிதை' எனும் வடிவத்திலே நெஞ்சைப் பறிகொடுத்து நின்றனரேயன்றி,புதியபொருளிலோஅன்றித்திட்டவட்டமான இலக்கியக் கொள்கையிலோ ஈடுபாடு கொண்டிருந்தனர்" எனக் கூற இயலாது,

அவர்கள் படைத்த புதுக் கவிதைகளாகிய 'வசன கவிதை களைப் பற்றி முந்தைய இயலில் விரிவாகக் கண்டோம். அவர்கள் இடையே, சிறப்புற்று விளங்கிய புதுமைப்பித்தன், "வசன கவிதை' எனப் புதுக் கவிதையைச் சுட்டுவது தவறு" எனும் கருத்தினைக் கொண்டு இருந்தார். இதனை அவருடையபடைப்புகளே வெளிப்படுத்துகின்றன. "புதுமைப் பித்தனது படைப்புகளே பூரணமான தனிப்பாடல்களின் மொழி நடையைத் தழுவின. அவ்வகையில், அவை முற்றி லும் புதியன அல்ல" எனும் மதிப்புரை இங்குக் கருதத்தக்கது.

விடுதலைப் போராட்டத்தால் உண்டான தடை

பாரதிக்குப் பிறகு தமிழகத்தில் உண்டான பண்டைச் செம்மை இலக்கிய மறுவுயிர்ப்பு (சங்க இலக்கியப் பயிற்சியும், ஈடுபாடும்), மறுமலர்ச்சி இயக்க உந்துதல் சக்தியாக அமைந்தது. இதனால், காப்பியரையும், கபிலரையும், திருவள்ளுவரையும், இளங்கோவையும் போற்றும் பண்பு பெருகியது! "பண்டை இலக்கியங்களே சிறந்தவை; போற்றத்தக்கவை" எனும் உணர்வோடு, 'புதிய செம்மை இலக்கிய இயக்கம்' (Neo–Classical Movement) தளிர் விட்டுத் தழைக்கத் தொடங்கியது.

இதன் விளைவாகவே, மறுமலர்ச்சி இயக்கம் வலுப் பெற்றது. அரசியலில் தமிழரின் தன்மான இயக்கமாகத் திராவிடர் கழகமும், தி.மு.க.வும் தோன்றின; மொழித் துறையில் 'தனித்தமிழ் இயக்கம்' தலையெடுத்தது; கலைத் துறையில், சிறப்பாக இசைத் துறையில் 'தமிழிசை இயக்கமும் வீறு

கொண்டு எழுந்தது. இந்த மூன்று இயக்கங்களும் சேர்ந்து, தமிழருடைய பண்பாட்டு மறுமலர்ச்சிக்கு வழிவகுத்தன.

இதனால்,பண்டைக்காலத்தை – சங்ககாலத்தை – மீண்டும் புதிய வடிவில் புத்துயிர் பெறச் செய்வதே சிறந்தது எனும் எண்ணம் சிந்தனையாளர்களிடம் எழுந்தது. "சங்க காலமே பொற்காலம்" எனும் எண்ணத்தோடு, ஏறக்குறைய ஈராயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட கடந்த கால வாழ்க்கையையும் இலக்கிய மலர்ச்சியையும் அடைய வேண்டும் எனும் ஏக்கத்தோடு, தமிழ்நாட்டுக் கவிஞர்கள் பின்நோக்கி வாழ முயன்றனர்.

இது தமிழ்நாட்டின் 'சாபக்கேடு' மட்டும் அன்று. இந்தியா முழுமையிலும் இத்தகைய உணர்வே அக்காலத்தில் பெருக்கெடுத்து ஓடியது. 'ஆரியரின் ஆர்க்டிக் தாயகம்' (The Arctic Home of the Aryans) எனும் பாலகங்காதர திலகரின் நூல், தேசிய விழிப்புக்குப் புதியதோர் எழுச்சிமிகு ஆற்றலை அளித்தது.

பண்டித ஜவகர்லால் நேருவின் "இந்தியாவினைக் கண்டறிதல்" (Discovery of India) எனும் நூல், பண்டை இந்தியப் பண்பாட்டின் சிறப்பையும் பெருமையையும் உலகிற்கு உணர்த்தியது. இதைப் போன்ற இந்தியப் பண்பாட்டு வரலாற்றுப் புதிய விளக்க நூல்கள், பல இந்தி, குஜராத்தி, மராத்தி, வங்காளி தெலுங்கு முதலிய மொழிகளில் 1920–க்கும் 1940–க்கும் இடையே வெளிவந்தன."

இவையாவும் அசோகன் ஆட்சிக்குப் பலநூற்றாண்டுகள் முற்பட்ட இராமாயண,பாரதகாலங்களையும்,வேதகாலத்தையும் 'பொற்காலமாக'ச் சித்தரித்தன. இதனால் தாய்த் திருநாட்டுப் பக்தியும், தாய்மொழிப்பற்றும் 'கொழுந்து விட்டு' எரியத் தொடங்கின. இந்த உணர்வுகள் வேதகால இந்தியாவையும், 'இராம இராச்சியத்தை'யும் திரும்ப அடைவதற்குச் சுதந்திரம் தேவை எனும் உரிமை வேட்கையை ஊட்டின. இந்தப் பின்னணியில்தான் இந்திய சுதந்திரப் போர் வலிவும் பொலிவும் பெற்றது.

இதனால், நாட்டுப் பற்றும், மொழிப்பற்றும் வாய்ந்த இந்திய மக்களிடம் 'புதுமை மோகம்' குன்றத் தொடங்கியது; புதிய இலக்கியப் 'பரிசோதனைகள்' அருவருப்புடன் நோக்கப்பட்டன.

இதே நிலைதான், தமிழகத்தில் அக்காலத்தில் நிலவியது. இந்த வரலாற்றுப் பின்னணியைப் புரிந்துகொள்ளும் அறிவாற்றல் இல்லாத காரணத்தினாலோ. புரிந்துகொள்ள விரும்பாததனாலோ, இந்தக் கால கட்டத்தில் தமிழகத்தில் உண்டான 'பழமை வெறியை' மட்டும் குறை கூறுவதையே புதுக்கவிதைத் திறனாய்வாளர்கள் பொழுது போக்காகக் கொண்டுள்ளனர்.

இதனால்," படைப்புணர்வு மறைக்கப் பட்டது; மறுக்கப்பட்டது. படைப்பின் ஆக்க சக்திகளை வேரறுக்கும் இந்த இலக்கியப் புறம்பான சக்திகளைச் சவாலுக்கழைக்கக் கூடிய அறிவார்ந்த சூழ்நிலை தலையெடுக்காததால், பாரதியிடம் தலைநிமிர்ந்த தமிழ்க்கவிதை மீண்டும் ஒரு தேக்கத்தைச் சந்தித்தது"[12] எனும் கூற்று, ஒருதலைச் சார்பானது மட்டும் அன்று! அறியாமை நிறைந்ததாகும்!

கவிமணி, பாரதிதாசன், நாமக்கல் கவிஞர் போன்றோர் இந்திய தேசியத்தையும், தமிழ்த் தேசியத்தையும் பாட வேண்டிய –பரப்ப வேண்டிய – நெருக்கடிமிக்க விடுதலைப் போராட்ட காலத்தில் வாழ்ந்தனர்; சுதந்திரப் போராட்டத்திற்கு உரமாக அமையக் கூடிய கருத்துகளையும், வடிவங்களையும், கலைத்திறன்களையும் பயன்படுத்திப் பாடினர்.

1947–இல் இந்தியா விடுதலை பெற்றது. இதை அடுத்து 'உரிமையுணர்வு' எங்கும், எதிலும் பொங்கி வழியத் தொடங்கியது. இதன் விளைவாக மரபு மீறலும், மரபை உடைத்து எறிதலும் கொண்ட புதிய முயற்சிகளில் ஈடுபடுதலும் தலையெடுக்கலாயிற்று.

---

12 பாலா, புதுக்கவிதை – ஒரு பார்வை,பக்.66

இந்தக் காலகட்டத்தில், இரண்டாவது உலகப் போரின் விளைவாக, உலக அரங்கில் பீறிட்டு எழுந்த கட்டற்ற சிந்தனையும், மனித நலநாட்டமும் தமிழகத்தையும் ஆட்கொண்டது. இத்தகைய சூழ்நிலையிலேயே புதிய கவிதையின் 'இரண்டாவது காலகட்டம்' தொடங்கியது.

'எழுத்தி'ன் காலம்

புதுக் கவிதையின் வரலாற்றில், இரண்டாவது, கால கட்டமாக விளங்குவது, சி. சு. செல்லப்பாவின் 'எழுத்து' இதழும், க.நா.சுவின் 'இலக்கிய வட்டம்' இதழும் புதுக் கவிதைகளை வளர்ப்பதில் மும்முரமாக ஈடுபட்ட 1959 முதல் 1970– க்குட்பட்ட காலப்பகுதியாகும். 'எழுத்து'லேயே பேரளவிற்குப் 'புதுக்கவிதைகள்' வெளியிடப்பட்டமையாலும், ஏறக்குறைய இருபதாண்டுகள் இந்தப் பணியை ''எழுத்து' செய்து வந்தமையாலும், இந்தக் காலகட்டத்தை ''எழுத்தின் காலம்' எனவே சுட்டலாம்.

"சி.சு. செல்லப்பாவின் 'எழுத்து' வட்டத்துடன் முதலில் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்த சிலர் ஆங்கிலச் சொற்கள் இடையிடையிட்ட அரைகுறைத் தமிழில் மேலை நாட்டுப் 'புதுக்கவிதை'கள் சிலவற்றை எதிரொலிக்கத் தொடங்கினர். ஆரம்பத்திலிருந்தே பின்பற்றும் போக்கு இவர்களது பிரதான பண்பாய் இருந்து வந்துள்ளது. மனமுறிவு, பாலியல் தடுமாற்றம், நோய்மை அந்நியப் படல் என்றெல்லாம் (சி. கனகசபாபதி போன்றோர்) இவர்களது கவிப் பொருளுக்கு விவரணமும் விளக்கமும் கூறுவதுகூட, சருகுக்குள் கிடப்பவற்றை மெத்தையிலே தூக்கி வைப்பதாகவே எனக்குத் தோன்று கிறது. யாப்பமைதிதான் இல்லாவிடினும், தமிழ்ச் சொற்களின் இயல்பான சொல்லமைதி, பொருளமைதி போன்றவை தாமும் இவர்களின் கவிதைகளில் இப்பொருள்களாய், இருந்தன; இருக்கின்றன"[13] எனும் துணிவுரை இங்கு ஆராயத் தக்கதாகும்.

---

13 பாலா, புதுக்கவிதை–ஒரு பார்வை, பக். XII

மேற்கண்ட மதிப்புரையில், இறுதியாகச் சுட்டப்பட்ட கருத்தினை, முற்றிலும் உடன்பட வேண்டியவர்களாக உள்ளோம். அரைகுறைத் தமிழில், தமிழ்ச் சொற்களின் கருத்தமைதியையும், சொல் நயத்தையும் பற்றி (அறியாது எனக் கூற இயலாது), அக்கறை இல்லாமல் 'எழுத்தி'ன் கவிஞர்கள் தம் கவிதைகளைப் படைத்தனர் என்பது உண்மை.

'மணிக்கொடியில் வசன கவிதை முயற்சியில் ஈடுபட்டவரே சி. சு. செல்லப்பா. அவருடைய வற்றாதப் பேரார்வத்தால் தொடங்கப்பட்டது 'எழுத்து' எனும் புத்திலக்கிய ஏடு. ஆனால், அவருக்குப் போதிய தமிழ் மொழிப் பயிற்சியும் இல்லை; நல்ல தமிழில் எழுத வேண்டும் எனும் உணர்வும் இருந்ததில்லை. அவருடைய 'மெரீனா' எனும் புதுக்கவிதை ஒன்றைப் படித்தாலே, இதனை எளிதில் உணரலாம்.

தமிழகப் பரப்பின் கீழ்விளும்பாய்
தென்வடல் கிடக்கும் நீள்வடமாய்
பழுப்பு **சாரியின்** வெண்கரையாய்
ரவி எழும் வங்கக் கடல் மேல் எல்லையாய்[14]

ஃ ஃ ஃ

தேயும் வனப்புக்கு ஒப்பனை மாற்றாக
மெர்குரி லைட்டும் கான்கிரீட் நடைபாதையும்[15]
பூ அற்ற **குரோடன்ஸும்** புல்சொட்டைத் திடல்களும்

ஃ ஃ ஃ

பந்து வீசி **பாட், பவுல்** செய்து
பக்கம் இருப்போர்க்கு **நியூசென்ஸ்** விளைவிக்கும்
கவட்டைக் குழாய் **டிராயர்** அணிசிறுவர்[16]

---

14 புதுக்குரல்கள், பக். 31
15 ஷ. 36
16 ஷ. 37

எனும் பகுதிகளைக் காண்க. கனத்த ஏழுத்துக்களில் உள்ள சொற்களுள் சாரி (Sari), லைட் (Light), நியூசென்ஸ் (Nuisance) எனும் சொற்களையாகிலும் (தமிழுணர்வும் தமிழறிவும் உடையவராக அவர் இருந்திருந்தால்), பயன்படுத்தாமல் இருந்திருப்பார் எனும் எண்ணமே எழுகிறது.

'புதுக் குரல்கள்' எனும் புதுக் கவிதைத் தொகுப்பின் முதற்பதிப்பு முன்னுரையின் முடிவுரையாக, "கவிதைத் துறையில் ஒரு புதிய திருப்பத்தைக் காட்டுகிற கவிதைத் தொகுப்பு இது. **பாரதிக்கு**ப்பிறகு அந்தக் கவிகாட்டிய பாதையில் சென்று உருவம், உள்ளடக்கம் இரண்டிலும் சோதனை செய்துள்ள. 24 கவிகளின் 63 கவிதைகள் அடங்கி இருக்கின்றன'[17] என்று சி.சு. செல்லப்பா குறிப்பிட்டுள்ளார். 'பாரதியாருடைய வழியில் செல்லுகின்றவர்' இந்தக் கவிஞர்கள் என்பது உருவம், உள்ளடக்கம் போன்றவற்றுக் குப் பொருந்துமே யொழிய, அவர்களுடைய 'தமிழ்க் கொலைக்கு'ப் பொருந்தாது என இமயத்தின் மீதிருந்து உரத்த குரலில் நாம் முழங்கலாம்.

'புதுக்குரல்கள்' எனும் கவிதைத் தொகுப்பு முதன்முதல் 1962–ல் வெளியிடப்பட்டது. புதுக்கவிதையின் வரலாற்றில், அது ஒரு 'கி.மீ. கல்லாக' விளங்குகிறது. அதன் முன்னுரையில், சி.சு. செல்லப்பா, புதுக் கவிதையின் வரலாற்றையும், இயல்புகளையும் தாம் உணர்ந்த முறையில் எடுத்துரைக்க முயன்றுள்ளார்.

'எழுத்து' ஏடுகளில் கவிதை எழுதியவர்களும், 'புதுக் குரல்கள்' கவிஞர்களும் ஃபிராய்டிச தத்துவத்தால் பாதிக்கப் பட்டவர்கள் என்று சில விமர்சகர்கள் குறிப்பி முன் வந்தார்கள். இது தவறான கணிப்பாகும்.

---

17 நல்ல காலமாக இரண்டாம் பதிப்பின் முன்னுரை யில் இந்த வாக்கியங்களைத் திரு. செல்லப்பாவே நீக்கிவிட்டுள்ளார். எனவே, நம் கருத்தை (தமிழ்க் கொலை செய்வதை) அவர் உடன்படுகிறார் என்பது சொல்லத் தேவையில்லை.

"வாழ்க்கையை (உ.ப.) கவனித்து, வாழ்வும் காலமும் அன்றாட நிகழ்ச்சிகளும் உள்ளத்திலும் உணர்விலும் உண்டாக்கிய அதிர்வுகளை எழுத்தாக்க முயலுகிறவர்கள் அனைவரும் ஃபிராய்டிசத்தால் பாதிக்கப்பட்டவர்கள் என்று 'லேபில்' ஒட்டுவது, தவறான செயல்தான். அதேபோல், சமூகத்தில் காணப்படுகிற வறுமை, பணத்திமிர், இதர கொடுமைகள், சீர்கேடுகள் முதலியன ஏற்படுத்துகிற உள்ளத் துடிப்புகளை எழுத்தாக்குகிற எல்லோரையும் மார்க்சிய தத்துவப் பாதிப்பு பெற்றவர்கள் மார்க்சியப் பார்வையோடு பிரச்னைகளை அணுகுகிறவர்கள் என்று முத்திரை குத்தி விடுவதும் தவறான கணிப்பாகவே முடியும்"[18] எனும் உணர்வோடு, புதுக்கவிதைகளைத் திறனாய்வு செய்ய முயலுவதே விரும்பத்தக்கதும் வரவேற்கத் தக்கதுமாகும்.

'எழுத்து' வழி வெளிவந்த புதுக்கவிதைகளின் பொது இயல்புகளை முன்னரே சுட்டினோம். 'மனமுறிவு' (ஏமாற்றத்தால் உண்டான எரிச்சல்) புதுக்கவிஞர்களுக்கே உரியதனிச் சொத்து. இவ்வியல்புசிறிதுமுனைப்பாக'எழுத்தில்' வெளிவந்த புதுக்கவிதைகளில் காணப்படுகிறது.

கதவை மூடு–
வீங்கி விரிந்த மா நிலம்,
துவண்டு விழுந்தால் ஆறடி;
வாழவிட்ட பூமகள்!
சாய்ந்ததும் செரித்திடுவாள்;
நீ வளர்த்த நாயும் கடிக்கும்;
நோய் பிடிக்க கடனேற
நீயே
உனக்கு எதிராவாய்;
கதவை மூடு! கதவை மூடு![19]

---

18 வல்லிக்கண்ணன், புதுக்கவிதையின் தோற்றமும் வளர்ச்சியும், பக். 109–110.
வல்லிக்கண்ணன் சுட்டும் போக்கினை, நா. வான மாமலை, கலாநிதி க. கைலாசபதி போன்றோரின் திறனாய்வுகளில் காண்கிறோம்.

19 புதுக்குரல்கள், பக். 85

எனும் சி. மணியின் பாடல், வாழ்க்கைப் போராட்டத்தில், உண்டான ஏமாற்றத்தை எதிரொலிக்கிறது. அதனால், எதிர்காலமே இருண்டு போய்விட்டதாக நினைக்கும் ஒரு 'பிரமை' இக்கவிதையில் வெளிப்படுகிறது. இக்கால இளைஞர்களால், அதிர்ச்சிதரும் எதிர்ப்பையும், ஏமாற்றத்தையும் தாங்கிக் கொள்ள, பொறுத்துக்கொள்ள இயலவில்லை. ஆகவே, ஒருவகை 'மனமுறிவு' அவர்களிடம் எளிதில் உண்டாகி வருகிறது என்பதனை இக்கவிதைக் குறிப்பாகத் தெரிவிக்கிறது. பாரதியிடம் இந்த 'மனமுறிவைக் காண இயல்வில்லை. அவருக்கு அசைக்க இயலாத வகையில் 'கடவுள் நம்பிக்கை' இருந்தமையே இதற்குக் காரணமாகும்.

'பாலியல் தடுமாற்றம்' பண்டைக் காலப் புலவர்கள், இடைக்காலப் புலவர்கள் ஆகியோரிடம் அத்திபூத்தாற் போல் அருகியே காணப்பட்டது. பாரதி இடத்தில் கண்ணன் என் காதலன், காதலி எனும் பாடல்களிலும், அழகுத்தெய்வம், சுயசரிதைகளிலும், குயில்பாட்டிலும் மின்னல் போன்று தோன்றி இந்த இயல்பு மறைந்து விடுகிறது. அவருடைய பாடல்களில் 'விரசம்' தட்டும் வகையில், பாலியல் கருத்துகள் இடம்பெறவில்லை.

எண்ணும் பொழுதி லெல்லாம் – அவன்கை
இட்ட இடந்தனிலே
தண்ணென்று இருந்ததடீ!–புதியதோர்
சாந்தி பிறந்த தடீ![20]

எனும் பாடற்பகுதி, பாரதியின் 'பாலியல்' உணர்வுத் தடுமாற்றத்தின் வெளிப்பாட்டைப் புலப்படுத்துகிறது.

ஆனால், இதனை ஓர் இலக்கிய 'உத்தியாக' அவர் கையாளவில்லை. அறுபதுகளில் புதுக்கவிதை படைத்தோரிடம் 'பாலியல் உணர்வு' படாதபாடு பட்டது.

---

20 பா. கவி. பக். 340.

'திலோத்தமை சிரித்தாள்' எனும் வீ. ரங்கராஜனுடைய படைப்பைக் காண்போம்.

அவள் நினைவில்
மலர்க் குடில்கள் – பஞ்சு மெத்தைகள்
அவற்றின் மேல்,
தவமேந்திகள், தாபமேந்திகள்,
நபும்சக் கூடுகள்
அமுத கலசத்தை நாய்கட்கு வைத்திட்டாள்;
தாடி நாய்கள் – கறுப்பு நாய்கள் – அரண்மனை
நாய்கள்
நிஷ்காம கர்மியாய்,
திரிசங்குப் பெண்ணாய்த்
தந்து பெறுகிறாள் –சில நிமிஷங்கள்,
காமம் = தவம்[21]

எனும் கவிதையில் ஓரளவிற்குப் பாலியல் தடுமாற்றம் வெளிப்படுகிறது.

'ரோகிணி' எனும் பெண் கவிஞர் இந்தத் துறையில் தனிச் சிறப்பு உடையவராக விளங்குகிறார். (அவர் 'எழுத் தின்' மூலம் அறிமுகமாகாதவர்). எனினும், அந்தப் பாணியை நன்கு பின்பற்றுகிறார். 'சீதைகள் சிரிக்கின்றனர்' எனும் அவருடைய கவிதையில் இதைப் போன்ற இயல்பு பளிச்சிடுவதைக் காணலாம்.[22]

சமுதாயச் சீர்கேடுகளைச் சித்திரிக்கும் நோய்மை (நோயின் தன்மைகள்) இயல்பு, புதுக்கவிதைகளில் காணப்படும் மற்றொரு சிறப்புத் தன்மையாகும்.

ஃ ஃ ஃ
வந்தார்
அவர்

---

21 புதுக்குரல்கள், பக். 97.
22 ரோகிணி, தேன் முள்ளுகள், பக் 27–28.

சாமியே சரணமென்றேன்
சாஷ்டாங்க மானேன்
உபதேசம் செய்யுமென்றேன்
"பழஞ்சோறு ஒரு பிடி
இருந்தாற் போடும்
பழங்கந்தை ஒரு முழம்
இருந்தாற் கொடும்'
என்றார்[23]

எனும் கவிதை, "உபதேசம்" எனும் தலைப்பில், ஹரி சீனிவாசனால் இயற்றப்பட்டதாகும். இன்றைய சமுதாயத் தின் தீர்க்க இயலாத நோய், 'வறுமை' என்பதையே 'உபதேசம்' உணர்த்துகிறது. பாரதியாரின் பாடல்களில் சமு தாயச் சீர்கேடுகள் நன்கு சித்திரிக்கப்பட்டுள்ளதை நாம் முன்னரே கண்டோம்.

படிப்பவர்க்கு எளிதில் பொருள் புரியாதவாறு, மறை முகமாகவும் குறிப்பாகவும் கருத்துகளை எடுத்துரைப்பதைப் புதுக்கவிதையின் மற்றொரு சிறப்பு இயல்பாகக் கூறுவர்; இந்த இயல்பிற்கு 'இருண்மை' எனும் பெயரும் சூட்டியுள்ளனர்.

சங்கரரின் 'இரண்டற்ற தன்மை' பற்றிய தத்துவத்தை 'அத்துவிதம்' என்போம். அக்கொள்கையைப் புதுமைக் கவிஞர் ஒருவர் 'அத்து வைதம்' எனும் தலைப்பில் பாடியுள்ள பாடல் இங்குக் குறிப்பிடத்தக்கதாகும்.

சங்கு வெள்ளைத் தடித்த தாளின்மேல்
கோழிமுட்டை வடிவ பச்சைநிறக் கோட்டினை
பக்க வட்டமாய்ச் சாய்த்தான்
மேல்கூம்பி குறுகிய பக்கத்தின்மேல்
சிறுவட்டம்; வட்டத்தின்மேல் ஒருவளைவு;
சிறிய வட்டத்தில் இரு புள்ளிகள்; அப்படியும் இப்படியுமாய்
மேலும் கீழும் விழுந்தன கோடுகள்
கிளிகிளி, பச்சைக்கிளி

---

23 புதுக்குரல்கள், பக். 21.

கத்தியது குழந்தை தன் படைப்பின் வியப்பில்
வெளிப்பரப்பில் ஓடித்திரியும் ஒரு கிளியைப் பிடித்து
அம்மா தரும் பழத்தை, பாலைத் தரவே கூப்பிட்டான்.
இதோ வந்துவிட்டதே விரல்கள் வழியாய்
கிளி வாயின் அருகே துண்டு துண்டான கோடுகள்
சாய்வாய்ச் சிதறி விழுகின்றன.
கீ கீ கீ கீ கிளி கத்த ஆரம்பித்தது
அவன் கிளியானான்; கிளி அவனாயிற்று.[24]

இந்தக் கவிதையை கி. அர. சச்சிதாநந்தம் படைத்துள்ளார். 'அவன் கிளியானான்; கிளி அவனாயிற்று' எனும் அடி, 'தத்துவமசி' எனப்படும் 'நீ அதுவாக இருக்கிறாய்' எனும் அத்துவிதத் தத்துவத்தை அறிவிக்கிறது. ஆனால். இந்த அடிகளுக்கு மேலே இருக்கும் பகுதி புரியாப் 'புதிராக' இருக்கிறது.

'எழுத்து' வளர்த்த புதுக்கவிதைகளில் பல, 'புதிர்க் கவிதையாகத் தோன்றுகின்றன என்று சிலர் குறை கூறுவது ஓரளவிற்கு உண்மையாகவே தோன்றுகிறது.

ஆயினும், 'எழுத்து' எழுப்பிய 'புதுக்குரல்களில்" சிந்தனைத் தெளிவும், புதிய எண்ணவோட்டமும், கற்பனை வளமும், எளிமையும் நிறைந்த கவிதைகளும் வெளிப்பட்டுள்ளன என்பதை மறுப்பதோ, மறைப்பதோ நடுவுநிலையை நாடும் திறனாய்வாளரின் பணியாகாது.

வல்லிக்கண்ணனின் 'குருட்டு ஈ' எனும் கவிதையைக் காண்போம்.

ஒளிநன்று, ஒளியே அமுதம்
அது இனியது; வாழ்வு தருவது.
உண்மை; நான் மறுக்கவில்லை!
வெள்ளம் பெருகி ஓடினும்
நாய் நக்கியே குடிக்கும்
வெள்ளமாய் ஒளி

---

24 புதுக்குரல்கள் பக்.19

வெளியை நிறைக்கிலென்?
உள்ளக் குகையில்
இருட்டே இருந்தால்
உலகமும் இருளாம்[25]

எனத் தொடங்கும் கவிதையைப் பலமுறை படித்தால் சலிப்பே தட்டுவதில்லை!

பாரதியாரின் 'காட்சி' எனும் புதுக்கவிதையினை அடியொற்றி இயற்றப்பட்டதைப் போல, 'குருட்டு ஈ'யின், தொடக்கம் அமைந்து இருக்கிறது.

இவ்வுலகம் இனியது. இதிலுள்ள வான் இனிமை
யுடைத்து
காற்றும் இனிது
தீ இனிது. நீர் இனிது. நிலம் இனிது[26]

எனும் பாரதியாரின் கவிதையோடு ஒப்பிட்டுக் காண்போமானால், இந்த உண்மை எளிதில் புலனாகும்.

வல்லிக்கண்ணனுடைய மேற்கண்ட கவிதையில், எளிமை தெளிவு, கருத்தாழம், உணர்த்தும் முறையில் புதுமைப் போக்குப் போன்ற சிறப்பியல்புகள் வெளிப்படுகின்றன.

இத்தகைய இயல்புகள் வாய்ந்த கவிதைகளைத் திறனாய்வாளரின் தாக்குதல்களுக்குப் பெரிதும் இலக்காக விளங்கும் தருமு சிவராமு, நா. வெங்கட்ராமன், தி.சோ. வேணுகோபாலன், எஸ். வைத்தீஸ்வரன், ஞானக்கூத்தன், சி.சு.செல்லப்பா முதலியோர் படைத்துள்ளனர்.[27] இரண்டொரு காட்டுகளோடு சி சு செல்லப்பா வளர்த்த 'புதுக் கவிதை மரபு' எவ்வாறு பாரதியாரின் அடிச்சுவட்டைப் பின்பற்றி வந்துள்ளது எனும் கணிப்பை நிறைவுசெய்யலாம்

---

25 புதுக்குரல்கள், பக். 106

26 பா கவி. பக். 507

27 இவர்களைப் பற்றிய விரிவான மதிப்பீட்டை அடுத்து வெளிவரும் என்னுடைய 'புதுக்கவிதை நோக்கும் போக்கும்' எனும் நூலில் காண்க.

'பொழுது புலர்காலையை'ப் பல புலவர்கள் தம்முடைய அனுபவம், கற்பனை வளம், கவித்திறன் ஆகியவற்றிற்கு ஏற்பப் பல வகையான சொல்லோவியங்களாகத் தமிழில் சித்தரித்துள்ளனர். அவற்றுள், 'உலகம் உவப்ப, வலனேர்பு திரிதரு' எனத் தொடங்கும் நக்கீரருடைய 'திருமுருகாற்றுப் படை'யின் முதற்பகுதி சிறப்புமிகு சொற் சித்திரமாகும்.

இதனோடு ஒப்பவைத்துப் போற்றத்தக்கது 'தருமு சிவராமு'வினுடைய 'விடிவு' எனும் கவிதை.

பூமித் தோலில்
அழகுத் தேமல்
பரிதி புணர்ந்து
படரும் விந்து
கதிர்கள் கமழ்ந்து
விரியும் பூ
இருளின் சிறகைத்
தின்னும் கிருமி
வெளிச்சச் சிறகில்
மிதக்கும் குருவி[28]

இந்தக் கவிதைப் புத்துலக மனப்போக்கை, எளிய, இனிய சொற்களால் கவர்ச்சிமிகு படிமக் காட்சிகளோடு, உணர்ச்சிச் செறிவும் இயைந்துவர எடுத்தியம்புகிறது. இக்கவிதையில் புதுமைப் பொலிவும், கற்பனைக் கவர்ச்சியும் களிநடனம் புரிகின்றன.

'பழம் பெருமை' பேசுவதில் தமிழர்களாகிய நாம், உலக அரங்கில் முன்னணியில் நிற்கின்றோம். 'இன்றைய நடை முறை வாழ்க்கைக்கு எந்த வகையில் / அளவில் பழம் பெருமை பயன்தருகிறது?' என்பதைச் சிந்தித்துப் பார்ப்பதே இல்லை. 'பழம் பெருமை' பேசுவதிலேயே நம் வாழ்நாளை எல்லாம் வீணாக்கிவிட்டோம் எனும் உணர்வை ஊட்டும் வகையில், தி. சோ. வேணுகோபாலன் படைத்துள்ள 'பழம் பெருமை' எனும் புதுக்கவிதை அமைந்துள்ளது.

---

28 ஷெ பக்.46.

குழம்பு மாங்கொட்டை
குலப்பெருமை பேசிற்று!
நட்டுவைத்துக்
காத்திருந்தேன்;
நெடுமரமும், மரக்கனியும்
நிழலாச்சு!
நெளிந்தது
புழு![29]

கவிஞர் என்ன சொல்லுகிறார்? புரியவில்லையா? அல்லது அதிர்ச்சி உண்டாகிறதா? ஆத்திரப்படவேண்டா! பொறுமையாகப் படித்துப் பாருங்கள்! அவர் சொல்லுவதன் உண்மை புலனாகும்.

இவ்வாறு, புதுக்கவிதை "புதுவாழ்வின் எதிரொலியாகவும், வாழ்க்கையின் இன்றைய சிக்கல்களைச் சிக்கல்களாகக் காட்டும் சிந்தனை வெறியாகவும்" வளர்ந்தது. இந்நிலையில் 'புதுக்கவிதை எதிர்ப்பு இயக்கமும்' கடுமையாகச் செயல்பட்டது.

எதிர்ப்பும் மறுப்பும்

இந்த எதிர்ப்பு இயக்கத்தாரின் தாக்குதல்களுக்கு ஈடு கொடுத்து, 'எழுத்தில்' புதுக்கவிதை வளர்ந்து இருக்கிறது. அந்நிலையில், மரபு வழிப்பட்ட புதிய சிந்தனை வாய்ந்தத் தமிழறிஞர் சிலர், 'புதுக் கவிதை'களும், பழைய சங்க இலக்கியப் பாடல்களின் வழிவந்த யாப்பு நெறியைப் பின்பற்றியே படைக்கப்படுகின்றன எனும் கருத்தை நிலைநாட்ட முயன்றனர். அவர்களுள் டாக்டர் சி. கனகசபாபதி இங்குக் குறிப்பிடத்தக்கவராவார்.

1967–ஆம் ஆண்டு, 'எழுத்தின்' தொண்ணூற்று ஏழாவது (97) இதழில் பேராசிரியர் சி. கனகசபாபதி எழுதிய "பாரதிக்குப் பின் தமிழில் புதுக்கவிதை" எனும் ஆய்வுரை, நம் நோக்கிற்கு உரமூட்டுவதாக அமைந்துள்ளது. அவருடைய சிந்தனைச்

---

29 புதுக்குரல்கள், பக்.118.

சிதறல்கள் சில, புதுக் கவிதையில், பாரதியின் தாக்கத்தை வெளிப்படுத்துவனவாக உள்ளன.

"பாரதிக்குப் பிறகு, பாரதியே சோதனை செய்த 'வசன கவிதை' என்னும் முறை, தமிழில் வளர்ந்து இருக்கிறது. வசன கவிதை முறை தமிழுக்கு வேண்டியது என்ற கருத்தில் தான் பாரதி, அதிலும் படைத்துப் பார்த்தார். கவிதை, வசனம் ஆகிய இரண்டு உருவங்களோடு 'வசன கவிதை' என்ற மூன்றாவது உருவமும் உண்டு என்பது பாரதிக்குத் தோன்றியது.இப்படிப்பட்ட 'வசன கவிதை' என்பது தமிழ் இலக்கிய மரபில், 'உரைப்பாட்டு' என்று வழங்கியது[30]" என்னும் முன்னுரையோடு, 'புதுக்கவிதை'யின் வளர்ச்சியைச் சுட்டுவதற்கு அவர் முனைகிறார்.

இவ்வாறு சிலப்பதிகாரத்தில் இடம் பெற்றுள்ள 'உரைப் பாட்டுமடையே'இன்றைய'வசனகவிதை'எனக்கூறுவதனால், புதுக் கவிதையின் மூலம், பண்டைத் தமிழ்க் காப்பியத்திலேயே காணப்படுகிறது எனும் எண்ணத்தை இப்பேராசிரியர் ஊட்டுகிறார்; எதிர்ப்பைக் குறைக்க முயலுகிறார்.

மேலும், "பாரதி காலத்தில், "வசன கவிதை' என்று வழங்கியது இப்போது 'இலகு செய்யுள்' என்று குறிக்கப்படுகிறது. இலகு செய்யுள் என்பது ஒரு புதிய உருவம்தான். அது புதிய கவிதை எழுதும் முறையாகும்.

"இளங்கோ வரிப் பாட்டுக்களை இணைத்தும், கம்பன் விருத்தங்களில் பாடியும், பாரதி சிந்துகளில் எழுதியும் படைத்திருப்பவை' பழமையிலிருந்து எழுந்த 'புதுமைப் போக்குகள்' என்றே மதிப்பிடத்தக்கவை. 'இலகு செய்யுள்' முறையிலான 'புதுக் கவிதையும்' புதுமைப் போக்கானது தான்" [31]என்பதைத் தெளிவுறுத்தியுள்ளார்.

---

30 பார்வை 1, பக். 19

31 பார்வை பக் 20

மற்றும், 'இன்று, இதை இலகு செய்யுள் முறையிலான 'புதுக் கவிதை' என்று சொல்லுகிறோம். 'புதுக் கவிதை' என்ற சொல்லாட்சி, இதன் புதுமையைக் கருதியே இப்போது சேர்க்கப்படுகிறது. போகப் போக இது 'தற்காலக் கவிதை' என்றே அழைக்கப்பட வேண்டும்"[32] என சி.கனகசபாபதி அறிவுறுத்துகிறார்.

இப்பேராசிரியரின் கருத்துரை, பாரதி காட்டிய 'புதுநெறியின் வழிவந்ததே 'புதுக் கவிதை' என்பதை உறுதிப்படுத்துகிறது.

வானம்பாடிகள் வளர்க்கும் புதுக் கவிதை

புதுக் கவிதை வரலாற்றின் மூன்றாவது காலகட்டம். கோவையில் இருந்து 1971–ல் வெளிவந்த (இன்றும் வெளி வந்து கொண்டிருக்கும்) 'வானம்பாடி' எனும் இதழை மைய மாகக் கொண்டு தொடங்குகிறது. இதன் மூலம் புதுக் கவிதை இயக்கம் மீண்டும் வீறுடன் தழைத்தோங்கத் தொடங்கியது.[33]

"இந்த இயக்கம் திடீரென ஆகாயத்திலிருந்து பொன் னூஞ்சல் ஆடிக்கொண்டு வந்தது அல்ல. 'வானம்பாடி' 1971–ல் தோன்றியது கோவையில் கடந்த பத்தாண்டுகளுக்கும் மேலாக இயங்கிவந்த இலக்கிய அமைப்புகளில் இருந்து **ஒரு குறிப்பிட்ட காலத்தின் குறியீடாக** " வானம்பாடி' சிறகடிக்கத் தொடங்கியது"[34] என்பது அந்த இயக்கத்தினரின் தெரிவிப்பாகும்.

தங்களைப் பற்றியும், தங்களுடைய இயக்கம் பற்றியும் 'வானம்பாடிகள்' செய்துகொண்ட அறிமுகம் அவர்களுடைய நோக்கங்களை வெளிப்படுத்துகிறது.

---

32 ஷ. 28

33 இதற்கிடையில் இலக்கிய வட்டம், தாமரை, கசட தபற, கணையாழி எனும் இதழ்கள் புதுக்கவிதை இயக்கத்தை வளர்த்தன ஆனால், அவற்றிற்கெனத் 'தனிமையம்' யாதும் இல்லை. சில 'எழுத்தின்' பாணியைப் பின்பற்றின. ஒன்று 'வானம்பாடிக்கு' முன்னோடியாக அமைந்தது.

34 புதுக்கவிதையின் தோற்றமும் வளர்ச்சியும் பக். 216

"ஒரே சமயத்தில் சமுதாயக் கண்ணோட்டமும் புத்திலக்கிய நோக்கும் கொண்ட ஒரு கவிதை இயக்கம் எங்களுடையது" என்று 'மானுடம் பாடும்' வானம்பாடிகள் தங்களை அறிமுகப்படுத்திக் கொண்டனர்.

இந்தக் காலகட்டத்துக் கவிஞர்கள், பலவகையில் புதுமை இயல்புகளைக் கொண்டவர்களாக விளங்குகின்றனர். அவர்களுடைய எண்ணப் போக்கிற்கு ஏற்ப, அவர்களுடைய கவிதைகளின் நோக்கும். போக்கும் வேறுபடுகின்றன. அவர்களுடைய புதுக்கவிதைகளில் நாட்டுப்பற்று, தமிழ் மரபுணர்ச்சி, அனைத்துலக தேசியம், எதிர்கால நம்பிக்கை, கொள்கைத் தெளிவு, மனிதநலநாட்டம், எளிமை, பொறுப்புணர்ச்சி, நேர்மை முதலிய பண்புகள் முனைப்பாக உள்ளன.

வானம்பாடிக் கவிஞர்களுள் பெரும்பாலோர் தமிழை முறையாகப் படித்தவர்கள்; அதன் ஆழத்தையும் அழகையும் கண்டவர்கள்; தமிழாசிரியர்களாக – கல்லூரிப் பேராசிரியர்களாக வாழ்க்கையை நடத்தி வருகின்றவருமாவர். அவர்களுடைய கவிதைகளில் காணப்படும் தனிச்சிறப்பு, புதுக்கவிதையின் வடிவத்திலே பளிச்சிடுகிறது. மரபுவழிக் கவிதையை இவர்கள் 'தீண்டத்தகாதது' எனப் புறக்கணிக்கவில்லை.

'வானம்பாடி' வட்டத்தைச் சேர்ந்த சிற்பி, மீரா, இன்குலாப், தமிழன்பன், அப்துல் ரகுமான், மு மேத்தா, தமிழ்நாடன், கங்கைகொண்டான். கோவேந்தன், அக்னிபுத்திரன், புவியரசு, வைரமுத்து போன்றோர் தமிழ் வளர்க்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர். அவர்கள் கவிதைகளில், "மரபுவழிக் கவிதைக்கும் புதுக் கவிதைக்கும் வேண்டும் என்றே செய்யப்படும் வேறுபாடு எதனையும்" காண இயலாது. அவர்கள் இயல்பான முறையில் படிமங்களையும், வடிவங்களையும் அமைத்துக் கொண்டுள்ளனர்.

எவ்வாறு அவர்களுடைய கவிதைகளின் 'உள்ளடக்கம்', பாரதியின் அடிச்சுவட்டைப் பின்பற்றியுள்ளது என்பதை

முன்னரே (பாரதியின் சமுதாய உணர்வின் தாக்கம் எனும் பகுதியில்) விரிவாகக் கண்டோம். மனித நலநாட்டம் முதல் அனைத்துலக தேசியம் வரையில் பாரதியைப் பின்பற்றி, சில நிலைகளில் அவரையும் விஞ்சும் வகையில், இந்த 'வானம்பாடிகள்' வெற்றிக்கொடி நாட்டியுள்ளனர்.

உரைவீச்சும் புதுக்கவிதையும்

இந்தக் குழுக்களில் நேரடியாகத் தொடர்பு கொள்ளாத புதுக்கவிதையாளர்கள் பலர் உள்ளனர். அவர்களிடம் யாதாகிலும் ஒரு வகையில் உள்ளடக்கத்திலும், வடிவத்திலும் பாரதியாரின் தாக்கத்தைக் காணமுடிகிறது.

'உரைவீச்சு' எனும் பெயரால், புதுக்கவிதையினை டாக்டர் சாலை இளந்திரையன், போற்றிவளர்த்துவருகிறார். தம்முடைய 'உரைவீச்சு' இலக்கியத்தில் 'ஒரு புதிய இலக்கியம்' எனும் முன்னுரையில், "நமது கிராம மக்கள் இயல்பாகப் பேசும்போது இந்தப் பண்புகள் எல்லாம் (அழுத்தம், எள்ளல், அங்கதம், வீரம், நகைக்கு ஏற்பப் புதிய வாக்கிய அமைப்புகள்) அவைகளின் பேச்சு நடையின் கூறுகளாக அமைந்திருப்பதை அவர்கள் அறி வார்கள். மக்களின் இயல்போடு கலந்த அந்த நடைநெறிக்கு எழுத்து வடிவம் கொடுக்கும் ஒரு முயற்சி தான் இந்த **உரைவீச்சு** இந்த உந்துதலால் தமிழில் உரைவீச்சு எழுதிய சில பேர், இது கவிதை நடையோடு நெருங்கிய தொடர்புடையதாக இருப்பதாய்த் தவறாகக் கருதிக் கொண்டு –இதற்கு 'வசன கவிதை', 'புதுக்கவிதை' என்றெல்லாம் பொருந்தாப் பெயர்களைச் சூட்டினர். நாட்டு மக்களின் அன்றாடப் பேச்சு நடையை ஊன்றிக் கவனிப்பார்களானால், **உரைவீச்சு** – என்பதே இதற்குப் பொருத்தமான பெயர் என்பதைஅவர்களும் ஏற்பார்கள் என்பது திண்ணம்"[35] என்று தெரிவித்துள்ளார்.

பேராசிரியர் இளந்திரையன் சூட்டியுள்ள திருப்பெயர் பேரளவிற்குப் பொருத்தமானதாகவே தோன்றுகிறது பழமையை வெறுப்பது இக்காலப் போக்காக இருந்து வருகிறது.

---

35 சாலை இளந்திரையன், உரைவீச்சு, பக். 6–7

எனவே, புதிய இலக்கிய வகையான இந்தப் 'புதுமைக்கு' ஏன் பழகிப் போன – புளித்துப் போன 'கவிதை, வசனம், உரை, எனப்படும் தொடர்களைக் கொண்டு பெயரிட வேண்டும்?' எனும் எண்ணம் எழுகிறது.

தமிழ் இலக்கிய வகைப்பாட்டிற்கு ஒரு 'புதிய வரவாக– சேர்க்கையாக' இதனை நாம் கொள்ளுகிறோம். எனவே. இதனைப் 'புதுமையம்' என ஏன் குறிப்பிடக்கூடாது? என தான் நினைக்கின்றேன். ஆங்கிலத் தொடர்களுக்கு நேரான மொழிபெயர்ப்பாகத் தமிழில் படைக்க முயன்று இடர்ப் பட்டும், சறுக்கி விழுந்தும். பிறருடைய ஏசலுக்கும் எள்ள லுக்கும் இரையாகியும்' ஏன் பூசலை நாம் வளர்க்க வேண்டும்? அருள்கூர்ந்து இலக்கியச் சுவைஞர்களைச் சிந்திக்குமாறு வேண்டுகின்றேன். தமிழிற்கு – தமிழிலக்கியத்துக்குப் புதுப் பொலிவும் வலிவும் ஊட்டத்தக்க புதியவரவினைப் 'புதுமையம்' எனப் போற்றுவோமாக !

கவிஞர் இளந்திரையன், ஏன் 'உரைவீச்சுகளைப் படைக்க முன்வந்தார் என்பதைக் காண்போமானால், பாரதியின் சிந்தனைத் தாக்கமும், கவிதைப் பரிசோதனைகளும் எந்த அளவிற்கு அவரை ஆட்கொண்டுள்ளன என்பது எளிதில் புலனாகும்.

"அமரத்துவம் தேடும் ஆசையிலே செய்யப்படுவதல்ல இந்த இலக்கியம். மக்களின் சிந்தனையில் கலந்து, அவர்களுடைய வாழ்வின் அடுத்த கட்டத்துக்கு அவர்களை உந்தி நடத்த வேண்டும் என்பதே இதன் நோக்கு"[36] எனும் கருத்து மக்களின் இலக்கியமாக, (சாமானிய) மக்களுக்காகப் படைக்கப்படும் இலக்கியமாக இந்த 'உரைவீச்சு' விளங்க வேண்டும் எனும் ஆசிரியரின் உள்ளத் துடிப்பை வெளிப் படுத்துகிறது.

இந்த உரைவீச்சு இயற்றப்படுவதன் நோக்கத்தையும் அவரே எடுத்துரைத்துள்ளார். "இந்த உரைவீச்சுகளின்,

---

36 மு.கு.நூ .பக் 8

வெற்றி – தோல்வியின் அளவு எவ்வளவு என்பது, அது மக்களிடையே உண்டாக்கும் எழுச்சியைப் பொறுத்து இருக்கிறது. ஆயினும், இன்றைய மக்களின் திக்குமுக்காடல் களையும், விருப்பங்களையும், சீற்றங்களையும் அப்படியே சிந்திக்க வேண்டும் என்ற பெரிய ஆசையிலேயே இந்த 'உரைவீச்சு' முயற்சி மேற்கொள்ளப்பட்டது"[37] என்பதனால், இக்கவிஞரும், 'புதுக்கவிதை நீரோட்டத்தில்' கலந்து கொள்ளும் பாங்கு ஓரளவிற்கு வெளிப்படுவதை உணரலாம். எதிலும் தமக்கெனத் 'தனிமையத்'தோடு இயங்கும் உரிமை வேட்கை கொண்ட பேராசிரியர், இத்துறையிலும் எளிதில் இனம் கண்டுகொள்ளத்தக்க வகையில் தமக்குரிய தனிச் சிறப்போடு விளங்குவது கருத்தில் கொள்ளத்தக்கதாகும்.

'புரட்சிக் கணக்கு' எனும் இளந்திரையனுடைய கவிதை புதிய சமுதாயம் – சமவுடைமைச் சமுதாயம் எப்பொழுது உருவாகும் என்பதை அறிவிக்கிறது.

பத்தும் இரண்டும்
பன்னிரண்டு தான்:–
பசியை வளர்த்தால்
புரட்சிதான்!
என்ன,–
கணக்குச் சரிதானே?
ஏன் தயக்கம்?
தப்பு என்று நிரூபிக்கத்
தத்துவவாதிகளைத் தேடுகிறீர்களோ![38]

இதைப்போன்ற பல 'உரைவீச்சு'களைப் படைத்துள்ளார், பேராசிரியர், உள்ளடக்கம், வடிவம், இலக்கியவகை போன்ற பலவற்றில் பாரதியாருடைய தாக்கத்தைப் பல நிலைகளில் இவரிடம் காண இயலுகிறது.

---

37 மு.கு நூ பக். 9–10
38 ஷெ. பக்.88

ஈழத்தில் புதுக்கவிதை

1970 முதலே, ஈழத்தில் தனிப்பட்ட நிலையில் புதுக் கவிதை வளர்ந்துள்ளது. பெரிதும் மார்க்சிய நோக்கத்துடன் அங்குப் புதுக் கவிதைகள் படைக்கப்பட்டு வருகின்றன.

'மஹாகவி' எனும் ஈழத்துக் கவிஞர் பாரதியின் வழியில் கவிஞராக வளர்ந்தவர்; காலப் போக்கில் தம்முடைய நாட்டின் 'மண் மணத்தோடு' கவிதைகளைப் படைத்தார். அவருடைய இலக்கியப் படைப்புகளின் நோக்கையும் போக்கையும், அந்நாட்டுத் திறனாய்வாளர்கள் நன்கு கணித்துள்ளனர். "அன்றாட நிகழ்ச்சிகளையும் அனுபவங்களையும் நோக்கி மஹாகவியின் கவிதை திரும்பியதே முக்கியமான ஒரு திருப்பு முனையாகும். ஏனெனில், மஹாகவி போல், தமிழ்நாட்டில் பிச்சமூர்த்தியோ, அல்லது வேறு எவரோ அன்றாட வாழ்க்கை நிகழ்ச்சி, அனுபவம் என்னும் பௌதீக அடிப்படையை அல்லது யதார்த்த அடிப்படையை நோக்கித் திரும்பி இருந்தால், **இன்று தமிழ்நாட்டின் கவிதைச் சரித்திரம் வேறாக இருந்திருக்கும்.**

"மஹா கவி' ஒரு புதிய சந்ததியை விருத்தியாக்கும் ஓர் காலகட்டமாகிறார். **நாம் இன்னமும் பாரதியுகத்தில்' இருக்கிறோம் என்று சொல்வது தவறு.** பாரதி பரம்பரையின் இறுதித் தளிர்கள் படுத்துக் கொண்டிருக்கின்றன. பாரதி ஒரு யுக சந்தி என்பது மெய்யே.ஆனால் அந்த யுகசந்தி பிரிந்துவிட்டது அதன் ஒரு கிளையே பிச்சமூர்த்தி என்றால், அதன் மறுகிளை 'மஹாகவி'யே. **பாரதி வளர்த்த** சில கவிதைப் பண்புகளின் **தோல்வியே பிச்சமூர்த்தி** என்றால், அத்தோல்வி நிகழாமல் **அதனை இன்னுமொரு** கட்டத்திற்கு உயர்த்திய வெற்றியே **'மஹாகவி'** எனலாம்"[39]

இம்மதிப்பீட்டால், ஈழத்துத் தமிழ்க் கவிதை பாரதியின் பரிசோதனைகளை அடிப்படையாகக் கொண்டு தோன்றிய

---

39 சண் முக சிவலிங்கம், 'மஹாகவியின் கோடை'

தாயினும், புதிய நோக்கோடு புதிய போக்குகளையும் கொண்டு வளர்ந்துள்ளமை வெளிப்படுகிறது. இந்த வளர்ச்சிக்கு 'மஹாகவி' எனும் கவிஞர் முன்னோடியாக இருந்தமையும் தெரிகிறது.

புதுக்கவிதையின் வரலாற்றில் ஈழத்திற்குத் தனிஇடம் உண்டு. இதைப் போன்றே 'மஹாகவிக்கு'ம் ஈழத்தின் புதுக் கவிதை வரலாற்றில் தனி இடம் கொடுக்கப்படுகிறது. "கவிதையின் வடிவ அமைப்புக்கு ஒரு முழுமை கொடுத்ததிலும் 'மஹாகவி'யின் பங்கு முக்கியமானது. செய்யுள் உருவமும் கவிதை வடிவமும் ஒன்றே என மயங்கும் அநேகர் இன்றும் உள்ளனர். விருத்தம், வெண்பா. அகவல், சிந்து போன்ற செய்யுள் உருவங்களில் கட்டுரைப் பாங்கில் எழுதப்படும் கருத்துக்கள், சங்கதிகள் அனைத்தும் கவிதைகள் என்றே கருதப்படுகின்றன. இதன் மறுதலையில் புதுக் கவிதைக்காரர் எனப்படுவோர் வரிசை அமைப்புடைய உரைநடையில் எழுதப்படும் துணுக்குகள், நொடிகள், கிண்டல்கள், கருத்துரைகள் அனைத்தும் கவிதை என்றே கருதுகின்றனர்.

'மஹாகவி' இவ்விரு போக்கிலும் இருந்து மாறுபடுகின்றார். அவர், தமது கவிதைகளுக்கு மரபுரீதியான செய்யுள் உருவங்களையே கையாண்ட போதிலும், அவரது கவிதைகளின் வடிவ அமைப்புக்கும் அவர் கையாளும் செய்யுள் உருவங்களுக்கும் இடையே – அவை கவிதைப் பொருளின் வைப்பு முறைக்கான ஓர் ஊடகமாக மட்டுமே பயன்படுகின்றன"[40] என்று எம் எ. நுஃமான் கூறுவது ஆழ்ந்து சிந்திக்கத் தக்கதாகும்.

சான்றாக, 'மஹாகவியின்' 'விட்ட முதல்' எனும் கவிதையைக் காண்போம்;

---

40 மஹாகவியின் வீடும் வெளியும், எம். எ. நுஃமானின் 'சில அறிமுகக் குறிப்புகள்' பக். V

பட்டணத்தில் உள்ள தெருவில்
பகற்பொழுதில்,
எட்டி விரைவாய் ஏதோ ஒன்றில்
இட்டஉளம்
ஓடத் தொடர்ந்து சென்றேன்
ஓராள் வழிமறித்தாள்[41]

எனத் தொடங்கும் கவிதையில், "செய்யுளுக்குப் புறம்பான முழுமையான வடிவ அமைப்பு அமைந்து இருக்கிறது. அக்கவிதையின் தொனிப் பொருள், அக் கவிதை முழுவதும் பரவி, படிப்படியாக வளர்ச்சியுற்று முழுமை அடைகிறது. அதனால், ஒரு கவிதையின் ஒரு அடி அல்லது ஒரு வாக்கியம் அல்லது ஒரு தனிச் செய்யுள் தனித்துப் பிரித்தெடுக்கும் போது அக்கவிதையின் முழுமை கெட்டுப் பொருள் முறிவும், சிதைவும் நிகழ்கிறது" இந்தப் புதுக்கவிதையிலேயே 'மஹாகவி', 'கண்மணியாள் காதை' போன்ற கதைப் பாடல்களையும் படைத்துள்ளார்.

ஈழத்துப் புதுக் கவிதையின் வளர்ச்சி நிலையை அறிவதற்கு, இரண்டொரு கவிதைகளின் அமைப்பையும், நோக்கையும் காண்போம். 'கானல்வரி' எனும் தலைப்பில், மு. புஷ்பராஜன் படைத்துள்ள கவிதை நம் கருத்தைக் கவருகிறது.

அலை கடலில்
ஆதவன் மறைவு
இருளில் ஆட்சி
இனிநாம் பிரிந்து செல்வோம்[42]

கடந்துபோன காலங்களில்
'மாவலி'யின் கரையெல்லாம்
கைகோத்து உன்னோடு
நடந்துவர நானிருந்தேன்.

---

41 மஹாகவி,மு.கு.நூ.பக்.29
42 ஷ. பக். V. VI.

போதிமாதவ மலர்கள் சூடி
முட்களை அங்கேன் மறைத்தாய்?
எத்தனை கீறல்கள்
இரத்தக் கசிவுகள்
இத்தனைக்கும் மேலான ஈனச் செயலை
மும்முறை செய்தாய் இன்னமும் தொடர்வாய்[43]

எனத் தொடங்கும் கவிதையினைக் காண்க எளிமை, இனிமை இரண்டும் இக்கவிதையின் உயிர்நாடி. ஆனால், வெளிப்படுத்த விரும்பும் கருத்தில், ஒருவகை இருண்மை (தெளிவின்மை) இடம் பெற்றிருக்கிறது. அதே சமயத்தில், ஆசிரியச்சீர்களும், வஞ்சிச் சீர்களும் கலந்தும் இடையிடையே நாற்சீரடி பெற்றும் இக்கவிதை படைக்கப்பட்டு இருக்கிறது. சங்கப்பாடலான 'பட்டினப் பாலை'யின் வடிவத்தில் ஏறக்குறைய இந்தக் கவிதையின் வடிவம் அமைந்து இருக்கிறது. ஈழத்துப் புதுக்கவிதையின் சிறப்பியல்பாக இத்தகைய வடிவ அமைப்பு காணப்படுகிறது.

இனி 'ஹம்சத்வனி' எனும் புனைபெயரில், யாழ் பல்கலைக் கழக மாணவர் ஒருவர் (தமிழ்ச் செல்வன்), 'சிறைகளில் இருந்து" எனும் புதுக்கவிதைத் தொகுப்பைப் படைத்துள்ளார். தமிழ்த் தேசியவாதமும் தேசிய இன ஒடுக்குமுறையும் அதில் இருந்து விடுதலை பெறும் வேட்கையும் இன்றைய ஈழத்தின் கவிதைகளில் முக்கியம் பெற்று வருவதை இக்கவிதைகளில் காண இயலுகிறது. 'இன்று' எனும் தலைப்பில் அமைந்த கவிதை, இதற்குச் சிறந்ததோர் எடுத்துக்காட்டாகும்.

அன்று இலங்கையில்
அனுமன் இட்ட தீ
இன்றும் வடக்கில்
நின்று எரிகிறது.
செந்தமிழ் வானில்
புகை மண்டலம்,

---

43 புதுசு, (ஏப்ரல் 1982) பக்.21–22.

நீண்ட தெருக்களில்
செந்நிற ஆறுகள்.....

இளமை உடல்கள்
ரவைகள் உண்டதாய்
சிதறிக் கிடக்கும்...

'மெசிண்ண கன்' களின்
வேட்டுச் சத்தத்தில்
வோட்டுச் சாவடிக்கு
விரையும் உயிர்கள்...
பின்னே,
துப்பாக்கி துரத்தும்

நடு இரவுகளில்
தினமும் தொடர்ந்தபடி,

வியட்நாம் பூமியாய்
உயிர்கள் அழியும்.

எத்தனை உயிர்கள்
மடிந்த போதும்
இங்கே ஆயிரம்
எரிமலை வெடிக்கும்
செந்நிறக் குழம்பில்
புதியபூமி
பிரசவமாகும்![44]

இதைப்போன்ற கவிதைகள் பலவற்றை ஈழத்து இளம் கவிஞர்கள் படைத்து வருகின்றனர். அடுத்து உண்டாகப் போகும் 'புரட்சியை', அவை 'பூபாளம்' பாடி வரவேற்கின்றன.

---

44 சிறைகளில் இருந்து, பக். 24–25

இலங்கையில் ஐம்பதுக்கு மேற்பட்ட புதுமைக் கவிஞர்கள் உள்ளனர். சி.சு. செல்லப்பாவின் "எழுத்து" இதழின் மூலம் அறிமுகமான 'தருமு சிவராமு'ம் ஈழத்தைச் சேர்ந்தவரேயாவர்.

தற்காலத்தில் ஈழத்துப் 'புதுக்கவிதை'யின் போக்குப் புதுமையாக இருக்கிறது. "சமீப காலமாக உயர் இலக்கிய மட்டத்தில் புதுக் கவிதை, மரபுக்கவிதை பற்றிய முரண்பாடு அருகி வருவதை அவதானிக்க முடிகின்றது. இவ்விடுநிலை முரண்பாட்டின் சமூக வரலாற்றுப் பின்னணி எவ்வாறு இருப்பினும், நடைமுறையில் செய்யுள் அமைப்பில் எழுதுவது மரபுக் சவிதை, செய்யுள் அமைப்பை நிராகரிப்பது புதுக்கவிதை என்ற கருத்தே நிலவி வருகின்றது. புதுக்கவிதை என்பதற்கு 'நவீன கவிதை' (Modern Poetry) என்ற அர்த்தம் கொடுக்கப்பட்டால் (அதுவே சரியானது ஆகும்), **பாரதியே தமிழின் முதலாவது புதுக்கவிஞனாவான்**. ஆனால், பாரதிக்குப் பின்னர் தமிழகத்தில், நவீன வாழ்க்கை உள்ளடக்கத்தை,நவீனகண்ணோட்டத்தில்பிரதிபலிப்பதற்குச் செய்யுள் நடையைக் கையாளும் ஆற்றல் உள்ள கவிஞர்கள் தோன்றாததால் செய்யுளை நிராகரித்து, பிச்சமூர்த்தி வழியில் புதுக்கவிதை மரபு உருவாகிற்று. நவீன சிந்தனை செய்யுள் நடையில் வெளிப்பாடு பெற முடியாது என்றும் கூறப்பட்டது ஆனால், ஈழத்திலே நிலைமை வேறுவகையாக இருந்தது. நாம் ஏற்கனவே குறிப்பிட்டதுபோன்று, நவீன சிந்தனையுடன் இயைபுறும் வண்ணம் செய்யுள் நடையும், அதன் அச்சமைப்பும் இங்கு மாற்றியமைக்கப்பட்டது. எம்.ஏ. நுஃமான், சண்முகம் சிவலிங்கம் ஆகியோர் செய்யுளையே கவிதைக்குப் பயன்படுத்திய போதிலும், அவர்களது படைப்புக்களை மரபுக் கவிதைக்குப் புறம்பான 'புதுக் கவிதை' என்றே ஈழத்தின் பல புதுக் கவிஞர்களும், சில விமர்சகர்களும் கருதி வந்துள்ளனர் என்பது இதை நன்கு விளக்கும்.

தமிழகத்திலேபாரதிக்குப்பின்னர்இலக்கியமுதிர்ச்சியுள்ள கவிதைகள் எழுதியோர் செய்யுளை நிராகரிக்கும் பிச்சமூர்த்தி

வழிவந்த புதுக்கவிஞர்களாகவே இருப்பது போல், ஈழத்தில் இலக்கிய முதிர்ச்சியுள்ள கவிதைகள் எழுதியோர், செய்யுளைப் பயன்படுத்திய மஹாகவி வழி வந்த நவீன கவிஞர்களேயாவர் என்பது முக்கிய கவனத்திற்குரியது''[45] எனும் பேராசிரியர் சி. மௌனகுருவின் மதிப்பீடு, தமிழ்நாட்டுப் புதுக்கவிதைப் போக்கு,எவ்வாறு ஈழத்தின் புதுக்கவிதை வளர்ச்சியில் இருந்து வேறுபட்டுள்ளது என்பதை வெளிப்படுத்துகிறது.

ஈழத்துத் தமிழ் அறிஞர், 'புதுக்கவிதை'க்குத் தரும் விளக்கம் புதுமையானதாகவும், கவர்ச்சியுடையதாகவும் தோன்றுகிறது."இலக்கிய முதிர்ச்சியுள்ள சிறந்த கவிதைகள் படைப்பதற்குச் செய்யுளைப் பயன்படுத்துவதோ அல்லது செய்யுளை நிராகரிப்பதோ அடிப்படைக் காரணி அல்ல... நவீனத்துவம் பற்றிய பிரக்ஞையே, அதன் அடிப்படையாகும் சமீப காலமாக கவிஞர்கள் மத்தியிலும், விமர்சகர்கள் மத்தியிலும் இந்தத் தெளிவு ஏற்பட்டு வருவதனாலேயே, 'புதுக்கவிதை –மரபுக் கவிதை' பற்றிய இருநிலை முரண்பாட்டு மோதல் தளர்ச்சியடைந்து வருகின்றது" எனும் ஆய்வுரை, இங்குக் கருதத்தக்கது.[46]

இன்னும் இத்தகைய தெளிவோ, எண்ணமோ தமிழ் நாட்டில் எல்லாக் கவிஞர்களிடமும் எழாமல் இருப்பதற்குக் (ஓரளவிற்கு வானம்பாடி வட்டத்தில் இம்மனப் போக்குக் காணப்படுவது உண்மை) காரணம் என்ன? தன்னலப் பற்றார்வம் வாய்ந்த ஒரு குழுவின் எல்லை மீறிய புதுமை மோகமா? அல்லது போதிய அளவிற்குத் தமிழ் அறிவு வாய்க்கப் பெறாததால், அக்குழு பழமையின் மீது கொண்ட வெறுப்பா? எனும் ஐயமே எழுகிறது,

இருபதாம் நூற்றாண்டில் தமிழ் இலக்கிய வளர்ச்சி யில்

---

45 சி. மௌனகுரு, மௌ. சித்திரலேகா, எம் ஏ. நுஃமான், இருபதாம் நூற்றாண்டு ஈழத்துத் தமிழ் இலக்கியம் பக். 29–30.

46 ஷ. பக்.30

'புதுக்கவிதைக்குத் தனி இடம் உண்டு. தமிழ் இலக்கியத்திற்குப் புதிய வரவாகிய இந்த இலக்கிய வகையைப் படைப்பதற்கு வழிவகுத்தவர் மகாகவி சுப்பிரமணிய பாரதியார் என்பதைத் தமிழ் இலக்கிய வரலாறு என்றும் எடுத்துரைக்கும். பாரதியார் வகுத்த வழியில் வளர்ந்து வரும் புதுக்கவிதைக்கு, அரை நூற்றாண்டுக்காலம் கழிந்தும் இன்னும் சரியான வடிவம், பொருத்தமான வடிவம், எளிதில் இனங்கண்டுகொள்ளக்கூடிய வடிவம் நம் நாட்டில் அமையா தது ஒரு குறையேயாகும்.

இரண்டு தலைமுறைகளில் தனக்கென, வரையறுக்கப் பட்ட வடிவத்தைப் பெறாத எந்தக் கலையும், உலகக் கலை இயல் வரலாற்றில் நிலைபேற்றுத் தன்மையைப் பெற்ற தாகத் தெரியவில்லை.

எனவே, 'புதுக்கவிதை' தமிழ் இலக்கிய வரலாற்றில் நிலைத்த இடத்தைப் பெறுவதற்கு முதல் தேவையாகவும் முக்கியமான தேவையாகவும் இருப்பது அதற்கென அமையக் கூடிய நல்லதொரு வடிவமாகும். 1980ஐ ஒட்டி, புதுக்கவிதை வளர்ச்சியில் ஒருவகைத் தொய்வும் தேக்கமும் தமிழகத்தில் உண்டாகி இருப்பதை யாரும் மறுக்க இயலாது. இந்த நிலை தொடர்ந்து நீடிக்குமானால், 'உரைவீச்சு' எனும் அவலநிலை உண்டாகலாம் எனும் அச்சம் தோன்றுகிறது.

8

குறுங்காப்பியமும் உருவகக் கதைப்பாடலும்

உலக இலக்கியத்துள் 'கதைப் பாடல்கள்' முக்கியமான இடத்தைப் பெற்றுள்ளன. மற்றும், சிறப்புமிகு இலக்கிய வகைகளுள் ஒன்றாகவும் அவை போற்றப்படுகின்றன. பண்டைக் காலத்தில் கதைப் பாடல்கள், காப்பிய வடிவில் பெருவாழ்வு பெற்றன. பல்வேறு மொழிகளில் இயற்றப்பட்டுள்ள காப்பியங்கள் யாவும், கதைபொதி பாட்டுகளாகவே உள்ளன.

காப்பிய மரபு காலப் போக்கில் உலகெங்கும் அருகலாயிற்று. இதற்குக் காரணங்கள் பல. இவ்விருபதாம் நூற்றாண்டில் 'உரை நடை' பெற்ற பேராதிக்கம் முதன்மையான காரணமாகும். மற்றும், காப்பியங்கள் தோன்றுவதற்கு. முற்காலத்தில் அமைந்த அரசியல் சமூகச் சூழ்நிலை (நிலப்பிரபுத்துவ அமைப்பு) மாறிவிட்டதுமாகும். 'இன்றைய தொழில்மய' வாழ்க்கை முறையால், மக்களுடைய விழைவார்ந்த விருப்பங்கள் மாறியுள்ளன. அதனால், காப்பியக் கதைப் போக்கு 'கசந்து' விட்டது ! இதனால், சுவையுணர்வில் மாற்றமும் ஏற்பட்டுள்ளது. ஓய்வு குறைந்து அலைச்சல் மிகுந்த வாழ்க்கையினால், காப்பியத்தை அமைதியாக அமர்ந்து, பொறுமையாகப் படித்து, இலக்கிய இன்பத்தில் மூழ்குவதற்குத் தேவையான 'வாழ்க்கை வசதிகள் ' குறைந்துவிட்டன. இந்த நிலைமைக்கு ஏற்ற இலக்கிய வகையாகப் 'புதினம்' அமையலா யிற்று. கதையைக் கேட்பதிலும் படிப்பதிலும் மனித இனம், இன்றும் பேரார்வம் காட்டிவருகிறது என்பது இதனால் புலனாகின்றது.

ஆடலிசைப்பாவின் புதிய வடிவம்

காலத்தின் தேவையை 'நாடித் துடிப்பை'க் கண்டறிந்த கவிஞர்கள், உலகெங்கும் கதைப்பாடல்களைப் படைக்கும் பழக்கத்தை மேற்கொண்டனர். சென்ற சில நூற்றாண்டுகளில், ஆடலிசைப்பா (Ballad) வாக மேற்கு நாடுகளில் கதைப்பாடல்கள் புதுவடிவம் பெற்றுள்ளன. இவற்றில் ஓரளவிற்கு நாட்டுப் புறப்பாடலின் சாயலும் பதியலாயிற்று. இந்நூற்றாண்டின் முதல் இருபதாண்டுகள் வரை. நம் நாட்டு மக்கள் இடையே செல்வாக்குற்று இருந்த அல்லியரசாணிமாலை, புலந்திரன் தூது. தேசிங்குராஜன் கதை, கோவலன் கதை போன்றவை இத்தகைய இயல்புடையன; பெரிதும் இசையோடு பாடத்தகுந்தனவாகப் பெயர் அறியப்படாதப் புலவர்களால் இவை படைக்கப்பட்டவை.முறையானகல்விவளர்ச்சியால்,அவற்றில் மக்களுக்கு இருந்துவந்த கவர்ச்சியும் குறையலாயிற்று.

இதனால், ஆடலுக்கும் இசைக்கும் இடமில்லாக் கதைப் பாடல்கள் உலக மொழிகளில் தோன்றலாயின.

இவற்றைக் 'கதைப்பாடல்கள்' (Story Poems) எனவும் 'நெடும்பாட்டுகள்' (Longer Poems) எனவும் சென்ற நூற் றாண்டிலும், இந்த நூற்றாண்டின் நடுப்பகுதி வரையிலும் சுட்டினர்.

பிறகு, கதைகூறும் இலக்கியத்திறனைக் கருத்தில் கொண்டு, வருணனைப் பாடல்கள், (Descriptive Poetry), தன்னுணர்ச்சிப் பாடல்கள் (Lyrics). எடுத்தியம்பும் (கிளக்கும்) பாடல்கள் (Narrative Poetry), நாடகப் பாடல்கள் (Dramatic Poetry) எனப் பலவாறாக வகைப் படுத்தினர்.

இவற்றுள் எடுத்தியம்பும் (கிளக்கும் – இயம்பும்) பாடல் கள்' யாவுமே, யாதாகிலும் ஒரு நிகழ்ச்சியைக் கதையாகப் பெரிதும் எடுத்துரைப்பதனால், அவற்றைக் கதைப் பாடல்கள்' எனும் பொதுப் பெயரால், வசதி கருதித் திறனாய்வாளர்கள் சுட்டலாயினர். விக்டோரியா பேரரசியின் ஆட்சிக் காலத்தில்

வாழ்ந்த ஆங்கிலக் கவிஞர்களுள், 'கதைப் பாடல்கள்' இயற்றாதவர்களே இல்லை எனச் சொல்லலாம். ஆனால், அவர்களுடைய படைப்புகளைக் காப்பியமாக (Epic), (Ballads) வாகவோ நாம் வகைப்படுத்த இயலாது. அவை, யாவும் வெறும் கதைப்பாடல்களேயாகும். நாளடைவில் 'ஆடலிசைப்பா' எனப்படும் 'பேலட்ஸ்' (Ballads) வெறும் 'கதைப்பாடல்களைக்' குறிக்கும் நிலையை அடைந்தது.

அச்சு இயந்திரம் வழக்கிற்கு வராத காலத்தில், ஒருவர் கதையைச் சொல்ல, பலர் கேட்டு மகிழ்ந்தனர்; அல்லது, ஒருவரோ பலரோ இசையோடு ஆடிப்பாட, மற்றவர்கள் பார்த்தும், கேட்டும் மகிழ்ந்தனர். ஆனால், இந்த நூற்றாண்டில், அந்த நிலை மாறிவிட்டது. 'படிப்பதற்காகவே' 'புதினங்கள்' இயற்றப்பட்டன. எனவே, எடுத்தியம்பும் பாடல்களாக' இருந்த நிலை மாறியமையால், அவற்றை வெறும் 'கதைப்பாடல்கள்' எனச்சுட்டும் வழக்கம் பெருகலாயிற்று. இதனால், அவை 'படிப்பதற்கு' மட்டும் உரியன எனும் குறிப்புப் பொருள் உடையனவாக மாறின.

கதைப் பாடல்கள் கதைக்கரு, அமைப்பு, நோக்கம், நடை (யாப்பு) போன்றவற்றால் வேறுபடலாம். இந்த நான்கு கூறுகளும் தேவையான அளவிற்கு, இணைந்தும் இயைந்தும் ஒரே கதைப் பாடலில் இயங்குமானால், அக்கதைப் பாடல் சிறப்புமிக்கப் படைப்பாகப் போற்றப்படுகிறது.

தமிழில் வழங்கும் பெயர்கள்

பண்டைக் காலத்தில், தமிழ் மொழியில் கதைப்பாடல் கள் 'காப்பியங்களாக' மலர்ந்தன. அவற்றுள் பெருங்காப்பியம், காப்பியம் எனும் இருவகை உண்டு. 'காப்பியம்' என்பது பிற்காலத்தில் வடிவையும், நோக்கத்தையும் கருத்தில் கொண்டு 'சிறு காப்பியம்' எனும் பெயர் பெற்றது. புராணங்கள் சிற்றிலக்கியங்கள் போன்றவற்றின் செல்வாக்கால், 'சிறு காப்பியமும்' தமிழில், வழக்குக் குன்றலாயிற்று.

இந்த நூற்றாண்டில், கதைப் பாடல்கள் தமிழில் இயற்றப்பட்டுள்ளன. அவை பல்வேறு பெயர்களால் சுட்டப்படுகின்றன "கதை தழுவிய நெடும் பாட்டு' எனும் பொருளில், கவிதைக் கதை, கதைக் கவிதை, குறுங்காவியம், புதுமைக்காவியம். பாவியம் எனும் பல பெயர்களால் போற்றப்படுகின்றன. இவையாவும் 'கதைப்பாடல்களுக்கு வழங்கும் மறுபெயர்களேயாகும். நெடுங்காலமாகக் காப்பியத்திற்கு இருந்து வந்த சிறப்பினைக் கருத்தில் கொண்டு தரமான கதைப்பாடல்களைக் 'குறுங்காப்பியம்' எனும் பெயரால் சுட்டும் வழக்கம் பெருகிவருகிறது. அது வடிவால் மிகச்சிறிதாகவோ, பெரிதாகவோ இருக்காது. ஆயிரம் அடிகளுக்குமேல் மூவாயிரம் முதல் நாலாயிரம் அடிகளுக்குள் அமையும் கதைப் பாடல்களைக் 'குறுங் காப்பியம்' எனப் போற்றுகிறோம்.

வகைப்பாடு

இந்த நூற்றாண்டில் இயற்றப்பட்டுவரும் தமிழ்க் 'கதைப் பாடல்கள்' பல திறத்தன. அவை பொருண்மை. வடிவம், எடுத்தியம்பும் முறை முதலியவற்றால் வேறுபடுகின்றன. புராணக் கதைகள், வரலாற்றுக் கதைகள், சமூகக் கதைகள், கற்பனைக் கதைகள் எனும் கதைகளின் பாகுபாட்டிற்கேற்ப, கதைப் பாடல்களும் வகைப்படுத்தப்படுகின்றன. நெடும்பா, குறும்பா எனும் பாட்டின் வடிவ அமைப்பைக் கொண்டு வகைப்படுத்துவதும் உண்டு. கருத்துகளையும், நிகழ்ச்சிகளையும் இருபொருள் பயக்கத்தக்க வகையில் உருவகப்படுத்திக் கூறும் கதைப் பாடல்கள், உருவகக்கதைப் பாடல்கள் எனச் சுட்டப்படுகின்றன.

[1]பாரதியாரின் கதைப் பாடல்கள்

பாரதியாரின் படைப்புகளுள் 'முப்பெரும் பாடல்கள்' எனப் போற்றப்படுவன கண்ணன் பாட்டு, பாஞ்சாலி சபதம், குயில் பாட்டு என்பன. இவற்றுள் 'கண்ணன் பாட்டு

---

1 மகாகவி பாரதி நூல் பெயர்க் கோவை, பக். 59–60.

என்பது 26 தலைப்புகளில் அமைந்த பல தன்னுணர்ச்சிப் பாடல்களின் தொகுதியாகும். இப்பாடல்கள் யாவற்றிலும் 'கண்ணன்' பாட்டுடைத் தலைவனாகவும், பாடுபொருளின் தலைவனாகவும் விளங்குகின்றான். இச்சிறப்பினைப் புலப் படுத்தும் வகையில், அவற்றின் தொகுதிக்குக் 'கண்ணன் பாட்டு' எனும் பெயரினைப் பாரதியாரின் காலத்தில் அப்பாடலை வெளியிட்டவர்கள் கொடுத்துள்ளனர். ஆனால், இவை கதைப் பாடல்கள் அல்ல. இவற்றைப் பற்றிய விளக்கத்தைப் பின்னர்க் காண்போம்.

பாஞ்சாலி சபதம்

தேசியக் கவி சுப்பிரமணிய பாரதியாரின் படைப்புகளுள் நீண்ட நெடும் கதைப் பாடலாக இருப்பது 'பாஞ்சாலி சபதம்! இதில் பண்டைக் காப்பிய உறுப்புகளான நாட்டு வருணனை, நகர வருணனை, மந்திரம், தூது, இயற்கை வருணனை போன்ற சில, நயந்தோன்ற சித்திரிக்கப்பட்டுள்ளன; ஒன்பான் சுவைகளுள் வீரமும், அவலமும், இளிவும் மேலோங்கி நிற்கின்றன.

ஆனால், 'தன்னிகரற்ற தலைவனை' இந்தச் சிறு காப்பியத்தில் காண இயலவில்லை: பாஞ்சாலியே தன்னிகரற்ற தலைவியாக, வீரமிக்க வீராங்கனையாகப் படைக்கப்பட்டு இருக்கிறாள். அவளுடைய சபதத்தின் – வஞ்சினத்தின்– முக்கியத்துவத்தைக் கருதி, அந்நூலிற்குப் 'பாஞ்சாலிசபதம், என்று பாரதியார் பெயரிட்டுள்ளார்.

வடமொழியில் உள்ள பரந்துபட்ட வியாசபாரதத்தின் ஒரு சிறு பகுதியாக, பாஞ்சாலி செய்த சபதம் அமைந்துள்ளது. அதனை, மையக் கருவாகக் கொண்டு, இரண்டு பாகங்களில் அழைப்புச் சருக்கம், சூதாட்டச் சருக்கம், அடிமைச் சருக்கம் துகிலுரிதல் சருக்கம், சபதச் சருக்கம் எனும் ஐந்து சருக்கங் களில் புரட்சிக்கனல் தெறிக்கப் பாஞ்சாலி சபதத்தைப் பாரதியார் படைத்துள்ளார்.

பாஞ்சாலிசபதத்தின்முகவுரையில்,"எனதுசித்திரம்வியாசர் பாரதக் கருத்தைத் தழுவியது. பெரும்பான்மையாக இந்நூலை வியாசபாரதத்தின் **மொழிபெயர்ப்பென்றே** கருதிவிடலாம். அதாவது 'கற்பனை' திருஷ்டாந்தங்களில் எனது 'சொந்தச் சரக்கு' அதிகமில்லை; தமிழ் நடைக்கு மாத்திரமே நான் பொறுப்பாளி"[2] என்று நம் கவிஞர் மொழிந்துள்ளமை இங்குக் கருதத் தக்கது.

மக்களிடம் அரசியல், சமூகச் சீர்திருத்தக் கருத்து களைப் பரப்புவதற்குப் புதிய கற்பனைக் கதையொன்றைப் பாரதியார் படைத்து இருக்கலாம். ஆனால், பழைய கதையை மீண்டும் சொல்லுவதுபோல, எந்தப் புதிய கதையும் மக்களைக் கவர்வதில்லை. நம் நாட்டின் பழைய கதையினைப் படித்தும், கேட்டும் அந்த உணர்வில் மூழ்கித் திளைப்பவர் நம் மக்கள். எனவே, அந்தப் பழைய கதையினால், அவர்களுடைய உள்ளத்தை ஈர்ப்பது எளிது. அந்தப் பழைய கதையில், மரபு வழியாகப் போற்றப்படும் தலைவனிடம் உள்ள குற்றங்களைச் சுட்டி, தலைமகனுடைய தவறுதலாலேயே தீமைகள் உண்டாகக் கூடிய சூழ்நிலை உண்டாயிற்று என்பதை, மக்கள் மனத்தில் ஆழப்பதியுமாறு செய்ய இயலும் என்று பாரதியார் நம்பினார். எனவே, பாஞ்சாலியின் பழைய கதையைப் புதிய வடிவில் தருவதற்கு நம் கவிஞர் முனைந்தார்.[3]

வீழ்ச்சியுற்ற பாரதத் திருநாட்டில் விடுதலை வேட்கையை ஊட்டி, உரிமைப் போருக்கு எழுச்சி பெறுமாறு செய்வதே பாரதியாரின் நோக்கமாகும். ஆங்கிலேயரால் அடிமையாக்கப்பட்ட நம் தாய்த்திருநாட்டை, 'பாரதமாதா வாக'த் தேசியத் தலைவர்கள் உருவகப்படுத்தி மக்களிடையே அறிமுகப்படுத்திவந்த காலகட்டத்தில் (1912), பாரதியார், இந்தப் 'பாவியத்'தைப் படைத்துள்ளார். துரியோதனாதியர்

---

2 பா. கவி. பக். 357

3 கா மீனாட்சி சுந்தரம், பாரதி பாநிலை, பக். 25–26.

களால் அடிமைப் படுத்தப்பட்டப் பாஞ்சாலியை, 'பாரத மாதா' வாகவே, பாரதி உருவகித்துள்ளார். அடிமைப்பட்ட பாரதம், தேசிய எழுச்சியின் பயனால் விடுதலை அடைய வீரவஞ்சினம் கூறுவதையே, 'பாஞ்சாலி சபதம்' எனும் முடிமணியாக அமைத்து, அவர் காட்டுகின்றார். பாரத தேசத்தின் அடிமைத் தளையை அறுத்து, விடுதலை பெற்ற உரிமை வாழ்வை அடையுமாறு செய்ய வேண்டும் எனும் உட்பொருளைக் கதையின் மூலம் தெரிவிப்பதே 'பாஞ்சாலி சபதம்' என்பது யாவரும் அறிந்த உண்மை.

பழைய காப்பியக் கதைகளில், புராணங்களில் இடம் பெற்றுள்ள சுவையான நிகழ்ச்சியை, கதைக்கருவின் சிறந்த ஒரு பகுதியினை மையமாகக் கொண்டு, புதியதொரு கதைப் பாடலைக் காப்பிய அமைப்பில் இயற்றுகின்ற பழக்கம், உலகின் பல்வேறு மொழிகளிலும் இன்று இருந்து வரு கிறது .

இத்தகைய கதைப் பாடலை, இந்திமொழிவாணர்கள் 'கண்ட காவியம்' என்பர். ஆங்கிலத்தில் 'காப்பியத்தின் முறிந்த துண்டுகள்' (Epic Fragments)[4] என்று திறனாய்வாளர் இதனைச் சுட்டுவர். 'கண்ட' (Khanda) எனும் இந்தி மொழிச் சொல்லிற்கும் 'துண்டு' என்பதே பொருளாகும். இத்தகைய 'கண்ட காவியமாக'ப் பாரதியாரின் 'பாஞ்சாலி சபதம்' விளங்குகிறது. 'கண்டம்' என்பதற்குத் 'துண்டு' என்பது பொருள். இவ்வழக்கு 'ஐரோப்பாக்கண்டம்', 'ஆசியாக் கண்டம்' எனும் தொடர்களுள் இடம் பெற்றுள்ளதைக் காண்க. மகாகவி பாரதியாரின் 'பாஞ்சாலி சபதத்தை வெறும் கதைப் பாடலாக நாம் கருத இயலாது 'சிறு காப்பியம்' எனும் பெயரால் இதனைச் சுட்டலாம்.

பண்டைச் 'சிறு காப்பியப்' பண்புகளில் இருந்து பாஞ்சாலி சபதம் வேறுபடுகிறது. ஆயினும், காப்பிய இயல்புகள் பல, அதில் முனைப்பாக உள்ளன. அவற்றோடு, கதைப் பாடல்களின் "இயம்பும்' முறைமையும், இயைந்து காணப்படுகிறது. எனவே,

---

4 Abercrombie, The Epic, P128.

பாரதியாரின் இப்படைப்பு, தமிழ்க் காப்பிய வரலாற்றில் ஒரு திருப்பு மையமாக அமைந்து இருக்கிறது. முன்னர்க்கண்ட அடிவரையறையும் இதற்குப் பொருந்தி வருகிறது. எனவே, 'கண்ட காப்பியமாகிய' பாஞ்சாலி சபதத்தை, 'குறுங்காப்பியம்' எனும் புதிய பெயரால் சுட்டுவது பொருந்தும்.

பாரதியின் வழியில்

பாரதியார் காட்டிய இந்த வழியில், கவிஞர்கள் பலர் கதைப் பாடல்களை இயற்ற முன் வந்துள்ளனர். அவற்றை இரண்டு வகையாக வகைப்படுத்தலாம். முதல்வகை 'குறுங் காப்பியம்' எனப்படும். 'கண்ட காப்பியத்தின்' மற்றொரு வகை வெறும் கதைப் பாடல்கள் என்பனவாகும். இங்கு ஆய்விற்குக் 'கண்ட காப்பியங்க'ளாகிய குறுங்காப்பியங்களே எடுத்துக் கொள்ளப்படுகின்றன.

குறுங்காப்பியம்

பாரதியாரின் அணுக்க சீடரான பாவேந்தர், தம் குரு நாதரின் தாக்கத்திற்குப் பலவகையில் ஆளானவர் என்பதை முன்னரே கண்டோம்.'சக்திதாசரின்' சீடரான பாரதிதாசன் இயற்றிய முதற்பாடல் 'எங்கெங்கும் காணினும் சக்தியடா![5] எனத் தொடங்கும் சக்தியைப் பற்றிய பாடல் என்பதையும் நாடு நன்கறியும்.

கண்ணகி புரட்சிக் காப்பியம்

எனவே, 'குறுங்காவியம்' படைப்பதிலும், பாவேந்தரிடம் பாரதியின் தாக்கத்தைக் காண முடிகிறது. புரட்சிக் கவிஞரின் 'கண்ணகி புரட்சிக் காப்பியம்' 'மணிமேகலை வெண்பா' எனும் இரு படைப்புகளும் இங்கு நம் ஆய்விற்குரியன.

---

5 பாரதிதாசன் கவிதைகள், முதல் தொகுதி,பக்.1.

கண்ணகி புரட்சிக் காப்பியம், 95 இயல்களில் ஆசிரி யப்பாவால் இயற்றப்பட்டுள்ளது. இயல்களுக்குத் தலைப்பு கள் தரப்படவில்லை. புரட்சிக் கவிஞரின் இக்கதைப் பாடல், இக்காலப் புத்துலகச் சிந்தனையோடு பகுத்தறிவுக் கண் ணோட்டத்தில் புரட்சிக் கருத்துகளை வெளிப்படுத்துகிறது.

"கண்ணகியின் கதைக்கு இளங்கோ அளித்த தலைப்பு 'சிலப்பதிகாரம்' என்பது. ஆனால், பாரதிதாசன் காவியத் தலைவியின் பெயரில், பாடலைத் தந்துள்ளார். கண்ணகியின் புரட்சியைக் கூறிக் கவிஞர் தம் கருத்தையும் உணர்த்து வதால், இந் நூலுக்குக் 'கண்ணகி புரட்சிக் காப்பியம்' என்று பெயரமைத்தார்." [6]

சிலப்பதிகாரத்தின் மூலக்கதைப் போக்கினின்று மாறு படாமல், இடையிடையே இன்றைய சிந்தனைப் போக்கிற்குப் பொருந்தி வாராத கிளைக் கதைகளையும் நிகழ்ச்சிகளையும் நீக்கியும், சிலவற்றில் சிற்சில மாற்றங்களும் செய்தும், தம் 'தன்மான இயக்கக்' கருத்துகளைப் புகுத்தியும் அவர் இதனைப் படைத்துள்ளார்.கண்ணகி இடமுலை திருகி. வீசி மதுரையை எரித்தது, மாடலன் குறுக்கீடு, தேவந்தியின் கதை, ஒரு சிலம்பை மட்டும் விற்பதற்குக் கோவலன் சென்றமை, கண்ணகி தெய்வக் கோலத்தில் தன் கணவனைக் கண்டு, அவனுடன் விமானத்தில் விண்ணுலகம் சென்றது போன்ற பல நிகழ்ச்சிகளும், சில கிளைக் கதைகளும் நீக்கப்பட்டுள்ளன.

"மாமுது பார்ப்பான் மறைவழி காட்டிட தீவலம் செய்தத்' திருமணக் காட்சியை மாற்றி அமைத்துள்ளார். சேந்தனார்" எனும் தமிழ்ச்சான்றோரின் தலைமையில், தமிழில் வாழ்த்தொலி முழங்கத் திருமணம் நடைபெற்றதாகப் பாவேந்தர் சித்தரித்துள்ளார்.[7]

---

6 ச.சு.இளங்கோ, பாரதிதாசனின் கதைப் பாடல்கள் ஓர் ஆய்வு,பக்.84.

7 கண்ணகி புரட்சிக் காப்பியம். இயல் 5. 9.

இதைப் போன்று வாழ்த்துரைக் காட்சியிலும் கண்ணகியைத் தெய்வமாகக் கோயில் மங்கலம் செய்வதைச் சிறிது மாற்றி, வீர பத்தினிக்கு நடுகல் நாட்டி, கோயில் 'திறப்பு விழா' செய்யப்பட்டதாகப் பாவேந்தர் பாடியுள்ளார்.[8]

கானல் வரிப் பாட்டு' வெறும் காதற் காப்பியமாக அமையாது, ஆரிய எதிர்ப்புப் பிரசாரமாக அமைந்து இருக்கிறது. சிலப்பதிகாரத்தின் வஞ்சிக் காண்டத்தில் காண இயலாத ஒன்றைப் பேரளவிற்குச் சேரநாட்டு நிகழ்ச்சிக ளாகப் பாவேந்தர் (புதுமைப்பகுதிகளாகப்) புகுத்தியுள்ளார். அவை அகப்பொருள் மரபு வழிப்பட்ட காதல் களியாட்டப் பாடல்களாகும். 'வாழிய கண்ணகி கற்பு! வையமெல்லாம்'[9] எனத் தொடங்கும் பாட்டோடு, இப் 'புரட்சிக் காப்பியம்' நிறைவுறுகிறது.

பாரதியாரின் பாஞ்சாலி சபதத்திற்கும், பாவேந்தரின் கண்ணகி புரட்சிக் காப்பியத்திற்கும் இடையே காணப்படும் ஒற்றுமைகள் இரண்டே. இரு இல்லத்தரசிகள் 'கொடுமையை –அநீதியை' – எதிர்த்துப் போராடத் துணிந்ததை இவ் விருபடைப்புகளும் சித்தரிக்கின்றன. பாஞ்சாலி வீர வஞ்சினம் கூறுகிறாள். அதனை, அவளுடைய துணைவர்கள் செயல்படுத்த முயலுகின்றனர். எனினும், அந்த முயற்சியைப் பற்றிய குறிப்பு, பாஞ்சாலி சபதத்தில் இடம்பெறவில்லை.

ஆனால், கண்ணகி புரட்சிக் காப்பியத்தில், கண்ணகியின் வீரவுரை, மதுரைமா நகர மக்களை முடியாட்சிக்கும், அதற்குத் துணைபோகும் சிந்தனைத்திறமற்ற 'அடிவருடிகளின்' அடக்குமுறைக்கும் எதிராகப் புரட்சி செய்யத் தூண்டியது;[10] மதுரையின் ஒரு பகுதியைத் தீயிட்டுக் கொளுத்தினர். தன் உயிரை மாய்த்துக் கொள்ளத் துணிந்த கண்ணகியின் கனல் கக்கும் வீரவுரையால் உந்தப்பட்ட நாட்டு மக்கள்

---

8 ஷெ. இயல். 88, 90

9 கண்ணகி புரட்சிக் காப்பியம், பக். 263.

10 ஷெ பக். 161–63

புரட்சி செய்தனர். இந்த வகையில் இரண்டும் பெண்ணின் பெருமையைப் பேசுகின்றன.

இவற்றைத் தவிர, வேறு எத்தகைய ஒப்புமைப் பண்புகளை இக்குறுங் காப்பியத்தில் காண இயலவில்லை.

ஆயிரத்திற்கும் மேற்பட்ட கிளைக்கதைகளைக் கொண்ட பாரதக் கதையில், கவர்ச்சிமிக்க ஒரு நிகழ்ச்சியை –பாஞ்சாலியின் சபதத்தைத் தேர்ந்து எடுத்து, பெண்ணின் பெருமையையும், தாய்த் திருநாட்டின் விடுதலை வேட்கையையும் வீறுடன் பாரதியார் வெளிப்படுத்தியுள்ளார். தம்முடைய முற்போக்கு எண்ணங்களை இடையிடையே பழையகதையில் குழைத்துத் தருகிறார் பாரதியார்.

புரட்சிக் கவிஞர், தம்முடைய புரட்சிக் கருத்துகளுக்கு மாறான –முரணான கருத்துகளையும், கதை நிகழ்ச்சிகளையும் களைந்து எறிந்து, இன்றைய புத்துலகச் சிந்தனைக்குப் பொருந்திவரக் கூடிய செய்திகளைச் சுவைபட எடுத்துரைத்துள்ளார்.

பாரதியின் பாஞ்சாலி சபதத்தில் காணப் பெறாத 'பிரசாரம்' பாவேந்தரின் படைப்பில் உரத்த குரலில் ஒலிக்கிறது.

மணிமேகலை வெண்பா

தமிழின் 'இரட்டைக் காப்பியங்கள்' எனப் போற்றப்படும் சிலப்பதிகாரமும் மணிமேகலையும், பாவேந்தரின் கருத்தைக் கவர்ந்துள்ளன. இதனால்தான், 'மணிமேகலை'யின் மனிதநலத் தொண்டு, 'மணிமேகலை வெண்பா'வாக வெளிப்பட்டது.

இந்தப் பாவியத்திற்குப் பாவேந்தர் வரைந்துள்ள அறிமுகம் இங்குக் கருதத் தக்கதாகும்.

> ஆபுத்திரன் தான்பெற்ற அமுதசுரபி எடுக்க எடுக்கக் குறையாது உணவுதரும் என்பது என்ன?
> மணிமேகலையிடம் அக்கலம் வந்தது: அப்போதும் அது தன் தன்மையில் குறைந்து விடவில்லை. எடுக்க

எடுக்க உணவு குறையாமல் இருந்தது. இது பழைய மணிமேகலையில் உள்ளது.

இப்படிக் கூறப்படுவதன் கருத்து என்ன என் பதை விளக்க வந்ததுதான் என் மணிமேகலை வெண்பா.

வெண்பா ஆகலின் எண்ணிய அளவு எளிய நடையில் தரமுடியவில்லை. ஆதலின் உரை ஒன்று சேர்க்கப்பட்டு இருக்கிறது.[11]

இதனால் தெரியவருவது யாது? 'பாரகம் அடங்கலும் பசிப்பிணியை'ப் போக்குவதற்கு முயன்ற மணிமேகலை, ஆபுத்திரனுடைய அமுத சுரபியைப் பெற்று, சமுதாயத் தொண்டு செய்த பான்மையினைச் சித்தரிப்பதே பாவேந்தரின் நோக்கமாகும். இதுதான், பழைய மணிமேகலைக் காப்பியத்தின் 'அடிமரம்' போன்ற பகுதியாகும் என்று அவரே குறிப்பிட்டுள்ளார்.

சாத்தனாரின் மணிமேகலையில் காணப்பட்ட முப்பதுக்கு மேற்பட்ட கிளைக் கதைகளும், பௌத்தசமயப் பிரசாரமும், அறுவகைத் தத்துவ விளக்கங்களும் பாவேந்தருடைய படைப்பில் புறக்கணிக்கப்பட்டுள்ளன. இதனால், "இந்நூல் மூல நூலிலிருந்து சிறிது வேறுபட்டது; காலத்திற்கேற்ற சிந்தனைகளையும் கவிஞரின் உயர்ந்த கருத்துகளையும் கொண்டுள்ளது". எனவே, இதனை ஒரு 'கண்ட காப்பியமாகக்' கருதலாம்.

"மணிமேகலை வெண்பா" எனும் இந்நூல், இயலோ, உட்பிரிவுகளோ இல்லாமல். 288 வெண்பாக்களைக் கொண்ட குறுங்காப்பியமாகும் நேரிசை வெண்பாக்களே பேரளவில் இடம் பெற்றுள்ளன. இன்னிசை வெண்பாவாக (267) ஒரேவொரு செய்யுள் காணப்படுகிறது.[12] புகழேந்திப் புலவர் இயற்றிய (கி. பி. 15 நூ.ஆ.) நளவெண்பாவிற்குப் பிறகு, தமிழில் வெண்பாவில் இயற்றப்பட்டுள்ள சிறப்பு மிகு கதைப் பாடலாக இதனைக் கருதலாம்.

சாத்தனாரின் 'மணிமேகலை'க் காப்பியம் 'மணி

---

11 மணிமேகலை வெண்பா, 'பாவேந்தர் கூறுகிறார்'.

12 ச.சு.இளங்கோ, மு.கு.நூ.பக்.86

மேகலை'யின் துறவைப் பற்றிப்பேசுவது. பாவேந்தரின் மணி மேகலை, சமுதாய உணர்வோடு செயல்படும் – தொண் டாற்றும் 'சமுக சேவகி' யாகிய மணிமேகலையின் மாண்பினை நடைச்சித்திரமாக்கிக் காட்டுகிறது.

பாவேந்தரின் 'மணிமேகலை வெண்பா' உலகிற்கு வழங்கும் நற்செய்தியாகப் பின்வரும் பாடலைக் குறிப் பிடலாம்.

கல்லார் கடைப்பட்டார் ஆதலினால், கல்விதான்
எல்லார்க்கும் கட்டாயம் வேண்டுமால் – இல்லார்க்கோ
ஊணுடை நல்ல உறையுள் படிப்பளித்தல்
மாணுடை மன்னர் கடன் (மணி.வெ. 181)

இவ்விரு பாவியங்களும் வாழ்த்து, வணக்கம் எனும் தொடக்கப்பகுதிகள் இன்றியே தொடங்கப்படுகின்றன. நூலின் இடையிடையே 'வருபொருள்' சுட்டப்படுகிறது. எனவே, நேராகக் கதையைத் தொடங்கும் முறையைப் பாரதிதாசன் புதுமையாகப் புகுத்தியுள்ளார். இந்த வகையிலும்,பாஞ்சாலி சபதத்தில் இருந்து இவ்விருபடைப்புகளும் வேறுபடுகின்றன.

இவற்றின் பாத்திரப் படைப்பு, மனத்தில் நிழலாடத் தக்கனவாக உள்ளன இல்லத்தரசியான கண்ணகி,புதிய ஊரில், தன்மானத்தைக் காப்பாற்றி அறத்தை நிலைநாட்டப் 'பொங்கி எழும்' வீரவுணர்வோடு செயல்படுவது எங்கோ, எப்பொழுதோ நாம் கண்ட ஒரு 'வரலாற்று மாந்தரை', நம் மனக்கண் முன்னால் கொண்டுவந்து நிறுத்து கிறது. எத்துணையும் பேதமுறாமல் எவ்வுயிரும் தம்முயிர் போல் எண்ணி, வித்தகம் பேசாது அன்புப்பணி செய்யும் "அருள் செல்வியாக' – புனித அன்னையாக (அன்னை தெரிசாவைப்போல) மணிமேகலை 'சமூக சேவை' புரிகிறாள். இவ்வகையில், பாவேந்தரின் பாத்திரப் படைப்புகள் கற்பவர் நினைவில் நிற்பனவாக'த் தோன்றுகின்றன.

அகலிகை பற்றிய கதைப்பாடல்கள்

கம்பனின் இராமாயணத்தில், இராமருடைய திருவடிகள் பட்டதனால் 'பாவ விமோசனம்' பெறும் புனிதவதியாக கௌதமரின் தருமபத்தினி, அகலிகை சித்திரிக்கப்பட்டுள்ளாள். இந்தப் பாத்திரம், தமிழ்க் கவிஞர், சிறுகதைப் படைப்பாளர் போன்ற இக்காலச் சிந்தனையாளர் பலருடைய கருத்தைக் கவர்ந்து இருக்கிறது.

மரபுவழித் தமிழ் அறிஞரான வெள்ளக்கால் பா. சுப்பிரமணிய முதலியார்,'அகலிகை வெண்பா' எனும் கதைப் பாடலைப் படைத்துள்ளார். அகலிகை 'உள்ளத்தால் குற்றம் அற்றவள்' எனும் கருத்தை நிலைநாட்ட இந்நூல் ஆசிரியர் முயன்றுள்ளார்.

'பாலபாரதி' எனப் போற்றப்பட்ட ச.து.சு. யோகியார், புதுமைக் கண்ணோட்டத்தில் அகலிகையைக் காணுகிறார்; காட்டுகிறார். அவருடைய 'அகல்யா' எனும் கவிதை, காப்பிய மரபுகளைப் பின்பற்றாத ஒரு நெடுங்கதைப் பாட்டு.

பெண்ணுரிமைகளுக்குப் 'போர்முரசு' கொட்டும் கவிஞராக இப்பாடலில் யோகியார் வெளிப்படுகிறார்.

தொடக்கம், திருமணம், கற்புக்கனல், சூழ்ச்சி,மீட்சி. முடிவு எனும் ஆறு பகுதிகளைக் கொண்ட சொல்லோவியமாக 'அகல்யா' படைக்கப்பட்டுள்ளது. அகலிகையைக் 'கற்புக்கனலாக'க் காட்டுகிறார் கவிஞர்.

இளமையில் இந்திரனைக் காதலித்தாள் அகலிகை. ஆனால், அவளுடைய தந்தை உண்மை அறியாது, கௌதமருக்கு அவளைத் திருமணம் செய்து வைக்கிறார். அவளுடைய முயற்சிகளும் எதிர்ப்புகளும் தோல்வி அடைகின்றன. அவளுடைய அடிமனத்தில், அக்காதல் உணர்வு 'நீறுபூத்த நெருப்பாக'க் கனன்று கொண்டு இருக்கிறது.

அவளை மனைவியாக அடையாமையால் ஏமாற்றம்

அடைந்த இந்திரன், என்றைக்காகிலும், எவ்வாறாகிலும் அவளை 'அனுபவித்துத்' தீரவேண்டும் எனும் திட்டமிடுகிறான். கௌதமர் இல்லாத சமயத்தில் அவளுடைய இருப்பிடத்தை அவன் அடைகிறான்

காதல் விதை விதைத்தோம்.
கனிபறிக்க வேண்டாமோ?
ஏது நடு நேர்ந்தாலென்?
இதயக் கலைவாமோ?
உள்ள மிரண்டு ஒன்றானால்,
உடலிரண்டு ஒன்றலவோ?
கள்ளமுனி வஞ்சனைக்காய்க்
கற்புவிற்கப் போமோதான்?
போன வஞ்சம் போகட்டும்.
புதுமை வஞ்சம் ஆகாதோ
தீனன் என்னைக் காப்பாயோ?
தேவியுனை வேண்டுகின்றேன்[13]

என அவன் வேண்டுகிறான். 'புதுமையில்லை; பழங்காதல் புதுப்பிக்க வந்தடைந்தேன்' என்று அவன் விண்ணப்பிக்கிறான்.

இதனைக் கேட்ட அகலிகை, சீறி எழுகிறாள்.
யாரை நீ சொன்னாய்?அடகெடுவாய்! மதியில்லாய்!
வேரை அறியாதே வெற்றிலையைக் கேட்கின்றாய்[14]
கற்புக் கனல் நான்; காமச் சிறு புழு நீ!

ஃஃ ஃஃ ஃஃ
வஞ்சனையாம் வஞ்சனைக்கு வஞ்சமிட
வந்தானாம்!
நெஞ்சிரக்கம் இல்லாது என் நேர்மை திருடவந்தாய்!
மெய்ப்பாட் டியல் முனிவன் வேதமனையாட்டி
யெனை
வைப்பாட்டி யாக்கொண்டு வசைகாண வந்தாயோ?

---

13 தமிழ்க் குமரிப் பாடல்கள். பக். 40
14 ஷ. பக்.47

உயிர்ப்பிச்சை வேண்டுமோ? உயிர்க்குயிராம் என்கற்புக்கு
உயிர்ப்பிச்சை யார்தருவர்? உளுத்தமரம்
போன்றவனே?!

என்று பலவாறாக இந்திரனுக்கு, அகலிகை அறிவுரை கூறுகிறாள். இதைக் கேட்டு வானரசன் தன்னை அறிந்தான்; தலை கவிழ்ந்தான்.

ஆனால், வெறியனாய், செயலிழந்த வீணனாய், 'எப்படியும் அவளை அடைந்தே தீர வேண்டும்' எனும் எண்ணத்தோடு அவன் சூழ்ச்சி பல செய்ய முற்படுகிறான். அவன் ஆசைமிகுந்தான்; அறிவிழந்தான் காமத்தே வாதாடிப் பெற்று அணைவதற்கு வழியில்லை; எனவே சூதாடிப் பெற வேண்டும் அவளை' என்று அவன் சூளுரைத்தான், என்னைப் பழித்தவளை – யானவளைக் கற்பழித்துத் தன்னைப் பழிப் பாக்கத் தவறேன்!' என்று இந்திரன் முடிவு செய்தான்.

வஞ்சனையால் விடியற் காலையில் நீராடப்போன கௌதமர் வடிவில் திரும்பி வந்தான்.'என்றுமில்லாப் பேராசை என் கணவர் கொண்டாரோ?" "இன்று கண்டேன் பேரின்பம் யான்' என்று அகலிகை அவனோடு இன்பம் துய்த்தாளாம்.

இந்திரனுடைய சூழ்ச்சியால், அகலிகை கற்பு இழந்தாள். 'இதற்கு அவளா பொறுப்பு?' என்பது கவிஞர் யோகியாரின் கேள்வி.

பெண் பிழைத்த தில்லை; அவள் பிறன்
பிழைக்கப் பிழையுற்றாள்!
மனைக் குற்றம் என்றாலும்
மனக்குற்றம் இல்லாளை
உனக்குற்ற மனையாளை
ஒதுக்குவதால் பழிபோமோ?

என்று இராமன், கௌதமருக்கு அறிவுரை கூறுகிறான்.

இவ்வாறு கவிஞர், அகலிகைக்குப் 'பாவ விமோசனம்' அளிக்கிறார். 'கற்பு' எனும் பண்டைத் தமிழரின்– இந்தியரின்

– கோட்பாட்டிற்கு 'அகல்யா' மூலம் புது விளக்கம் தந்துள்ளார் பாலபாரதி.

இராமாயணக் கதையில், ஒரு சிறு நிகழ்ச்சியாக இடம் பெறும் 'அகலிகையின்' பாவ மன்னிப்பு, யோகியாரால் சுவைமிக்க ஒரு கதைப்பாடலாகப் படைக்கப்பட்டுள்ளமை, பாரதியின் பாஞ்சாலி சபதத்தை நினைவுபடுத்துகிறது.

மச்சகந்தி

மகாபாரதத்தில் சந்தனு அரசனின் காதலியாக, இரண்டாம் மனைவியாக மீனவர் குலத்து அழகி, மச்சகந்தி தோன்றுகின்றாள். அவளைத் திருமணம் செய்துகொள்ள விரும்பும் அரசனிடம், மச்சகந்தியின் அப்பன் சில உறுதி மொழிகளைத் தருமாறு வேண்டுகிறான்.

சந்தனுவின் மூத்தாள் மகனான 'காங்கேயனுக்கு (பீஷ்மருக்கு) அரசுரிமை தரக்கூடாது; இளைய மனைவியான மச்சகந்திக்குப் பிறக்கும் மகனுக்கே முடிசூட்ட வேண்டும்' என்பது மீனவர் தலைவனின் நிபந்தனை. அதற்கு உடன்பட இயலாது, வீட்டிற்குத் திரும்பிச் சென்ற சந்தனு 'விரக தாபத்தால்' துடிக்கிறான்.

அதைக் கண்ட, வயது வந்த அவன் மகன் தந்தையின் 'ஆசையை' நிறைவேற்ற முயலுகிறான். மச்சகந்தியிடம் தான் 'அரசுரிமையைக் கோருவதில்லை' எனவும்,'என்றும் திருமணம் செய்து கொள்ளாமல், பிரமசாரியாகவே வாழ்வேன்' எனவும் அவன் சூளுரைக்கிறான். அப்பாவின் திருமணத்தை, அருமை மகன் நடத்திவைக்கின்றான்; சூளுரைத்தவாறே 'பீஷ்மனாக', அவன் வாழ்ந்து காட்டுகிறான்; பாரதப் போரில் முதுமை நிறைந்த 'பிதாமகனாக'ப் போரிட்டு, அருச்சுனன் அம்பால், மாள்கிறான்.

இத்தகைய செயற்கருஞ் செயல்புரிந்த கருமவீரனான 'பீஷ்மனின்' வீரவரலாறு, கலைமாமணி கவிஞர் கா.மு. ஷெரீப்

அவர்களின் உள்ளத்தைப் பெரிதும் கவர்ந்து இருக்கிறது. பீஷ்மனுடைய சபதத்தையே ஆசிரியர் கவர்ச்சிமிக்க கதைப் பாடலாகப் படைத்துள்ளார். நூலிற்கு 'மச்சகந்தி' பெயர் எனும் கொடுக்கப்பட்டிருப்பது பொருத்தமாகத் தோன்றவில்லை கவிஞர் பெருமானை அணுகி, இதைப் பற்றிக் கேட்டேன். புன்முறுவலோடு "நூலாக வெளியிடுவதற்கு முன், பத்திரிகை ஒன்றில் இது வெளியிடப்பட்டது. அப்பொழுது, 'பீஷ்ம சபதம்' எனும் பெயரினைச் சூட்டி இருந்தேன். பிறகு, 'பீஷ்மன் சபதம் செய்யவில்லையே! சூளுரை செய்தான்: அதன்படி பிரமசரிய விரதம் மேற்கொண்டான்! எனும் எண்ணம் எழுந்தது¡

எனவே, நூலாக வெளியிடும் பொழுது அப்பெயரை மாற்றி விட்டேன்' என்று அவர் கூறினார்.

இந்த நேர்முக உரையாடலால், பாரதியின் பாஞ்சாலி சபதத்தின் தாக்கத்தாலேயே முதலில், 'பீஷ்ம சபதம்' எனும் பெயரிடப்பட்டமை தெரிய வந்தது. பல்கலைச் செல்வராகிய கலைமாமணியின் உள்ளத்தை, "பீஷ்மரின் தியாக வாழ்க்கை' பெரிதும் கவர்ந்துள்ளது.

சந்தனு கா தலைப் போற்றுவார் இல்லை!
பீஷ்மன் செய்த வீரச் செயலைப்
பேசா நாளே பிறந்த தில்லை![15]

என்று கவிஞர் கா. மு. ஷெரிப் வியந்து பாடுகிறார்.

இக்கதைப் பாடலில்' பாரதியின் தாக்கம் சொற்களிலும், உவமைகளிலும் கூடக் கொஞ்சி விளையாடுகிறது.

மாரிவாயில்

பாரதக் கதையின் கதாநாயகன் அருச்சுனன். அவன் தீர்த்தயாத்திரை செய்தபொழுது தமிழ்நாட்டிற்கு வருகிறான். மதுரை மாநகரில், பாண்டியன் பாவையை (சித்திராங்கதை)க் கண்டு காதலித்து, கூடிமகிழ்ந்து, பிரிகிறான். பிரிந்த காதலனை நினைந்து ஏங்கும் அரசிளங்குமரி, மேகத்தை (மாரியை)

15 மச்சகந்தி,பக். 64.

அவனுக்குத் தூது அனுப்புகிறாள் என்பது இந்நூலில் இடம் பெற்றுள்ள கதையாகும்.

இந்தக் கதை 'அல்லியரசாணிமாலை'யாக நாட்டு மக்களிடையே பெருஞ் செல்வாக்குப் பெற்று இருப்பதை இங்கு நினைவுகூர்தல் வேண்டும்.

பெரும் பேராசிரியராகவும், அரிய ஆராய்ச்சியாளராகவும் விளங்கிய நாவலர் டாக்டர் ச. சோமசுந்தர பாரதியார். இந்தக் காதற் காப்பியத்தைப் படைத்துள்ளார்.

இந்நூலிற்கு 'மதிப்புரை' வரைந்த நீ.கந்தசாமிப் பிள்ளை 'பலவகையாக விரிந்த இலக்கியத்துள், இஃது ஒரு கருத்தையோ, ஒருவகை உள்ள நிலையையோ பலவாக விரித்து, கற்பவருள்ளம் பொற்புறுமாறு இயற்றப் பெறும் பகுதியைச் சேர்ந்ததாகும்"[16] என்று இந்த இலக்கிய வகையின் நோக்கையும் கோடி காட்டியுள்ளார்.

இருபதாம் நூற்றாண்டில் இயற்றப்பட்ட தூது இலக் கியங்களுள், மாரிவாயில் தலைசிறந்தது. நூலின் பெயர், 'சிற்றிலக்கியம்' என இதனைத் தெரிவிக்கிறது. ஆயினும் நூலின் அமைப்பும், கவிதை வளமும் இதனை ஒரு 'குறுங் காப்பியமாகவே' கருதுமாறு தூண்டுகிறது

தமிழ் வணக்கம், தமிழ்ப் பல்லாண்டு, தமிழ்த்தாய் வாழ்த்து எனும் பல்வேறு வாழ்த்துக்களோடு,நாட்டுவளம், நகரவளம் ஆகியவற்றோடு இக்கதைப் பாடல் தொடங்கு கிறது.

பாண்டியன் மகள், மேகத்திடம் கூறி அனுப்பும் 'செய்தி'யாக உள்ள பாடலைக் காண்போம்:

கற்பற வாழ்வும் காதல்
கடற்கரை விளக்குங் காணத்
தற்பரை அருளை நாடித்
தமிழ்த் துறைக்குமரி நோற்பாள்;

---

16 மாரிவாயில், பக் xvii.

விற்பன விநய மாதர்
விரகிலள்; விழைந்து நாளும்
கற்பன கணவன் காதல்
கடன்புரி கடன்காண் கல்வி[17]

எனும் செய்தியை, 'வழுதியின் வழியில் வந்தோள்; பின்னர் நின் மகனைப் பெற்றோள்; பெருமனைக் கிழத்தியாகத் துடிக்கிறாள்" என்று அறிவிக்குமாறு மேகத்தை அவள் தூது விடுகிறாள்.

'பேராசிரியர் சோமசுந்தர பாரதியார்,சுப்பிரமணிய பாரதியாரின் இளமைக் கால நண்பர். இருவருக்கும் ஒரே நாளில், ஒரே சமயத்தில், ஒரே நிகழ்ச்சியில் 'பாரதி' எனும் பட்டம் அளிக்கப்பட்ட செய்தி, இன்று நாமறிந்த "பழங்கதை. சோமசுந்தரனாரின் இப்படைப்பில் கற்பனை வளமும், சொல் நயமும், பொருள் நயமும் முனைப்பாக உள்ளன. ஆனால், பாரதியாரின், பாவேந்தரின் கவிதைகளில் காணப்படும் எளிமையும், நெகிழ்ச்சியும், உயிர்த் துடிப்பும் போதிய அளவிற்கு இவருடைய படைப்பில் இடம் பெறவில்லை.

சகுந்தலை வெண்பா

பாரத நாட்டின் அரசர் குலத்தின் முதல்வன் பரதன் அவனுடைய பெற்றோர் பற்றிய வரலாறு, பாரதத்தில் விரித்துரைக்கப்பட்டுள்ளது. அவனுடைய தாயான சகுந் தலையின் பேரால், காளிதாசன் 'அபிஞ்ஞான சாகுந்தலம் எனும் உலகப் புகழ்வாய்ந்த நாடகத்தைச் சம்ஸ்கிருத மொழியில் இயற்றினார். அக்காலம் (கி. பி. ஐந்தாம் நூற்றாண்டு) முதல், இந்திய இலக்கியத்தில் 'சகுந்தலையின் வரலாறு சிறப்புமிகு கதைக்கருவாகப் போற்றப்பட்டு வருகிறது.

17 மாரிவாயில்,செ,114.

தமிழறிஞர் நால்வர், சாகுந்தல நாடகத்தைத் தமிழில் மொழி பெயர்த்துள்ளனர். இலங்கையில் 1950–அளவில் அமைச்சராக விளங்கியவர் சு. நடேசபிள்ளை. இலங்கையில் மிகுந்த செல்வாக்கோடு விளங்கிய இலங்கைத் தமிழர்களில் நடேச பிள்ளையும் ஒருவராவர். சிறந்தத் தமிழறிஞராகவும் அவர் விளங்கினார்.

"சகுந்தலை வெண்பா' எனும் காவியத்தைப் படைத்த பெருமை அவருக்கு உரியதாகும். அந்நூலுக்குப் பேராசிரியர் தெ.பொ. மீனாட்சி சுந்தரனார் வழங்கியுள்ள முன்னுரையின் சில பகுதிகளைக் காண்போம்:

"இந்தியக் கதைப் புதையலுக்குப் 'பாரதம்' என்று பெயரிட்டு வழங்கி வருகிறோம். அதிலே வருகிற "கிளைக் கதை' ஒன்று உலகப் பெருமை பெற்றுவிட்டது. சகுந்தலை யின் காதலில் எழும் மேடு பள்ளங்கள், விதியின் விளையாட்டு, பெண்ணின் பெருமை, வீரத்தின் வெற்றி, இந்திய நாட்டிற்குப் பெயர் தரத்தக்க ஒருவன் உருவாகும் வளர்ச்சி, முனிவர் வாழ்க்கையின் பலவகைப்போக்கு, அம்முனிவருலகில் வளரும் காதல், இயற்கையோடியந்த வாழ்வு –இவையனைத்தையும் இக்கதையின் வழியே ஓர் ஒருமைக் காட்சியைக் காண்கிறார்"[18] நடேசனார்.

பிறப்புக் காண்டம், காதற்காண்டம், துன்புறு காண்டம். இன்புறுகாண்டம் எனும் நாற்பெரும் பிரிவுகளையும், 350 வெண்பாக்களையும் கொண்டது இந்நூல்.

'யானறியே னிம்மாதை என்செய்வேன் இந்நிலையில்
'கானுறைவீர்! கர்ப்ப வதியிவளை–யாள்வரித்தல்
ஆகுமோ?" என்றான் அரசன்; அவளது கேட்டு
ஆகந் துடித்தாள் அழுது

(ச.வெ.261)

எனும் போக்கில் நடேசனாரின் கதைப் பாட்டு அமைந்து இருக்கிறது. இக் காலத்திய சமுதாய உணர்வோ, புதுமைப்

18 சகுந்தலை வெண்பா, பக்.3.

போக்குகளோ இந்நூலில் இடம் பெறவில்லை. ஆசிரியரின் புலமைத்திறம் வெளிப்படும் இடைக்கால இலக்கிய மரபைச் சேர்ந்தனவே 'மாரி வாயிலும்', 'சகுந்தலை வெண்பாவும்' எனில், அது தவறாகாது.

கோசலைக் குமரி

கி. பி 50 அளவில், வட இந்தியாவில் சாகேத் (அயோத்தி) நகரில் சிறப்புற்று விளங்கிய மாபெரும் சம்ஸ் கிருத கவிஞர் அசுவ கோஷ் வாழ்ந்தார். அவர் பௌத்த சமயத்தைச் சேர்ந்தவர். அவர் படைத்த புத்தசரிதம் எனும் சம்ஸ்கிருத மொழி நாடகம், இன்று சீனமொழி பெயர்ப்பில் தான் முழுமையாகக் கிடைக்கிறது.

'வால்கா விலிருந்து கங்கை வரையில்' எனும் பண்பாட்டு வரலாற்று நூலை, இராகுல சாங்கிருத்தியாயன் இந்நூற் றாண்டின் முற்பகுதியில் இந்திமொழியில் எழுதினார். அது மகாபாரதம் போன்ற பல்வேறு கதைகளின் உரைநடைக் களஞ்சியமாகும். அந் நூலுள் 'பிரபா' எனும் சிறு கதை இடம் பெற்று இருக்கிறது. பார்ப்பன குலத்தில் பிறந்த அசுவகோஷ், கிரேக்கப் பெண் பிரபாவைக் காதலிக்கிறான். 'காதல் பெரிதா? கவிதைப் பணி பெரிதா?' எனும் நெருக்கடி உண்டான பொழுது. அவனுடைய காதலி, உலகப் புகழ் வாய்ந்த கவிஞனாக அவன் அமரகாவியம் படைக்கவேண்டும்' எனும் அவாவினால், தற்கொலை செய்து கொள்ளுகிறாள்* அதனால், மனமுடைந்த அவனும் தற்கொலை செய்து கொள்ளுகிறான்' என்பது கதை.

இந்தச் சிறு கதையைக் கவிஞர் தமிழ் ஒளி, 'கோசலைக் குமரி' எனும் கதைப் பாடலாகப் படைத்துள்ளார். "வால் காவிலிருந்து கங்கை வரை" என்ற நூலிற் காணும்'பிரபா' என்ற சிறுகதையைத் தழுவி, இச்சிறு காவியத்தைப் புனைந்துள்ளேன். என் கற்பனைக் கேற்பக் கதையில் மாறுதல்களைச் செய்துகொண்டேன்"[19] என்று கவிஞர் தமிழ்

19 கோசலைக் குமரி, பக்.8

ஒளி முன்னுரையில் தெரிவித்துள்ளார்.

இயல்பாகவே, சாதிக் கொடுமையை, வருணாசிரம கட்டுப்பாட்டை எதிர்த்துப் பல பாடல்களைப் பாடியவர் கவிஞர் தமிழ் ஒளி, அவருக்குப் பிராமணனான அசுவகோஷ், 'ஊர்வசி' எனும் கிரேக்கப் பெண்ணை மணப்பதற்காகப் பௌத்த சமயத்தைத் தழுவிய வரலாற்றுத் துணுக்குச் சிறந்த உந்துதலாக அமைந்துவிட்டது. "என் போராட்ட உணர்ச்சியை வெளிப்படுத்தக் கிடைத்த வாய்ப்பாகக் கருதி இக் காவியத்தைப் படைத்து இருக்கிறேன்"[20] என்று கவிஞரே குறிப்பிட்டுள்ளார்.

கோசலைக் குமரி' எனும் இக்கதைப் பாடல் ஆறு பகுதி களைக் கொண்டது; ஆற்றொழுக்கான நடையைக்கொண்ட கவிதைகளால் அமைந்தது.

கவிதையே ஊர்வசியின்
கனவாய் மாறக்
கவி அசுவ கோஷ் அவளின்
கடவுள் ஆனான்?

புவிப்பொருளிற் கவிதையே
புதையல் என்றும்
போய் எடுப்பார்க்கு இன்பமே
பெருகும் என்றும்

செவிப்புலனே கவிதையாற்
சிறந்த தென்றும்
செத்தாரை எழுப்புவதும்
கவிதை என்றும்

நவில்கின்ற ஊர்வசியைப்
பித்த முற்ற
நங்கையெனப் பல்லோரும்
நகைக்க லானார்?[21]

---

20 ஷெபக்.12

21 கோசலைக் குமரி, பக். 66–67.

எனும் பாடல்கள் கோசலைக் குமரியான ஊர்வசியின் மன நிலையைப் புலப்படுத்துவன.

தம் காதலனாகிய அசுவகோஷ் அழியாப் பேரிலக்கியத்தைப் படைப்பதற்குத் தான் தடையாக இருக்கக் கூடாது எனும் கருத்தினைக் கொண்டாள் ஊர்வசி.

சாகாக் கவிதைகளாற்
சாகேதந் தான்வாழ,
ஆகா, உனது பெயர்
யாண்டும் ஒளிபரப்ப,
ஒப்பற்ற ஓர் கவிஞன்
உள்ளங் கவர்ந்த பெண்
இப்பிறவி பெற்றாள்
எனும்புகழ் நான்பெறப்

பாடல் மழைபொழிந்து
பாரைத் திருத்துங்காண்!
கூடல் இருக்கட்டும்.
கொள்கை பெரிதுகாண்!"[22]

என்று அவனுக்கு ஆலோசனை கூறுகிறாள். அந்த ஆலோசனை இடையே, அவளுடைய வாழ்வின் இலட்சியம் என்னவென்பது வெளிப்படுகிறது.

"இது ஒரு புரட்சிக் காப்பியம் எனலாம்; காப்பியச் சிறப்புமிக்க நூலாகும். இயற்கை வருணனை இயல்பாக அமைந்துள்ளது. சாதியை விட்டொழிக்க எண்ணுபவனுக்கு ஏற்படும் இன்னல்களைத் தெளிவாக விளக்குகிறது. படிப்பவர் நெஞ்சங்களைக் குழைய வைக்கும் நிகழ்ச்சிகள் இந்நூலில் சில உள"[23] என்பது திறனாய்வாளரின் துணிவாகும்.

பண்டைக்கால புலவன் ஒருவனுடைய வாழ்க்கையின் ஒரு பகுதியை – காதல் வாழ்வைத் தேர்ந்து எடுத்து, அதனைத்

---

22 ஷெ. பக். 79.

23 டாக்டர் வெ. கனக சுந்தரம், கவிஞர் தமிழ் ஒளியின் கவிதைகள்– ஓர் ஆய்வு, பக் 95.

தற்காலக் கண்ணோட்டத்தில் சாதிக் கொடுமையைச் சாடுவதற்கு ஒரு கருவியாகப் பயன்படுத்தி, நல்லதொரு கதைப் பாடலைக் காப்பியப் பாணியில் கவிஞர் இதனை இயற்றியுள்ளார்.

விதியோ? வீணையோ?

சிலப்பதிகாரத்தில், கடற்கரைச் சோலையில் கோவலனும், மாதவியும் யாழினை மீட்டி இசைக்கின்றனர். அப்பொழுது அவர்கள் பாடிய பாடல்களின் உட்பொருளால், கருத்து வேற்றுமை அவர்கள் இடையே உண்டாகிறது. இதனால், அவர்கள் இருவரும் மனமுறிவு அடைந்து, நிலையாகப் பிரிந்துவிடுகின்றனர். இத்தகைய பிரிவிற்கு

> யாழிசை மேல் வைத்து, தன்ஊழ்வினை வந்து
> உருத்தது ஆகலின்

என்று இளங்கோவடிகள் ஊழைக் காரணமாகக் காட்டியுள்ளார்.

ஆனால், கவிஞர் தமிழ் ஒளி, 'யாழே' காரணம் எனக் கூறுகிறார். இதனைச் சித்திரிப்பதே 'விதியோ? வீணையோ?"[24] எனும் இப்பாவியம்.

இவர் 'சிலப்பதிகாரக் கதையின் ஒரு பகுதியை இனிய பாக்களில் அமைத்து' இந்நூலில் தந்துள்ளார். கானல்வரி வேனிற் காதை ஆகிய காதைகளில் நிகழ்கிற கதை நிகழ்ச் சியை அடிப்படையாகக் கொண்டு, புதுவது புனைந்ததாகும் இந்நூல். மாதவியின் உள்ள நிலையை இக்கவிஞர் வேறொரு விதமாகப் புனைந்து பார்த்துக் கற்பனையமிழ்தமாக இதனைத் தந்துள்ளார்.[25]

இந்நூலில், கவிஞர் பல புதுமைகளைப் புகுத்தியுள்ளார். "சிலப்பதிகாரக் கதையின் விதித் தத்துவம்,

---

24 சிலப்–6, கட்டு. 4.

25 அ. சிதம்பரநாதன், விதியோ வீணையோ.முன்னுரை

இளங்கோவடிகளுடையது. யாழ் உடைபடும் நிகழ்ச்சி என் சொந்தக் கற்பனை 'கண்ணகி சிலம்பை உடைத்தாள் என்றால், மாதவி தன் யாழை உடைக்கட்டுமே' என்று என் மனம் எதிரொலித்ததே இதற்குக் காரணம்[26] என்பது தமிழ்ஒளியின் படைப்பில் காணப்படும் சிறப்பாகும்.

கோவலன் அவளிடம் வரமாட்டேன்'என்னும் செய்தியை வயந்தமாலையின் மூலம் மாதவிக்குத் தெரிவிக்கிறான். அதைக் கேட்ட அவன் நெஞ்சம் பதைபதைக்கிறது. வெறுப்பும் வெகுளியும் பொங்கி எழுகின்றன. அந்நிலையில்,

முகம் எரிவன முழுமலர்!
முகை எரிவான இதழ்மலர்!
அகம் எரிவன அலை மலர்!
அவள் எரிபடும் ஒரு மலர்!"[27]

என ஒரு மலராகிறாள் மாதவி!

வீணைமுன் நின்றனள்! நின்றனள்!
வெந்தணல் என்றிட! என்றிட!
ஆணையும் பெண்ணையும் வேறுற
ஆக்கிய ஆக்கிய வல்விதி![28]

எண்ணி அவள் ஏக்கப் பெருமூச்சு விடுகிறாள்.அப்பொழுது அவளுடைய காதுகளில்,

வல்விதி ஆக்கிய யாழ் அம்மா!
வாழ்க்கை வளம்இனி பாழ் அம்மா!
தொல்விதி ஆக்கிய தொழிலம்மா!
தோன்றி அழிந்திடும் எழிலம்மா!?[29]

எனும் குரலொலி கேட்கிறது.

ஏமாற்றத்தால் எரிச்சலடைந்த மாதவி, தன்னுடைய யாழினை எடுத்துக் கீழே போட்டு உடைத்து விடுகிறாள். இக்

---

26 ஷெ கவிஞரின், "நூல்வழி" எனும் முகவுரை பக் 19.
27 ஷெ பக்.77
28 விதியோ? வீணையோ? பக். 77.
29 ஷெ. பக்.78

காட்சியை

விதியை உடைத்திட ஓடி
வீணை உடைத்திடு கின்றாள்!
சதியை உடைத்திட எண்ணித்
தலையை உடைத்திடு கின்றாள்!

என்று கவிஞர் சித்தரித்துள்ளார்.

காலமெனும் பொன் மேடையிலே
காதலெனும் பொன் வீணையிலே
ஓலமிடும் குரல் உன்குரலோ?
ஓசைதரும் குரல் உன்குரலோ?"[30]

என்று தம் ஆற்றாமையை வெளிப்படுத்துகிறார் தமிழ்ஒளி.

ஆத்திரத்தால் அறிவிழந்து, தன் கண்ணனைய யாழை உடைத்துவிட்டாள் மாதவி. பிறகு அவளுடைய மனம் மாறிவிடுகிறது. நிலையான மனவமைதியைப் பெறுவதற்குப் புத்தர் பெருமானின் திருவடிகளை அவள் சரணடைவதாகக் காட்டுகிறார் கவிஞர்.

சிலப்பதிகாரக் கதையில் கவிஞர் தமிழ் ஒளி, ஒரு சிறு நிகழ்ச்சியைத் தேர்ந்துஎடுத்து, அதைப் புரட்சிகரமாக மாற்றி அமைத்துள்ளார். இக்காலப் பகுத்தறிவின் கண்ணோட்டத்தில், 'மாதவியின் துன்பத்திற்குக் காரணம் விதியன்று; வீணையே (யாழே)' எனும் கருத்தை நிலைநாட்டுவதற்குக் கவிஞர் முயன்றுள்ளார். இம்முயற்சியில் அவர் வெற்றியும் பெற்றுள்ளார்.

'விதியோ விணையோ?" எனும் இக்கதைப் பாடல். கவிஞர் தமிழ் ஒளி இயற்றியுள்ள 'மாதவி காவியம்' எனும் பாவியத்தின் முற்பகுதியாம். பிற்பகுதியும் சேர்ந்து, நூல் முழுவடிவம் பெறப்போவதாக ஆராய்ச்சியாளர் அறிவிக்கிறார்.[31]அவ்வாறாயின், கவிஞர் தமிழ் ஒளியின் 'மாதவி காவியம்'

---

30 ஷெ. பக்.85

31 டாக்டர்.வெ. கனகசுந்தரம், மு.கு.நூ.பன். 92.

இக்காலத்தில் இயற்றப்பட்ட சிறப்புமிகு 'கண்ட காப்பியமாக'– 'காப்பிய முறிவாக'ப் போற்றப்படும்.

சிலம்பின் சிறுநகை

சிலப்பதிகாரத்தில் கொடியவனாகப் படைக்கப்பட்டுள்ள பாத்திரம் பொற்கொல்லன். அவனுடைய தன்னல வெறியாலேயே – சூழ்ச்சியாலேயே கோவலன். 'கள்வன்' என்று குற்றம் சாட்டப்பட்டு, கொலைத் தண்டனை பெறுகிறான்; இதனால், கண்ணகியின் வாழ்க்கை இருண்டு விடுகிறது; பாண்டியனும், பாண்டிமாதேவியும் இறக்கின்றனர்; மதுரை மாநகரம் எரிவாய்ப்படுகிறது. இத்தகைய கொடுமைகளுக்கு எல்லாம் காரணம் வஞ்சனை நிறைந்த பொற் கொல்லனுடைய சூழ்ச்சியாகும்.

இந்தப் பொற்கொல்லனைக் கதைத் தலைவனாகக் கொண்டு 'சிலம்பின் சிறுநகை' எனும் குறுங்காப்பியம் படைக்கப்பட்டு இருக்கிறது. இதனைக் கவிஞர் சாலை . இளந்திரையன் படைத்துள்ளார். இப்பாவியத்தில், பேராசிரியர் இளந்திரையனின் சிந்தனைச் சுடர் ஒளிவிட்டுப் பிரகாசிக்கிறது.

இராவண காவியம்

புலவர் குழந்தையின் சிறப்புமிகு படைப்பாக விளங்குவது 'இராவண காவியம்." படைப்பின்பெயரே, காப்பியத்தின் தலைவன் யார் என்பதைத் தெரிவிக்கிறது.

இராமாயணத்தின் எதிர் நிலைத் தலைவன் இராவணன். பேரறிவும், பேராற்றலும், பெருந்திறனும் வாய்ந்தவனாக இராவணனைத் தன் 'இராமகாதையில்' கம்பன் படைத்துள்ளான்; அவனிடம் இருந்தது ஒரேவொரு குறை. அது இரக்கம் இன்மை என்பதாகும். இதனை 'இரக்கம் எனும் ஒரு பொருளிலா அரக்கன்' என்று அவனைப் பழிப்பர்.

இவ்விருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தமிழக மறுமலர்ச்சி இயக்கத்தினர், இராவணனைத் தொல்பழங் காலத் தமிழரின் தலைவனாகக் கருதத் தொடங்கினர். தமிழ்த்

தேசிய எழுச்சியின் பயனாக, இராவணனை ஓர் 'இலட்சியத் தலைவனாக' மக்கள் இடையில், தமிழார்வலர் அறிமுகம் செய்து வைத்தனர்.

பேராசிரியர் மு. சு. பூரணலிங்கம் பிள்ளை அவர்கள் அறுபது ஆண்டுகளுக்கு முன்பே 'மாண்புமிகு இராவணன்' (Ravana, the great) எனும் ஆங்கில நூலினை வெளியிட்டார் ஆராய்ச்சிப் போக்கில், புதிய சிந்தனைகள் பலவற்றை இந்த அறிஞர் எடுத்துரைத்துள்ளார். முப்பது ஆண்டுகளுக்கு முன்பு, 'இராவணன் மாட்சியும் வீழ்ச்சியும்' எனும் திறனாய்வு நூலை, கம்பனின் இராமகாதை வழி நின்று பேராசிரியர் அ.ச ஞானசம்பந்தன் படைத்துள் ளார். 'முரண்பட்ட பண்புகள் வாய்ந்த ஒரு மாபெருந் தலைவன்' என்று இராவணனை இப்பேராசிரியர் சித்தரித்துள்ளளார்.

இதற்கு இடையில், பாவேந்தர் போன்ற கவிஞர்கள் இராவணனுடைய தனிப்பெருஞ் சிறப்பு இயல்புகளைத் 'திராவிட – ஆரியப் 'பண்பாட்டு'ச் சூழ்நிலையில் போற்றிப் பாடியுள்ளனர். இந்தப் பின்னணியிலேயே, புலவர் குழந்தை கி. பி. 1946–ல் "இராவண காவியம்' எனும் சிந்தனைக்கு விருந்தாக அமையக் கூடிய பாவியத்தைப் படைத்தார்.

எந்தமிழன் செந்தமிழ்க்கா வாழ்ந்த இரா
வணன் பெருஞ்சீ ரினிது பேசும்
செந்தமிழின் பூங்காவாம் இராவண காவியம்[32]

என்று புலவரே, தம்முடைய காப்பியத்தைப் பற்றித் தெரிவிக்கிறார்.

"இராவண காவியம், முன்னாள் கவி, தம் நோக்கத்துக்காக இராவணன் மீது ஏற்றிய இழிகுணங்களையும். கொடுஞ்செயல்களையும் களைந்தெறியவும் இராவணனுடைய தூய்மைக்கு ஆதாரமான பல புகலவும், அதே போல,இராமனுடைய குணம், செயல் ஆகியவற்றிலே

32 இராவண காவியம், பக. 11;

காணக்கிடக்கும் தவறுகளைத் தெளிவுபடுத்தவும் தோன்றிய நூலாகும்"[33] என்று அறிஞர் அண்ணா செய்துள்ள அறிமுகம் இங்குக் கருதத்தக்கதாகும்.

தமிழ்த் தேசிய உணர்வு 'இராவண காவியத்தில் பொங்கி வழிகிறது.

நாடெல்லாம் புலவர் கூட்டம்
நகரெலாம் பள்ளி யீட்டம்
வீடெலாம் தமிழ்த்தாய்க் கோட்டம்
விழவெலாந் தமிழ்க்கொண் டாட்டம்
பாடெலாம் தமிழின் தேட்டம்
பணையெலாம் தமிழ்க் கூத்தாட்டம்
மாடெலாம் தமிழ்ச் சொல் லாட்டம்
வண்டமி ழகத்து மாதோ! 1[34]

என்னும் பாடல்களைப் போல, தமிழுணர்வை ஊட்டும் பாடல்கள் மிகப் பலவாகத் 'தாய்மொழிப் படலத்தில் இடம் பெற்றுள்ளன.

இராவணனுடைய செங்கோல் சிறப்பினை

நல்லது தீயது நாடி, நாடொறும்
அல்லது நீக்கியே நல்லது ஆக்கியே
மல்லலந் தாமரை மாலை தாங்கிய
கல்லிவர் தோளினான் இனிது காத்தனன் 2[35]

என்று புலவர் குழந்தை போற்றிப் பாடியுள்ளார்.

பொதுநிலையில் கற்பனை வளமும், கவித்திறனும் வாய்ந்த 'கண்ட காப்பியமாக' இதனைக் குறிப்பிடலாம். இந்நூற்றாண்டில் இயற்றப்பட்ட மாபெரும் தமிழ்க் காப்பியமாக அறிஞர் இதனைப் போற்றுகின்றார்.

---

33 ஷெ பக்.16
34 இராவண. 6:20
35 ஷெ. இரா.39

பூங்கொடி

கவிஞர் முடியரசனின் காப்பியப் படைப்பு 'பூங்கொடி'. 'மணிமேகலை' எனும் பண்டைக் காப்பியத்தின் தலைவி, பௌத்த சமயத்திற்குப் பணி செய்வதைப் போன்று, 'பூங்கொடி' எனும் காப்பியத்தின் தலைவி 'தமிழ்ப் பணி' செய்கிறாள். இக்காப்பியத்தின் நோக்கும் போக்கும் சாத்தனாரின் 'மணிமேகலை'யை அடியொற்றி செல்லுகிறது.

ஆனால், மணிமேகலைக் காப்பியத்தின் நிகழ்ச்சிகளுள் ஒன்றைத்தேர்ந்துஎடுத்து,அதனைவிரித்துஇக்காப்பியம்காட்டவில்லை. இதனால், 'பூங்கொடியை'க் கண்ட காப்பியம்' எனக் கருத இயலாது. எனினும், மணிமேகலையின் 'மறுபதிப்பாக' கவிஞர் முடியரசனுடைய 'பூங்கொடி' விளங்குகிறது என்பதை மறுக்க இயலாது.

பாண்டிமாதேவி

பொற்கிழிக் கவிஞர் அரு. சோமசுந்தரன் இயற்றியுள்ள குறுங்காவியம் 'பாண்டிமாதேவி' அறுபத்து மூன்று நாயன்மார்களுள் ஒருவரான 'மங்கையர்க்கரசி எனும் 'பாண்டிமாதேவியின்' செயற்கருஞ் செயல்களை புத்துலகச் சிந்தனையோடு இணைத்து, சொல்லோவியமாகத் தீட்டியுள்ளார் கவிஞர்.

தேவாரம் பாடிய மூவருள் முதல்வராகப் போற்றப்படும் திருஞானசம்பந்தரே, 'வளவர்கோன் பாவை. வளைக்கை மானி' என்று பாண்டியன் நின்றசீர் நெடு மாறனுடைய பட்டத்து அரசியான மங்கையர்க்கரசியைப் பாராட்டிப் பாடியுள்ளார்.

சேக்கிழாருடைய திருத்தொண்டர் புராணத்தில் 'மங்கையர்க்கரசியார்' வரலாறு, தனிப் புராணமாக மூன்றே பாடல்களில் சுருக்கமாக எடுத்துரைக்கப்படுகிறது.

மங்கையர்க்குத் தனியரசி எங்கள் தெய்வம்[36]

---

36 பெரிய புராணம், மங்கையர். 1.

வளவர்திருக் குலக்கொழுந்து வளைக்கை மானி எனவும்,[37]

தென்னர்குலப் பழிதீர்த்த தெய்வப்பாவை எனவும் பலவாறு சேக்கிழார் சித்தரித்துள்ளார்.

பெரியபுராணத்தில், இந்த அம்மையாருடைய வரலாறு, திருஞானசம்பந்தரின் புராணத்திலும், அவளுடைய கணவரான பாண்டியன் நின்றசீர் நெடுமாறன் வரலாற்றிலும் பின்னிப்பிணைந்துள்ளது.

கி.பி. ஏழாம் நூற்றாண்டில்,சமயப் போராட்டச் சூறாவளிக்கு இடையில், சைவசமயப் பணிபுரிந்தவர் இப்பாண்டிமாதேவி! மதுரையை ஆண்ட மங்கை நல்லார் நால்வர்.தொல்பழங்காலப் புராணக் கதையாகிவிட்ட 'தடாதகை பிராட்டி' எனப்படும் மீனாட்சி, மதுரையை ஆண்ட முதல் பேரரசியாவாள்.[38]

அடுத்தநிலையில், கி.பி. ஏழாம் நூற்றாண்டில் மதுரையை ஆண்ட பராங்குசன் நெடுமாறனுடைய பட்டத்தரசியான மங்கையாக்கரசி குறிப்பிடத்தக்கவர்.

இந்த அரசி மணி முடி தரித்து மதுரையை ஆட்சி செய்ய வில்லை. எனினும், தன் கணவனுடைய ஆட்சி வலிவும், பொலிவும், பெற உற்றதுணையாக இருந்து, ''இருந்தமிழ் நாடுற்ற இடரினை நீக்கினார்". சமயப்பணி புரிந்து, பேரரசை நிலைகுலையாமல் கட்டிக்காத்த பெருமை இப்பாண்டிமாதேவிக்கு உண்டு.

நாயக்க மன்னர் ஆட்சிக் காலத்தில் (கி.பி. பதினேழாம் நூ.ஆ.), இராணி மங்கம்மாள், இராணி மீனாட்சி மதுரையை ஆண்டனர்.

---

37 ஷெ. 2

38 இவளைப்பற்றிய பழங்கதையைச் சந்திரகுப்த மௌரியனின் அவையை அலங்கரித்த' மெகஸ்தனிஸ்' எனும் கிரேக்க தூதன் குறிப்பிட்டுள்ளான்.

இத்தகைய வரலாறு படைத்த மதுரை மாநகரின் ஆட்சிக்குத் திருஞானசம்பந்தர் காலத்தில் மூலகாரணமாக விளங்கியவர் மங்கையர்க்கரசி. அவருடைய வாழ்வையும், தொண்டையும் சித்திரிக்கும் வகையில்,'பாண்டிமாதேவி"யைப் படைத்துள்ளார் கவிஞர் அரு. சோமசுந்தரம். நான்கு காண்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது இப்பாவியம், கற்பனை வளமும் செந்தமிழ் நடை நலனும் வாய்ந்த இக்குறுங்காவியத்தை, சிறப்புமிகு 'கண்டகாவியமாக'ப் போற்றலாம். பலவகையில், பாரதியாரின் 'பாஞ்சாலி சபதத்'தோடு ஒப்பிடுவதற்குரிய இயல்புகளைக் கொண்டு விளங்குவது இக்காப்பியம்.

மாதவி காவியம்

புலவர் பொன்னிவளவனுடைய போற்றுதற்குரிய படைப்பு 'மாதவிகாவியம்'. இளங்கோவடிகளின் முத்தமிழ்க் காப்பியத்தின் 'இரண்டாவது தலைவி' எனப் போற்றுவதற்குரிய ஏற்றம் பெற்றவள் மாதவி. அவளுடைய அரசபோக வாழ்க்கை கண்ணீர்க் காவியமாக முடிந்து விடுகிறது.

சிலம்பினைக் கற்பவர் உள்ளத்தைக் கவரும் பண்பு நலன் வாய்ந்தவள் மாதவி.'அவள் குற்றவாளியா?' எனும் வினாவினை ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பே, தமிழுலகம் எழுப்பியது.

இத்தகைய சிறப்புமிகு மாதரசி மாதவியின் வரலாற்றை, 27 பகுதிகளில், புலவர் பொன்னிவளவன் விரித்துரைத்துள்ளார். "மொத்தத்தில் சுவைமிக்க பழக் கூட்டாக அமைந்து இருக்கும் 'மாதவி காவியம்' கவிதைப் பிரியர்களின் நெஞ்சங்களை மகிழ்விக்கும். பாவை மாதவி அன்று கோவலனை மகிழ்வித்தாள்; இந்தப்பாவியல் மாதவி, இன்று தமிழ் மக்களை மகிழ்விப்பாள்"[39] என்னும் கருத்துரை சிறந்ததொரு மதிப்பீட்டுரையாகும்.

---

39 மாதவி காவியம், கலைஞரின் அணிந்துரை.

பாஞ்சாலி சபதத்திற்குப் பிறகு தோன்றிய மேற்கண்ட காவியங்களில் எல்லாம் காண இயலாத ஒரு தனிச்சிறப்பு, இந்த மாதவி காவியத்திற்கு உண்டு. உணர்ச்சித் துடிப்போடு கூடிய, கலையழகு வாய்ந்த "உயிரோவியங்கள்" பலவற்றைப் பொன்னி வளனுடைய "மாதவி காவியத்தில்" கண்டு மகிழலாம். அறிமுகப் பகுதியில், மாதவியின் தாயான சித்திரா பதியை,

... அவள் செல்வப் பொது மகள்
நித்திரை நீக்கி நேசிப்பவர் வாய்
முத்திரை எச்சிலால் முகமெலாம் நனைபவள்
பத்தரை மாற்றுப் பசும்பொன் மேனியால்
சொத்துடை யார்வரின் சுகம்தர இணைபவள்
எத்திறத் தோரும் இரவிலே படுக்கும்
சத்திரம் போல்பொதுச் சரித்திரம் படைப்பவள்!
'பத்திரம் கற்பு' எனப் பதிவுசெய் யாத
பத்திரம் அவளோ பதறிட மாட்டாள்![40]

என்னும் அடிகளில், நம் மனக் கண்முன்னால், உயிர் பெற்ற ஓவியமாகக் கொண்டு வந்து நிறுத்துகிறார் கவிஞர்.

மாதவியின் புலம்பலாக அமைந்துள்ள பகுதி உள்ளத்தை நெகிழ்விப்பதாகும்:

உங்கள் மனைவியென ஊரறிய வாழாமல்
இங்குவந்து நான் பிறந்த என்குலத்தால்
கெட்டேனே!
வாழ்வதற்குப் போனதுவாய் வந்தவர்கள் சொன்னார்கள்!
'வாழ்வெதற்கு?' என்றேநீர் வஞ்சித்துப்
போய்வீட்டீர்!

காவியமே! நீர் எம்கண் காணாமல் போனதுவா?
ஓவியமே! ஊர்விட்டு ஊர்சென்று சாவதுவா?[41]

எனும் பகுதி, மாதவியின் துன்பத்தை நம் துன்பமாக உணர வைக்கின்ற ஆற்றல்மிகு கவிதைச் சொல்லோவியமாகும்.

---

40 மாதவி காலியம், பக். 1
41 மாதவி காவியம், 57

இந்த 'மாதவி காவியத்தைக் குறுங்காவியம் எனக் கூற இயலாது.சின்னஞ்சிறு காவியம்' – 'காப்பியத் துணுக்கு' எனப் பலவாறாகக் கூறலாம். ஆனால்.

இப்போது துறவி! அவள் எப்போதும் துறவி! இனி
ஒப்பேது அவளுக்கு உலகலத்துப் பெண்களிலே![42]

எனத் தம் காவியத்தைக் கவிஞர் நிறைவு செய்துள்ளார் இதே அடிகளைச் சிறிது மாற்றி,

இப்போது கவிஞர்! அவர் எப்போதும் கவிஞர்! இனி
ஒப்பேது அவருக்கு உலகத்துக் கவிஞர்களிலே!

என அமைத்தால், புலவர் பொன்னிவளவனுடைய கவித் திறனை உணர்ந்து போற்றுபவராவோம்.

பாரதிக்குப் பிறகு தமிழில் வளர்ந்துள்ள குறுங் (கண்ட) காவிய மரபு, இந்திய இதிகாசங்களான இராமாயண பாரதக் கதைகளின் "சிறு நிகழ்ச்சிகளை" அல்லது 'சிறு கிளைக்கதைகளை' விரிவுபடுத்திப் புத்துலகச் சிந்தனைக்குப் பொருத்தமான புதிய எண்ணவோட்டங்களைச் சேர்த்துப் புதிய கருத்தோவியங்களாகத் தீட்டிக் காட்டுகிறது. அடுத்துத் தமிழிற்கேயுரிய தனிச்சிறப்பு 'சிலப்பதிகார மணிமேகலை' காப்பியங்களின் கவின்மிகு பகுதிகள் சிலவற்றைச் சிந்தனைக்கு விருந்தாக அமையும் வகையில் விரித்துரைப்பதைக் காணுகின்றோம். பெரிய புராணமும் பயன்படுத்தப்பட்டுள்ளது நினைவு கூர்தற்குரியதாம்.

உருவகக்கதை

தான் உணர்த்த விரும்பும் சில நுட்பமான கருத்து களைக் கவிஞர்கள் உருவகித்துக் கூறுவது உண்டு. அல்லது சுற்றி வளைத்து ஒரு கருத்தினை அறிவுறுத்துவர். அக் கதைகளில் இருவகைப் பொருள்கள் ஊடாடி நிற்கும். ஒன்று வெளிப்படையாகவே பொருள் புலப்படுத்துவதாகும்.

---

42 ஷெபக்.58

மற்றொன்று உட்பொருள் அல்லது மறை பொருள் பயப்பதாகும். பெரிதும் இந்த உருவக அமைப்பு, கதைகளுக்குப் பொருந்தி வருவதாகும். கதையைப் படிக்கலாம்; பொருளைப் புரிந்து கொள்ளலாம்; இரண்டு நிலையிலோ சில சமயங்களில் மூன்று நான்கு நிலைகளிலோ அதற்குப் பொருள் விளக்கம் தரலாம். இதனை 'அலிகரி' (Allegory) என்பர். இவ்வாறு பலபொருள் பயக்கும் உருவகக் கதைகள் பெரிதும் பழங்கதைகளாசு, பறவை விலங்கு கதைகளாக அல்லது நீதிக் கதைகளாக இருக்கும்.

இவை எளிமையான கதைக்கரு உடையன எனவும், சிக்கலான கதைக்கரு உடையன எனவும் இருவகைப்படும். பல கதை நிகழ்ச்சிகள் ஒன்றாகத் தொகுக்கப்பட்டு உருவகப்படுத்தப்படும்பொழுதுசிக்கலானகதைக்கருக்களைக் கொண்ட உருவகக் கதைகள் அமையும்.[43] இவற்றோடு தொன்மையக் கூறுடைய கதைகளும், புராணக் கதைகளும் பின்னிப் பிணைக்கப்படுகின்றபொழுது, மிகச்சிக்கலான உருவகக்கதைகள் வெளிப்படும்.

பண்டைக்காலத் தமிழ் இலக்கியத்துள், இம்முறையில் அமைந்தவை இருப்பதாகத் தெரியவில்லை. சில நூற்றாண்டுகளுக்கு முன்பு இயற்றப்பட்ட அஞ்ஞவதைப் பரணி பிரபோத சந்திரோதயம் போன்ற இலக்கியங்களைச் சான்றாகக் காட்டலாம்.

புதுநெறி காட்டிய புலவரான சுப்பிரமணிய பாரதியார், இயற்றியுள்ள 'குயில் பாட்டு' இந்நூற்றாண்டில், தமிழில் தோன்றியுள்ள மிகச்சிறந்த 'உருவகக் கதைப் பாடலா'கும். குயில் பாட்டினை முடிக்குந்தருணத்தில்,

"ஆன்ற தமிழ்ப் புலவீர்! கற்பனையே யானாலும்
வேதாந்த மாக விரித்துப் பொருளுரைக்க
யாதானுஞ் சற்றே இடமிருந்தால் கூறீரோ?"

என்று பாரதியாரே வேண்டுகோள் விடுத்துள்ளதாகக் கருத்தில்

---

43 Princeton Encyclopaedia of poetry & Poetries, P. P. 12–13

கொண்டு குயில்பாட்டைத் திரும்பத் திரும்பப்படிப்போமானால் நமக்கே ஒருவகை மயக்கம் உண்டாகும். சிந்திக்கத் தெரிந்த இலக்கிய கலைஞர்களுக்கு ஓயாத எண்ணப் போராட்டத்தை உண்டாக்கும் ஆற்றல் வாய்ந்தது பாரதியின் குயில்பாட்டு.

குயில் பாட்டு நூலாக வெளிவந்து இன்று எழுபது ஆண்டுகளுக்கு (1912–1983) மேலாகிறது. அதனைப் பாடிமகிழ்ந்தவர்கள் படித்து சுவைத்தவர்கள் பல்லாயிரக் கணக்கானவர்களாவர். பாரதியாரின் அறைகூவலை ஏற்று, அதற்கு உட்பொருள்காண – தத்துவார்த்தம் கூறத் தலைப்பட்ட அறிஞர் பலராவர். அவர்களுடைய கருத்துகளைத் தொகைவகைப்படுத்தினால் மூன்று முக்கிய உட்பொருள்கள் கூறப்படுவதை அறியலாம்.

குயில் இறைவன். கவிஞனே ஜீவான்மா. குரங்கு, எருது வேடன் போன்றோர் கவிஞனின் காதலுக்குத் தடையாக உள்ளனர். இவற்றை உலகியலாக 'மாயை' என்பர். பல பிறவிகள் எடுத்துவினையை அறுத்து,சீவான்மாவாகிய கவிஞன், ஞானவாளின் உதவியால் பரமான்மாவாகிய இறைவனோடு இரண்டறக் கலந்து விடுகிறான் என்பது பலர் கொடுத்துள்ள விளக்கமாகும். இதனை வேதாந்த நெறிப்பட்ட அத்துவித விளக்கமாகப் பேராசிரியர் தெ.பொ.மீனாட்சி சுந்தரனார் கூறுவார்.

மற்றொரு வகையான விளக்கம் சித்தாந்த அடிப்படையில் அமைந்ததாகும். குயிலாகிய ஆன்மா, ஆணவம், கன்மம், மாயை ஆகிய குரங்கு, எருது, வேடன் எனும் தடைகளை, இறைவன் திருவருளால் வெற்றி கொண்டு மெய்யுணர்வு பெற்றபின் இறைவன் திருவடிகளில் அடைக்கலம் அடைந்து விடுகிறது என்பர். பசுவாகிய குயில், பாசம் நீங்கப்பெற்று, பதியாகிய இறைவனை அடைவதையே குயில்பாட்டு உணர்த்துவதாகக் கூறுவர்.

இன்னொருவகை விளக்கத்தை, உளவியல் அறிஞர் பிராய்டின் (S. Freud) உள நிலைப்பகுப்பாய்வு (Psycho analysis) நோக்கில் தரலாம். மனிதனுடைய நிறைவேறாத ஆசைகளும், ஏமாற்றங்களும் உள்ளத்தில் கொந்தளிப்பை உண்டாக்குகின்றன. இந்தக் கொந்தளிப்பிற்கு மனிதனது அடிமனத்தில் (Id) பலவகை உணர்வுகள் 'நீறுபூத்த நெருப்பாக' நெடுங்காலம் உறங்கிக் கொண்டு இருக்கும். இவ்வுணர்ச்சிப் போராட்டத்தால் அலைக்கழிக்கப்படும் மனிதனுக்குப் படைப்புத்திறன் இருக்குமானால், தன்னுடைய உணர்ச்சி உந்துதல்களைச் சிறப்புமிகு கற்பனை வளம் வாய்ந்த கதைப்படைப்புகளை உருவாக்குவதற்குப் பயன்படுத்துவர். இதனை 'மடைமாற்றம் செய்தல்' (Sublimation) என்பர் பிராய்ட்.

நினைவு உலக வாழ்க்கையில் அடைய முடியாதவற்றை இந்த மடை மாற்றத்தின் மூலம் 'கனவுலக வாழ்க்கையில்" அனுபவித்து, மனநிறைவு பெற இயலும் என்பது அவருடைய துணிவு கலைப் படைப்புகளை உருவாக்கும் பொழுது நனவிலி மனமாகிய (Sub conscious mind) அடி மனத்தில் ஆற்றல் மிகுதிப்படுகிறது. என்றோ அதில் பதிந்துவிட்ட எண்ணங்களும், ஏக்கங்களும், ஏமாற்றங்களும் வெவ்வேறு வகையான வடிவங்களில் வெளிப்படுகின்றன என்பது பிராய்ட் தரும் விளக்கமாகும்.[44]

இந்தப் பின்னணியில் சுப்பிரமணிய பாரதியாரின் வாழ்க்கை வரலாற்றையும், அவருடைய கலைப் படைப்பான குயில் பாட்டையும் இணைத்துப் பார்ப்போமானால், குயில் பாட்டில் பொதிந்துள்ள சில "புதிர்கள்" விடுபடலாம்; அந்த உருவகக்கதையின் மூலம் பாரதியார் வெளிப்படுத்த விரும்பிய செய்தியை ஒருவாறு உய்த்து உணரலாம்.

'காதலினால் சாகாமல் இருத்தல் கூடும்; ஆதலினால் காதல் செய்வீர் உலகத்தீரே!" என்று பாரதியார் வேண்டுகிறார்."மாலையழகின் மயக்கத்தால் உள்ளத்தே

---

44 Signmund Freud,

தோன்றியதோர் கற்பனையின் சூழ்ச்சி"யே குயில் பாட்டு" என்பதை அவர் ஒப்புக் கொள்கிறார். அதனை பாவலர்க்குப் பட்டப்பகலில்தோன்றும்நெட்டைக்கனவால்'உருவாகியதாகக் கூறுகிறார். இது எதை உணர்த்துகிறது? நனலிலி மனத் (Sub–conscious mind) தின் செயற்பாட்டை புலப்படுத்துகிறது.

பாரதியாரின் அச்சான முதல் பாடல் (1904) 'தனிமை இரக்கம்' என்பதாகும்.[45] அப்பாடலிலேயே 'குயிலனாய்' என்னும் விளியோடு தொடங்குகிறது. பிள்ளைப் பருவத்தில் (சிறுவனாக இருந்தபொழுது), அவரோடு சேர்ந்து ஆடியும், பாடியும், படித்தும் மகிழ்ந்த ஒரு பெண் தனக்கு எட்டாத நெடுந்தொலைவில் கிட்டாதப் பொருளாகப் போய்விட்டதை நினைந்து நினைந்து தனிமையில் துன்பம் அடைவதையே இக் கவிதை எடுத்துரைக்கிறது,

பாரதியாருடைய 'ஸ்வ சரிதை 'யில், அவருடைய இளமைக் காலத்திய காதலை ஒளிவுமறைவு இன்றிப் பாடியுள்ளார்.

கன்னி மீதுறு காதலி னேழையேன்
கவலை யுற்றன கோடியென் சொல்லுகேன்?[46]

∴ ∴ ∴

கான கத்தில் இரண்டு பறவைகள்
காத லுற்றது போலவும் ஆங்ஙனே
வான கத்தில் இயக்கர் இயக்கியர்
மையல் கொண்டு மயங்குதல் போலவும்
தேன கத்த மணிமொழி யாளொடு
தெய்வ நாட்கள் சிலகழித் தேன்அரோ[47]

எனும் பாடல்களில், அவருடைய காதலியைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.

---

45 மகாகவி பாரதி நூல்தொகை,பக்.21
46 பா. சுவி. பக்.280
47 ஷெ. பக்.281

மற்றும், ஒரு திருவாதிரைத் திருநாள் அன்று. கோயிலின் ஒருபுறத்தில் இருவரும் மனம்விட்டு மகிழ்ந்து பேசிக் கொண்டு இருந்ததையும், அப்பொழுது அவள், திருவாதிரைத் திருநாள் மையைக் கொண்டு தன்னுடைய நெற்றியில் பொட்டு இட்டதையும் ஏக்கப் பெருமூச்சுடன் கவிஞர் பாடியுள்ளார்.[48]

ஆங்கிலக் கல்வியைப் பயிலுவதற்குப் பாரதியாரைத் திருநெல்வேலிக்கு அனுப்பிவிட்டனர். கல்வி பயிலுவதில் அவருக்கு மனம் செல்லவில்லை. இதனை

அருமை மிக்க மயிலைப் பிரிந்துமிவ்
வற்பர் சுல்வியில் நெஞ்சு பொருந்துமோ?[49]

என்று அவரே தெரிவிக்கிறார்.

பிறகு, தந்தையின் வற்புறுத்தலால் செல்லம்மாளைத் திருமணம் செய்துகொண்டார் பாரதி. இதனை,

ஆங்கொர் கன்னியைப் பத்துப் பிராயத்தில்
ஆழ நெஞ்சிடை வூன்றி வணங்கினன்;
ஈங்கொர் கன்னியைப் பன்னிரண் டாண்டனுள்
எந்தை வந்து மணம்புரி வித்தனன்;
தீங்கு மற்றிதில் உண்டென்று அறிந்தவன்
செயல் எதிர்க்குந் திறனிலன் ஆயினேன்;
ஒங்கு காதல் தழல்எவ் வளவு என்தன்
உளம்எ ரித்துளது என்பதும் கண்டிலேன்

மற்றோர் பெண்ணை மணம் செய்த போழ்து முன்
மாத ராளிடைக் கொண்டதொர் காதல் தான்
நிற்றல் வேண்டும் எனவுளத்து எண்ணிலேன்;
நினைவை யேஇம் மணத்திற் செலுத்திலேன்
முற்றொ டர்பினில் உண்மை இருந்ததால்
மூண்ட பின்னதோர் கேளிஎன்று எண்ணினேன்;
சுற்றும் கேட்டும் அறிவு முதிருமுன்
காதல் ஒன்று கடமை ஒன்று ஆயின[50]

---

48 பா. கவி. பக். 282

49 ஷெ "".

50 ஷெ பக் 236.

என்று வருத்தத்தோடு பாரதியார் பாடியுள்ளார்.

தன்னுடைய அறியாப்பருவத்து உண்டான காதல் சரிந்துபோனது அவருடைய உள்ளத்தில் ஆழப்பதிந்து போய் இருக்கிறது. வண்டல்மண் அடியில் படிவது போல், வாழ்க்கையின் தொடக்கத்தில் பெற்ற அனுபவம் அவருடைய அடிமனத்தில் படிந்து போய் இருக்கிறது. பிற்காலத்தில், அந்த இளம் வயது 'இன்பக்காதல்' பற்றிய ஏக்கம், பாரதியின் நாடிநரம்புகளைத் தாக்கி இருக்கிறது. பழைய நினைவுகளால் உந்தப்பட்ட பொழுதெல்லாம். 'இழந்தகாதலை'ப்பற்றியகனவுகளை அவர் கண்டுள்ளார். 'அழகுத் தெய்வம்' எனும் கவிதையில் 'மங்கியதோர் நிலவினிலே, கனவில் இது கண்டேன்; வயது பதினாறு இருக்கும்; 'இளவயது மங்கை' எனும் பாடலில் 'பொங்கி வரும் பெருநிலவு போன்ற ஒளிமுகம் உடையவளாகக் காட்சிதருவது தன்னுடைய பழைய காதலியைப்பற்றிய கற்பனை ஓட்டத்தில் உண்டான உருவெளித் தோற்றமாக இருத்தல் கூடும்.

இத்தகைய காதல் – காதலி பற்றி வருணனை,ஏக்கம், போற்றுதல் பாரதியின் கவிதைகளில் எல்லாம் ஊடுருவிச் செல்லுகின்றன . புதுச்சேரியில் வறுமையில் வாடிய காலத்தில் உலகத்துன்பத்தை மறப்பதற்குத் தன் பழைய காதல் வாழ்வைப் பற்றிய எண்ணங்களை, அவருடைய மனம் அசைபோட்டுக் கொண்டே இருந்திருக்கலாம்.

அந்நிலையில் 'காதலியைக் கைவிட்டு உயிர் வாழ்வது கொடிய செயல்' எனும் உணர்வு மேலீட்டால் மனமுறிவு' அவருக்கு உண்டாகி இருக்கவேண்டும். இதன் விளைவாகவே

காதல்! காதல்! காதல்!
காதல் போயின், காதல் போயின்
சாதல்! சாதல்!சாதல்![51]

வேண்டும் என அவர் ஒல மிடுகிறார்! இந்தப் பின்னணியில், குயில் பாட்டை ஆராய்வோ மானால், சில உண்மைகள் வெளிப்படும்.

---

51 பா.கவி. பக் 290.

பாரதியாரின் பாடல்களில், 'குயில்' என்பது ஒரு குறியீட்டுப்பொருளாகவே பயன்படுத்தப்பட்டு இருக்கிறது.

கவிதையாம் மணிப்பெயர்க் காதலியை அழைக்கும் பொழுது,

பூம்பொழில் குயில்களில் நின்குரல் போன்ற
தீங்குரல் உடைத்தோர் புள்ளினைத் தெரிந்திலேன்.[52]

என்று தெரிவிக்கிறார்.

கலைமகளை 'வெள்ளைத் தாமரைப் பூவில் இருப்பாள்' எனப்பாடும் பொழுது

கீதம்பாடும் குயிலின் குரலைக்
கிளியின் நாவை இருப்பிடம் கொண்டாள்[53]

என்று கீதமினிய குயிலைக் குறிப்பிட்டுள்ளார்.

'காணி நிலம் வேண்டும்' எனும் கவிதையில்
அங்குக்
சுத்தும் குயிலோசை சற்றே வந்து காதிற் பட வேணும்[54]

என்று குயிலின் இசையைக் கேட்டுக் கொண்டே இருக்க வேண்டும் எனும் தன்னுடைய ஆவலைப் புலப்படுத்துகிறார்

இவ்வாறு குயிலைப் பற்றிய குறிப்புகள் பாரதியின் பாடல்களில் மிகப்பலவாக இருப்பதைக் காணலாம். தம்முடைய காதலி, இனிமையாகப் பாடுவதில் சிறந்து இருந்ததைக் கருத்தில் கொண்டு, அவளைக் குயிலாக உருவகப்படுத்தி, வாய்ப்பு கிடைக்கும் இடம் எல்லாம் தம்முடைய கவிதையில் பொன்றாப்புகழ் பெற்று விளங்கச் செய்துள்ளது போல் தோன்றுகிறது.

இந்த நோக்கில், குயில் பாட்டை அணுகி ஆராய்வோம். குயில்– காதலி; கவிஞன்– பாரதி; வேடன் – தந்தை; குரங்கும்மாடும் –சமுதாயக் கொடுமைகள்; அரசிளங்குமரன்

---

52 பா.கவி. பக் 473
53 ஷெ. பக்.2
54 ஷெ. பக்.73

– காதலியின் கணவன் எனக் கொள்ளலாம். இதனால், பாரதியாரின் குயில்பாட்டு, காதலிலே தோல்வியுற்ற காளை ஒருத்தன். இழந்த காதலை காதலியை எண்ணியெண்ணி ஏங்கி வாடும் உள்ளத்தோடு துன்புறுவதை மடைமாற்றம் செய்யும் வகையில், அதைக் கற்பனை வண்ணத்தில் குழைத்துச் சிறப்புமிக்க 'காதற் காப்பியமாக'ப் பாரதியார் படைத்துள்ளார் என்பது புலனாகும். உள்ள நிலைப்பகுப்பாய்வு (Psycho – Analysis) முறைக்குப் பல வகையிலும் பொருந்தி வரக் கூடியதாகவே இப்பாடல் அமைந்துள்ளது.

எனவே, பாரதியாரின் முப்பெரும் பாடல்களுள் ஒன்றான, 'குயில் பாட்டினை'ச் சிக்கல் வாய்ந்த உருவகப் பாட்டாகக் கூறலாம்.

சஞ்சீவி பர்வதத்தின் சாரல்

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் இயற்றியுள்ள கதைப் பாடல்களுள் இந்தப் பாடல் ஒரு புது வகையானது. ''சஞ்சீவிபர்வதத்தின் சாரல்" என்பது பாரதியின் குயில் பாணியில் எழுதப்பட்டிருக்கிறது; சிலஇடங்களில் அழகாக இருக்கிறது"[55] என்று நாற்பது ஆண்டுகளுக்கு முன்னர் கு.ப.ராஜகோபாலன் மதிப்பீடு செய்துள்ளார். இதனை அங்கதக் கதைப் பாடலாக இக்கால ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.[56]

இந்தப்பாடலில் 'மூலிகை'யே முதலிடம் பெறுகிறது. மூலிகையை உண்டதன் வாயிலாக, பிறநாட்டார்களுடைய பேச்சுகளை எல்லாம் குப்பன், வஞ்சி எனும் கதை மாந்தர்கள் கேட்டு அதிர்ச்சி அடைகின்றனர். சமுதாயச் சீர்கேடுகளைக் கற்பவர் உள்ளத்தில் பதியுமாறு செய்வதற்கு இத்தகைய உத்தியைப் பாவேந்தர் பின்பற்றியுள்ளார். இப்பாடலின் நோக்கும்

---

55 ப.முத்தையா, புரட்சிக் கவிஞர், (தொகுப்பு) பக்.81

56 ச.சு. இளங்கோ, பாரதிதாசனின் கதைப் பாடல்கள்: ஓர் ஆய்வு, பக்.70.

போக்கும், 'உருவகப்பாடல்' முறையில் இருந்து முற்றிலும் வேறுபடுகிறது.

பாவேந்தரின் உருவகப்பாடல்கள்

குயில்' இதழில் அவ்வப்போதுபாவேந்தர் சில உருவகப் பாடல்களை வெளியிட்டுள்ளார், அவற்றுள் 'விடுதலை வேட்கை உயிரின் இயற்கை'யெனும் பாடல் இங்குக் குறிப்பிடத்தக்கது. பணக்காரர் ஏழைமக்களை நாய்களாக உருவகப்படுத்திப் பாவேந்தர் இதனைப் படைத்துள்ளார். மாடிவீட்டு வெள்ளை நாயும், தெருவில் திரியும் கறுப்பு நாயும் உரையாடுகின்றன. வெள்ளை நாய்க்கு உரிமை இல்லை; ஆனால், கறுப்பு நாய்க்குப் பசிக்கு உணவு கிடைப்பது இல்லை. ஆனால் மனம்போன போக்கில் சுற்றுவதற்குக் கட்டுப்பாடு இல்லை என்பதே இக்கதையின் அடிப்படையாகும்.

இதைவிட, 'வீட்டுக் கோழியும் காட்டுக் கோழியும்' எனும் உருவகப்பாடல் ஓரளவிற்குக் கவர்ச்சியுடையதாக அமைந்து இருக்கிறது. உரிமை பறிபோன மனித வாழ்க்கையையும், சுரண்டல் நோக்கோடு சில மனிதர்கள் ஆதிக்கவாதிகளால் வசதியாக வாழ வழி செய்து தரப்படுவதையும் இக்கதை சித்திரிக்கிறது.[57]

கருத்து விளக்கத்தைத்தவிர, கதைப் பண்போ. கற்பனை வளமோ இப்பாடல்களில் இடம்பெறவில்லை. 'சஞ்சீவிபர்வதத்தின் சாரல்' கற்பனை வளமிக்க கவிதைச் சுரங்கம். ஆனால், உருவகப்பாடலாகத் தோன்றவில்லை.

இவற்றை எல்லாம் தொகுத்து நோக்குகின்றபொழுது பாவேந்தரின் படைப்புகளில் உருவகப் பாடல்கள்' போற்றத் தக்கனவாக அமையவில்லை. பாரதியாருடைய 'குயில் பாட்டின்' தாக்கமோ, உந்துதலோ இவற்றில் இடம் பெற்று இருப்பதாகவும் தெரியவில்லை.

---

57 ச.சு. இளங்கோ, மு.கு.நூல் : பக் 79–81

கண்ணப்பன் கிளிகள்

கவிஞர் தமிழ் ஒளியின் வியத்தகு படைப்பு 'கண்ணப்பன் கிளிகள்' எனும் கவிதை நூலாகும். பாரதியாருடைய குயில்பாட்டின் தாக்கம், வெளிப்படையாகவே இந்தக்கவிதையில் தெரிகிறது. குணத்தையே ஆண்கிளியாகவும், குற்றத்தைப் பெண்கிளியாகவும் ஆசிரியர் உருவகப் படுத்தியுள்ளார்.[58]

"பாரதியாரின் குயிலுக்குப் 'பூர்வ ஜன்ம ஞானம்' இருந்தது. "என் கிளிகளுக்கு மனிதருடன் பரிச்சயமும் தமிழ்மொழியில் நல்ல ஞானமும் இருக்கின்றன" என்று கவிஞர் தமிழ் ஒளி [59]தெரிவிக்கிறார்.

இந்த இரண்டு கிளிகளும் கண்ணப்பன் என்பவனால் கூட்டில் அடைக்கப்பட்டுள்ளன. இதற்கு ஆசிரியர் தரும் உட்பொருள் விளக்கம் நம் கருத்தைக் கவருகிறது.

"குற்றமுள்ள இடத்தில் குணமும் இருக்கும் என்பதே இயற்கை. ஒரே கூட்டில் உள்ள இரு கிளிகளைப் போன்று, அவை ஒன்றையொன்று அடுத்தே இருக்கும். எனவே மனிதன் குற்றத்தை மன்னிக்கவும்,குணத்தைப் போற்றவும் கற்றுக் கொள்ளவேண்டும்"[60] என்பது இப்பாடலிற்குத் தரப்பட்டுள்ள தத்துவார்த்த பொருளாகும்.

பிராய்டினுடைய கோட்பாட்டின்படி, இப்பாடலை ஆராய்வோமானால், சில உண்மைகள் வெளிப்படும். ஆண்கிளி – கவிஞனுடைய நண்பன். பெண்கிளி–நண்பனின் காதலி; கண்ணப்பன்– காதலுக்குத் தடையாக இருக்கும், நயவஞ்சக நோக்கோடு நடந்து கொள்ளும் காதலனின் நண்பன்.

ஊரைவிட்டு ஓடிவந்துவிட்ட காதலருக்குத் (கிளிகள்) திருமணம் செய்து வைப்பதாகச் சொல்லி, தன்னுடைய வீட்டில் (கூண்டு) அந்த நண்பன் அடைத்துவைக்கிறான்; பிறகு நயவஞ்சக எண்ணத்தோடு காதலனை வெளியே

---

58 கண்ணப்பன் கிளிகள், பக் 12.

59 ஷெ. பக்.9

60 கண்ணப்பன் கிளிகள், பக்– 12.

அனுப்பிவிட்டுக் காதலியோடு சரசமாடத் துணிகிறான். இதையறிந்த பெண்,அந்த வீட்டை விட்டு ஓடிவிடுகிறாள். சிலநாள் கழித்துவந்த காதலன், காதலியைக் காணாது கதறுகிறான்; தேடுகிறான்: கிடைக்கவில்லை; நண்பன் நையாண்டி செய்கிறான்; காதலியைப் பிரிந்து வாழ விரும்பாத காதலன், தன்னுயிரை மாய்த்துக் கொள்ளுகிறான்.

எங்கெங்கோ தட்டுக் கெட்டு, அந்தப் பெண் காதலனைத் தேடி வருகிறாள். காதலன் இறந்த செய்தி அறிந்து திடுக்கிடுகிறாள்; அழுது புலம்புகிறாள். தன்னுடைய துன்பத்துக்கு, உதவி செய்வதாக உறுதி மொழி கூறி, பின்னர் கொடுமைபுரிந்த அந்த 'நண்பனே' காரணம் என்பதை உணர்ந்து, ஊரறிய அவனைப் பழித்து விட்டு, காதலி உயிர்விடுகிறாள். இதைக்கண்ட நண்பன் "காதலன் போனால் என்ன? நான் இருக்கின்றேனே? இவள் ஏன் இறக்க வேண்டும்?" என்று தன் தவறுக்காக வருந்துகிறான். இதுதான் 'கண்ணப்பன் கிளிகள்' உணர்த்தும் உட்பொருளாகும்.

பாரதியாரின் குயில்பாட்டின் சாயல், இந்த உருவகப் பாட்டிலும்' பதிந்துள்ளதைக் காணலாம்.

தைப்பாவை

கவியரசு கண்ணதாசனின் புதுமையான உருவகக் கவிதையே 'தைப்பாவை' தமிழ் மக்கள் சிறப்பாகக் கொண்டாடும் தை முதல் நாளான பொங்கலைச் சிறப்பிக்க, தை மாதத்தை முதலில் ஒரு பெண்ணாகக் கவிஞர் உருவகப்படுத்துகிறார். பிறகு அந்தத் தைப் பாவை'யைத் 'தமிழ்த் தாயாக'க் காணவும், காட்டவும் அவர் முயலுகிறார்.

முதலில் தைமாதத்தை
மார்கழிக்குப் பெண்ணாக
மாசிக்குத் தாயாகப்
பேர் கொழிக்க வந்த
பெட்டகமே! தைப்பாவாய்![61]

என்று கவிஞர் அறிமுகப்படுத்துகிறார்.

---

61 தைப்பாவை, பக். 13.

ஆனால், கவிஞரின் கற்பனை விரிந்து செல்லும் பொழுது, இப்பாடல் சிறப்புமிகு உருவகக் கவிதையாகக் காட்சி தருகிறது. "தைப்பாவையைப் பொருத்த மட்டில் அது பாட்டுத்தான்; காப்பியமன்று. தைப்பாவை என்பது பொங்கல் தெய்வம். பொங்கலைப் பெண்ணாக உருவகித்த கன்னித் தமிழன்னை வடிவம். எல்லாப் பொங்கல் வாழ்த்துகளையும்போல, ஒரு பொங்கல் தெய்வ வாழ்த்தாகத் தொடங்கப்பட்ட இக்கவிதை, அந்த உருவைத் தாண்டி, பாட்டு என்ற நிலையையும் தாண்டி ஒரு காப்பியம் தானோ என்று மலைக்கும் அளவிற்கு விரிந்துள்ளது" எனும் கா.அப்பாத்துரையாரின் கருத்துரை, இந்த உருவகப்பாட்டின் சிறப்பை எளிதில் உணர உதவும்.

பாரதியார் இயற்றியுள்ள குறுங்காப்பியமாகிய 'பாஞ்சாலி சபதம்' தமிழில் இந்த நூற்றாண்டில் இயற்றப்பட்ட சிறந்த கண்ட காப்பியமாகும்.[62] அதனுடைய அமைப்பும், கருத்து விளக்க முறையும் மற்றவர்களுக்கு ஒரு முன்மாதிரியாக அமைந்துவிட்டன. பாரதியார் காட்டியுள்ள இந்த இலக்கிய நெறியினைக் குறுங்காப்பியம் இயற்றுவோர் மட்டும் அல்லாமல், கதைப்பாடல் இயற்றும் கவிஞர்களும் இயன்றவகையில் பின்பற்றி வருகின்றனர். கண்ணதாசனின் 'ஐங்குறுங் காப்பியங்கள்' எனப்படும் கதைப்பாடல்களின் படைப்பு இதற்குச் சிறந்ததோர் எடுத்துக்காட்டாகும்.

உருவகப்பாடல்களை இயற்றுவோர் மிகக்குறைவானாவர்களாகவே உள்ளனர். பாரதிக்குப்பிறகு, இந்த இலக்கிய வகையை விரல்விட்டு எண்ணக் கூடிய மிகச் சிலரே – பாவேந்தரும்.தமிழ்ஒளியுமே–படைத்துள்ளனர்.இந்தஇருவரும் இயற்றியுள்ள உருவகப்பாடல்கள் நோக்காலும், போக்காலும் பாரதியின் குயில்பாட்டில் இருந்து வேறுபடுகின்றன. எனினும், இவற்றின் வடிவம், உருவக முறையில் அமைந்துள்ளன.

---

62 .நளவெண்பா, அரிச்சந்திர புராணம், குசேலோ பாக்கியானம் போன்ற பாரதிக்கு முற்பட்ட தமிழ் இலக்கியங்களும் இத்தகையனவேயாகும்.

பாரதியார் குயிலைத் தலைவியாகக் கொண்டு பாடியுள்ளதைப் போன்று, தமிழ் ஒளி, கிளிகளைத் தலைவன்–தலைவியாகக் கொண்டு, புதிய முறையில் உருவகப்பாடலை இயற்றும் செய்முறை முயற்சியில் ஈடுபட்டுள்ளார். இம்முயற்சியில் ஓரளவிற்கு அவர் வெற்றியும் பெற்றுள்ளார்.

கவியரசர் கண்ணதாசனின் 'தைப்பாவை' ஒரேவோர் உருவகத்தைக் கொண்டது; கதை மாந்தருக்கு இதில் பங்கில்லை. எளிய முறையில், பண்பாட்டு எழுச்சியூட்டத்தக்க வகையில், தைமாத முதல்நாளைப் பெண்ணாக, தெய்வமாக உருவகப்படுத்திக்காட்டுகிறார். கவிதையில் கற்பனை வளங் கொழிக்கிறது; கருத்துகள் துள்ளு நடைபோடுகின்றன; சொல்லாட்சி செஞ்சொற் கவியின்பம் பயக்குகிறது.

9

குழந்தைப் பாடல்கள்

தம் பாடல்களின் மூலம் புதியதொரு சமுதாயத்தைப் பாரதியார் படைக்க விரும்பினார். வளர்ந்த மக்களுக்கு அவர்களுடைய குறையை எடுத்துக் கூறித் திருத்திவிட்டால் போதும் என்று பாரதியார் நினைக்கவில்லை. அந்தக் குறைகள் வளரும் குழந்தைகளின் உள்ளத்தில் வேரூன்றாதவாறு அடியோடு களைந்து எறிய வேண்டுமென்று அவர் விரும்பினார். இதனால்தான் குழந்தைகளுக் காகவும் கவிதைகளை அவர் படைத்தார். "இன்றைய குழந்தைகள், வருங்காலத்திய தலைவர்கள் (குடிமக்கள்)" என்பதை அவர் நன்குணர்ந்து இருந்தார். எனவே, குழந்தைகள் வளர்ந்து, குடிமக்கள் ஆகும்போது, நாட்டிற்குரிய நல்ல மக்களாக, வினைத் திட்பம் வாய்ந்த வல்லவர்களாக, ஆக்கப் பணிகளை அயர்வின்றியாற்றும் திறமைமிகு தலைவர்களாக அவர்கள் விளங்க வேண்டும் எனும் எண்ணம் உடையவராக பாரதியார் வாழ்ந்தார்.

இதனாலேயே, பாரதியார், குழந்தைகளின் பிஞ்சு உள்ளங்களில் பதியத்தக்க எழுச்சியூட்டும் எண்ணங்களையும் புதிய சிந்தனைகளையும் உணர்ச்சிமிகு சிறுசொற்களின்மூலம் இனிய பாடல்களாகப் படைத்துள்ளார்.

பொதுவாகக் குழந்தைப் பாடல்களை இரு வகையாகப் பாகுபடுத்துவர். முதல் வகை, 'குழந்தைகளைப் பற்றிய

பாடல்கள்' எனவும், 'இரண்டாம்வகை, 'குழந்தைகளுக்காக (குழந்தைகள் பாடி மகிழ்வதற்காக)ப் பாடப் படுவன' எனவும் வகைப்படுத்துவர். குழந்தைகளின் அருமை பெருமைகளை எடுத்துரைக்கும் வகையில் இயற்றப்படுவன 'குழந்தைகளைப் பற்றிய பாடல் களாகும். 'பிள்ளைத் தமிழ்' இலக்கியங்கள் இந்த வகையைச் சேர்ந்தவை. குழந்தைகள் பாடி மகிழ்வதற்குரிய முறையில் இயற்றப்படும் குழவிப் பாடல்கள் (Nursery Rhymes), ஆடலிசைப் பாடல்கள், நீதி புகட்டும் கதைப் பாடல்கள், நீதிப் பாடல்கள் போன்றவை குழந்தைகளுக்காகப் பாடப்படும் பாடல்களாகும்.

தேசியக் கவி சுப்பிரமணிய பாரதியார், இவ்விருவகைக் குழந்தைப் பாடல்களையும் இயற்றியுள்ளார்.

''குழந்தைகளுக்கு எழுதும் பயன்மிக்க தொண்டை அவ்வையார் தொடங்கினார். அதிவீரராம பாண்டியரும், உலகநாதரும் அத்தொண்டைத் தொடர்ந்தனர். இவர்களே தமிழகத்து முதல் மூன்று (குழந்தைக்) கவிஞர்கள் ஆவார்"[1] என்று பூவண்ணன் கருதுகிறார். ஓரளவிற்கு இது உண்மையே. ஏனெனில் இந்த நீதி நூல்களில் தெரிவிக்கப்பட்டுள்ள கருத்துகள் எல்லாம், குழந்தைகளுக்கு மட்டும் உரியன அல்ல; குழந்தைகளால் புரிந்துகொள்ள இயலாதனவும் ஆகும்.

பாரதி காட்டிய வழி

இச்சிறு நீதிநூல்களை விதிவிலக்காக அல்லது நீதிநூல் வகையைச் சேர்ந்தவையாகக் கொள்ளுவோமானால், பாரதியாருக்கு முன்பு தமிழில், 'குழந்தைப் பாடல்கள்* இயற்றப்படவில்லை எனலாம். பாரதியாருடைய கவிதைகளில் 'பாப்பாப் பாட்டும்', 'புதிய ஆத்தி சூடியும் குழந்தைப் பாடல்களாகக் கொள்ளப்படுகின்றன. ஆனால். அண்மையில் வெளிவந்துள்ள

---

1 வே.தா.கோபாலகிருஷ்ணன், சிறுவர் இலக்கியச் செல்வர்கள், பக். 18.

நூல்கள் சிலவற்றில், பாரதி பாடிய முரசுப் பாட்டு, அச்சமில்லை, அக்கினிக்குஞ்சு, காணி நிலம், பாரத பூமி, ஒளிபடைத்த கண்ணினாய் போன்ற பாடல்களையும் *சிறுவர்' பாடல்களாகத் தொகுத்து வெளியிட்டுள்ளனர்.[2] இவை எவ்வாறு குழந்தைப் பாடல்களாக, சிறுவர் பாடல்களாக அமைகின்றன என்பது புரியவில்லை.

பாரதியார், குழந்தை இலக்கியத் துறையிலும் முன்னோடியாக விளங்குகிறார் என்பதை அவருடைய 'பாப்பாப் பாட்'டினைப் படிப்பவர் எளிதில் உணரலாம்.

பாரதியாரின் 'பாப்பாப் பாட்டு, குழந்தைப் பாடல்களில் முதன்மையானதாகும். 'பாப்பாப் பாட்டினை'ப் பாரதியார் இயற்றிய வரலாறு நமக்குக் கிடைத்து இருக்கிறது. "சகுந்தலா பாப்பா (பாரதியாரின் இளைய மகள்) ஒரு நாள் பிடிவாதம் பிடித்தாள்; தாய் சொல்லைத் தட்டினாள்; வம்பு செய்தாள்; 'பாப்பா' என்று இங்கிதமான குரலில் பாரதியார் அழைத்தார். பாப்பா வந்தாள். 'இதோ பார்! அம்மா சொன்னதைத் தட்டலாமா? கூடாது. அவள் சொல்வதைக் கேள்' என்றார் பாரதி. 'நீங்கள் எனக்கொரு பாட்டுப்பாடுங்கள். அப்போது அம்மா சொல்வதைக் கேட்கிறேன்' என்று கெஞ்சும் குரலில் பாப்பா கூறினாள். புன்சிரிப்புடன் (பாப்பாப் பாட்டைப்) பாரதியார் பாடினார்"[3] – எனும் கருத்து, புதிய தமிழிலக்கியம் தோன்றிய சூழலைத் தெரிவிக்கிறது.

பாப்பாவும் குழந்தையும்

இன்றைய நடைமுறை உலகில்,'பாப்பா' எனும் சொல், சிறுபான்மை 'குழந்தை' எனும் பொதுப் பொருளிலும், பெரும்பான்மை 'பெண் குழந்தை' எனும் பொருளிலும், சில மாவட்டங்களில் திருமணம் ஆகும் நிலையில் உள்ள

2 எச். வைத்தியநாதன் (பதிப்.), பாரதியாரின் சிறுவர் பாடல்கள்.

3 தி.ஜ.ர.,பாப்பாவுக்குப் பாரதி, பக். 52–53

இளம் பெண்களைச் சிறப்புப் பொருளிலும் சுட்டுவதைக் காணுகின்றோம். மேற்கண்ட பாரதியின் வரலாற்றுத் துணுக்கிலிருந்து, பெண் குழந்தையைப் பாரதியாரும் 'பாப்பா' என்றே அழைத்துள்ளார் என்பதும் புலனாகின்றது.

முன்னோடி

பாரதியாரின் பாப்பாப்பாட்டுத்தான் நமக்குக் கிடைத்துள்ள முதல் குழந்தைப்பாட்டு நூல் எனலாம். "தனக்குப் பின்னே வரும் கவிஞர்களை எல்லாம் குழந்தைகளுக்குப் பாட்டுப்பாடும்படி, தமது 'பாப்பாப்பாட்டு' மூலம் தூண்டி, வழிகாட்டிச் சென்றார் அவர் என்றால் அது மிகையாகாது.[4] 'பாப்பாப்பாட்டு' எழுத்தில் மலர்ந்த குழந்தைப் பாடல்களின் தெளிவான தோற்று வாய். இது நம் இலக்கியத்தின் ஒரு புதுத்துறையாகும். தமிழில் எழுத்து வடிவில் முதன்முதல் குழந்தைப் பாட்டை வழங்கிய பெருமை பாரதியாருக்கே உரியது. சிறுவர் – சிறுமியர் விரும்பிப் படிக்கும் இலக்கியமாக இது பெருவாழ்வு பெற்றுள்ளது.

பாப்பாப்பாட்டின் சிறப்பியல்புகள்

"பாரதியின் பாப்பாப்பாட்டு கற்பனையும், சந்தமும் சேர்ந்து சிறுவர்களின் சிந்தையைக் கவருவதாக அமைந்து விட்டதாலும், குழந்தைப் பாடலுக்குரிய கருப்பொருளைப் பெற்றிருப்பதாலும் சொல்லும் முறையாலும் இது தனிவகையாக அமைகிறது''[5] எனும் திறனாய்வாளரின் கருத்து இங்குச் சிந்திக்கத் தக்கதாகும்.

அடங்கியொடுங்கி சோம்பலுடன் ஓய்ந்திருக்கும்

---

4 வே.தா.கோபாலகிருஷ்ணன் (பூவண்ணன்), குழந்தை இலக்கிய வரலாறு, பக். 37.

5 முத்துச் சண்முகன் & வெ. கிருட்டினசாமி தமிழில் குழந்தைப் பாடல்கள், பக். 49

வாழ்க்கை குழந்தைகளுக்குக் கூடாது என்பதை,

ஓடி விளையாடு பாப்பா – நீ
ஓய்ந்திருக்க லாகாது பாப்பா!
கூடி விளையாடு பாப்பா![6]

என்று பாரதியார் தெளிவுறுத்தி இருக்கிறார்.

பாரதியார் சாதிக் கொடுமைகள் பற்றிக் குழந்தைக்குச் சொன்ன அறிவுரை, இன்னும் 'போதிய பயன்" தரவில்லை. குழந்தையின் உள்ளத்தில் அக்கொடுமை ஆழப் பதியத்தக்க வகையில், உணர்ச்சித் துடிப்போடு கவிஞர் பாடி இருக்கிறார்.

சாதிகள் இல்லையடி பாப்பா– குலத்
தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்
நீதி,உயர்ந்தமதி, கல்வி – அன்பு
நிறைய உடையவர்கள் மேலோர்[7]

குழந்தைகளின் பிஞ்சு உள்ளங்களில், அவர்களின் 'கடமைகள் யாவை?' என்பதையும், எவ்வெவற்றைக் குழந்தைகள் செய்ய வேண்டும் என்பதையும் 'பாப்பாப் பாட்டில் பாரதி தெளிவுறுத்தியுள்ளார்.

காலையில் எழுந்தவுடன் படிப்பு– பின்பு
கனிவு கொடுக்கும் நல்ல பாட்டு
மாலை முழுவதும் விளையாட்டு– என்று
வழக்கப் படுத்திக் கொள்ளு – பாப்பா[8]

படிப்பு, பாட்டுப் பாடுவது, விளையாடுவது ஆகிய மூன்றும் குழந்தைகளின் அன்றாடக் கடமைகளாகப் பாரதியார் இப்பாட்டில் அறிவித்துள்ளார். குழந்தைகளின் உடலும், உள்ளமும், அறிவும் ஒருசேர வளர வேண்டும் எனும் உணர்வுடையவர் பாரதியார் என்பதை இப்பாடல் தெரிவிக்கிறது.

போலிச் சடங்குகளும் மூட நம்பிக்கைகளும் சமய நெறி எனும் தவறான எண்ணத்தைப் பெற்று, கெட்டுப் போகாதவாறு

---

6 பா. கவி. பக். 266
7 ஷ, பக்.268
8 பா. கவி. பக். 266

குழந்தையின் மனத்தை நல்ல வழியில் நெறிப்படுத்த பாரதியார் முயன்றுள்ளார். 'எது உண்மையான மதம்? சமயம்? கடவுள் நெறி?' என்பதை அறிவுறுத்தும் நோக்கத்தோடு பாப்பாப்பாட்டினை அவர் நிறைவு செய்துள்ளார் ;

உயிர்கள் இடத்தில் அன்பு வேணும் – தெய்வம்
உண்மை என்று தானறிதல் வேணும்!
வயிரம் உடையநெஞ்சு வேணும்– இது
வாழும் முறைமையடி பாப்பா![9]

'வாழவேண்டிய உண்மையான முறை யாது?' என்பதை இப்பாடலில் பாரதியார் அறிவுறுத்துகிறார். "தெய்வம் உண்டு" எனும்கடவுள்நம்பிக்கையும்,உயிர்களிடம்அன்புகாட்டுதலாகிய சீவகாருணிய உள்ளமும், மலை குலைந்தாலும் நிலை குலையாத வயிரம் போன்ற உள்ள உறுதியும் உடையவர்களாக வாழ வேண்டும். இந்த மூன்றும் மனித வாழ்க்கையை மாண்புறச் செய்தனவாகும் என்பது பாரதியாரின் துணிபாகும். இதைக் குழந்தைகளின் உள்ளத்தில் ஆழப் பதியுமாறு எளிய பேச்சு மொழிநடையில், உணர்ச்சிப் பெருக்கோடு பாரதியார் எடுத்துரைத்துள்ளார்.

இந்திய விடுதலைக் கவிஞரான பாரதியார், நாட்டுப் பற்றையும், மொழிப்பற்றையும் தம்முடைய இரு கண்களாகப் போற்றினார். தமிழ்த் தேசியமும் இந்தியத் தேசியமும் அவருடைய பாடல்களில் இழையோடிச் செல்லுகின்றன.

தமிழ்த் திருநாடு தன்னைப்–பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா!
அமிழ்தில் இனியதடி பாப்பா– நம்
ஆன்றோர்கள் தேசமடி பாப்பா!
சொல்லில் உயர்வு தமிழ்ச் சொல்லே! – அதைத்
தொழுது படித்திடடி பாப்பா!
செல்வம் மிகுந்த இந்துஸ்தானம் – அதைத்
தினமும் புகழ்ந்திடடி பாப்பா![10]

---

9 ஷெ. பக்.266.

10 பா. கவி. பக். 267

வருங்காலத்தில் தன் மகள் சகுந்தலா மட்டும் அல்லாமல், தமிழ் நாட்டு–இல்லை – பாரதத்தின் குழந்தைகள் எல்லாமே முற்போக்குச் சிந்தனை உடையவர்களாய், இந்நாட்டைச் சீர்படுத்த வேண்டும் எனும் ஆர்வத்தாலேயே 'முல்லைச் சிரிப்பால் மூர்க்கம் தவிர்த்திடும்' குழந்தையைப் போற்றிப் பாரதியார் பாடியுள்ளார்.

திறனாய்வாளரின் துணிவுரை

பாரதியாரின் சிறப்புமிக்க "இப்பாப்பாப் பாட்டு, ஆசிரியக் குரலில் குழந்தைகளைப் பார்த்து அறிவுரைகள் சொல்வது போல அமைந்துள்ளது. நீதிகளைப் போதிக்கும் பாடலாக அமைந்துள்ளது. எனவே, இப்பாப்பாப் பாட்டு, குழந்தைப் பாடலின் முழுத்தன்மையைப் பெற வில்லை எனலாம். இப் பாப்பாப்பாட்டு, சிறுவர் இலக்கிய வரலாற்றில் சிறந்த இடம் பெற்றாலும், சிறுவர் கவிதையின் முழுத் தன்மையைப் பெறவில்லை"[11] எனும் திறனாய்வாளரின் கருத்துரை ஓரளவிற்கு உண்மையேயாகும்.

இவர்கள், குழந்தைப் பாடல்கள், "குழந்தையை நோக்கிப் பாடுவதாக அமையாமல், குழந்தையே பாடுவதாகப் பாடல் அமைய வேண்டும்" எனும் கருத்துடையவராவர். குழந்தைப் பாடல்கள், உலகமொழிகள் அனைத்திலும் இருவகையாக உள்ளன. (1) குழந்தைகள் பாடி ஆடுவதற்கு ஏற்ற முறையில் இயற்றப்படுவன; (2) குழந்தைகளுக்கு அறிவுரை கூறும் நீதிப்பாடல்கள். இந்த இரண்டாம் வகையைச் சேர்ந்தது, நம் பாரதியாரின் 'பாப்பாப் பாட்டு' என்பதைத் தெளிதல் வேண்டும்.

குழந்தைப் பாடலுக்குரிய எளிய சொற்கள், இனிய சந்தம்,படிக்கும் உள்ளத்தில் கருத்தைப் பதிய வைக்கும் ஆற்றல் ஆகிய மூன்று இயல்புகளையும் கொண்டதாசு

---

11 வி.எம்.ஞானப்பிரகாசம் (ப. ஆ.), தற்காலத் தமிழ் முன்னோடிகள்,பக்.98

இப்பாடல் அமைந்துள்ளதை யாரும் மறுக்க இயலாது. பாரதியார் பாப்பாவைப் பார்த்துப் பாடினாலும், தன்னை மறந்த லயந்தனில் தாமே பாப்பாவோடு ஒன்றி–பாப்பாவாக மாறிப் பாடியுள்ளார். இந்தத் 'தாமே அதுவாக மாறும்'–'தத்துவமசி' உணர்வே பாரதியாருடைய பாப்பாப் பாட்டின் கவர்ச்சிக்கும் வெற்றிக்கும் காரணமாகிறது. இந்தப் பண்பே, பாரதியாரைக் 'குழந்தைக் கவிஞராக' உலகிற்கு அறிமுகப்படுத்துகிறது.

பாரதியின் வழியில்...!

சுப்பிரமணிய பாரதியாரைப் பின்பற்றி, கவியோகி சுத்தானந்த பாரதியார், 'பாப்பாப் பாட்டு' எனும் நூலை இயற்றி இருக்கிறார். கவிஞர் தமிழ் ஒளி, 'பாடு பாப்பா' எனும் நூலைப் படைத்துள்ளார். இந்நூலுள் 'பையன்' எனும் தலைப்பில்,

பாடம் படியா ஒரு பையன்
பள்ளி செல்லா ஒரு பையன்
மூடன் ஆனான் முன்னாலே!
மூட்டை சுமந்தான் பின்னாலே![12]

எனும் பாடல் சிறப்பாக அமைந்து இருக்கிறது. இவருடைய நூலின் தலைப்பில்தான் 'பாப்பா' எனும் சொல் இடம் பெற்றிருக்கிறது. ஆனால், நூலின் உள்ளே பாடல்கள், பாரதியின் பாப்பாப் பாட்டைப் போன்று, விளியாகப் 'பாப்பா' எனும் சொல்லைப் பெற்று அமையவில்லை.

இதைப் போன்றே, அழ வள்ளியப்பா, 'பாப்பா வுக்குப் பாட்டு' எனும் நூலை இயற்றியுள்ளார். இந்த முறையில் கே. எஸ். லட்சுமணன், 'பாப்பாவுக்குப் பறவைகள்', 'பாப்பாவுக்கு மிருகங்கள்'எனும் பாடல் நூல்களைப் பாடியுள்ளார்.

கவிஞரேறு வாணிதாசன் அவர்கள் பாடிய 'எங்கள் பாப்பா' எனும் பாட்டு, குழந்தைகளின் நாவில் எல்லாம் நடமாடி வரும் பாட்டாகும்.

---

12 பாடு பாப்பா, பக். 37.

எங்கள் பாப்பா தங்கப் பாப்பா!
எழுந்து விழுந்து நடக்கும் பாப்பா!
செங்கை ஆட்டி அழைக்கும் பாப்பா!
சிறுவிரல் சப்பித் தூங்கும் பாப்பா!
விரலை வைத்தால் கடிக்கும் பாப்பா!
வெடுக்கென் றிழுத்தால் சிரிக்கும் பாப்பா!
கையைப் பிடித்து நடக்கும் பாப்பா!
கட்டி முத்தம் கொடுக்கும் பாப்பா!
குத்து விளக்கே எங்கள் பாப்பா!
குனிந்து சாய்ந்தே ஆடும் பாப்பா!
முத்தம் கொடுத்தால் முத்தம் கொடுக்கும்
முகத்தை மறைத்தால் கையை எடுக்கும்![13]

இப்பாடல் குழந்தைகளுக்குப் பாரதியின் பாடலைப் போல அறிவுரை கூறவில்லை. ஆனால், சிறு குழந்தைகள் மழலை மொழியில் பாடி, அபிநயம் பிடித்து ஆடுவதற்கு (Action song) ஏற்ற வகையில் அமைந்து இருக்கிறது.

கவிஞர் முடியரசனும் 'பாப்பா பாட்டு' ஒன்றைப் பாடியுள்ளார்.

அறிவை வளர்த்திடு பாப்பா–நாட்டை
ஆளப்பிறந்தது நீயன்றோ பாப்பா!
அறிவைக் குறைத்திடும் தாள்கள் – வாங்கி
ஆதரித் தாலிங்குத் தீமையே பாப்பா![14]

எனத் தொடங்கும் பாடல் இங்கு ஒப்பு நோக்கத் தக்கது. குழந்தைகளுக்காக, குழந்தைகளை நோக்கிப் 'பாப்பா' என விளிக்கும் (பாரதியின்) பாணியில் இயற்றப்பட்டுள்ளது இப்பாடல். ஆனால், பன்னிரண்டு/பதினான்கு வயதிற்கு மேற்பட்ட இளைஞர்களுக்கு 'மட்டமான பத்திரிகைகளை வாங்கிப் படிக்காதே' எனக் கூறும் அறிவுரையைக் கொண்டு இருக்கிறது.

இதே முறையில் பல கவிஞர்களும் புலவர்களும் 'பாப்பாப் பாட்டு' இயற்றியுள்ளனர். பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்

---

13 இனிக்கும் பாட்டு, பக். 2.
14 காவியப்பாவை பக். 109

பாடிய பாப்பாப் பாட்டு ஒன்றும் குறிப்பிடத்தக்கது. பல சமயங்களில் 'குழந்தைகளுக்காகவே இப்பாடலை நாம் இயற்றுகிறோம்' என்பதை அவர்கள் மறந்து விடுகின்றனர்.

புலவர் குழந்தை 'இராவண காவியம்' படைத்த பெருமைக்குரியவர். இவர் குழந்தைகளுக்காக இயற்றிய பாடல்கள் பலநூல்களாகத் தொகுக்கப்பட்டுள்ளன பாரதியாரைப் போலவே, இவரும் குழந்தைகளுக்காக ஒரு பாப்பாப் பாட்டு இயற்றியுள்ளார்.

தெள்ளுதமிழ் பாடும் பாப்பா! ஒரு
செய்தி உரைத்திடக் கேள்–பாப்பா!
வள்ளுவர் வான்குறளைப் பாப்பா!– நாளும்
மனப்பாடம் செய்திடுவாய் பாப்பா![15]

எனும் பாடல், அறிவுறுத்தும் பாடலாகவே அமைந்துள்ளது.

அழ. வள்ளியப்பா அவர்கள் பாடியுள்ள 'பாப்பாப் பாடல்களும்' சிறப்புமிக்கன.

பாப்பா! பாப்பா! அழாதே!
பலூன் தாரேன்! அழாதே!
கண்ணே பாப்பா அழாதே!
காசு தாரேன் அழாதே!
பொன்னே பாப்பா அழாதே!
பொம்மை தாரேன் அழாதே!
முத்துப் பாப்பா அழாதே!
மிட்டாய் தாரேன் அழாதே!"[16]

எனும் பாடல் 'குழவிப் பாடல்' எனப் போற்றத்தக்கதாகும். அழுகின்ற சிறு குழவியை 'அழாதே பாப்பா! அழாதே பாப்பா!' என அழுகையை மாற்ற முயலுவதற்குச் சிறுவர் சிறுமியர் முதல், தாய்மார்கள் வரையலான பலரும், குழந்தையை நோக்கிப் பாடத்தக்க பாடலாகும். இத்தகைய "பாப்பாப் பாடலே குழந்தைப்

15 புலவர் குழந்தைப் பாடல், பக். 79
16 மலரும் உள்ளம், முதல்பாகம், பக். 21

பாடல்களில் சிறப்புமிக்கனவாக குழவி உளவியல் அறிஞர்கள் கூறுவர்.

இந்த முறையில் ச. கிருஷ்ணராஜா என்பவர் 'சின்ன பாப்பா' எனும் பாடல் நூலையும், மதி என்பவர் 'பாப்பாப் பத்து' எனும் நூலையும், இயற்றியுள்ளனர்.

மற்றும். ரா. பொன்னரசன், 'பாப்பாப் பாட்டு" எனும் நூலையும், நாக. முத்தையா என்பவர் "சொல்லு பாப்பா!' எனும் குழந்தைப் பாடல் நூலினையும்,"பாப்பாவின் பாட்டு" எனும் நூலையும் வெளியிட்டுள்ளனர். தணிகை உலகநாதன் "பாடும் பாப்பா" எனும் பாடல் தொகுதியை வெளியிட்டுள்ளார்.

ஈழத்துத் தமிழ்ப் புலவர்களுள் "தங்கத் தாத்தா"" எனப் போற்றப்படும் நவாலியூர் க. சோமசுந்தரப் புலவர் ஆயிரக்கணக்கான குழந்தைப் பாடல்கள் இயற்றியுள்ளார். அவற்றுள் "சிறுவர் செந்தமிழ்" எனும் நூலில்,"பாப்பாப்பாடல்கள்" கணிசமான அளவினதாக உள்ளமை இங்குக்குறிப்பிடத்தக்கது. பெரிதும் அப்பாடல்கள் யாழ்ப்பாண வட்டார வழக்குச் சொற்கள் நிறைந்தனவாக உள்ளன.[17]

சிங்கை நக(சிங்கப்பூ)ரைச் சேர்ந்த கவிஞர்கள் பலர், குழந்தைப் பாடல்களைப் பாடியுள்ளனர். கவிஞர் கா. பெருமாள் என்பவர், "தத்தி நடக்கும் பாப்பா'', "சித்து நடத்தடி பாப்பா", "சின்னப் பாப்பா"[18] என்பன போன்ற பாப்பாப் பாடல்களைப் பாடியுள்ளனர்.

புதிய விளிகள்

புரட்சிக் கவிஞர், "பாப்பா" எனும் விளிச் சொல்லிற்குப் பதிலாக "மகளே!" எனவும், "மகனே" எனவும் விளித்துப்

17 தாலவிலாசம் போன்ற நூல்கள் இங்குக் குறிப்பிடத்தக்கன.
18 சிங்கப்பூர் பாடல்கள், எண்.8,9,11.

பாடியுள்ள பாடல்களும் பாரதியாரின் ''பாப்பாப் பாட்டை" அடியொற்றி இயற்றப்பட்டனவே யாகும்.

வளரும் என்றன் மகளே! – என்
வாழ்வுயர்த்தும் மகனே!
தளரும் தமிழகத்தை – நீர்
தாங்க வேண்டும் அறிக ![19]

எனத் தொடங்கும் பாடல், 'அறிவுறுத்தும்' பாடலாகவே காணப்படுகிறது.

காலப்போக்கில் 'பாப்பா' என்பதற்குப் பதிலாகத் 'தம்பிகளே', 'தங்கைகளே', 'பிள்ளைகளே' எனும் விளிச்சொற்களைக் கொண்ட குழந்தைப் பாடல்கள் பல திரைப்படப் பாடல்களாக மக்களின் உதடுகளில் எல்லாம் உலாவி வருகின்றன.

தூங்காதே தம்பி, தூங்காதே !
சோம்பேறி என்னும் பெயரை வாங்காதே!

எனும், 'நாடோடிமன்னன்' படத்தில் வரும் பாடலும்,

நல்ல பேரை வாங்க வேண்டும் பிள்ளைகளே
நம் நாடு என்னும் தோட்டத்தில் நாளை மலரும்
முல்லைகளே!

எனும் 'நம் நாடு' படத்தில்வரும் பாடலும் இங்குக் குறிப்பிடத்தக்கன.

இவற்றைப் போன்றே 'அம்மா', 'அக்கா' எனும் விளிகளைக் கொண்ட பாடல்கள் பல திரைப்படம் பாடல்களாகச் செல்வாக்குப் பெற்றுள்ளன. 'திக்குத் தெரியாத காட்டில்' எனும் திரைப்படத்தில் வரும் 'பூம் பூவாப் பறந்து போகும் பட்டுப்பூச்சி அக்கா!' எனும் பாடல் இங்கு நினைவுகூரத்தக்கது.

குழந்தைப் பாடல் மரபு

பாரதியாரைவிட வயதில் மூத்தவரான சுவிமணி தேசிக விநாயகம் பிள்ளை, பாரதியாரின் சம காலத்தில் வாழ்ந்ததோடு,

---

19 பாரதி தாசன், ஒரு தாயின் உள்ளம் மகிழ்கிறது. பக். 42.

அவருக்குப் பிறகும் நெடுங்காலம் இருந்திருக்கிறார். இவர் குழந்தைகளுக்கு ஏராளமான சின்னஞ் சிறு பாட்டுகளைப் படைத்துள்ளார். 'குழந்தைச் செல்வம்' எனும் இவருடைய குழந்தைப்பாடல் தொகுப்பு, நாடு போற்றும் நல்ல இலக்கியப் படைப்பாகும். இவருடைய மலரும் மாலையும்' எனும் கவிதைத் தொகுப்பில், முப்பதுக்குக் குறையாத குழந்தைப் பாடல்கள் உள்ளன. அவற்றுள்.

தோட்டத்தில் மேயுது
வெள்ளைப் பசு–அங்கே
துள்ளிக் குதிக்குது
கன்றுக் குட்டி!

எனத் தொடங்கும் பாடலை அறியாதப் பள்ளிச் சிறுவர்கள் நம் நாட்டில் இருக்க இயலாது.

இத்தகைய அரிய படைப்பினை,
"செந்தமிழ் நாட்டுச் சிறுவர் சிறுமியர்க்கு
இந்தநூல் உரியதாய் என்றும் வாழ்கவே"

எனக் கவிமணி படைத்துள்ளார்.[20] இவற்றால் குழந்தைப் பாடல்களைப் படைப்பதில், பாரதியையும் விஞ்சக்கூடிய அளவிற்குச் சுவிமணி பேரீடுபாடு கொண்டிருந்தார் என்பது புலனாகின்றது.

கவிமணிக்கு அடுத்த நிலையில், பாவேந்தர் பாரதிதாசனார் குழந்தைப் பாடல்கள் பலவற்றைப் படைத்துள்ளார். அவை இசையமுது, இளைஞர் இலக்கியம், பன்மணித்திரள் என்பன. பன்மணித் திரளின் ஒரு பகுதி குழந்தைப் பாடல்களாக உள்ளன.

பாரதிதாசன் குழந்தைப் பாடல்களில் புரட்சி மணம் வீசுகிறது; தமிழையும் தமிழகத்தையும் மையமாகக் கொண்டு சுற்றிச் சுழலுகிறது. சமூகச் சீர்திருத்த கண்ணோட்டத்தில் குழந்தைப் பாடல்களாகப் பாடியுள்ளார்.

---

20 மலரும் மாலையும் . 66.

பூனை வந்தது பூனை– இனிப்
போனது தயிர்ப் பானை[21]

எனும் 'பூனை'யைப் பற்றிய பாட்டு, தமிழ்நாட்டுச் சிறுவர்கள் நன்கறிந்த பாடலாகும்.

பாரதிதாசன் மரபு வழியைச் சேர்ந்த முடியரசன். சுரதா, வாணிதாசன், ஆலந்தூர் கோ. மோகனரங்கன் போன்ற கவிஞர்கள் நயமிகு பல குழந்தைப் பாடல்களைப் படைத்துள்ளனர். அவர்களுள், வாணிதாசன் இயற்றிய குழந்தைப் பாடல்களை, 'இனிக்கும் பாட்டு' எனும் நூலாக வெளியிட்டுள்ளனர். அந்நூலுள் உயிர் எழுத்து' எனும் தலைப்பில் அமைந்துள்ள பாட்டு, குழந்தைகளைப் பற்றிய பாட்டு மட்டும் அன்று; குழந்தைகளுக்காகவும் இயற்றப்பட்டுள்ள பாடலும் ஆகும். அதாவது குழந்தைகள் அபிநயத்தோடு பாடி, ஆடுவதற்கு ஏற்றவகையில் அமைந்த பாடலாகும்.

அம்மா அப்பா அ சொல்லே!
ஆட்டுக் குட்டி ஆ சொல்லே!
இந்தா இந்தா இ சொல்லே!
ஈயை ஓட்டி ஈ சொல்லே![22]

எனும் பாட்டு இங்குக் குறிப்பிடத்தக்க தாகும்.

'குழந்தைக் கவிஞர்' எனும் பாராட்டினைப் பெற்றவர் அழ. வள்ளியப்பா. எத்தகைய கருத்தையும் குழந்தைகளின் உள்ளம் விரும்பும வகையில், மிக எளிமையாக அவர் எடுத்தியம்புகிறார்; குழந்தைகளை நெறிப்படுத்த ஒவ்வொரு பாடலின் முடிவிலும் ஒரு நீதியைக் கூறிச் செல்லுகிறார்.

நல்லவன் என்ற பெயர் பெறவே
நாட்கள் மிகவும் ஆகுமென
அறிந்தேன் அன்று ஓர்உண்மை
அடைவோம் இதனால் பெருநன்மை[23]

---

21 இசையமுது, பக். 31.
22 வாணிதாசன், இனிக்கும் பாட்டு, பக். 25
23 மலரும் உள்ளம், முதற்பாகம், பக்.151

எனும் பாடலை நோக்குக. வள்ளியப்பாவின் பெரும்பாலான பாடல்களில், குழந்தையோடு குழந்தையாகக் கலந்து இவர் நின்று பாடுகிறார். மற்றும் சிலபாடல்களில் உரையாடல் முறையும் பயன்படுத்தப்பட்டுள்ளமை, இவருடைய குழந்தைப் பாடலுக்கு வலிவும் வனப்பும் அளிக்கின்றது.

குதிரைமீது ஜவஹருக்குக் கோபம் வந்ததா?
கொஞ்சங்கூடக் கோபமில்லை! அன்பு இருந்தது!
அதிகமான வீரத்தோடு குதிரை ஏறியே
அடுத்தநாளும் சுற்றலானார் வழக்கம் போலவே![24]

எனும் பாடல் 'ஜவஹரின் குதிரை' எனும் தலைப்பில் அமைந்ததாகும். பண்டித ஜவஹர்லால் நேரு, குதிரை சவாரி கற்றுக் கொண்ட பொழுது, அவர் பெற்ற அனுபவத்தை இப்பாடல் சித்தரிக்கிறது; உரையாடல் முறையில், கதை சொல்லும் பாணியில் பாடப்பட்டுள்ளது.

பாரதியின் அடியொற்றி, குழந்தைப் பாடல்கள் இயற்ற தலைப்பட்ட கவிஞர், குழந்தை மனவளர்ச்சியைக் கருத்தில் கொண்டு மூன்று வயது முதல் ஆறு, ஏழுவயது வரையுள்ள குழந்தைகட்கு ஏற்பப்பாடல்களையும் எட்டு வயது முதல் பன்னிரண்டு வயது வரையிலான சிறுவர்– சிறுமியர்க்கு அறிவு புகட்டத்தக்க சிறுவர் பாடல்களையும் அழ. வள்ளியப்பா இயற்றியுள்ளார். இது அறிவியல் வளர்ச்சியின் தாக்கத்தால் உண்டான வளர்ச்சி நிலை எனலாம்.

அழ. வள்ளியப்பாவை முன்மாதிரியாகக் கொண்டு, கடந்த முப்பது ஆண்டுகளில் ஆயிரக்கணக்கான குழந்தை பாடல் களை ஏறக்குறைய இருநூறு இளங்கவிஞர்கள் இயற்றியுள்ளனர். பல்வேறு இதழ்களில் வெளிவந்த அளவிலேயே, தொகுத்து நூலாக வெளியிடப்படாமல் உதிரிப்பூக்களாக இருந்து வரும் பாடல்கள் மிகப்பலவாகும்.

---

24 மலரும் உள்ளம், முதல் பாகம், பக். 220

நீதிப்பாடல்கள்

குழந்தை இலக்கியத்துள் ஐந்தாம் வகையாக நீதிப் பாடல்களைக் கூறுவதுமரபு. புதியசமுதாயத்தை உருவாக்க வேண்டுமானால், இன்றுள்ள குழந்தைகளின் உடலும் உள்ளமும் சிறந்து விளங்க ஆவன செய்ய வேண்டும். அவர்கள் நல்ல பண்புகள் வாய்ந்த குடிமக்களாக விளங்க இளமையிலேயே நல்ல எண்ணங்களையும், நல்ல பண்பு களையும் வளர்ப்பதற்குரிய அறநெறிக் கருத்துகளை அவர்கள் உள்ளத்தில் பதிய வைக்கவேண்டும். இதனைக் கருத்தில் கொண்டே, உலகெங்கும் சிறுவர்களுக்குப்பயன்படும் நீதிப்பாடல்கள் இயற்றப்படுகின்றன. தமிழிலும் 'குழந்தைக் குறுந்தமிழ்' எனப்போற்றப்படும். நீதிநூல்கள்[25] பல உள்ளன. அவற்றுள் பழமையானதும், பெருஞ்சிறப்பு வாய்ந்ததுமாக அவ்வையாரின் 'ஆத்தி சூடி'விளங்குகிறது. இந்நூல் அகர வரிசையில்அமைந்துள்ளது.ஒவ்வோர் அடியும்ஒருபாட்டாகும். சிறிய தொடர்களால்அரிய கருத்துகளை ஆத்திசூடிப்பாடல்கள் விளக்குகின்றன. ஒவ்வோர் அடியிலும் இரண்டு சீர்களே உள்ளன. ஆனால், உயர்ந்த எண்ணங்களை அவை அறிவுறுத்துகின்றன. மேற்கு நாட்டார் 'முதுமொழி' (Gnomic Poetry), 'மூதுரை' (Aphorism) எனப் போற்றும் நீதிப்பாடல்களை விட வடிவால் குறுகியும் கருத்தால் உயர்ந்தும் ஆத்திசூடிப் பாடல்கள் அமைந்துள்ளன.

உலக இலக்கியத்துள் அவ்வையின் ஆத்திசூடிக்கு ஒப்பாக, இங்கிலாந்தில் பதினேழாம் நூற்றாண்டில் வழக்கிற்கு வந்த 'அகவரிசைப் பட்டியல் பாடலை (Alphabetic Catalogue of Poetry), யே கூறலாம். இத்தகைய சிறப்பு வாய்ந்தது ஆத்திசூடி. அவ்வையாரின் ஆத்திசூடி குழந்தை இலக்கியத்தின் முதல் நூல்; குழந்தை இலக்கியத்தின் சிகரமாகத் திகழத்தக்க நூல்"[26]

---

25 வ.சுப.மாணிக்கம், இலக்கிய விளக்கம், பக்.114.

26 சிறுவர் இலக்கியச் செல்வங்கள் பக். 8

என்று பேராசிரியர் பூவண்ணன் போற்றுவது மிகவும் பொருத்த மாகும்.

ஆத்திசூடி, தமிழ் எழுத்துகளையும், தமிழர் நீதிகளையும் குழந்தைகளுக்குச் சுவையாகத் தருகிறது. மனிதனுக்குத் தேவையான அடிப்படை ஒழுக்க விதிகளை, ஐந்து வயதிலேயே அறிந்து கொள்ளும் வாய்ப்பை அளிக்கிறது.

அவ்வையாரின் உலகப் புகழ் பெற்ற ஆத்திசூடிப் பாடல்களால், பெரிதும் கவரப்பட்ட பாரதியார், தம் காலத்திற்கு மிகத் தேவையான கருத்துகளை, அவ்வையாரின் பாணியிலேயே பாடத்தொடங்கினார். தம் 'புதிய ஆத்திசூடியில்' பாரதியார் பல புதுமைகளைப் புகுத்தியுள்ளார். சிலபாடல்களில் அவ்வையாரைப் பின்பற்றிப் பாடுகிறார்; தம் கால உணர்வு எழுச்சியால் சில இடங்களில் மாறுபடுகிறார். அவர் ஆத்திசூடி என்று பெயரிட்டதற்குக் காரணம் அவ்வகை வடிவத்திற்கு அப்பெயர், அவ்வையார் காலத்திலிருந்து புகழ் பெற்றிருந்ததுதான். 'ஆத்தி சூடி' என்பது சிவபெருமானையே குறிக்கும். பழங்கதையின் வழிப்பட்ட மரபுப்பெயராகும். பாரதியும் இந்த மரபினைப் போற்றியுள்ளார். குறிப்பிட்ட ஒரு வகை நூல், இப்பாடல் அடிப்படையில் இயங்குவதால், இப்பெயரிடப்பட்டிருக்க வேண்டும்[27] எனும் அறிஞரின் கருத்து, இங்குச் சிந்திக்கத் தக்கதாகும்.

பாரதி கண்ட அவ்வை

பாரதியாருக்கு, அவ்வையின் பாடல்களில் பேரீடுபாடும் பெருமதிப்பும் இருந்தன. இதனைப் பின்வரும் அவருடைய கருத்துரையால் தெளியலாம்.

ஜன சமூக நீதிகளின் விஷயத்தில் தமிழ்நாட்டில் எப்போதும் பிரமாணமாக இயன்று வருவது அவ்வையின் நீதி வாக்கியங்களும் நீதி நூல்களுமேயாம்...

---

27 கா.மீனாட்சிசுந்தரம், பாரதி பாநிலை, பக்55– 56.

அதிகப் படிப்பில்லாதவர்களும், படிப்பே தெரியாதவர் களுமாகிய ஜனங்கள் ஆண், பெண் அனைவருக்கும் அவ்வையாரின் நீதியே வழிகாட்டி.

* * *

''தமிழ் நாட்டின் மற்றச் செல்வங்களையெல்லாம் இழந்துவிடப் பிரியமா?" என்று நம்மிடம் யாரேனும் கேட்பார்களாயின், "மற்றச் செல்வங்களையெல்லாம் பறிகொடுக்க நேர்ந்தாலும் பெரிதில்லை. அவற்றைத் தமிழ்நாடு மீட்டும் அமைத்துக் கொள்ள வல்லது. அவ்வைப் பிராட்டியின் நூல்களை இழக்க ஒருபோதும் சம்மதிக்க மாட்டோம். அது மீட்டும் சமைத்துக் கொள்ள முடியாத தனிப் பெருஞ்செல்வம்" என்று நாம்மறுமொழிஉரைக்கக்கடமைப்பட்டிருக்கிறோம்.[28]

என்பது உலகமகாகவி, அறுபது ஆண்டுகளுக்கு முன்னர் தெரிவித்த கருத்தாகும். இந்த அறிவுரையால் அறியப்படும் செய்தி யாது? 'தமிழ் இலக்கியச் செல்வத்தில், அவ்வையின் படைப்புகள் தனிப்பெருஞ் சிறப்பு வாய்ந்தன ; அதைத் தமிழினம் (ஆங்கிலேயர் ஷேக்ஸ்பியரை இழக்க விரும்பாததைப் போல) என்றும் போற்றிக் காக்க வேண்டும்' எனும் பாரதியின் விழைவார்ந்த விருப்பம் புலனாகிறது. அத்துணை அளவிற்கு அவ்வையிடம், பாரதிக்குப் பற்றும் மதிப்பும் இருந்ததைக் காணுகின்றோம்.

இதனால், பாரதியார் அவ்வையைக் கண்மூடிப் பின் பற்றவில்லை. அவ்வையின் ஆத்திசூடியில் இருக்கும் தேவையற்ற – பயனற்ற, தம் நோக்கிற்கு இயைந்துவராத பழமை எண்ணங்களை – நீக்கவோ, புறக்கணிக்கவோ, எதிராகப் 'புதுவேதம்' பாடவோ பாரதி தயங்கவில்லை.

அவ்வையாரின் ஆத்திசூடி, தனி மனித வீடுபேற் றினை வலியுறுத்துகிறது. தம்முடைய நாட்டு விடுதலைக்

---

28 மகாகவி பாரதியார் கட்டுரைகள் – மாதர் . 37–38.

காகப் போராட வேண்டிய காலகட்டத்தில் பாரதி வாழ்ந்தார். அவருடைய காலத்து மக்களுக்குப் புதிய அறக் கருத்துகள் தேவைப்பட்டன. அவ்வையின் காலத்திற்கும் பாரதியின் காலத்திற்கும் இடையே குறைந்தது 500 ஆண்டுகளாகிலும் கழிந்திருக்க வேண்டும். இந்த இடைக் காலத்தில் எத்தனையோ அரசியல், சமுதாய மாற்றங்கள் தமிழகத்தில் உண்டாகியுள்ளன. இதனால்,தமிழருடைய சிந்தனைப் போக்கிலும், வாழ்க்கை முறைகளிலும் மாற்றங்கள் உண்டாகி இருந்தன. இவற்றைப் பாரதியார் நன்கு உணர்ந்து இருந்தார். காலந்தோறும் சமுதாயப் பயன் மதிப்புகள் (Social Values) மாறி வருவதையும். சிறப்பாக மேற்கு நாட்டுச் சிந்தனைத் தாக்கத்தால் பல வகையான நம் பழக்க வழக்கங்களும் நம்பிக்கைகளும் நிலைகுலையத் தொடங்கியதையும் அவர் அறிந்து இருந்தார். எனவே, இக்காலத் தமிழகத்தின் தேவையை உணர்ந்து, அவ்வையின் கருத்திற்கு நேர்மாறான பல அறவுரைகளைச் சிறிதும் தயங்காமல் பாரதியார், தம் முடைய ஆத்திசூடியில் எடுத்துரைத்துள்ளார்.

புதிய ஆத்திச்சூடியின் போக்கு

கடவுள் வாழ்த்தே சிவன், திருமால், அல்லா, ஏசுவின் தந்தை என உருவத்தாலே உணர்ந்துரையாது, பல வகையாகப் பரவிடும் பரம்பொருளுக்குக் கூறும் வாழ்த்தாக அமைந்துள்ளது.

பாரதியார் அவ்வையாரின் கருத்துகளில் இருந்து மாறுபடும் இடங்கள் பல. அவற்றுள் சிலவற்றை இங்குக் காண்போம்.

அவ்வையாரின் ஆத்திசூடி		பாரதியாரின் புதிய ஆத்திசூடி
ஆறுவது சினம்	–	ரௌத்திரம் பழகு
ஙப் போல் வளை	–	கிளை பல தாங்கேல்
தையல் சொற்கேளேல்	–	தையலை உயர்வு செய்
தொன்மை மறவேல்	–	தொன்மைக்கு அஞ்சேல்
பொருள்தனைப் போற்றி வாழ்	–	திருவினை வென்று வாழ்
போர்த் தொழில் புரியேல்	–	போர்த்தொழில் பழகு

இவற்றைப் போன்ற பல கருத்துகள் பாரதியாரின் 'புதிய ஆத்திசூடி'யில் இடம் பெற்றுள்ளன. பாட்டின் பெயரில் 'புதிய' எனும் அடை மொழியை அவர் சேர்த்துள்ளார். இத்தகைய புதுமைக் கருத்துகள் விடுதலைப் போருக்குரிய வீரரை உருவாக்கும் என்று அவர் கருதி இருத்தல் வேண்டும்.

தேசியக்கவி பாரதியாரின் 'புதிய ஆத்திசூடி' உலக சகோதரத்துவத்தை உணர்த்துகிறது; சமயங்களிடையே சமரசத்தைக் காணுமாறு தூண்டுகிறது; புதிய பாரதத்தை உருவாக்க வழி காட்டுகிறது. அப்புதிய தாய்த்திருநாட்டில் வாழப்போகும் உரிமைபெற்ற இந்தியர்கள் எவ்வாறு தங்களைத் தகுதியுடையவர்களாக்கிக் கொள்ள வேண்டும் என்பதை அறிவிக்கிறது.[29]

பாரதியின் வழியில் புதிய 'ஆத்திசூடிகள்'

சுப்பிரமணிய பாரதியாரைப் பின்பற்றி, அவருடைய சீடரான பாரதிதாசன் இரண்டு ஆத்திசூடிகளை இயற்றியுள்ளார். கவிஞரேறு வாணிதாசன் 'புதிய ஆத்திசூடி' ஒன்று படைத்து இருக்கிறார். சென்னைப் பல்கலைக் கழகத் தமிழிலக்கியப் பேராசிரியர் டாக்டர் ந. சஞ்சீவி அவர்கள் 'ஆத்திசூடி அல்லது பொதுவுடைமை ஞான அறிவுசூடி எனும் நூலை இயற்றியுள்ளார். மற்றும் கிருஷ்ணகிரியைச் சேர்ந்த திரு. பொ. கு. வரதராசன் என்பவர், 'வரதராசன் ஆத்திசூடி' எனும் தலைப்பில் 108 பாடல்களைப் பாடியுள்ளார்.

இவ்வாறு பாரதியின் ஆத்திசூடி அளித்த உந்துதலால் இக்காலத்திற்கேற்ற கருத்துகளை நல்கும் ஐந்து புதிய ஆத்திசூடிகளை நான்கு அறிஞர்கள் படைத்துள்ளனர். இவர்களுள் முதலிருவர் நாடறிந்த நற்றிமிழ்க் கவிஞராவர். அடுத்துள்ளவர் ஆராய்ச்சித் தமிழை அயராது வளர்த்து வரும் தமிழ் மூதறிஞராவார். எஞ்சி இருப்பவர் புலவரேறு அ. வரதநஞ்சையபிள்ளையின் மாணவராகிய தமிழறிஞராவர்.

---

29 இதைப் பற்றிய விளக்கத்தைப் 'பழமையிலே பூத்த புதுமை' எனும் தலைப்பில், 'தமிழ் நிலவு' எனும் என் நூலில் (பக். 123–134) காணலாம்.

பாவேந்தரின் படைப்பு – 1

இனி, இப்புதிய ஆத்திசூடிகளின் நோக்கையும் போக்கையும் காண்போம். பாவேந்தர் பாடியுள்ள முதல ஆத்திசூடி நூல்,'பாரதிதாசன் ஆத்திசூடி' எனும் பெயரில், கவிஞருடைய சொல்லுரை, கருத்துரை, ஆய்வுரையுடன் 1949ல், நான்கு அணா விலையில் வெளியிடப்பட்டுள்ளது.

அந்நூலின் பாயிரம்

உலகில் பொதுவாட்சி ஒன்றே ஒன்று
நிலவுதல் கருதி நிகழ்த்திய நூல்
ஆத்தி சூடிபோற்றலின்
ஆத்தி சூடிஎன்று அடைந்தது பெயரே!

எனும் அடிகளோடு நிறைவுறுகிறது. இவ்வடிகளால் நூலின் பெயருக்குரிய காரணமும், அது இயற்றப்பட்டதன் நோக்கமும் புலனாகின்றன.

சமுதாய மறுமலர்ச்சிக்குத் தேவையான சீர்திருத்தக் சுருத்துகள் பலவற்றைப் புரட்சிக் கவிஞர் இப்பாடலில் எடுத்துரைத்துள்ளார்.

எடுத்த எடுப்பிலேயே 'அனைவரும் உறவினர்' எனத் தொடங்குகிறார் பாவேந்தர். 'யாதும் ஊரே! யாவரும் கேளிர்' எனும் புறநானூற்றுப் புலவனின் கருத்து இங்கே எதிரொலிக்கிறது.

அவ்வை 'ஈதல் அறம்' என்று தனிப்பாடல் ஒன்றிலும் "ஈவது விலக்கேல்' என்று ஆத்திசூடியிலும் எடுத்துரைத்துள்ளார். பாவேந்தர் 'ஈதல் இன்பம்' என்று அறிவுறுத்துகிறார். பிறருக்குப் பயன்பட வாழுகிறோம். எனும் இன்பவுணர்வு – மகிழ்ச்சி உனக்கு ஈதலால்தான் வரும்' எனச் சொல்லுகிறார்; மண்ணக வாழ்வில் இன்புற்று வாழ வழிகாட்டுகிறார்.

'உடைமை பொதுவே' எனும் பாட்டு, பொதுவுடைமைக் கோட்பாட்டை வெளிப்படுத்துகிறது. 'வறுமை ஏமாப்பு' (79) எனும் கருத்துரை, 'ஏமாற்றப்பட்டமையாலேயே வறுமை வருகிறது' எனும் மார்க்சியக் கொள்கையின் மூலத்தைச் சுருக்கித் தருகிறது.

புதிய எண்ணப் போக்குகளை உணர்த்தும் மூதுரைகள் சிலவற்றை இங்குச் சுட்டலாம்.

எழுது புதிய நூல் (7)
ஒற்றுமை அமைதி (10)
காற்றினைத் தூய்மை செய்(14)
(சுற்றுப்புறச் சூழலறிவியல் கருத்து)
கைம்மை அகற்று (21)
(விதவை மறுமணம்)
தொன்மை மாற்று (44)
பார்ப்புப் பொதுப்பகை (58)
பைந்தமிழ் முதன்மொழி (65)
மாறுவது இயற்கை (69)
வீடு எனல் சாதல் (82)
வையம் வாழ வாழ் (85)

இவையாவும் 'புதியதோர் உலகம் செய்யத் தூண்டுவனவாக உள்ளன.

பாவேந்தரின் படைப்பு –2

பாரதிதாசனாரின் இரண்டாவது ஆத்திசூடிக்கு "இளையார் ஆத்திசூடி" எனும் பெயரிடப்பட்டு இருக்கிறது. இதனால், முந்தையது வளர்ந்தவர்களுக்கும், இந்த நூல் இளையவர் (சிறுவர்) களுக்குமாக இயற்றப்பட்டு இருக்க வேண்டும் எனும் எண்ணம் எழுகிறது.

இது பாவேந்தரின் 'குயில்' இதழில் வெளியிடப்பட்டது. இப்பொழுது இவ்விரண்டும் ஒரு நூலாகப் 'பூம்புகார்' வெளியீடாக வந்துள்ளன .

முந்தைய நூலில் கூறப்பட்ட செய்திகள் ஐந்துதான், இதில் இடம் பெற்றுள்ளன. ஆனால்,சொல்லும் முறையிலும், சொல்லாட்சியிலும் புதுமை காணப்படுகிறது.

ஈவது மகிழ்ச்சி (4)
சமமே அனைவரும் (31)
நூல்பயில் நாடொறும் (56)
பிறர்நலம் நாடு (64)
மொழிகளில் தமிழ் முதல் (82)

இவை முந்தைய நூலில் இடம் பெற்ற முதுமொழிகளின் புது வடிவங்களாகும்.

சிறுபிள்ளை (குழந்தை) களுக்காக இயற்றப்பட்டுள்ள 'இளையார் ஆத்திசூடியில்' பல எளிமையான, அன்றாட வாழ்க்கையில் பின்பற்றத்தக்க அறவுரைகள் இடம் பெற்றுள்ளன. அவை :

அழுபவன் கோழை (1)
இரவினில் தூங்கு (3)
ஒற்றுமை வெல்லும் (10)
கணக்கில் தேர்ச்சி கொள் (13)
சரியாய் எழுது (14)
பல்லினைத் தூய்மை செய் (17)
வண்டி பார்த்து நட (19)
கல்வி கற்கண்டு (20)
குப்பை ஆக்காதே (24)
சிரித்துப் பேசு (33)
துவைத்ததை உடுத்து (44)
தோற்பினும் முயற்சி செய் (50)
நேரம் வீணாக்கேல் (58)
மிதியொடு நட (75)
மீன் உணல் நன்றே (76)
மூத்தவர் சொற் கேள் (78)
வேர்க்க விளையாடு (88)

என்பன.

உண்மையிலேயே இவை, குழந்தைகளுக்கும் சிறுவர்–சிறுமியர்க்கும் பெரிதும் பயன்படக் கூடியன. வேறு யாரும் 'மீன் உணவு' சாப்பிடு என்று பரிந்துரைத்தது இல்லை.

முந்தைய 'ஆத்திசூடியில்', தமிழைப் பற்றிய குறிப்பு ஒன்றுமே கிடையாது. ஆனால், 'இளையார் ஆத்தி சூடியில்

அவ்வைத் தமிழ்த்தாய் (12)
தமிழ் உன்தாய் மொழி (15)
தைப் பொங்கல் இனிது (48)
முத்தமிழ் முக்கனி (77)
மொழிகளில் தமிழ் முதல் (82)
வள்ளுவர் நூல்பயில் (83)
வெல்லத் தமிழ்பயில் (87)

என்பன தமிழையும், தமிழ்ச்சான்றோர்களையும், தமிழர் திருநாளையும் சுட்டுகின்றன. சிறுவர்களுக்குத் தாய் மொழிப்பற்றை ஊட்ட வேண்டும் எனும் நோக்கத்தால் இவற்றைப் புரட்சிக் கவிஞர் இயற்றியுள்ளார்.

இவ்விரு 'ஆத்திசூடிகளும்' பாரதியார் காட்டிய வழி யினைப் பின்பற்றியுள்ளன என்பது உண்மை. ஆனால், முதலில் கண்ட 'பாரதிதாசன் ஆத்திசூடியின்' ஆழமும், நயமும், பெருமிதமும் அவருடைய இரண்டாவது ஆத்திசூடியில் இடம் பெறவில்லை என்பதும் ஒப்புக்கொள்ளத்தக்க உண்மையாகும்.

வாணிதாசரின் ஆத்திசூடி

புதுச்சேரியைச் சேர்ந்த புலவர் பெருமான் வாணி தாசனார்; பாரதிதாசனாரின் அணுக்கத் தொண்டராக வாழ்ந்தவர். கவிஞர் வாணிதாசரைத் தமிழகத்தின் 'வேட்ஸ்வொர்த்து' எனவும், 'தாகூர்' எனவும் அறிஞர் போற்றுவர்.தாய்மொழிப் பற்றும், இனப்பற்றும் வாய்ந்தவர் இவர். இவருடைய படைப்புகளில், இயற்கை கொஞ்சும்; உவமை உவகையூட்டும்; கற்பனை மெல்லிய பூங்காற்றாய் நம் சிந்தனைக்கு இன்பம் நல்கும்; கருத்துக்கள் உள்ளத்தில் எழுச்சி உண்டாக்கும். இயற்கையின் 'எழிலோவியத்தை' எளிய சொற்களில், கவிதைகளாக இவர் தீட்டியுள்ளார்; புரட்சி மனப்போக்கு வாய்ந்த மறுமலர்ச்சிக் கவிஞர் இவர்.

தம்முடைய 'புதிய ஆத்திசூடியைப் புதிய முறையிலேயே இக்கவிஞர் தொடங்குகிறார்.

ஆத்தி மலர்தேடி அன்னை தமிழ் முடியிற்
சூட்ட முனைந்தேன் தொகுத்து

எனத் தமிழன்னைக்கு ஆத்திப் பாமாலையைச் சூட்டுவதாக அறிவிக்கிறார். இதனால், 'ஆத்திசூடிய சிவபெருமானுக்கு'உரிய கடவுள் வாழ்த்தினைத் 'தமிழ்த்தாய் வாழ்த்தாக இவர் மாற்றியமைத்துள்ளமை புலனாகின்றது. இவருடைய அறவுரைகளில் புத்துலகச் சிந்தனையாகப் பொலிவுறுவன பல உள்ளன.[30] அவற்றில்

இழிதொழில் இலைசெய் (3)
உடைமை பொதுசெய் (5)
கெஞ்சி வாழேல் (19)
சாதிப் பிரிவிகழ் (26)
தாய்மொழி வளர்த்திடு (40)
நாட்டிற்கு உயிர்விடு (52)
பகுத்தறிவோடு வாழ் (63)
பெண்ணடிமை தவிர் (69)
மீசை முறுக்கு (78)
முப்பால் கைவிடேல் (79)
வெளவாலாய் வாழேல் (95)

இவை மாறிவரும் தமிழ்ச் சமுதாயத்தின் தேவைகளுக்கு ஏற்ற வகையிலான சமகாலச் சிந்தனைகளாகவும், ஏற்றமிகு எதிர்காலத்தைப் படைப்பதற்கான அறவுரைகளாகவும் உள்ளமை கருதத்தக்கதாகும்.

சிந்தனைச் செம்மலின் 'ஆத்திசூடி'

இன்று வாழும் தமிழறிஞர்கள் இடையே பேராசிரியர் டாக்டர் ந. சஞ்சீவி கட்டற்ற சிந்தனையாளராக விளங்குபவராவர்;

30 ச. மெய்யப்பன், (பதி.), புதிய ஆத்திசூடிகள் பன்னிரண்டு, பக். 12–18

தமிழ்ப் பண்பாட்டின் சிறப்பியல்புகளைப் போற்றுபவர்; ஆனால், அதே சமயத்தில் பயனற்றவற்றை வெறுத்து ஒதுக்குபவர்; இன்றைய தமிழனுடைய வாழ்க்கைக்கு வளமூட்டும் எத்தகைய புதுமைக் கருத்துகளையும் போற்றி வரவேற்பவர்.

தம்முடைய ஆத்திசூடிக்கு, 'பொதுவுடைமை ஞான அறிவுசூடி' எனும் மற்றொரு பெயரையும் இவர் சூட்டியுள்ளார். ஆசிரியரின் புதுமை வேட்கையை – பொதுவுடைமை நாட்டத்தை இந்த மாற்றுத் தலைப்பு வெளிப்படுத்துகிறது.

முதலில் இவருடைய அரசியல் சிந்தனையைப் புலப்படுத்தும் பாடல்களைக் காண்போம்:

அறம் செய(ல்) அரசு (1)
செல்வம் பொதுசெய் (33)
நாடு உலகு (54)
பெண்ணைப் பேணு (71)
போட்டி போராம் (75)
மொழிவெறி மோசடி (86)
நாசர் ஒழிக (94)
லாபம் பொதுசெய் (97)
விடுதலை விரும்பு (103)

இக்கால உலகில் நிலவும் தீமைகளை, கொடுமைகளை, ஏற்றத்தாழ்வுகளை அடியோடு போக்க இயலாவிட்டாலும், அவற்றின் தீய விளைவுகளைக் குறைப்பதற்கும், கட்டுப்படுத்துவதற்கும் இப்பாடல்கள் வழிகாட்டுகின்றன.

அடுத்து. இவருடைய வாழ்வியல் சிந்தனைகளைப் பார்ப்போம்:

இயற்கை எல்லாம் (3)
எண்ணமே எல்லாம் (7)
கல்வி காசே (14)
காதலும் கற்பனை (15)
கூத்து உலகம் (18)
சாவு, சாகடி (28)

சோதனை சாதனை (37)
தொண்டே தொழுகை (50)
மதமொரு மடமை (7)
மாணவர் மணிகள் (78)
யாறுகள் இணை; அணை (90)
லீலை இயற்கை (98)
வெற்றியும் தோல்வியாம் (105)

என்பன ஏமாற்றமும் அதிர்ச்சியும் இல்லாமல் இவ்வுலகில் வாழ, வழி காட்டுவனவாக உள்ளன.

பாரதியாரைப் போன்ற சமயப் பொதுமை உணர்த்தும் குறிப்புகள் இரண்டு இப்பொதுவுடைமை ஞான அறிவு சூடியில் உள்ளன.

கிறித்து தியாகம் (16)
முகமது மொழிகேள் (81)

என்பன இங்குக் குறிப்பிடத்தக்கன.

'ஔவை போல் வாழ்' (12) என அறிவுறுத்தும் பேராசிரியர், வேறுயாரும் சொல்லாத ஓர் அறிவுரையைக் கூறியுள்ளார். 'மைதுனம் மறுத்திடு; மறந்திடு[31] என்பது அந்த அறிவுரை. 'பெண்ணோடு அல்லது ஆணோடு கூடி இன்புறுவதை வேண்டாமென ஒதுக்கு; பிறகு அதை மறந்து விடு' என்பது இதன் பொருளாகும். இது எவ்வாறு குழந்தைகளுக்கும் சிறுவர்களுக்கும் பயன்படும் என்பது என் சிற்றறிவுக்குப் புலனாகவில்லை; தமிழ்நெறிக்கு (அன்பின் ஐந்திணை மரபிற்கு) மாறான ஒரு கருத்தாகவே. இதனை நான் கருதுகிறேன். இதனால், மனித குலத்திற்கு உண்டாகக் கூடிய நன்மை யாது? கடுமையான துறவு நெறியைப் போதித்த தொடக்ககால சமண சமயத்தின், பௌத்த சமயத்தின் இடைக்கால கிறித்துவ சமயத்தின் கொள்கையாகவே இதனைக் கருதி, உலகம் இதனைப் புறக்கணிக்கும்.

---

31 ச.மெய்யப்பன், (பதி), மு. கு. நூ. பக். 23.

வரதராசன் ஆத்திசூடி

தமிழார்வலராகவும், அறிஞராகவும் உள்ள அறிஞர் வரதராசன் பாடியுள்ள ஆத்திசூடி, பழமையும் புதுமையும் கலந்த வாழ்வியல் தத்துவங்களை எடுத்துரைக்கிறது.

பழமை	புதுமை
ஊருடன் சேர் (6)	அடிமை விரும்பேல் (1)
'ங'வென வாகுக (15)	தமிழனைப் பேண் (20)
கடவுளை நம்பு(32)	சத்துணவு கொள் (43)
குருவினை மறவேல் (36)	மிரட்டி வாழேல் (89)
வைதிகம் இகழேல் (106)	ஊழ்வலி மதியேல் (103)

என்பன சில சான்றுகளாகும். இவரும் ''புணர்ச்சி" (மைதுனம்)யைப் பற்றிப் பாடியுள்ளார். 'அளவாக இரு' எனும் கருத்தில் 'மைதுனம் மீக்கொளேல்'[32] என்று அறிவுறுத்துகிறார்.

யாருக்காக இவர்கள் 'ஆத்திசூடி'யைப் படைத்துள்ளார்கள் எனும் ஐயம், இத்தகைய அறவுரைகளால் எழாமல் போகாது. 'சிறுவர் உளவியலுக்கு இவ்வாறு கூறுவது பொருந்துமா?, எனும் எண்ணமும் தோன்றுகிறது. பாரதி காட்டிய நெறியில் இருந்து இவர்கள் சிறிது விலகிச் சென்றுவிட்டமை வெளிப்படையாகத் தெரிகிறது.

சூடிகள் படைத்த சுடர்மணிகள்

'ஆத்திசூடி' எனும் பெயரில் உள்ள முதற்பகுதியை– 'ஆத்தி' எனும் சொல்லை–நீக்கி விட்டு, 'சூடி' எனும் சொல்லோடு, 'தமிழ்', 'ஆய்வு', 'நெறி'. 'அறவியல்', 'நீதி' எனும் சொற்களைச் சேர்த்தும் அல்லது தம்முடைய பெயரைச் சேர்த்தும் அறுவகையான 'சூடிகளை'ச் சில அறிஞர்கள் இயற்றியுள்ளனர். அவை

---

32 ச.மெய்யப்பன் (பதி.), மு.கு.நூ. பக். 34.

1. டாக்டர் வ. சுப. மாணிக்கம் – தமிழ்சூடி

2. டாக்டர் தமிழண்ணல் –ஆய்வுசூடி

3.கவிஞர் நாரா. நாச்சியப்பன் – நெறிசூடி

4. ச. மெய்யப்பன் – அறிவியல்சூடி

5. சோம.இளவரசு – நீதிசூடி

6. ரெ. முத்துக்கணேசன் – முத்துச்சூடி[33]

இவ்வறுவருள் நாரா. நாச்சியப்பன் ஒருவரே, நாடறிந்த நற்றமிழ்க் கவிஞராவர். ஓரளவிற்கு ரெ. முத்துக்கணேசனைக் கவிஞர் எனலாம். மற்ற நால்வரும் தமிழறிஞர்களேயாவர்.

பேராசிரியர் வ.சுப.மாணிக்கம் அவர்களுடைய 'தமிழ்சூடி', சில புதுமைப் போக்குகளைக் கொண்ட தாகும்.

தமிழ் சூடி வழிபாடு செய்வாய் குழந்தாய்!
தாய் மொழி தவறாது கற்பாய் குழந்தாய்!
திருக்குறள் கண்போலத் தெளிவாய் குழந்தாய்!

எனத்தொடங்கிறது 'தமிழ் சூடி'. தொடக்க வாசகமே, இந்நூல் குழந்தைகளுக்காகவே என்பதைத் தெரிவிக்கிறது. இயற்றப் பட்டது

இந்நூலின் சிறப்பியல்புகள் சிலவற்றைக் காண்போம்:

அகத்தமிழ் படி (1)
ஆழ்வார் நெறிநில் (2)
இந்தியனாய் இரு (3)
ஐ.நா. நன்று (9)
'ஓசி' கேளேல் (11)
கண்ணகி வழிநட (19)
இந்தியை விலக்கு (21)
காந்தி வழிச்செல் (33)
கீதை நெறிநில் (35)
கொரான் வழிநில் (41)
கோதுமை யுண் (42)
தமிழிசை பரப்பு (61)
திருக்குறள் வரப்பண் (63)
தீண்டாமை ஒழி (64)
தேவாரம் பாடு (68)
தையல் பழகு (69)
தொல்காப்பியம் படி (70)
நூல்கள் எழுது (77)

---

33 ஷெ

பாரியின் இரங்கு (85)
புறத்திணை படி (88)
பூம்புகார் போற்று (89)
பெரியார் வழிநில் (90)
பேகனைப் புகழ் (91)
மதுவை விலக்கு (96)
முத்தமிழ் பரப்பு (100)
மே நாள் அயர் (102)
வானொலி கேள் (112)
விவிலியம் படி (113)

என்பவை புத்தம் புதிய சிந்தனையை ஊட்டுவனவாக உள்ளன. சமய சமரசம், தமிழ்த்தேசியம், இந்தியத் தேசியம், அனைத்துலக மனித நேயம், சமுதாய முன்னேற்றத்திற்கான ஆக்கச் சிந்தனைகள் முதலியன 'வள்ளுவம் வழங்கி வான்புகழ் கொண்ட பேராசிரியரின் 'தமிழ்சூடியில்' ஒளிவிட்டுப் பிரகாசிக்கின்றன. பாரதியின் வழியில் செல்ல முயலும் அறிஞர், இக்காலத்தின் சூழலுக்கும் தேவைகளுக்கும் ஏற்பப் பல புதிய அறவுரைகளை அறிவுறுத்தியுள்ளமை அவருடைய முன்னறிதிறனிற்கு உரைகல்லாக விளங்குகிறது.

டாக்டர் தமிழண்ணலின் ஆய்வு சூடி'யில் சில புதிய அறிவுரைகள் இடம் பெற்றுள்ளன. இந்நூல் குழந்தைகளுக்காக இயற்றப்படவில்லை.மேல்நிலைப்பட்டங்களுக்காக (M. Phil; PH.D.) ஆராய்ச்சி (ஆய்வு) செய்வோருக்குக் கூறப்படும் அறிவுரைகளைக் கொண்டதாக உள்ளது. ஓரளவிற்கு இந்நூலின் தலைப்பே, இந்தப் பொருளை உணர்த்துவதாக அமைந்து இருக்கிறது.

அச்சுப் பிழை தவிர் (16),
ஆய்வடங்கல் நிறைவு செய் (24),
மூன்று படி எடு (103)

என்பன போன்ற அறிவுரைகள் ஆய்வாளருக்கேயுரியன. மற்றும், இந்த 'ஆய்வு சூடி', தமிழின் அகரவரிசை முறையில் இயற்றப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

அறநெறியினைப் போற்றும் சூடி.

கவிஞர் நாரா. நாச்சியப்பனின் 'நெறிசூடி'யின் பாயிரம்,

"பழையன கழிந்து புதியன புகுந்து
விளைவன அனைத்தும் வேறு வேறாய்
மாறினும் சட்டமும் நாட்டு வழக்கும்
ஏறு மாறாய் இருப்பினும் நெறிமுறை
என்றும் மாறுவ தில்லை என்றே
குன்றில் ஏறி நின்றுகூ றுவனே!
அறமிது வென்றே அவ்வை கூறிய
திறத்தினை மறுப்பார் தெரியா தவரே!
அன்னை அவளின் ஆத்தி சூடியைப்
பின்னும் விளக்கம் பிறந்த நூலென
இதனை அறிஞர் ஏற்றிடல் வேண்டும்.[34]

என, இந்நூல் இயற்றப்பட்டதன் நோக்கத்தைத் தெளிவுறுத்துகிறது. இதனுள்

கடல் கடந்துறவு கொள் (14)
சட்டம் வகுத்து நில் (16)
காது குத்தேல் (33) சைவ உணவுதேர் (51)
பைக் களவுக்கு (Pick–pocket)
இடங்கொடேல் (83)

என்பன போன்ற புதிய அறிவுரைகள் காணப்படுகின்றன.

மற்ற மூவருடைய சூடிகளும் இன்றைய உலகியல் வாழ்வில் வெற்றி பெறுவதற்கு உதவக்கூடிய, நடை முறைக்குகந்த அறிவுரைகளைக் கூறுகின்றன.

கவியோகியின் பொதுமை நெறி

'ஆத்திசூடி ' எனும் பெயரை இடாமல், ஆனால், ஆத்திசூடியின் அமைப்பினையும் போக்கினையும் பின்பற்றிக் கவியோகி சுத்தானந்த பாரதியார் ஒரு நூல் இயற்றியுள்ளார். அந்நூலிற்குப் 'பொதுமை நெறி' என்பது பெயர். சுப்பிரமணிய பாரதியாரோடு நெருங்கிப் பழகியவர் கவியோகி என்பதை

34 மெய்யப்பன், மு.கு.நூ.பக்.24–25

முன்னரே கண்டோம். பல நிலைகளிலும், பல துறைகளிலும் பாரதியாரின் தாக்கத்தை எவ்வெவ்வாறு இவர் பெற்றுள்ளார் என்பதையும் இந்நூலின் முற்பகுதியில் நினைவுகூர்ந்தோம்.

இவருடைய 'பொதுமை நெறியில்' சமயப் பொதுமை நாட்டமும், ஆன்மிக உணர்வும் மேலோங்கி நிற்கின்றன.

இந்தப் போக்கினை,
அறிவே ஆன்மா (1)
ஐந்தை அடக்கி யாள் (9)
ஓமுயர் மந்திரம் (11)
தொண்டால் வழிபடு (52)
பொதுநெறி போற்றிவாழ் (76)
மூச்சைச் சமன்செய் (83)
யோஹா தனஞ்செய் (91)

என்னும் முதுமொழிகள் நன்கு வெளிப்படுத்துவனவாகும் இந்த வகையில், கவியோகியின் 'பொதுநெறி' உலகியலோடு, ஆன்மிகவியலும் கலந்த அறிவுரைகளைக்கொண்டதாகக் காட்சி அளிக்கிறது,

பழமையில் புதுமை

அவ்வையார் தொடங்கி வைத்த 'ஆத்திசூடி' எனும் சிறுவர் இலக்கிய வகை, பாரதியாரின் கைப்பட்டுப் புதுப் பொலிவு பெற்று, பட்டொளி வீசத் தொடங்கியது. அவருடைய தாக்கத்தை வேறு துறைகளில் பெற்ற கவிஞர்கள் பலர். அவர்கள் எல்லாரும் பலவகைத் தொழில் செய்த அல்லது 'நமக்குத் தொழில் கவிதை' என வாழ்பவராவர்.

ஆனால், பாரதியின் 'புதிய ஆத்திசூடி'யைப் பின்பற்றி, புத்தம் புதிய படைப்புகளைப் படைத்தவர்களுள் கவியோகியும், நாரா. நாச்சியப்பனும் நீங்கலாக மற்றவர்கள் எல்லாரும், தமிழ்ப் புலவர்கள்; தமிழாசிரியராகப் பணிபுரிந்தவர்; பணிபுரிபவராவர். பா வே ந் த ரும், வாணிதாசரும் உலகறிந்த கவிஞர்களாவர்.

ஆனால், சிறப்பு வாய்ந்த தமிழாசிரியர்களாகவும் அவர்கள் விளங்கினர் என்பதை நாம் மறத்தலாகாது. யாதோ ஒரு வகை உந்துதல் சக்தி தமிழ்ப் புலவர்களை ஆட்கொண்டிருக்கிறது. அதனாலேயே, அவர்கள் 'புதிய ஆத்திசூடி'யின் பாணியைப் பின்பற்றியுள்ளனர். (தமிழாசிரியரான) கவிமணியே இதற்கு விதிவிலக்கு.

நாமக்கல் கவிஞர், பாலபாரதி, ச.து.சு. யோகி, குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா போன்றவர்கள், 'புதிய ஆத்திசூடி'யினைப் பின்பற்றி, சிறு 'பரிசோதனை' முயற்சிகள் கூட செய்யவில்லை என்பதும் இங்குக் கருதத் தக்கது.

இருபதாம் நூற்றாண்டின் எண்பதுகளில் 'குழந்தை இலக்கியம் – சிறுவர் இலக்கியம்' எதிர்பாரா வகையில் பேரளவிற்குப் பல துறைகளில் வளர்ச்சியடைந்து இருப் பதை டாக்டர் பூவண்ணனின் 'குழந்தை இலக்கிய வரலாறு' எடுத்தியம்புகிறது. சிறப்பாகக் கதை, கவிதைத் துறைகளில் குழந்தை இலக்கியம் வியப்பூட்டும் வகையில் முன்னேற்றம் கண்டிருக்கிறது. சண்முக சுப்பையா என்பவர் 'கண்ணன் என் தம்பி' எனும் நூலினைப் புதுக் கவிதையிலேயே படைத்துள்ளார்.

குழந்தைப் பாடல் (கவிதை) இயற்றுவதற்குப் பிள்ளையார் சுழி' போட்டவர் நம் தேசிய கவிஞர் சுப்பிரமணிய பாரதியார். அவர் காட்டிய வழியில்,தளர் நடையிட்ட குழந்தைக் கவிஞர்கள். இன்று இளமைத் துடிப்புடன் பல்வேறு துறைகளில், பலவகைப்பட்ட புதிய பாடு பொருள்களைத் தம் பாடல்களில் அமைத்துப் பாடி வருவது, பாரதியாரின் மரபு, 'வாழையடிவாழையாக' வளர்ந்து வருவதற்குப் போதிய, புகழ்மிக்க சான்றாகும்.

10

சுயசரிதையும்
மொழிபெயர்ப்பும்

'வாழ்க்கை வாழ்வதற்கே! வளமாக,நலமாக, சிறப்பாக வாழ்வதற்கே!' எனும் கொள்கையுடன் சுப்பிரமணிய பாரதியார் வாழ்ந்தார். வாழுகின்ற காலத்தில் தன்னைத் தான் ஒருவன் அறிந்துகொள்ள வேண்டும்; தன்னைப் பிறர் அறிந்து கொள்ளவும் செய்ய வேண்டும்; மற்றும் தான் வாழும் சமுதாயத்தின் நாடித் துடிப்பைப் புரிந்துகொள்ளவும் முயலவேண்டும். இத்தகைய எண்ணப் போக்குடன் செயல்படுகின்ற மக்கள், 'வரலாறு படைக்கும்' மாமனிதர்களாவர் என்பது அவருடைய நம்பிக்கை!

தேசிய எழுச்சி வீறு கொள்ளத் தொடங்கிய காலத்தில் வாழ்ந்தவர் பாரதியார். பழம் பெரும் தேசத்தலைவர்கள், இதிகாசமாந்தர்கள், பேரரசர்கள், ஞானிகள், சான்றோர்கள் போன்றவர்களுடைய முறையான வாழ்க்கை வரலாறுகள் இந்தியர்கள் இடையே, சிறப்பாகத் தமிழர்கள் இடையே மிகவும் அருகிய நிலையில் வழங்கி வந்ததை அறிந்து பாரதியார் வருத்தம் அடைந்துள்ளார்.
'புராணங்கள்' எனும் பெயரால் உலவும் பெரியோர்களின் வாழ்க்கை வரலாறுகள், கற்பனை நிறைந்தனவாகவும், 'அற்புத' நிகழ்ச்சிகளுக்கே முதன்மை இடம் தருவனவாகவும் உள்ளதை நன்கு அறிந்தவர் பாரதியார். இந்தக் குறைகள் அற்ற

வாழ்க்கை வரலாறுகள் தமிழில் எழுதப்படவேண்டும் என்பதில் அவர் நாட்டம் கொண்டு இருந்தார். ஒரு சான்றோருடைய வரலாற்றை. மற்றவர்கள் எழுதுவதைவிட, அவரே எழுதினால், அதில் கற்பனைக்கு இடம் இல்லாமல் இருக்கும் என்பதையும் பாரதியார் உணர்ந்து இருந்தார்.

தன் வரலாறு

இவ்வாறு எழுதப்படுவனவற்றைத் 'தன் வரலாறு. (Autobiography) என மேற்கு நாடுகளில் போற்றப்படுவதையும் பாரதியார் அறிந்திருந்தார். ஆனால், நம் நாட்டில், எத்துணைப் பெரியவராயினும், தம்முடைய வரலாற்றைத் தாமே, எழுதிவைக்கும் பழக்கம் கிடையாது. இவ்வாறு எழுதினால், 'தன்முனைப்பே' பெருகும் என்று நம் முன்னோர்கள் கருதினர். இவற்றை எல்லாம் நன்கு பாரதியார் உணர்ந்து இருந்தார்.

எனினும், 'தன் வாழ்க்கை வரலாற்றால்', நாம் வாழும் சமுதாயத்திற்கும், வருங்காலத் தலைமுறையினர்க்கும் நன்மையே உண்டாகும் என்னும் எண்ணத்தால் உந்தப்பட்டு, நம் தேசிய கவி, 'சுயசரிதை' (ஸ்வசரிதை) எனும் பெயரால், முதன்முதலாகக் கவிதை வடிவில், தம் வரலாற்றைத் தந்துள்ளார். "பூரணத்துவத்தைத் தேடித் துடிக்கின்றது கவி உள்ளம். தன்னைத் தானே அறிந்து கொள்வதன் மூலம், தனது காலத்தையும் சமூகத்தையும் உணர்ந்து கொள்கின்றான் கவிஞன். பாரதியின் கவிதைகளிலே, இந்தப் பண்பினையே நாம் தெளிவாகக் காண்கிறோம்."[1] எனும் திறனாய்வாளரின் கருத்து, நாம் மேலே கண்ட பாரதியாரின் சிந்தனைப் போக்கினைப் புரிந்து கொள்ள உறுதுணையாகிறது. ஐரோப்பியக் கல்விமுறையின் தாக்கத்தால், 'சுயசரிதை' படைக்கும் பணியில் பாரதியார் ஈடுபட்டார்.

---

1 க. கைலாசபதி, இரு மகாகவிகள், பக். 83

பாரதியாருக்கு முன்பு 'சுயசரிதை' எனும் பெயரால், கவிதை வடிவில் வேறு யாரும் தமிழில் எழுதியதாகத் தெரியவில்லை. 'ஸ்வசரிதை' எனும் 49 செய்யுள்களைக் கொண்ட பாடற்பகுதியும், 'பாரதி – அறுபத்தாறு'எனும் செய்யுள் எண்ணிக்கையால் பெயரிடப்பட்டுள்ள கவிதையும் சுப்பிரமணிய பாரதியாரின் தன் வரலாற்றினை அரைகுறையாக எடுத்துரைக்கின்றன. இந்தக் கவிதைகளின் தலைப்புகளே புதுமையானவை. அவரே, புதுவகையான இலக்கியத்தைத் தாம் படைத்துள்ளதாகக் கூறியுள்ளார்.

> ஸ்வசரிதை, 1910–ஆம் ஆண்டு நவம்பர் திங்களில் வெளியிடப்பட்டது. அதனுடைய முகவுரையில்,
> இச்சிறிய செய்யுள் – நூல், விநோதார்த்தமாக எழுதப்பட்டது... இதன் இயல்பு தன் கூற்று எனப் படும். அதாவது, கதாநாயகன் தன் சரிதையைத்தான் நேராகவே சொல்லும் நடை இக்காவிய முறையில் நவீனமானது.[2]

என்று எழுதியுள்ளமையால், இதனைத் தெளியலாம்.

தன் வாழ்க்கை வரலாற்றுத் துணுக்குகள் சில, பழைய இலக்கியங்களில் இடம் பெற்றுள்ளன. ஆனால், முதன் முதல், முறையான தன் வாழ்க்கை வரலாறு' சுப்பிரமணிய பாரதியாராலேயே தமிழில் படைக்கப்பட்டது.

''தமிழிலே சுயசரிதை பாடிய முதற்கவி நம் சுப்பிரமணிய பாரதிதான்! அது அவர் படைத்த புதுமை இலக்கியம்"[3] என்று சிலம்புச்செல்வர் அறுதியிட்டு உறுதியாகக் கூறியுள்ளார்.

பாரதியின் 'சுயசரிதை' பாடல்களின் போக்கில் சில புதுமைகள் காணப்படுகின்றன. முதலில் அது முழுமை

---

2 பா. கவி. பக்.226

3 ம. பொ. சிவஞானம், பாரதியாரின் பாதையிலே. பக். 75.
மற்றும் டாக்டர் சாலினி இளந்திரையனின் 'வாழ்க்கை வரலாற்று இலக்கியம்' எனும் நூலினைக் காண்க.

யாக அமையவில்லை; அவருடைய வாழ்க்கை வரலாற்றை ஓடும் திரைப்படமாக்கிக் காட்டவில்லை; இடையிடையே 'மற்றொன்று விரித்தல்' இடம் பெற்றுள்ளன. அகமுக நோக்கில், 'நான் யார்? என் உள்ளமார்? என் ஞானங்கள் யார்?' என்பதை ஆராய்ந்து அறியவும் – அறிவிக்கவும் பாரதியார் முயன்றுள்ளார். சுருங்கக் கூறுவதானால், 'ஆன்மிக' அனுபவங்களைப் புலப்படுத்தும் பாடல்களாகவே அவை உள்ளன.

அவற்றின் முற்பகுதி சுயசரிதை அமைப்பில் உள்ளன. ஆனால், பிற்பகுதியோ வேறுபட்ட ஒன்றாக – ஆன்ம விசாரணையைப் பற்றியதாகவே தோன்றுகிறது. இவை பாரதியாரின் மனத்தின் வளர்ச்சி நிலைகளைக் காட்டு கின்றன.

எனினும், பாரதியாரின் 'ஸ்வசரிதையும்', 'பாரதி – அறுபத்தாறு'ம் தமிழ் இலக்கியத்துள் ஒருவகை செய் முறை முயற்சியாக அமைந்துள்ளன. உரைநடையில், அக்காலத்தில் 'என் சரிதம்' எழுதிய பெரியார்கள் வாழ்ந்து வந்தனர். பிறவிக் கவிஞரான பாரதியாரோ, தம் வாழ்க்கை வரலாற்றைக் கவிதை வடிவில் தருவதற்கு முனைந்துள்ளார். இம் முயற்சி வெற்றிமிக்க முயற்சியாக அமையவில்லை.

பாரதியாரைப் போன்று சுயசரிதையைக் கவிதையில் படைத்தோர் மிகமிகக் குறைவு. பாரதியாரின் நெருங்கிய தோழரும், சமகாலத்தமிழ் அறிஞரும், விடுதலைப் போராட்ட மாவீரருமான, வ. உ. சிதம்பரனார், நீண்ட நெடும் பாட்டாகத் தம் வரலாற்றைப் படைத்துள்ளார்.

வ.உ.சிதம்பரனாரின் 'சுயசரிதை'இரண்டு பகுதிகளைக் கொண்டதாக வெளியிடப்பட்டுள்ளது. முற்பகுதி சிதம்பரனாரின் தூத்துக்குடி வாழ்க்கை வரையில் நிகழ்ந்த முக்கியமான நிகழ்ச்சிகளைச் சித்திரிக்கிறது. இரண்டாம் பகுதி, சிதம்பரனாரின் பிற்கால வாழ்க்கையை விளக்குகிறது. ஆசிரியப்பா வடிவில் சொல்நயம்,பொருள்நயம் வாய்ந்ததாக வ.உ.சியின் சுயசரிதை அமைந்து இருக்கிறது.

இவ்விருவருக்குப் பிறகு வேறுயாரும் கவிதையில் 'சுயசரிதை' இயற்றி இருப்பதாகத் தெரியவில்லை.

மொழிபெயர்ப்பு நூல்கள்

பிறமொழிகளில் உள்ள அறிவுச் செல்வத்தை, நம் தமிழ் மொழியில் பெயர்த்துத் தரும் பணியினை நம் முன்னோர்கள் சிலர் செய்துள்ளனர். "மதுராபுரி சங்கம் வைத்து, மாபாரதம் தமிழ்ப்படுத்"தும் பணியைச் சங்க காலப் பாண்டிய வேந்தர்கள் மேற்கொண்டதாகச் சின்னமனூர் செப்பேடு தெரிவிக்கிறது. பாரதியாருக்கு முற்பட்டோர் செய்த மொழி பெயர்ப்புகள் பெரிதும் சமயச் சார்புடையனவாக உள்ளன.

பாரதியாரின் நோக்கு

உலகம் முழுவதிலும் தமிழ்மொழியைப் பரப்ப வேண்டும் – 'தேமதுரத் தமிழோசை உலகம் எலாம் பரவும் வகை செய்தல் வேண்டும்'– எனும் நோக்கொடு ஒல்லும் வகையெல்லாம் ஓயாது தமிழ்ப்பணி ஆற்றியவர் பாரதியார்!

அதே சமயத்தில்,
பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்
தமிழ்மொழியில் பெயர்த்தல் வேண்டும்[4]

எனும் தெளிவு உடையவராக அவர் இருந்தார்.

புத்தம் புதிய கலைகள் – பஞ்ச
பூதச் செயல்களின் நுட்பங்கள் கூறும்
மெத்த வளருது மேற்கே! – அந்த
மேன்மைக் கலைகள் தமிழினில் இல்லை[5]

என்று பிறர் கூறும் குறைகளை நீக்குவதற்கும் போக்கு வதற்கும் தமிழ் மொழியை வளப்படுத்த வேண்டும். அதற்குரிய வழிகளில் மொழி பெயர்ப்பே சிறந்த வழி என்பதை அவர் நன்குணர்ந்து இருந்தார்.

---

4 பா. கவி. பக். 169
5 ஷெ 166

மாபெரும் கவிஞராக விளங்கும் பாரதியின் வாழ்க்கைப் பத்திரிகைப்பணியிலேயேபெரிதும்கழிந்தது.மொழிபெயர்ப்புகள் பலவற்றைத் தேவை கருதியும், ஆவல் காரணமாகவும் அவர் செய்துள்ளார். மொழிபெயர்ப்பாளனுக்குப் பலமொழி அறிவு இன்றியமையாததத் தேவையாகும்.'யாமறிந்த மொழிகளிலே எனத் தொடங்கும் "தமிழ்' பற்றிய பாடல் அடி, அவருக்குப் பல மொழிகளில் புலமை இருந்ததைப் புலப்படுத்துகிறது.[6] இதனை,

> உலகத்திலுள்ள ஜாதியர்களிலே ஹிந்து ஜாதி அறிவுத் திறமையில் மேம்பட்டது. இந்த ஹிந்து ஜாதிகளுக்குத் தமிழராகிய நாம் சிகரம் போல் விளங்குகிறோம். எனக்கு நாலைந்து பாஷைகளிலே பழக்கம் உண்டு. இவற்றிலே, தமிழைப் போல வலிமையும், திறமையும், உள்ளத் தொடர்பும் உடைய பாஷை வேறொன்றுமே இல்லை.[7]

என்று எழுபது ஆண்டுகளுக்கு முன்னரே தெரிவித்துள்ளார். இதனால், பாரதியாருக்கு மொழி பெயர்ப்பாளனுக்குரிய அடிப்படைத் தகுதி இருந்தமை புலனாகிறது.

மொழி பெயர்ப்புப் பணி தம்முடைய அறிவை வளர்த்துக் கொள்ள உதவியதாகவும் பாரதியார் கருதியுள்ளார்.

> ... என்றாலும் இந்த மொழி பெயர்ப்பு வேலை எனக்கு எவ்வளவு ஒத்தாசை செய்தது தெரியுமா? இங்கிலீஷ் ரொம்ப நயமான பாஷையானதால், இங்கிலீஷ் எழுத்தின் கருத்து சிதைந்து போகாமல் தமிழர்களுக்கு அதை ஸ்வாரஸ்யமாகச் சொல்லும் பொருட்டு, நேரான தமிழ்ச் சொற்களை நான் கண்டு பிடிக்க வேண்டியதாயிற்று. தமிழ்ப் பாஷையின் கம்பீரமும் ரஸமும் அப்பொழுது இன்னும் தெளிவாய்த் தெரிந்தன.[8]

---

6 ஷெ பக்.166

7 பாரதியார் கட்டுரைகள், 'தமிழ்'

8 ஷெ பக்.167

எனும் கட்டுரைப் பகுதியில், மொழி பெயர்ப்பைப் பற்றி "அவருடைய எண்ணங்கள் யாவை?" என்பது வெளிப்படுகிறது.

முதலில் மொழிபெயர்ப்பாளன் பலமொழி அறிவு உடையவனாக இருக்க வேண்டும் எனும் அவருடைய கருத்தைக் கண்டோம். மூல நூலின் கருத்து சிதைந்து போகாமல், எதையும் மொழி பெயர்க்க வேண்டும் எனும் நோக்கத்தை அவர் புலப்படுத்தியுள்ளார். மொழிபெயர்ப்பு, படிக்கும் மக்களுக்கு அலுப்பு உண்டாகாமல், சுவை பயக்கும் கவர்ச்சி உடையதாக இருக்க வேண்டும் என்பதில் பாரதியார் கவனம் செலுத்தியுள்ளார். பிற மொழிச் சொற்களுக்கு நேரான – பொருத்தமான– சொற்களைத் தேர்ந்து எடுத்து, பயன்படுத்த வேண்டும் எனும் நோக்கு உடையவராகப் பாரதி காட்சி தருகிறார். அந்தப் பொருத்தமான சொற்களும் மக்களுக்கு எளிதில் புரியக்கூடியதாக இருக்க வேண்டும் எனும் கருத்தில், அவர் உறுதியுடையவராக இருந்தமையும் அறியப்படுகிறது. இவை யாவும் மொழிபெயர்ப்பாளனுக்கு இன்றும் பயன்படக் கூடிய நெறிமுறைகளாகும்.

வகைப்பாடு

மொழிபெயர்ப்பை இரண்டு வகையாகக் கூறலாம். ஒன்று பிறமொழிகளில் உள்ளவற்றை நம் மொழியில் பெயர்த்து, தருவது. மற்றொன்று நம்மொழியில் உள்ளவற்றைப் பிறமொழிகளில் மொழியாக்கம் செய்து தருவதாகும். தேசிய கவி சுப்பிரமணிய பாரதியார், இவ்விரு வகை மொழிப்பெயர்ப்புப் பணிகளையும் செய்துள்ளார்.

மொழிபெயர்ப்பை மூன்று வகையாகப் பாகுபடுத்துவர். மொழி பெயர்ப்பு என்பது ஒரு கலை. அந்தக் கலையின் அழகும், நயமும், சுவையும், உணர்வும் மொழிபெயர்ப்புகளிலும் மிளிர வேண்டும். மூல மொழியின் நூலுக்கு மாறுபடாமல், முரண்படாமல் உள்ளதை உள்ளவாறு மொழி பெயர்ப்பதை 'உண்மையான மொழிபெயர்ப்பு' True to the original என்பர்

மற்றொன்று கருத்தைத் தழுவி, மொழியாக்கம் செய்வதாகும். இதனைத் 'தழுவல்' எனவும் 'மொழியாக்கம்' எனவும் கூறுவர். மூல நூலின் கருத்தைச் சுருக்கித் தருதல் வேறோர் வகையான மொழி பெயர்ப்பு இதனைப் 'பொழிப்பு' எனலாம். இம்மூன்று முறைகளையும் ஒருங்கே கொண்டதாக உள்ள மொழிபெயர்ப்பு நூல்களே, தலைசிறந்த மொழிபெயர்ப்புகளாகப் பொன்றாப் புகழைப் பெறுகின்றன. இத்தகைய மொழிபெயர்ப்புகளை "மொழிமறுபடைப்பு ஆக்கங்கள்" (Transcreations) என அறிஞர் போற்றுவர்.

இம்மூவகை மொழிபெயர்ப்பு முறைகளையும் பின்பற்றி, மொழி பெயர்ப்புப் பணிகளைப் பாரதியார் செய்துள்ளார். இம்மூவகை முறைகளும் /ஒருங்கே இணைந்த 'மறுபடைப்பு ஆக்கமாக' அவருடைய 'பாஞ்சாலி சபதம்' விளங்குகிறது.

பாரதியாரின் மொழி பெயர்ப்புப்பணி

சுப்பிரமணிய பாரதியார் மொழி பெயர்ப்புப் பணி மிகவும் பரந்து பட்டது. பத்திரிகாசிரியராக விளங்கிய காரணத்தால், பல்வேறு வகையான செய்திகளையும், எண்ணங்களையும், நூல்களையும் அவ்வப்போது அவர் மொழி பெயர்த்துள்ளார். அவற்றுள் முக்கியமான மூன்று துறைகள் நம் ஆய்வு நோக்கிற்குப்பயன்படுவனவாகஉள்ளன.மொழிஅடிப்படையில் அவற்றை நாம் பின்வருமாறு வகைப்படுத்தலாம். அவை 1. ஆசிய மொழிகளான சீன, ஜப்பானிய மொழிப் பாடல்களின் மொழி பெயர்ப்புகள், 2. ஐரோப்பிய மொழிகளான ஆங்கில, பிரஞ்சு மொழிப் பாடல்களின் மொழி பெயர்ப்புகள்,3. இந்திய மொழிகளான சம்ஸ்கிருதம். வங்காள மொழிகளுடைய நூல்களின், பாடல்களின் தமிழாக்கங்கள். 'இவற்றுள்ளும் இலக்கிய மொழிபெயர்ப்புகளே' நம்முடைய நோக்கிற்குப் பயன்படுவனவாக உள்ளன.

ஆசிய மொழிப்படைப்புகள் தமிழாக்கம்

ஆசிய மொழிகளுக்குள் (இந்திய மொழிகள் நீங்கலாக உள்ள) சீன, ஜப்பானிய மொழிப்பாடல்கள் சிலவற்றைப் பாரதியார் மொழி பெயர்த்துள்ளார். ஆங்கிலத்தின் வாயிலாகவே சீன,ஜப்பானிய மொழிப்பாடல்களைப் பாரதியார் சுவைத்துள்ளார் என்பது தெரிகிறது.

சீனமொழிப்பாடல்

'சியூ–சின்' என்னும் சீனநாட்டுப் பெண் எழுத்தாளருடைய படைப்புகள் சிலவற்றைப் பாரதியார் தமிழில் தந்துள்ளார். இதற்கு மூலம் 'லயோநல் கிப்ஸீ' என்பவருடைய ஆங்கில நூலாகும். அந்நூலின் இடையிடையே உள்ள கவிதைகளைப் பாரதியார் தமிழாக்கம் செய்துள்ளார். சீன மொழிக்கவிதையை

சியூ யூசி யூதெங்
சவிஷா ஜென்

என்று முதலில் எழுத்துப் பெயர்ப்பு செய்து பிறகு அதன் தமிழாக்கத்தைப் பாரதியார் தந்துள்ளார்.

மாரி கால காற்றும்
மாரி நாள் மழையும்
மார் புண்ணாக வருத்துகின்றனவே

என்று மொழி பெயர்த்துள்ளார்.

மற்றும்,
விடுதலைக்கு மகளிர் எல்லோரும்
வேட்கை கொண்டனர் வெல்லுவமென்றே[9]

எனும் 'சியூ – சின்' அம்மையாரின் பாடலை. பெண் விடுதலை பற்றிய கட்டுரையில் சேர்த்துள்ளார்.

---

9 பாரதியார் கட்டுரைகள்– மாதர், 'மகளிர் விடுதலை'

ஜப்பானிய கவிதை

கல்கத்தாவில் இருந்து வெளிவந்து கொண்டு இருக்கும் 'மாடர்ன் ரிவியூ' (Modern Review)) வில்'நோகுச்சி' எனும் ஜப்பானியக் கவிஞர் எழுதிய மடலினைத் தம்முடைய 'கடிதங்களில்' பாரதியார் மொழிபெயர்த்துத் தந்துள்ளார். இந்தப் பகுதியில் அமெரிக்காவின் பெண் கவிஞர் செல்வி ரீஸ் (Miss. C. W. Reese) எழுதிய கவிதையும் 'பூலோன் யோஸோ ஹோ' எனும் ஜப்பானியக் கவிஞரின் படைப்பும்,வாஷோ மத் மத்ஸுலோ எனும் ஜப்பானியக் கவிஞருக்கு 'ஹொகூஷி' எனும் ஜப்பானியக் கவிஞர் எழுதிய

தீப்பட்டு எரிந்தது
விழு மலரின் – அமைதி என்னே?[10]

எனும் பாடலும் இடம் பெற்றுள்ளன

ஜப்பானியக் கவிதை வடிவான 'ஹைகூ' (Haiku) எனும் 'குறும்பாட்டு' எத்துணை அளவிற்குப்பாரதியாரின் உள்ளத்தைக் கவர்ந்துள்ளது என்பதை இக்கட்டுரையால் நாம் அறிய முடிகிறது. இந்தக் குறும்பாட்டின் சிறப்பை நம் நாட்டவர் புரிந்து கொண்டு அந்தப் பாணியில் வீறார்ந்த தமிழ்க் கவிதைகளைப் படைக்க வேண்டும் எனும் நோக்கம் பாரதிக்கு இருந்ததாகத் தெரிகிறது.

ஐரோப்பிய மொழிகளின் தமிழாக்கம்

சுப்பிரமணிய பாரதியார் ஆங்கிலம், பிரஞ்சு, பெல்ஜிய மொழிப் பாடல்களைத் தமிழாக்கம் செய்துள்ளார். அவருக்குப் பெல்ஜிய மொழி தெரியாது; ஆங்கிலத்தின் வாயிலாகவே பெல்ஜிய மொழி இலக்கியங்களை அறிந்து கொண்டுள்ளார்.

பெல்ஜியக் கவிஞரின் கருத்து

பெல்ஜியக் கவிஞர் எனும் கட்டுரையில் (29–3–1916)

---

10 பாரதியாரின் கடிதங்கள், பக். 18.

வலிமையே அழகு! ஒரு பொருளின்
வெளியுருவத்தைப் பார்த்து அழகா,
இல்லையா என்று தீர்மானம் செய்யலாகாது
ஆதலால், அவை அழகுடையன. அவற்றைக்
கவி புகழ்ச்சி செய்தல் தகும்.[11]

எனும் 'எமிலி' யினுடைய கருத்துரையை எடுத்து ஆண்டுள்ளார் 'எதிலும் உண்மையை நாடி' ஆராய்ந்த பிறகே அதைப்பற்றிய ஒருமுடிவிற்கு வரவேண்டும் எனும் புத்துலகச் சிந்தனையைப் போற்றும் பாரதியாருக்குப் பெல்ஜியக் கவிஞரின் கருத்துரை, ஒரு வகை அகத்தெழுச்சியை உண்டாக்கி இருப்பதைக் காணுகின்றோம்.

பிரான்சின் தேசிய கீதம்

பாரதியார் புதுச்சேரியில் வாழ்ந்த காலத்தில் பிரெஞ்சு மொழியில் பயிற்சி பெற்றார். புதுச்சேரியில் மண்டயம் ஸ்ரீநிவாஸாச்சாரியார் குடும்பத்துச் சிறுவர் சிறுமியர் பிரெஞ்சுக் குடியரசு நாளன்று பள்ளிக்கூடத்தில் நடிப்பதற்காக ஒரு நாடகத்தை ஒத்திகை பார்த்துக் கொண்டிருந்தார்கள். அது தமிழ் நாடகம். ஆனால் அதில் பிரெஞ்சு மொழியில் தேசிய கீதத்தைப் பாடிக் கொண்டு இருந்தனர். "லா மார்ஸெலேஸ்" எனும் அப்பாடலைக் கேட்டுக் கொண்டிருந்த சுப்பிரமணிய பாரதியார், அதனைத் தமிழாக்கம் செய்து அக்குழந்தைகளிடம் கொடுத்துத் தமிழ் நாடகத்தில் தமிழில் பாடுமாறு செய்தார்.

அன்னை நன்னாட்டின் மக்காள்! ஏகுவம்
மன்னு புகழ் நாளிதுவே!
நம்மேல் கொடுங்கோல் செலுத்துவோர்
நாட்டினார் உதிரக் கொடிதனை[12]

எனத் தொடங்கும் அப்பாடல் விறுவிறுப்பான உணர்ச்சிச் செறிவுடையதாகத் தோன்றுகிறது, பாரதியாருக்குத் தமிழில்

---

11 பாரதியார் கட்டுரைகள் அரசியல், பக். 112.

12 பாரதி புதையல், பக். 10.

'தேசியகீதம்' இயற்றும் எண்ணத்தை இப்பாடலே எழச் செய்திருக்கவேண்டும் என்பர்.

ஆங்கில மொழிபெயர்ப்புகள்

ஆங்கிலத்தில் ஆழ்ந்த புலமை உடையவராகப் பாரதியார் விளங்கினார். பாரதியின் உள்ளத்தைக் கவர்ந்த ஆங்கிலக் கவிஞர் சிலருடைய பாடல்களை அவ்வப்போது அவர் தமிழாக்கம் செய்துள்ளார்.'ஷெல்லிதாசன்' எனும் புனைபெயரைப் பூண்டவர் பாரதி என்பது இங்கு நினைக்கத் தக்கதாகும்.

'கற்பனை ஊர்'

பாரதியின் ஆங்கிலமொழி பெயர்ப்புப் பாடல்களில், இப்பாடல் முதலிடம் பெறத்தக்கதாகும். இப்பாடலின் தலைப்பு 'The Town of Leb's Pretend' என்பதாகும். இதனைஜான் ஸ்கர் (John Scur) என்னும் கவிஞன் படைத்துள்ளான். அந்த ஆங்கிலப் பாடலின் பொருளைச் சிறிது எளிமைப்படுத்தி, பாரதியார் தமிழில் தந்துள்ளார்.

கற்பனையூர் என்றநகர் உண்டாம் – அங்கு
கந்தருவர் விளையாடு வாராம்
சொப்பன நாடு என்ற சுடர்நாடு – அங்கு
ஆழ்ந்தவர் யாவர்க்கும் பேருவகை[13]

என அப்பாடல் தொடங்குகிறது. ஆங்கிலத்தில் எட்டு செய்யுள்களே உள்ளன. பாரதியாரின் மொழிபெயர்ப்பில் ஒன்பது செய்யுள்கள் காணப்படுகின்றன. இவற்றோடு ஒரு விளக்கக் குறிப்பும் இடம் பெற்று இருக்கிறது.

இந்திய அழைப்பு

ஆங்கிலப் பெண்மணி மா. ரா. ஷெர்மன் கவிதை ஒன்று 'மாடர்ன் ரிவியூ'(Modern Review) வில் வெளி வந்தது. அதனை

13 பா. கவி. பக். 106.

'இந்திய அழைப்பு' எனும் தலைப்பில் 1921 ஆம் ஆண்டு ஜூலை 19–ஆம் நாள் சுதேசமித்திரன் இதழில் பாரதியார் தமிழாக்கம் செய்து வெளியிட்டுள் ளார்.

அன்பிற்கு இனிய இந்தியா! அகில
மதங்கள், நாடுகள், மாந்தருக்கு எல்லாம்
• • •
எம்முன் வந்து நீதியின் இயலைச்
செம்மையுற விளங்குமொரு சேவகன்
அருளுக நீ

எனும் பாட்டு, அக்காலத் தமிழரிடை, ஒரு புதிய விழிப் புணர்ச்சியை ஊட்டியது. ஆங்கிலப் பெண்மணி ஒருத்தி, இந்திய விடுதலைக்குக் கட்டியங் கூறுவது பலருக்கு வியப் பாக இருந்தது.

இப்புலவர் பெருமாட்டியின்,
கேள்! விடை கூறினாள் மாதா!
நம்மிடை யாவனே தோன்றினள்?
இவன் யார்?[14]

எனத் தொடங்கும் பாடலை 'உத்திரம்' எனும் தலைப்பில் பாரதியார் மொழி பெயர்த்துள்ளார்.

இவை அல்லாமல், ஏராளமான ஆங்கில உரைநடைப் பகுதிகளைப் பாரதியார் தமிழ்ப்படுத்தியுள்ளார். அவற்றுள், இரவீந்திரநாத தாகூரின் சிறப்புமிகு 'ஐந்து கட்டுரைகள்' விவேகாநந்தரின் சொற்பொழிவுகள், கடிதங்கள் இங்குக் குறிப்பிடத்தக்கனவாகும்.

இந்திய மொழிகளில்....!

இந்திய மொழிகளுள், பாரதியாரின் உள்ளத்தைப் பெரிதும் கவர்ந்தது சம்ஸ்கிருத மொழி என்பதை யாவரும் அறிவர். தேச பக்தியையும், தெய்வ பக்தியையும் வளர்ப்பதற்குப் பண்டை

14 பாரதியார் கட்டுரைகள், சமூகம், பக். 167.

இந்திய அறிவுக் கருவூலத்தை மக்கள் எளிதில் அறியுமாறு செய்யவேண்டும் என்பதில் அவர் ஆர்வம் காட்டினார். 'வேதம், உபநிஷத்துக்கள், புராணங்கள் – இவற்றை இக்காலத்தில் வழங்கும் தே பாஷைகளில் மொழி பெயர்க்க வேண்டும்" எனும் நோக்குடையவராக இருந்ததை அவருடைய எழுத்துகளே தெரிவிக்கின்றன.

ஸம்ஸ்கிருத நூல்கள்

தமிழில் பழமறையைப் பாட முயன்ற பாரதியார், வேதரிஷிகளின் கவிதையை 1913–15ஆம் ஆண்டுகளில் மொழிபெயர்த்துள்ளார். சுப்பிரமணிய சிவா நடத்திய 'ஞானபாநு' எனும் இதழில் மூன்றாண்டுகள் தொடர்ந்து அவை வெளியிடப்பட்டன.

இருக்கு (ரிக்) வேதத்தின் முதல் மண்டலத்தில் உள்ள ஏழு பிரிவுகளில் இருந்து, இந்திரன், அக்கினி, வருணன் முதலிய தேவர்களைப்பற்றிய 178 இருக்குகளைப் பாரதியார் தமிழாக்கம் செய்துள்ளார்.[15] இருக்கு வேத மொழிபெயர்ப்பு தேசிய கவிஞரின் தொடக்க கால முயற்சியாகத் தோன்றுகிறது

செல்வன, நிற்பன அனைத்திற்கும் இந்திரனே
அரசன்.
இவன் வயிரப்படை கைக்கொண்டான்.
சிகரங்களுடைய அனந்த மலைக்கும் இவனே
வேந்தன்!
தொழில் செய்வோரை எல்லாம் இவனே
ஆள்கின்றான்!
ஆரக்கால்களை வளையம்சூழ்ந்துஇருப்பதுபோல
இவன் அவரைச் சூழ்ந்து நிற்கிறான்[16]

---

15 பெ.சு.மணி,(பதி), பாரதியாரின் வேதரிஷிகளின் கவிதை, பக். 203–205

16 ஷெ.பக்,161

என்னும் இருக்கினைப் பாரதியின் தமிழாக்கத்தைப் புரிந்துகொள்ளுவதற்குரிய சான்றாகக் காட்டலாம்.

மற்றும் ஈசாவாஸ்ய உபநிடதம் முழுமையும், கேநோப நிடதத்தில் 16 உபநிடதச் செய்யுள்களும் பாரதியாரால் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. சிறுசிறு சொற்களைக் கொண்டு எளிமையும், தெளிவும் வாய்ந்த முறையில் பாரதியார் இவற்றை மொழிபெயர்த்துள்ளார்.

> எவன் எல்லா உயிர்களையும் தன்னுள்ளே
> காண்கிறானோ, எல்லா உயிர்களிடத்தும்
> தன்னைக் காண்கிறானோ, அவன் பிறகு
> கூசுவதில்லை.[17]

எனும் வாசகத்தை நோக்குக. மிகச் சிக்கலான கருத்துகளை படிப்பவர் உள்ளத்தில் ஆழப்பதியும் வண்ணம் செய்வதற்கு இதைவிட எளிமையாகக்கூற இயலாது என்பது வெளிப்படை.

அடுத்து, இந்து சமய சித்தாந்தத்தின் தலையூற்றாக உள்ள பகவத்கீதையைப் பாரதியார் தமிழில் மொழிபெயர்த்துள்ளார். அவருக்குப் பகவத்கீதையில் பேரீடுபாடு இருந்து வந்ததைப் பிற கவிதைகளில் கீதை வாசகங்களும், கீதையைப் பற்றிய குறிப்புகளும் நிறைந்துள்ளமையால் அறியலாம். பாரதியாரின் 'பகவத்கீதை மூலமும் உரையுமாக' 1922–ஆம் ஆண்டு முதன் முதல் நூலாக வெளியிடப்பட்டது.

பாரதியாரின் இந்த மொழிபெயர்ப்புக்கு முன்பே, தமிழில் பதின்மூன்று மொழிபெயர்ப்பு நூல்கள் இருந்தன. இவற்றுள் ஏழு, முழுமையான மொழிபெயர்ப்புகளாகும். பாரதியாருக்குப் பிறகு,பகவத்கீதை மொழிபெயர்ப்புகள் ஆறு வெளிவந்துள்ளன. இவற்றுள் இரண்டு (காமாக்ஷி தாஸர், புலவர் பெரியதம்பிப் பிள்ளை இயற்றியவை) செய்யுள் வடிவின. மற்றவை எல்லாம் உரைநடையில் உள்ளன.

---

17 பாரதியாரின் வேதரிஷிகளின் கவிதை, ஈ ஸா 6 பக். 207

புதுமைக் கவிஞர் பாரதி, எளிய தமிழ் வசனமாகப் பகவத்கீதையை மொழிபெயர்த்துக் கொடுத்துள்ளார். தாம் எழுதிய கட்டுரைகளின் இடையேயும், வேறு கவிதைகளின் இடையேயும் முன்னமே வசன கவிதைகளாக வெளியிட்டு இருந்தவை மட்டும் இந்நூலின் இடையிடையே செய்யுள் வடிவில் கவிஞர் தந்துள்ளார். இத்தகைய செய்யுள்கள் பதினைந்தே, பாரதியாரின் பகவத்கீதையில் இடம் பெற்றுள்ளன. 700 சுலோகங்களைக் கொண்டது மூல நூல். இங்குக் குறிப்பிடப்பட்ட பதினைந்து செய்யுள்கள் நீங்கலாக, மற்றப் பகுதிகள் எல்லாம் வசன நடையில் தமிழாக்கம் செய்யப்பட்டுள்ளன, வசன கவிதையாக அமைந்துள்ள கீதைப்பாடல் ஒன்றைக் காண்போம்.

துயரப் படத்தகாதார் பொருட்டும்
துயர்ப் படுகின்றாய்!
ஞான வுரைகளும் உரைக்கின்றாய்!
இறந்தார்க் கேனும் இருந்தார்க் கேனும்
துயர் கொளார் அறிஞர்[18]

பாரதியாருடைய மொழிபெயர்ப்பின் தனிச்சிறப்பு எளிமையாகும். எல்லாவகையான மக்களுக்கும் புரியக்கூடியதாய் இருக்கவேண்டும் என்பதே அவருடைய நோக்கமாகும். அடுத்துத் தெளிவாகக் கருத்துகளை எடுத்துரைக்குந்திறன் அவருக்குக் கைவந்த கலையாகும். இவை இரண்டும் (எளிமையும் தெளிவும்) இணைந்து இயங்குகிற பொழுது 'இனிமை' தானாகவே அமைந்துவிடுவதைப் பாரதியின் மொழிபெயர்ப்புகளில் காணுகின்றோம்.

பகவத்கீதைக்கு, நீண்டதோர் ஆராய்ச்சி முன்னுரையைப் பாரதியார் எழுதியுள்ளார். கீதையை அவர் கண்ட முறையையும், புரிந்து கொண்ட வகையையும், இன்றைய வாழ்க்கைக்கு அத்திருநூல், பயன்படக்கூடிய பாங்கினையும் ஒருங்கு இணைந்து, சிறந்ததொரு விளக்கமாக அம்முன்னுரை

18 பகவத்கீதை, 2:11.

அமைந்துள்ளது. சுருங்கக் கூறுவதானால், பகவத்கீதையை ஒரு வாழ்க்கை விளக்கமாக'ப் பாரதியாரின் முன்னுரை அறிமுகப்படுத்தி வைக்கிறது.

இன்று வரையில் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டுள்ள பகவத்கீதை நூல்களுள், பாரதியாரின் தமிழாக்கமே தலை சிறந்தது எனலாம். அவருக்குப் பிறகு, இப்பணியில் ஈடுபட்ட யாவருமே, அவருடைய படைப்பினை முன் மாதிரியாகக் கொண்டே, தங்கள் மொழிபெயர்ப்புகளைச் செய்துள்ளனர். பாரதியாரின் பகவத்கீதையை 'மொழிபெயர்ப்பு' எனக் கூறுவதைவிட,'தமிழாக்கம்' எனவே போற்றலாம்.

பதஞ்சலி யோக சூத்திரத்தின் முதற்பகுதியைப் பாரதியார் தமிழாக்கம் செய்துள்ளார். முதலில் 'கர்மயோகி' எனும் இதழில் 1909–1911–ல் வெளியிடப்பட்டது. நூல் வடிவில் 1928–ல் கொண்டுவரப்பட்டது. பதஞ்சலியின் யோக சூத்திரத்தின் முதல் பகுதி 'ஸமாதிபாதம்' என்பதாகும். அதில் 51 சூத்திரங்கள் உள்ளன. பாரதியார் 50 சுலோகங்களை மொழிபெயர்த்து, விளக்க உரையும் எழுதியுள்ளார்.

வியாச பாரதத்தின் சூதாட்ட சுருக்கத்தைத் தழுவி, 'பாஞ்சாலி சபதம்' எனும் குறுங்காப்பியத்தைப் பாரதியார் படைத்துள்ளார். இதனை வழிநூல் (தழுவல்) எனக் கூறுதல் பொருந்தாது. 'மறுபடைப்பு ஆக்கம்' எனப் போற்றத்தக்க சிறப்புடையதாக விளங்குகிறது.

வங்காளமொழியின் தமிழாக்கம்

இளமையில் காசியில் தங்கி இருந்த பொழுதே பாரதியாருக்கு வங்காளமொழியில் ஒருவகைக் கவர்ச்சி இருந்தது. அக்காலத்தில், வங்காள மொழியைப் பல்வேறு துறைகளில் வளர்ப்பதற்காகக் கவியரசர் இரவீந்திரநாத் தாகூர் அரிய முயற்சிகளை மேற்கொண்டு இருந்தார். நம்முடைய

அன்னைத் தமிழ்மொழியையும், புதுமைக் காலப்போக்கிற்கு ஏற்ப எளிமையும், எதையும் எடுத்துரைக்கும் ஆற்றலும் உடைய மொழியாக மாற்ற வேண்டும் எனும் எண்ணம், நம் கவிஞர் பெருமானிடம் தோன்றியது.

சில ஆண்டுகளுக்குப் பிறகு தமிழ்நாட்டிற்குத் திரும்பினார்; சில ஆண்டுகள் கழித்து சுதேசமித்திரனில் துணை ஆசிரியர் பொறுப்பினை வகித்தார்.

அக்காலத்தில் தேசபக்திப் பாடல்களை இயற்றி, தமிழரிடையே தேசிய உணர்வினை ஊட்டுவதில் பாரதியார் ஈடுபட்டார். 'இந்திய தேசியத்தைத் தமிழிலே மணக்கச் செய்த முதல் கவிஞராக' அவர் புகழ் பெறலானார்.

அக்காலத்தில், வடஆர்க்காடு மாவட்டத்தைச் சேர்ந்த திரு. சர்மா என்பவர், உலகப் புகழ் வாய்ந்த பங்கிம் சந்திர சட்டர்ஜியின் "ஆனந்தமடம்" எனும் புதினத்தைத் தமிழில் மொழி பெயர்க்கும் முயற்சியில் ஈடுபட்டு இருந்தார். அந்நூலில் தேசபக்திக் கனல் வீசிய "வந்தே மாதரம்" எனும் கவிதை இடம் பெற்று இருந்தது. அதனைக் கவிதை வடிவில் வெளியிட திரு. சர்மா விரும்பினார். எனவே, பாரதியாரை அணுகி, அதனைத் தமிழ்ப்படுத்தித் தருமாறு வேண்டினார். சுப்பிரமணிய பாரதியார், அப்பாடலைத் தமிழாக்கம் செய்து தந்தார். 'வந்தே மாதரம்' எனும் தலைப்பில் அப்பாடல் அந்நூலில் வெளியிடப்பட்டது.

சில ஆண்டுகள் கழித்து, அந்த வங்காள மொழிப் பாடலை,வேறொரு முறையில் பாரதியார் தமிழாக்கம் செய்துள்ளார். "முன்னொரு முறை, முழுதும் அகவலாக ஒரு மொழிபெயர்ப்பு எழுதி இருந்தேன்.ஆனால், அது பாடுவதற்கு நயப்படாததாகையால், இப்போது பல சந்தங்கள் தழுவி மொழி பெயர்த்து எழுதப்பட்டிருக்கின்றது" என்பது அப்பாட்டிற்குப் பாரதியார் வரைந்த முன்னுரையாகும். இம்மொழிபெயர்ப்பு'

"நளிர்மணி நீரும், நயம்படு கனிகளும்
குளிர்பூந் தென்றலும், கொழும்பொழில் பசுமையும்
வாய்ந்துநன் கிலகுவை:வாழிய அன்னை![19] (வந்தே)

எனத் தொடங்குவதாகும்.

இந்தப் பாடலின் கருத்துகளும், தொடர்களும், பாரதியாரின் நாட்டுப் பாடல்கள் பலவற்றில் இடம் பெற்றுள்ளதைக் காணுகின்றோம்.

பாரதியாரின் 'தேசிய கீதங்களில்" சிறப்பு மிகுந்த பாடலான,

'வந்தே மாதரம் என்போம்–எங்கள் மாநிலத் தாயை வணங்குதும் என்போம்" (வந்தே) எனத்தொடங்கும் பாடல், இதற்குச் சிறந்த எடுத்துக் காட்டு.

அரவிந்த மகரிஷி, வேதப்பாடல்களின் ஆராய்ச்சி விளக்கங்களில், 'அக்னி'யைப் பற்றிய பல அரிய செய்திகளைக் கோடிட்டுக் காட்டியுள்ளார். இவற்றைப் படித்ததனால், தேசியக் கவி அகத்தெழுச்சி பெற்றார். அதன் விளைவாக 'அக்கினிக் குஞ்சு' எனும் உருவகக்கவிதையை தமிழில் பாரதியார் படைத்துள்ளார் என்பது அறிஞர் பலருடைய கருத்தாகும்.

அரவிந்தருக்கு திருக்குறளையும், திருவாய்மொழி யையும் பாரதியார் கற்பித்ததாகவும் தெரிகிறது. வங்காள வைணவ அருளாளரான சைதன்யரின் கண்ணன் வழிபாட்டு நெறித் தத்துவங்கள் பாரதியார் உள்ளத்தைப் பெரிதும் கவர்ந்தன. பாரதியாரின், கண்ணன் பாட்டி'லும் 'ராதைப் பாட்டி'லும் வங்காள வைணவ சமயத்தின் தாக்கத்தைக் காண முடிகிறது.

மற்றும் வங்காள மொழியின் படைப்பாளிகளின் படைப்புகள் பலவற்றைப் பாரதியார், தமிழ் வசனமாக மொழி பெயர்த்துள்ளார்.

---

19 பா. கவி. பக். 162

ஆங்கிலத்தில் மொழிபெயர்ப்புகள்

தம்முடைய கவிதைகள் சிலவற்றை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துத் தருவதற்குப் பாரதியார் முயன்றுள்ளார். அவருடைய காலத்திலேயே, ஆங்கில, பிரஞ்சு மொழி அறிஞர்கள் பாரதியின் கவிதைகள் சிலவற்றை மொழி பெயர்த்துத் தத்தம் நாடுகளின் சிறப்புமிகு இதழ்களில் வெளியிட்டுள்ளனர். ஜேம்ஸ் எச். கசின்ஸ் என்னும் ஆங்கிலேயர், பாரதியின் பாடல்களை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ளார்.[20]

பிரான்ஸென்னும் சிறந்த புகழ் நாட்டிலுயர்
புலவோரும் பிறரும் ஆங்கே
விராவுபுகழ் ஆங்கிலத்தீங் கவியரசர்
தாமுமிக வியந்து கூறிப்
பராவி என்றன் தமிழ்க் கவியைமொழிபெயர்த்து
போற்றுகின்றார் .....[21]

என்று பாரதியாரே குறிப்பிட்டுள்ளமை காண்க.

நம்மாழ்வார், நாச்சியார் முதலியோரின் பாசுரங்களை, மகாகவி பாரதியார் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து வெளியிட்டுள்ளார். அருணகிரிநாதரின் திருப்புகழும் பாரதியாரால் மொழிபெயர்க்கப்பட்டுள்ளமை இங்கு நினைவுகூரத் தக்கதாகும்.[22]

இவற்றிலிருந்து, பிற மொழிகளில் இருந்து, தாம் சிறந்தவை என்று கருதியவற்றைத் தமிழ்நாட்டு மக்களுக்குப் பயன்படத்தக்க வகையில் பாரதியார் தமிழாக்கம் செய்துகொடுத்துள்ளார் என்பது புலனாகிறது. மற்றும், பிற மொழிகளில் –நாடுகளில் இருந்து 'இறக்குமதி' செய்வதோடு அவர் அமையவில்லை; நம் நாட்டின் அறிவுச் செல்வத்தை வெளிநாடுகளுக்கு ஆங்கிலத்தின் வாயிலாக 'ஏற்றுமதி'

---

20 Agni and other Poems and Translations, P. 15

21 பா. கவி. பக். 276

22 Agni and other Poems, PP. 18–51.

செய்யவும் முயன்றுள்ளார் என்பதும் வெளிப்படுகிறது. பாரதியாரின் மொழிபெயர்ப்பு நோக்கம் நாட்டு மக்களின் நன்மையைக் கருதுவதாகவே காணப்படுகிறது. கதைகளை மொழி பெயர்ப்பதில் அவர் கருத்தைச் செலுத்தவில்லை; கருத்திற்கே முதன்மை இடத்தைப் பாரதியார் தந்துள்ளார் என்பனவும் இவற்றால் வெளிப்படுகின்றன.

பாரதியின் வழியில்

பாரதியாருக்குப் பிறகு, தமிழில் மொழிபெயர்ப்புகள் பெருகி உள்ளன. வேதங்கள் நான்கு அறிஞர்களால் முழுமையாக மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.[23] பகவத்கீதை ஏழு அறிஞர்களால் தமிழாக்கம் செய்யப்பட்டுள்ளன.[24] ஆனால், அவற்றில் எல்லாம் பாரதியாரின் மொழிபெயர்ப்புகளின் எளிமையும் தெளிவும் கறிவேப்பிலை கொத்துகளாக உள்ளன.

சம்ஸ்கிருத இலக்கியங்கள், சிறப்பாகக் கவியரசர் காளிதாசனுடைய படைப்புகள் பல, அறிஞர் பலரால் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. சாகுந்தல நாடகத்தை மட்டும் நான்கு அறிஞர்கள் மொழிபெயர்த்துள்ளனர் எனினும், அவை கற்றோருக்கே பயன்படுவனவாக உள்ளன.

பிற இந்திய மொழிகளில் இருந்து சில வகையான நூல்களே (சிறுகதை, புதினம், நாடகம்) தமிழாக்கம் செய்யப்பட்டுள்ளன. கவிதை நூல்கள் மிகமிகச் சிலவாக உள்ளன.

ஆசிய மொழிகளில் இருந்து நேரடியான தமிழாக்கங்கள் ஒன்றும் வெளிவரவில்லை.

---

23 சிவானந்த யதீந்திர சுவாமி,சியாம தேசிகாசாரியலு தாசாச்சார்யா, ஜம்புநாதன் முதலியோர் தமிழாக்கம் செய்துள்ளனர்.

24 உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் வெள்ளிக்கிழமைக் கருத்தரங்கில் (21–1–83) க. த. திருநாவுக்கரசு வழங்கிய 'பாரதியாரும் பகவத்கீதையும்' என்னும் கட்டுரையைக் காண்க.

ஐரோப்பிய மொழிகளில், ஆங்கிலத்தின் வாயிலாக வெளிவந்துள்ள நூல்களுள் பல தமிழில் மொழிபெயர்க்கப் பட்டுள்ளன. அடுத்து, ருஷிய மொழி நூல்கள் மிகுதியாகத் தமிழாக்கம் செய்யப்பட்டு வருகின்றன. அத்தி பூத்தாற் போல பிற ஐரோப்பிய மொழி நூல்கள் சில, தமிழில் 'பிறவி ' எடுத்துள்ளன. இவ்வாறே ஆப்பிரிக்க மொழி நூல்கள் சில தமிழாக்கம் செய்யப்பட்டு வருகின்றன.

கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை, பல ஆங்கிலத் தனிப் பாடல்களை மொழிபெயர்த்துள்ளார். இவருடைய *உமர்கய்யாம் பாடல்கள்' எனும் தமிழாக்க நூலும், 'ஆசிய ஜோதி' எனும் சிறுகாப்பிய மொழிபெயர்ப்பும் தலைசிறந்த தமிழாக்கங்களாகும். பாரதிக்குப்பிறகு, ஒப்பற்ற மொழிபெயர்ப்பு நூல்களாக இவற்றைக் கவிமணி படைத்துள்ளார்.

'உமர்கய்யாம் பாடல்களை'ப் பாலபாரதி ச.து.சு. யோகியாரும், சாமி சிதம்பரனாரும் மொழிபெயர்த்துள்ளனர். இவர்களுக்கு உதவிய மூல நூல் ஃபிட்ஸ் ஜெரால்டின் ஆங்கில மொழிபெயர்ப்பாகும்.

பொ. திருகூட சுந்தரம் பிள்ளை என்பவர், 'ஆங்கிலக் கவிதை மலர்கள்' எனும் நூலினை வெளியிட்டுள்ளார். அதில், இங்கிலாந்தையும், இந்தியாவையும் சேர்ந்த கவிஞர்களுள் முக்கியமான சிலருடைய நயமான கவிதைகளைத் தமிழாக்கம் செய்து தரப்பட்டுள்ளன.

மாத்யூ அர்னால்ட் ஆங்கிலத்தில்படைத்த 'ஷோரபும் ருஸ்தமும் எனும் கதைப்பாடலைத் தழுவி, கவிஞர் முடியரசன் 'வீரகாவியம்' எனும் சிறு காப்பியத்தைப் படைத்துள்ளார்.

விவிலியத்தில் இடம்பெறும் மேரி மக்தலேனாவைப் பற்றிய குறிப்புகளைக் கொண்டு கவிஞர் ச.து.சு. யோகி, 'மேரி மக்தலேனா ' எனும் கதைப் பாடலைக் கற்பனை வளங்கொழிக்கப் பாடியுள்ளார்.

கவியரசர் கண்ணதாசன், இறவாப் புகழ்பெறும் எண்ணத்தோடு 'இயேசு காவியத்தை'ப் படைத்துள்ளார். விவிலியத்தின் புதிய ஏற்பாட்டைத் தழுவி, இக்குறுங்காப் பியம் இயற்றப்பட்டுள்ளது. இயேசு பெருமானின் வாழ்வையும், தொண்டையும் நடைச்சித்திரங்களாக நம் மனக்கண்முன்னால் கவியரசர் கொண்டுவந்து நிறுத்துகிறார். இருபதாம் நூற்றாண்டில், இயற்றப்பட்ட பாஞ்சாலி சபதத்திற்கு அடுத்த நிலையில் வைத்துப் போற்றத்தக்க குறுங்காப்பியம் 'இயேசு காவியம்' எனலாம்.

இந்தி மொழியில் ஜெயசங்கரர் படைத்த 'காமாயனி' எனும் சிறுகாப்பியத்தைப் பழம்பெரும் தேசபக்தரும், பன்மொழிப்புலவருமான ஜமதக்னி, 'காமன் மகள்' எனும் பெயரில் தமிழாக்கம் செய்துள்ளார். சிந்தைக்கு விருந்து அளித்து, செஞ்சொற்கவி இன்பம் பயக்கும் சிறப்புமிகு காப்பியமாகும் இது. அதன் சிறப்பிற்கு ஏற்ற அளவிற்கு இன்னும் இந்தப் பாவியம் பாராட்டப் பெறவில்லை.

ஈழத்துக் கவிஞர் 'சொக்கன்' என்பாருடைய 'நெடும்பா மூன்று' எனும் கதைப்பாடல் நூல், கிழக்கையும் மேற்கை யும் இணைக்கிறது, கிரேக்க நாட்டுப் பழங்கதையில் வரும் ஆர்ப்பியசைப்பற்றிய நெடும்பாட்டையும், இந்திய உபநிடதத்தில் இடம்பெறும் நாகிகேதைப்பற்றிய கதைப்பாடலையும் சுலை ததும்புமாறு இக்கவிஞர் படைத்துள்ளார்.

சாரண பாஸ்கரனாரின் 'யூசுப் சுலைகா' எனும் குறுங்காப்பியம், இசுலாமியச் சமயச் சான்றோர்களின் வரலாற்றைத் தழுவி, படைக்கப்பட்டுள்ளது. இஸ்லாமிய வரலாற்றின்படி யூசுபும், அவருடைய தந்தை யாகூபும் நபியாவார்கள். மன்னர் தைமூஸின் திருமகள் சுலைகா. இளவரசி யூசுபைக் காதலித்தும், வேறொருவரை மணந்தும் கற்பை இழக்காமல் காத்திருந்தும், மீண்டும் யூசுபையே மணாளனாக அடைந்த வரலாற்றைத் தழுவி,தமிழ்மரபுப்

படி இக்குறுங்காவியம் இயற்றப்பட்டுள்ளது. இது ஒரு புதிய படைப்பு; போற்றத்தக்க படைப்பு.

கவிஞர் கோவேந்தன் உலக மகாகவி ஷேக்ஸ்பியரின் 'சானெட்' எனப்படும் பதினான்கடிப் பாடல்களைக் கொஞ்சு தமிழில், மூல நூலை நடைநயத்தில் விஞ்சும் வகையில் தமிழாக்கம் செய்துள்ளார். மற்றும் சோவியத் இலக்கியங்களையும், பல்கேரியப் பாடல்களையும் ஆப்பரிக்க மொழிப் பாடல்களையும் தமிழில் மொழி பெயர்த்து, நூல்களாக அவர் வெளியிட்டுள்ளார். ஆங்கில மொழியின் மூலமாகவே, கவிஞர் கோவேந்தன் இப்படைப்புகளைச் சுவைத்துள்ளார் என்பது இங்குக் குறிப்பிடத்தக்கதாகும்.

இவருடைய "சிவப்புக் குயில்கள்" எனும் ருஷிய மொழித் தமிழாக்கம் தனிச் சிறப்பு வாய்ந்தது. இந்நூலில், சோவியத் ருஷியாவைச் சேர்ந்த 68 பெண்பாற் புலவர்களின் பாடல்கள் தமிழாக்கம் செய்யப்பட்டுள்ளன. 'வண்மை,உயர்வு, மனிதநலம் எல்லாம் பெண்மையினால் உண்டாவன ' எனும் கருத்து, இந்நூலின் முழுவதிலும் இழையோடிச் செல்லுகிறது. தமிழின் படைப்பு இலக்கியச் சிந்தனையை விரிவுபடுத்தியுள்ளது; புதுமை யான எல்லையை நோக்கி அழைத்துச் செல்லுகிறது இந்நூல். இயல்பாகவே கவிஞராக விளங்கும் கோவேந்தனுக்கு, "மொழி மறுபடைப்பு ஆக்கம்" (Transcreation) செய்வது எளிய செயலாக அமைந்து இருப்பதைச் 'சிவப்புக் குயில்களால்' அறிகிறோம்.

கம்பரப்பர் கவிஞர் அ.கு. ஆதித்தர், கிரேக்கநாட்டுப் பேரழகி ஹெலனை (Helen)க் கதைத் தலைவியாகக் கொண்டு தமிழில் புதிய 'இலியதைப்' படைத்துள்ளார். அந்நூலிற்குத் "துறையச் செல்லம்" (Helen of Troy) எனும் பெயர் சூட்டியுள்ளார். 'டிராய்' நகரைத் 'துறையம்' எனவும், 'ஹெலனை'ச் 'செல்லம்' எனவும் தமிழ்ப்படுத்தியுள்ளார். ஹோமரின் கதைப் போக்கை அப்படியே பின்பற்றாமல், கதைக் கருவை மட்டும் தழுவிக்

கொள்ளுகிறார் ஆதித்தர். தம்முடைய கற்பனைத் திறனால் புதுமைப் பொலிவுடைய செந்தமிழ்க் காப்பியத்தை ஆசிரியர் படைத்துள்ளார். கிரேக்கப் பண்பாட்டைத் தமிழ்ப்பாட்டில் குழைத்துத் தரும் புதுமையை இந்நூலில் பரக்கக் காணுகின்றோம்.

கண்ணன் பாடல்களைப் பல கோணங்களில் இயற்றுமாறு பாரதியாருக்கு உந்துதலாக அமைந்தவை ஜெயதேவரின் அஷ்டபதி, கீதாகோவிந்தம், வித்யாபதியின் காதற்பாடல்கள்,சூர்தாசர், ரவிதாசர் போன்றோரின் கண்ணன் ராதைப் பாடல்கள், சைதன்யரின் பிரேம பக்திப்பாடல்கள் என்பனவாகும், ஆனால், அண்மைக் காலம் வரை இப்பாடல்களைத் தமிழில் யாரும் மொழிபெயர்த்துத் தருவதற்கு முயலவில்லை. இதற்குரிய முதன்மையான காரணம் இவையாவும் இந்தி, குஜராத்தி வங்காள மொழிகளில் உள்ளமையாகும்.

இந்நூல்கள், ஐரோப்பிய மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. அ. கி. வாலீம் அம்மையார், மேற்கண்ட தொகுதிகளில் இரண்டொரு பாடல்களைத் தழுவி, தமிழில் சில பாடல்களைப் படைத்துள்ளார். கவியரசர் கண்ண தாசனுடைய 'கிருஷ்ண கானப் பாடல்களில் ஜெயதேவர், வித்தியாபதி. போன்ற கவிஞர்களின் சாயல் படிந்துள்ளதைக் காணலாம்.

"பாலா" என்னும் புனைபெயர் உடைய ஆங்கில மொழிப் பேராசிரியர் ஒருவர், 'வித்யாபதியின் காதற் கவிதைகள்' எனும் தலைப்பில், பொருள் நயமும் கற்பனை வளமும் வாய்ந்த 95 பாடல்களைத் தேர்ந்து எடுத்துத் தமிழாக்கம் செய்துள்ளார். இது ஒரு முதன் முயற்சி ; போற்றி வரவேற்கத் தக்க நல்ல முயற்சி.

'வித்யாபதியின் காதற்கவிதைகளை'ச் சுவைத்துப் பார்ப்பவர்களுக்குப் பாரதியாரின் "கண்ணன்பாட்டில்" பொங்கி வழியும் இனிமையின் ஏற்றமும் காதல் சுவையின் எக்களிப்பும் எளிதில் புலனாகும்.

ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம் பார்த்தால் போதும்' என்பதைப் போல, பாரதிக்குப் பின், தமிழில் வளர்ந்துள்ள மொழி பெயர்ப்பு இலக்கியங்களுள் முக்கியமான சிலவற்றைச் சுட்டிக் காட்டவே முடிந்தது. இதனை விரிப்பின் பெருகும்; தொகுப்பின் எஞ்சும்.

மொழிபெயர்ப்பு நூல்கள் தமிழில் பெருக வேண்டிய அளவிற்குப் பெருகாமைக்குரிய காரணம், என்னைப் போன்ற தமிழ்ப் புலவர்களுக்கும் அறிஞர்களுக்கும் பன்மொழிப் புலமை இல்லாமையேயாகும்.

சுப்பிரமணிய பாரதியாருக்குப் பிறகு, மொழிபெயர்ப்புத் துறையில் "இறக்குமதி" கணிசமான அளவிற்குப் பெருகி இருக்கிறது. ஆனால், "ஏற்றுமதி" பெருகியதாகத் தெரியவில்லை. தமிழர்களைக் காட்டிலும் மிகுதியாகப் பிறநாட்டு நல்லறிஞர்களே, தமிழ்மொழி இலக்கியங்களைத் தத்தம் மொழிகளில் மொழிபெயர்த்து வருகின்றனர்!

இவ்விருபதாம் நூற்றாண்டை, தமிழ் இலக்கிய வரலாறு 'பாரதியுகம்' எனச் சிறப்பித்துப் போற்றப் போகிறது. 'கவிஞன் என்பவன் காலத்தின் மனசாட்சி! கவிதை என்பது புதிய சமுதாயத்தின் அரசாட்சி!" என்பதே இவ்வாய்வினால் புலனாகும் உண்மை!

பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்
தமிழ்மொழியில் பெயர்த்தல் வேண்டும்!
இறவாத புகழுடைய புதுநூல்கள்
தமிழ்மொழியல் இயற்றல் வேண்டும்!

எனும் பாரதியாரின் விழைவார்ந்த விருப்பத்தினைச் செயல்படுத்த முயலுவோமாக!

முடிப்புரை

உலகப் பெருங்கவிஞர்' எனப் போற்றப்படும் பாரதியார், பல பட்டைத் தீட்டப்பெற்ற வைரமணியாக பிரகாசிப்பதைக்

கண்டோம். பல துறைகளில், நிலைகளில் பழையனவற்றைப் போற்றும் பாவலராக அவர் சிறப்புற்றார். எனினும், இதற்காக மட்டும் உலகம் அவரை நினைந்து போற்றவில்லை!

காலத்தின் நாடித்துடிப்பை அறிந்து, மனித வாழ்வு உயர்ந்து விளங்குவதற்கும், சிறந்த முறையில் முன்னேறுவதற்கும் தேவையான புதிய சிந்தனைகளைப் புத்தம் புதிய முறைகளில் – இலக்கிய வடிவங்களில் அவர் எடுத்தியம்பியுள்ளமையே பாரதியாருக்குப் பெருஞ்சிறப்பைத் தேடித் தந்துள்ளது எனக் கூறினால், அது தவறாகாது.

இதனால், சுப்பிரமணிய பாரதியார் 'புதுமைப் பித்த ராக'க் காட்சி அளிக்கிறார். 'சொல் புதிது; சுவை புதிது; பொருள் புதிது' வேண்டும் என்று முழங்கியவர் பாரதியார். புதுமையைப் புகுத்துவதில், மரபுகள் பலவற்றை அவர் மீறியுள்ளது உண்மை! ஆனால், தொன்று தொட்டுப் பின்பற்றப்பட்டு வரும் இலக்கிய மரபுகளை அவர் உடைத்து எறியவில்லை! அடியோடு அழித்து விடவும் இல்லை! மரபுகளில் பயனற்றுப் போனவற்றை ஒதுக்கி விட்டார்; புறக்கணித்து விட்டார்! ஆனால், பயன்படக் கூடியவற்றை அடிப்படையாகக் கொண்டு. புத்தாக்கங்கள் பலவற்றை அவர் செய்துள்ளார். இவற்றால், இலக்கிய மரபுகள் வலிவும் பொலிவும் பெற்றுள்ளன. இத்தகைய அரும்பணியின் வாயிலாகத் தமிழுக்குப் புத்தொளியும், புதுவாழ்வும் பாரதியார் அளித்துள்ளார்.

பாரதியார்,செம்மை இலக்கியப் புத்தார்வப் புரவலராக (Neo–Classicist)த்தம் படைப்புப் பணியைத்தொடங்கினார். கண்மூடித்தனமாகப் பழமை நலத்தைப் போற்றும் மேற்கண்ட நெறியில் இருந்து, விரைவில் அவர் விடுபட்டார். புதுமை நாடும் புனைவு நவிற்சி நோக்குடைய 'வீறுணர்ச்சிக் கவிஞராக" (Romantic Poet) பாரதியார் மலர்ச்சியுற்றார். இதன் விளைவாகவே, பல்வேறு வகையான புதுமைப் போக்குகள் அவருடைய படைப்புகளில் இடம் பெற்றன. இவை அல்லாமல்,

சமவுடைமை மெய்ம்மையமும் (Socialist – Realism) அவருடைய படைப்புகளில் இழையோடிச் செல்லுகிறது. இத்தகைய நோக்குகளாலும், போக்குகளாலும் அவருடைய படைப்புகள், 'வாழும் இலக்கிய மாகப்' பொன்றாப்புகழைப் பெற்றுள்ளன.

இவற்றை அறிந்தோ, அறியாமலோ ஆயிரக் கணக்கான கவிஞர்கள், தத்தம் படைப்புகளில் அவ்வியல்புகளைச் சுடர்விட்டு ஒளிரச் செய்துள்ளனர். இந்தப் பணியை மதிப்பீடு செய்யும் வகையில் அமைந்ததே இந்த நூல். இந்த ஆய்வினால் தெரியவரும் உண்மைகள் பல.

'பாரதி' எனும் பேராற்றில் இருந்து பல கிளையாறுகள் பிரிந்துள்ளன. இரண்டொரு கிளையாறுகள், பேராற்றில் சுட்டுக்கு அடங்காமல் விரைந்து ஓடும் காட்டாறுகளாகப் பெருவாழ்வு பெற்றுள்ளன. மற்றும் சில, தெளிந்த நீரோடைகளாக நெளிந்தும் சுழிந்தும் 'நடந்தாய் வாழி காவேரி' எனச் சொல்லத்தக்க வகையில், பைய நகர்ந்து கொண்டே உள்ளன. ஆயினும், இவை எல்லாவற்றிற்கும் வற்றாது உளம் சுரக்கும் தலையூற்றாய் இருந்து வருவது பாரதியின் படைப்புகளேயாகும். யாவரும், இதனை எளிதில் புரிந்து கொள்ள இந்த நூல் உதவும் என நம்புகின்றேன்."

பொருட் குறிப்பு அகராதி

அ

அகலிகை xx, 252–255
அக்னிபுத்திரன் 80, 226
அசலாம்பிகை 33, 34, 53
அண்ணா, அறிஞர் 9, 38, 268
அய்யாமுத்து, கோவை 78
அருணாசலக் கவிராயர் 97
அருணாசலம், கே.சி.எஸ். 79
அர்னால்ட் மாத்யூ, 344, 354
அவ்வை xxi, 60, 135, 137, 290, 304–307, 309, 312, 319, 320

ஆ

ஆங்கிலக் கவிதை மலர்கள் 344
ஆசிய ஜோதி 39, 344
ஆடலிசைப்பா 240, 241
ஆதித்தர், அ,கு,. 347
ஆத்திசூடி xx, xxi, 304–321
ஆனந்த மடம் 340
ஆனந்தன், காசி 76, 77, 162

இ

இராமலிங்கம், வெ 19, 25, 31, 35, 36, 32, 33, 63, 97, 106, 114, 121, 122
இராமானுஜகவிராயர் 37
இராமையா தாஸ் தஞ்சை 108
இராவண காவியம் xx, 266–268, 298
இலகு செய்யுள் 224
இலக்கிய மரபு viii, 8, 99, 134, 156, 349
இலக்கிய வட்டம் 213, 225
ச.சு.இளங்கோ 216, 225, 247, 250, 281
இளந்திரையன் சாலை 227, 228, 266
இளவரசு, சோம. 317
இன்குலாப் 80, 86, 87, 227

ஈ

ஈழம் xx, 73–76, 162, 169, 230–236, 299

உ

உதயம் 35, 36, 147, 192
உபநிடதம் 337, 345
உமர்கய்யாம் 344
உருவகக் கவிதை 284–285, 341
உரைவீச்சு 201, 227–230, 237

எ

எலியட், டி.எஸ். 16, 76, 176
எழில்முதல்வன் 115
எழுத்து viii, 12, 69, 96, 116, 174, 191, 201, 208, 213, 214, 215, 220, 227, 235

க

கங்கை கொண்டான் 226
கசின்ஸ், ஜேம்ஸ், எச். 342
கண்ணகி xx, 246–248, 251, 264, 266, 317
கண்ணதாசன் 28, 29, 106, 107, 120, 124, 148, 284, 286, 345
கம்பன் 129, 225, 266
கலைவாணன் 19, 35
கல்யாணசுந்தரம் பட்டுக்கோட்டை 72–73, 108, 297

கவிதை

மரபுவழி 79, 84, 99, 155, 174–178, 196, 205, 206, 226, 227, 252

வடிவம் 12, 14, 95, 96, 99, 102. 119, 140, 145, 167, 170, 171, 173, 174, 182, 196, 201, 204, 205, 227, 229, 237, 240, 242, 265, 285

புதுக்கவிதை vi, vii, ix, xx, 20, 79, 80, 164, 181, 182, 184, 185, 190 , 191, 193, 195 , 196, 198, 200–227

பு.க.

அடிப்படை அலகு 205, 305

இயல்புகள் 6, 71, 89, 95, 104, 107, 130, 149, 157, 204, 206, 220, 221, 231, 230–237, 245

பு.க. (வேறுபெயர்கள்)

இக்கால கவிதை 16, 79, 60, 89

இலகுக்கவிதை 174, 200, 224, 225

கட்டில் அடங்காக் கவிதை 4, 10

கம்பாசிடர் கவிதை 201

சுதந்திரக்கவிதை 201

சொற்கோலம் 201

தற்காலக் கவிதை 200, 225

நவீன கவிதை 200, 235

புதிய பாட்டு 200

யாப்பில்லாக் கவிதை 174. 189

வசன கவிதை 338, 164, 173, 20, 80

விடுநிலைப்பாட்டு 174, 200, 235

கவிமணி 106, 113, 120, 212, 301, 321, 344

கனகசபாபதி 213, 225

காட்சி 34, 72, 96, 143, 145, 158, 164, 178, 329, 349

காதல் 6, 10, 11, 48, 50–56, 93, 133, 189, 248, 252–262, 276–279, 347

காந்தியடிகள் 31, 35, 36, 63, 65

காந்திக் கவிதை 35

காந்தி புராணம் 33, 34

காந்திமகான் கதை 34

காந்தியம்

காப்பியம்

கண்ட 324, 338, 347, 358

குறுங். xi, x, xx, 238, 246, 248, 35, 69, 242, 250, 257, 266, 269, 271, 273, 285, 339, 345, 346

காமராசன், நா. 150–152

காமன் மகள் 345

காவடிச்சிந்து 13, 14, 98, 99, 109, 115, 119

காளிதாசன் 51, 258, 364, 373

கிருஷ்ணசாமி ரெட்டியார் அ.வெ.ர. 19

கீதகோவிந்தம் 347

கீர்த்தனை 13, 14, 32, 97, 98, 112, 113, 116–124

குயில்பாட்டு xi, 275, 276, 281

குலோத்துங்கன் 148–150

குழந்தை, புலவர் 266–268, 298

குழந்தைப் பாடல் vi, xi, xxi, 281, 288–292, 295, 298–303, 321

குறும்பாடல் 172, 332

கைலாசபதி, க. xv, 74, 136, 206, 208, 216, 324

கோபாலகிருஷ்ண பாரதியார் 119
கோவேந்தன் 226, 346

ச

சகுந்தலை வெண்பா xx, 258–260
சக்திக்கனல் 80
சச்சிதானந்தம் கி.அ. xii, xvi, 220
சஞ்சீவி. ந. 308, 313
சஞ்சீவி பர்வதத்தின் சாரல் xx, 281, 282
சண்முகம், உ. 120
சண்முகம், கு 141
சந்தக் கவி 97
சந்திரிகை 49, 158
சமுதாயம் 15, 23, 42, 47, 63 , 67, 229
சந்திரிகையின் கதை 49
சாத்தனார் 250, 251, 269
சாரண பாஸ்கரன் 345
சானெட் viii, xix, 153, 154, 159–163, 346
சிதம்பரநாதர், ரசிகமணி 182
சிந்து viii, xix, 6, 98, 109–115, 124, 225, 231
சிலப்பதிகாரம் 98, 224, 247–249, 263–266, 273
சிலம்பின் சிறுநகை
சிவப்புக் குயில்கள் 346
சிவராமு, தருமு, 222, 235
சிவலிங்கம் சண்முகம் 75, 236
சிற்பி 80, 82, 227
சியூ–சின் 331
சீநிவாசராகவன். அ. 160–161
சுதேச கீதங்கள்
சீனிவாசன், அரங்க 19, 36
சுத்தானந்த பாரதியார் 19, 22, 23, 31, 71, 114, 120, 122, 142, 296, 316
சுந்தரம், எஸ்.டி. 19, 146, 147
சுந்தரம் பிள்ளை 26
சுப்பிரமணியன், க.நா. 194
சுப்பு, கொத்தமங்கலம் 19, 34
சுயசரிதம் 140, 217, 322, 324–327
சுரதா 120, 302
சூரியநாராயண சாஸ்திரியார், வி.கோ. 155
சூர்தாசர் 347
செம்மை இலக்கியம் 210–211, 349
செல்லப்பா, சி.சு. viii, 185, 193, 208, 210, 213–216, 222, 235
சைதன்யர் 341, 347
சொக்கலிங்கம், ராய 35
சொக்கன் 162
சோமசுந்தர பாரதியார் 257–258, 269
சோமசுந்தரன், 269
அரு,
சோமசுந்தரப் புலவர், 257, 258
நவாலியூர் 299
சோமு 55, 120, 123, 143–144, 160, 162

ஞ

ஞானக்கூத்தன் 222
ஞானசம்பந்தன் அ.ச. 267, 270, 271

த

தணிகைச்செல்வன் 88, 299
தமிழண்ணல் 317
தமிழன்பன் 80, 84, 86, 209, 227

தமிழிசை 120,123,124, 211, 317
தமிழ் ஒளி xv, 46, 67–71, 147, 260–266, 283, 286, 296, 318, 365
தமிழ்க்குமரி 26, 55,192, 253
தமிழ்நாடன் 227
தனிப்பாசுரம் 153,155
தன்வரலாறு 324–325
தாகூர் 312
திரிவோகசீதாராம் 19
திரு.வி.க. 35, 38, 64
திலகர் 211
துறையச் செல்வம் 246
தூரன், பெ 19,160,163,193
தேசியம் vi,17, 21, 207, 208, 226, 318
அனைத்துலகத் தமிழ்த் தைப்பாவை 284 – 286

ந

நடேசபிள்ளை,சு 259
நாச்சியப்பன், நாரா, 317
நாட்டுப்புறப் பாடல் 9, 12–14, 34, 72, 98,101–105,107,115
நாமக்கல் கவிஞர் 19, 23, 24, 32, 34, 63, 106, 120–122, 212, 321
நாராயணக் கவி உடுமலை 108
நு:மான், எம்.எ. 232, 236
நேரு 38, 211, 303

ப

பகவத்கீதை 337–339, 343
பங்கிம் சந்திரர் 340
பண்ணத்தி 133
பதஞ்சலி 339
பதினான்கு அடிப்பாட்டு 153, 158,162
பவுண்ட், எஸ்ரா 176
பள்ளு 13, 23, 57, 97, 109, 112–113

பா

பாஞ்சாலி சபதம் x, xx, 7, 8, 101, 108, 111, 129, 242–246, 248–249, 251, 255–256, 271, 271–272, 285, 330, 339, 345
பாடல்
கதைப் iv, x, xx, 70, 98,132, 232, 239 –276, 281, 282 , 285, 290, 344–346
கிளக்கும் 240
சிந்தனைப் xix, 46, 72, 94, 133, 145,155, 204, 247, 307, 324
தன்னுணர்ச்சிப் x, 35, 131–148, 152–154, 204, 206, 243, 260
நெடும்பா 240, 242, 345
பக்திப் xix, 135, 136, 145, 340, 347
வருணனைப் 240
பாடுபொருள் 9, 11, 93, 95, 96, 100,131,156,174,183, 206
பாட்டில் புரட்சி vi, viii, xx, 59,164, 174
பாண்டிமாதேவி 266, 269, 270–271
பாப்பாப்பாட்டு 26, 292, 295–296
பாரதிதாசன் 19, 26, 27, 31, 42–45,47,53 54, 59, 60, 100, 105, 113, 115, 120, 121, 142–143,148,212, 246, 247, 251, 281, 302, 308–309, 312

பாரதி 324–326, 332, 333, 334, 338, 350
பாரிமகளிர் 134
பாலா 212, 347
பாலினம் 66, 368
பாவேந்தர் 19, 26–27, 42, 44–47, 53–54, 59–62, 100, 105, 120, 142, 246–250, 267, 282, 301, 309
பிச்சமூர்த்தி ந 10, 20, 75, 184, 187, 190–194, 201, 210, 230–236
பிராய்ட் xi, 276
புதுக்குரல்கள் 185, 193, 208, 214–223, 265, 280
புதுமைக்காலம் 95, 147
புதுமைப்பித்தன் 19, 20, 120, 150, 168, 186–189, 195, 200, 210
புல்லின் இதழ்கள் 175–176, 184
புவியரசு 80, 88, 276
புறநானூறு
புஷ்பராஜா, மு. 232
பூங்கொடி 269
பூவண்ணன் 290, 292, 304
பெண் 12, 28, 46–48, 53,–69, 101, 112, 135, 160, 180, 195, 218, 249, 254, 331–332, 360, 370
பெருமாள், கா. 299
பொதுவுடைமை 48, 57–58, 62, 66, 68, 70–73, 78–79, 90, 93, 308, 310, 314
பொன்னிவளவன் 271–272

ம

மகாகவி 3, 13, 15, 51, 73, 85, 96, 104, 116, 160, 183, 237, 242, 245, 277, 306, 324, 342,
மங்கையர்க்கரசி 269–271
மச்சகந்தி 255–256
மணி, சி 217
மணிக்கொடி xi, xx, 23, 24, 184, 188, 191, 193, 197, 209, 214
மணிமேகலை 246, 249–251, 269, 273, 374
மரபு viii, 6, 9, 12, 14, 21, 35, 48, 79, 80, 84, 94, 96, 99, 107, 116–117, 134, 136, 155, 156, 168, 175–176, 196, 205–206, 213, 222–227, 231–273, 300, 321
மருதகாசி 108
மறுமலர்ச்சிக்கவிஞர் 312
மனிதம் 3, 363
மாணிக்கம், வ.சுப. 304, 316, 317
மாதவிகாவியம் 265, 266, 271–273
மாரிவாயில் 256, 257–258
மார்க்சியம் 35, 39, 63, 64, 68, 73, 89, 147, 216, 230, 310
மீரா 80, 81, 227
மீனாட்சி சுந்தரம், கா 244, 305
தெ.பொ. மீனாட்சி சுந்தரனார், xi, 99, 164, 174, 244, 259, 270, 271, 275, 305
முடியரசன் 54, 302, 344
முத்துக்கணேசன் 317
முருகையன் 73, 74, 162, 169
மேத்தா, மு. 80, 83–84, 202, 227
மெய்ம்மையம் 350
மெய்யப்பன், ச 313, 315–319
மொழிபெயர்ப்பு 327–330, 334,

336–343, 348
மௌனகுரு, சி 236

யூ

யூசுப்லைகா 345
யோகி, ச.து.சு 19, 26, 31, 55,160, 192, 252, 254, 255

ர

ரகுநாதன், தொ.மு.சி. 19, 39, 101,182,189,197
ரகுமான், அப்துல் 227
ரங்கராஜன், வீ 218
ரவிதாசர் 347
ராஜகோபாலன், கு.ப. 20, 128, 182–183,190, 210, 281
ருஷியப்புரட்சி 38, 59, 62, 65, 146
ரோகிணி 218–219

வ

வ.உ.சி. 38, 326
வந்தே மாதரம் 340–341, 22, 42, 112
வரதராசனார், மு 5
வரதராசன் 308, 316
வரிப்பாடல் 225, 248
வல்லிக்கண்ணன் 20,191, 194, 210, 216
வ.வெ.சு.ஐயர். 115
வள்ளியப்பா 296, 298, 302, 303, 321
வாணிதாசன் 54, 296, 302, 308
வாலீம், அ.கி. 347
வாலி 108
வானம்பாடி 225–227, 237
விட்மன், வால்ட் 175
வித்யாபதி 347
விவேகானந்தர் 15
வீரகாவியம் 344
வீறுணர்ச்சி 6, 7, 49, 50, 130, 139,173, 349
வெங்கட்ராமன், 222
வெண்ணிக்குயத்தியார் 133
வெள்ளிவீதியார் 135
வேணுகோபாலன், தி.சோ. 222–223
வேதநாயகம் பிள்ளை 97,137
வேதம் 336
வைத்தீஸ்வரன், எஸ் 222
வையாபுரிப்பிள்ளை எஸ். 144
வைரமுத்து, இரா. 120,128, 202, 227

ஜ

ஜகந்நாதராஜா, மு.கு. 108
ஜப்பானியமொழி 330–332, 173
ஜமதக்னி 345
ஜெயசங்கரர் 345
ஜான்ஸ்கர் 334
ஜீவானந்தம் 48, 65, 67
ஜெயதேவர் 347

ஷ

ஷெரீப் 256
ஷெல்லி 4, 6, 130, 138–139, 173, 334

ஹ

ஹம்சசத்வனி 233
ஹைக்கூ173

நூலாசிரியரின் வாழ்க்கைக் குறிப்பு

தோற்றம் – மறைவு	-	20.11.1931 – 05.05.1989
பிறந்த ஊர்	-	கருங்குழி, மதுராந்தகம் வட்டம், செங்கற்பட்டு
கல்விப் பள்ளிக்கல்வி	-	சிந்தாதரிப்பேட்டை ஆண்கள் உயர்நிலைப்பள்ளி, சென்னை
புதுமுக வகுப்பு	-	விவேகானந்தா கல்லூரி, மயிலாப்பூர்
இளங்கலை	-	1951-1954
(ஹானர்ஸ்) தமிழ்	-	பச்சையப்பன் கல்லூரி
(பின்னர்)	-	சென்னைப்பல்கலைக்கழகம், முதல் வகுப்பு, முதல்நிலை
முதுகலை வரலாறு	-	சென்னைப் பல்கலைக்கழகம் தனிநிலைப்படிப்பு (1956)
முதுகலை இலக்கிய ஆராய்ச்சி	-	"பழந்தமிழ் இலக்கியத்தில் அறம்" (ஆங்கிலத்தில்) அண்ணாமலை பல்கலைக்கழம் (1963)

மொழியில் பெருஞ்சான்று - அண்ணாமலை பல்கலைக்கழகம் (1963)

முனைவர்பட்டம் - பேராசிரியர் மு.வரதராசனாரின் படைப்பு இலக்கியம் ஓர் ஆய்வு, சென்னைப் பல்கலைக்கழகம் 1979.

ஆசிரியர் பணி

1. 6 ஆண்டுகள் பயிற்சி ஆசிரியர் அரசர் கல்லூரி, புதுக்கோட்டை 1954 -1959.

2. 7 ஆண்டுகள் துணைப் பேராசிரியர், மாநிலக்கல்லூரி, சென்னை – 1962 – 1968

3. 2 ஆண்டுகள் முதல்வர். மணலித் தமிழ்க்கல்லூரி சென்னை 1968 – 1969

4. 3 ஆண்டுகள் திருக்குறள் ஆராய்ச்சித்துறைத் தலைவர் சென்னைப் பல்கலைக்கழகம், 1962-1972.

5. 19 ஆண்டுகள் இணைப்பேராசிரியர் மற்றும் இயக்குநர் (ஆராய்ச்சியியல்), உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,

தெரிந்த பிறமொழிகள்: சமஸ்கிருதம், இந்தி, ஆங்கிலம்

விருதுகள்

1. சாகித்திய அகாதெமி விருது 1974
2. தி.ரு.வி.க. விருது 1985

★★★

ஆசிரியரின் நூல்கள்

தமிழ் இணைய கல்விக்கழக மின்நூலகம் –
தமிழினையம் – இணையதளத்தில்

https://www.tamil/digitallibrary.inஇல் புத்தகங்களை
படிக்கலாம் - பதிவிறக்கம் செய்யலாம்

(அ) வரலாற்று நூல்கள்:

1. சிந்துவெளி தரும் ஒளி, வள்ளுவர் பதிப்பகம், புதுக்கோட்டை, 1959.
2. வரலாறும் - வாழ்வும் மீனாட்சி பதிப்பகம், புதுக்கோட்டை, 1960.
3. தமிழர் நாகரிக வரலாறு – முதல் பகுதி – "விடி வெள்ளி", தொல்காப்பியர் நூலகம், சிதம்பரம், 1962.
4. முதலாம் இராசராசன், தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம், சென்னை, 1975.
5. இனமரபு வரலாறு (தொல் பழங்கால வரலாறு) தமிழ்நாட்டு வரலாற்றுக் குழு, சென்னை, 1975.
6. வரலாற்று வஞ்சி, தமிழ் எழுத்தாளர் கூட்டுறவுச் சங்கம், 1977.
7. இலங்கையில் தமிழ்ப் பண்பாடு, சேகர் பதிப்பகம், சென்னை, 1979.
8. சிந்துவெளி எழுத்து வடிவங்கள், மணியகம், சென்னை, 1981.
9. குறுநில மன்னர் வரலாறு – தமிழ்நாட்டு வரலாறு, சங்க காலம், பண்டைய அரசியல், தமிழ்நாட்டு வரலாற்றுக் குழு, சென்னை, 1983.
10. Rajaraja, the Great, Madras publications, 1984.

11. தென்கிழக்கு ஆசிய நாடுகளில் தமிழ்ப் பண்பாடு, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், 1987.

12. Chieftains of the Sangam Age, 2001.

13. தமிழ்ப் பண்பாடு, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், 1994.

14. தமிழ்நாடு வரலாறு சங்கக் காலம் – வாழ்வியல் (நாகரிகமும். பண்பாடும்), தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம், 1983.

15. History of Tamilnadu (A Birds Eye View Authors Guild of India, 1986.

(ஆ) ஓரங்க நாடகம்:

16. அடிமை விலங்கு (வரலாற்று நாடகம்), மணியகம், சென்னை, 1979.

17. பொற்கொடி (வரலாற்று நாடகம்), மணியகம், சென்னை, 1981

(இ) திறனாய்வும் ஆராய்ச்சியும்:

18. திருக்குறள் நீதி இலக்கியம், சென்னைப் பல்கலைக்கழகம், 1971 (சாகித்திய அகாதெமி பரிசினை 1974-இல் பெற்ற நூல்)

19. திருக்குறளில் கற்பனைத் திறனும் நாடகநலனும், சென்னைப் பல்கலைக்கழகம், 1973.

20. வாழ்வும் இலக்கியமும், மணியகம், சென்னை, 1978.

21. திருக்குறளும் இந்திய அறநூல்களும், மணியகம், சென்னை, 1979.

22. அறிஞர் அறவாழி, மணியகம், சென்னை, 1978.

23. சான்றோர் கண்ட திருவள்ளுவர், மணியகம், சென்னை, 1979.

24. ஒளிவிளக்கு (திருக்குறள் ஆய்வு) பாரி நிலையம், சென்னை, 1979.

25. தமிழ் நிலவு, மணியகம், சென்னை, 1981.

26. மு.வரதராசனாரின் படைப்பு இலக்கியம், பாரி நிலையம், 1984.

27. தமிழ்க் கவிதையில் பாரதியின் தாக்கம், தமிழ்க் கடல் பதிப்பகம், சென்னை, 1984.

28. தெ.பொ.மீ. ஒரு தமிழ்க்கடல், சென்னை பல்கலைக்கழகம், 2001.

29. திரு.பூ.ஆலால சுந்தரஞ் செட்டியாரின் வாழ்க்கை வரலாறு, மணியகம், சென்னை, 1982.

(ஈ) உரையும் பதிப்பும்:

30. தனிப்பாடல் திரட்டு (உரையுடன்), மீனாட்சி பதிப்பகம், புதுக்கோட்டை, 1960.

31. திருக்குறள் (கையடக்கப் பதிப்பு), வள்ளுவர் பதிப்பகம், புதுக்கோட்டை, 1960.

32. தமிழ் இலக்கியக் கொள்கை, தொகுதி-3, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1977.

33. Historical heritage of the Tamils, Vol.I.international Institute of Tamil Studies, Madras, 1983.

34. தமிழ் இலக்கியக் கொள்கை, தொகுதி-1 (பதினெண்கீழ்கணக்கு), உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

35. திறனாய்வு அணுகுமுறைகள் (க.த.திருநாவுக்கரசு மற்றும் கு.பகவதி), உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.

(உ) தொகுப்பும் பதிப்பும்:

36. தொல்காப்பிய நூலடைவு, சென்னைப் பல்கலைக்கழகம், 1971.

37. திருக்குறள் நூலடைவு, சென்னைப் பல்கலைக்கழகம், 1972.

38. *Tributes and Translations of Tirukkural*, 1986.

39. *Historical Heritage of the Tamils Dr. S.V.Subramaniyan & Dr.K.D.Thiruavukkarasu IITS, Tharamani*, 1985

(ஊ) தமிழாக்க நூல்கள்:

40. ஜி.எம். டிரெவெலியனின் இங்கிலாந்தின் வரலாறு, தமிழ் வெளியீட்டுக் கழகம். சென்னை, 1965.

41. வின்செண்ட் ஸ்மித்தின் ஆக்ஸ்போர்டு இந்திய வரலாறு-3, தமிழ் வெளியீட்டுக் கழகம், சென்னை, 1967.

42. இலட்சுமிநாத பெஸ்பரூவா, சாகித்திய அகாதெமி, புதுதில்லி, 1970.

43. இராசாராம் மோகன்ராய், சாகித்திய அகாதெமி, புதுதில்லி, 1970.

44. ஜீவனானந்த தாஸ், சாகித்திய அகாதெமி, புதுதில்லி, 1970.

(எ) இலக்கணம்:

45. எட்டாம் வகுப்பு தமிழ் இலக்கணம், பாடநூல் நிறுவனம், 1978.

★★★

ஆசிரியரின் தமிழ்க் கட்டுரைகள்

1950 – 51

1. பனைமர நிழலில், விவேகா, சென்னை, 1950.
2. பசிப்பிணி, விவேகா, சென்னை, 1951.

1952 – 53

இலக்கியம் காட்டும் எழிலோவியம்:-

3. முல்லை சிரித்தது
4. பெண்ணா? பேயா?
5. மின்னிகரிடையான்
6. கள்வன் மகன்
7. உயிரும் உடலும் கலைமன்றம், சென்னை, 1952-53.
8. ஆன்ம நேயம்
9. மருந்து
10. பெரும்பிணி
11. பொய்யும் மெய்யும்
12. வெண்ணிலவு

1953 – 1954

13. தமிழ்நெறி, விந்தியா, பூனா, 1953
14. வள்ளைப்பாட்டு, கலைக்கதிர், கோவை, 1954.
15. போரும் காதல் வாழ்வும், விந்தியா, 1954.
16. பாரதிகண்ட தமிழ்ச் சமுதாயம், விந்தியா, பம்பாய், 1954
17. ஓங்குக நல்லது எது? திருவள்ளுவர், திருச்சி, 1954.
18. வள்ளுவர் கண்ட மகளிர், திருவள்ளுவர், திருச்சி 1954
19. திருக்குறளின் ஆசிரியர் ஒருவரா? பலரா? திருவள்ளுவர், திருச்சி, 1954.

1955 – 56

20. தமிழக வரலாற்றில் சில புதிர்கள், குருகுலம், வாலாஜாபாத், 1955.
21. மெய்ப்பாடுகளும் ஒன்பான் சுவையும், குமரி மலர், சென்னை, 1955
22. புரட்சிக் கவிஞரின் "புரட்சிக் கவி" - ஒரு திறனாய்வு, குமரி மலர், 1956
23. தமிழ்த் தென்றல், விந்தியா, பூனா, 1956.
24. வீரகாப்பியமும் கலைக் காப்பியமும், கம்பன் மலர், காரைக்குடி, 1956

1957

25. முதியோர் கல்வியும் சோசலிச சமுதாயமும், ஆதாரக் கல்வி, 1957.
26. உறையூர் ஏணிச்சேரி முடமோசியார் யவனரா? (மூன்று கட்டுரைகள்), எழில், காரைக்குடி, 1957.
27. திருக்கோவையாரின் திறம், ஞானசம்பந்தம், தருமை, 1957.
28. தமிழ் நிலவு, தமிழ்நாடு, மதுரை, 1957.

1958

29. இசுலாமியர் வளர்த்த தமிழ், சீதக்காதி தமிழ்ச் சங்க மலர், கீழக்கரை, 1958.
30. தமிழகத்தில் ஒரு ஹோமர், கம்பன்மலர், காரைக்குடி, 1958.
31. ரோமானியர் கண்ட தமிழகம்,எழில், காரைக்குடி, 1958 (5 கட்டுரைகள்)
32. மருதணாரின் காப்பியநெறி, எழில், காரைக்குடி, 1958.

1959

33. புதுக்கோட்டை தொண்டைமான்களின் தோற்றம், அரசர் கல்லூரி மலர், புதுக்கோட்டை, 1959.

34. மனிதனும், மனச்சான்றும், எழில், காரைக்குடி, 1959

35. அறம்பிறழ்ந்த ஆட்சியாளன், கலைக்கதிர், கோவை, 1959

36. கிரேக்க நாகரிகமும் தமிழ் நாகரிகமும் (6 கட்டுரைகள்), கலைஞன் 1959.

37. தமிழகத்தின் மண்ணியல் அமைப்பு, அண்ணல் சுப்பிரமணியனார் மணி மலர், வள்ளுவர் பதிப்பகம், புதுக்கோட்டை 1959.

1960

38. மனிதன் - அன்றும் இன்றும், தருமச் சக்கரம், சென்னை, 1960.

39. சங்க காலத்தில் ஒரு வரலாற்றுப் பேராசிரியர், எழில், 1960.

40. சான்றோர் யார்?, நண்பன், திருச்சி, 1960.

41. தமிழகத்தில் தொல்பொருள் ஆராய்ச்சி (10 கட்டுரைகள்) தமிழ்ச்செல்வி, புதுவை, 1960.

42. மனிதம், புதுமை, திருச்சி, 1960.

43. தமிழகத்தில் விடிவெள்ளி, குருகுலம், வாலாஜாபாத் 1960.

44. கவிஞனின் மூன்று குரல்கள், குருகுலம், வாலாஜாபாத் 1960.

1961

45. மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழும், காளிதாசரின் குமார சம்பவமும், குமர குருபரன், சீவைகுண்டம், 1961

46. வள்ளுவர் காட்டும் வாழ்க்கை நெறி, திருவள்ளுவர், திருச்சி, 1961.

47. தமிழகத்தில் தொல்பொருள் ஆராய்ச்சி (1960 வரை) தமிழ்ச்செல்வி, சிலம்பு 1, முத்து 8 முதல் 12 வரை 1961.

1962

48. பிளேட்டோ கண்ட இலட்சிய மனிதன், முக்கனி, சென்னை, 1962.

49. அரிஸ்டாட்டில் கண்ட இலட்சிய மனிதன், முக்கனி, சென்னை, 1962.

50. கன்பூசியஸ் கண்ட இலட்சிய மனிதன், முக்கனி, சென்னை 1962.

51. தமிழன் கண்ட இலட்சிய மனிதன், முக்கனி, சென்னை, 1962.

1963

52. வள்ளலார் காட்டிய வழி, குருகுலம், வாலாஜாபாத், 1963.

53. இலக்கியமும் வாழ்க்கையும், முக்கனி, சென்னை 1963.

54. முருகனும், முத்தமிழும், முக்கனி, சென்னை, 1963.

55. அடிகளின் அறைகூவல், குருகுலம், வாலாஜாபாத், 1963.

56. பிள்ளைத்தமிழின் அமைப்பும் அழகும், குமரகுருபரன், சீவைகுண்டம், 1963.

57. தென்னிந்தியாவும் இலங்கையும், கலைச்செல்வி, யாழ்ப்பாணம், 1963.

(நான்கு கட்டுரைகள்)

1964

58. நாகரிகமும் பண்பாடும் (5 கட்டுரைகள்), புதுமை, திருச்சி, 1964.

59. தென்னிந்தியாவும் இலங்கையும் (தொடர்ச்சி -5 கட்டுரைகள்), கலைச்செல்வி, யாழ்ப்பாணம், 1964.

60. உலக நாகரிகத்தில் தமிழ்ப்பண்பாடு, கலைச்செல்வி, யாழ்ப்பாணம், 1964. (3 கட்டுரைகள்)

61. பொய்தீர் ஒழுக்கநெறி, சென்னை மாநகரத் தமிழாசிரியர் கழக மாநாட்டு மலர், சென்னை, 1964.

1965

62. தன்னுணர்ச்சிப் பாட்டு, அறுவடை, காஞ்சி, 1965.
63. நெடுநல்வாடை - திறனாய்வு: தமிழ்ச்செல்வி, புதுவை, 1965.
64. தாய்மொழியும் பிறமொழி ஆதிக்கமும், காஞ்சி, 1965.
65. சோழர் காலத்திய சமுதாயநிலை, கல்வெட்டுக் கருத்தரங்கக் கட்டுரைகள், சென்னை, 1965.

1966

66. திருநெறி, சுத்த சன்மார்க்கம், வேலூர், 1966.
67. மெய்யுணர்வுக்காதல் நெறி, சத்தியஞானசபை, நூற்றாண்டு விழா மலர், வேலூர், 1966.
68. இன்பம், கல்வி, சென்னை, 1966.
69. தமிழ்மொழியின் நெடுங்கணக்கு, நக்கீரர் கழக ஆண்டு மலர், சென்னை, 1966.
70. திருக்குறளின் மொழியியல்புகள், பச்சையப்பன் கல்லூரி 125ஆவது ஆண்டு விழா மலர், சென்னை, 1966.

1967

71. தமிழக வரலாற்றின் படிப்பினைகள், சிந்தாதிரிப்பேட்டை உயர்நிலைப்பள்ளி மலர், சென்னை, 1967.

    சிந்தாதிரிப்பேட்டை, கல்யாணம் மகளிர் உயர்நிலைப்பள்ளி மலர், சென்னை, 1967.
72. பரணியின் பல்சுவை - இன்பச்சுவை, கலைஞன், திருச்சி, 1967.
73. மும்மணிகள், கலைஞன், திருச்சி, 1967.

1968

74. அச்சுப்புத்தகத்தின் தோற்றம், ஆரம்பக்கல்வி, சென்னை, 1968.

75. இந்திய நாகரிகத்தில் தமிழ்ப் பண்பாட்டின் கூறுகள், இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டு மலர், தமிழக அரசின் வெளியீடு, சென்னை, 1968.

76. இளங்கோ கண்ட இயற்கை, தமிழகம், சென்னை, 1968.

77. வால்ட்விட்மனும் புதிய கவிமரபும், கவிதை, சென்னை, 1968.

78. இன்றைய தமிழ்க் கவிதைகளும், புதுமைப் போக்குகளும், கவிதை, சென்னை 1968.

79. கவிஞர் தமிழ் ஒளியின் புரட்சிப் படைப்பு, கவிதை, சென்னை, 1968.

80. ஆராய்ச்சி அறிஞர் சிவராசபிள்ளை, குமரிநாடு, நாகர்கோயில், 1968.

81. எல்லிஸ் கலைக்களஞ்சியம் தொகுதி 10, தமிழ்வளர்ச்சிக் கழக வெளியீடு, சென்னை, 1968

82. கல்வெட்டுகளால் அறியப்படும் சோழர் காலத்திய சமுதாய அமைப்பு, கல்வெட்டுக் கருத்தரங்கு, புக்ஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட், சென்னை - 1, 1968.

1969

83. உலகில் தோன்றிய முதல் நாவல், குமுதம், சென்னை, 1969.

84. தென்கிழக்கு ஆசிய நாடுகளில் தமிழர் நாகரிகம், மதுரை வரலாற்றுப் பேரவை மலர், மதுரை, 1969.

85. தமிழகத்தின் இசைக் கருவிகள்,குழந்தை வீணை காயத்ரி பாராட்டுவிழா மலர், சென்னை, 1969.

86. வரலாற்று வஞ்சி, மறைமலையடிகள் நினைவுமலர், நாகப்பட்டினம், 1969.

87. திருக்குறளின் தனிச்சிறப்புகள், Annals of Oriental Research சென்னை பல்கலைக்கழகம், சென்னை, 1969.

88. நிலமும், நீரும், தமிழ் உறவு மகளிர், சென்னை, 1969.

89. திருக்குறளின் மாட்சி, மன்றம், சென்னை, 1969.

90. மன்னரை அணுகும் முறை, குறள் மலர், திருச்சி, 1969.

91. அவையும் அறிஞனும், குறள்மலர், திருச்சி, 1969.

92. திருவள்ளுவர்ஆண்டு ஈராயிரம், திருவள்ளுவர் சபை, சிந்தாரிப்பேட்டை, 1969.

93. வள்ளுவர் உலகிற்கு வழங்கும் செய்தி, திருவள்ளுவர் ஈராயிரமாண்டு விழா மலர், சென்னை, 1969.

94. திருக்குறளும் சங்க இலக்கியங்களும், சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, 1969 (மலர்)

95. குறளோவியம், திருவள்ளுவர் ஈராயிரம் ஆண்டுவிழா மலர், புதுக்கோட்டை, 1969.

96. அடிகள் கண்ட அம்பலவாணர், அருட்பெருஞ் சோதி, சென்னை, 1969.

97. சீவகசிந்தாமணி கு. மதுரை முதலியார் எழுபதாம் ஆண்டு நிறைவு விழா சிறப்பு மலர், மாருதி பிரஸ், இராயப்பேட்டை 1969.

1970

98. திருக்குறளும் சமண ஆகமங்களும், நல்லறம், சென்னை, 1970.

99. இந்திய நாடகக் கலையின் தந்தை டி.கே. சண்முகம் மணிவிழா மலர், சென்னை, 1970.

100. வள்ளுவர் காட்டும் பொருளியியல், இராசபாளையம் திருவள்ளுவர் மன்ற மலர் 1970.

101. சமணமும் தமிழும், தில்லித் தமிழ்ச் சங்க வெள்ளிவிழா மலர், தில்லி, 1970.

102. பண்டைத் தமிழ் மகளிரும் கச்சணிதலும், இரண்டாவது இந்தியப் பல்கலைக்கழக தமிழாசிரியர் கருத்தரங்க மலர், திருச்சி 1970.

103. நான்கு நாணல்கள் ஒரு மதிப்பீடு - திறனாய்வு, தமிழுறவு மலர், சென்னை, 1970.

104. தமிழக மறுமலர்ச்சி இயக்கத்தின் தந்தை, நண்பர் வட்ட மலர், சென்னை, 1970.

105. நெஞ்சுக்கு நீதி (குறள் விளக்கம்), நல்லறம், சென்னை, 1970.

106. திறந்த புத்தகம், காந்தியடிகள் நூற்றாண்டு விழா மலர், சென்னை, 1970.

107. திருக்குறளுக்கு உரைகள் வேண்டுமா? (Annals of Oriental Research) சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை, 1970.

108. காமத்துப்பாலின் கருத்தோவியங்கள், (Annals of Oriental Research) சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை, 1970.

109. புண்ணும் வடுவும் (குறளாய்வு), ஆரம்பக் கல்வி, சென்னை, 1970.

110. சங்க இலக்கியங்களில் திருக்குறள், கழகப்பொன்விழா மலர், கழகம் சென்னை -1, 1970

111. நாவலர் நற்றமிழின் காவலர், நாவலர் நெடுஞ்செழியன் பொன்விழா மலர், சென்னை -7, 1970.

1971

112. பண்டைத் தமிழ்ச் சமுதாயமும், நல்லறமும், சென்னை 1971.

113. தமிழகத்தின் ஆண்டுக்கணக்குமுறை, மூன்றாவது இந்தியப் பல்லைக்கழகத் தமிழாசிரியர் கருத்தரங்க மலர், அண்ணாமலை நகர், 1971.

114. வரலாற்றின் எச்சரிக்கை விசயநகர பாமினி அரசுகள், தமிழரசு, சென்னை, 1971.

115. தாய்மொழிவழிக் கல்வியே தாயகத்திற்குத் தேவை, முரசொலி, சென்னை, 08.01.1971

116. தமிழறிஞர் வி. கனகசபை பிள்ளை, கலைச்செல்வி, யாழ்ப்பாணம், 1971.

117. பழமொழிகள் உணர்த்தும் கடவுட்கொள்கை, சிதம்பரம் சிவகாமி அம்மை கும்பாபிஷேக மலர், சிதம்பரம், 1971.

118. பழமொழிகள் காட்டும் மகளிர் இயல்பு, கல்யாணம் மகளிர் உயர்நிலைப்பள்ளி ஆண்டு மலர், சென்னை, 1971.

1972

119. வள்ளுவர் கண்ட மனிதன் - 1, தமிழியல் (Jots) சென்னை, 1972.

120. திருக்குறளும் தம்மபதமும், தருமச்சக்கரம், சென்னை, 1972.

121. ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியன், நான்காவது இந்தியப் பல்கலைக் கழகத் தமிழாசிரியர் கருத்தரங்க மலர், திருவனந்தபுரம், 1972.

122. முப்பாலுள் முதுமொழிகள், கி.ஆ.பெ.வி. மலர், கோவை, 1972.

123. இலக்கியம் உணர்த்தும் வரலாறு, தமிழுறவு, சென்னை, 1972.

124. அறங்கூறும் அவையம், தமிழ்ப்பணி, சென்னை 1972.

125. பழமொழிகளில் பழந்தொழில், நிலவளம், சென்னை, 1972.

126. பைந்தமிழ்ப் பாவலர்: கல்யாணம் மகளிர் உயர்நிலைப்பள்ளி ஆண்டு மலர், 1972.

127. பழமொழிகள் உணர்த்தும் கடவுள் கொள்கை, திருக்கும்பாபிஷேக மலர், சபாநாயகர் கோயில், சிதம்பரம் 1972.

128. தமிழர் திருநாள், சமயம், 1972.

1973

129. கற்பனைக்கு ஒரு கவிஞரேறு, தமிழ்ப்பணி, சென்னை, 1973.

130. மூவகை மனிதர், கனகசபைப்பிள்ளை மணிவிழாமலர், சிதம்பரம், 1973.

131. மனிதனாக வாழ வாழ்க்கைத் தத்துவம், சன்மார்க்க சங்கமலர், காஞ்சி, 1973.

132. வள்ளலாரின் வாழ்க்கைத் தத்துவம், சன்மார்;க்க சங்கமலர், காஞ்சி 1973.

133. சீவகசிந்தாமணி ஒரு காப்பியமாகுமா? திருக்கோயில், சென்னை, 1973.

134. ஊன்றுகோல் (குறள் வழிக்கதை), கரும்பு, திருச்சி, 1973

135. அழுக்காறு வேண்டாம் (குறளமுதம்), சி.ப. மலர், சென்னை, 1973.

136. பெண்வழிச் சேறல், கல்யாணம் மகளிர் உயர் நிலைப்பள்ளி ஆண்டு மலர், சிந்தாதிரிப்பேட்டை, 1973.

137. வள்ளுவர் கண்ட மனிதன் -2, தமிழியல், சென்னை, 1973.

138. பாரதியாரின் இலக்கியக் கொள்கை, ஐந்தாவது இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் கருத்தரங்க மலர், சென்னை, 1973.

139. திராவிட இனத்தின் தோற்றம் (ஒரு மறு ஆய்வு), தமிழாய்வு தொகுதி 2, சென்னைப் பல்கலைக்கழகம் வெளியீடு - 1973.

140. பாரதியின் இலக்கியக் கொள்கை, ஆய்வுக்கோவை தொகுதி 5, சென்னை மாநிலக் கல்லூரித் தமிழ்த்துறைச் சார்பு வெளியீடு 1973.

1974

141. சும்மா, மலைச்சாரல், சோளிங்கபுரம், ஏப்ரல், 1974.

142. நூறாண்டு வாழ்க - திறணாய்வு, தமிழ்ப்பணி, 1974.

143. வாணிதாசரின் வளமார் தமிழ், தமிழ்ச்சாரல், 1974.

144. கணக்காயர், ஆசிரியர் நரசிம்மன் அவர்கள் நினைவுமலர், சென்னை, 1974.

145. தமிழ் வளர்த்த பெரியார்கள், மு.சு. பூரணலிங்கம் பிள்ளை, நூலகம், சென்னை, 1974.

146. தமிழ் வளர்த்த பெரியார்கள், திருமணம் செல்லக் கேசவராய முதலியார், நூலகம், சென்னை, 1974.

147. வரலாறும், பண்பாடும், பேராசிரியர் அ.மு.ப. கருத்தரங்க மலர், சென்னை, 1974.

148. தாயா? தமக்கையா? ஆறாவது கருத்தரங்கு ஆய்வுக் கோவை, புதுவை, 1974.

149. தமிழும் மலையாளமும், செந்தமிழ்ச் செல்வி, சென்னை, 1974.

1975

150. எழிலோவியம் காணவாரீர்.

151. தமிழிற்கு ஓர் அரன்

152. அறிஞர் அறவாழி

153. சிலப்பதிகாரத்தின் மாண்பு

154. இராசராசன் கொலைகாரனா? புலமை தொகுதி 1 பகுதி 1, சென்னை - 18, 1975.

1977

155. டாக்டர். மு.வ.வின் புதிய உலகம் திறனாய்வுக் கட்டுரைகள், அணியகம், சென்னை - 30, 1977.

1978

156. கந்தபுராணக் காப்பிய நலம் திருக்கோயில் மாலை 20 மணி 4, ஜனவரி 1978.

157. கந்தபுராணக் காப்பிய நலம் திருக்கோயில் மாலை 20 மணி 5, பிப்ரவரி 1978.

158. கந்தபுராணக் காப்பிய நலம் திருக்கோயில் மாலை 20 மணி 6, மார்ச் 1978.

159. கந்தபுராணக் காப்பிய நலம் திருக்கோயில் மாலை 20 மணி 7, ஏப்ரல்1978.

160. கந்தபுராணக் காப்பிய நலம் திருக்கோயில் மாலை 20 மணி 8, மே 1978

161. கந்தபுராணக் காப்பிய நலம் திருக்கோயில் மாலை 20 மணி 9, ஜூன் 1978

162. கந்தபுராணக் காப்பிய நலம் திருக்கோயில் மாலை 20 மணி 10, ஜூலை 1978

163. கந்தபுராணக் காப்பிய நலம் திருக்கோயில் மாலை 20 மணி 12, செப்டம்பர் 1978

164. கந்தபுராணம், தமிழ் இலக்கியக் கொள்கை தொகுதி 3, உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் சென்னை - 20, 1978.

165. நூல் அறிமுகம் - காளிதாசன் உவமைகள், புலமை தொகுதி -4, பகுதி 3,4, சென்னை -18, 1978.

166. முக்காவல் நாடு, ஆய்வுக்கோவை தொகுதி 10, பகுதி 3, இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்ற வெளியீடு அண்ணாமலை நகர், 1978.

1979

167. கடவுள் நெறி, திருக்கோயில் மாலை 21, மணி 11, ஆகஸ்டு 1979.

168. கல்லாடம் தமிழ் இலக்கியக் கொள்கை தொகுதி 4, உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் சென்னை 20, 1979

169. திருவள்ளுவரும் சர்வக்ஞரும், திருவள்ளுவர் 2010-ஆம் ஆண்டு மலர் பெங்களூர்த் தமிழ்ச்சங்கம், பெங்களூர் 42, 1979.

1980

170. வாணிதாசன் கவிதைகளில் படிமக் காட்சி, ஆய்வுக்கோவை 12, தொகுதி 1, இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்ற வெளியீடு, அண்ணாமலை நகர், 1980.

171. பண்பாடு சமஸ்கிருத மயமாக்கப்படுதல்

172. வரலாற்றியல், ஜைன இளைஞர் மன்றம், சென்னை - 17.

173. மறுமலர்ச்சி

174. சிலப்பதிகாரத்தால் அறியப்படும் அரசியல் உறவு.

175. தமிழ் உரைநடை

176. உவமை

177. பொற்காலம்

178. பாவியலில் கற்பனை

179. கம்பனுக்கும் ஒரு தாசன் விக்ரமன் பொன்விழா மலர் 17.03.1978.

180. கல்லணையைக் கட்டியது யார்?

181. பசி

182. அறிவு என்பது என்ன?

183. மணிமேகலை காட்டும் கடவுள் நெறி

184. சிற்றிலக்கியங்கள் உணர்த்தும் இலக்கியக் கொள்கை

185. முடமோசியார் - யவனரா?

186. பழியும், பாவமும்

187. வினையின் பயன்

188. பழமொழிகள் உணர்த்தும் கடவுள் நெறி

189. இருட்டறை

190. மதுராந்தகம்

191. குறவஞ்சி

192. திருக்குறளை வேதமாகப் போற்றுவது பொருந்துமா?

193. வேளிர்

194. மனம்

195. திராவிட மொழிகளில் நீதி இலக்கியம்

196. தேசீயம்

197. வரலாற்றுக் காலம்

198. வள்ளலார் காட்டிய வழி

199. இலக்கியப் படிமங்களில் உறையூர் ஏணிச்சேரி முடமோசியார்

200. வேதங்கள்

201. வீரயுகப் பாடல்கள்

1988

202. தமிழ்நாட்டில் வைணவம் தோற்றமும், வளர்ச்சியும் சப்தகிரி, திருப்பதி, நவம்பர் 1988

203. தமிழ்நாட்டில் வைணவம் தோற்றமும், வளர்ச்சியும் சப்தகிரி, திருப்பதி, டிசம்பர் 1988

204. தமிழ்நாட்டில் வைணவம் தோற்றமும், வளர்ச்சியும் சப்தகிரி, திருப்பதி, ஜனவரி 1989

205. தமிழ்நாட்டில் வைணவம் தோற்றமும், வளர்ச்சியும் சப்தகிரி, திருப்பதி, பிப்ரவரி 1989

206. தமிழ்நாட்டில் வைணவம் தோற்றமும், வளர்ச்சியும்

சப்தகிரி, திருப்பதி, மார்ச் 1989

207. தமிழ்நாட்டில் வைணவம் தோற்றமும், வளர்ச்சியும் சப்தகிரி, திருப்பதி, ஏப்ரல்1989

208. சீனாவில் சிறப்புற்ற காஞ்சி இளவரசர், தினமணி, 15.02.1989

209. மறுமலர்ச்சி இயக்கத்தின் வெற்றிமுரசு

210. பதினெண் கீழ்கணக்கின் கற்பனைவளம்

211. பகைத் திறந்தெரிதல்

212. நான் கண்ட அடியார்க்கு நல்லார் தி.கி.நாராயணசாமி நாயுடு 80 ஆண்டு நிறைவு விழா மலர் 30.10.1985

213. திருநெறி ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியம்

214. தமிழரின் கலைக் கோட்பாடு உ.த.ஆ. நிறுவனம் 09.02.1987

215. பழந்தமிழ்க்குடிகள், 'முதன்மொழி" உலகத் தமிழ்க் கழக மாதிகை சென்னை 16.

216. ஒன்றே தெய்வம் இராமலிங்க வள்ளலார் - வானொலி, ஆல் இண்டியா ரேடியோ, சென்னை-4, நாள் 07.11.71

217. A Tamil Savant From the City of Madras (08.01.1901 to 27.08.1988) (08.01.1901 வழ 27.08.1988)

218. மறுமலர்ச்சித் தமிழ் உரை நடை

219. சித்தர்களின் மெய்ஞ்ஞானம் - உ.த.ஆ. நிறுவனம் 08.06.1977 83-ஆம் ஆய்வுமன்ற கருத்தரங்கு

220. சான்றோர்கள் கடைப்பிடிக்கும் பழக்க வழக்கங்களும் மரபொழுக்கங்களும்

221. படிமங்கள்

❑

குறிப்புகள்

குறிப்புகள்

நூலாசிரியர், அவர் படைப்புகள்
பற்றிய இணையதளம்

இ-புத்தகத்தை வாசிக்க /
பதிவிறக்கம் செய்ய

நூலாசிரியர், அவர்
படைப்புகள் பற்றிய யூடியூப்

ISBN 978-93-48345-34-9